எஸ். ஏ. டாங்கே

பண்டைக்கால இந்தியா

★

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

எஸ். ஏ. டாங்கே

பண்டைக்கால இந்தியா

புராதன இந்திய சரித்திரத்தைப்பற்றிய
ஒரு மார்க்ஸீய பரிசீலனை.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
சென்னை–2.

முதல் தமிழ்ப் பதிப்பு: மே 1955.

[எல்லா உரிமைகளும் நூலாசிரியருக்கே]

தமிழாக்கம் :

எஸ். ராமகிருஷ்ணன்

விலை ரூபா 3.

ஜனசக்தி பிரஸ், சென்னை-6.

இன்பத்திலும் துன்பத்திலும்

என்னுடன் பிணைந்து

நின்ற தாய்க்கு

சமர்ப்பணம்.

—எஸ். ஏ. டாங்கே.

இந்தப் புத்தகம்

மார்க்ஸிய கண்ணோட்டத்தில் பண்டைக்கால இந்திய வரலாற்றை ஆராய்ந்து அறியும் முதன் முயற்சி. வடமொழி நூல்களில் பாண்டித்தியம் பெற்றவரும் மார்க்ஸிய புலமைக்கு உரியவருமான **எஸ். ஏ. டாங்கே** அவர்கள் எழுதியது.

இந்திய சரித்திரத்தை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தறிய விரும்பும் மாணவர்களுக்கு டாங்கேயின் நூல் புதிய வெளிச்சத்தைக் கொடுத்திருக்கிறது. நமது வரலாறுபற்றிய விவாதத்தை ஒரு புதிய தரத்துக்கு உயர்த்திச் செழுமை அடையச் செய்திருக்கிறது. பின்னுரையைப் படிக்கும் வாசகர்கள் இதை நன்கறியலாம்.

தமிழ்நாட்டு சரித்திர மாணவர்களும் தமிழறிஞர்களும் இந்த விவாதத்தில் ஆற்றவேண்டிய பங்கு மகத்தானது. அதற்கு உதவியாக இந்த நூலைத் தமிழில் தருகிரேம்.

நான் வடமொழி மாணவன் என்று உரிமை கொண்டாடுவதற்குக்கூடத் தகுதியற்றவன். வடமொழியில் தேர்ச்சி பெற்ற ஓரிரண்டு பெரியார்களின் உதவியின்றி, நான் இந்தப் பணியை நிறைவேற்றியிருக்கமுடியாது. அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி.

என்னுடைய பல குறைகள் இந்த தமிழ்ப் பதிப்பில் பிரதிபலித்திருக்கவேண்டும். அவற்றைப் பொறுத்தருள வேண்டுமென்றும் சுட்டிக்காட்டித் திருத்தவேண்டுமென்றும் அறிஞர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எஸ். ராமகிருஷ்ணன்.

பதிப்புரை

ஸ்ரீ எஸ். ஏ. டாங்கே அவர்கள் எழுதிய இந்நூல் ஆங்கிலத்தில் பம்பாய் பீப்பிள்ஸ் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட் ஆல் 1949ல் வெளியிடப்பட்டது. அவர்கள் 1951ல் வெளியிட்ட இரண்டாம் பதிப்பின் தமிழாக்கமே இந்த வெளியீடு. இதை திறமையாக மொழிபெயர்த்துள்ளார் ஸ்ரீ எஸ். ராமகிருஷ்ணன். இந்த நூலைப்பற்றி வந்துள்ள விமர்சனங்களுக்கும் எழுந்துள்ள சந்தேகங்களுக்கும் பதிலளிக்கும் முறையில், 'நியூ ஏஜ்' மாத சஞ்சிகையில் (1954, செப்டம்பர் இதழ்) நூலாசிரியர் எழுதிய கட்டுரையும் பின்னுரையாக இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு வருடங்களாக, நம் நாட்டிலும், உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வெளி வந்துள்ள முற்போக்கு இலக்கியங்களை தமிழ் மக்களுக்கு கிடைக்கும்படி செய்யும் பணியை ஆற்றிவருகிறோம். சமீபத்தில்தான் நூல்களும் தமிழில் வெளியிட ஆரம்பித்துள்ளோம். லெனின் எழுதிய "தேசீயப் பிரச்னைபற்றி சில விமர்சனக் குறிப்புகள்" எங்களுடைய முதல் நூலாகும். புராதனகால இந்திய சரித்திரத்தை மார்க்ஸீய கண்ணோட்டத்தில் பரிசீலிக்கும் எஸ். ஏ. டாங்கேயின் இந்நூல் இரண்டாவதாகும்.

மேற்கொண்டும் பல முக்கிய நூல்கள் வெளியிட விரும்பும் எங்களுக்கு தமிழ் மக்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் நிச்சயம் கிடைக்குமென்று நம்புகிறோம்.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

பொருளடக்கம்

அத்தியாயம்		பக்கம்
முகவுரை	...	1
முன்னுரை : ஆராய்ச்சி முறைகள்	...	7
ஆரியரின் தோற்றம்	...	44
யக்ஞம்—ஆரியக் கம்யூனின் கூட்டு உற்பத்தி முறை	...	58
யக்ஞம், பிரமன், வேதம்	...	81
கண—கோத்திரம்	...	93
பூர்வீகக் கம்யூனின் திருமணமுறை	...	107
அசுவமேதம், புருஷமேதம், தானம்	...	132
தனி உடமையும் வர்ணங்களும்	...	155
கம்யூனின் வீழ்ச்சி	...	173
பெண்குலத்துக்கு அடிமைத்தளை	...	186
ஒவ்வாத முரண்பாடுகள்	...	202
கண—சங்கங்கள்	...	214
ராஜ்யத்தின் உதயம்	...	231
பாரதப் போர்	...	244
புதிய சக்திகள், புதிய கட்டம்	...	267
பின்னுரை	...	279
அனுபந்தம்–1	...	303
அனுபந்தம்–2	...	304
அனுபந்தம்–3	...	309

எஸ். ஏ. டாங்கே.

முகவுரை

எரவாடா சிறையில், 1942 அக்டோபருக்கும் 1943 ஜனவரிக்கும் இடையே, இந்த நூலின் பிரதானமான பகுதிகள் எழுதப் பட்டன.

விஷயத்தின் விளக்கத்தில் வாசகர்கள் காணக்கூடிய குறை பாடுகளில் சிலவற்றுக்கு, அதுவே காரணம்.

தேவைப்படும் அளவுக்குப் பூர்த்தியாக விஷயத்தைப்பற்றி எடுத்துரைக்க எனக்கு முடியவில்லை; மேலும் பண்டைக்கால சமஸ்கிருத மூல நூல்களிலும், அவற்றின் சாரத்தை நவீன அறிஞர்கள் வெளியிட்டிருப்பதிலும் கிடைக்கிற ஆதாரங்கள் அனைத்தையும் உபயோகிக்கவோ மேற்கோள் காட்டவோ, முடியாமல் போய்விட்டது.

என்னைவிட அதிகமான பாண்டித்தியம் பெற்றவர் ஒருவர், நமது தொழிலாளி வர்க்கத்துக்காக இந்தக் கடமையைச் செய்வா ரென்று நான் நம்புகிறேன்.

நான் புத்தகம் எழுதும் எண்ணம் இல்லாமலேயே, இந்த நூலை எழுதினேன். அந்தச் சமயத்தில் எரவாடா சிறையிலிருந்த அரசியல் கைதிகள் என்னிடம் எண்ணற்ற கேள்விகளை எழுப்பி, பதில் அளிக்குமாறு கோரினார்கள்; அதன் பலனே இந்நூல்.

அப்பொழுது, ஸ்டாலின்கிராடு போராட்டம் உச்சவேகத்தில் நடந்துகொண்டிருந்தது; யுத்தம், சோஷலிஸம், வர்க்கப்போர், சோவியத் சமூகத்தின் மேம்பாடு முதலிய பிரச்னைகள் சூடுபிடித் திருந்தன.

யுத்தங்கள் நிகழ்வதற்குக் காரணம் என்ன? ஒரு போரை இன்னொன்றிலிருந்து வேறுபடுத்துவது எப்படி? வர்க்கங்கள் என்றால் என்ன? ராஜ்யம் என்றால் என்ன? ஒரு ராஜ்யத்துக்கும் இன்னொரு ராஜ்யத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? ஒருவழியாக, யுத்தங்களை இல்லாதொழிப்பது எப்படி? ஒரு ராஜ்ய

மும் சர்க்காரும் மனிதகுலத்துக்கு எப்பொழுதும் தேவைப்படுமா? வறுமைப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பது எப்படி? இத்தகைய பிரச்னைகள் சூடேறியிருந்தன.

காங்கிரஸ் கைதிகளைச் சந்தித்துப் பழகுவதற்கு, எனக்குக் கொஞ்ச காலத்துக்கு அனுமதி கிடைத்தது. நாங்கள் பேசினோம்; விஷயத்தின் வேருக்கே போகாவிட்டால், சரித்திர இயல் பொருள் முதல்வாதத்தின் கருத்தோட்டத்தில், இந்திய சமூகத்தில் வர்க்கங்களும் ராஜ்யமும் தோன்றியதைக் குறித்து சுருக்க விளக்கம் கொடுக்காவிட்டால், அவர்கள் திருப்தி அடையமாட்டார்கள் என்பதை நான் அறிந்தேன். பல புதிய வாலிபர்கள் கற்றுக் கொள்ளவும் புரிந்துகொள்ளவும் ஆவலுள்ளவர்களாகவிருந்தனர்.

ஆனால், சீக்கிரத்தில் சில சம்பவங்கள் நிகழ்ந்தன. காங்கிரஸ் கைதிகளும் நானும் கூடிப்பழகுவதை, எங்களைச் சிறைபடுத்தியிருந்த பிரிட்டிஷ் அதிபர்கள் தடுத்துவிட்டனர்.

சிறையிலிருந்து விடுதலையடைந்த பிறகு, நான் உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் காங்கிரஸை முன்னிட்டு, ஐரோப்பாவுக்குச் சென்றேன். தொழிலாளி வர்க்கத்தின் அன்றாடப் போராட்டங்களுடைய ஜோலிகளுக்கே நேரத்தைச் செலவிட வேண்டியதாயிற்று.

இந்திய மக்களுக்கு எதிராக பிரிட்டிஷ் சர்க்கார் வகுத்திருந்த ராணுவ நடவடிக்கைத் திட்டங்களை அம்பலப்படுத்திய 'ஆபிரேஷன் அஸைலம்' என்ற பிரசுரம் வெளியிடப்பட்டதை முன்னிட்டு, 1947 ஜனவரி 14ல், இந்திய சர்க்காரின் உள்நாட்டு மந்திரியாயிருந்த ஸர்தார் வல்லபாய் பட்டேலின் உத்திரவுக்கிணங்க, நாடு முழுவதும், கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயங்களும் தொழிற்சங்கங்களின் அலுவலகங்களும், கம்யூனிஸ்ட்களின் இல்லங்களும் சோதனையிடப்பட்டன. அப்பொழுது, இந்த நூலின் கையெழுத்துப் பிரதியில் ஒரு பகுதியையும், அதன் குறிப்புக்களையும் போலீஸார் எடுத்துச்சென்றனர்; சமஸ்கிருதத்தில் உள்ள மேற்கோள்களை சங்கேத பாஷையென்று அவர்கள் தப்பர்த்தம் செய்து

கொண்டார்கள் போலிருக்கிறது. ஆனால், அதிர்ஷ்டவசமாக பிற்பாடு, அந்த ஏடுகள் திருப்பித்தரப்பட்டன.

இறுதியாக ஒரு கேள்வி? பண்டைக்கால இந்தியாவில், குடும்பமும், தனி உடைமையும், வர்க்கங்களும், ராஜ்யமும் தோன்றியதைப்பற்றி இந்த நூல் விவாதிக்கிறது; இது அவசியமா?

இந்தக் கேள்விக்குப் பதிலாக, நான் லெனின் கூறியதை எடுத்துக்காட்டுகிறேன்; வாசகர்கள் மன்னிப்பார்களாக.

லெனின், 1919-ல், ஸ்வெர்ட்லாவ் சர்வகலாசாலை மாணுக்கர்களுக்கு ராஜ்யத்தைப்பற்றி ஒரு பேருரை நிகழ்த்தினுர்; அதில், அவர் கூறினுர்:

"......இந்தப் பிரச்னை மிகவும் சிக்கலானது. பூர்ஷ்வா அறிஞர்களும் எழுத்தாளர்களும் இதில் குழப்பத்தை உண்டாக்கியிருக்கிருர்கள். எனவே, இந்தப் பிரச்னையை அக்கரையுடன் படித்து அதில் சுயமாகப் பாண்டித்தியம் பெற விரும்புகிற எவரும் அதை ஆராய்வதற்குப் பன்முறை முயற்சிக்கவேண்டும்; மீண்டும் மீண்டும் இந்தப் பிரச்னையில் கவனம் செலுத்தவேண்டும். இவ்வாருக இதைத் தெளிவாகவும் திட்டமாகவும் புரிந்துகொள்வதற்காகப் பல்வேறு கோணங்களிலிருந்து ஆராயவேண்டும். இந்தப் பிரச்னையைத் திரும்பத் திரும்ப ஆராய்வது சுலபமானது; எப்படியென்ருல், இது சகல அரசியலுக்கும் அடிப்படையாகவும் ஜீவாதாரமாகவும் உள்ள பிரச்னை; தவிர, நிகழ்காலத்தைப் போன்ற புயல் வேகமுடைய புரட்சிக்காலத்தில் மட்டுமல்ல, சமாதானம் நிறைந்த காலத்திலும், எந்த அரசியல் அல்லது பொருளாதாரப் பிரச்னை சம்பந்தமாகவும் எந்தப் பத்திரிகையிலும் இது விவாதிக்கப்படுவதைப் பார்க்கலாம்."

ராஜ்யம் என்ற பிரச்னையில் பூர்ஷ்வா விஞ்ஞானத்தின் பிரதிநிதிகள் உண்டாக்கியிருக்கும் குழப்பத்தைப்பற்றி லெனின் கூறுகிருர்:

"இன்றுவரையில் இந்தப் பிரச்னை மதப்பிரச்னைகளுடன் சேர்த்துக் குழப்பப்படுவதை அடிக்கடிக் காண்கிருேம். சமயக் கோட்பாடுகளின் பிரதிநிதிகள் மட்டுமல்ல (அவர்களிடம்-

அதை இயற்கையாகவே எதிர்பார்க்கவேண்டும்), சமய விருப்பு வெறுப்புகளிலிருந்து விடுபட்டவர்களாகத் தம்மைக் கருதிக் கொள்கிறவர்கள்கூட, ராஜ்யம் என்கிற பிரத்யேகப் பிரச்னையை அடிக்கடி, சமயப் பிரச்னைகளுடன் சேர்த்துக் குழப்புகிறார்கள் ; சித்தாந்த தத்துவார்த்த அடிப்படையும், அணுகும் முறையும் படைத்ததாக, ஒரு கோட்பாட்டை உருவாக்க முயற்சிக்கிறார்கள் ; ராஜ்யம் என்பது தெய்வீகமானது என்றும், இயற்கைக்கு அப்பாற் பட்டது என்றும், அதன் துணைகொண்டே மனிதகுலம் வாழ்ந்து வந்திருக்கிறது என்றும் அது மனிதனுக்குச் சொந்தமாக இல் லாத ஒன்றை வெளியிலிருந்து மனிதனுக்குக் கொண்டுவந்து கொடுப்பதாக, அல்லது கொடுக்கக்கூடியதாக இருக்கிறது, என் றும் அந்தக் கோட்பாடு கூறுகிறது. அதாவது ராஜ்யம் என்பது தெய்வீக வழியில் தோன்றிய சக்தி என்று அது கூறுகிறது. இந்தக் கோட்பாடு, முதலாளிகள் நிலப்பிரபுக்கள் ஆகிய சுரண் டல் வர்க்கங்களின் நலன்களுடன் நெருங்கிப் பிணைந்திருப்பதால், அது அவர்களுடைய நலனுக்குத் தொண்டுபுரிவதால், அது பூர்ஷ்வா வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கனவான்களின் சகல பழக்கங்களிலும் கருத்துக்களிலும் விஞ்ஞானத்திலும் தீர்க்க மாக ஊடுருவியிருப்பதால், அந்தக் கோட்பாட்டின் மீதமிச்சங் களை ஒவ்வொருவரிடமும் காணமுடியும். மென்ஷவிக்குகளும் சோஷலிஸ்ட் புரட்சிக்காரர்களும் சமயக் குரோதங்களின் செல் வாக்குக்கு இரையாகியிருப்பதாகக் கூறினால், அவர்கள் அந்தக் கூற்றை அருவருப்புடன் நிராகரிக்கிறார்கள் ; ராஜ்யத்தைப்பற்றி நிதானமான பார்வையுடன் அவர்களால் ஆராயமுடியுமென்று கருதுகிறார்கள் ; எனினும், ராஜ்யத்தைப்பற்றிய அவர்களுடைய கருத்தில்கூட மேற்சொன்ன கோட்பாட்டின் சிதைவுகளைக் காண முடியும். (பொருளாதார விஞ்ஞானத்தின் அஸ்திவார சம்பந்த மான பிரச்னை நீங்கலாக) வேறு எந்தப் பிரச்னையையும்விட அதிகமாக, அரசு சம்பந்தமான பிரச்னை ஆளும் வர்க்கத்தினரை பாதிக்கிறது. அதனால்தான் இந்தப் பிரச்னையில் இவ்வளவு குழப்பமும் சிக்கலும் உண்டாக்கப்பட்டிருக்கிறது.”

நமது மென்ஷவிக்குகளும் சோஷலிஸ்டுகளும் இதைக் கவ னித்துக் குறித்துக்கொள்வார்களாக!

இந்தப் பிரச்னையை மாணவர்கள் எப்படி அணுகவேண்டு மென்பதை விவரித்து லெனின் கூறுகிறார் :

"இந்தப் பிரச்னையைக் கூடியமட்டும் விஞ்ஞானரீதியாக அணுகவேண்டுமானால், நாம், ராஜ்யத்தின் தோற்றம் வளர்ச்சி ஆகியவற்றின் வரலாற்றை விரைவிலாவது ஆராயவேண்டும். சமுதாய விஞ்ஞானம்பற்றிய ஒரு பிரச்னையில் மிகவும் நம்பகமான தேவை என்னவெனில், எண்ணற்ற விவரங்களிலோ நானாவித மான மாறுபட்ட அபிப்பிராயங்களிலோ மூழ்கிவிடாமல், பிசகற்ற முறையில் பிரச்னையை அணுகுவதைப் பயில்வதற்கு மிகவும் அவ சியமான தேவை யென்னவெனில், அதாவது விஞ்ஞான ரீதியில் பிரச்னையை அணுகுவதற்கு மிக முக்கியமான தேவை என்ன வெனில், அடிப்படையான சரித்திரத் தொடர்பை மறக்காமல் குறிப்பிட்ட நிகழ்ச்சி, சரித்திரத்தில் தோன்றியது எப்படி என் பதையும், அதன் வளர்ச்சியின் பிரதான கட்டங்கள் என்ன என் பதையும், பற்றுக்கோடாகக்கொண்டு, ஒவ்வொரு பிரச்னையையும் ஆராய்வதாகும் ; அதன் வளர்ச்சியின் கருத்தோட்டத்தில் அது இன்று என்ன ஆகியிருக்கிறது என்பதைப் பரிசீலிப்பதாகும்."

மேலும் அவர் கூறுகிறார் :

"ராஜ்யம் என்ற பிரச்னை சம்பந்தமாக நீங்கள் எங்கல்ஸ் எழுதிய நூலான—குடும்பம், தனிஉடமை, ராஜ்யம் ஆகியவற்றின் தோற் றம் என்பதைப் படித்து அறிந்துகொள்வீர்களென நான் நம்பு கிறேன். இது நவீன சோஷலிஸத்தின் மூல நூல்களில் ஒன்று......"

எனவேதான் எங்கல்ஸ் எழுதிய மேற்குறிப்பிட்ட நூலை உன்னிப்பாகப் பின்பற்றி இந்திய சரித்திர சம்பந்தமான அதே பொருளை இந்த நூல் விவாதிக்கிறது ; இதை வாசகர்கள் பார்க்கமுடியும். துரதிருஷ்டவசமாக எங்கல்ஸ், தன்னுடைய பிர சித்திபெற்ற நூலை எழுதியபொழுது அவருக்கு இந்திய சரித்தி ரத்தின் அந்தக்காலம் சம்பந்தமான போதுமான ஆதார விவரங் கள் கிடைக்கவில்லை.

நான் உபயோகித்துள்ள ஆதார விவரங்களை இந்த முகவுரை களில் விவாதிக்க விரும்பவில்லை. இந்த முகவுரையில், புத்தகங்

கள் முதலியவற்றை எனக்குக் கொடுத்துதவிய ஏராளமான நண்பர்களைக் குறிப்பிட்டு நன்றி செலுத்தவும் விரும்பவில்லை. இதன் தொடர்ச்சியான இரண்டாவது பாகம் வெளிவரும் சந்தர்ப்பம் கிடைத்தால் அப்பொழுது அந்தக் கடமையைச் செய்து முடிப்பேன்.

எஸ். ஏ. டாங்கே.

பண்டைக்கால இந்தியா

(புராதன கம்யூனிஸ சமுதாயம் முதல் அடிமைச் சமுதாயம் வரை)

முன்னுரை

ஆராய்ச்சி முறைகள்

ஆதிக் காலத்திலேயே, மனித நாகரீகத்தின் மையமாக ஒளிர்ந்த உலக நாடுகளில் ஒன்று, இந்தியா. இந்தியா முதலிய ஏழு உலக நாடுகளில்தான், முதன் முதலில், தோன்றிய உணவுப் பயிர்களை மனிதன் கண்டெடுத்துச் சாகுபடி செய்து பரப்பினான்.[1] பூர்வீக மனிதன், நான்கு கால் பிராணியிலிருந்து வேறுபட்டு, கருவிகளைச் செய்யும் இரண்டு கைககளைப் படைத்த சமுதாய மனிதனாக ஆகி, புரியாத சுபாவத்தைப் படைத்த இயற்கையுடன் போராடித் தற்காத்துக்கொண்டு, உலகம் முழுவதும் பரவியது எங்கிருந்து என்ற பிரச்னைக்கு, இதுவரை தீர்வு காணப்படவில்லை. பண்டு வாழ்ந்த மனிதனின் எலும்புகள், மண்டையோடுகள் ஆகியவற்றின் மீத மிச்சங்கள், பூர்வீக மனிதனின் பிறப்பகத்தைத் தேடுவதற்கு, மானிட சாஸ்திரிகளுக்கு வழிகாட்டுகின்றன; அவை சீனா, ஜாவா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கௌரவத்தில்' இந்தியாவும் பங்குபெற வேண்டுமென்று விரும்பக்கூடியவர்கள், சிவாலிக் குன்றுகளையும்[2] அந்தச் சுற்று வட்டாரத்தில் நடைபெறும் ஆராய்ச்சிகளையும் சுட்டிக் காட்டுவார்கள். அவ்வாறு அத்தப் பாதி மனித, பாதிப் பிராணிப் பிறவியில் நமக்குள்ள பங்கை நிலைநாட்டி, புத்தம் புதியதாகத் தோன்றிய மனித

---

1. என். ஐ. வாவிலோவ்: "முச்சந்தியில் விஞ்ஞானம்" என்ற நூலைப் பார்க்கவும்.

2. "மானிட சாஸ்திரம்" என்ற போஸ் எழுதிய நூலைக் காண்க.

னுக்கும் மானிட நாகரீகத்திற்கும் நம் தேசம் பூர்வீகத் தொட்டிலாக விருந்ததென்ற தாவாவைப் பூர்த்தியாக ஸ்தாபிப்பார்கள். நமது பூர்வீகத்தையும் நமது நாகரீகத்தின் தொன்மையையும் பற்றிய இந்த விஷயத்தில் இந்தியாவின் இந்திய வரலாற்றுப் புலவர்கள் விசேஷ அக்கரை காட்டுகிறுர்கள்.

நாம் மிகப் புராதனமானவர்கள் என்பது மட்டுமல்ல, நாகரீகத்தின் அம்சங்களாக இன்றைய உலகத்தில் உள்ளதனைத்தும் ஒரு காலத்தில் நம்மிடம் இருந்ததென்றும், அவையனைத்தையும், விஞ்ஞானம், தத்துவஞானம், அரசியல் முதலியதனைத்தையும் நாம் அறிந்திருந்தோமென்றும் நிரூபிப்பதில் இந்திய எழுத்தாளர்களுக்கும் சரித்திரப் புலவர்களுக்கும் கிட்டத்தட்ட ஒரு வெறி ஏற்பட்டிருந்ததென்று சொல்லலாம்; காண்ட்[1] மாபெரும் தத்துவ ஞானியாயிருந்தாரென்ருல், எங்கள் சங்கரர் அவரைவிடப் பெரியவராயிருந்தார்; ஷேக்ஸ்பியர்[2] இலக்கியத்துறையில் பீமனுக விளங்கிறைரென்ருல், எங்கள் காளிதாஸ் அவரையும்விடப் பெரிய பீமன்; உங்களிடம் அரசியல் ஞானத்துறையில் ரூஸ்ஸோவின்[3] 'சமுதாய ஒப்பந்தம்' இருந்தால், எங்களிடமும் அம்மாதிரி ஒன்று உண்டு. எங்களிடம் ஆகாய விமானங்கள் இருந்தன, இருப்புப் பாதைகள் இருந்தன, வெடி மருந்துகள் இருந்தன; என்னதான் இல்லை? ஆங்கிலேயர்களும் இதர ஐரோப்பியர்களும் கரடித் தோல்களை உடுத்தித் திரிந்த காலத்தில், இவையெல்லாம் எங்களிடம் இருந்தன!

கடைசியில் குறிப்பிட்ட கருத்துத்தான் நமது சரித்திராசிரியர்களுக்கு உண்மையான தூண்டுகோலாயிருந்தது. நம்மை அழிக்க முயன்ற அன்னிய விரோதியிடமிருந்து தற்காத்துக்

---

1. காண்ட்: பதினெட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த ஜெர்மானிய தத்துவஞானி.

2. ஷேக்ஸ்பியர் பதினறு, பதினேழாவது நூற்ருண்டுகளில் வாழ்ந்த ஆங்கில நாடகச் சக்கரவர்த்தி.

3. ரூஸ்ஸோ பதினெட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த பிரெஞ்சுப் பேரறிஞர்; அவருடைய 'சமுதாய ஒப்பந்தம்', அரசுரிமை மக்களுக்கே உரியதென்று வாதாடி, மகத்தான பிரெஞ்சுப் புரட்சி உருப்பெறுவதற்கு உதவியது. (மொ-ர்.)

கொள்வதற்காக, நாம் நமது பண்டைக் காலச் சுவர்களையும் அகழிகளையும் தோண்டியெடுத்தோம்; பண்டைக்கால மக்கள் எழுதிய கோரைத்தாள்களையும் பூர்ஜ (ஒருவகை மரம்) இலைகளை யும் தேடியெடுத்தோம். வளர்ந்துவரும் விடுதலை இயக்கத்தைச் சோர்வடையச் செய்வதற்காக, இந்தியாவில் ஆங்கிலேய அதி பர்கள் சரித்திரத்தைப் பயன்படுத்தினுர்கள்; உலக சரித்திரம், அதன் தொன்மை, அதன் சாதனை ஆகியவற்றுடன் ஒப்பிட்டால் இந்தியாவும் இந்திய மக்களும் சுத்த சூன்யமாயிருப்பதாகவும், இந்திய சரித்திரத்தைத் தெரிந்தவரையில், அன்னிய படை யெடுப்பாளர்களின் வசப்பட்டு, அவர்களுடைய ஆட்சிக்கு இலக் காவதே நம் தேசத்தின், நமது தேச மக்களின் சரித்திர விதியா யிருக்கிறதென்ற முடிவுக்கே வர முடிகிறதென்றும், ஒரு மனே பாவத்தை மக்களின் தலைமையில் சிருஷ்டிப்பதற்காக, ஆங்கி லேய ஆட்சியாளர்கள் சரித்திரத்தைப் பயன்படுத்தினுர்கள். பூகோளம், சீதோஷ்ணம், பண்பாடு அனைத்தும், தவிர்க்க முடி யாத விதியாக இதை நம்மீது சுமத்திவிட்டதாக அவர்கள் கூறி ஞர்கள். பொறுப்பு மிகுந்த சரித்திரப் புலவர்கள் எழுதிய கேம் பிரிட்ஜ் பதிப்பின் சரித்திர நூலும்[1] இதர நூல்களும் இந்தத் தத்துவத்தைப் பிரச்சாரம் செய்தன. இதை எதிர்த்துப் போராடு வதற்காக, இந்தியாவின் சரித்திரம்தான், உண்மையில், இக்கால மனிதனின் உலக சரித்திரத்தின் முதல் அத்தியாயமென்றும், இன்று இந்த நாட்டில் வாழும் ஆரியன், பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாக, வடதுருவப் பிரதேசங்களிலிருந்து பரவினுனென்றும்,[2] அவன், மனிதன் சாதிக்க முடிந்ததிலும் இனி எக்காலத்திலும் சாதிக்கக் கூடியதிலும் தலைசிறந்தவற்றை

1. பிரேஸர் என்பவர் எழுதிய "பண்டைக்கால வரலாற்றுக்கு முன் னுரை" என்ற நூலைப் பார்க்க.

2. "வேதங்களும் வடதுருவப் பிரதேசப் பிறப்பகமும்" என்று திலகர் எழுதிய நூலைப் பார்க்க. "இடைப்பனி யுகத்தின் ஆரிய நாகரிகமும் பண் பாடும், வாடிக்கையாகக் கருதப்படுவதைவிட உயர்ந்ததாக விருந்திருக்க வேண்டும்; பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், பண்டைக்கால ஆரியர்களை எகிப்து நாட்டின் பூர்விகக் குடிகளுக்கு சம மானவர்களாக கருதக்கூடாதென்பதற்குக் காரணமில்லை" என்ற விஷயங் களை தன் நூலில் விளக்கியிருப்பதாக திலகர் கூறுகிருர்.

இந்தியாவில் சாதித்திருக்கிருனென்றும் அவன் அழிவுக்கு இரையாகமாட்டானென்றும் மெய்ப்பிப்பதில் நமது சரித்திராசிரியர்கள் ஈடுபட்டார்கள்!

பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்து நடந்த போராட்டத்தில் இத்தகைய போர்க் குணத்துடன் எழுதப்பட்ட சரித்திரத்தால் பயன் ஏற்பட்டது என்பது மெய்யே. ஆனல் இது இந்திய தேசியவாதிக்குத் தார்மீகரீதியில் ஒரு தெம்பைப் புகட்டிய மாதிரியே, கடந்த காலத்தைப்பற்றிய ஒரு பொய்யான தராதர நிர்ணயிப்பையும் அவனுக்கு அளித்தது; கடந்த காலத்துக்குரியதும் நிகழ்காலத்துக்குப் பயனற்றவையாகவோ, திட்டமான தடையாகவோ ஆகிவிட்டதுமாக உள்ளவற்றை அவன் பூஜிக்கும்படி செய்தது.

உதாரணமாக, சிவாஜியால் ஆப்ஸல்கான் சாகடிக்கப்பட்டது, நல்லொழுக்க நீதிக்கு உகந்ததா, இல்லையா, அது கீழ்த்தரமான, 'கொலைபாதகமா', 'சதிக்கொலையா' அல்லது போராட்டத்தில் அனுமதிக்கப்படும் கொலையா என்பதை வாதிப்பதில் லட்சக்கணக்கான சொற்கள் விரயம் செய்யப்பட்டிருப்பதை இக்கால சரித்திர மாணவர்கள் விநோதமாகக் கருதி ரசிப்பார்கள். சட்டசபை ஜனநாயக ஸ்தாபனங்களுக்கு இந்தியா தகுதியற்றதென்று பிரிட்டிஷ் ஆளும் வர்க்கம் அடித்துக்கூறியதை மறுப்பதற்காக, பண்டைக்கால இந்தியா, குடியரசுகளையும் "சுயாட்சி நடத்தும் ஜனநாயகங்களையும்" படைத்திருந்ததென்று எடுத்துக்காட்டி, பண்டைக்கால ஹிந்து அரசியல் பற்றிய புகழ்பெற்ற நூலை ஜயஸ்வால் எழுதினர். கிரீஸ், ரோமாபுரி ஆகியவற்றின் நாகரீகத்தை பிதுரார்ச்சிதமாகப் பெற்ற உரிமைக்காரர்களாக ஆங்கிலேயர்கள் தங்களை வர்ணித்துக் கொண்டார்கள்; அவர்களுக்கும் எகிப்துக்கும் பாலஸ்தீனத்துக்குமே பண்டைக்கால நாகரீகத்தின் முதலிடம் உரியது என்று கூறினர்கள்; மகாபாரதத்தில் எத்தகைய உண்மையோ அர்த்தமோ இல்லையென்றும், ஹிந்துக்களின் வேதங்கள் சரித்திரரீதியான தஸ்தாவேஜு அல்லவென்றும் அவர்கள் கூறினர்கள். இந்தியாவின் சில பாகங்களில் வெற்றிகண்ட அலெக்ஸாண்டரை ஈன்றெடுத்த கிரேக்கர்களின் வரலாற்றுக்கு, நமது வரலாறு முற்பட்டதாயிருக்க முடியாதென்றும் கூறினர்கள்.

நமது அறிவாளிகள் ஆத்திரப்பட்டனர். நமது தொன்மையை நிரூபிப்பதற்கு நம்மிடம் பிரிஸ்லிசுவடி[1] கிடையாது; உண்மையில், பருமன் மிகுந்த சான்றுகவுள்ள கிஸட்டின் கூர்நுனி தட்டைக் கோபுரங்கள் (பிரமித்துகள்) கிடையாது; அக்னடான், டுடான்காமென் ஆகிய இடங்களிலுள்ள தைலமிட்டு பத்திரப்படுத்திய சவங்கள் நம்மிடம் கிடையாது. நம் சார்பில் பேசுவதற்கு, ஊர், பாபிலோனியா போன்ற நகரங்கள்—அகழ்ந்தெடுக்கப்பட்ட நகரங்கள்—இல்லை. அன்னிய ஆட்சியாளரின் தொல்பொருள் கலை இலாகா அவற்றில் அக்கரை கொள்ளவில்லை. அரசாங்கத்தின் ஆதரவோ, இந்த நாட்டுப் பெருந்தனக்காரர்களின் ஆதரவோ இல்லாமல், நமது சரித்திராசிரியர்கள், சுயேச்சையாக, தஸ்தவேஜுகளைச் சேமிக்க அயராதுழைத்தனர். பிராமணர்களுக்கு அளித்த தானங்களைப் பதிவு செய்துள்ள அரசர்களின் தாமிர சாஸனங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள், அசோகா தூண்களில் செதுக்கப்பட் டிருப்பவைபோன்ற வாசகங்கள் ஆகியவை, கடந்த காலத்தைச் சிக்கறுத்துக் காட்டுவதற்காகச் சேகரிக்கப்பட்டன. சமயத்தின் மூல நூல்களிலுள்ள வானசர்த்திரக் குறிப்புகள், கி. மு. 3000 அல்லது கி. மு. 4000ல் கூட சரித்திரம் இருந்த நினைவுக்குச் சான்றுபகன்றன. ஆனால் அது உறுதியான ஆதாரம் படைத்த சரித்திரமாக ஏற்கப்படவில்லை.[2]

கடைசி கடைசியாக, ஸிந்து மாகாணத்தில், மொஹன்ஜோதாரோவில் ஒரு உண்மையான நகரம் கண்டு பிடிக்கப்பட்டுத்

1. பிரிஸ்லிசுவடி: உலகத்து நூல்களுள் மிகமிகப் பழமையானதாகக் கருதப்படும் நூல் இது; எகிப்தியர்களுக்குரிய இந்த நூலின் பிரதியை தீப்ஸ் நகரத்தில், பிரிஸ்லி என்பவர் கண்டுபிடித்தார்; எனவே, இது பிரிஸ்லிசுவடி என்று வழங்கப்படுகிறது. (மொ-ர்.)

2. திலகர் எழுதிய ஓரியன், தீக்ஷித் எழுதிய வேதாங்க ஜோதிஷ் ஆகிய நூல்களைப் பார்க்க. பாரத யுத்தம், வேதங்கள் ஆகியவற்றின் காலத்தைக் குறித்துப் பல நூலாசிரியர்கள் நடத்தியுள்ள விவாதங்களையும் காண்க. வேதகாலம் கி. மு. 1500க்கு முந்தி இல்லையென்றும், பாரத யுத்தம் கி. மு. 1000க்கு முந்தியில்லையென்றும் ஐரோப்பிய எழுத்தாளர்கள் கூறினர்கள். மறுபுறத்தில், சுமீரியர்கள், எகிப்தியர்கள் முதலியோரின் பூர்விக வாழ்வின் காலம் கி. மு. 6000க்கும் கி. மு. 4000க்கும் இடையே என்று மதிப்பிடப்பட்டது.

தோண்டி யெடுக்கப்பட்டது. இதன் விளைவாக, நம் தேசத்தில் கி. மு. மூவாயிரம் வருஷத்திலேயே நாகரீகம் இருந்திருக்கமுடியு மென்று, ஐரோப்பிய எஜமானர்கள்கூட ஒப்புக்கொண்டனர். எகிப்தியர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள், சால்டியர்கள் முத லியோருக்கு நாம் பிந்தியவர்களல்ல. நாம் ஒரு தொன்மையான தேசத்தைச் சேர்ந்தவர்கள்; நாம், சரித்திரத்துடன்கூடிய விவே கத்தையும் நெடுங்கால சரித்திர நினைவையும் படைத்த தொன் மையான மக்கள். நாம் உயிர்வாழ முடியும், போராடமுடியும், தற்காத்துக்கொள்ள முடியும், முன்னேறமுடியும்.

நமது சரித்திரம் சம்பந்தமான இலக்கியத்தின் வளர்ச்சியை மதிப்பிடுவதும், நமது கடந்தகால சரித்திரத்தை முன் பின் முர ணில்லாமல் தொடுப்பதற்காக நமது அறிவாளிகளில் பலர் செய்த கணக்கிடமுடியாத தியாகங்களை விவரிப்பதும் சாத்தியமல்ல. திலகர், ராஜ்வாடே, ரானடே, ஜயஸ்வால், பமோகி குண்டே, பண்டர்கார், கேட் கார், இன்னும் இங்கு பெயர் குறிப்பிட முடியாத பலர் (ஒரு சில ஐரோப்பியர்களும் உட்பட), இந்திய சரித்திரத்தின் பிரதான போக்குகளை வரையறுப்பதற்காக மகத்தான செயல் புரிந்திருக் கிறார்கள். ஓரளவுக்கு, மூலாதார விஷயங்கள் அச்சாகியிருக்கின் றன. ஆனால் இதுவரை, அநேக விஷயங்கள், ஐரோப்பிய (பிரிட் டிஷ்) எழுத்தாளர்கள் அளித்துள்ள இந்திய சரித்திரக் கருத் தோட்டத்தை எதிர்த்துப் போராடும் முறையிலேயே தரப்பட் டுள்ளன. இவ்வாறாக, சரித்திரம் எழுதும் கலை, தேசீயப் போராட் டத்தின் ஒரு கருவியாக விருந்தது; அவ்வாறாகவே, நமது பத் தொன்பதாம் நூற்றாண்டின் எழுத்தாளர்கள் அதைத் திட்டமிட் டுப் பயன்படுத்தினார்கள்.

அவர்களைப் பொறுத்தமட்டில், சரித்திரம் என்பது முன்னால் கண்டுபிடிக்கப்படாத, அல்லது முன்னால் வெளிப்பட்டிருந்தபோதி லும் தவறான முறையில் பயன்படுத்தப்பட்ட உண்மைகளையோ விஷயங்களையோ, பற்றுதல் இல்லாத முறையில் கண்டுபிடிப்பது மட்டுமல்ல. சரித்திரம் என்பது விருப்பு வெறுப்பு இல்லாமல் விஷயங்களைக் கண்டுபிடிப்பதல்ல. விஷயங்களே, ஒரு யுத்தத் தில் தற்காப்புக்காக ராணுவத்தை அணிவகுத்து நிறுத்துவது

மாதிரி முறைப்படுத்தப்பட்டன. அவை உண்மைகள்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை பகைவனுடன் போராடக்கூடிய வகையில் வரிசைப்படுத்தப்பட்டன.

ஆப்ஸல்கான் கொலை செய்யப்பட்டார்; இது ஒரு உண்மை; ஆனால் இந்த உண்மையை அதன் சுற்றுச் சார்பில் பொருத்திப் பார். சிவாஜி ஒரு துரோகியென்றும், சகல மராத்தியர்களுமே அப்படித்தான் என்றும் அவர்களுக்கு ஒழுக்கம் குறைவு என்றும் ஆங்கிலேயர் மாதிரி வாதம் செய்யாதே. அசோகா தூண் ஒரு உண்மை, ஒரு மெய்ப்பொருள்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நாம் அத்தகைய அருமையான சன்மார்க்க நெறிகளை போதித்தோமென்பதையும், அத்தகைய ராஜ்யத்தில் நாம் வாழ்ந்தோமென்பதையும் அதன் தொன்மை எடுத்துக் காட்டுகிறது. ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், மொஹன்ஜாதாரோவில் குளிக்கும் அறைகள் இருந்தன, ஓடுகள் இருந்தன; ஒரு நகரம் இருந்தது. எனவே, நீங்கள் வந்து எங்களுக்கு போதிப்பதற்குமுன் நாங்கள் நாகரீகம் அடையவில்லையென்றும், உங்கள் உதவியில்லாமல் நாங்கள் மீண்டும் நாகரீகமாக வாழ முடியாதென்றும் கூருதீர்கள்.

இவ்வாருக, பத்தொன்பதாம் நூற்ருண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்ருண்டின் துவக்கத்திலும், சரித்திரம் எழுதும்கலை, நமது அறிஞர்களின் கையில் ஒரு சித்தாந்தக் கருவியாகப் பயன்பட்டது; ஏகாதிபத்திய அரசுக்கு எதிராக, இந்திய தேசீயத்தின் சித்தாந்தக் கருவியாகப் பயன்பட்டது; நமது தொன்மை, வம்சபரம்பரை, புராதனத்திறமைகள், புராதன விவேகம் ஆகியவற்றின் அடிப்படையில் சுதந்திர உரிமையை ஸ்தாபிக்கும் கருவியாக, படையெடுப்பாளனுக்குப் பணியாமல் அவனுக்குச் சவால் விடுக்கும்படி, நீண்ட நெடுங்கால வரலாற்று வழியாக நாம் உயிர் வாழ்ந்து வெற்றிகண்டு வந்திருப்பதைப்போல தொடர்ந்து வாழ்வோம், வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையைப் பெறும்படி, வாசகர்களுக்கு உற்சாகமூட்டும் கருவியாக, சரித்திரம் எழுதும் கலை திகழ்ந்தது.

ஆனால் சரித்திரம் பற்றிய இந்தக் கருத்து, அன்னிய படையெடுப்பாளனுக்கு எதிராக ஒரு தார்மீக ரீதியான தெம்பும்

நம்பிக்கையும் அளித்ததைத் தவிர, வேறு பலன் ஒன்றும் தர வில்லை.

இங்கு ஒரு கேள்வியைக் கேட்கவேண்டும் :—இந்த அறிவாளிகள் எவரைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்? அவர்கள் எவருக்கு இந்தத் தெம்பையும் நம்பிக்கையையும் அளிக்க முயன்றார்கள்? முதல் உலக யுத்த முடிவில் யுத்த-பிற்கால நெருக்கடி ஏற்படுகிற வரையில், மிகப் பெரும்பான்மையான பொதுமக்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிக் கிளர்ச்சிகளில் பிரவேசிக்கவில்லை யென்பது சரித்திர உண்மை. 1905ம் வருஷ நெருக்கடி வரையில், தேசீய இயக்கத்துக்குத் தலைமை தாங்கிய அறிவாளிகள், பொதுமக்களுக்குப் போராடுவதற்கான உற்சாகத்தை அளிப்பதற்காகவும் அதற்கான கோஷங்களை அவர்களுக்குக் கொடுப்பதற்காகவும், பொதுமக்களை அநேகமாக அணுகவேயில்லை. குட்டி-பூர்ஷுவாத் தலைமையும் அதன் சரித்திர உரைகள்மூலம் பேசிய லிபரெல் பூர்ஷுவா வர்க்கமும், டொமினியன் அந்தஸ்து என்ற தன் திட்டத்தை—அதாவது, ஆட்சிபுரியும் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் பொருளாதாரம், சட்டசபை ஜனநாயகம் முதலியவற்றின் பிரதிகளைப் படைத்துக்கொண்டு, அந்த ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் அந்தஸ்துக்கு உயர்வதற்குத் தமக்குள்ள தகுதியைப் பெறவேண்டுமென்ற திட்டத்தை—அப்பொழுதுதான் வகுத்துக் கொண்டிருந்தனர்.

வளர்ந்துகொண்டிருந்த பூர்ஷுவா வர்க்கமும் அதன் அறிவாளிகளும் தமது வர்க்க, தேசீய நோக்கங்களை சரித்திர ரீதியாக நியாயப்படுத்தி முன் வைப்பதற்காக, இந்திய சரித்திரப் பரிசீலனைகளைப் பயன்படுத்தினார்கள்; இதை இந்தக் கால கட்டத்துக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடிய சில நூல்களிலிருந்தும் அவற்றின் ஆசிரியர்களிடமிருந்தும் மிகத் தெளிவாகக் காணலாம். அப்பொழுது, இந்திய பூர்ஷுவா வர்க்கம், தன் நோக்கங்களைக் குறித்து ஒருமனப்பட்ட கருத்தை ஏற்படுத்திக்கொள்ளவில்லை; அந்தத் தரத்துக்கு அது அப்பொழுது வளர்ந்திருக்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிரான அரசியல் போராட்டத்தின் நீட்டமும் முறைகளும் என்ற கேந்திரமான பிரச்சினை

எழுந்தபொழுது, இந்திய பூர்ஷுவா வர்க்கத்தின் பலவீனங்களும், முரண்பாடுகளும், ஒன்றோடொன்று மோதும் அரசியல் திட்டங்களும், அதன் சரித்திர உரைகளில் முன்னுக்கு வந்தன. இந்தியாவின் இக்கால வறுமைக்கும் சிறுமைக்கும் நேர்மாறாகத் திகழும் அதன் தொன்மை, அதன் வம்ச பரம்பரை, அதன் பண்டைக்காலச் செல்வம், அதன் புராதனக் கால விவேகம் ஆகியவற்றைப் பற்றிய சரித்திர முடிவுகளை ஒவ்வொரு பகுதியும் ஏற்றுக்கொண்டது. ஆனால் சரித்திரத்தின் எந்தக் கால கட்டத்தின் பாசறையிலிருந்து, என்னஎன்ன சமுதாய, அரசியல் கருவிகளை எடுத்து, இன்றைய போராட்டத்தில் பிரயோகிக்க வேண்டுமென்ற கேள்வி எழுந்தபொழுது, பூர்ஷுவா வர்க்கமும் அதன் அறிவாளிகளும் பிளவுபட்டுச் சிதறுண்டனர். பண்டைக்காலம் பற்றி அவர்கள் ஒருமனப் பட்டிருப்பதாகத் தோன்றியதெல்லாம் துண்டுதுண்டாகச் சிதறியது.

முதலாவதாக ஏகாதிபத்திய-எதிர்ப்புப் போராட்டப் பிரச்னையை அணுகுவது சம்பந்தமாக ஒவ்வொரு பூர்ஷுவாக் கோஷ்டியும் வகுத்திருக்கும் அரசியல் திட்டப்படியும்,

இரண்டாவதாக, அன்னிய ஏகாதிபத்திய பூர்ஷுவா வர்க்கம், தேசீய பூர்ஷுவா வர்க்கம் ஆகிய இரண்டுக்கும் கட்டுண்டு அடிமைப் பட்டுச் சுரண்டப்படும் கோடிக்கணக்கான மக்கள் சம்பந்தமாக, இந்தியாவின் சுரண்டல் வர்க்கம், நிலப் பிரபுத்துவ-முதலாளித்துவக் கூட்டணி, கொண்டுள்ள போக்குக்குத் தகுந்தபடியும்,

சரித்திர உண்மைகள், நபர்கள், காலகட்டங்கள் ஆகியவற்றைப்பற்றி புதிய விளக்க உரைகள் எழுதப்பட்டன.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கான முறையையும் திட்டத்தையும் வரையறுக்கும் பிரச்னை, இன்னொரு பிரச்னையை எழுப்பியது: முகலாயர்களையும் மராத்தியர்களையும் தோற்கடிப்பதில் ஆங்கிலேயர்கள் எப்படி வெற்றி அடைந்தார்கள்? குறிப்பாக, இந்தியாவை வசப்படுத்திக்கொள்வதற்காக, ஆங்கிலேயர்கள், இறுதியான, முக்கியமான போராட்டங்களை மராத்தியர்களுடன்தான், நடத்தவேண்டியிருந்தது; அந்தப் போராட்டங்களில் ஆங்கிலேயர்கள் எப்படி வாகைமாலை சூடினர்

கள்? ஆங்கிலேயருக்குமுன்னால், வலுமிகுந்த முகலாயர்கள் இந்தியாவை வசப்படுத்திக்கொண்டார்கள்; ஆனால் அவர்களுக்கெதிராக சிவாஜியின் தலைமையில் செயல்பட்ட மராத்தியர்கள் ஜயமடைந்தனர். பிறகு, மராத்தியர்கள் ஆங்கிலேயரிடம் எப்படித் தோல்வி அடைந்தனர்? அவர்கள் முகலாயர்மீது மட்டும் வெற்றி கண்டது எப்படி? இந்த இரு கேள்விகளுக்கும் கிடைக்கும் பதில்கள், புதிய வெற்றியாளனிடமிருந்து சுதந்திரத்தைப் பெறுவதற்கான புதிய வழிகளையும் சாதனங்களையும் சுட்டிக்காட்டப் போதுமானவையாயிருக்கவேண்டும். சரித்திர எழுத்தாளர்கள் இந்தப் பிரச்னைகளில் மாபெரும் சக்தியுடனும் உற்சாகத்துடனும் ஈடுபட்டார்கள். மராத்தியர்-முகலாயர் உறவுகள் அப்பொழுதும் மக்கள் மனதில் பசுமையான நினைவாகவிருந்ததால், அப்பொழுதும் சமுதாய உண்மையின் ஒரு பகுதியாக விருந்ததால், மத்தியதரவர்க்க அறிவாளிகளும் பூர்ஷுவா-தேசீயவாதப் பத்திரிகைகளும் இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் அதிகக் கவனஞ் செலுத்தின.

ஆதார விஷயங்கள் அற்பசொற்பமாயிருந்ததாலும், அன்னிய ஆட்சியாளர்கள் இடையூறு விளைவித்ததாலும், சரித்திர ஆராய்ச்சிகளுக்குக்கூட பெரிய அளவுக்கு இடைஞ்சல் ஏற்பட்டது. மகாராஷ்டிர ராஜ சபைகளின் தஸ்தாவேஜுகளை, சரித்திரவாணவர்களின் ஆராய்ச்சிக்குக் கொடுக்க, ஆட்சியாளர்கள் மறுத்தனர். மராத்தியர்களும் முகலாயர்களும் அழிவுற்ற இடங்களில் உயிர்வாழும் சமஸ்தானாதிபதிகள், புதிய எஜமானர்களிடமுள்ள விசுவாசத்தாலும், தீய வழிகளில் தமக்குக் கிடைத்த மணிமுடிகளை இழந்துவிடுவோமாவென்ற பயத்தாலும் உந்தப்பட்டு, தமது தஸ்தாவேஜு நிலையங்களைத் திறந்துவிட மறுத்தார்கள். பெரிய நிலப்பிரபுக்களும் ஜமீன்தார்களும் ஜாகிர்தார்களும் சரித்திராசிரியர்களைப் புறக்கணித்தார்கள். ஏனென்றால் இந்த மூன்று தரப்பினருமே மறைபொருளாயுள்ள தமது இழிவைக் கண்டு பயந்தார்கள்; தமது பூர்வோத்திர ரகசியங்களை மக்கள் அறிந்தால் என்ன நேரிடுமோவென்று அச்சப்பட்டார்கள். எனினும், ஆராய்ச்சியாளரின் விடாமுயற்சியால் ஓரளவுக்கு மூலாதார விஷயங்கள் கிடைத்தன; அதிலிருந்து உண்மையான குட்டிச்சண்டைகளும் போராட்டங்களும் தொடங்கின.

இந்திய எழுத்தாளர்கள் சரித்திரம் என்ற வகையில் ஏதாவது எழுதுவதற்கு வெகுநாட்கள்முன்பே, பிரிட்டிஷ் எழுத்தாளர்கள், தாம் படையெடுத்து வெற்றிகண்டு கொள்ளையடித்தபொழுது தமக்குக் கிடைத்த விஷயங்களை உபயோகித்து, இந்திய சரித்திர சம்பந்தமாகச் சில நூல்களை எழுதியிருந்தனர்; எல்பின்ஸ்டன், கிராண்ட். டப், பிரிக்ஸ், டோட், மோர்லாந்து முதலியோர் தமது பருமன் மிகுந்த புத்தகங்களை எழுதிவிட்டனர். அவற்றின் அடிப்படையில், முன்பே, இந்திய சரித்திரத்தைப்பற்றி உலகம் "போதிக்கப் பட்டுவந்தது."

அவர்களுக்குப்பின் வந்த இந்திய எழுத்தாளர்கள், இந்திய சம்பவங்களையும் வரலாற்றையும் குறித்து அவர்கள் அளித்துள்ள திரித்தல் புரட்டல்களையும் தவறான விவர விளக்கங்களையும் போதத்தையும் எதிர்த்தும் போராடுவதிலிருந்து தமது வேலையைத் தொடங்கவேண்டியிருந்தது. ஆனால் தமது கண்ணோட்டத்தை முன்வைக்கும் நிலை வந்தபொழுது, இவர்களுடைய சாதனை, குறைவானக் குளறுபடியுள்ளதாகவோ கூடுதலாக மெச்சக்கூடியதாகவோ இருக்கவில்லை. அவை சில முடிவுகளைச் சுட்டிக்காட்டின; அவற்றை லிபரெல் பூர்ஷ்வா வர்க்கம், தன் எதிர்காலத்துக்குரிய திட்டமாக உபயோகிக்க, பிற்காலத்தில் முயன்றது.

பாரதம் பாரதமாகவுள்ள ஆராய்ச்சிப் பிரசுரங்களை ஒதுக்கிவிட்டு, பிரதிநிதித்துவத் தன்மைகொண்ட ஒருசில நூல்களை மட்டும் நாம் எடுத்துக்கொண்டோமானால், இந்திய சரித்திரம் பற்றி நமது பூர்ஷ்வா அறிவாளிகள் கொண்டிருந்த அபிப்பிராயம், புதிய விரோதிக்கு எதிரான எதிர்காலப் போராட்டங்களுக்கு வழிகாட்டக்கூடியவையாகக் கருதப்பட்ட அந்த அபிப்ராயம் என்ன எனபதைச் சுலபமாக உணரலாம்.

பம்பாய் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாகவிருந்த எம். ஜி. ரானடே, 'மராத்தியர் அதிகாரத்தின் உதயம்' என்ற நூலை எழுதினார்; அதில், சிவாஜி தலைமையில் ஏற்பட்ட மராத்தியர் எழுச்சிக்கு வெற்றியளித்த காரணங்களை விண்டுகாட்ட அவர் முயன்றார். 1918-ல், பீஷ்வாக்களுடைய வீழ்ச்சியின் நூறுண்டு

பூர்த்தியை முன்னிட்டு, லிபரெல் கருத்துக்களை உடையவரும் புகழ்பெற்ற அறிஞரும் வியாசகர்த்தாவுமான என். ஸி. கேல்கார் "மராத்தியரும் ஆங்கிலேயரும்" என்ற நூலை எழுதினர்; அதில் எந்தெந்த வகைகளில் மராத்தியர்களை ஆங்கிலேயர்கள் மிஞ்சமுடிந்ததென்பதைப் பாகுபடுத்தி ஆராய அவர் முயன்முர். பானிபட் யுத்தத்தில் மராத்தியர்கள் அடைந்த தோல்வி, சிவாஜியின் எழுச்சியை உந்தித்தள்ளிய சக்தி, மகாராஷ்டிர ராஜ சபைகளின் சாதிப்பூசல்கள், தனிநபர் சூழ்ச்சிகள், ஆங்கிலேயரின் ராணுவ தளவாடங்கள், எந்திர நுணுக்கத்திறன் முதலியவற்றைப் பற்றி வி. கே, ராஜ்வாடே பாரதம் பாரதமாக ஆராய்ச்சிகளை வெளியிட்டார். 'இந்தியாவில் கிறிஸ்துவ அதிகாரத்தின் தோற்றம்' என்ற நூலை மேஜர் பாஸு எழுதினர். மேலும், 1857-ம் ஆண்டில் நிகழ்ந்த சுதந்திர யுத்தத்தைப்பற்றி சில பல புத்தகங்கள் வெளிவந்தன. நமது தேசத்தில் வளர்ந்துவந்த அறிவாளிகள் சரித்திரத்தை எவ்வகையில் புரிந்துகொண்டார்களென்பதை, பிரதிநிதித்துவம் வாய்ந்த இந்த எழுத்தாளர்கள் ஒவ்வொருவரும் உருவாக்கிய முடிவுகள் - எதிர்காலப் போராட்டங்களுக்கு வழிகாட்டியாயிருக்குமென்று கருதப்பட்ட முடிவுகள் - நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

பதினைருவது பதினேழாவது நூற்ருண்டுகளில் வாழ்ந்த மகான்களும் அவர்களுடைய பக்தர் குழுக்களும் அன்னுருடைய சமய வேகமும், ஹிந்து சமுதாயத்தில் ஸ்தாபிதமாகி கெட்டுக் கிடந்த குருமார் முறைமீது அவர்கள் தொடுத்த தாக்குதலும், மராத்யர் எழுச்சிக்குப் பிரதான இயக்கு சக்தியாக விருந்ததென்று ரானடே கூறினர். அவர், சமயமே சரித்திரத்தின் இயக்கு சக்தியென்று கருதினர். கத்தோலிக்க மதத்துக்கு எதிராக ஐரோப்பாவில் எழுந்த சமயத் திருத்தத்துடனும் அதன் விளைவாக ஐரோப்பாவில் உதயமான புதிய சமுதாயத்துடனும் புதிய அரசுகளுடனும், அவர் பக்தி இயக்கத்தை ஒப்பிட்டார். சிவாஜியைப் போன்ற ஒரு தலைவனின் மேதை இந்த நிகழ்ச்சிக்கு உதவி புரிவது அவசியமாயிருந்ததென்பது மெய்யென்றும் அவர் அபிப்பிராயப்பட்டார். ராஜ்வாடே முதலியோரும் மதத்தை இயக்கு சக்தியாகக் கருதினர்கள்; ஆனல் தேசத்தின் புனர் ஜன்மத்துக்கு அறிகுறிகளாக

அல்லது பிரதிநிதிகளாக விளங்கியவர் யார்யார் (சிவாஜியா, ராம் தாஸா? முதலிய கருத்து வேறுபாடுகள்) என்பதில் அபிப்ராய பேதங் கொண்டனர். மராத்தியர்களின் அலாதியான பண்பு, மகா ராஷ்டிர தர்மம் என்று அவர் குறிப்பிட்டதில் பொதிந்திருப்பதாக வும் அதுவும் சரித்திரத்தின் இயக்கு சக்திகளில் ஒன்ருக இருந்த தென்றும் குறிப்பிட்டார். விசித்திரம் என்னவெனில், பிரிட்டிஷா ருக்குமுன் தோல்வியடைந்ததற்கான காரணங்களை ஆராயும் பொழுது, மதத்தின் தோல்வி, வீழ்ச்சிக்குப் பிரதான காரண மென்று கூறப்படவில்லை. ஒருவேளை, கிறிஸ்துவ மார்க்கமும் அவர்களுடைய ஆண்டவனின் திருவருளும் தங்களை கடல் அலைகள் வழியாக இட்டுக்கொண்டு வந்து, பாரதநாட்டைத் தங்கள் கையில் கொடுத்ததென்று ஆங்கிலேயர்கள் சொல் லாதது காரணமா யிருக்கலாம்! மராத்தியர்களிடம் சுதேசி தேசபக்தி என்ற சேர்மானச் சக்தி இல்லாததும், அவர்கள் தம்மைச் சிதறுண்டு போகச் செய்யும் தனி நபர் போக்கின் மீது மிதமிஞ்சிய அன்புகொண்டிருந்ததுமே வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களென்று கேல்கார் கருதினர். இதற்கு நேர்மாருக ஆங்கிலேயர்கள் இருந்ததால், அவர்கள் வெற்றியடைந்தன ரென்றும் அவர் கருதினர். இந்த நற்பண்புகள், ஆங்கிலேயர் களிடையே, 17-வது, 18-வது நூற்றுண்டுகளில் எப்படி மலர்ந் தன, அவர்களுடைய சரித்திரமே எடுத்துரைப்பது மாதிரி, அதற்கு முன் அவர்களிடம் ஏன் இந்த உயர் பண்புகள் உதயமாகவில்லை, என்பதை ஒருவரும் விளக்க முயற்சிக்கவில்லை. பாஸு தன் எடுப்பான பெரும் புத்தகத்தில், பிரிட்டிஷாரின் வெற்றிகளுக்கு வேறு காரணங்களைக் காட்டினர்; ஆங்கிலேயர் துளிக்கூட உண் மையாக நடந்துகொள்ளவில்லை; அவர்கள் பெரிய அளவில் நம் பிக்கைத் துரோகம் செய்தனர்; பட்டம், பதவி, பணம் முதலியவற் றைக்கொண்டு நபர்களைக் கெடுக்கும் முறையை விரிந்த அளவில் அனுஷ்டித்தனர்; துரதிர்ஷ்ட வசமாக இந்திய மன்னர்களால் இந்த முறைகளை எதிர்த்துப் போராட இயலவில்லை; எனவே ஆங்கிலேயர்கள் ஜயமடைந்தனரென்பது பாஸுவின் கருத்து. ஆக சரித்திரத்தின் இயக்கம் முழுமையும், மனிதர்களின் கருத்துக் களால் ராஜதந்திரிகள், தலைவர்கள் ஆகியோரின் நல்லொழுக்க

தீயொழுக்கங்களால் நிர்ணயிக்கப் படுகிறது. கோடானுகோடி உழைப்பாளி மக்களும், பற்பல சகாப்தங்கள் வழியாக அவர்களுடைய ஜீவனுள்ள சமுதாய அமைப்பு அடைந்து வரும் முன்னேற்றமும், - அனைத்தும் வரலாற்றின் 'மாவீரர்களுடைய', 'குருநாதர்களுடைய', 'அவதார புருஷர்களுடைய' சபலக் குரோதங்களுக்கு அல்லது தர்மசிந்தனைகளுக்கு அல்லது சமய நம்பிக்கைக்கு உட்பட்டவையாயிருக்கின்றன. அருமையாகத்தோன்றும் தனிநபர்களே சரித்திரத்தின் இயக்கு சக்திகள் என்றனர் சிலர்; வேறு சிலர், இந்த ஜாதி அல்லது அந்த ஜாதிக்கு, இந்த வர்ண-இனம் (Race) அல்லது அந்த வர்ண இனத்துக்கு இயல்பாக உள்ள பண்புகளே சரித்திரத்தின் இயக்கு சக்திகளென்றனர்.

ஆனால், இந்தக் கருத்துக்கள், தகுதிகள், நன்னெறிகள் அல்லது நம்பிக்கைகள் எப்படி உதயமாகி வளர்ந்து, மறைகின்றன, மீண்டும் தோன்றுகின்றன? ஒரு தேசத்தின் ஒரே கருத்துக்களின் தொகுப்பு இன்னொரு தேசத்திலுள்ள அதே கருத்துக்களின் தொகுப்பை எப்படித் தோற்கடித்தது? அகஸ்மாத்தாக அல்லது தற்செயலாக நேரிட்டிருக்குமென்றோ, தலைவிதிப்படி நடந்திருக்குமென்றோ பதில் கூறப்பட்டது. எனவே, இறுதியாகப் பார்த்தால், சமுதாயம், தன் தலைவிதியையோ எதிர்காலத்தையோ திட்டமிடுவதற்கோ கட்டுப்படுத்துவதற்கோ முடியாத நிலையில் உள்ளது;

இந்தத் தோரணையைப் பின்பற்றிய நமது சரித்திராசிரியர்கள், எவருடைய பயிற்சியின் படைப்புக்களைப் பயின்றார்களோ அந்த அன்னியக் குருநாதர்களையே தடம் வழுவாமல் பின்பற்றினார்கள். அவர்கள், கார்லே, பர்க், பென்தாம், கிரீன், ஹெகல் ஆகியோரின் சீடர்கள். அந்த பூர்ஷுவா வர்க்கத்தின் தத்துவ ஞானிகள், தத்தம் தேச வரலாற்றுக்கு எந்தக் கருத்துமுதல்வாத, [1]விதிமுறை வாதத் தத்துவங்களைக் கடைப்பிடித்தார்களோ, அவற்றையே,

[1]விதிமுறை வாதம்: சகல நிகழ்ச்சிகளும் ஒரு விதிமுறைக்கு உட்பட்டவை, தவிர்க்க முடியாத அவசியத்தால் நடப்பவை என்று கூறும் தத்துவம். (மொ - ர்.)

அதே வடிவங்களிலேயே, நமது சரித்திராசிரியர்களும் நம் சரித்திரத்துக்குப் பிரயோகித்தார்கள். இந்த இந்திய அறிஞர்கள், தம் நாட்டை வென்று வசப்படுத்தியுள்ளவர்களின் பள்ளிக்கூடங்களில் போதிக்கப்படும் பூர்ஷுவா சரித்திர விஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்வதற்கு மனங்கோணவில்லை ; ஏனென்றால், இந்தியாவிலுள்ள சமுதாயமே இடிபட்டுப் பொடியாகி, வெற்றியடைந்த ஏகாதிபத்திய நாட்டு பூர்ஷுவா வர்க்கத்தின் பிம்பமாக புனரமைக்கப்பட்டு வந்தது.

நாம் மேலே குறிப்பிட்டதுமாதிரி, பிரிட்டிஷார் வருகைக்கு முன்பிருந்த காலகட்டத்தின் வரலாற்றைக் கடந்ததன் மூலம், வளர்ந்துவந்த பூர்ஷுவா வர்க்கத்துக்கும் அதன் அறிவாளிகளுக்கும் ஒரு அரசியல், சமுதாயத் திட்டம் கிடைத்தது. தேசம் மறுமலர்ச்சியடைய வேண்டுமானால், மக்களின் மூட நம்பிக்கைகளும் குறுகிய சாதி உணர்ச்சிகளும் ஒழிந்தால்தான் முடியுமென்று, அனைத்துக்கும் மக்கள்மீது பழிபோடக்கூடியவர்கள் கருதினார்கள். பிரபுத்துவப் பிரிவினையே தோல்விக்குக் காரணமென்று கருதியவர்கள், பிரபுத்துவ குடும்பப்பெருமை, பிரபுத்துவ நலன்கள் ஆகியவற்றின் எல்லை வரம்புகளைக் கடந்ததாக, அனைவரும் ஐக்கியப்படுத்தும் சுதேசி தேசபக்தி மலர வேண்டுமென்று கூறினார்கள். சரித்திரத்தில், 'மாவீரன்' அல்லது 'தலைவன்' அல்லது 'அவதார புருஷனுடைய' முன்னுதாரணத்தாலும் கருத்துக்களாலும் வார்த்தெடுக்கப்பட்டு உயிர்ப்பிக்கப்பட வேண்டிய நிலையில், செயலற்ற களி மண்ணாக மக்கள் இருப்பதால், அவர்களுக்கு, நம்பி, கீழ்ப்படிந்து, பின்பற்றுவதைத் தவிர வேறு பாத்திரம் கிடையாது என்பதே அவர்கள் கருத்து.

கோஷ்டிச் சண்டைகளுக்குக்கூட சரித்திரத்திலிருந்து நியாயம் காட்டப்பட்டது. வெற்றியடைந்துவந்த மராத்தியர்கள் பிராமணர்களான பீஷ்வாக்களின் தலைமை ஏற்பட்டபொழுதே தோல்வியடைந்தனரென்று, பிராமணரல்லாதார் கட்சி வாதாடியது. எனவே, பிராமணர்களுக்கு இடம் இருக்கக்கூடிய எந்த அரசியல் தலைமையையும் நம்ப முடியாதென்று அது கூறியது. காயஸ்தா ஜாதியினர் பிராமணர்களை எதிர்த்தனர் ; அந்த

எதிர்ப்பில் அவர்கள் அந்தணர்களுக்கு எதிராக கடந்த காலச் சரித்திரத்திலிருந்து மேற்கோள் காட்டினர்; சமஸ்கிருதத்தின் மொழி விஞ்ஞானத்தைக்கூட அவர்கள் ஒரு கருவியாகப் பயன் படுத்தினர். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தமக்கென வகுத்துக் கொண்ட திட்டத்தில், [1]கோரிகான் போராட்டத்தில் தாம் வகுத்த பாத்திரம் முதல், ஹிந்துக்களின் சமுதாய - அரசியல் நீதி நூலான மனு ஸ்மிருதியைக் கண்டனஞ்செய்வது முடிய அனைத்தையும் குறிப்பிட்டனர்.

இவ்வாறாக, கடந்தகால சரித்திரத்தின் ஆராய்ச்சி, அரசியல் கட்சிகளின் நிகழ்காலக் கோஷங்களையும் திட்டங்களையும் ஆதரிப்பதற்காகவும் நியாயப்படுத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. கடந்த காலத்தின் வெற்றி தோல்விகளுடைய படிப்பினைகள், நிகழ்காலத்துக்கு உதவிபுரிவதாகக் கருதப்பட்டன. இதிலிருந்து பூர்ஷ்வா அறிவாளிகள், சரித்திரத்தை ஒரு நோக்கத்துடனும் திட்டமான பாரபட்சப் போக்குடனும் படித்தார்களென்பது புலனாகும்; இந்த மாவீரனுக்காகவோ அந்த மாவீரனுக்காகவோ பாடுபட்டுப் போராடுவதைத் தவிர, கோடானு கோடி மக்களுக்கு வேறு பாத்திரம் கிடையாதென்ற முறையில் இருந்தது இந்த ஆராய்ச்சி.

ஆனால், கடந்தகால சரித்திரத்தின் பூர்ஷ்வா தத்துவ ஞானிகளும் இக்கால சரித்திரத்தின் பூர்ஷ்வா வர்க்கத் தலைமையும் ஒருவருக்கொருவர் பெரிய அளவுக்கு உதவி செய்துகொள்ள முடியாதென்பதை அவர்களே சீக்கிரத்தில் கண்டுகொண்டார்கள். இந்தக் காலகட்டத்தின் அரசியல், சமுதாய உண்மைகள், கிளர்ச்சிகள் எழுச்சிகள், வரலாற்றுக்கு முற்றிலும் புதியவையாக விருக்கின்றன; இவற்றைக் கடந்தகால அனுபவம் விளக்க முடியவில்லை. அந்தக் காலத்தில், பதினாறாவது பதினேழாவது நூற்றாண்டுகளில் வாழ்ந்த பாபரும், அக்பரும், சிவாஜியும், பீஷ்வாக்

---

[1] இந்தப் போராட்டத்தில் பீஷ்வாக்கள் ஆங்கிலேயர்களால் தோற்கடிக்கப்பட்டனர். இதில், ஆங்கிலேயரின் மஹார் படைகள் (மஹார்: தாழ்த்தப்பட்ட வகுப்பினர்.) முக்கியமான சக்தியாக விளங்கின. அவர்களால் தான் ஆங்கிலேயருக்கு இந்தப் போராட்டத்தில் வெற்றி கிடைத்தது என்று கருதப்படுகிறது.

களும் மகான்களும் சாதுக்களும், அவர்களுடைய அரசியலும் சமுதாயமும், பத்தொன்பதாவது இருபதாவது நூற்றுண்டுகளில் வாழ்ந்த விக்டோரியா மகாராணி, பல்மர்ஸ்டன் ஆகியோருடனே சர்ச்சில் களுடனே, ஒய். எம். ஸி. ஏ. (Y. M. C. A)யுடனே, திலகர், காந்தி ஆகியோருடனே, மார்க்ஸ், லெனின், ஸ்டாலின் ஆகியோருடனே எவ்வகையான ஒற்றுமையும் பெற்றிருக்கவில்லை. சரித்திரத்தின் படைப்புக் கர்த்தாக்களுக்கு, நீராவி என்ஜின், தந்தி, உலக மார்க்கெட், நெருக்கடி, வேலை நிறுத்தங்கள், புரட்சிகள் ஆகியவற்றைக் குறித்து, கடந்தகாலச் சரித்திரம் எப்படி உதவ முடியும்? ரிக் வேதத்தில்கூட வங்கி முறை (பாங்கு முறை)யும் வட்டி வீதமும் இருந்தன வென்பதையும், பௌத்த மடங்களில் சட்டசபை வோட்டு முறை இருந்ததென்பதையும், சாணக்கியரின் நூலில் (அர்த்தசாஸ்திரத்தில்) கார்டெல்களும் கம்பைன்களும்[1] குறிப்பிடப்படுகின்றன வென்பதையும், இவைபோன்ற இதர விஷயங்களையும் கண்டுபிடிக்க முயற்சிக்கும் தைரியம் மிகுந்த பேராசிரியர்கள் இல்லாமல் போகவில்லை என்பது மெய்யே. ஆனால் சமுதாய-அரசியல் யதார்த்த உண்மை இந்த முயற்சிகளைக் கேலிக்கூத்தாக்கியது. பிரம்மாண்டமானதும் அகில உலகத்தையும் அணைத்துத் தழுவியிருப்பதுமான நமது சகாப்தத்தின் முதலாளித்துவ எந்திரத் தொழிற்புரட்சி, சரித்திரத்தில் எங்குமே காணப்படாத ஒரு விஷயமாகும்.[2] அதைப்போலவே, நமது

---

1. முதலாளிகள் தமக்கிடையே போட்டியிடும்பொழுது, பலவீனமானவர்கள் அடிபட்டுப் போகிறார்கள்; பெரிய அளவுத் தொழில்கள் வளர்கின்றன; உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியும் பெருந் தொழில்களை அவசியமாக்குகிறது. பொருளுற்பத்தியும் மூலதனமும் ஒருசில முதலாளிகளிடம் ஒருசேரக் குவிகின்றன. ஒரு தொழிலிலோ, ஒன்றோடொன்று சார்ந்து நிற்கும் பல தொழில்களிலோ உள்ள பெரு முதலாளிகள், தமக்குள் பலவகை ஐக்கியங்களை நிறுவிக்கொள்கிறார்கள்; அவை டிரஸ்டுகள், கார்ட்டெல்கள், ஸிண்டிகேட்டுகள் எனப்படுகின்றன.

2. சந்தைகள், மூலப்பொருட்கள், முதலீடு, உபரிலாபம் ஆகியவற்றுக்காக பூர்ஷுவா வர்க்கம் உலகம் முழுவதும் பரவியதன் மூலம், முதன் முதலாக, உலகம் ஒரே யூனிட்டாகிவிட்டது. நவீன ஏகாதிபத்தியமும் அதன் திக்விஜயமும், அலெக்ஸாண்டர், பாபர், செங்கிஸ்கான், மராத்தியர்கள் முதலியோரின் திக்விஜயங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை.

சகாப்தத்தின் உலகத் தொழிலாளிவர்க்கம், ஆட்சிபுரியும் வர்க்கமாகி, வறுமையில் தவிக்கும் உலக சமுதாயத்தை, வரவிருக்கும் காலம் முழுமையும் அபரிமிதமான செல்வத்தைப் பெற்றிருக்கக் கூடியதாக மாற்றுவதற்காகப் பிரமாதமான காரியங்களைச் சாதித்துக்கொண்டிருக்கிறது; இவற்றை, பண்டைக்கால, இடைக் கால வரலாற்றுக் கட்டங்களில் வாழ்ந்த உழைப்பாளி மக்கள் கனவிலும் கண்டிருக்க முடியாது. முற்றிலும் புதிய சக்திகள். புத்தம் புதிய வர்க்கங்கள், நவ நவீன மக்கள் தோன்றியுள்ளனர்' இவர்களுக்கு வழிகாட்டுவதற்கு, இவர்களைப் புரிந்துகொள்ளுவதற்கு, பூர்ஷுவா சரித்திரப் புலவர்களின் சரித்திர விஞ்ஞானம் அது சுதேசிச் சரக்காயினும் சரி, விதேதிச் சரக்காயினும் சரி, எத்தகைய விதிகளையும் அளிக்க முடியாது. முதல் உலக மகா யுத்தத்தின் நெருக்கடிக்குப் பிற்பாடு[1] நடைபெற்றுவரும் தேசீய-அரசியல் போராட்டங்களில், பழைய ஆசிரியர்களின் ஆராய்ச்சி முறைக்குட்பட்ட அரசியல் வரலாறு ஜீவனுள்ள வழிகாட்டியாக இருக்கமுடியவில்லை.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றுண்டின் துவக்கத்திலும் இந்திய சரித்திரத்தைப்பற்றி எழுதப்பட்ட ஏராளமான நூல்களுடன் ஒப்பிடும்பொழுது, கடந்த இருபது ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க நூல் ஒன்றுகூட எழுதப் படவில்லையென்று சொல்லலாம். தைரியமான விஞ்ஞானரீதியான, புரட்சிகரமான ரீதியில் சரித்திரத்தைப் புரிந்துகொள்வதற்குப் பதிலாக, பார்வை பெருதவர்கள், குழப்பமும் ஊசலாட்டமும் மட்டுமே நிறைந்துள்ள உலக சரித்திரமும் (பண்டித ஜவஹர்லால் நேரு எழுதியது) கடந்த காலத்தில் மகிமையில் சிறந்திருந்த இந்தியாவைப் பற்றிய புலம்பலும் கிடைத்தவுடன், தீர்க்கதரிசனம் பெற்றுவிட்டதாக எண்ணினுர்கள்.

சரித்திர ஆராய்ச்சி முழுமைக்குமே முற்றுப்புள்ளி வைக்கப் பட்டதென்பது இதன் பொருளல்ல. ஆதார விஷயங்களைச்

---

1. முதல் உலக மகாயுத்தத்தின் நெருக்கடிக்குப் பிறகு, இந்தியா, உலகப் புரட்சியின் அயனவிதிக்குள் இழுக்கப்பட்டது; இந்தியாவின் உழைப்பாளி மக்கள், ஜனநாயகப் புரட்சிக்கொடியை தூக்கிப் பிடித்தார்கள்.

சேகரிப்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் வியாக்கியானம் செய்வதிலும் ஈடுபட்டிருந்த சரித்திரப் புலவர்களும் சரித்திர ஆராய்ச்சி ஸ்தாபனங்களும் இருந்தன. ஆனால் ஏகாதிபத்திய - எதிர்ப்புப் போராட்டத்துக்காகக் கடந்த காலத்திலிருந்து, உற்சாகமும் திட்டமும் காணவேண்டுமென்ற அவசியம், அந்த ஆராய்ச்சியின் இயக்க சக்தியாகத் தொடர்ந்திருக்கவில்லை. பூர்ஷுவா வர்க்கத்தின் தலைமையிலுள்ள தேசீய இயக்கம், 'சட்ட வரம்புக்குட்பட்ட கோரிக்கைகளை'க்கொண்ட தன் அரசியல் திட்டத்தையும், "சுதேசித் தொழிலை" வளர்க்கும் சுதந்திரம் வேண்டுமென்ற பொருளாதாரத் திட்டத்தையும் உருவாக்கிவிட்டது. இந்தத்துறையில், அசோகர், அக்பர், பீஷ்வா, தாப்தார் போன்றோரின் பிரகடனங்களைவிட, அயர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து ஆகியவற்றின் வரலாறுகள், அவர்களுக்கு அதிகப் பயனுள்ளதாயிருந்தன. சர்க்காரின் ஆதரவோ சுதேசி பூர்ஷுவா வர்க்கத்தின் உபகாரமோ கிடைக்காமல், ஆராய்ச்சி அறிஞர்களான ஏழைகள், எப்படியோ உயிர்வாழ்ந்து வந்தனர்.

ஆனால் அரசியல் வரலாற்றின் செல்வாக்கு க்ஷீணித்துவந்ததென்றால், ஏகாதிபத்தியம், பூர்ஷுவா தேசீயம் ஆகியவற்றுக்கு ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து வளர்ந்த புதிய நிலைமை, சரித்திர ஆராய்ச்சிகளில் வேறொரு திசைவழி ஏற்படுவதை அவசியமாக்கியது. இவ்வாறாக, பூர்ஷுவா வர்க்கம், அதன் அறிவாளிகள் ஆகியோரின் கவனத்தை கவர்ந்தது சமுதாய சரித்திரமாகும். சமுதாயப் பொருளாதாரத்திலும் அரசியலிலும் வர்க்கங்களுக்கிடையேயுள்ள உறவு என்ன என்ற பிரச்னையை, சமுதாயப் புரட்சிக்கான முழு இயக்கத்தின் பிரச்னையை, அது எழுப்பியது.[1]

ஏகாதிபத்தியத்தை எதிர்த்துச் சவால்விடும் அரசியல் வர

---

1. இந்தியாவில் வர்ண இனமும் ஜாதியும், அரசின் உதயம், திருமணத்தின் வரலாறு, பண்டைக்கால இந்தியாவில் கல்வி, மகாபாரதக் காலத்தில் வங்கிமுறை, சட்டம், வரிமுறை, சமுதாய ஸ்தாபனம் ஆகியவற்றின் நிலைமை, பண்டைக்கால வர்த்தகமும் தொழில்களும், அரபுகளுக்கும் ஹிந்துக்களுக்குமிடையே இருந்த கலாச்சார உறவுகள், முதலிய நூல்களை குர்யீ, தத்தா, பீனிபிரஸாத், ராஜ்வாதே, பார்கவா, அல்டேக்கர், கோஷால், வைத்யா, பிக் முதலியோர் எழுதினார்கள்.

லாறு, தன் கடமையைச் சாதித்துவிட்டது. பொதுவான தேசீய கோஷத்தை வகுக்கும் அந்தக் கடமை, இங்கிலாந்தும் இதர ஐரோப்பிய நாடுகளும் பெற்றெடுத்த சரித்திரத் தத்துவஞானிகள் அளித்த கருத்துமுதல் வாதக் கருவிகளின் உதவியுடன் சுலபமாக சாதிக்கப்பட்டது. தனக்கே உரித்தான ஒரு பொருளாதாரத்தை, செல்வாதாரங்கள் மிகுந்த பொருளாதாரத்தைப் படைத்த புராதனமான நாடு இந்தியா; அது தன் வரலாற்றின் ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் அரசர்களையும் மாவீரர்களையும் பெற்றெடுத்திருக்கிறது; அரசுகளைப் படைத்திருக்கிறது; போராட்டங்களை நடத்தியிருக்கிறது; அரசியல் அமைப்புகளை உருவாக்கியிருக்கிறது. அது அவற்றை மீண்டும் பெறவேண்டும்.

இந்தியா தன் புதிய தொழில்களையும் விவசாயத்தையும், தன் புதிய பண்பாட்டையும் தேசீய அந்தஸ்தையும் நிர்மாணிக்க முயன்றுகொண்டிருக்கிறது. ஏகாதிபத்திய ஆளும் வர்க்கம் அதைத் தடுக்கக் கூடாது: ஆனால் அது தடுக்கிறது; எனவே அதை எதிர்த்துப் புதிய முறையில் போராடவேண்டும்.

பொது விரோதியான பிரிட்டிஷ் படையெடுப்பாளனுக்கு எதிராக தேச மக்கள் அனைவரும் ஒன்றுபடுவதே புதிய பாதை. அன்னிய ஏகாதிபத்திய ஆட்சிக்கு முடிவுகட்டாமல், எவரும் சுகமாக வாழமுடியாது. இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும், ஒவ்வொரு நலவுரிமையும் பிரிட்டிஷ் எதிர்ப்பாக இருப்பதற்கு நியாயம் இருக்கிறது. எனவே, பிரிட்டிஷ் எதிர்ப்பாகத்தான் இருக்கவேண்டும். ஆகவே, எல்லா நலவுரிமைகளும் எல்லா மக்களும் ஏகாதிபத்தியத்தை ஒழித்து தேசவிடுதலைபெறவேண்டுமென்ற ஒரே நோக்கம் கொண்டு, ஒரே குரலில் பேசவேண்டும். அந்த விடுதலை கிடைத்துவிட்டால், சகல மக்களும், தொழிலாளிகள், விவசாயிகள் நடுத்தர வர்க்கத்தினர், முதலாளிகள், நிலப்பிரபுக்கள் அனைவரும் இந்த நாட்டில் பிறந்த அனைவரும், நமது சொந்த ஜனநாயகத்தில் சந்தோஷமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வார்கள்.

ஆனால், கொஞ்சமும், விட்டுக் கொடுக்காத விரோதியிடமிருந்து விடுதலையைப் பெறவேண்டுமானால், போராட்டத்தில்

குதித்து தமது உயிர்களையும்—அனைத்தையும் தியாகம் செய்யத் துணியும் சக்திகள் இருக்கவேண்டும். அவை எங்கிருக்கின்றன?

ஜாதி, மதம், வர்க்கம், தொழில் ஆகியவற்றின் பேதா பேதங்கள் எப்படியிருந்தாலும் சரி, ஆண்களாயினும் பெண்களாயினும் சரி, ஒவ்வொரு இந்தியனும் ஏகாதிபத்திய-எதிர்ப்பாளனாகவும் சுதந்திரத்தை நேசிப்பவனாகவும் இருக்கிறான், இருக்கவேண்டும் என்றும் அதனால் ஒவ்வொரு இந்தியனும் தியாகத்துக்கு தயாராக இருக்கிறான், இருக்கவேண்டும் என்றும் அறிவாளிகளும் பூர்ஷுவாக்களும் வாதித்தார்கள். அதாவது, அன்னிய ஏகாதிபத்தியம் இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொருவருக்கும் தீங்கு செய்வதால் கோட்பாடு ரீதியாகப் பார்த்தால், ஒவ்வொருவரும் ஒரு புரட்சிச் சக்தியாக விளங்கவேண்டுமென்பதே அவர்களுடைய வாதம்.

வர்க்க நலன்கள், சாதி நலன்கள், குறுகிய சுய நலன்கள் முதலியதனைத்துக்கும் அப்பாற்பட்ட தேசீயத் தன்மையைப்பற்றிய இந்த வாதத்தை இந்திய உழைப்பாளி மக்கள் கொஞ்சகாலத்துக்கு ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனால் அது, தேசீயத் தன்மையையும் விடுதலை இயக்கத்தையும் பற்றிய பொய்யான சித்திரம் என்பது வெளிப்படை.

சகல வர்க்கங்களும் சகல நலவுரிமைகளும் புரட்சிகரமானவையல்ல; உண்மையில் தேசம் விடுதலை பெறுவதால் நஷ்டமடையக் கூடியவர்களும் சிலர் இருக்கிறார்கள் ; எனவே, இந்தியராயிருந்த போதிலும், அவர்களுக்கு ஏகாதிபத்திய-எதிர்ப்பில் அக்கரை கிடையாது. வேறு சில நலவுரிமையாளர்கள் பிரிட்டிஷ் படையெடுப்பாளனுக்கு எதிராக தீ கக்கினர் என்பது மெய் ; ஆனால், தொழிலாளிகளோ விவசாயிகளோ, தாங்களும் பாக்டரி முதலாளிகள் மாதிரி இந்தியர்கள் என்ற முறையில், பாக்டரி முதலாளிகளையும் விடச் சிறந்த இந்தியர்கள் என்ற முறையில், தாம் அளித்த உழைப்புக்காகவும் படைத்த செல்வத்துக்காகவும், கண்ணியமாக வாழும் உரிமையை அனுபவிக்கவேண்டுமென்று கோரினால், அதுவரை தேசபக்தி பேசியவர்கள், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வரும்படி பிரிட்டிஷ் துப்பாக்கிகளிடம் ஓடினார்கள். அப்படியானால், அவர்களுடைய தேசபக்தி எங்கு இருக்கிறது? அவர்க

ளுடைய நலன் எதில் அடங்கியிருக்கிறது? அவர்களுடைய லாபத்தைப் பாதுகாப்பதிலா, தேசத்தின் சுதந்திரத்திலா ?

தேசீய ஜனசமூகம் என்ற உயித்துடிப்புள்ள சமூகம், ஒரே ஒரு சகோதரப் பிணைப்பையும் ஒரே ஒரு நலனையும் கொண்ட இணக்கமான சமூகம் அல்ல. உள் முரண்பாடுகளும், உள் பகைகளும் அதில் நிறைந்திருக்கின்றன என்பதை சரித்திர அனுபவம், யதார்த்த வாழ்வு, பாடுபடும் கோடானு கோடி மக்களுக்கு பையப் பையக் கற்றுக் கொடுத்தது.

இந்த முரண்பாடுகளின் அடிப்படை என்ன, தோற்றுவாய் என்ன ?—சமயமா, ஜாதியா, கல்வியா ? அல்ல ; அவையொன்றுமில்லை. இவை, வர்க்கப் பிரிவினைகளின் அடிப்படையில் ஏற்பட்ட புதிய முரண்பாடுகள். சமுதாயம் வர்க்கங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த வர்க்கங்களின் முக லட்சணம், தேச மக்கள் உயிர் வாழ்வதற்கு அவசியமான செல்வத்தை உற்பத்தி செய்து வினியோகிக்கும் நிகழ்ச்சியில் வகிக்கும் பாத்திரங்களால் தீர்மானிக்கப் படுகிறது. இந்த வர்க்கங்களில் சில, ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து நிற்பதன் மூலம் ஆதாயம் பெற்றன ; பிரிட்டிஷார் நம் தேசத்தை வசப்படுத்திக்கொண்ட பின் சிருஷ்டித்த நிலப்பிரபுத்வ வர்க்கத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம். பூர்ஷுவா வர்க்கத்தைப் போன்ற வர்க்கங்கள் வளர்ச்சியடைந்து பாடுபடும் மக்களைப் பூர்த்தியாகச் சுரண்டுவதற்கு ஏகாதிபத்தியம் தடைசெய்கிறது ; அத்தகைய வர்க்கங்கள் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் ஆதாயமடைகின்றன. பிரிட்டிஷ் முதலாளி வர்க்கம், இந்திய முதலாளி வர்க்கம் ஆகிய இரட்டை நுகத்தடியின்கீழ் உள்ள சில வர்க்கங்கள் அவை யிரண்டையும் எதிர்ப்பதன் மூலம் ஆதாயமடைகின்றன. சகல வகைப்பட்ட சுரண்டல்களும் ஒழிந்தால்தான் அவை உண்மையான சுதந்திரத்தைப் பெறமுடியும். இவ்வாறாக, தொழிலாளர்களும், விவசாயிகளும் மட்டும்தான் முன்பின் முரணில்லாத புரட்சித் தன்மை கொண்ட வர்க்கங்களாவார்கள். பெருந் தொழில்களில் வேலை செய்யும் நகரத் தொழிலாளிவர்க்கம் இதை உணரத் தொடங்கிவிட்டது. உழைப்பின் லாபங்கள் அனைத்தையும் தானே வசப்படுத்திக்கொண்டு, தன் வளர்ச்சியை

தடை செய்யும் பிரிட்டிஷ் பூர்ஷ்வா வர்க்கத்தின் அளவுக்கு வளர் வதில் மட்டுமே அக்கரைகொண்டுள்ள தேசீய பூர்ஷ்வா வர்க்கம் புதிதாக வளருமிந்த (தொழிலாளி) வர்க்கத்தைக் கண்டு அச்சங் கொண்டது.

எனவே, தேச விடுதலையின் முன்வரிசையில் நின்ற தொழி லாளி வர்க்கம், சுதந்திரத்தின் ஸ்தூலமான சித்திரம் எப்படி யிருக்குமென்பது கேட்டது; தனக்கு வாழும் உரிமைகள் வேண் டும், சகல துறைகளிலும் தனக்குச் சுதந்திரம் வேண்டும் என்று அது கோரியது. சொந்த நாட்டு உழைப்பாளிகளைப் பொருளா தார ரீதியில் சுரண்டுவதில் சில வர்க்கங்கள் அன்னியனுடன் சேர்ந்து நிற்பது எப்படி, அவை சுரண்டப்படும் மக்களை நசுக்கு வதற்காக அன்னியத் துப்பாக்கிகளைக் கூடப் பெறுவது எப்படி என்று அது கேட்டது. தேசீய பூர்ஷ்வா வர்க்கம், தேச சுதந்தி ரத்தின் முன்வரிசையில் நிற்கும்பொழுது, தேச விடுதலை இயக்கத் தின் புரட்சிகரமான வளர்ச்சியைக் குலைக்கும்பொழுது, அது லாபத்தில் தனக்கு கிடைக்கவேண்டிய பங்குக்காகத்தானே பேரம் செய்கிறது? அப்படியானுல், தேசீயப் போராட்டம், வர்க்கப் போராட்டத்தின் ஒரு அம்சமா? தேசீயப் புரட்சியே வர்க்கப் போராட்டங்களின் நிகழ்ச்சித் தொகுப்பா? தேசீய-அரசியல் போராட்டங்கள் அனைத்துக்குமே ஒரு வர்க்க அடிப்படை இருக் கிறதா? இந்தக் கேள்விகளுக்குப் பதில் தரவேண்டுமென்று, பூர் ஷ்வா அறிவாளிகளையும், தன் மத்தியிலிருந்து புதிதாகத் தோன் றிக் கொண்டிருந்த தன் சொந்தத் தலைமையான கம்யூனிஸ்ட் தலை மையையும் தொழிலாளி வர்க்கம் கேட்டது.

தேசீய பூர்ஷ்வா வர்க்கமும் மக்களும் தேசீய விடுதலை பெற் றிருந்த ஐரோப்பா கண்டத்திலும், இதே கேள்வி வெவ்வேறு உரு வங்களில் எழுந்தது. நிலப்பிரபுத்துவ மன்னர்களும் பிரபுக்களும் வீழ்த்தப்பட்டனர்; யதேச்சாதிகாரம் ஒழிக்கப்பட்டது; பிரமாத மான பொருளுற்பத்தித் திறன்கள் உருப்பெற்றன; இதற்குமுன் கண்டு கேட்டிராத அளவுக்கு செல்வம் யந்திரங்கள் வாயிலாக உற்பத்தியாயிற்று; ராஜ்யத்தில் ஆட்சி நடத்துவது யார் என் பதை ஜன நாயகம் வோட்டுப் போட்டுத் தீர்மானித்தது; எனினும்,

வேலையில்லாத் திண்டாட்ட நெருக்கடி விஜயம் செய்வதேன்? ஏராளமான உற்பத்திக்கிடையே, பஞ்சம், உழைப்பாளிகளையும், பணக்காரர்கள் நீங்கலாக சமுதாயம் முழுமையையும், பீடித்து வாட்டுவதேன்? இதிலிருந்து மீளும் மார்க்கம் என்ன? அங்கே, அப்பொழுது, புதிய தத்துவ ஞானிகள், சரித்திரத்தின் புதிய தத்துவ ஞானிகள் தோன்றினார்கள்; அவர்கள், தொழிலாளி வர்க்கத்துக்காக, விடையைக் கண்டு பிடித்தார்கள். அவர்கள் விஷயத்தின் வேருக்கே சென்றார்கள். மனித சமூகம் தோன்றியது எப்படி? அது சகாப்தத்துக்கு சகாப்தம் வளர்வது எப்படி? அதன் தோற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் அதன் பரிணாமங்களுக்கும் புரட்சிகளுக்கும் இயக்கு சக்தியாக விருப்பது எது? இந்தக் கேள்விகளை அவர்கள் கேட்டார்கள். பூர்ஷுவா விஞ்ஞானம் இவற்றுக்கு விடை கொடுக்கத் தவறியது. உடையவர் இல்லாதவர் பிரச்னை, ஆள்வோர் ஆளப்படுவோர் பிரச்னை, வல்லவர் வலிவற்றவர் பிரச்னை, தலைவர்கள் அவர்கள் வழிநடப்போர் பிரச்னை, மாவீரர்கள் அவர்களைப் பின்பற்றுவோர் பிரச்னை, அனாதிகாலந்தொட்டே இருப்பதாகவும் எப்பொழுதுமே இருக்குமென்றும் பூர்ஷுவா விஞ்ஞானிகள் முன்பே கூறிவிட்டார்கள். அந்தப் பிரச்னை மனிதனின் தலைவிதி, அல்லது படைப்பு வினையின் ஆதிமுதல் பாவம், அல்லது ஆண்டவனின் சித்தம் என்று அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

அந்த முடிவை ஏற்றுக்கொள்ளத் தொழிலாளி வர்க்கம் மறுத்தது. மார்க்ஸும் எங்கல்ஸும் சமுதாய வளர்ச்சியின் வரலாற்றை பாகுபடுத்தி ஆராய்ந்தனர்; சரித்திர வளர்ச்சிக்கு அடிப்படையான விதியைக் கண்டு பிடித்தனர்; அதுவே சரித்திர இயல் பொருள்முதல்வாதத்தின் பிரசித்தி பெற்ற விதியாகும்; சரித்திரத்தை தர்க்கஇயல் பொருள்வாதக் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்வதாகும்.

இந்த தத்துவப்படி, சமுதாய வளர்ச்சி, அதாவது, மனிதர்கள் தங்களை எந்த நிலைமையில் காண்கிறார்களோ அதுவோ அல்லது மனிதர்கள் தங்களுக்காகப் படைத்துக் கொள்ளும் நிலைமையோ இந்த மனிதர் அல்லது மாவீரர் அல்லது அவதார புருஷரின்

அல்லது இன்னொரு மனிதர் அல்லது மாவீரர் அல்லது அவதார புருஷரின் நல்ல கருத்துக்களிலிருந்தோ தீய கருத்துக்களிலிருந்தோ ஏற்படுவதில்லை; இயற்கையாகவுள்ள பூகோளச் சுற்றுச் சார்பிலிருந்தும் உதயமாவதில்லை; ஆண்டவனின் சித்தத்தாலும் உண்டாவதில்லை; சரித்திரம் என்பது மாரு விதியாக வகுக்கப்பட்டுள்ள வழியில் நிகழும் யாந்திரீகமான இயக்கம் அல்ல; சரித்திரம் என்பது, இடைவிடாமல் பாடுபட்டுக் கொண்டிருப்பவனும் சரித்திரத்துக்குரியவனுமான மனிதன் என்ற முழுமூடன் கைகளில் நிரம்பிவடியும் நீருருளே (நீர் உருளே) மாதிரி, ஒரே வட்டத்தைச் சுற்றிக் கொண்டிருப்பதுமல்ல. மனிதன் பௌதீக இயற்கையிலிருந்து பரிணமித்தான், அத்துடனேயே அவன் வாழ்வதற்காகப் போராடவேண்டி யிருக்கிறது; முதலில் உணவு, உடை, குடியிருப்பு முதலியவற்றுக்காகப் போராடவேண்டி யிருக்கிறது. இதுதான் முதன்மையான நடவடிக்கை. அதில் அவனுடைய நிலைமை, பொருளுற்பத்தி சக்திகளால், அவன் விருத்தி செய்யும் பொருளுற்பத்திக் கருவிகளால் தீர்மானிக்கப்படுகிறது. மனிதன் சமுதாய மனிதனுக உதயமாகிருன்; அவனுடைய சமுதாய ஏற்பாடு, அதாவது மனிதர்களுக்குள்ளிருக்கும் உறவுகள், பொருளுற்பத்தி சக்திகளால் மூலாதாரமாகத் தீர்மானிக்கப் படுகின்றன. இவையே பொருளுற்பத்தி உறவுகளாகும். ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தின் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அதன் பொருளுற்பத்தி முறையிலிருந்து புரிந்துகொள்ளப்படுகிறது; அதே தன்மையால் தான் அது இதர சமூகங்களிலிருந்து பாகுபடுத்தப்படுகிறது. அந்தப் பொருளுற்பத்தி முறையே சமுதாயத்தின் அரசியல் அமைப்பு, ஒழுக்க நீதிகள், தத்துவார்த்தம், உணர்ச்சிகள், கலைமுதலியவற்றை நிர்ணயிக்கிறது. இவையனைத்தும், சமுதாயத்தின் பொருளுற்பத்திமுறை என்ற அஸ்திவாரத்திலிருந்தே தோன்றுகின்றன. ஆனல் உதயமானபின் அவை அடிப்படையை பாதிக்கவில்லை யென்ருே சுயேச்சையான பாத்திரத்தையும் மதிப்பையும் பெற்றிருக்கவில்லை யென்ருே இதற்கு அர்த்தமல்ல. அவற்றுக்கு சுயேச்சையான பாத்திரமும் மதிப்பும் நிச்சயமாக உண்டு. அவை சமுதாய அமைப்பை திருத்துவதற்கும் மாற்றுவதற்கும் உதவுகின்றன; ஆனல் ஒரே ஒரு

நிபந்தனை: அதாவது, அடிப்படையாகவுள்ள பொருளுற்பத்தி சக்திகள் மாறுதலுக்குப் பக்குவப்பட்டிருக்கவேண்டும்.

மனித வரலாறு, சமுதாய ஸ்தாபனத்தில் ஐந்து கட்டங்களைக் கண்டிருக்கிறது; அவை பொருளுற்பத்தி சக்திகளின் மாற்றங்களுக்கேற்றபடி தோன்றுகின்றன அல்லது மறைகின்றன. இத்தக் கட்டங்கள், பூர்வீகக் கம்யூனிஸ ஏற்பாடு, அடிமை ஏற்பாடு, பிரபுத்துவ ஏற்பாடு, முதலாளித்துவ ஏற்பாடு, சோஷலிஸ்ட் ஏற்பாடு ஆகியவையாகும். ஒன்றிலிருந்து அடுத்த கட்டத்துக்குச் செல்லும்பொழுது, மனிதன் தன் வாழ்விலும் சிந்தனையிலும் ஒரு உயர்ந்த கட்டத்துக்கு முன்னேறுகிறான். முதலாவது கட்டத்தில், சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிந்திருக்கவில்லை; சமுதாயத்தில் தனி உடமை இல்லை, வர்க்கப் போராட்டங்கள் இல்லை, ஏழை பணக்காரர்கள் இல்லை, அரசு இல்லை, அரசர்கள் இல்லை. குலத்துக்குள் சகோதரச் சண்டை இல்லை; ஆனால் பல்வேறு பூர்வ குலங்களுக்கிடையே ஏராளமான யுத்தங்கள் நடைபெற்றன. பொருளுற்பத்திக் கருவிகள் வளர்த்தபொழுது, தனிச் சொத்துரிமையும் வர்க்கங்களும் தோன்றின. அதிலிருந்து, வரலாறு முழுமையும் வர்க்கப் போராட்டங்களின் வரலாருக விருக்கிறது. அவற்றின் பலனாக அடிமைச் சமூகம், பிரபுத்துவச் சமூகம், முதலாளித்துவ சமூகம் ஆகியவை வரிசையாக ஏற்பட்டு, இறுதியில் சோஷலிஸ்ட் சமூகம் ஏற்படுகிறது. சோஷலிஸ்ட் சமூகத்தில், பொருற்பத்திசக்திகள், சமுதாயச் செல்வம் ஆகியவற்றின் அதியுச்ச வளர்ச்சியின் அடிப்படையில், வர்க்கங்கள் இறுதியாக ஒழிக்கப்படுகின்றன. அதன்பிறகு, சரித்திரம், கண்மூடித்தனமான வர்க்கப் போராட்டமாகத் தொடர்ந்திருப்பதில்லை; மனிதன் தன் விதிக்குப் பூர்ண எஜமானனாகிருன். நவீன உற்பத்திக் கருவிகள் இதைச் சாத்தியமாக்குகின்றன, தவிர்க்கமுடியாததாக்குகின்றன.

இறுதிக் கட்டத்துக்கான போராட்டம், பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியில் தொடங்கியது. பொருளுற்பத்தியில் தான் வகிக்கும் பாத்திரத்தின் விளைவாக, இந்த சரித்திரரீதியான கடமையைச் சாதிக்கப்போவது தொழிலாளி வர்க்கமாகும்.

தற்செயலான நிகழ்ச்சிகளின் தாறுமாறான குவியலாக, எண்ணங்களின் குழப்பமான கூட்டமாக, சரித்திரத்தை விளக்கும் கருத்தை மார்க்ஸீயம் அழித்தது. மார்க்ஸீயம், சரித்திரம்பற்றிய கருத்தை, ஒரு விஞ்ஞானமாக, மெய்ப்பிக்க முடிகிற விஞ்ஞான விதியாக ஆக்கியது; அதன்மூலம், வாழ்வையும் எதிர்காலத்தையும் திட்டமிடுவதற்கு, தலைவிதியையும் துன்ப துயரத்தையும் அகற்றுவதற்கு, மனிதனுக்கு உணர்வைக் கொடுத்தது மார்க்ஸீயம்.

இந்தத் தத்துவப்படி, சக்திகள் பக்குவமடைந்த பல நாடுகளில், ஐரோப்பியத் தொழிலாளிவர்க்கம் புரட்சியை நடத்தியது; சோவியத் யூனியனையும் சோஷலிஸத்தையும் நிறுவியது; இவ்வாறு, பாடுபடும் மனித குலத்துக்குப் பாதை காட்டியது.

இன்றைய சகாப்தத்தில், தத்தம் தேசத்து பூர்ஷ்வா வர்க்கத்தினரின் நலன்களை முன்னிட்டே, ஐரோப்பிய அமெரிக்க நாடுகளும் இதர நாடுகளும், இந்தியாபோன்ற தேசங்களை வசப்படுத்திக்கொண்டிருப்பதாக மார்க்ஸீயம் கூறுகிறது. அந்த பூர்ஷ்வாக்களுக்கு மார்க்கெட்டும், மூலதனத்தை ஏற்றுமதி செய்வதற்கான வசதியும், சுரண்டுவதற்குப் புதிய இடங்களும் அவசியமாயிருப்பதால், இந்தியாபோன்ற நாடுகள் அடிமைப்படுத்தப்பட்டிருக்கின்றன. குட்டிமூலதனம் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்கிறது; சந்தையில் நிகழும் போட்டியில் தன் வர்க்க சகோதரர்களையே அழிப்பதன்மூலமும் கொழுக்கிறது; இவ்வாறு அது தன்னைத்தானே ஒருசேரக் குவித்துப் பெருக்கிக்கொள்கிறது; எந்திர நுணுக்கமுறையை ஒரு மையப்படுத்துகிறது; பிர்ம்மாண்டமாக வளர்ந்து, உலக முழுவதும் பரவிய ஏகபோகக் கம்பெனிகளாக ஆகிறது; காலனிகளை வசப்படுத்திக்கொள்கிறது. காலனியாகும் நாடு, முன்பே முதலாளித்துவ நாடாயில்லாவிட்டால், முதலாளித்துவ ஆதிக்கம், அதில் முதலாளித்துவ உறவுகள் ஜனிக்கச் செய்கிறது; இவ்வாறு ஜனனமாகும் தேசீய பூர்ஷ்வா வர்க்கம், வெற்றியடைந்துள்ள ஏகபோக ஏகாதிபத்தியவாதியுடன் போட்டி

யிட முன்வருகிறது; "லாப-உலகத்தில் வாழுமிடம் வேண்டும்", என்று தாவா போடுகிறது. அத்துடன்கூடவே, புரட்சியின் பொறுப்புக்கு உரியதான தொழிலாளி வர்க்கமும் ஜனிக்கிறது. இந்த நிலைமையில், தேசீயப் போராட்டம் பிறக்கிறது. ஆனால் தொழிலாளிவர்க்கமும் உழைப்பாளி மக்களும் வாழும் உரிமை தமக்கு வேண்டுமென்று கோரியவுடன், தேசீய பூர்ஷ்வா வர்க்கம் மக்களை விட்டோடி, ஏகாதிபத்திய முகாமுக்குச் சென்று, ஏகாதி பத்தியத்துடன் பேரம் முடித்து சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகத் திரும்புகிறது; அதாவது, அடிமைத்தனத்திலிருந்து மீண்டு, சுரண்டலிலிருந்து விடுபட்ட உண்மையான சுதந்தி ரத்தை, சோஷலிஸத்தை, அடைவதற்காகப் போராடும் மக்களை நசுக்குகிறது.

ஒரு தேசத்தின் தொழிலாளி வர்க்கம், தன் சரித்திர பூர்வ மான பாத்திரத்தை உணரும் அளவுக்கு வளர்ந்து, தன் புதிய சித்தாந்தத்துடன் ஸ்தாபன ரீதியாகத் திரளத் தொடங்கும் பொழுது, பூர்ஷ்வா வர்க்கம், அதை பலாத்காரத்தினால் அடக்க முயல்வதுடன், தன் சொந்த சித்தாந்தத்தால் கெடுப்பதற்கும் சகல வழிகளிலும் முயல்கிறது. இந்த வழிகளில் ஒன்று, தொழி லாளிக்குத் தப்பான சரித்திரத்தை போதிப்பதாகும்; அவனை பூர்ஷ்வா வர்க்கத்தின் வாலில் கட்டிப்போடக்கூடிய முறையில், அவனுக்குச் சரித்திரத்தைச் சித்தரிப்பதாகும்; பூர்ஷ்வா சமுதாய அமைப்பு தலைசிறந்தது, தவிர்க்கமுடியாதது, நிரந்தரமானது, ஆதி அந்தம் இல்லாதது, ஆண்டவன் அளித்தது, நல்லொழுக்க நெறிகளின் உச்சவடிவமாயிருப்பது, மிகவும் இன்பகரமானது என்று நம்பி, அந்தச் சமுதாய அமைப்புக்கு அரண் கட்டக்கூடிய முறையில், தொழிலாளிக்கு சரித்திரத்தைப் படம் பிடித்துக் கொடுப்பதாகும். சரித்திரத்தையும் எதிர்காலத்தையும் பற்றிய கம்யூனிஸ்ட் கருத்து கற்பனையானது, யதார்த்தத்துக்கு ஒவ்வாதது, துன்மார்க்கமானது இயற்கைக்கு விரோதமானது, மனித இயல்புக்கு விரோதமானது, நாசத்தை விளைவிக்கக்கூடியது என்று பூர்ஷ்வா வர்க்கம் வர் ணிக்கிறது. இவ்வாறு வர்ணிப்பதற்காக, பூர்ஷ்வா அறிவாளி கள் சரித்திரத்தை ஊன்றிப் படிக்கிறார்கள்; சமுதாய வளர்ச்சி

-யைப் பற்றிய கருத்துமுதல்வாத, மெட்டாபிஸிக்கல்[1] சித்திரத்தை வரைந்து, எழுச்சியடையும் தொழிலாளியை மயக்கி உறக்கத்தி லாழ்த்துகிறார்கள்; சமுதாய வளர்ச்சியின் தர்க்க இயல் பொருள் முதல் வாதச் சித்திரத்தை மறுக்கிறார்கள்.

1929-30க்குப் பிறகு, தேசீய பூர்ஷுவா வர்க்கத்தின் கொடி, கோஷங்கள், கட்சி, திட்டம் ஆகியவற்றுக்கு எதிராக, இந்தியத் தொழிலாளி வர்க்கம், தன் சொந்தக் கொடியுடனும் தன் சொந்த கோஷங்களுடனும், தனக்குரித்தான கட்சியுடனும் திட்டத்துட னும் அரசியல்-சமுதாயப் போராட்டங்களின் அரங்கத்தில் தோன் றியபொழுது, தேசீய ஜனசமூகத்தின் உண்மையான உறுப்புகள் யார் யார் என்றும் சுதந்திரமும் ஜனநாயகமும் எவருக்குக் கிடைக்கவேண்டுமென்றும் அது கேட்டபொழுது, பூர்ஷுவா வர்க் கமும் அதன் அறிவாளிகளும் இந்திய சரித்திரம் சம்பந்தமாக மேற்சொன்ன காரியத்தையே செய்யத் தொடங்கினார்கள்.

ஐரோப்பாவிலும் இதர நாடுகளிலும் நிலைமை எப்படி யிருந் தாலும், இந்தியாவும் அதன் பண்பாடும் அதன் மக்களும் வரலா றும் அலாதியானவையென்றும் அவை மார்க்ஸீய-லெனினிஸ விதிகளுக்கு ஒத்து இல்லையென்றும் பூர்ஷுவாக்கள் வாதித்தார் கள்; இந்தியாவில் வளர்ந்துவரும் கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு எதிராக அவர்கள் பிரயோகித்த சித்தாந்த வாதங்களில் இது ஒன்று.

அவர்கள், வேதங்கள், ஸ்மிருதிகள், உபநிஷத்துக்கள், இதி காசங்கள், புராணங்கள் ஆகியவற்றில் மூழ்கினார்கள்; வேறு எங் கும் காணமுடியாத அதிசயமாக, சக்தி மிகுந்த சாதி ஏற்பாடுகளும் சிம்மாசனங்களில் அமர்ந்த ராஜரிஷிகளும், அரசு துறந்து கான கம் ஏகிய ரிஷிகளும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நீடித்து வந்திருப்பதைச் சான்றாகக் காட்டி, அவர்கள் கம்யூனிஸ்ட்களைப்

1. மெட்டபிஸிக்கல்: இதைத் தமிழில் 'நிலை இயல்' என்று குறிப்பிடலாம் இது ஒரு பார்வை முறை; பொருட்களை அசையாத்தன்மை கொண்டதாக, நிலையானவையாக, மாறாதவையாக, ஒன்றோடொன்று தொடர்பற்றவை யாக, ஒன்றிலிருந்து இன்னொன்று நிரந்தரமாக வேறுபட்டிருப்பவையாக தமக்குள்ளே எதிர்மறைகளைக் கொண்டிராதவையாக ஆராயும் முறையே மெட்டபிஸிக்ஸ்—(மொ-ர்)

பார்த்துக் கூறினார்கள் : உங்களுடைய சரித்திர இயல் பொருள் முதல் வாதத்தில் இவையெல்லாம் எங்கிருக்கின்றன ? இந்தியாவில் பூர்வீகக் கம்யூனிஸம் இருந்ததில்லை, கூட்டுச் சொத்துரிமை நிலவியதில்லை, தாய்வழிச் சமுதாயம் இடம்பெற்றதில்லை. கம்யூன்கள் அமைந்ததில்லை. அவை இருந்து தகர்ந்து, தனிச் சொத்துரிமையும் அரசும் வர்க்கங்களும் வர்க்கப் போர்களும் தோன்றி முதலில் அடிமைச் சமூகமும் அடுத்து பிரபுத்துவ சமூகமும் அமைந்ததாக நீங்கள் கூறுகிறீர்களே, அம்மாதிரி இந்தியாவில் நடக்கவில்லை. ஆம், இப்பொழுது முதலாளித்துவம் இருப்பது மெய் ; ஆங்கிலேயரும் அவர்களுடைய யந்திர இயலும் அளித்த சாபக்கேடு இது ; ஆனால் நமது முதலாளித்துவத்துக்கு அதற்கே உரித்தான ஒரு நற்பண்பு இருக்கிறது. எனவே, நாம் வர்க்கப் போராட்டங்கள், புரட்சி ஆகியவற்றின் மூலம்தான் சோஷலிசத்தை அடையமுடியுமென்பது பிசகு. நாம் நமக்கே சொந்தமான ஒரு புதிய பொருளைப் படைப்போமென்பது உறுதி: அதுவே காந்தீய சோஷலிஸம். உங்களுடைய கம்யூனிஸ விதியை, உங்களுடைய சரித்திர இயல் பொருள்முதல் வாத விதியை, இந்தியாவின் பிரத்தியேக விதி கடந்த காலத்தில் பொய்ப்பித்திருப்பதைப் போலவே, எதிர்காலத்திலும் நாம் பொய்ப்பிப்போமென்பது திண்ணம்."

இந்த நோக்கத்துடன்தான், வர்க்கப் போராட்டத்தை மறுப்பதற்காகத்தான், சுரண்டப்படும் வர்க்கங்கள், வர்க்க சமாதானத்திலும் வர்க்க ஒத்துழைப்பிலும் ஆத்மீக உயர்விலும் ஆறுதல் பெற்று, தாம் சுரண்டப்பட்டு தரித்திரத்தில் வாழ்வதைப் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான், இப்பொழுது, இந்தியாவின் சமுதாய-அரசியல் சரித்திரம் பயிலப்படுகிறது, எழுதப்படுகிறது.

மார்க்ஸீய சரித்திரப் பார்வை பொய்யானது என்று கூறி, அதை அடக்குவதற்கு ஐரோப்பிய, அமெரிக்க பூர்ஷுவாக்கள் பெருமுயற்சி செய்தார்கள் ; அந்த முயற்சி தோற்ற பின் அவர்கள் மார்க்ஸீய சரித்திரப் பார்வையை திரித்துப் புரட்டி, அதைக் கெடுக்க முயன்றனர். பூர்ஷுவா சமுதாய அமைப்பில் மீண்டும்

மீண்டும் நெருக்கடிகள் வெடிக்கும் தொடர் நிகழ்ச்சியால் கட்டா யப் படுத்தப்பட்டு, பூர்ஷுவா அறிவாளிகள், மனிதனுடைய, சமு தாயத்தினுடைய வாழ்வில் சமுதாயப் பொருளாதார நடவடிக்கை ஆதிக்கம் வகிப்பதை ஒப்புக்கொண்டார்கள். சோவியத் யூனிய னில் நெருக்கடிகளே ஏற்படுவதில்லை யென்ற உண்மையும், அதன் பலனாக உலகம் முழுவதிலும் மக்கள் கருத்தில் ஏற்பட்ட மாற்றமும் கட்டாயப்படுத்திய காரணத்தால், பூர்ஷுவா வர்க்கம், வர்க்கப் போராட்டங்களையும் சோஷலிஸத்தையும் தமது சரித்தி ரத் தத்துவ இயலின் பகுதியாகச் சேர்த்துக் கொள்ளவும் இணங் கினார்கள். ஆனால் அவர்கள் அதைக் கெடுத்துத் தோற்கடிப்பதற் காகவே, அதை ஒப்புக்கொண்டனர். வர்க்கப் போராட்டம் கண் கூடான உண்மை என்பதையும் சோஷலிஸம் முதலாளித்து வத்தைவிடச் சிறந்தது என்பதையும் அவர்கள் ஒப்புக் கொள்கி றார்கள். ஆனால், வர்க்கப் போராட்டத்தின் இயல்பான முடிவாக, பூர்ஷுவா வர்க்கத்தைப் போராடி வீழ்த்தி, தொழிலாளி வர்க் கத்தை ஆளும் வர்க்கமாக அமைக்கவேண்டு மென்பதை அவர்கள் மறுக்கிறார்கள். அதாவது, சுரண்டல் வர்க்கத்துக்கு எதிராகத் தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமைத்து, உழைப்பாளி மக்களுக்கு நிறைவான ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டு மென்பதை அவர்கள் மறுக்கிறார்கள். அம்மாதிரி செய்தால்தான் பொருளுற்பத்திக் கருவிகளும் நிலமும் பாக்டரிகளும் சமுதாய உட மையாக முடியுமென்பதையும் சோஷலிஸத்தையும், சமாதானமும் செல்வமும் நிறைந்த வர்க்க பேதமில்லா சமுதாயத்தையும் படைக்க முடியுமென்பதையும் அவர்கள் மறுக்கிறார்கள்.

வர்க்கப் போராட்டத்தின் அரசியல், பொருளாதார முடிவு களான இவற்றை, சரித்திரத்தின் தர்க்க இயலுடைய தவிர்க்க முடியாத முடிவுகளான இவற்றை, அவர்கள் மறுக்கிறார்கள். அவர் கள் இப்பொழுது எதற்காகத் தொழிலாளி வர்க்கத்தின் லட்சியங் களை ஒப்புக் கொள்கிறார்கள்? ஏனென்றால், அப்படிச் செய்து, நிலப்புழுவைப் போல் குடைந்து, தொழிலாளி வர்க்கத்தின் இத யத்துக்குள் ஊடுருவி, நடைமுறையில் யுத்த தந்திர நடைமுறைத் தந்திரங்களில் அதை நிராயுதபாணி யாக்கித் தமது வர்க்க ஆட்

சியை தாக்குதலி லிருந்து பாதுகாத்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். அவர்கள் இந்தியச் சரித்திரத்தை எடுத்துக்காட்டிக் கூறுகிறார்கள் :—" நம்மைப் பொருத்தமட்டில், ஆத்மீகத் துறையில் வசப்படுத்துவதின்மூலமே, சமாதான வழியிலேயே, சகல வர்க்கங்களும் தமது குற்றங்களையும் பேராசையையும் களைத்தெரிவதற்கு இணங்குவதன் மூலமே, சரித்திர பூர்வமான மாறுதல்கள் எப்பொழுதும் ஏற்பட்டிருக்கின்றன. சோஷலிஸத்துக்காகவும் ஜனநாயகத்துக்காகவும் போராடிவரும் தேசத்தினரின் அனுபவத்தை மேற்கோள் காட்டுகிறீர்கள். அவர்கள் ருஷியரோ, பிரெஞ்சுக்காரரோ வேறு தேசத்தவரோ, எந்த நாட்டவரா யிருந்தாலும், இந்தியர்கள் அவர்களைப் போன்றவர்களல்ல."[1] இதை மெய்ப்பிப்பதற்காக, அவர்கள் ஹிந்து முஸ்லிம் மக்கள் கடந்தகாலத்தில் வாழ்ந்த வாழ்வைப்பற்றி இன்பமான, சிறப்பான கதைகளைக் கூறிக்கொண்டு தொழிலாளி விவசாயிகளை அணுகுகிறார்கள்; இவ்வாறு, தொழிலாளி விவசாயிகளின் எதிர்காலத்தை மோசடி செய்வதற்காக, அவர்களுடைய இன்றைய அறியாமையையும் சித்தாந்தத்தையும் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

இவ்வாறாக, பிரிட்டிஷாருக்குப் பிந்திய காலத்தின் ஆளும் வர்க்கம், தன்னுடைய நீசத்தனமான, குறுகிய வர்க்க நலனுக்காக பட்சபாத நோக்கத்துக்காக சரித்திரத்தைப் பயன்படுத்துகிறது.

முதல் கட்டத்தில், பூர்ஷுவாவர்க்கம், தன் வர்க்க நலன்களுக்காக, பிரிட்டிஷாருக்கு எதிராக, தேசமக்களின் பெயரால், சரித்திரத்தைப் பயன்படுத்தியது; அப்பொழுது அது சகல மக்களுக்கும் சகல நலன்களுக்கும் பரிந்து போராடுகிறவனாகத் தன்னைக் காட்டிக்கொண்டது. அது தன் சொந்த வர்க்க நலன்களைப் பெறுவதற்காக, மக்களின் நலன்களைக் காட்டிக்கொடுத்திருப்பதை, வளர்ந்துவரும் தொழிலாளிவர்க்க இயக்கம் அம்பலப்படுத்திவிடுமென்ற அபாயத்தைக் கண்டதும், அது சமுதாயப் புரட்சியிலிருந்து தற்காத்துக்கொள்வதற்காகவும், சமுதாய

1. எனவே, தொழிலாளி வர்க்க அரசும் தொழிலாளி வர்க்கக் குடியரசும் அமையும் அளவுக்கு வர்க்கப் போராட்டத்தை முன்பின் முரணில்லாமல் விருத்தி செய்து நடத்துவது இந்திய நிலைமைகளுக்கு அவசியமில்லை.

வளர்ச்சியைப்பற்றிய ஒரு பொய்யான தத்துவத்தின்மூலம், சமுதாயப் புரட்சியை சித்தாந்த ரீதியில் நிராயுதபாணியாக்குவதற்காகவும், மீண்டும் சரித்திரத்தைப் பயன்படுத்துகிறது.

தற்சமயம், இந்தியாவின் நிகழ்கால சரித்திரத்துக்குரிய அரசியல் சம்பவங்களின் விவரதத்திலும், அந்த சம்பவங்களின் நிர்ணயிப்பிலும் நாம் இங்கு கவனஞ் செலுத்தப்போவதில்லை. மாறிக்கொண்டிருக்கும் அரசியல், சமுதாய நிலைமைக்குத் தக்கபடி சமுதாய முன்னேற்றத்துக்குப் பணியாற்றும் தன் உண்மையான பாத்திரத்தை வகிக்கமுடியாமல், பிற்போக்குக்குப் பணிவிடை புரியும் வகையில் சரித்திரம் எப்படி பயன்படுத்தப்படுகிறதென்பதை நாம் எடுத்துக்காட்டுகிறோம். வரலாறு வழியாக, மனிதன் அநாகரீகத்திலிருந்து நாகரீகத்துக்கு உயர்ந்திருக்கிறன்; பல சகாப்தங்களில் மனிதன் அடைந்திருக்கும் இந்தச் சமுதாய வளர்ச்சிக்கு அடிப்படையான விதியைக் கண்டுபிடிக்கும் கடமையை சரித்திரத்தின் தத்துவார்த்த-இயல் நிறைவேற்றவேண்டும்; மனிதன் மேலும் மேம்பாடு அடைந்து மேலும் செம்மையடைந்த உலகத்தைத் தனக்காக நிர்மாணித்துக்கொள்வதற்கு அது உதவும். இன்றைய சகாப்தத்தில், இந்தியத் தொழிலாளி வர்க்கம், இந்திய சமூகத்தின்பாலும் உலகச் சமூகத்தின்பாலும் ஒரு முக்கியமான பொறுப்பை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. இந்தப் பொறுப்பை நிறைவேற்றவேண்டுமானல், பூர்ஷ்வா சரித்திரப் பார்வை மக்களிடம் வேரோடுவதற்குமுன், தொழிலாளிவர்க்கம் அந்தப் பார்வையிலிருந்து தீர்க்கமாக முறித்துக் கொள்ளவேண்டும்.

இதுவரை, சரித்திர இயல்பொருள்முதல் வாதத்தின் கருத்தோட்டத்தில், இந்திய சரித்திரத்தை ஆராய்ந்த முக்கியமான நூல் எதுவும் வெளிவரவில்லை; அந்தக் கருத்தோட்டத்தை மறுக்கும்வகையிலும் முக்கியமான நூல் எதுவும் வெளிவரவில்லை. இந்திய சரித்திரத்தைப்பற்றி, மார்க்ஸீயவாதிகள் தனி அபிப்பிராயம் கொண்டிருக்கிருர்கள், அவர்கள் இந்திய சரித்திரத்தை சரித்திர இயல்பொருள் வாதரீதியில், வர்க்கப் போராட்டங்களின் கட்டுக்கோப்பில் விளக்குகிருர்கள் என்பது பொதுவாகத் தெரிந்த

விஷயம். ஆனால் எந்த மார்க்ஸீயவாதியும் இந்திய சரித்திரத்தை தேர்ந்து தெளிந்தவகையில் ஆராய்ச்சிசெய்திருப்பது அல்ல இதற்குக் காரணம்.

பூர்ஷுவா வர்க்கம் அதிகாரத்தில் இருப்பதால், இந்திய சரித்திரத்தைக் கலப்படம் செய்யும் வினையின் ஆபத்து அதிகரித்துவிட்டது. கடந்த சில வருஷங்களில், பூர்ஷுவா அறிஞர்கள், பொருள்முதல்வாதத் தாக்குதல்கள் குறி தவறவேண்டுமென்பதற்காக, சரித்திரத்துக்கு முள்கம்பி வேலிபோடும் மறைமுக முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய துரதிர்ஷ்டம் என்னவெனில், இந்தியாவின் புராதனத் தொன்மையே, அதன் சமுதாய ஜீவ-அமைப்பின் விடாத் தொடர்ச்சியே, அதன் சாசுவதமான கிராம சமுதாயங்களே, அவற்றைப்பற்றிய நினைவுகளும் தஸ்தவேஜிகளுமே இந்தச் சரித்திரப் புலவர்களின் முயற்சிகளைப் பாழாக்கிவிட்டன. சமுதாய ஸ்தாபனத்தில் நிகழ்ந்த மாறுதல்களையும் புரட்சிகளையும் பற்றிய செழுமையான ஆதார விவரங்கள், ஹிந்துக்களிடம் இருப்பதைப் போல, உலகத்தில் எங்குமே இருக்கவில்லை. (வசதியாகப் பரிசீலனை செய்து புரிந்துகொள்வதற்காக, இந்தியாவின் பண்டைக் காலச் சரித்திரத்தை ஹிந்துக்களின் சரித்திரமாக எடுத்துக்கொள்கிறேன்.) அந்த ஆதார விவரங்கள் கொஞ்சமும் ஒளிவுமறைவில்லாமல் பேசுகின்றன; அவற்றில் சில, தயவு தாட்சணியமின்றி வெளிப்படையாகப் பேசுகின்றன. இதைக் கண்டு, இந்திய பூர்ஷுவா வர்க்கத்தின் ஹிந்துத் தலைமை, வேறு வழியில்லாததால், அவற்றின் உண்மையை மறுத்து, அவற்றைக் கட்டுக்கதையென்று பிரகடனஞ்செய்து, எப்படியாவது அவற்றிலிருந்து நெளிந்து வளைந்து தப்பியோட முயற்சிக்கிறது. ஹிந்து சமூகத்தின் சமய-சமுதாய இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கிலடங்காத நடைமுறைகளும் சம்பவங்களும் உதாரணங்களும் கர்ணபரம்பரை வழக்குகளும் விதிகளும் பூர்ஷுவா சரித்திரப் புலவருக்கு விளங்கமுடியாத புதிராகவுள்ளன. திருமணச் சட்டங்கள், "விநோதமான திருமணங்களாக"ப் புலப்படக்கூடியவற்றின் பயனாய் மதிப்புக்குரிய மாவீரர்களும் பூஜிக்கத்தக்க முனிவர்களு

பிறப்பது, சொத்துரிமைச்சட்டம், ஒருவர் சொத்தை இன்னொருவர் உரிமையாக அடைவதை வரையறுக்கும் சட்டம், பொதுச்சொத் துரிமைகள், அரசர்களின் நடத்தை, அரசு, சொத்துரிமை, குடும் பம் ஆகியவற்றின் தோற்றம் ஆகியவற்றைக் குறித்து, ஹிந்துக் களின் "புனித நூல்களில்" உள்ள விவரங்கள் பூர்ஷ்வா சரித்திரப் புலவருக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றன; எனவே, அவற்றில் பல, கட்டுக்கதையென்றோ, வேறு உள்ளர்த்தம் உடையவையென்றோ மறுக்கப்படுகின்றன. எப்படியிருந்திருக்க வேண்டுமென்ற பூர்ஷ்வா உத்தேசங்களுக்கு ஒத்துவராத சமுதாய உண்மைகளை (கட்டுக்கதைகளல்ல)க் கண்டவுடன், பல அறிஞர்கள், மகாபாரதம் முழுவதையுமே ஒரு கட்டுக்கதையென்றும், அதிகமாகப்போனால், வேறு உள்ளர்த்தம் உடையதென்றும் கூறி' அதை ஒதுக்கினார்கள். ஹிந்து புராணங்கள், சமய-சமுதாயச் சட்டங்கள், சமய-சமுதாய நடைமுறைகள் ஆகியவற்றின் பரந்த விஷயக்களஞ்சியத்தை சரித்திரப் பொருள் வாதத்தின் அடிப் படையில் பரிசீலனை செய்து சலித்தெடுத்தால், இந்தியாவின் பண்டைக்கால வரலாற்றைப்பற்றி ஒரு முன்பின் முரணில்லாத, பகுத்தறிவுபூர்வமான சித்திரம் கிடைக்குமென்பது என் உறுதி யான அபிப்பிராயம்; ஆனால், அந்தச் சித்திரம் ஹிந்து வைதீகத்துக்கோ பூர்ஷ்வா தத்துவார்த்தத்துக்கோ பிடித்த மானதா யிருக்காது. அந்தச் சித்திரம் கிடைத்தால், பொரு ளுற்பத்திச் சக்திகளும், பொருளுற்பத்தி உறவுகளும் மனித குலத்தின் வழிவழி வரலாற்றை நிர்ணயிக்கிறதென்ற சரித்திர இயல் பொருள்முதல் வாத விதி, இந்தியாவின் சென்றகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றுக்கும் பொருத்தமாயிருப்பது புலனாகும்.

பூர்வீகக் கம்யூனிஸ்ட் சமூகம் இருந்ததும் அது சிதறுண்ட தைத் தொடர்ந்து தனிச் சொத்துரிமை, வர்க்கங்கள், வர்க்கப் போராட்டங்கள், குடும்பம், அரசு ஆகியவை தோன்றி, அடிமைச் சமூகம் ஏற்பட்டதுமான காலம் தான், ஆராய்ந்து அறிவதற்கு அதிகக் கஷ்டமுள்ளதாகும். அந்த அடிமைச் சமூக நிலையி லிருந்து, புகழ்பெற்றதும், கீழைய தேசங்களுக்குரித்தானதுமான

கிராம சமூகத்தையும் சாதிகளேயும் அடிப்படையாகக் கொண்டு, ஆசிய நிலப்பிரபுத்துவ சமூகம் உருப்பெற்றதைச் சிக்கறுத்துப் புரிந்துகொள்வது, மேற்குறிப்பிட்டதுடன் ஒப்பிடும்பொழுது, சுலபமாகும். இந்தக் காலகட்டங்களேப்பற்றி சகல அம்சங்களே யும் தழுவியதாக ஒரு சித்திரத்தை முன் வைக்கவேண்டுமானுல், சரித்திரப் பொருள்முதல் வாதத்தைப்பற்றி மிகவும் தீர்க்கமான ஞானம் தேவை; மேலும் மார்க்ஸீய அறிஞர்கள் விரிந்த ஆராய்ச்சிகளே நடத்துவதும் முக்கியமாகும். சமய நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கும் ஆதிக்கால கட்டத்தின் ஆராய்ச்சியில் பூர்ஷுவா அறிஞர்கள் மிகவும் பாடுபட்டு உழைத்திருக்கிருர்கள். "சமுதாய சாத்திரக் கருத்தோட்டம்" என்று அவர்கள் சொல்கிருர்களே அந்தக் கருத்தோட்டத்தை, சடங்குகள் புராணக்கதைகள் ஆகியவற்றை அறிவதற்குப் பயன்படுத்தி, அந்தக் காலத்தின் சமுதாய அமைப்பைப்பற்றி ஒரு கருத்தைக் கொடுக்க அவர்கள் முயற்சித்திருக்கிருர்கள். ஆனுல் கிரேக்கர்கள், ரோமானியர்கள், டியூட்டன்கள் ஆகியோர் விஷயத்தில், அவர்கள் எப்படி தோல்வியடைந்தார்களோ - மார்க்ஸும் எங்கல்ஸுமே அந்த ஆதாரங்களே எடுத்தாண்டு, சரித்திரத்தை காலூன்றி நிற்கச் செய்தனர் - அதேபோல இந்தியாவிலும் தோற்றுவிட்டார்கள்.

சமுதாய சாத்திரக் கருத்தோட்டத்தில் பண்டைக்கால தஸ்தவேஜிகளே எட்டிப் பார்க்கும் இந்த முயற்சிகளேக்கூட ஹிந்து வைதீகமும் இந்திய பூர்ஷுவா வர்க்கமும் (அது ஹிந்துவாயினும் சரி முஸ்லீமாயினும் சரி) தடுத்து வந்திருக்கின்றன. ஏனெனில் சில சமுதாய உண்மைகள், அறம், ஒழுக்கம் ஆகியதற்றைக் குறித்து அவர்கள் இன்று கொண்டிருக்கும் கருத்துக்களுக்கு விரோதமாக உள்ளன; எனவே அவற்றை கடந்த கால சரித்திரத்தின் பகுதியாகக் குறிப்பிடுவதை அவர்கள் ஆட்சேபிக்கிருர்கள். அப்படிப்பட்ட விஷயங்கள் ஒரு காலத்தில் இருந்தன என்ற 'அவமானத்தை' அவர்களால் சகித்துக் கொள்ள முடியாது! வேதமூலங்கள், பாரதமூலம், புராண மூலங்கள் ஆகியவற்றையும் இன்று உயிர்வாழும் பூர்வீகக் குடிகள் மத்தியில் ஐரோப்பிய எழுத்தாளர்கள் நடத்திய ஆராய்ச்சிகளேயும்

அடிப்படையாகக் கொண்டு, ஹிந்துக்கள் மத்தியில் குடும்பமும் திருமணமும் விருத்தியடைந்ததைக் குறித்து ஒரு மாபெரும் நூலை புகழ்பெற்ற சரித்திரப் புலவரான ராஜ்வாடே எழுதத் தொடங்கிய பொழுது, மகாராஷ்டிரத்திலுள்ள ஹிந்து மராத்திப் பத்திரிகைகளும் ஹிந்து வைதீகமும், எழுத்தாளருக்கும் பதிப்பகத்தாருக்கும் விரோதமாக அபாயச் சங்கு அலறின. அந்த நூல் முற்றுப்பெறவே இல்லை; ஓராண்டில் நூலாசிரியர் இறந்தார், அவர் மார்க்ஸீய வாதியல்ல, பொருள்முதல்வாதியுமல்ல, தெய்வபக்தி யில்லாதவருமல்ல. அவரே ஒரு வைதீக ஹிந்துவாகத்தான் இருந்தார். ஆனால் சரித்திர உண்மைகளும் அபிப்பிராயங்களும் ஏனையதனைத்தையும்விட உயர்ந்தவை, ஆண்டவனின் பிழைபடாமைக்கும் அப்பாற்பட்டது என்று அவர் கருதினார்.[1] சடங்குகளின் சொற்களை சடங்குகளின் செயல்களைக் கொண்டு விளக்காவிட்டால், வேத மூலங்களைப் பூர்த்தியாகப் புரிந்துகொள்ள முடியாது. அந்தச் சடங்குகளின் செயல்களை சில பிராமணர்களே அறிவார்கள்; அத்தகைய பிராமணர்களின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து கொண்டிருக்கிறது. ஆதார விவரங்களை ஒன்று சேர்த்து வெளியிடுவதற்கு, அந்த ஆதார விவரங்களை உடையவர்களை இசையச் செய்வது கடினமான வேலையாகும்.

இந்தச் சூழ்நிலைகளில், உடனடியாக, தர்க்க-இயல் பொருள் முதல்வாத முறையில் இந்திய சரித்திரத்தைப் பூர்த்தியாக விளக்குவதற்கு முயற்சிக்க முடியாது. ஆனால் பரவலான சில முக்கியாம்சங்களை சுருக்கமாக எடுத்துரைக்க முடியும். இதற்குத் தேவையான ஆதாரங்கள், வெளியிடப்பட்டுள்ள பிரசுரங்களில் இருக்கின்றன.

ஆரியர்கள் மத்தியில் நிலவிய பூர்வீகக் கம்யூனிஸம், அதன் சிதைவு, தனிச் சொத்துரிமை, வர்க்கங்கள், அடிமைத்தனம், அரசு ஆகியவற்றின் தோற்றம் ஆகியவற்றின் காலகட்டத்தை நான் எடுத்துக்கொள்கிறேன்.

---

1. பண்டைக்கால இந்திய கண-சங்கங்களையும் குடியரசுகளையும்பற்றி ஜயஸ்வால் எழுதியிருந்த புகழ்பெற்ற கைப்பிரதி திருட்டுப்போய், பிரசுரமாகாமல் தடைபட்ட கதையை சரித்திர மாணவர்கள் நன்கறிவார்கள்.

ஆரியரின் தோற்றம்

நாம் இப்பொழுது இந்திய சரித்திரத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, இந்தியா என்று அழைக்கப்படும் திட்டமான எல்லைகளைப் படைத்த தேசம் நம் கண்முன் முதலில் தோன்றுகிறது; இந்த நாட்டில் வாழும் மக்களின் சமயமும் சாதியும் தொழிலும் தத்துவம் என்ன வாயினும் சரி, அந்த மக்கள் அனைவரும் நம் பார்வையில் முதலில் காட்சியளிக்கின்றனர். பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தை இந்திய மக்கள் எதிர்த்தபொழுது, இந்தியாவின் பரம்பரை எல்லைகளாகக் கருதப்பட்ட எல்லைகள் இன்று நீடித்திருக்கவில்லை; ஏனெனில், இந்தத் தேசம், பாரதம், பாக்கிஸ்தான் என்ற இரண்டு ராஜ்யங் களாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. எனினும், இந்திய சரித்திரம் என்பது பழைய கருத்தையே குறிக்கிறது. அதாவது, வடக்கிலும் கிழக்கிலும் மேற்கிலும் மலைகளாலும், கிழக்கு மேற்குத் திசை களின் கீழ்ப்பகுதியிலும் தெற்கிலும் சமுத்திரங்களாலும் சூழப் பட்ட இந்தியாவின் வரலாறு என்பதையே குறிக்கிறது. பிரிட்டிஷ் காலகட்டத்தில் நிகழ்ந்த பிளாஸி யுத்தத்துடன் நவீன இந்தியா வின் வரலாறு தொடங்குகிறது. அதற்கு முன்னல், அல்லது அத்துடன் கூடவே, மராத்தியர்களைப் பற்றிப் பேசுகிருர்கள். அதற்கு முன்னல், பொதுப்படையாக கி.பி. 1000 ஆண்டிலிருந்து முகலாயர் காலமாக, முஸ்லீம் படையெடுப்புகளின் காலமாகக் கருதப்படுகிறது. இந்தக் காலகட்டங்களை விவரிக்கும்பொழுது, இன்று இந்தியாவிலுள்ள பூகோளப் பிரதேசங்கள் அனைத்தை யுமே கிட்டத்தட்ட உள்ளடக்கியதாகத்தான் இந்தியாவைப்பற்றி நாம் கருதுகிரேம். எனினும், கிட்டத்தட்ட தேசம் முழுவதையும் ஆளக்கூடிய மத்திய ஆட்சி, பதினெட்டாம் நூற்ருண்டின் முகலாய, மராத்தி ராஜ்யங்கள் ஏற்படும்வரை அமையவில்லை. அவை அமைந்த பிறகே, ஒரு ஹிந்துஸ்தானத்தைப்பற்றி ஜனங் கள் உண்மையில் பேச முடிந்தது. ஆங்கிலேயர்கள் தமது அரசியலமைப்பையும் முதலாளித்துவப் பொருளாதாரத்தையும் இந்நாட்டில் புகுத்திஞர்கள்; அது இந்தியாவின் ஒருமைப்பாடு சம்பந்தமான கருத்தையும் உணர்ச்சியையும் ஒரு மெய்ப்பொரு

ளாக ஆக்கி நிறைவு செய்தது. அந்த மெய்ப்பொருள் மிகவும் குறுகிய வரம்புக்குட்பட்டிருந்த தென்பதும், வேறு பல முரண்பாடு களால் நிறைந்திருந்ததென்பதும் உண்மையே ; ஆனால், அதைப் பற்றி நாம் இந்த இடத்தில் விவாதிக்கத் தேவையில்லை.

பண்டைக்கால வரலாற்றுக்குள் நாம் மென்மேலும் ஊடுருவிச் செல்லும்பொழுது, பூகோள ரீதியிலும் அரசியல் ரீதியிலும் அரசியல் ரீதியிலும் ஐக்கியப்பட்ட இந்தியாவின் இந்தச் சித்திரம் கிட்டத்தட்ட இல்லாமல் போகிறது ; ஒரு தேசத்தைப்பற்றிப் பேசுவதற்கே ஆதாரமில்லாமல், சிலபல ஜன சமூகங்களைப் பற்றியே பேசக்கூடிய நிலைக்கு நாம் செல்லுகிறோம். பூர்வீக வரலாற்றுக்கு உரிய அந்த நிலையில், ஜனங்கள் கணங்களி லும் (Ganas), குலங்களிலும் (Tribes) வசித்தார்கள் ; அவர்கள் அநேக சந்தர்ப்பங்களில், எந்தப்பிரதேசத்தின்மீதும் எவ்வகை யான பாத்தியதையும் கொண்டாடுவதில்லை; ஒரு குறிப்பிட்ட பிர தேசத்தின் மீது உரிமை கொண்டாடும் பொழுதும், அவர்கள் நாடோடிகளாகவேயிருந்தார்கள். அவர்கள் தனித்தனி சமுதா யங்களில் வாழ்ந்தனர்; ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழ்பவ ராகவோ ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் பிரஜைகளாகவோ அவர் கள் கருதப்படவில்லை. கிரேக்கர்கள், ரோமானியர்கள் ஆகியோ ரின் வரலாறும் முதன் முதலில் அத்தகைய குலங்கள் மக்கட் தொகைகளின் வரலாருகவே இருந்தது; பிற்பாடுதான் நாம் புரிந்துகொள்ளும் முறையில், இத்தாலி, கிரீஸ் தேசங்களின் சரித் திரமாக ஆயிற்று. அதைப்போலவே, இந்தியாவின் ஆதிக்கால வரலாறு, ஆரியக் குலங்கள், மக்களின் வரலாருகவிருந்தது; பிற் பாடு இந்தியா என்ற ஒரு தேசத்தின் சரித்திரமாயிற்று.

இந்தியாவுக்கு வெளியில் ஏதோ ஒரு இடத்திலிருந்த பொது வான பிறப்பகத்திலிருந்து ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்தார்கள் என்ற கருத்தை ஓரிருவரைத் தவிர சகல சரித்திராசிரியர்களும் ஒப்புக்கொள்கிருர்கள். ஆரிய வர்ண இனத்தின் கிளைகள் மேற்கே ஐரோப்பா, சின்ன ஆசியா (Asia minor) முதலிய பிரதே சங்களுக்குச் சென்றன. சில ஹிமாலய மலை வழியாக, பாஞ்சாலம் காஷ்மீரம் வழியாக இந்தியாவுக்கு வந்தன.

பொதுவான பிறப்பகம் எங்கிருந்தது? வட துருவத்துக்கு அருகில், சைபீரியா என்று நாம் குறிப்பிடும்பிரதேசத்தில் எங்கோ இருந்ததென்று சிலர் கருதுகிறார்கள் (உதாரணம், திலகர் கருத்து). அது வால்கா நதிக்கரையில், காஸ்பியன் கடலுக்கு அருகில் இருந்ததாக வேறு சிலர் கருதுகிறார்கள்; அவர்கள், காசியப முனிவர் என்ற ஆரிய புராணக் கதை காஸ்பியன் கடலைத்தான் குறிப்பிடுவதாகவும் அபிப்ராயப்படுகிறார்கள். இந்தப் பொதுவான பிறப்பகம் சம்பந்தமான தத்துவத்தை சிலர் ஒப்புக்கொள்ளவேயில்லை. ஆனால் ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் நிலவும் பல்வேறு ஆரியமொழிகளின் குடும்பங்களிலுள்ள மிகவும் புராதனமான அஸ்திவாரச் சொற்களின் அத்தாட்சியும், ஆதிக்காலத்தின் பொதுவாழ்வையும் பொதுவான சிந்தனையையும் பற்றிய குறிப்புகளாகவே பிரதானமாக விளங்கும் ஆதிக்காலப் புராணக் கதைகள் ஒத்திருக்கும் சான்றும், ஆரியர்கள் ஒரு பொதுவான பிறப்பகத்திலிருந்து பரவியிருக்கவேண்டுமென்ற தத்துவத்தை ஆதரிக்கின்றன.

அவர்கள் ஏன் அப்படிப் பரவ நேர்ந்தது? ஒரு பிரளயம் மாதிரி, இயற்கையில் நிகழ்ந்த உற்பாதம் காரணமாயிருக்கவேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். ஆதிக்கால யூதர்கள், கிறிஸ்துவர்கள், கிரேக்கர்கள், ரோமானியர்கள், ஹிந்து ஆரியர்கள் ஆகியோரின் புராணக் கதைகளில், ஜலப்பிரளயம் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. பிரளயத்தைத் தவிர, சமுதாய வளர்ச்சியின் அவசியமே—உணவையும் மேய்ச்சல் நிலங்களையும் தேடியலையும் நாடோடிகளின் பெருக்கமே, குலங்கள்,ஒன்றோடொன்று சண்டையிட்டுக்கொண்டு ஒன்றையொன்று விரட்டியடிக்கும் நிகழ்ச்சியே—பல இடங்களுக்குப் பரவுவதற்கு இன்னொரு காரணமாயிருந்தது.

இவ்வாறு எப்பொழுது பரவினார்கள்? கி. மு. 6000-க்கும் கி. மு. 4000 இடையில் என்பது சில அறிஞர்களின் கருத்து. இந்தக் கால அனுமானங்கள் சம்பந்தமாக பல அபிப்ராய வேற்றுமைகள் உள்ளன. இவற்றைக் கறாராக நிர்ணயிக்கவே நாம் விரும்புவோம்; ஆனால் இன்றைய அறிவைக் கொண்டு, அதைச் செய்ய முடியாது.

மேலும் சரித்திரத்துக்கு எட்டாத காலத்தின் வரலாருன பூர்வீகச் சரித்திரத்தின் கால அளவை அறிய முடியாமலிருப்பதுடன், அந்தக் காலம் மிக நீண்டதாகவுமிருக்கிறது; எனவே, அந்தக் கால நிகழ்ச்சிகளைக் குத்து மதிப்பாகக் குறிப்பிடும்பொழுதும், ஓராயிரம் அல்லது அதற்கதிமான ஆண்டுகளின் வரம்புக்குள் தான் அனுமானிக்க முடியும். பூர்வீகக் கால நிகழ்ச்சிகளை, சிவாஜியின் பிறந்த தேதியைப் போலவோ, ஸ்டாலின் கிராட் யுத்தத்தின் தேதியைப் போலவோ விவாதிக்க முடியாது.

சுமார் ஐந்து லட்சம் ஆண்டுகளுக்கு முன்னல், ஆதிமூல மனிதப் பிராணியிலிருந்து மனிதன் பரிணமித்தானென்று மானிட சாஸ்திரிகள் கூறுகிருர்கள். பல்வேறு இடங்களில் கண்டு பிடிக்கப்பட்ட மிகப் புராதனமான எலும்புக்கூடுகளிலிருந்தும் எலும்புகளிலிருந்தும் அவர்கள் பரிணும விவரத்தை ஆராய்ந்துகொண்டிருக்கின்றனர். ஒருவேளை அயனமண்டலக் காடுகளில் வாழ்ந்த பிராணி இயற்கையில் நேர்ந்த விபத்தின் காரணமாகவோ மாறுதல்களின் காரணமாகவோ அந்தக் காடுகளை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டிருக்கலாம். பூமிக்கு வந்த பின் உயிர்வாழும் அவசியத்தால் உந்தப்பட்டு, அவன் தன் பின்னங்கால்களை ஊன்றி, உடலை நிமிர்ந்து நிற்கச்செய்து, தன் முன் கால்களுக்கு விடுதலையளித்து, அவை தற்காப்புக்காகவும் உணவு பெறுவது முதலிய காரியங்களுக்காகவும் கைகளாகப் பயன்படக்கூடிய நிலையை உண்டாக்கிக்கொண்டான். அவன் தன் கையால் கருவிகளைச் செய்ய முயன்ருன். அவன் நிமிர்ந்து நின்றதாலும், கருவிகளைச் செய்வதன்மூலம் கரங்கள் தம்மை உருவாக்கிக்கொண்டதாலும், அவன் உயிர் வாழ்ந்து வளரும் சக்தியை அந்தக் கருவிகள் பெருக்கியதாலும், அவன் தன்மூளைத் திறமையைப் பெருக்கினன்; பேச்சுத்திறமை பரிணமிக்கச் செய்தான்; இவ்வாருக, சிம்பன்ஸி, கொரில்லா, ஆகியவைகளைச் சேர்ந்திராதவனும், அதேசமயத்தில் அவற்றுடன் சில ஒத்த அம்சங்களைக் கொண்டவனுமான ஆதி மூல மனிதப் பிராணி, இன்று பூமியில் வாழும் பூர்ண மனிதனுக வளர்ந்தான். ஆதி முதல் வகைகள் இறந்தொழிந்துவிட்டன. அவர்களுடைய

எலும்புகள்தான் சிற்சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன; பரிணமத்தை முறைப்படுத்தி அறிவதில், அந்த எலும்புகள் மானிட சாஸ்திரிகளுக்கு உதவியாயிருக்கின்றன.

அந்தக் காலத்திலிருந்து. ஆரியர்கள் வரலாற்றில் உதயமாவதற்கு முன், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கழிந்துவிட்டன அந்தக் காலத்தின் கதையை எழுதுவதற்கு இதுவரை விவரங்கள் கிடைக்கவில்லை.

ஹிந்துக்களின் நூல்களில் வர்ணிக்கப்படும் ஆரியர்கள், காட்டு மனிதர்களாக இருந்தார்களென்பதில் சந்தேகமில்லை; இதன்பொருள் என்னவென்பதை நாம் பிறகு பார்ப்போம். ஆனால் அந்த ஆரியர்கள், ஆரம்பக்கால காட்டுமனித மனிதனின் நிலையிலிருந்து பெரிய அளவுக்கு வளர்ச்சி யடைந்துவிட்டார்கள். எனினும், அந்த ஆரம்பக்காலத்தை ஞாபகப்படுத்தும் புராணக் கதைகளில் அந்தக்காலத்தின் சில நினைவுகள் ஜாடையாகத் தெரிவிக்கப்படுகின்றன.

மத்திய ஆசியாவில் போராடி இந்தியாவை நோக்கிப் பரவி முன்னேறி இறுதியில் இந்தியாவைக் கைப்பற்றிக் குடியேறிய ஆரியர்களைப்பற்றி நாம் இங்கு ஆராயப்போகிறோம். காட்டு மனித நிலையிலிருந்து நாகரீகத்தை அடைந்த அவர்களுடைய முன்னேற்றத்தை சிக்கறுத்து வெளிப்படுத்த நாம் முயல்வோம்.

இந்தக் கட்டத்தில் எழும் ஒரு பிரச்னையை, இங்கேயே, ஆரியர் பிரவேசத்தை விவாதிப்பதற்கு முன்பே, விளக்கித் தீர்த்து விடலாம்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வருவதற்குமுன், இந்தியாவில் வேறு வர்ண இனத்தினரோ குழுக்களோ வசித்துவந்தார்களா? அப்படி வாழ்ந்தார்களென்றால், அவர்களுடைய நாகரீகம் எத்தகையது? அவர்களை எதிர்த்து ஆரியர்கள் போராடினார்களென்றால், தோற்கடிக்கப்பட்டவருக்கு என்ன நேர்ந்தது? அதாவது, இந்தியாவுக்கு, ஆரியருக்கு முற்பட்ட வரலாறு உண்டா?

உண்டு, இந்திய சரித்திரத்திரத்தில் ஆரியருக்கு முற்பட்ட சகாப்தம் உண்டு; அது ச த்திர காலத்துக்கு உட்பட்டதென்று

கூறுவது கஷ்டம். அந்த சகாப்தத்தைப்பற்றி தஸ்தாவேஜுகள் கிடையாது. நமக்குக் கிடைத்திருக்கும் விவரங்கள் அனைத்துமே, அநேகமாக, ஆரியர்கள் தமக்கு முன்னாலிருந்தவர்களைப்பற்றி கூறியிருப்பவைதான். ஆரியர்களுக்கு முன்னால், திராவிடர்கள் என்பவர்கள் இந்த நாட்டில் வசித்ததாகவும், அவர்கள் ஆரியர் களைவிட வளர்ச்சியடைந்த பௌதீக உற்பத்திச் சாதனங்களைப் பெற்றிருந்தனரென்றும், அவர்கள் ஆரியர்களை எதிர்த்து விடாப் பிடியாகப் போராடினார்களென்றும் இறுதியில் தோற்கடிக்கப்பட் டார்களென்றும் சிலர் கருதுகிறார்கள். தோற்கடிக்கப்பட்ட திராவி டர்கள் ஆரியமயமானார்கள்; ஆனால் அவர்களுடைய மொழியின் அடிப்படை அமைப்பை மட்டும் பாதுகாத்துக் கொண்டார்கள்; மொழியின் அடிப்படை அமைப்பு மாறுவது மிகவும் கஷ்டம்; சமயம், ஒழுக்கநீதி, சமுதாய ஸ்தாபனம் முதலியவை மாறுவதை விட கஷ்டமானது. இந்தியாவின் தென்பகுதியில் வாழும் ஆந்தி ரர்கள், தமிழர்கள், மலையாளிகள், தோடர்கள், கன்னடியர்கள் ஆகியோர் ஆரியர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட வகையின ராகக் கருதப்படுகிறார்கள். இந்தக் கருத்தை ஆதரித்துக் கூறப் படும் முக்கியமான சான்றுகளை நாம் இங்கு விவாதிக்கப்போவ தில்லை. நிகழ்காலத்து தென்னிந்தியர்கள், தமது பண்பாட்டில், ஆரியனிஸம் முழுவதையும் ஜீரணித்துக்கொண்டிருக்கிறார்கள். சில சமயங்களில், அவர்கள், ஆரியர்களின் நேரடியான வழித் தோன்றல்களாகக் கூறப்படும் வடஇந்தியரைவிடச் சிறந்த முறை யில் வேத அறிவின் களஞ்சியமாக விருக்கிறார்கள். அவர்களுடைய ஆரிய-முற்கால வரலாற்றுக்கு சுயேச்சையான ஆதாரங்கள் ஒரு சிலவே உள்ளன. ஆனால் அவர்கள் ஆரிய-முற்கால திராவி டர்களாக விருக்கலாமென்று எண்ணுவதற்கு இடம் இருக்கிறது.

திராவிடருக்கும் முற்பட்ட வகையினர் இந்தியாவில் இருந் தனரென்று கருதுவோர் இருப்பதையும் குறிப்பிட வேண்டும். திராவிடருக்கு முற்பட்ட அந்த வகையினர் திராவிடர்களுடன் அடுத்தடுத்து வாழ்ந்திருக்க வேண்டும்; அல்லது திராவிடர்க ளால் தோற்கடிக்கப்பட்டு வெளியேற்றப் பட்டிருக்க வேண்டும். இந்த வகையினரின் மீத மிச்சங்கள் யார்? அவர்களே மத்திய மாகாணத்திலும் வங்காளத்திலும் சில பிரதேசங்களில் வாழும்

மான்-கெமர் மக்கள் என்று கருதப்படுகிறது. முண்டாக்கள், நாகர்கள், சான்தால்கள், முதலியோர் அன்னாரின் வழித்தோன்றல்களென்று கருதப்படுகிறது. வெளியேற்றப்பட்டபின். அவர்கள் கிழக்கு நோக்கிச் சென்றனர். அவர்களைப் பூர்வீககாலத்தில் (அதாவது, சரித்திரத்துக்கு எட்டாத காலத்தில்) வாழ்ந்த பாலினீஷியர் குடும்பத்தினர் என்று மானிட சாஸ்திரிகள் கூறுகிறார்கள். இந்தப் பாலினீஷியர்கள், மலேயா, இன்டோனேஷ்யா, இந்தோ-சீனம் ஆகிய தேசங்களிலும், ஆஸ்திரேலியாவிலும்கூடப் பரவினார்கள். இந்தப் பிரதேசங்களிலுள்ள பூர்வ குடிகள் ஆரியருக்கும் திராவிடருக்கும் முற்பட்டவர்களான மான்-கெமர் குடும்பத்தினராவர்; அவர்களையும் எதிர்த்து ஆரியர்கள் இந்த நாட்டில் போராட வேண்டியிருந்தது.[1]

இப்பொழுது, ஆரியர்கள் அவர்களுடைய தாயகங்களில் எப்படி வாழ்ந்தார்கள், அவர்களுடைய கணங்களில் எப்படி வளர்ந்தார்கள், அவர்கள் எப்படி புதிய புதிய பிரதேசங்களில் பரவினார்கள், அவர்களுடைய பண்பாடு எப்படி முன்னேறியது ஆகியவற்றை நாம் ஆராய்வோம்: ஆரியர்களுடைய தஸ்தவேஜுகளே எடுத்துக்கூறுவதின் அடிப்படையில்தான் நாம் அவர்களைப் பற்றி அறியப்போகிறோம்; ஆனால், அவர்கள் தமது கற்பனை வர்ணனைகள் வாயிலாகத் தம்மை அறிந்துகொண்டதைப்போலல்லாமல், நமது சமூக விஞ்ஞானக் கண்ணோட்டத்துடன், நவீனப் பகுத்தறிவுப் பார்வையுடன் அவர்களை அறிவோம்.

ஆரியர்களுடைய தஸ்தவேஜுகள் மூலமே நாம் அவர்களுடைய சரித்திரத்தை அகழ்ந்தெடுத்து அறியப்போகிறோம். எனவே, இந்தக் கட்டத்தில், அவர்களுடைய தஸ்தவேஜுகளைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்துகொள்வது அவசியமாகும்.

1. 1856ல் கால்டுவெல் எழுதிய 'திராவிட இலக்கணம்' என்ற நூலில் திராவிடரைப்பற்றி முதன் முதலாக விரிவாக விவாதிக்கப்பட்டது. "ஆரிய-திராவிடருக்கு முற்பட்ட" என்ற தலைப்பிலுள்ள வியாசத் தொகுப்பையும் பார்க்க. 1929-ல் கல்கத்தா சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் பாக்சி மொழிபெயர்த்தது. ஜுல்ஸ் பிளாக், ஸில்வான் லெவி முதலியோரின் வியாசங்கள் இதில் உள்ளன.

ஆரியர்களின் தஸ்தவேஜுகள் அலாதியானவை. இந்தப் பூமியில், ஆதிப்புராதன நிலையிலிருந்து நாகரீகத்துக்கு உயர்ந்து, இன்றுவரை வாழ்ந்து, தமது ஆதிக்கால சமூக நினைவை இவ்வளவு பசுமையாகப் பாதுகாத்துவரும் மக்களின் பூர்வீக வரலாறு சம்பந்தமாக, எழுத்தில் உள்ள தஸ்தவேஜுகள், ஆரியர்களுக்கு இருப்பதுமாதிரி வேறு எந்தப் புராதன மக்களுக்கும் கிடையாது. ஒருவேளை, கிரேக்கர்கள், இதற்கு ஓரளவுக்கு விதிவிலக்காயிருக்கலாம். எகிப்திய அரசர்களின் சமாதிக் கோபுரங்களான பிரமித்துகளின் உருவ எழுத்துக்களிலிருந்தும் (அவையே பூர்வீக எகிப்திய எழுத்துக்கள்), கோரைத்தாள் சுருள்களில் எழுதப்பட்டிருப்பதிலிருந்தும் எகிப்திய நாட்டுப் பூர்வீக வரலாற்றைப் படிக்கிறோம். ஆதிக்கால சுமிரிய, அஸ்ஸிரிய வரலாற்றையும், அவற்றின்மூலம் ஹிட்டைட்டுகளின் வரலாற்றையும், மத்திய கிழக்கு நாடுகளில் அகழ்ந்தெடுக்கப்பட்டு பிரசித்தி அடைந்துள்ளவையான அம்பு எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சுட்ட செங்கற்களிலிருந்து படிக்கிறோம். கிட்டத்தட்ட கி. மு. ஆயிரம்வரை, கிரேக்கர் வரலாற்றை அறிவதற்கு ஹோமரின் இதிஹாசங்கள் (இலியாது, ஒதிசியம்) பயன்படுகின்றன. அயோனிய[1] நாகரிகத்தின் மீதமீச்சங்களும் மற்றவையும் சமீபகாலத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன; அவையும் கிரேக்கர்களின் ஆதி வரலாற்றை அறிய உதவுகின்றன.

இந்திய-ஆரியன் தன் ஆதிக்கால சமூக வாழ்வின் நினைவை, ரிக்குகள் எனப்படும் வேதச் செய்யுட்களிலும் அவற்றிலிருந்து எழுந்துள்ள இலக்கியம் அனைத்திலும் நிலைநிறுத்தினான். வைதீக [2]இலக்கியத்தைத் தொடர்ந்து இதிஹாசங்கள் உருப்பெற்றன; ஒப்புநோக்கும்பொழுது நவீனக்காலமாகத் தோன்றும் காலம் அடுத்துவந்தது; அப்பொழுது, சூத்திரங்கள், ஸ்மிருதிகள் முதலியவை உருப்பெற்றன. ஹிந்து அல்லது

1 அயோனியர்: பண்டைக்கால கிரேக்கர்களில் ஒரு கிளையினர் (மொ-ர்.)

2 வேதங்களும் அவற்றைச் சார்ந்த நூல்களும் சேர்த்து வைதீக இலக்கியம் என்பர் (மொ-ர்.)

ஆரியர் சமூகத்தின் அந்தணர்கள், இந்த வேத மந்திரங்களை, அவற்றுக்கு உரிய திட்டமான உச்சரிப்புகள், லயங்கள், செயல் ஆகியவற்றுடன், தலைமுறை தலைமுறையாக, வாய்மொழி மூலமே காப்பாற்றி வந்தனர்; இவ்வாறு, குறைந்தபட்சம் நாலாயிரம் ஆண்டுகளாவது நடைபெற்றிருக்கிறது. இறுதியில் அந்த மந்திரங்கள் ஏடுகளில் எழுதப்பட்டன; அவற்றுக்கு விமர்சன வியாக்கியானங்கள் செய்யப்பட்டன; இவ்வாருக அவற்றுக்கு அழிவு நேரிடாமல் காப்பாற்றப்பட்டன. மனித சமூகத்தின் நன்மைக்காகவோ சரித்திரத்தின் நன்மைக்காகவோ இவ்வாறு அவர்கள் தலைமுறை தலைமுறையாகக் கற்றுக் காப்பாற்றிவரவில்லை என்பதில் சந்தேகமில்லை. ஏறத்தாழ 1500 கி. மு.வில், இந்த வேத மந்திரங்கள், ஹிந்து சமூக முழுமைக்கும் சமயத்தின் ஆசார விதிகளாக ஆகிவிட்டன. மேலும் அவர்களுடைய வரலாற்றின் அந்தக் கட்டத்தில், அந்த வேத மந்திர ஞானம் பிராமண புரோகிதர்களுக்கு ஜீவன மார்க்கமாக ஆகிவிட்டது. அதனுல்தான், அவை சமுதாய உண்மையாக நீடிக்காதபொழுதும், அவை விடா முயற்சியுடன் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆனுல் இந்த ஆசார விதிகள் பாதுகாக்கப்பட்டிருப்பதல்ல விசேஷமாகக் குறிப்பிடுவதற்குரிய அம்சம்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக, இந்தியாவின் ஹிந்து ஆரியனின் அடிப்படையான சமூக ஸ்தாபனம், உச்சியில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டபோதிலும், அநேகமாக ஒரு முறிவுக்கும் உள்ளாகாமல் தொடர்ந்து இருந்திருப்பதே விசேஷமான அம்சம். கோடிக்கணக்கான ஹிந்துக்களும், வரலாறு வழியாக அவர்களோடு கலந்துபோனவர்களும் அவர்களால் ஜீரணிக்கப்பட்டவர்களும், பற்பல படையெடுப்புகளையும் தாக்குதல்களையும் சமாளித்து உயிர்வாழ்ந்து வந்திருக்கிருர்கள். இறுதியாக நவீன முதலாளித்துவ சகாப்தம்தான், தொழிற்புரட்சிதான், அந்தச் சமுதாயத்தின் அஸ்திவாரங்களையே கிடுகிடுக்க வைத்து பெயர்த்து, பழைய வாழ்க்கையை பரிபூர்ணமாக மாற்றியமைத்தது. இப்பொழுது, அவர்கள் அனுபவித்துகொண்டிருக்கும் சமுதாயப் புரட்சியைப்போல, அவர்கள் இதற்குமுன் எப்பொழுதுமே அனுபவித்தது கிடையாது. எனவே, முன்னுல் ஏற்பட்ட புரட்சிகள் அனைத்திலும் தப்பிப் பிழைத்த அவர்க

ளுடைய சமுதாயச் சமய ஆசார விதிகளும் நினைவும் இப்பொழுது முன்போல் தப்பிப் பிழைத்து வாழமுடியவில்லை. எனவே, அவற்றின் பழைய வடிவம் அழிந்து போவதைத் தவிர்க்க முடியாது. இப்பொழுது சரித்திராசிரியர், அவற்றைக் காகிதத்தில் அச்சிட்டாக வேண்டும். அவற்றை வாய்ப்பிறப்பாக வழங்கிவந்த சமுதாயமும் ஜாதிகளும் குரல்களும் நலவுரிமைகளும் முடிவாக மறைந்துகொண்டிருக்கின்றன. அவை ஒரு புதிய சோஷலிஸ்ட் சமுதாயத்தின் செழுமையான மேம்பட்ட வாழ்வாக மாறுவது நிச்சயம். சரித்திரத்துக்கு எட்டாத காலத்தில், ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன், வால்கா நதிக்கரையில் இந்திய - ஆரியரிடமிருந்து பிரிந்த அவர்களுடைய சம காலத்தவர்களுக்கு சரித்திரம் அந்த பாத்திரத்தை மறுத்து விட்டது.

சரித்திரத்துக்கு எட்டாத காலமான பூர்வீகக் கம்யூனிஸ்டுகளின் காலத்தை நாம் ஆராய்ந்து அறிவதற்கு அடிப்படையாகவுள்ள இலக்கியம், நான்கு வேதங்களும் மகாபாரத இதிகாசமும் ஆகும்; பிரதானமாக, நான்கு வேதங்களாகும்.

ரிக்வேதம், எஜுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம் ஆகிய நான்கு வேதங்களும் சாராம்சத்தில் ஒன்றே; அவற்றுக்கு ஒரே பொருள்தான்; வடிவம்கூட ஒன்றுதான். உண்மையில், ரிக்வேதம், எஜுர்வேதம், சாமவேதம் ஆகிய மூன்றுதான் வேதங்கள் என்பது பூர்வீக வழக்கு. பிற்பாடுதான் நான்காவது வேதம், புனிதமான மூன்று வேதங்களுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. சாம வேதம் தனியாகக் குறிப்பிடப்பட்டபோதிலும், ரிக்வேதத்தைப் பாடி கருமம் செய்வதற்காக, ராகமும் சந்தமும் அமைக்கப்பட்ட ரிக்வேதத்தின் பிரதியேயாகும். ரிக்வேதத்தின் இசைப் பொருளென்றே சாமவேதத்தைக் குறிப்பிடலாம்.

சடங்கில், அதாவது யாகம் செய்வதில், இந்த வேதச் செய்யுட்களுக்கு ஒரு பாத்திரம் இருந்தது. யாகத்தில் ஒவ்வொரு வேதமும் வெவ்வேறு வகைப்பட்ட பொறுப்பாளரால் பாடப்பட்டதென்பதே பிராமண மரபு. யார் எந்த செய்யுளைப் பாடினரென்பதும் அதைப் பாடும்பொழுது, அந்த சடங்கில் அவர் என்ன செய்தாரென்பதும் சரித்திராசிரியனுக்கு முக்கியமானவையல்ல.

அது சடங்காக ஆவதற்கு முன்னால், அந்தச் செய்யுளை ஓதுகிற வர் முழு யாக நிகழ்ச்சியில் வகித்த பாத்திரம் என்ன என்பதே முக்கியமான விஷயம். என்ன செய்யுளாயிருந்த போதிலும், நிகழ்ச்சியில், அவன் செய்வதாகக் கருதப்பட்ட பணி, சமுதாயத் துக்குப் பயன்தரக்கூடிய பணி ஏதாவது இருந்ததா? யாகத்தின் சடங்கை அறிந்த அந்தணர்கள், இந்தியா முழுவதும், இப் பொழுது, ஒரு டஜனுக்குமேல் இருக்கமாட்டார்கள். அநேகமாக பூர்வீக சமூக வாழ்வு முழுவதையுமே படைக்கப்படும் நிகழ்ச்சி யாக, யாகக்கிரியை இருக்கிறது. இரண்டு அரணிக் கட்டைகளை ஒன்றோடொன்று உராய்ந்து தேய்த்து, நெருப்பு உண்டுபண்ண வேண்டும்; இரும்பையே உபயோகிக்காமல், குறிப்பிட்ட மரத்தை யும் புல்லையும் உபயோகித்து, குடிசை கட்டவேண்டும்; பசும்பால் கறக்கவேண்டும்; பாலைத் தோயவைத்து தயிர்செய்யவேண்டும்; கருங்கல்லைக்கொண்டு (கருங்கல் எந்திரத்தைக் கூட உபயோகிக் கக் கூடாது) தானியத்தை அரைக்கவேண்டும்; பிராணிகளைக் கொன்று தோலுரித்து வேகவைத்துச் சமைக்க வேண்டும்; ஆட வேண்டும், பாடவேண்டும்; புராதன முறையில் காதல் புரியவேண் டும்; போராடி வெல்லவேண்டும்; பிரார்த்தனை செய்யவேண்டும்; இவைபோன்ற இதர காரியங்களையும் செய்யவேண்டும். யாகச் சடங்கை ஆராய்ந்தால், அது சடங்கு ரூபத்திலுள்ள பூர்வீக ஆரிய வாழ் வின் புனர் சிருஷ்டி என்ற முடிவுக்கு வருகிறோம். இதையெல்லாம் செய்யும்படி கூறுவதும், உலகமும் மனிதனும் பிராணியும் தோன் றியதைப்பற்றிய கதைகளை ஓதுவதும் சூரியோதயத்தைப்பற்றிய அழகு நிறைந்த வர்ணனைகளைப் பாடுவதும், தலைவர்களால் மக்க ளுக்கு பெருஞ்செல்வம் அளிக்கப்பட்டதைப் பற்றிப் (தானம்) புகழ்ந்து பாடுவதும், நோய்களை நீக்குதற்கும் பேய் முதலியன அணுகாமல் வெருட்டுதற்பொருட்டும் உரக்க ஓதுவதும், இப்படிப் பட்ட வேறு பலவும், இந்த வேதச் செய்யுட்கள் அல்லது வேத சூக்தங்களின் விஷயமாகும். வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட் டத்தில் ஆரியர்கள் மத்தியில் மெய்யாக நிலவிய வாழ்வை யாகம் அல்லது வேதகர்மத்தின் சாராம்சம் பிரதிபலிப்பதாக சகல அறி ஞர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்.

பிராமணீய சடங்கின் வெவ்வேறு வகையினர்செய்த தொகுப்புகளாக வேத மந்திரங்கள் இப்பொழுது நமக்குக் கிடைக்கின்றன. ரிக்வேதத் தொகுப்பு ஒரே ஒரு பதிப்பு அல்லது ஸம்ஹிதையில்தான் கிடைக்கிறது; இந்த ருக்வேதத் தொகுதி அல்லது ஸம்ஹிதையில் 1028 ஸூக்தங்கள் உள்ளன. யஜுர் வேதத்துக்கு ஆறு ஸம்ஹிதைகள் உள்ளன. அவற்றின் நான்கு கிருஷ்ண யஜுர்வேதத்துக்கும் இரண்டு சுக்ல யஜுர்வேதத்துக்கும் உரியன. சாமவேதம் 1549 செய்யுட்களை உடையது; அவை ரிக்வேதச் செய்யுட்களின் பிரதியே. அதர்வண வேதத்தில், 6,000 செய்யுட்கள் அல்லது 731 சூக்தங்கள் உண்டு. (சூக்தம் என்பது தனிப்பாசுரம் மாதிரியுள்ளது; ஒவ்வொரு சூக்தத்திலும் பல ரிக்குகள் அல்லது செய்யுட்கள் உள்ளன). அதர்வ வேதத்தில் கிட்டத்தட்ட ஏழிலொரு பாகம் ரிக்வேதத்திலிருந்து கொள்ளப்பட்டதே.

இந்த நான்கு வேதங்களிலுமுள்ள செய்யுட்கள் மிகப் புராதன காலத்துக்கு உரியவை. அவற்றின் தொன்மைக்கு ஈடு சொல்லக்கூடியதாக வேறு எந்த இலக்கியத்திலும் எதுவும் கிடைக்கவில்லை. இந்த வேத மந்திரங்களில், சில, மற்றவற்றை விடத் தொன்மையானவை. ஆரிய வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் புதிய ரிக்குகள் அல்லது வேதச் செய்யுட்கள் தோன்றும் நிகழ்ச்சிக்கு அல்லது படைக்கப்படும் நிகழ்ச்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. அப்பொழுதிருந்த வேதச் செய்யுட்கள், அவற்றை உடையவர்களின் புனிதமான பிதுரார்ச்சித சம்பத்தாக நிலை கொண்டது. சமுதாய வரலாற்றில் இதன் பொருள் என்ன என்பதை நாம் பின்னர் பார்ப்போம்.

இந்தப் பழமையான செய்யுட்களுடன், ஒவ்வொரு வேதத்துக்கும் உரியதாக ஒரு பிராம்மணம் உண்டு. ஒவ்வொரு பிராம்மணத்துக்கும் ஒரு ஆரண்யகம் உண்டு; ஒவ்வொரு ஆரண்யகத்துக்கும் ஒரு உபநிஷதம் உண்டு. வேதத்துக்குப் பல ஸம்ஹிதைகள் இருப்பதால், பல பிராம்மணங்களும் ஆரண்யகங்களும் உபநிஷதங்களும் உண்டு. கர்ணபரம்பரை வழக்கு கதைகள், மர்மமான கேள்விகள், மர்மமான பதில்கள் ஆகியவை, பிராம்மணம், ஆரண்யகம் ஆகியவற்றின் விஷயமாகவிருக்கின்றன. பிராம்மணங்கள்

வசன நடையில் எழுதப்பட்டுள்ளன ; பண்டைக்கால சமுதாய ஸ்தாபனத்தையும் போராட்டங்களையும் பற்றி அறிவதற்கு ஆதார மான விஷயங்கள் அவற்றில் உள்ளன. உபநிஷதங்கள், தத்துவ சாஸ்த்திர சம்வாதங்களைக்கொண்டவை; ஹிந்து வரலாறு, ஹிந்து தத்துவ சாஸ்திரம் ஆகியவற்றின் வாசகர்கள் அனைவரும், இக் காலத்தில், உபநிஷதங்களை நன்கறிந்திருக்கிறார்கள். உபநிஷ தங்கள் வேதங்களின் பிற்சேர்வுகளாகவே (பிற்காலத்தில் சேர்க் கப்பட்டவையாகவே) உள்ளன. அவை ஏதாவதொரு வேதத்தின் கீழ் வகைப்படுத்தப் பட்டிருந்த போதிலும், உண்மையில், அவை வேதங்களின் பகுதியாகக் கொள்ளப்பட வில்லை. ஒவ்வொரு வேத ஸம்ஹிதைக்கும் உரித்தான சூத்திரங்களும் உள்ளன ; அவை, சிரௌத சூத்திரங்கள், கிருஹ்ய சூத்திரங்கள், தர்ம சூத்திரங்கள், ஸுல்வ சூத்திரங்கள் ஆகிய நால்வகைப்படும். நாம் இந்தச் சூத்திரங் களின் காலத்தை அடையும்பொழுது, அசல் வேதகாலத்தி லிருந்து, அசல் வேதத்துக்குரிய சமுதாயத்தின் காலத்திலிருந்து வெகு தூரம் வந்துவிடுகிறோம். ஏனெனில், இந்தச் சூத்திரங்க ளில், நாம், சட்டங்களையும் தண்டனைகளையும், குடும்பச் சடங்கு களையும், சொத்துரிமையையும், குல அடிப்படையை இழந்துவிட்ட சமுதாயத்துக்குரிய சகல விஷயங்களையும் பற்றி அறிகிறோம்.

இந்த இலக்கியம், சடங்கு, மரபுகள், கதைகள் முதலியவற்றை யெல்லாம் எடுத்துக்கொண்டு, மிகவும் அடிப்படையானவையாக வும் மிகவும் புராதனமானவையாகவும் உள்ள யாகக் கிரியைகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தி, அவற்றிலிருந்து பூர்வீக ஆரிய சமுதாயத்தை புனர்நிர்மாணம் செய்வோம். பல மாபெரும் வேத இலக்கிய அறிஞர்கள் இந்தக் காரியத்தைச் செய்வதற்கு முன்பே முயற்சித்திருக்கிறார்கள்.* அவர்கள் அவசியமான சமுதாய விவ ரங்கள் அனைத்தையும் சேகரித்து ஏடுகளில் எழுதி வைத்திருக்கி றார்கள். ஆனால் அவர்களால் சாராம்சத்தைக் காணமுடியவில்லை ; எனவே பூர்வீக ஆரியக் கம்யூனின் சித்திரத்தை அவர்களால் அளிக்க முடியவில்லை. உண்மையில், அந்த அறிஞர்களுக்கு சரித்

* இங்கு அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடத் தேவை யில்லை. அடுத்து வரும் விவாதங்களில் குறிப்பிடுவோம்.

திர-இயல் பொருள்முதல்வாத தத்துவம் இல்லாத காரணத்தால், அவர்கள் பத்தொன்பதாம் நூற்றுண்டின் சரித்திரப் புலவர்களுடைய பூர்ஷுவா சமுதாய சாத்திர முறையையே உபயோகித்த காரணத்தால், அவர்கள் எந்த சகதியில் சிக்கக்கூடாதோ அதே சகதியில் சிக்கினுர்கள். ஆனல் அவர்கள் மதச்சடங்குவாதியின் பார்வையைக் கொள்ளாமல், ஒரு சமுதாயப்பார்வையைக் கொண்டதால், நாம் ஆராய்வதற்குப் பிரயோஜனகரமான பௌதீக உண்மைகளை அவர்களால் சலித்தெடுக்க முடிந்தது. ஆரியக் கம்யூனின் வளர்ச்சியைப் புரிந்துகொள்வதற்கான திறவுகோலை நாம் பெற்றுவிட்டால், பிரதானமாக மேற்குறிப்பிட்ட உண்மைகளிலிருந்து, அந்த வளர்ச்சியை சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். பிராம்மணங்களையும் உள்ளிட்ட வேத மூலங்களிலும் அவற்றுடன்கூட, குறிப்பாக, மகாபாரத்தின் சரித்திர விஷயங்களிலும், அபத்தமான சடங்குகளாகவும் சில சமயங்களில் அர்த்தமில்லாத கதைகளாகவும் தோன்றுவதைப் புரிந்துகொள்வதற்கான திறவுகோல், யக்ஞம் என்பது என்னவாக விருந்ததென்பதைப்புரிந்து கொள்வதாகும். ஆரியரின் கருத்துப்படி, பிரமன், யாகம் என்ற இரட்டை வஸ்துக்களே, உலக முழுமையின் துவக்கமென்றும் வாழ்வின் சத்தும் முடிவும் என்றும், சமுதாய நினைவு, மரபு, சமயச் சடங்கு ஆகிய அனைத்தும் கருதுகின்றன. இதை நாம் கவனமாகக் குறித்துக் கொண்டு, யக்ஞத்தையும் அதற்கும் பிரமத்துக்கும் மனிதனுக்கும் உள்ள உறவையும் வேதங்கள், பிராம்மணங்கள், மகாபாரதம் ஆகியவற்றின் உதவியுடன் புரிந்து கொண்டால், நாம் பூர்வீக ஆரியனை அவனுடைய நிஜவடிவத்தில் நிச்சயமாகக் காண்போம். அப்பொழுது, வேதங்களில் பிரமத்தையும் யக்ஞத்தையும்பற்றி வரும் குறிப்புகளுக்கு, அர்த்த மற்ற வீண் பேச்சாகத் தோன்றும் அவற்றுக்கு, பொருள் ஏற்பட்டு விடும். எனவே, நாம் யக்ஞத்தை ஆராய்ந்து புனர்நிர்மாணம் செய்வோம்; ஆரியனுடைய யாக விவரம் குறிப்பிடும் முறையில் ஆரியனின் உதயத்தையும், ஆராய்வோம்; அந்த ஆரியன் எந்த மகத்தான பிரமத்தில் வாழ்கிருனே, அந்த பிரமனையும் ஆராய்வோம்.

யக்ஞம் - ஆரியக் கம்யூனின் கூட்டு உற்பத்திமுறை

மனிதனின் நாகரீகத்தையும் பண்பாட்டையும்பற்றி, மனிதன் எப்படி வாழ்கிறான், சிந்திக்கிறான், தன் வாழ்க்கைக்கு அவசிய மான பொருட்களை உற்பத்தி செய்கிறான் என்பனவற்றைப்பற்றி எடுத்துக்கூறும் எந்தச் சரித்திர நூலும், குறிப்பிட்ட கட்டத்தில் தன் அவசியப் பொருட்களை உற்பத்தி செய்வதற்காக அந்த மனிதன் உபயோகித்த கருவிகளைப்பற்றிக் கூறத் தவறுவதில்லை. சகல மானிட சாஸ்திரிகளும் சமுதாயச் சரித்திராசிரியர்களும், குறிப்பாக பண்டைக்கால சமூகங்களைப்பற்றி எழுதும்பொழுது, கிட்டத்தட்ட ஒருமுகமாகக் கடைப்பிடிக்கும் நடைமுறையென்று இதைக் குறிப்பிடலாம். மனிதன் வேட்டையாடும் கருவிகளையும் மீன் பிடிக்கும் கருவிகளையும் உபயோகித்தானா அல்லது கலப் பையை வைத்துக்கொண்டு விவசாயம் செய்தானா என்பதைப் பற்றி அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள், மனிதனின் கற்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம் என்றெல்லாம் பொருளுற் பத்திக் கருவிகளுக்குத் தக்கபடி, சமுதாயச் சரித்திரத்தை வகையீடு செய்வதையும் பார்க்கலாம். சரித்திரத்தைப் பற்றிய அவர்களு டைய தத்துவங்கள் என்னவாயினும் சரி, சமுதாய மனிதனின் வாழ்வில் உற்பத்திக் கருவியே கேந்திரமாக இருக்கிறதென்ற உண்மையை அவர்களால் புறக்கணிக்க முடியவில்லை. ஆனால், இதற்குமேல், பூர்ஷ்வா சரித்திரப் புலவனால் போக முடியாது.

ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தில், சமுதாயத்திடம் உள்ள பொருளுற்பத்திச் சக்திகளே தீர்மானமான அம்சமென்று மார்க்ஸீயவாதிகள் கருதுகிறார்கள். வேறு எந்தச் செயலையும் சிந்தித்துச் செய்ய இயல்வதற்கு முன்னால், உணவு, குடியிருப்பு, உடை முதலிய தேவைகளைப் பெற்று உயிர் வாழ்வதற்காக, இயற்கையுடன் போராடும் முதன்மையான நடவடிக்கையில்

மனிதன் ஈடுபடவேண்டும். இதற்காக மனிதன் படைக்க முடிகிற கருவிகளும், இதற்காக அவன் எத்தனை ஜனங்களை ஒன்றுசேர்த்து வைத்திருக்க முடிகிறதோ அவர்களும், அவர்களுடைய திறமையும் அந்தச் சமுதாயத்தின் ஒட்டுமொத்தமான உற்பத்தி சக்திகளாகும். அப்பொழுதே, அந்தச் சமுதாயத்தின் பூகோள, இயற்கைச் சூழ்நிலை ஒரு கூடுதலான சகாயமாக ஆகமுடியும்; இல்லாவிட்டால் முடியாது.

இந்தப் பொருளுற்பத்தி சக்திகளின் அடிப்படையில், அவற்றின் தன்மைக்கு ஏற்ப, சமுதாய அமைப்பு உருவாக்கப்படுகிறது. மனிதர்கள் தமக்குள் ஒருவரோடொருவர் அமைத்துக்கொள்ளும் உறவுகளும் பொருளுற்பத்திக் கருவிகளுடன் அமைத்துக்கொள்ளும் உறவுகளும் பொருளுற்பத்தி உறவுகளாகும்; இவை பொருளுற்பத்தி சக்திகளைப் பொறுத்தவையாகும். கல்லால் செய்த கோடரியை உபயோகித்த பூர்வீகக்கால வேடர்கள், முதலாளித்துவ உறவுகளையோ முதலாளித்துவ சமூகத்தையோ பெற முடியாது. அதைப்போலவே, நீராவி என்ஜின் காலத்து கூலி உழைப்பாளிகளும் முதலாளிகளும் பூர்வீகக் கம்யூன் உறவுகளைப் பெற முடியாது.

ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு மாறும் பொழுது, பொருளுற்பத்திக் கருவிகள் புரட்சிகரமான அம்சமாக உள்ளன. பொருளுற்பத்திக் கருவிகளின் குணவிசேஷம் என்னவெனில், அவை ஒருபொழுதும் அசையா நிலையில் இருப்பதில்லை; இடைவிடாமல் மாறிக்கொண்டேயிருக்கின்றன; மனிதனின் சமூக உற்பத்தி நடவடிக்கையும் மனித சமூகத் தேவைகளுமே இந்த மாறுதலுக்குக் காரணம்.

பொருளுற்பத்திக் கருவிகளின் மாறுதல்கள், பொருளுற்பத்திச்சக்திகளின் மாறுதல்கள், சமுதாய ஏற்பாட்டின் புரட்சிகரமான மாறுதல்களுக்கு மூலகாரணமாகும்.

எனவே, புராதன ஆரியனையும் அவனுடைய யாகத்தையும் பற்றிய வரலாற்றை நாம் பார்க்கும்பொழுது, அவனிடம் இருந்த பொருளுற்பத்திக் கருவிகள் யாவை, அவற்றைக்கொண்டு அவன்

எப்படிப் பொருளுற்பத்தி செய்தான் என்பனவற்றை முதலில் அறியவேண்டும். அப்பொழுது, அவனுடைய ஸ்தாபனத்தின் அமைப்பு, அவனுடைய பொருளுற்பத்தி உறவுகள், ஆகியவற்றையும், அவற்றுக்குப் பின், அவனுடைய சித்தாந்தம், ஒழுக்க நீதிகள், குடும்ப உறவுகள் முதலியவற்றையும் நாம் அறிய முடியும்.

படைப்பு சம்பந்தமான கதைகளும் இந்தப் பூமியில் மனிதன் ஆதிக்காலத்தில் நடத்திய வாழ்வு சம்பந்தமான கதைகளும் வேத இலக்கியத்திலும் மகாபாரத இதிஹாசத்திலும் நிறைந்திருக்கின்றன. அநாகரீகக்கால மனிதர்களுக்கு இயல்பாகவுள்ள அதீகக் கற்பனைகளாகவும், மனோராஜ்யங்களாகவும் மட்டும் இருப்பவற்றை ஒதுக்கிவிட்டுப் பார்த்தோமானால், வேத பரம்பரை, அந்த ஆரியர்களுடைய மூதாதையர்களின் ஆதிநிலையையும் அப்பொழுது அவர்கள் உழைத்து வாழ்ந்து வளர்ந்த முறையையும் பற்றிய குறிப்புகளாக உள்ளது. பிற்பாடு, ஹிந்து ஆரியன், (ஆரிய) சமுதாய வளர்ச்சியைக் குறித்தும் மனிதர்களைக் குறித்தும் படைப்பு முழுமையையும் குறித்தும் தன் சொந்த தத்துவத்தை வகுத்துக்கொண்டான். இந்த வளர்ச்சியை வர்ணிக்கும் ஏற்பாட்டை அவன் சிருஷ்டித்துக்கொண்டான். அதுவே யுகங்கள், [1]மன்வந்தரங்கள் ஆகியவற்றின் ஏற்பாடு. இந்த ஏற்பாடு கற்பிதமானதல்ல; மனோராஜ்யமாகவுள்ளதுமல்ல. காட்டுமனிதன் அல்லது அநாகரீக மனிதன், சமுதாய நினைவு தனக்கு எடுத்துக்கூறிய சமுதாய மாறுதல்களை வரையறுத்து, தன் கற்பனைகளில் அலங்கரித்ததே இந்த ஏற்பாடு. அந்தக் கட்டத்தில் மனிதன் சகல நிகழ்ச்சிகளையும், தன்னைச் சுற்றியுள்ள அனைத்தையும், உயிரும் அறிவு அல்லது உணர்வும் படைத்ததாகக் கருதுகிறான். உலகம் தன்னைப்போலவே இருப்பதாக அவன் நினைக்

1. மன்வந்திரம்: யுகம் என்பதைப்போலவே இதுவும் ஒரு காலக் கணக்கு. கிருத, திரேதா, துவாபர, கலியுகங்கள் நான்கும் சேர்ந்தது ஒரு மகாயுகம்; மன்வந்தரம் என்பது அதையும்விடப் பெரியது. ஒவ்வொரு ஊழியிலும் மக்களுக்கு ஆதிபுருஷனாக விளங்கிய ஒவ்வொரு மனுவினுடைய காலம் அது.

கிருன். அவன் இன்னும் இயற்கையுடன் தன்னைப் பிணைத்திருக்கும் தொப்பூழ்க் கொடியை அறுத்துக்கொள்ளவில்லை; பெரிய அளவுக்கு, இயற்கையின் பாகமாகவே இன்னும் இருக்கிருன். எனவே, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், பருவங்கள், மரங்கள், கற்கள், ஆறுகள், பூமி முதலியதனைத்தும், சக்திகள், ஈசுவர ஈசுவரிகள் முதலியோராக உருவகப்படுத்தப்படுகின்றன. இறந்தவர்கள் அவனுக்கு இன்னும் உயிர்வாழ்கிருர்கள்; அவர்கள் அடக்கமாகிச் சுட்டெரிக்கப்பட்டுவிட்டபோதிலும், அவனுடன் அமர்ந்து சாப்பிடுகிருர்கள். இயற்கையையும் சமுதாயத்தையும் பற்றி விஞ்ஞானரீதியாக அறிந்து அவற்றை ஆளத்தெரியாத பொழுது, இந்த பிறபட்ட தன்மை, ஒவ்வொரு பூர்வீக மக்களிடமும் காணப்படுகிற கற்பனை வர்ணனையையும் சித்தாந்தத்தையுமே பெற்றெடுக்கமுடியும். ஆனல் இந்தப் பிறபட்ட தன்மைக்குப் பின்னல் சமுதாய வாழ்வின் தீர்மானமான அம்சமான பொருளுற்பத்திமுறை, உற்பத்திசக்திகளின் தரத்தையும் உற்பத்தி உறவுகளையும் குறிக்கும் உற்பத்திமுறை இருக்கிறது. கற்பிதமான கதைகளும் புராணமும் இந்த உறவுகளை வெளியிடாமல் இருக்கமுடியாது; உண்மையில் அந்த உறவுகளே இந்தப் புராணக் கதைகளின் சாராம்சமாகும்.

ஹிந்து சரித்திரப் பார்வை முறையின் பிரதானமான அம்சம், உண்மையில் முழுப் பிரபஞ்சத்தை அறிவதற்கான ஹிந்து முறையின் பிரதான அம்சம் என்னவெனில், அது சரித்திரம் அசைவற்று இல்லாமல், எப்பொழுதுமே இயங்கிக்கொண்டும் மாறிக்கொண்டும் இருப்பதாகக் கருதுவதாகும்.

இந்த மாறுதல்கள் ஏற்படும்பொழுது பெரும் போராட்டங்களும் விபத்துக்களும் நிகழ்கின்றன; அவற்றைத் தொடர்ந்து ஒரு புதிய கட்டம் உண்டாகிறது; அது கொஞ்சகாலத்துக்கு நிலையானதாக விருக்கிறது. ஒரு சகாப்தத்தின் குணும்சங்கள் இன்னெரு சகாப்தத்தில் நேர்எதிரானவையாக மாறக்கூடிய அளவுக்கு, மேற்சொன்ன மாறுதல்கள், மனிதனையும் அவனுடைய சமூக வாழ்வையும் முக்கியமாகப் பாதிக்கின்றன. இங்கு நாம் இதன் விவரங்களை ஆராயவேண்டாம்; மாறுதலை, சரித்திரத்தை

இடைவிடா இயக்கமுள்ளதாகக் காணும் இந்தக் கருத்து, யாந்திரீகமாக, குருட்டுக் கோட்பாடுரீதியாக, ஆண்டவனின் பூர்வ சங்கற்பத்தின் அடிச்சுவட்டில் வட்டமிட்டுக்கொண்டிருக்கும் இயக்கங்களாக மாற்றுவதால், அது தன் மதிப்பு முழுவதையும் இறுதியில் இழந்துவிடுகிறது. ஆனால் ஹிந்து சரித்திராசிரியர் இந்தக் குருட்டுக் கோட்பாட்டின் முடிவுக்கு வருவதற்குமுன்னால், தனக்கு சமுதாய நினைவு எடுத்துக்கூறிய மாறுதல்களை அப்படியே குறித்துவைத்தார்.

காலம் முழுமையும், அதாவது சமுதாய வரலாறு முழுமையும், நான்கு யுகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையே கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகியவையாகும். மனித சமூகம் அல்லது ஆரிய சமூகம் கிருத யுகத்தில் தொடங்கியது; அடுத்துவந்த இரண்டு யுகங்களையும் கடந்தது; மகாபாரத யுத்தத்தின் முடிவில், கலியுகத்தில் பிரவேசித்தது. கலியுகம் இன்னும் முடியவில்லை.

ஆக, ஹிந்து சரித்திராசிரியரின் முடிவுப்படி, மனித சமூகம், அதாவது அவருடைய சமூகம், நான்கு வெவ்வேறாக வரையறுக்கப்பட்ட, திட்டமான வளர்ச்சி சகாப்தங்களைக் கடந்திருக்கிறது. அவை ஒவ்வொன்றுக்கும் அதற்கே உரித்தான சமுதாய ஸ்தாபன தர்மம் உண்டு. சமுதாய ஸ்தாபன தர்மம் என்றால் செல்வத்தை உற்பத்தி செய்து வினியோகிப்பது சம்பந்தமான விதிகள், சமுதாய உறவுகளின் விதிகள், திருமணம் குடும்பம் சம்பந்தமான விதிகள், ஒழுக்க விதிகள், தொழுகை விதிகள் முதலியனவென்று பொருள்படும்.

யுகம் மாறும்பொழுது, மனிதனின் தர்மமும் மாறுகிறதென்று ஹிந்து இலக்கியம் வலியுறுத்த விரும்புகிறது. தர்மம் என்றால் என்ன ? அவனுடைய வாழ்க்கை முறை, அவனுடைய வாழ்வின் விதி. வாழ்வு, பிரதானமாக எதைச் சார்ந்திருக்கிறது ? செல்வ உற்பத்தியையும், தன் இன உற்பத்தியையும் பொறுத்திருக்கிறது. இன உற்பத்தி என்பது ஆண் பெண் உறவு அல்லது திருமணம் பற்றியதாகும். அவை இரண்டையும் பொருள் (அர்த்தம்) என்றும் காமம் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

கருத்துமுதல் வாத தத்துவஞானிகள் என்ன சொன்ன போதிலும் சரி, ஹிந்து நூலாசிரியர்கள், சமுதாய வாழ்வு, மனிதனின் வாழ்க்கை என்பதைப்பற்றிய தெட்டத் தெளிவான பௌதீக உண்மையாக விஷயம் முழுவதையும் வடித்துத் தருகிருர்கள்.

இந்த நான்கு சமூக வளர்ச்சி யுகங்களுக்கு ஹிந்து சரித்திர தத்துவஞானி எப்படி இலக்கணம் கூறுகிருர் ?

ரிக்வேதத்திற்குரிய ஐதரேய பிராம்மணம் அவற்றைப் பின் வருமாறு வர்ணிக்கிறது. (VII 15)

கலி சயனித்துக் கொண்டிருக்கிறது.
துவாபர் மெதுவாக அசைந்து கொண்டிருக்கிறது.
திரேதா நின்றுகொண்டிருக்கிறது.
கிருத அலேந்துகொண்டிருக்கிறது.

கலியுகத்துக்கும் இதர யுகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு தீர்க்கமாகக் குறிப்பிடத் தக்கதாயுள்ளது. மேலும் சரித்திரத் தத்துவாசிரியரே கலியுகத்தில் வாழ்ந்ததால், கலியுகத்தைப் பற்றிய பல விவரங்களே அவர் உன்னிப்பாகக் கவனித்துக் குறித்திருக்கிருர். ஆனுல் முதல் மூன்று யுகங்களேயும் நமது சமூக விஞ்ஞானத்தின் உதவியுடன் சுலபமாகப் புரித்து கொள்ள முடியும்.

கற்கருவிகள், பாராங் கற்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டு, கோஷ்டி கோஷ்டியாக இரை தேடச் சென்ற வேடர்கள் வாழ்ந்த யுகம் கிருதயுகம். மனித நினேவில் தொலே தூரத்திலுள்ள காலம் அது. மனிதன் காட்டு மனிதனுக வாழ்ந்த காலம் அது. கற்கருவிகளிலிருந்து வில் அம்புகளே உருவாக்கிக் கொண்டு, நெருப்பைக் கண்டுபிடித்து, காட்டுப் பிராணிகளே வீட்டுப் பிராணிகளாகப் பழக்கிக்கொண்டு, புராதன மேய்ச்சல் புல் வகைகளேப் பயிரிட்டுக்கொண்டு வாழ்ந்த காலமே இரண்டாவது யுகம்.

நாகரீக யுகத்தின் நிலேயான வாழ்வைப் பற்றிப் பேசக்கூடிய நிலேயில் இல்லாவிட்டாலும், வாழ்வு முன்னர் இருந்ததைவிட

நிலையானதாக இருந்தது. அதுவே அநாகரீகக் காலம் அல்லது திரேதாயுகம் எனலாம். அதிலிருந்து பரிணாமம் அதிக வேகத்தைப் பெற்றது. உலோகக் கருவிகள் படைக்கப்பட்டன; உலோகங்களை உருக்கிக் காய்ச்சும் கலையின் சாதனை அது. இரும்புக் கோடாரியும் கலப்பையும் விவசாயமும் உண்டாயின. பெருகிவரும் ஜனத்தொகை பிற இடங்களுக்குச் செல்ல நேரிட்ட போதிலும், வாழ்வு அதிக நிலையானதாக வாயிற்று. இறுதியாக, மேலும் அதிகமாக, கருவிகளும் கைத்தொழில்களும் வளர்ச்சியடைந்தன. நகரமும், கிராமமும் அபிவிருத்தியடைந்தன; சொத்துரிமை உறவுகள் ஒரு பலாத்காரமான மாறுதலுக்கு உட்பட்டன. நாகரீக யுகமான கலியுகம் ஏற்பட்டது.

செல்வத்தை உற்பத்தி செய்யும் பிரச்னையுடன், ஜன பலப் பிரச்னை, ஆண்-பெண் உறவுப் பிரச்னை, மனிதரின் இனப்பெருக்கப் பிரச்னை இருந்தது இந்தப் பிரச்னை. சம்பந்தமாகவும், நான்கு யுகங்களும் வெவ்வேறு விதிகளைக் கொண்டிருந்ததாக வர்ணிக்கப்படுகிறது; இந்த விதிகள் மகாபாரதத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.[1] ஆனால் நாம் குடும்ப வளர்ச்சியைப்பற்றி விவாதிக்கும்பொழுது, இந்த வெவ்வேறான தன்மைகள் அனைத்தையும் பரிசீலனை செய்வோம். சமுதாய சகாப்தங்களும் அவற்றின் மாறுதல்களும் குறிக்கப்பட்டன என்பதையும், அந்த மாறுதல்கள் சாராம்சத்தில் மனிதனின் பௌதீக சமூக வாழ்விலேயே ஏற்பட்ட மாறுதல்களையும் அவற்றுக்கு அவசியமான உறவுகளில் ஏற்பட்ட மாறுதல்களையும் உட்பொருளாகக் கொண்டிருந்தன என்பதையும் மட்டுமே இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆனால், நாம் நமது சமுதாய விஞ்ஞானத்தின் உதவியுடன் சமுதாய சரித்திரத்தை இவ்வாறு படித்தறிவதை, வேத மூலத்திலிருந்தே ஊர்ஜிதம் செய்யவேண்டும். பல சகாப்தங்கள் வழியாக மனிதன் அடைந்த வளர்ச்சியை வேதங்கள் எப்படி வர்ணிக்கின்றன? சமுதாயத்தின் பொருளுற்பத்திக் கருவிகளிலும் பொருளுற்பத்தி உறவுகளிலும் மாறுதல்கள் ஏற்பட்டதை அவை வர்ணிக்கின்றனவா? இத்தகைய கேள்விகளுக்கான விடையிலிருந்து

1. சாந்தி பர்வம் 207-37, 38, 39.

வேத நூலாசிரியர் சமுதாய வளர்ச்சியை எப்படி வர்ணிக்கிருர் ?

செல்வம் என்ற ஒரே கோரிக்கையும் அதை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளுமே வேதஇலக்கியம் முழுவதிலும் ஆதிக்கம் வகிக்கின்றன. செல்வம் என்பது பிரதானமாக எப்படி பொருள்படுத்தப்படுகிறது? உணவும் அதிகமான ஜனங்களும் பெறவேண்டும் என்ற பொருளில்தான்; தனம், பிரஜை என்ற பொருளில்தான். தனம் என்பது அவனுடைய பொருளுற்பத்திக் கருவிகளையும் பொருளாதார உற்பத்தி நடவடிக்கையையும் வர்ணிக்கிறது. அத்துடன் ஒட்டிய துணையாக உள்ளதே இரண்டாவது அம்சமான பிரஜை. இந்த இரண்டு பிரச்னைகளையும் பற்றி சகல வேத ஸம்ஹிதைகளிலும் ஏராளமான விவரங்கள் உள்ளன.

உணவைப் பெறுவதற்கான போராட்டம் மிகவும் கடினமாயிருந்தது; திருத்தமடையாத முரட்டுக் கற்கருவிகளை வைத்துக் கொண்டு இரைதேடியவர்களின் நிலைமை அப்படித்தானே இருக்க முடியும்? இரை கிடைக்குமென்ற உறுதியில்லாமல், நிழல் இல்லாமல், நெருப்பு இல்லாமல் இயற்கையிடமிருந்தும் காட்டு மிருகங்களிடமிருந்தும் தற்காத்துக்கொள்ள வகை வழியில்லாமல், வேட்டைக்காக பிராணிகள் பின்னல் ஓடிக்கொண்டேயிருந்தவேடனின் வாழ்வு நிச்சயமற்றதாயிருந்தது. அந்த அநித்ய வாழ்வு ஆரியரின் நினைவில் ஒரு நடுக்கத்தை ஏற்படுத்தியது. உணவுக்கான போராட்டத்தில் பல சமுதாயங்கள் மீதமிச்சமில்லாமல் அழிந்தொழிந்தன. அந்தப் போராட்டத்தில் அனைவருமே அழிந்து விடுவோமோவென்று எண்ணி, சில சமயங்களில் மனிதர்கள் மனம் ஒடிந்து போனுர்கள். இந்த பயத்தை வேதத்தின் தத்துவாசிரியர் தன் சொந்த முறையில் வெளியிடுகிருர். உணவுக்காகவும் உலகில் நீடித்திருப்பதற்காகவும் பிரஜைகளை உற்பத்திசெய்வதற்காகவும் அவர்கள் நடத்திய போராட்டம், படைப்புக் கடவுளான பிரஜாபதியின் முயற்சிகளை ஒத்திருந்ததென்று கூறுகிருர். எப்படியெனில் பிரஜாபதிக்கும் அதே பிரச்னை ஏற்பட்டிருந்ததென்கிருர். படைப்புக் கடவுளான பிரஜாபதி உலகத்தைச்சிருஷ்டிக்கும் செயலில் ஈடுபட்டபொழுது, அவருக்கு கருச்சிதைவு ஏற்

பட்டது, உணவு கிடைக்காத காரணத்தால் அவருக்கே அழிவு ஏற்படக்கூடிய அபாயமும் நேர்ந்தது.

அதன் பின் பால் உண்டாக்கப்பட்டு பிரஜாபதிக்குக் கொடுக்கப்பட்டது. அது அவரை உயிர்ப்பித்தது. பிறகு அவர் பொருக்கி எடுக்கப்பட்ட பதினொரு பிராணிகளை வறுத்துத் தின்றார்.[1] இவ்வாறாக உலகம் பிறந்தது, பிழைத்தது. கடவுளின் கதியே இவ்வாறு இருந்ததென்றால், மனிதனின் நிலை எப்படி இருந்திருக்குமென்று நீங்களே கற்பனை செய்து கொள்ளலாம்.

எனவே, கல்லாலும் (வஜ்ரம்) எலும்பாலும் (அஸ்தி) செய்த ஆயுதங்களைக்கொண்டு, ததீசியின் கூர்மையான எலும்புகளைக் கொண்டு எவருக்கும் வாழ்க்கைத் தேவைகளை அளிக்காத விருத்திரனையும் விசுவரூபனையும் எதிர்த்துப் போராடும்படி ஆரியத் தெய்வங்கள் அவர்களுடைய தலைவரான இந்திரனை வேண்டிக் கொண்டார்கள்.

மனிதர்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாககிருதயுகத்தின் காட்டுமிராண்டி நிலையில் அலைந்துகொண்டிருந்தனர். அவர்கள் பல நாடுகள் வழியே சென்றனர்; இரை கிடைக்காமையாலோ நோய் பரவியதாலோ அயலார் பகையாலோ இவைபோன்ற இதர காரணங்களாலோ அவர்கள் நாடுவிட்டுநாடுச் சென்றுகொண்டேயிருந்தனர். இது சம்பந்தமான ஒரு ஆதி பூர்வீகக் குறிப்பு வேண்டிடாட்[2] என்பதில் உள்ளது. ஆதிக்கால ஆரியன் ஓரிடத்தில் நிலையாகக் குடியேறுவதற்கு முன் பதினாறு நாடுகளில் அலைந்து திரிந்ததாக அது குறிப்பிடுகிறது. வேண்டிடாட் யாத்திரை காட்டுமிராண்டி நிலையில் வேட்டையாடிக் கொண்டிருந்த காலத்தை மட்டும் குறிப்பிடவில்லை; பிற்காலங்களையும் குறிப்பிடுகிறது; ஆனால் நாகரீக சகாப்தமான கலியுகத்தை அது குறிப்பிடவில்லை.

அந்த நிலைமைகளில், தனிச் சொத்துரிமை கொண்டாடுவதற்கோ அடிமைகளை வேலைவாங்குவதற்கோ அரசை நிர்மாணிப்பதற்கோ இடமில்லை. சுருங்கச் சொன்னால், அந்த நிலைமைகளில் சுரண்டுகிறவர்கள் சுரண்டப்படுகிறவர்கள் என்ற வர்க்கங்களை

1. ரிக்வேதம்: 3-9-1-1; 2-5

2. வேண்டிடாட்: இது இரானியர் வேதத்தில் ஒரு பகுதி (மொ-ர்).

அடிப்படையாகக் கொண்ட சமுதாயம் ஏற்படமுடியாது. கூட்டு உழைப்பின் மூலமே உற்பத்தி செய்யவோ இரை தேடிப்பெறவோ முடியும்; அவ்வாறு கிடைப்பதை கூட்டாகப் புசித்தார்கள். தனி மனிதன், இயற்கையுடன் போராடிப் பிழைக்கும் திறன் இல்லாதவனாக விருந்தான்.

மனிதன் நெருப்பைக் கண்டுபிடித்தும், காட்டுப் பிராணிகளை வீட்டுப் பிராணிகளாகப் பழக்கும் கலையைக் கண்டுபிடித்ததும், கருவிகளின் பரிணமத்தில் ஏற்பட்ட அடுத்தகட்டமாகும். ஆதிக் காலக் காட்டுமிராண்டி மனிதனுக்கு நெருப்பை உண்டாக்கத் தெரியாது; பிராணியைப் பழக்கவும் தெரியாது. நெருப்பைக் கண்டுபிடித்ததும், பிராணியைப் பழக்கும் கலையை அறிந்ததும், மனிதனின் சமுதாய ஸ்தாபனத்திலும் வாழ்விலும் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. " இந்த இரண்டு முன்னேற்றங்களும் நேரடியாக, மனிதனின் விமோசனத்துக்கான புதிய சாதனங்களாக அமைந்தன." 1.

மேகங்களின் மின்னல் மரங்கள்மீது விழுந்து அவற்றை எரித்து அழித்தபொழுது, காடுகளில் ஏற்பட்ட நெருப்பை மனிதர்கள் நிச்சயமாகப் பார்த்திருக்க வேண்டும். அனைத்தையும் மூர்க்கத்தனமாக எரித்து அழிக்கும் சக்தியாக, இயற்கையின் பயங்கரமான நாச சக்தியாக, நெருப்பு இருப்பதை மனிதர்கள் பார்த்திருந்தனர். ஆனால் அதை இஷ்டப்பட்டபொழுது உண்டாக்கி, கட்டுப்படக்கூடிய சக்தி அல்லது கருவியாக அதை மனிதனின் சேவைக்குப் பயன்படுத்துவதோ பிரச்னையாகவிருந்தது. ஆரியர்கள் சம்பந்தப்பட்டவரை, ஆங்கீரஸர் என்பவரோ, ஆங்கீரஸ கணத்தினரோ அந்தக் காரியத்தைச் சாதித்ததாகப் புலப்படுகிறது. ஆங்கீரஸர் ஆரியர்களின் பொதுவான பிரவர[2] மூதாதையர்களில் ஒருவராவர். ஆங்கீரஸர் நெருப்பைக் கண்டுபிடித்ததாக ரிக் வேதத்தில் சிலபல இடங்களில் குறிப்பிடப்படுகிறது.[3]

---

1. எங்கல்ஸ், "வாலில்லாக் குரங்கு மனிதனாகப் பரிணமித்ததைப்பற்றி"; "இயற்கையின் தர்க்க இயல்" என்ற நூலில்.

2. பிரவரம்: கோத்திரங்களின் தொகுப்பு; இதைப்பற்றி ஆசிரியர் பின்வரும் அத்தியாயங்களில் விளக்குகிறார். (மொ-ர்)

3. ரிக்வேதம்: 1—143-5; 1—65-4.

கடைசியாக, ஆரியர்கள் அந்தக் கருவியைப் பெற்றவுடன், அது அவர்கள் வாழ்வில் ஒரு பெரிய புரட்சியை உடனடியாக உண்டாக்கியது. அந்தப் புரட்சி பிரமாதமானதாயிருந்ததால் அதன்பின் நடைபெற்ற ஆரிய வாழ்வுக்கு அக்கினியே ஆதாரமாக வர்ணிக்கப்படுகிறது ; அந்த வாழ்வு அக்கினியைச் சுற்றி இயங்கிற்று ; அக்கினியை மையமாகக் கொண்டிருந்தது. படைப்பு, வாழ்வு, வளர்ச்சி, செல்வம், இன்பம் அனைத்தும் அக்கினியிலிருந்தே உண்டாகிறது. அக்கினியால் இரண்டு முக்கிய மாறுதல்கள் ஏற்பட்டன ; அவைதான் கால்நடைச் செல்வம், மக்கள் சம்பத்து ஆகியவற்றின் உற்பத்தி.

வேட்டையில் கிடைத்தவற்றையும் மீனையும் நெருப்பில் வறுத்தால் அல்லது சமைத்தால், அவை சுலபமாக ஜீரணமாகின்றன. எனவே, மாபெரும் தெய்வமான அக்கினி, அமத் அல்லது பச்சை உணவைப் புசிப்பவர் என்றும், கிர்வ்யத் அல்லது உயிரற்ற மாமிசத்தைத் தின்பவர் என்றும் அழைக்கப்பட்டார். அக்கினி காட்டு மிருகங்களையும் பகைவர்களாயுள்ள ஆவிகளையும் பேய் பூதங்களையும் பீதியடைந்து ஓடும்படி செய்தது.[1] எரியும் மரத் தழல்களாகவோ தீப்பந்தங்களாகவோ, நெருப்பை காட்டு மிருகங்கள் மீதும்[2] பகைவர்கள் மீதும் வீசி எறியலாம் ; அவற்றிடம் இத்தகைய யுக்தி ஒன்றும் அப்பொழுது கிடையாது. அக்கினி, பருவ நிலையின் கொடுமை, கொந்தளிப்புகளிலிருந்து மனிதனைப் பாதுகாத்தது. கஷ்டப்படுத்திய சைபீரியப் பிரதேசங்களில், நீண்டதாகவும் கடுங்குளிரானதாகவும் இருந்த இராக்காலத்தில், இருளுக்கு மத்தியில் நடமாடுவதையும் கண் பார்வையைப் பயன்படுத்துவதையும் அக்கினியே சாத்தியமாக்கியது.

நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டதுடன்கூட, பிராணிகளைப் பழக்கும் கலை அறியப்பட்டது. இவை இரண்டும் சேர்ந்து, நிலையான உணவு வசதியைப் பெறும் அவசர அவசியப் பிரச்னைக்கு பைசல் கண்டது.[3] வேட்டையாடுவதாலும் மீன் பிடிப்பதாலும் உணவு

1. ரிக்வேதம் : 3-15-1
2. ரிக்வேதம் : 3-15-1
3. ரிக்வேதம் : 6-69-2 ; 5-29-7 ; 1-58-5 முதலியன.

கிடைப்பது உறுதியில்லாமலிருந்ததால், மனிதன், சில சந்தர்ப்பங்களில், மனிதனையே உணவாகக்கொள்ள நேர்ந்தது. ஆனால் அக்கினி சுவர்க்கலோகத்திலிருந்து மனிதனின் இல்லத்துக்கு இறங்கிவந்த பிறகு, கால்நடைகளின் இறைச்சியும் பாலும் அவனுக்கு உணவாக, அவற்றின் தோல்களும் மயிரும் அவனுடைய உடைக்கும் வெதுவெதுப்புக்கும் இதர உபயோகங்களுக்கும் பயன்பட, அவற்றின் எலும்புகளும் கொம்புகளும் இதர பிரயோஜனகரமான கருவிகளைச் செய்வதில் பயன்பட, கால்நடைகளை மனிதனின் நிரந்தரமான, இணக்கமான, பணிவான சகாவாகப் பழக்க முடிந்த பிறகு, வாழ்வு முற்றிலும் புதியதும் மேம்பட்டதுமான ஒரு சகாப்தத்துக்குள் தாவியது. யுகம் மாறியது.

இந்த மாறுதல் அனைத்துக்கும் அக்கினியே தலைவன். பிற்காலத்தில், இதே அக்கினிதான், தாதுமண்களை காய்ச்சி உருக்குவதை சாத்தியமாக்கி, மீண்டும் ஒரு புரட்சியைச் சாதித்தது; ஆனால் அதைப்பற்றி பிறகு விவாதிப்போம். இப்பொழுது வேண்டாம். எனவே, ரிக்வேதம், அக்கினியை, மனிதனின் குடியிருப்புகளுடைய தலைவனாகவும் ரட்சகனாகவும் வர்ணிக்கிறது. அவனே விஷ்பதி. விஷ் என்றால் குடியிருப்பு என்று பொருள். அக்கினியே குடியிருப்புகளைச் சாத்தியமாக்கினான். மனிதகுலத்தின் மிகத் தொன்மையான தோழன், மிகப் பெரிய நண்பன் அவனே. அவனை தெய்வங்கள் மனிதனுக்காக பூமிக்கு அனுப்பின. உண்மையில், தெய்வங்களே அவன் மூலமாகவே தமது உணவைப் பெற்றன.

இவ்வாறாக, ஆரிய மனிதன், அக்கினியையும் கால்நடைகளையும் சுற்றி தன் புதுவாழ்வு முழுவதையும் நிர்மாணித்தான்; இந்தப் புதிய உற்பத்திக் கருவிகளையும் புதிய தரத்தை அடைந்துள்ள உற்பத்தி சக்திகளையும் கொண்டு அவன் சமுதாயத்தை நிர்மாணித்தான். நிலையாமை, அலைந்துதிரிதல், நாசம், அழிவு, படைப்பும் படைப்புக் கர்த்தாவும் கருச் சிதைவுக்கு உட்படுதல் ஆகிய அம்சங்களைக் கொண்ட பழைய யுகத்துடன் ஒப்பிடும்பொழுது, அபரிமிதமான செல்வத்தை முதன்முதலாக உற்பத்தி செய்வதாக, புதிய உற்பத்தி முறை இருந்தது. காட்டுமிராண்டி

நிலையிலிருந்து அநாகரீக நிலைக்கு, கிருத யுகத்திலிருந்து திரேதா யுகத்துக்கு, நாடோடி (சஞ்சார) நிலையிலிருந்து குடியிருப்பு நிலைக்கு பட்டினி கிடந்துகொண்டும் இடையிடையே நரமாமிசத்தைப் புசித்துக்கொண்டும் இருந்த நிலையிலிருந்து உணவும் நிழலும் தற்காப்பும் உறுதியாகக் கிடைக்கும் நிலைக்கு, அம்மணமான நிலையிலிருந்து உடலை மூடிக்கொள்ளும் நிலைக்கு, இயற்கைக்கு முன் நிர்க்கதியாக நிற்கும் நிலையிலிருந்து பலமும் வளர்ச்சியும் பெற்றநிலைக்கு, புதியமுறையும் புதிய பொருளுற்பத்தி சக்திகளும் மனிதனை உயர்த்தின. சயனித்துக் கொண்டிருந்தவன் இப்பொழுது எழுந்துவிட்டான்; நம்பிக்கையுடன் நின்றான்; இன்பமும் சிரிப்பும் பாட்டும் அவனுக்கு ஒரு சோபையைக் கொடுத்தன.

அவன் பெற்றுள்ள இந்தப் புதிய உற்பத்தி முறையை இந்தப் புதிய சமூதாய ஸ்தாபனத்தை, இந்தப் புதிய கலையை அவன் என்னவென்று குறிப்பிட்டான்?

நெருப்பு உண்டாக்குவதையும் பிராணிகளைப் பழக்குவதையும் அறிந்து குடியிருப்புகளைக் கட்டிக்கொண்டவுடன் யக்ஞம் உண்டாயிற்றென்றும், கிருதயுகத்தில் இல்லாத இந்த யக்ஞத்தைப் படைப்புக் கர்த்தாவான பிரமன் மனிதனுக்கு திரேதாயுகத்தில்[1] அளித்தாரென்றும் வேத மரபு கூறுகிறது. மனிதனை ஒரு யுகத்திலிருந்து இன்னொரு யுகத்துக்குள் தூக்கிவிட்ட யக்ஞம், மனிதனுக்கு பிரமன் அளித்த மிகப் பெரிய கொடை என்று கர்ணபரம்பரை வழக்கு கூறுகிறது.

நெருப்பின் உதவியுடன் ஆரியச் சமுகம் எத்தப் புதிய உற்பத்தி முறையில் பிரவேசித்ததோ அதுவே யக்ஞம். யக்ஞ முறையின் மனிதனுடைய புதிய வாழ்வால் பிரமனுக்கு சுபீட்சமும் வளர்ச்சியும் ஏற்படுகிறது. யக்ஞம் செய்யப்படும்பொழுது, பிரமன் அல்லது படைப்பு உண்டாகத் தொடங்குகிறது என்று கூறலாம். பிரமன் ஆரிய மனிதனின் கம்யூனாகும்; யக்ஞம் அதன் பொருளுற்பத்தி முறையாகும். இதுவே கூட்டு உற்பத்தி முறையுடன் கூடிய பூர்விகக் கம்யூன்.

---

1. மகாபாரதம், சாந்தி பருவம்.

இந்த உற்பத்தி முறையின் அறிவாக, கம்யூன் என்ற மகத் தான பிரமனுடைய வாழ்க்கை முறையின் அறிவாக வேதங்கள் உள்ளன. இவ்வாருகத்தான், ஆரியஹிந்து மரபு, சரித்திரத் தைப் பதிவு செய்திருக்கிறது. ஆரிய வரலாற்றின் ஆதிக்கால மான பூர்வீகக் கம்யூனிஸ சகாப்தத்தைப் புரிவதற்கு இதுவே திறவுகோல்.

பூர்வீகக் கம்யூனிஸம் சமுதாய மனிதன் மீது திணிக்கப்பட்ட தற்கு, அபரிமிதமான பொருளுற்பத்தி அல்ல, மிக மிகக் குறை வான பொருளுற்பத்தியே காரணம், பொருளுற்பத்தி சக்திகள் மிக மிகப் பிற்பட்டிருந்ததே காரணம் என்று சரித்திர இயல் பொருள் முதல்வாதம் கூறுகிறது. எதையாவது உற்பத்தி செய்ய வேண்டியிருந்தால், அது கூட்டு உழைப்பின் மூலமே சாத்தியமா யிருந்தது. தனிநபர் உற்பத்தி, தனிநபர் உபயோகம், தனித் தனி குடித்தன அமைப்பு ஆகியவை அசாத்தியமாயிருந்தது. மனிதர் களின் பரஸ்பர உறவுகளை இந்த அவசியமே நிர்ணயித்தது. பூர்வீகக் கம்யூனின் முக்கியமான அம்சம் இதுவே. யாக உற்பத்தி முறை இந்த குணம்சங்களை வகுத்திருக்கிறதா? பிரமன் என்ற பூர்வீகக் கம்யூனும் அதன் வாழ்வும் பண்பாடும் சித்தாந்தமும் அதன் ஒழுக்க நெறிகளும் அறநெறிகளும், பூர்வீகக் கம்யூனிஸம் அல்லது புராதனக் கூட்டு வாழ்வின் தன்மைகளை, சகல புராதன சமூகங்களின் வரலாற்றிலும் காணப்பட்டுள்ள தன்மைகளை வெளிப்படுத்துகிறதா? பூர்வீகக் கம்யூனிஸத்தின் இந்த முக்கிய மான அம்சங்களை, மார்கன் கவனித்து அறிந்தவையும் மார்க்ஸும் எங்கல்ஸும் விளக்கியவையுமான இந்த அம்சங்களை, சரித்திர இயல்பொருள் முதல்வாதத் தத்துவத்தை மறுக்கக்கூடிய பூர்ஷுவா அறிஞர்கள்கூட ஓரளவுக்கு ஒப்புக்கொள்ளக் கூடிய இந்த அம்சங்களை, யக்ஞ முறையும் பிரமனும் புலப்படுத்துகின்ற னவா? ஆம், புலப்படுத்துகின்றன. எப்படி என்பதை இனிப் பார்ப்போம்.

புராதனக் கம்யூன், அதன் உற்பத்தி முறை அதன் வாழ்வு ஆகியவற்றின் முக்கியமான அம்சங்களாவன :—

— கூட்டுமுறையில் உழைத்து கூட்டுமுறையில் பொருட்

களை உபயோகித்த உறுப்பினர்களைக் கொண்டதாயி ருந்தது.

— தனிச் சொத்துரிமை இருக்கவில்லை.

— தொடக்கத்தில், வேலைப் பிரிவினை ஏற்படவில்லை; ஆனால் பிற்பாடு, பொருளுற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுடன், அது தோன்றியது.

— வர்க்கங்கள் கிடையாது.

— ஸ்தாபனம், தாய் வழி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட கணமாகவிருந்தது; அதன் உறுப்பினர்கள் அனைவரும் இரத்த சம்பந்த உறவினராயிருந்தனர்.

— பிற்காலத்தின் நாகரீகம் அறிந்த முறையில், தனிக் குடும்பமும் திருமண முறையும் ஏற்படவில்லை.

— சகல கம்யூன் உறுப்பினர்களும் சேர்ந்து எல்லாப் பொறுப்பாளர்களையும் தேர்ந்தெடுத்தனர்.

— பொருளுற்பத்தி உறவுகளையோ சொத்துரிமை உறவு களையோ அமல் நடத்துவதற்காக, தனக்கே உரித் தான படைகளையும் போலீஸையும் வரிகளையும் பெற்ற ராஜ்யம் இருக்கவில்லை. எனவே அரசாங்கச் சட்டமோ அதை அமல் நடத்தும் அமைப்போ கிடையாது.

அவை ஏற்படும் பொழுது, கம்யூன் தகர்ந்துவிட்டது; கூட்டு வாழ்வு மறைந்துவிட்டது.

ஹிந்து-ஆரியச் சமுதாயத்தின் பல்வேறு யக்ஞங்களை வர்ணிக்கும்பொழுது, வேத இலக்கியம் தனக்கே உரித்தான முறையில் இந்த அம்சங்கள் அனைத்தையும் குறிப்பிடுகிறது. வேதஸம்ஹிதைகள், பல்வேறு சகாப்தங்களின் குறிப்புக்களும் நினைவும் சேர்ந்த தொகுப்புகளே. தெய்வங்கள் யக்ஞங்களைச் செய்து, யக்ஞங்களிலே, யக்ஞங்கள் மூலமாக வாழ்ந்த பொழுது, அவை முழுவாழ்வையும் தீர்மானித்ததாக வேதஸம்ஹிதைகள் குறிப்பிடுகின்றன. பணக்காரர்களும் அரசர்களுமோ, ஏழைக் குடித்தனக்காரர்களோ, தெய்வங்களைத் திருப்தி செய்வதற்காக வும், தமது நோக்கங்கள் கைகூடுவதற்காகவும் புரோகிதப் பிராம்

மணர்களின் உதவியுடன் செய்த யக்ஞங்களையும்-சடங்குகளாகி விட்ட அந்த யக்ஞங்களையும்-வேத ஸம்ஹிதைகள் குறிப்பிடுகின்றன. உண்மையான பூர்வீக உற்பத்தி முறையான ஆதிக்கால யக்ஞத்தை, பிற்காலச் சடங்குகளிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பது நமது கடமை; செத்தொழிந்து சடங்காகிவிட்ட யக்ஞத்திலிருந்து ஜீவனுடையதாக விருந்த யக்ஞத்தை வேறுபடுத்திப் பார்ப்பது நமது கடமை.

இந்தக் கடமையை வேத இலக்கிய ஞானிகள் ஓரளவுக்குச் சாதித்திருக்கிறார்கள்; ஆனால் சரித்திரத்தில் அந்த ஆதி யக்ஞத்துக்குள்ள ஸ்தானத்தைக் காண்பது அவர்களுக்குக் கஷ்டமாயிருக்கிறது. இயல்பாகவே, தெய்வங்கள் செய்ததென்று கூறப்படுவதும் விளங்காத வகையில் உள்ளதுமான யாகம் சம்பந்தமாகத்தான் அதிகப்பட்சக் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. வேதச் சடங்குகள் முறையாகத் தொகுக்கப்பட்டபொழுது, அந்த யக்ஞம் நடைமுறையில் இல்லை என்று அனுமானிக்கக்கூடிய முறையில், அது வேத இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதனால்தான் அது விளங்கவில்லை. தெளிவு இல்லாத முறையில் குறிப்பிடப்படும் இந்த யக்ஞமே ஸத்ரம், கிரது என்பவையாகும். இந்த ஸத்ரங்கள், கிரதுக்கள் என்பவை என்ன? அவை எப்பொழுது நடைமுறையில் இருந்தன? அவற்றின் அம்சங்கள் என்ன?

தெய்வங்கள் யக்ஞங்களைச் செய்தபொழுது, ஸத்ரங்களும் கிரதுக்களும் பூர்ண மலர்ச்சி பெற்றிருந்தன. பிற்கால ஆரியர்கள், அபூர்வமாகவே அம்மாதிரி யாகங்களைச் செய்தனர்; ஆனால் அவர்கள் இந்த ஆதிக்கால யக்ஞத்திலிருந்தே, தமது யாகங்களை தொடர்ந்து உருவாக்கிக் கொண்டனர். ஆரியர்களுடைய புராணங்களில், அவர்களுடைய பூர்வீக முன்னோர்களும், உருவகப் படுத்தப்பட்ட இயற்கை நிகழ்ச்சிகளுமே தெய்வங்களாக வர்ணிக்கப்பட்டுள்ளன. அந்த இருவகைத் தெய்வங்களை ஏறக்குறைய வெவ்வேறாகப் பாகுபடுத்திப் புரிந்துகொள்ள முடியும். தெய்வங்கள் செய்த ஸத்ர யாகம், ஆதிக்கால ஆரியர்களின் கூட்டு உழைப்பு முறையாகும்.

ஸத்ரத்தின் தலைசிறந்த அம்சம் என்னவெனில், அதில் பங்கெடுப்பவர் அனைவருமே ரித்விக்குகளாகவும் எஜமானர்களாக

வும் இருந்தனர், பிற்காலத்து யக்ஞச் சடங்கில், யக்ஞத்தைச் செய்கிற ரித்துவிக்குக்கள் பல ரகத்தினராக வகைப்படுத்தப்பட்டனர்; அவர்களை, யக்ஞச் செலவுகளைச் செய்த எஜமானர் அமர்த்தினர். ஸத்ரத்தில் அப்படியில்லை. அது, ஆதியில் ஏற்பட்ட ஒரு கூட்டுச்செயல் முறையாகும்; அதில் வேலைப் பிரிவினையோ, வேறுபாடோ இல்லாமல், எல்லோரும் கூட்டு உழைப்பில் பங்கெடுத்துக்கொண்டார்கள். பிற்கால ஆரியச் சமூகத்தில் பதினேழு வகைப்பட்டவர்களான ரித்துவிக்குகளுக்கிடையே வேலைப் பிரிவினை ஏற்பட்டிருந்த மாதிரி, அந்த ஆரம்பக் காலத்தில் இல்லை.

பிற்கால யாகங்களிலிருந்து வேறுபட்ட முறையில் ஸத்ரத்தில் உள்ள இரண்டாவது விசேஷ அம்சம் என்னவெனில், உழைப்பின் பலனாகிய யக்ஞ பலன் ஒரு பொதுப் பொருளாக விருந்தது. அது ஒவ்வொருவருக்கும் சமமாக வினியோகிக்கப்பட்டது; எல்லோரும் அதைக் கூட்டாக உபயோகித்தனர்; ஒரே சட்டியிலிருந்து சோமரஸத்தைக் குடிப்பதாகவுள்ள ஸமக்யா சடங்கு, இந்தச் செயல் முறைக்குச் சங்கேதமாக விளங்குகிறது. சோமயாக யக்ஞத்தின் அக்னிஷ்டோமத்தில் செய்யப்படும் இந்த ஸமக்யா வேறு எந்த யக்ஞத்திலும் செய்யப்படுவதில்லை; எனவே ஸத்ரத்தில் அதற்கு ஆழ்ந்த விசேஷப் பொருள் இருக்கிறது.

மூன்றாவது விசேஷ அம்சம் என்னவெனில், ஸத்ரத்தில் பங்கெடுப்பவர்கள் அனைவரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்; அதாவது, அவர்கள் ரத்த சம்பந்தமுள்ள சுற்றத்தார். இதன் அர்த்தம் என்னவெனில், கம்யூன் உறுப்பினர்கள் அனைவரும் உறவினர்களாக யிருந்தார்கள்; உறவினராக இல்லாதவர் ஒருவர்கூட அதில் இல்லை. கூட்டு ஸத்ர உழைப்பு அல்லது சமூகக் கடமையை செய்யத் தொடங்குவதற்கு முன்னால், எல்லோரும் தமது கரங்களை ஒன்றாகக் குவித்துக்கொண்டு, சபதம் செய்து கொண்டனர்; இறுதிவரை பிழையில்லாமல், ஏகமனதாக ஒத்துழைப்போமென்று பிரதிக்ஞை செய்துகொண்டனர். அதுவே தானூனபத்ர பிரசார் எனப்படுகிறது.

உழைப்பு நிகழ்ச்சியைத் திட்டப்படி ஒரு முகப்படுத்தி வழி காட்டுவதற்காக, ஒருவரை ஒதுக்குவது, ஒவ்வொரு சமுதாய

உழைப்புக்கும் தேவையாயிருக்கிறது. எனவே, வேலை பலதரப் பட்டதாக ஆகும்பொழுது, உற்பத்திச் சக்திகள் வளரும்பொழுது, தற்காலிகமான பொறுப்பாளர் ஸ்தானங்களுக்கு சிலர் தேர்ந் தெடுக்கப்பட்டனர். இதிலிருந்தே பொறுக்கி எடுக்கும் முறை, தேர்ந்தெடுக்கும் முறை, பிரவரணவிதி, தோன்றியது. வேலை முடிந்தவுடன், பொறுப்பாளர்கள் கம்யூன் பொதுவாழ்வில் இரண் டறக் கலந்துவிடுவார்கள். இது நான்காவது அம்சம்.

ஐந்தாவது அம்சம் என்னவெனில், ஸத்ரயக்ஞம் அல்லது ஸத்ரா உழைப்பில், ஆண்களோடு பெண்களும் பங்கெடுத்தார் கள்; பிற்கால யாகங்களில் அம்மாதிரி இல்லை.

ஸத்ர உழைப்பு அல்லது ஸத்ர யக்ஞத்தின் இந்த விசேஷ அம்சங்கள் அனைத்தும், ஆதிக்கால ஆரியர்கள் மத்தியில் பூர்வீகக் கம்யூன் இருந்ததைக் காட்டுகின்றன.

சூத்திரங்களில் உள்ள பிற்கால வேதமரபில், தனிப்பட்ட குடித்தனக்காரர்கள் செய்த யாகங்களைப்பற்றி ஏராளமாகப் படிக் கிறோம். ஸத்ர யாகங்களும் அப்படிப்பட்டவையாகவிருக்க முடி யாதா என்று சில வேத அறிஞர்கள் கேட்கலாம். அவ்வாறு இருக்க முடியாதென்பதை மேற்சொன்ன குணம்சங்கள் மெய்ப் பிக்கின்றன. முதலாவது, மூன்றாவது, நான்காவது. ஐந்தாவது அம்சங்களை தனிப்பட்ட குடித்தனக்காரரின் யக்ஞத்தில் ஒரு பொழுதும் காணமுடியாது.

விசேஷமான சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த விசேஷமான கொண்டாட்டமாக ஸத்ர யக்ஞம் இருந்திருக்கக் கூடாதா என்று சிலர் கேட்கலாம். "வட துருவப் பிரதேசப் பிறப்பகமும் வேதங் களும்" என்ற நூலில், இந்த ஸத்ரங்கள் விஷயமாக ஓரளவு கவனஞ் செலுத்திய திலகர், மிகப் புராதனமான யக்ஞமாக அவற் றைக் கருதினர்; ஆரியர்கள், சிலபல நாட்களும் மாதங்களும் தொடர்ச்சியாக தினசரி யக்ஞங்களைச் செய்ததற்குக் கூட்டுப் பெயராக அது விளங்கியதென்று அவர் அபிப்பிராயப்பட்டார். ஸத்ரங்களை பூர்வீகக் கம்யூனின் கூட்டு வாழ்க்கை முறையென்று திலகர் குறிப்பிடவில்லை. ஆனல் யக்ஞம் விஷயமாக ஏதாவ தொரு சமுதாயப் பார்வைகொண்ட வேத அறிஞர்களில் அநேக

மாக எல்லோருடைய விவாதங்களிலிருந்துமே தெளிவுபடுவது என்னவெனில், கம்யூன் தன் வாழ்க்கையையும் புனர் உற்பத்தியையும் நடத்துவதற்காக தினந்தோறும் செய்த பணிகளின் தொகையே ஸத்ரம் என்பதாகும். அதனால்தான், சமஸ்கிருத மொழியில் ஸத்ர என்பது "ஒரே சமயத்தில்", "சேர்க்கை", "கூட்டுறவு" என்ற அர்த்தத்தைக் குறிப்பதாயிற்று.

திரிராத்ரக்ரது என்ற புகழ்பெற்ற யாகத்தை எடுத்துக் கொள்வோம். அந்த யக்ஞத்தைச் செய்வதன் மூலம், தெய்வங்கள் பெருஞ் செல்வத்தைப் பெற்றனர். ஆதிக்கால ஆரியர்கள் தமது கால்நடைச் செல்வத்தை எப்படி உற்பத்தி செய்து வளர்த்தார்களென்பதை இந்தக் கிரது நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அது எப்படித் தோன்றியது, அதன் முறை என்ன என்பனவற்றை அதன் யாகக் கதை நமக்குக் கூறுகிறது. மூன்று கிரதுக்கள் ஒன்ருகச் சேர்க்கப்பட்டு, கூட்டாகச் செய்யப்படுவதே திரிராத்ரக்ரதுவின் விசேஷ அம்சம். அதன் உதயம் பற்றிய கதை பின்வருமாறு:—தெய்வங்கள் மத்தியில், வசுகணம், ருத்திரகணம், ஆதித்யகணம் ஆகிய மூன்று தேவகணங்கள் இருந்தன. இந்தக் கூட்டுத் தொகுதிகளை பிரஜா பதி படைத்தார். இந்தக் கூட்டுத் தொகுதிகளை கணம் என்றும் சங்கம் என்றும் யாகக் கதை குறிப்பிடுகிறது. ஒவ்வொன்றுக்கும் ஒரு அக்கினியைக் கொடுத்து, அதைத் தொழுமாறு அவர்களிடம் கூறினர். அவை மூன்றும் கூட்டாக ஓராண்டுக்கு அக்கினியைத் தொழுது, ஒரு பசுவை உற்பத்தி செய்தன. அவர்களுடைய பெரு முயற்சிகளைக் கண்டு பிரஜாபதி திருப்தி யடைந்தார்; அந்தப் பசுவை வஸுகணத்திடம் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்கும்படிக் கூறினர். அவர்கள் அந்தப் பசுவிலிருந்து 333 பசுக்களை உற்பத்தி செய்தனர். பிறகு பிரஜாபதி முதல் பசுவை வசுவிடமிருந்து பெற்று ருத்ர கணத்தினரிடம் கொடுக்க அவர்களும் 333 பசுக்களை உற்பத்தி செய்தனர். அதே மாதிரி ஆதித்யர்களும் செய்தனர். பிறகு மூன்று கணங்களும் தாம் உற்பத்தி செய்த 999 பசுக்களையும் முதல் பசுவையும் சேர்த்து, யாகம் செய்து, 1000 பசுக்களையும் தட்சிணையாகக் கொடுத்தனர். இந்தத் தட்சிணையைத்தான் பிற்கால விமர்சகர்கள் இனும் என்று அர்த்தப்படுத்துகின்றனர்.

ஆரியக் கணங்களின் ஆதிக் கால கூட்டு உற்பத்தி முறையின் முக்கிய அம்சங்களை இந்த யாகக் கதை தெட்டத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. முதலாவதாக, கிரது யாகத்தைச் செய்தவர்கள் கண சங்கத்தில் வாழ்ந்த தெய்வங்களாகும்; அதாவது பூர்வீகமான ஜன நாயகக் கம்யூன் ஸ்தாபனத்தில் வாழ்ந்த தெய்வங்களாகும். இரண்டாவதாக மூன்று அக்கினிகளின் கூட்டு முயற்சிகள் அனைத்தும் ஒரு பசுவையே அளிக்கின்றன; வினையின் பயனை தனிப்பட்டவர்களுக்கு வினியோகிப்பதோ தனி உடமையாக்குவதோ அசாத்தியமென்பதை இது கோடிட்டுக் காட்டுகிறது. கதை கூறுவது மாதிரி, அந்த ஒரு பசு கூடுதலான செல்வத்துக்கு ஆதாரமாயிருக்க வேண்டுமானல், அதை மூன்று கணங்களுக்கும் பகிர்ந்து கொடுக்க முடியாது. மூன்ருவதாக, அந்த ஒரு பசுவை மூன்று கணங்களும் ஒன்றன் பின் ஒன்ருகப் பெற்றிருந்தனவென்றும் உற்பத்தியாகும் பசுக்களின் எண்ணிக்கை மூன்று கணங்களிலும் சமமாக இருந்தன என்றும் குறிப்பிடுவதன் மூலமும், வினைப்பயன் ஒரு வகையான சமப் பங்கீடு செய்யப்பட்டதாக உணர்த்தப்படுகிறது. நான்காவதாக, செல்வ உற்பத்தி முழுமையும் மூன்று கணங்களின் கூட்டுத் தொகுதிகளிலும் ஒன்ருகக் குவிக்கப்பட்டு, கூட்டாக உபயோகிக்கப்படுகிறது; அதுவே யக்ஞம். ஆதிக்கால கூட்டு யக்ஞத்தின் உற்பத்தி வினியோக முறையை இதைவிடத் தெளிவாக வர்ணிக்க முடியாது.

யக்ஞ முறைப்படி, கம்யூன் முழுமையும் எவ்வகைப்பட்ட அன்ருட உழைப்பைச் செய்ததென்று இப்பொழுது பார்ப்போம். ஸோம யாகத்தின் அக்கினி ஷ்டோமத்திலிருந்தும் ஷடங்க்ரதுவிலிருந்தும் தேவஸத்ரத்திலிருந்தும் ஸத்ர உழைப்பின் பிரதான நடவடிக்கைகளை சுலபமாகப் பிரித்தெடுக்கலாம்.

பாலினீஷிய பூர்வ குடிகள் மத்தியிலும், இன்றுகூட இந்தியக் கிராமங்களிலும் காணப்படும் குடிசைகள் அடங்கிய குப்பங்கள் மாதிரி, பூர்வீகக் கம்யூன் மிகச் சிறிய தொகுதியாகவிருந்தது. கல்லடைப்புகளுக்குள் கால்நடைகள் பிரத்தியேகமாக பாது காக்கப்பட்டன. சில சமயங்களில் குப்பங்களைச் சுற்றிலுமே கல்லடைப்புகள் நிறுவப்பட்டிருந்தன. அவற்றுக்கு அஷ்மவிரஜா

எனப் பெயர் ; பண்டைக் கால ஐரோப்பாவிலும் இம்மாதிரி கல்லடைப்புகள் இருந்தன. சமித்துக்கள் என்ற விறகுக் குச்சிகளால் எரிந்த நடு நாயகமான அக்கினியே வாழ்வின் மையமாக விருந்தது. 48 அடி நீளம், 36 அடி அகலம்கொண்ட நீண்ட சதுரமானதும் மரத்தால் செய்ததுமான பீடத்தில் இந்த அக்கினி இருந்தது. அதுவே கம்யூனின் பொதுவான சமையலறையாகவும் இருந்தது ; அந்தப் பொது வீட்டில் பால், தயிர், நெய், தானியம் முதலிய பண்டங்கள் பானைகளில் வைக்கப்பட்டிருந்தன. ஸோமக் கொடிகளை சேமித்து வைக்கவும், ஸோமரஸத்தைப் புளித்துப் பொங்கும்படி செய்யவும், ஸோமரசத்தைக் குடிப்பதற்காகச் செய்யப்பட்ட பிரத்தியேகமான பானைகளான ஹிரஹாக்ந்களை வைத்திருக்கவும், ஒரு தனிக் கட்டிடம் நிறுவப்பட்டிருந்தது. அதுவே கம்யூனின் சோமரஸ உற்பத்திச் சாலையாகும். எல்லோரும் கூடுவதற்கான பொது இடம் தனியாக ஒதுக்கப்பட்டிருந்தது. அண்மையிலிருந்து மண்ணைக் கொண்டுவந்து, கூட்டம் கூடும் இடத்தில் ஆசனங்களை அமைத்திருந்தனர் ; அவற்றின் மீது புல் பரப்பி யிருந்தனர். மஹாவேதி (யாகமேடை) எனப்பட்ட இந்த நாற்கோண வடிவ மைதானத்தில், அன்ருடம் கூட்டாக உழைக்கவும், அக்கினிக் கடவுளின் அருளால் கிடைத்ததை உண்டு இன்புறுவதற்கும் எல்லோரும் கூடினுர்கள்.

அந்த மைதானம் அதற்குரித்தான அம்சங்கள் அனைத்துடன்கூட, கிழக்கு மேற்கில் 108 அடி நீளமும், கீழைய முனையில் தெற்கு வடக்காக 72 அடி அகலமும், மேல் முனையில் தெற்கு வடக்காக 90 அடி அகலமும்கொண்ட நாற்கோண வடிவமாக விருந்தது ; எனவே, கம்யூன் உறுப்பினர்கள் அந்த அளவுக்கு அதிகமாக இருந்திருக்க வேண்டும். அருகில், குப்பை கூளங்களைக் கொட்டுவதற்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

தெய்வங்களையும் மனிதர்களையும் ஒன்று கூடும்படி அழைப்பது ஹோதர், அதிகாலையில் ஆற்றவேண்டிய கடமையாகும். பிறகு வேலைகள் பிரித்துக் கொடுக்கப்பட்டன. சோமக் கொடிகளைக் கொண்டுவந்து அரைத்து ரஸம் பிழிவதற்காகச் சிலர் சென்றனர். ஆசனங்களைச் செய்யவும், 'ஆடைகளை'யும் குல்லாய்களையும் பின்னுவதற்கும், கால்நடைகளைக் கட்டிப் போடுவதற்கான

கயிறுகளைத் திரிப்பதற்கும், வீடுகளுக்கு கூரை வேய்வதற்கும் தேவையான புல் வகைகளை (நாணல் கோரை முதலியன. மொ-ர்)க் கொண்டுவரச் சென்றனர் சிலர். துஹிதா எனப்பட்டவர்கள் பசுக்களிடமிருந்தும் ஆடுகளிடமிருந்தும் பால் கறந்தனர். ஷமிதா எனப்பட்டவர்கள் பிராணியை வெட்டி, தோல் உரித்து, நெருப்பில் சமைத்தனர். மரத்தால் செய்த உரல்களிலும் கற்கள் மீதும் தானியத்தை இடித்தனர் சிலர். அரைவு எந்திரம் அப்பொழுது கண்டு பிடிக்கப்படவில்லை. பாண்டங்களை மண்ணிலிருந்து செய்தார்கள். தாது மண்களைக் காய்ச்சும் கலை அப்பொழுது கண்டுபிடிக்கப்படவில்லை. கம்பு, மரம் அல்லது புல்லிலிருந்து கூடைகளை முடைந்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட கிருஹபதி, ஆண்களும் பெண்களும் தத்தம் கடமைகளைச் செய்வதற்கு வழிகாட்டினர். கிரியைகளின் பல்வேறு அத்வரியுக்கள், கருமங்களை செவ்வனே செய்வதற்கு வழி காட்டியதுடன் நேரடியாக உழைப்பில் கலந்து கொண்டனர். பிரம்மா மேற்பார்வை செய்து, எவையேனும் குற்றங் குறைபாடுகள் நேர்ந்தால் சுட்டிக் காட்டினர். அவர்களுக்கு உற்சாகமூட்டுவதற்காகவும், ஒவ்வொரு வகைப்பட்ட கூட்டு உழைப்புக்கும் தேவையாயுள்ள காலப் பிரமாணத்தில் உதவி செய்வதற்காகவும், உத்காதர் கானங்களை இசைப்பதில் தலைமை தாங்கினர். உழைப்பு சுளுவானதாகவில்லை, சுவையற்றதாகவுமில்லை. மாவு அரைப்பதற்கு எந்திரம் கிடையாதென்றால், குதிரையின் விலா எலும்புகளைக் கூராக்கிப் புல் அறுக்க வேண்டுமானால், உழைப்பு எவ்வளவு கடினமாய் இருந்திருக்க வேண்டுமென்பதை உணரலாம். உலோகங்களை உருக்கும் கலை கண்டுபிடிக்கப்படவில்லை; அதனால் குத்துவாளைக் கொண்டு பிராணியைக் கொல்ல முடியாது; கத்தியைக் கொண்டு அதன் தோலை உரிக்க முடியாது. எனவே, பிராணியை தடியால் அடித்துக் கொல்லவேண்டும்; அல்லது பிராணியைக் கட்டிப் பிடித்து மூச்சுவிட முடியாமல் அடக்கிக் கொல்ல வேண்டும். பிராணியைக் கொன்ற பின், எலும்புகளால் அதன் தோலை உரிக்க வேண்டும். பொருளுற்பத்திக் கருவிகள் எவ்வளவு பிற்பட்டிருந்தனவென்பதையும் அதனால் யக்ஞ உழைப்பு எவ்வளவு பிற்பட்டதா யிருந்த தென்பதையும் அது சுட்டிக் காட்டுகிறது.

தர்மத்தின் நியதிப்படி, உற்பத்தியான தனைத்தும் யாக மேடைக்குக் கொண்டு வரப்பட்டு, அங்கு நேரடியாக உபயோகிக்கப்பட்டது. தெய்வங்களுக்கும் பிதுருக்களுக்கும் (இறந்துவிட்ட முன்னோர்கள்) அவர்களுடைய பங்கைக் கொடுத்தபின் (அதற்கு ஹவிஸ் என்று பெயர்; அது இல்லாமல் அவர்கள் உயிர்வாழ முடியாது.—இது மனிதர்கள் செய்த யாகத்துக்கே பொருந்தும்.) மிச்சமிருப்பது-ஹுதசேஷம்-கம்யூன் உறுப்பினர்களுடைய உபயோகத்துக்கு ஒதுக்கப்பட்டது. தினசரி ஹவனம் என்பது கூட்டாக உற்பத்தி செய்த உணவை கம்யூன் முழுமைக்கும் வினியோகிக்கும் முறையேயாகும்; எனவே, ஹவனமும் யக்ஞத்தின் பகுதியே.

வேலை முழுவதுமே களிப்பூட்டும் சோமபானத்தைக் குடிப்பதுடன் தொடங்கியது; இடையிடையேயும் அவர்கள் சோமபானத்தைக் குடித்து உற்சாகம் பெற்றனர். அதற்கு உதவியாக, வறுத்த மாவில் செய்த அடையையும் பால் தயிருடன் கலந்த பார்லி பொறியையும் வறுத்த அரிசியையும் உண்டனர். நாளின் வளமான இன்பமான உணவு, இறைச்சி விருந்தாகும். ஆரியன் இந்த விஷயத்தில் எத்தகைய சந்தேகத்துக்கும் இடங்கொடுக்கவில்லை. அவன் எந்த உயிர்ப்பொருளையும் புறக்கணிக்கவில்லை. வெள்ளாடு, செம்மறியாடு, மான் ஆகியவற்றின் இறைச்சி அவனுக்கு சகஜமான உணவாகவிருந்தது. காளை, பசு ஆகியவற்றின் இறைச்சியும் உணவாகக் கொள்ளப்பட்டன; ஆனல் அவை அருமையாக விருந்ததால், அவற்றை அடிக்கடி உண்ண முடியவில்லை. நன்கு உண்டு குடித்துவிட்டு, ஆதிக் காலத்து ஆண்களும் பெண்களும் எவ்வகை பேதா பேதமும் பாராமல், அக்கினியைச் சுற்றி இஷ்டப்படிக் கூடி உறங்கினர்; கம்யூன் இல்லத்திலேயே ஜதைக் குடும்பம் உருப்பெற்ற பிற்காலத்தில், அவர்கள் தத்தம் கருத்துக்கிசைந்த ஜோடியுடன் தத்தம் குடிசைகளுக்குச் சென்றனர். மனிதன் இன்புற்றிருந்தான்; அக்கினியும் இன்புற்றிருந்தது. இவ்வாறு பிரமன் என்ற கம்யூன் வாழ்ந்தது, —உழைத்தது, இன்புற்றது, இனத்தைப் பெருக்கியது.

யக்ஞம், பிரமன், வேதம்

யஜ்ஞ[1] என்ற சொல்லின் பொருளையும் அந்தச் சொல் எப்படி உருப்பெற்றது என்பதையும் இங்கு ஆராய்வது பொருத்தமாயிருக்கும், யஜ்ஞ என்பது ஒரு தனிச் சொல் அல்ல; அது ஒரு வாக்கியமாகும்; ய, ஜ, ஞ என்ற சொற்களால் ஆன வாக்கியமாகும். யஜ் என்ற மூலத்துக்கு "போக, சேகரிக்க" என்பது பொருளாகும்; ஜ என்ருல் 'உண்டாக்குக' என்பது பொருளாகும். ஞ, அவ், அந்த் ஆகியவை வினைச் சொல்லின் படர்க்கைப் பன்மையைக் குறிக்கும் விகுதியாகும். ஆக, இந்தச் சொற்களைச் சேர்த்தால், "அவர்கள் ஒன்று கூடி உண்டாக்குகிருர்கள்" என்பதாக வாக்கியம் பொருள்படும். எதை உண்டாக்குகிருர்கள்? பொருட்களையும் குழந்தைகளையும் உண்டாக்குகிருர்கள். அதைப் போலவே, 'யஜுர்' வேதம் என்பதில் உள்ள யஜுஸ் அல்லது யஜுர் ஒரு வாக்கியமாகும். யஜ் என்பதையும் உஸ் அல்லது உர் என்பதையும் கொண்டது. இந்த 'உர்' என்பதும் படர்க்கைப் பன்மையைக் குறிக்கும் விகுதியாகும்; எனவே, யஜுர் என்பதின் பொருளும் "அவர்கள் ஒன்றுகூடி உண்டாக்குகிருர்கள்" என்பதாகும். பிற்பாடு, அந்த வாக்கியம், பொருட்களையும் மனிதர்களையும், கூட்டாக உற்பத்தி செய்யும் ஸ்தாபன முறையான யஜ்ஞ என்ற பெயர்ச்சொல்லாயிற்று; இந்த முறையின் அறிவே வேதம் ஆகும்.

ஆக, யக்ஞம் (வட மொழியில் யஜ்ஞ) பண்டைக் கால ஆரியனின் கூட்டு உற்பத்தி முறையாக, அவன் தனி உடைமையையும் வர்க்கங்களையும் அரசையும் உருவாக்குவதற்குமுன் விளங்கியது. அவை உருப்பெற்றவுடன், பழைய ஸத்ரமும் கிரதுவும் இல்லாதொழிந்தன; அதன்பின், யக்ஞம் ஒரு சடங்காக, ஒரு தொழுகை

1 யஜ்ஞ என்பது சமஸ்கிருதச் சொல். அதையே யக்ஞம் என்று தமிழில் சொல்கிருேம். யாகம், வேள்வி என்ற தமிழ்ச் சொற்களும் யக்ஞத்தையே குறிக்கும். (மொ-ர்).

முறையாக, ஒரு சமுதாய நினைவாக மிஞ்சியிருக்கிறது. ஆரியர்களுடைய சமூகம், யக்ஞமுறை இருந்தபொழுதே சுபீட்சமாயிருந்தது; யக்ஞத்திலிருந்தும் பூர்வீகக் கம்யூனிலிருந்தும்தான் பிற்கால வர்க்கங்களையும் சாதிகளையும் கொண்ட சமுதாயம் பிறந்தது. எனவே பிற்கால ஆரியர்கள், யக்ஞத்திடமுள்ள நம்பிக்கையை பாரம்பரிய சம்பத்தாகப் பெற்றனர். சமுதாய உண்மையும் அதன் சித்தாந்தம், நம்பிக்கைகள் அனைத்தும் சமுதாயத்தின் பாரம்பரிய சம்பத்தில் ஒரு பகுதியாகி விட்டன. எனவே, யதார்த்த உண்மை மறைந்தபின், அதன் சித்தாந்தம் ஒரு சடங்காக எஞ்சி நின்றது; புதிய சமுதாய அமைப்பிலும் பொருளாதாரத்திலும் மக்களைச் சுரண்டி வாழ்ந்த புதிய வர்க்கங்கள், மக்கள் மீதுள்ள தமது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அந்த சித்தாந்தத்தைப் பயன்படுத்திக் கொண்டன; அந்தச் சடங்கையும், மிஞ்சி நின்ற நம்பிக்கையையும் ஒரு கருவியாகக் கொண்டன. பூர்வீக ஆரியர்களின் குறிப்பிட்ட யக்ஞ நிகழ்ச்சியை, பிசகற்ற முறையில், தடம் வழுவாமல் பின்பற்றிச் சடங்கு செய்தால், அதே சுபீட்ச விளைவுகள் ஏற்படுமென்று மக்கள் நம்பும்படி செய்தனர். யாகச் சடங்கு, யாக உண்மையின் பிரதியாக ஆயிற்று. இது எப்படி நிகழ்ந்தது என்பதைப் பின்னர் பார்ப்போம். ஆனால் இங்கு வலியுறுத்த வேண்டிய விஷயம் என்னவெனில், வேதத்தைப் பயின்ற சகல அறிஞர்களும், ஐரோப்பியர்களும் இந்தியர்களும், ஆரியர்களின் ஆதிக்கால வாழ்க்கை நிலைமைகளை யாகச் சடங்கின் சில பகுதிகள் வெளிப்படுத்துவதாகக் கூறியபோதிலும்,[1] அவர்களால் ஸத்ரங்களையும் கிரதுக்களையும்பற்றி விளக்கம் தர முடியவில்லை; பிற்காலச் சடங்குகளில் காணப்படும் ஆரியரின் அலாதியான

---

1 ஆரியர்கள் இடம்விட்டு இடம் சென்று கொண்டிருந்ததை ஸோம யாகம் எடுத்துக் காட்டுவதை நிருபிக்க, குண்டே ஒரு முழு அத்தியாயத்தை எழுதியிருக்கிறார். இன்றைய யாகச் சடங்கில், அக்கினியின் மேடை நான்கு சக்கரங்களைக்கொண்ட அமைப்பில் நிறுவப்படுவதையும், பலி கொடுப்பதற்கு முன், பலி கொடுக்க விருக்கும் பிராணிகளைக் கட்டும் கம்பத்தைத் தரையில் ஊன்றுமல், நிலை கொள்ளவும் இயங்கவும் வசதியாக பரந்த அடிக்கட்டைமீது அமைக்கப் படுவதையும் பெரிய ருசுக்களாகக் காட்டுகிறார்!

வாழ்வை விளக்க முடியவில்லை ; கோத்திரங்களும் பிரவரங்களும் (இவற்றைப்பற்றி நாம் பின்னர் எழுதுவோம்.) பற்றிய குழப்பம் போன்ற யக்ஜ முறை சம்பந்தமான வேறு பல விஷயங்களை விளக்க முடியவில்லை. இவ்வாறு அவர்கள் தவறியதற்குக் காரணம் என்ன ? யாகம் என்பது, சாராம்சத்தில், தெய்வங்களையும் தெய்வங்களாக்கப்பட்ட இயற்கை சக்திகளையும் தொழும் முறையென்றும், அதன் சில பகுதிகளே, சில சமுதாய நடவடிக்கைகளையும் நிலைமைகளையும் குறிக்கின்றனவென்றும் அவர்கள் கருதியதே இதற்குக் காரணமாகும். புல் அறுப்பதற்கு எலும்பும், தானியத்தை அரைப்பதற்குக் கல்லும் பயன்பட்டன வென்ருல், அந்தக் காலத்தில் இரும்புக் கத்தியோ அரைக்கும் எந்திரமோ இருந்ததில்லையென்று முடிவு செய்கிருர்கள். இது ஒன்றுதான் அந்த அறிஞர்கள் காணும் ' சமுதாயப் பொருள் கொண்ட ' முடிவு. இந்த முறையில், யக்ஞத்தையும், ஆரியன் மீது அதற்கு இருந்த பிடிப்பையும், யக்ஞமே வாழ்வுக்கும் செல்வத்துக்கும் தோற்றுவாய் என்ற அவன் கருத்தையும், அவனுடைய முழு வாழ்வும் சிந்தனை முழுமையும் வேறு எதற்கும் இடங்கொடாமல் யக்ஞமயமாயிருந்ததையும், விளக்கமுடியாது ; அநாகரீகக் காலத்து ஆரியன், இவ்விதமாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளில் நம்பிக்கை வைத்திருந்தானென்று கூறுவதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாது. எலும்புகளாலும் கற்களாலும் கருவிகள் செய்யப்பட்டதாலும் அண்மையில் நெருப்பும் பிராணிகளைப் பழக்குவதும் கண்டுபிடிக்கப்பட்டதாலும், ஒரு சமுதாயப் புரட்சி உண்டாகி ஒரு புதிய கூட்டு உற்பத்தி முறையை மனிதன் உருவாக்கினன் என்பதையும், இந்த இரண்டு கண்டுபிடிப்புகளும் கம்யூனை ஆழ்ந்த முறையில் பாதித்தனவென்பதையும் அதனுல்தான், இயற்கையாகவே மனிதன் அதன் சித்தாந்தத்தில் மூழ்கியிருந்தான் என்பதையும் நமது வேதக் கால சரித்திரக்காரர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. யக்ஞம் என்பதை ஒரு பொருளுற்பத்தி முறையாக எடுத்துக்கொண்டால்தான் ஆரியனின் ஆதிக்கால வரலாற்றின் பொருள் நமக்கு விளங்கும். காட்டு மனிதனுக வாழ்ந்த நிலையிலிருந்து அநாகரீக நிலைக்கும், அதிலிருந்து நாகரீக நிலைக்கும் மனிதன் வளர்ந்த வரலாறு, அற்புதங்களைப்பற்றிய மடமையுடன்

கலந்திருந்த போதிலும், அர்த்த புஷ்டியுள்ளதாகவும் இருக்கிறது. கற்பனையின் கட்டுக் கதைகளையும் தொழுகைச் சடங்குகளையும் மாத்திரம் வைத்துக்கொண்டு சமுதாய வாழ்வை நிர்மாணிக்க முடியாது.

நமது அறிஞர்களுக்குப் புதிராயுள்ள இன்னொரு விஷயம், 'பிரமன்' என்பதாகும். யக்ஞ நிகழ்ச்சியிலும், படைப்பையும் சமுதாய வளர்ச்சியையும் பற்றிய கதைகளிலும், 'பிரமன்' திரும்பத் திரும்ப வருகிறது; ஆனால் சரித்திரக்காரர்கள் கையில் சிக்க அது மறுக்கிறது; அது என்னவென்றே அவர்களுக்குப் பிடிபடவில்லை.

வேதக்கால ஆரியனின் பிரமன், உபநிஷதங்களின் தத்துவ ஞானிகளுடைய பிரமனிலிருந்து முற்றிலும் வேறுபட்டதென்பதை அவர்கள் நன்கறிந்திருக்கிறார்கள். வேதக்காலத்தின் அநாகரீக ஆரியன் பூர்வீகக் கம்யூனில் வாழ்ந்தான்; அப்பொழுது சமுதாய முரண்பாடுகள், வர்க்கப் போராட்டங்கள், சுரண்டல் ஆகியவை அவனை எதிர்நோக்கவில்லை. அந்த நிலையிலிருந்த அவன், உபநிஷதங்கள் உருப்பெற்ற பிற்காலத்தின் கருத்து முதல் வாதத் தத்துவத்துக்கும் பாசாங்குக்கும் வெகு தொலைவில் இருந்தான். உபனிஷதக் காலத்து பிரமன் ஆதிமூலமான அறிவு அல்லது உணர்வு அல்லது ஆத்மாவாக உள்ளது; உலகம் அதன் வெளிப்படையான தோற்றமாக உள்ளது. அந்தப் பிரமன் நிர்க்குணமானது; அதாவது எத்தகைய குணமும் அதற்குக் கிடையாது. ஆனால் வேதக்காலப் பிரமனே கண்கூடான மெய்ப்பொருளாகும்; மனிதனுடைய பௌதீக முயற்சிகள் மூலமாக இந்தப் பிரமனை அனுபவித்து இன்பம் பெற முடியும். வேதக்காலப் பிரமன் வாழ்வை அனுபவிக்கிறது, சாப்பிடுகிறது, குடிக்கிறது, நடனமாடுகிறது, இன்பம் பெறுகிறது, வளர்கிறது. உபநிஷதக் கால பிரமன் புலன்களுக்கு அப்பாற்பட்டது, அறிவுக்கும் அப்பாற்பட்டது; அதற்கு உணர்ச்சி கிடையாது, ஆவேசம் கிடையாது; அதற்கு உண்பதும் குடிப்பதும் இன்புறுவதும் விலக்காகும்; அந்த விலக்கின் மூலமும் பட்டினி கிடப்பதன் மூலமுமே அந்தப் பிரமனை அணுக முடியும்! சௌக்கியமாக வாழ்ந்து வளர்ந்த

வேதக்கால ஆரியனுக்கு, இல்லாததும் மானசீகமானதும் அர்த்த மற்றதும் உதாசீனமாக இருப்பதும் கேவலமானதுமான பிரமனுல் எத்தகைய பயனும் கிடையாது. வேதக்கால ஆரியனுக்கு, பிரமன் கூட்டுக் கம்யூனிலும் பிரபஞ்சத்திலும் வசித்தான்; எனவே அவனே அந்தப் பிரமனின் ஒரு பாகமாகவிருந்தான். வேதக்கால ஆரியனுக்கு, கம்யூனும் அதன் அங்கத்தினர்களுமே பிரமனுகும்; அநாகரீக நிலேக்கு ஒப்ப, அவன், சந்திரனேயும் வான மண்டலங்களேயும் பூமியையும் அனேத்தையும் கம்யூனேடு இணேத்தான்; அக்கினியுடன் கூடிய கம்யூன் அனேத்துக்கும் நடுநாயகமாக விருந்தது.

வேத அறிஞர்கள் இதை இலக்கியத்திலிருந்து அறிந்திருக்கிருர்கள். ஆனுல் கருத்து முதல் வாத தத்துவத்தின் பிடிப்பிலுள்ள அவர்கள் இந்தப் பிரமனே ஒரு மறை பொருளான விஷயமாக ஆக்க விரும்புகிருர்கள்.

ஹாக், எக்லிங், ஹில்லிபிராண்ட், கேட்கார், திலகர் முதலிய அனேவரும் இந்தப் பிரமனேச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். ஆனுல் அவர்களுக்கும் யக்ஞும் புரியாததைப் போலவே பிரமனும் புரியவில்லே. ஹாக், பிரசித்திபெற்ற உரையாசிரியரான ஸயாணரின் பாஷ்யத்திலிருந்து பிரமனுக்குள்ள சகல அர்த்தங்களேயும் பின்வருமாறு தொகுத்திருக்கிருர் :—

(அ) உணவு அல்லது உணவு நைவேத்தியம்[1]

(ஆ) சாம வேதப் பாடகரின் கானம்.

(இ) மாந்திரீகச் சூத்திரம்.

(ஈ) முறையாகப் பூர்த்தியான அனுஷ்டானங்கள்.

---

[1] இந்த அறிஞர்கள் இதில் ஸாயணரைப் பின்பற்றுவது தவறு. பிரமணஸ்பதியைப் புகழும் ரிக்வேத அத்தியாயத்தில், பிரமன் என்ற சொல்லுக்கு ஸாயணர் உணவு என்று உரை தருகிருர். இது தவறு. ராஜ்வாதே இதை விவாதத்துவிட்டு, இங்கு பிரமன் என்பதின் உண்மைப் பொருள் "உணவுக்கு எஜமானன்" அல்ல "புகழுக்கு எஜமானன்" என்பதும் அல்ல; "பிரமனின் தலேவன்" அதாவது, ரிஷிகள் என்பதே என்று அவர் கூறுகிருர். ராஜ்வாதேக்கும் அப்பால் சென்று, "யக்ஞ கம்யூனின் உறுப்பினர்களுடைய தலேவன்" என்று பிரமன் பொருள் படுவதை நாம் பார்க்க முடியும்.

(உ) கானமும் பலிதானமும்.

(ஊ) ஹோத்ரீ புரோகிதர் ஓதுவது.

(எ) மகத்தான.

இந்த அர்த்தங்களில் ஒன்றுகூட கருத்து முதல் வாதத் தத்துவத்துடன் சம்பந்தமுடையதாக இல்லை; சகல அர்த்தங் களும் கம்யூனுடனும் அதன் நடவடிக்கைகளுடனும் நேரடியாக இணைந்திருக்கின்றன; அல்லது அவற்றிலிருந்து எழுகின்றன. ரிக் வேதத்தில் பிரமன் என்பது புதுமையானதாக, 'இதற்கு முன்பு இருந்திராததாக', 'பெற்றோர்களிடமிருந்து தோன்றியதாக'ப் பேசப்படுகிறதென்று ஹில்லிபிராண்ட் முடிவு செய்கிறார். அது பலி யின் ஒலியுடன் வெடிப்புறத் தோன்றுகிறது; ஸோமரஸம் பிழி யப்படும்பொழுதும், சவனம் என்ற கருமத்தில் பிரார்த்தனைகளை ஓதும்பொழுதும் அது உண்மையில் இருப்புக்கொள்ளத் தொடங்குகிறது. அது தெய்வங்களின் உதவியுடன் போராட் டங்களைக்கூடச் சமாளிக்கிறது. அதன் காவலன் ஸோமனாகும்.[1] இந்த விஷயங்களை ஆதாரமாகக்கொண்டு, பிரமன் சம்பந்தமாக ஹாக் தந்துள்ள அனுமானத்தையும் இலக்கணத்தையும் ஹில்லி பிராண்ட் நியாயப்படுத்துகிறார்; அதாவது, பிரமன் மறை பொரு ளாகவுள்ள ஒரு சக்தியைக் குறிக்கிறதென்றும் பல்வகைச் சடங்கு கள் மூலம் அதை அழைக்க முடியுமென்று கருதப்பட்டதென்றும் ஹாக் அனுமானித்ததையும், பிரார்த்தனைகள், கானங்கள், பலி தானங்கள் ஆகியவற்றின் முறையான ஒத்துழைப்பிலிருந்து பெறக்கூடிய மாந்திரீக சக்தியே பிரமன் என்று அவர் கொடுத்த இலக்கணத்தையும் ஹில்லிபிராண்ட் நியாயப்படுத்துகிறார்.[2]

1ரிக் வேதம்: **VIII 37, 1,, VII 69, 8, VI 23, 5, I 47, 2, VII 22, 9, VI 52-3** முதலியன.

2'தத்துவ வரலாறு' என்ற நூலில், அதன் ஆசிரியர் தாஸ்குப்தா இதை மேற்கோள் காட்டி யிருக்கிறார்.

இங்கு, ஒத்துழைப்பு சம்பந்தமாக மார்க்ஸ் கூறியது கவனிக்கத் தக்கது:—"பல சக்திகள் ஒரே ஒரு சக்தியாக ஐக்கியப்படுவதால் எழும் புதிய சக்தியைத் தவிர, பல தொழில்களில், சமுதாய தொடர்பே சரீர சக்தி களைத் தூண்டிவிட்டு, போட்டி போட்டுக்கொண்டு முன்னேறச் செய்வ தால், ஒவ்வொரு தனிப்பட்ட தொழிலாளியின் திறமையும் பெருகி ஓங்கு கிறது."--(மூலதனம், முதல் பாகம்)

வேதக்கால ஆரியன், கூட்டாக பாடுபட்டுக் கொண்டும் பாடிக்கொண்டும் குடித்துக்கொண்டும் இருந்தபொழுது, அதாவது, யக்ஞத்தில் இருந்தபொழுது, தன் வாழ்வின் ஒவ்வொரு நார் நரம்பிலும் நடவடிக்கையிலும் கம்யூன் இருப்பதை உணர்ந்தான் என்பதையும், அவனுடைய கூட்டு வாழ்வையும் கூட்டு உணர்ச்சியையும் கூட்டு உணர்வையும் சர்வ வியாபகமான பிரமனை வெளியிட்டான் என்பதையும், அந்தப் பிரமன் என்பது கம்யூனே, கம்யூன் அல்லாது வேறென்றுமில்லை என்பதையும் எவரும் புரிந்து கொள்ளமுடியும். அன்றைய கால கட்டத்தில் வாழ்ந்த வேதக்கால ஆரியனுக்கு, அது, யக்ஞத்தின் அழைப்புக்கு இணங்க யக்ஞத்தில் வெடிப்புறத் தோன்றி வசிக்கும் ஒரு மறைபொருளான சக்தியாகவிருந்தது. ஆனல் அது நம்மைக் குழப்புவதற்குக் காரணம் இல்லை.

நெருப்பையும், பிராணிகளைப் பழக்கும் கலையையும் கண்டு பிடித்ததிலிருந்து தோன்றிய யக்ஞத்தால், ஆரியக் கம்யூனுக்குச் செல்வமும் சுபீட்சமும் வளர்ச்சியும் ஏற்பட்டன ; ஆரியக் கம்யூன் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டது. எனவே, ஆரியச் சமூகத்திலுள்ள ஒவ்வொரு அம்சமும், அக்கினியையும் அக்கினியை அடிப்படையாகக் கொண்ட யக்ஞத்தையும் மையமாகக் கொண்டிருந்தது. எனவே பிற்பாடு, ஆரியன் வளர்ச்சியடைந்து, இரும்பைக் காய்ச்சி உருக்கும் யுக்தியைக் கண்டு, அரிவாளைச் செய்தபொழுது, தன் முன்னேர்கள் செய்த முறையில் தெய்வத்தைத் திருப்தி செய்து, தன் முன்னேர்கள் செல்வத்தைப் பெற்ற மாதிரி தானும் செல்வத்தைப் பெறுவதற்காக, தன் சமயச் சடங்கில், தன் முன்னேர்களின் நடவடிக்கைகளை அப்படியே அனுசரித்துச் செய்தான் ; அதே செய்யுட்களைப் பாடினன் ; யக்ஞத்துக்குத் தேவையான புல்லை புதிய இரும்பு அரிவாளால் அறுக்காமல், முன்போல, குதிரையின் விலா எலும்பால் அறுத்தான்- கம்யூன் மறைந்து விட்டது ; அதைப்போலவே விலா எலும்புக் கருவியும் மறைந்து விட்டது. ஆனல் கம்யூனையும் யக்ஞத்தையும் மீண்டும் உற்பத்தி செய்ய முடியாவிட்டாலும், அந்தக் கருமத்தை அடையாள பூர்வமான சடங்காகத் திரும்பச் செய்யமுடியும். மெய்யாகவே இன்

பத்தை அனுபவித்த பழைய கூட்டு வாழ்வுப் பிரமனை உயிர்ப்பிக்க முடியாது; ஆனல் செய்யுட்களைப் பாட முடியும். முன்னல் சமுதாய மெய்ப் பொருளாகவிருந்த யக்ஞம், கற்பனையானதாகி விட்டது; ஆனல் அது உண்மையிலிருந்து தோன்றிய கற்பனை; யக்ஞம், மெய்ப் பொருளாகவிருந்த சமுதாயத்தின் வழித் தோன்றல்கள் பரம்பரை உரிமையாகப் பெற்ற கற்பனை. இந்தப் வழித் தோன்றல்கள், பழைய சித்தாந்தம், பழைய நடைமுறைகள் ஆகியவற்றின் சில மீத மிச்சங்களைக் கைவிடாமலிருந்தனர்; அவர்கள் அந்தச் செய்யுட்களையும் சடங்கையும் விடாப்பிடியாகப் பற்றிக்கொண்டார்கள்; அந்த யக்ஞம் மாதிரி செய்வதன் மூலம் இன்பமும் செல்வமும் பெறலாமென்று அவர்கள் அதிகப் பிரிய மான நம்பிக்கை கொண்டிருந்தார்கள்.

எனவே, கம்யூன் ஏற்பட்டதிலிருந்து அதில் போராட்டங்கள் ஏற்பட்டு அது தகர்ந்தொழிந்த வரையில், ஆரியச் சமூகம் பல் வேறு கட்டங்கள் வழியாக வளர்ந்திருப்பதை வெளிப்படுத்தி, வரலாறு வழியாக வளர்ந்த வேதச் செய்யுட்களை, பிற்கால ஆரியர்கள், ஒன்று சேர்த்தார்கள்; அவற்றைத் தமது சடங்கு விதிகளாக ஆக்கிக் கொண்டார்கள். சமுதாய அமைப்புக்கு ஏற் பட்ட புத்தம் புதிய விதிகளுக்கு, யக்ஞ விதிக்கு நேர் எதிரான புதிய விதிகளுக்கு, அதிகார பூர்வமான ஆதாரமாக அவர்கள் பழைய யக்ஞத்தை மாற்றினார்கள். இது சரித்திர பூர்வமான அவசியமாக நிகழ்ந்தது; அந்த அவசியத்தின் தன்மையை நாம் பிறகு விவாதிப்போம். இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புவது இதுதான் :—உண்மையான யக்ஞ சமூகம் இல்லாது ஒழிந்தபின், வர்க்கப் போராட்டங்களும் முரண்பாடுகளும் ஏற்பட்டபின், பழைய சமூகத்தின் கருப்பைக்குள் புதிய சமூகம் முன்பே பிறந்து கொண்டிருக்கும்பொழுது, அதே சமயத்தில் வர்க்க அரசு இறுதி வெற்றி பெற்றுத் தன் மேலாதிக்கத்தை ஸ்தாபிப்பதற்கு முன்னல், அந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில், இன்றைய வேதஸம்ஹிதைகள் தொகுக்கப்பட்டன.

ஆகவே, அந்தக் கட்டத்தில், வேதஸம்ஹிதைகளே ஒரு சக்தியாகிவிட்டன; அதற்கு முன் அவற்றுக்கு அந்தச் சக்தி

கிடையாது. மெய்யாக யக்ஞத்தில் வாழ்ந்த பூர்வீக ஆரியனுக்கு, புனிதமான வேதம் என்று ஒன்றும் இருக்கவில்லை. அவனே புதிய ரிக்குகள் அல்லது மந்திரங்களைச் சிருஷ்டித்துக் கொண்டிருந்தான்; எப்படியென்றால், அவனுடைய ஆக்கல் பூர்வமான செயல்களும் சொற்களும், அவனுடைய அனுபவத்தை பிறருக்குத் தெரிவிப்பதும், அவனுடைய சொந்தப் பாடல்களும் அவனுடைய சொந்தப் படைப்பாகவிருந்தன; அவற்றில் மறைபொருள் ஒன்றுமில்லை. எனவே 'புதிய செய்யுட்களுடன்' இந்திரனை வழிபட்டு யாகம் செய்தனரென்று ஆதி வேதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். பிற்கால யக்ஞங்களான சடங்குகளில் புதிய செய்யுட்கள் உண்டாகவேயில்லை; ஏற்கனவே உள்ள செய்யுட்களை மாற்றுவது மிகப்பெரிய தர்ம நிந்தையாகக் கருதப்பட்ட காலம் அது. அது இயற்கையே. இந்தப் பழைய செய்யுட்களும் நடைமுறைகளும் வர்க்க சமூகத்துக்குப் புனிதமானவையாக ஆகிவிட்டன; ஆகவே வேதங்கள் சமயச் சடங்கின் மூல நூலாகிவிட்டன; அவற்றில் புதிதாகச் சேர்க்கவும் இடமில்லை, உள்ளதை மாற்றவும் இடம் இல்லை.

செல்வத்தை, மெய்யான பௌதீகச் செல்வத்தை உற்பத்தி செய்வதற்கான கருவியாக, பூர்வீக ஆரியர்களின் யக்ஞத்திலிருந்து பெறப்பட்ட வேதங்கள் பாவிக்கப்பட்டன. "தன் சௌக்கியத்தைப் பூர்த்தியாகப் பெறுவதற்கும் தனக்கு நேரும் கேடுகளை அகற்றிக்கொள்வதற்கும்" தேவையான பொருட்களைப் பெறும் அறிவை மனிதனுக்குக் கொடுக்கும் நூல் என்று பதினான்காவது நூற்றாண்டில் வாழ்ந்த ஸாயணர், வேதங்களுக்கு இலக்கணம் தருகிறார். ரிக்வேதா (ரிக்வேதம் என்று பொருள்படும் வடமொழிச் சொல்) என்பதிலுள்ள வேதா என்ற சொல்லின் பொருள் 'செல்வம்' என்பதே; இதன் வேர்ச் சொல் 'வித்'; அதன் ஆறுவது வினைப்பாட்டின் பொருள் பெறுவது அல்லது சம்பாதிப்பது என்பதாகும். 'வித்' என்றால் செல்வத்தைச் சம்பாதிப்பதானால், அதை எப்படிச் சம்பாதிப்பதென்று தெரிந்திருக்க வேண்டும். அதை அறிவது அல்லது அந்த அறிவு 'விதி' ஆகும். அறிவது அல்லது அறிவு என்பது செல்வத்தைச் சம்பாதிப்பதைப் பற்றியதாக

இல்லாவிட்டால் அதற்கு அர்த்தமோ மதிப்போ கடமையோ இல்லை. எனவே 'வித்' என்ற வேர்ச் சொல்லின் இரண்டாவது வினைப்பாகுபாட்டின் பொருளான 'அறிவது' என்பதிலிருந்து, மீண்டும், 'வேதா' என்பது உருப்பெற்று அறிவு என்று ஆகிறது; ஞானம் என்று ஆகிறது. எத்தகைய அறிவு? சம்பாதிப்பது, உற்பத்தி செய்வது, அடைவது சம்பந்தமான அறிவு. எதை? 'பிரஜைகளையும் பிராணிகளையும்" என்று பூர்வீக மக்கள் தயக்கமின்றி பதில் கூறினார்கள்.

வளர்ந்துகொண்டிருந்த மகத்தான புராதனக் கம்யூன் (பிரமன்) பற்றிய நினைவு கூறியதென்ன? இந்த யக்ஞ முறை, இந்த அறிவு, படைப்பு ஏற்பட்டு நிலைகொண்டதிலிருந்து, அவர்கள் உயிர் வாழத் தொடங்கியதிலிருந்து, அவர்களுடன் இருந்தது; ஏனெனில் அந்த யக்ஞ முறையுடன்தான், அந்த அறிவுடன்தான், வாழ்வே தொடங்குகிறது. எனவே, வேதங்கள் படைக்கப்பட்டதை எந்த மனிதனும் பார்க்கவில்லை; வேதங்களைப் பற்றி இந்த நம்பிக்கையை வளர்த்த பிற்கால வர்க்கச் சமூகம் நிச்சயமாகப் பார்க்கவில்லை. எனவே அந்த வேதங்களுக்குத் துவக்கக் காலம் கிடையாது (அவை அனாதியானவை); அவை சாசுவதமானவை (நித்தியமானவை); அவை சாமானிய மனிதனின் படைப்பு அல்ல (அபௌருஷ்யமானவை).[1] பௌதீகச் செல்வமில்லாமல், மனிதன் வாழமுடியாது; மனிதன் தோன்றியவுடனேயே, அவன் தோன்றியதற்கு முன்பே, செல்வம் இருந்திருக்க வேண்டும்; எனவே வேதங்களும் இருந்திருக்க வேண்டும். இவ்வகையில்தான், ஆரியர்கள் வாதித்தனர்.

ஆத்மாவையும், வாழ்வுக்கும் ஆத்மாவுக்குமுள்ள உறவையும், வாழ்வின் தளையிலிருந்து ஆத்மா விடுதலை பெறும் பிரச்னையையும் கருத்துமுதல் வாதத்தத்துவ ஞானி மர்மமாக ஆக்கும் விதத்தில், முற்கால ஆரியர்களோ பிற்கால ஆரியர்களோ வேதங்களில் எத்தகைய மறைபொருளையும் உண்டாக்கவில்லை. வேதங்

---

1 அபௌருஷ்ய என்ற சொல் புருஷ-ஸூக்கத்தில் வர்ணிக்கப்பட்டுள்ள பிற்கால வர்க்கச்-சமுதாயமான புருஷா (புருஷன்) பிறப்பதற்கு முன் படைக்கப்பட்டது என்றும் பொருள்படலாம்.

கள் என்ற பெயரால் உள்ளவை உண்மையில் இரு பகுதிகளைக் கொண்டிருக்கின்றனவென்றும், ஒரு பாகம் உண்மையானதாகவும் இன்னொரு பாகம், கொஞ்சம் உண்மை கலந்த கட்டுக் கதையானதாகவும் இருக்கின்றனவென்றும் ஆரியத் தொகுப்பாளர்கள் நேர்மையுடன் எடுத்துரைத்திருக்கின்றனர். இந்த உண்மை கலந்த கட்டுக் கதை, பிற்பாடு கலப்பில்லாத கட்டுக் கதையாகி விடுகிறது; பழைய புனிதமான உண்மையிலிருந்து அதிகார பூர்வமான ஆதாரம் பெற்று, ஒரு முரண்பாடான, நேர் எதிரான உண்மையை நியாயப்படுத்த முயல்வதால், அது கலப்பில்லாத கட்டுக் கதையாகிறது. ஹிந்து அறிவு முழுவதையும் மூன்று பாகங்களாகப் பிரிப்பதன்மூலம், ஆரியத் தொகுப்பாளர்கள் இந்த விஷயத்தை நமக்கு எடுத்துக் கூறுகிருர்கள். வேதங்களின் உண்மையான செய்யுட்கள், ரிஷிகள் 'கண்டறிந்தவை' 'புலப்படுத்தியவை'. எனவே அவை பின்னுல் 'மந்திர திருஷ்டிகள்' (திருஷ்டி (பார்வை) மூலம் அறிந்த மந்திரங்கள்) என்று பெயரிடப்பட்டன. பார்வை (திருஷ்டி)க்கு அடுத்தபடியாகவுள்ளது "பொதுவான பேச்சு வழக்கு" அல்லது 'சுருதி'யாகும். சுருதிகள், உண்மையும் கட்டுக் கதையும் கலந்திருப்பவையாகும். கடைசிப் பகுதி ஸ்மிருதியாகும்; அதாவதும் வெறும் நினைவாகும். ஹிந்து மரபின், ஹிந்து சமய அறிவின் இந்த மூன்று கட்டங்களை ஆராய்ந்தால், அவை மாறிக்கொண்டிருந்த ஆரியச் சமூகத்தின் பிரதிபலிப்புகளே என்பது விளங்கும்; பூர்வீகக் கம்யூனிலிருந்து (மந்திர-திருஷ்டி: வேதங்களைப் பார்த்து அறிந்தது), அதில் வர்க்க முரண்பாடுகள் நிறைந்த சமூகம் தோன்றி, அந்தக் கம்யூன் பூர்த்தியாக அழியாவிட்டாலும் தகர்ந்து சிதறும் கட்டத்துக்கு வந்து (சிரௌத தர்மத்தைக் கொண்டு வேதங்களைக் கேட்டறிவதைக் கொண்டு சமுதாயம் இயங்கும் கட்டம்), பிறகு, வர்க்க அரசு இறுதியாக அமைந்து, கம்யூன் பூர்ணமாக அழிந்து, ஸ்மிருதி விதி அரங்கேறுகிறது; இந்த ஸ்மிருதி விதி, வேத-யக்ஞத்துடனும் அதன் சமுதாயத்துடனும் எத்தகைய பொது அம்சத்தையும் கொண்டிருக்கவில்லை,

வேதம் என்ருல் என்ன, ஹிந்து சமுகத்தில் அதற்குள்ள அந்தஸ்துக்குக் காரணம் என்ன என்ற கேள்விகளுக்கு இந்த

விளக்கம் போதும். மனிதர்களின் மனதிலும் விவகாரங்களிலும் அது ஆட்சேபணைக்கு இடமில்லாத முறையில் பல நூற்றாண்டுகள் ஆதிக்கம் வகித்து வந்ததின் ரகசியத்தை உணரவும் இந்த விளக்கம் போதும். இறுதியில், வர்க்க அரசின் கருத்து முதல் வாதத் தத்துவம் அதை அழித்த விஷயத்தை, அதாவது, கர்ம யோகத்தை ஞானயோகம் அழித்ததாக ஹிந்து தத்துவஞானிகள் கூறுகிறார்களே அந்த விஷயத்தைப் புரியவும் இந்த விவாதம் போதும்; ஆனால் நாம் அதிகமாக வரலாற்றை முந்திக் கொள்கிறோம் போலிருக்கிறது. எனவே, யக்ஞம், பிரமன், வேதம் ஆகிய மூன்று விவாதத்துக்கு இடமான சொற்களேயும் விளக்கியாகி விட்டதால், கம்யூன் ஸ்தாபனத்தைப்பற்றி தொடர்ந்து பரிசீலிப்போம். கம்யூன் கூட்டாக ஸத்ர உழைப்பிலும் கிரது உழைப்பிலும் ஈடுபட்டிருக்கும் நிலையிலிருந்து நாம் தொடர்ந்து பரிசீலிப்போம்.

கண - கோத்திரம்

நெருப்பும் பிராணிகளைப் பழக்கும் கலையும் கண்டுபிடிக்கப்பட்டவுடன், இயற்கையின் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் அழிந்து விடுவோமோவென்ற தினசரி பயத்திலிருந்து கம்யூன் வாழ்வு விடுபட்டது. ஆனல் பொருளுற்பத்திச் சக்திகளின் பிற்பட்ட நிலைமை தினந்தோறும் சீர்திருந்திய போதிலும், அது வறுமையும் கடின உழைப்பும் நிறைந்த வாழ்வையே தொடர்ந்து அளித்தது. எனவே, ஸத்ர உழைப்பின் மூலம் கிடைக்கப் பெற்றதெல்லாம் உடனடியாக உபயோகிக்கப்பட்டன. தனி நபரின் உழைப்பானது, அவரைச் சாவிலிருந்து காப்பாற்றுவதற்கு அத்தியாவசியமாகத் தேவைப் படுவதற்குமேல் கூடுதலாக உற்பத்தி செய்யும் வகையில், பொருளுற்பத்திக் கருவிகள் அதுவரை வளர்ச்சி யடையவில்லை. எனவே, தான் செலவிடுவதைவிட அதிகமாக உற்பத்தி செய்வதற்கு மனித உழைப்பால் முடியுமென்பதை அவர்கள் கண்டுபிடித்திருக்கவில்லை. மனித உழைப்பு ஒரு உபரியை உற்பத்திசெய்ய முடியுமென்பதையும், ஒருவர் தானே உழைக்காமல் இன்னொருவர் உழைப்பின் உபரியைக் கொண்டு வாழ முடியும் என்பதையும், குறிப்பிட்ட உற்பத்தி இயலைக் கொண்டிருந்த பூர்வீகக் கம்யூன் உணரவில்லை. ஆனல், கால்நடை வளர்ப்புக் கலையின் விருத்தியுடன், புதிய யுக்திகளின் கண்டுபிடிப்புடன், இந்த நிலைமை சீக்கிரமே மாறுவதற்கிருந்தது. எனினும் அந்தக் கட்டத்தில், ஒருவர் மற்றொருவர் உழைப்பால் வாழ்வதைப் பற்றிய எண்ணம் தோன்றவேயில்லை; அத்தகைய எண்ணத்துக்கு, உற்பத்திச் சக்திகள் இடங் கொடுக்கவில்லை.

ஆதிக்காலக் கட்டங்களில் பொருளுற்பத்திக் கருவிகள் பிற்பட்டவையாயிருந்ததால் இன்னொரு விளைவும் ஏற்பட்டது; உற்பத்தியில் உபரியோ வெவ்வேறு வகைகளோ இல்லாத காரணத்தால், உற்பத்தியானது முழுவதும் நேரடியாக உபயோகிக்கப்பட்டது; பொருட்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு

இடமேயில்லை. எனவே, உற்பத்தியாளர்கள் தாம் உற்பத்தி செய்த பொருட்கள் மீது ஆதிக்கம் பெற்றிருந்தனர்; அவை அவர்களுடனேயே இருந்தன ; அவர்கள் அவற்றைப் பரிவர்த்தனையில் பிறருக்கு கொடுக்கவில்லை ; எனவே, சந்தை, பணம் முதலியவற்றின் மர்மங்களை அவர்கள் அப்பொழுது உருவாக்கவில்லை. உற்பத்திப் பீடமாகவோ சேமிப்புப் பீடமாகவோத் திகழ்ந்த யாக மேடையும், அடைப்புகளையும் மேய்ச்சல் நிலங்களையும் உடைய குடியிருப்பின் மையத்திலுள்ள அக்கினி தெய்வமுமே அந்தச் சிறிய பூர்வீகக் கம்யூனுக்கு முழு உலகமாக விருந்தது; அதற்கப்பாலுள்ள வாழ்வு முழுக்க முழுக்க விரோதமானதாகவும் தீமை செய்யத்தக்கதாகவும் இருந்தது.

பொருளுற்பத்திக் கருவிகள் பிற்பட்டிருந்ததால், அந்தக் கட்டத்தில், கம்யூனில் வேலைப் பிரிவினை ஏற்படுவதற்கு இடமேயில்லை. ஆதிக்காலத்து ஸத்ர உழைப்பில் நாம் காணக்கூடிய அற்ப சொற்ப வேலைப் பிரிவினையும் தற்காலிகமானதாக விருந்தது; ஒரு நிலையான, நிரந்தரமான பொருளாதார நலனுகப் பரிணமிக்கவில்லை. எனவே, பூர்வீகக் கம்யூனில் வர்ணப் பிரிவினையோ சாதி-வர்க்கப் பிரிவினையோ இருக்கவில்லை. குடியிருப்பவர்கள் அனைவரையும் கொண்டதாக விருந்தது கம்யூன் ; அவர்கள் சில சமயங்களில் விஷாக்கள் என்று அழைக்கப்பட்டனர். அந்தச் சமூகம் அப்பொழுது மிகச் சிறியதாக இருந்ததாலும் நிரந்தரமான வேலைப் பிரிவினைக்கு இடமில்லாமல் இருந்தது. சமூகத்தில் வேலைப் பிரிவினை ஏற்பட வேண்டுமானுல், ஜனத்தொகை போதுமான அளவுக்குப் பெருகியிருக்க வேண்டும். எனவே, ஸத்ர சமூகத்தில், ஆதிக்கால கணத்தில், சாதிகளின் பிரச்னை, மூன்று அல்லது நான்கு வர்ணங்களின் பிரச்னை, அப்பொழுது எழவில்லை ; எனினும் சீக்கிரத்தில் அந்தப் பிரச்னை ஏற்பட்டது.

ஆரிய சமூகத்தின் வளர்ச்சியில் குறிப்பிட்ட கட்டத்தில்தான் அதில் வர்ணங்கள் தோன்றின என்பதையும் ஆரம்பத்தில் அத்தகைய வர்ணப் பிரிவினைகள் இல்லை யென்பதையும் எல்லோரும் ஒப்புக் கொள்கிருர்கள் ; எனவே, நாம் இந்த விஷயத்தில் நேரத்தைச் செலவழிக்கத் தேவையில்லை. சமுதாயத்தின் வேலைப்

பிரிவினையாக வர்ணங்கள் தோன்றின என்பது வெட்ட வெளிச்சமாக விருக்கிறது; இதுவும் ஒப்புக் கொள்ளப் படுகிறது. வர்ணங்கள் எப்படித் தோன்றின என்ற விஷயத்தை, வேலைப் பிரிவினைக் கட்டத்துக்கு வரும்பொழுது நாம் பார்ப்போம்.

நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டு, கொஞ்ச காலம் கடந்த பிறகே, ஆரியச் சமூகம் பிராணிகளைப் பழக்கும் கலையை அறிந்ததென்பதை இங்கு குறிப்பிட வேண்டும். ஆனால் பிராணிகளைப் பழக்குவதற்கு அறிந்தபின், முன்னேற்றம் மிகவும் துரிதமாக விருந்தது; ஆரியர் கம்யூன் மிக வேகமாக மாறியது; பண்டமாற்று, வேலைப் பிரிவினை, வர்ணங்கள் முதலிய உடன்வரும் மாறுதல்கள் அனைத்தும் சமுதாய ஸ்தாபனத்தில் வெகு வேகமாக ஏற்பட்டன.

கூட்டாக உற்பத்தி செய்து உபயோகித்துக் கொண்டிருந்த ஸத்ரா கருமத்தில், நெருப்பைச் சுற்றி, பூர்வீகக் கம்யூன் வாழ்ந்ததை நாம் பார்த்தோம். இந்தியாவின் சில கிராமங்களில் நாம் இன்றும் காணக்கூடிய பெருங் குடும்பங்கள் மாதிரி, அந்த மக்கள் வாழ்ந்தார்கள், உழைத்தார்கள்; ஆனால் இந்தப் பெருங் குடும்பங்களில் வேலை பல் வகைப்பட்டிருப்பது போலவும் குடும்பத் தலைவனுக்கு அதிகாரம் இருப்பதைப் போலவும் அந்த மக்கள் மத்தியில் இருக்கவில்லை. அப்பொழுது ஏற்பட்டிருந்த வேலைப் பாகுபாடெல்லாம் ஆண்கள் பெண்களுக்கு இடையில்தான்; ஆண்கள் வேட்டையாடினார்கள், போராடினார்கள், கால்நடைகளை வளர்த்தார்கள். பெண்கள் இருப்பிடத்தை நிர்வகித்தார்கள், சமையல் செய்தார்கள், பால்கறந்தார்கள், குடியிருப்பைச் சுற்றியுள்ள இடத்தில் தான்யத்தைச் சாகுபடி செய்தார்கள். எனினும், இரு வகையினரின் உழைப்புமே சமுதாய உழைப்பா யிருந்தது; கூட்டாகச் செய்யப்பட்டது; அதன்மீது கூட்டாக பாத்தியதை கொண்டாடப்பட்டது. எனவே, தனிக்குடித்தனமோ ஆண்-பெண் அந்தஸ்து வேறுபாடோ இருக்கவில்லை.

சமூகம் சிறியது; பல்வகைப்பட்ட உழைப்போ வேலைப் பிரிவினையோ பண்டமாற்றோ கிடையாது; சுரண்டுகிறவர்கள், சுரண்டப்படுகிறவர்கள், பணக்காரர்கள் ஏழைகள் என்ற வர்க்கப் பிரிவினையும் கிடையாது; எனவே சமுதாயத்தை விட மேம்பட்டதாக

நின்றுகொண்டு, சகலரின் நலன்களையும் காப்பதாகக் காட்டிக் கொண்டு யதார்த்தத்தில், சுரண்டுகிறவர்களின் நலன்களுக்காக ஆட்சி புரியும் அதிகார ஸ்தாபனம் எதுவும் ஏற்படுவதற்கு அவசிய மில்லாமலிருந்தது; ஆகவே அத்தகைய அதிகார ஸ்தாபனம் இருக்கவில்லை. வர்க்க அதிகாரத்தின் கருவியான அரசு இருக்கவில்லை. ராணுவம் இருக்கவில்லை. போலீஸ் இருக்கவில்லை, வரி வசூல் இருக்கவில்லை. அத்தகைய அமைப்பு சமுதாயத்துக்குத் தேவைப்படவில்லை. அப்படியானால், உள்விவகாரங்களை முறைப் படுத்துவதற்கும் வெளிப் பாதுகாப்பைக் கவனித்துச் கொள்வதற்கும் கம்யூன் எத்தகைய பாதுகாப்பைக் கொண்டிருந்தது? பண்டைக்கால ஹிந்து ஆரிய எழுத்தாளர்களே இந்தக் கேள்வியை எழுப்பி,பதில் தந்திருக்கிறார்கள்.

கம்யூனின் உள் ஸ்தாபனம், உறுப்பினர்கள் சொந்த நடத்தை அவர்களுக்கும் கூட்டுச்சமூகத்துக்குமுள்ள உறவுகள், அந்த உறவுகளிலுள்ள குற்றங்களும் தண்டனைகளும், இந்தத் தண்டனைகளை நிறைவேற்றுவதற்கான சக்தி, அதைப் பராமரிப்பதற்குத் தேவையான பணம் முதலியனவற்றைப் பற்றி முற்பட்ட வைதீக இலக்கியம் [1]ஒரு பிரச்னையைக்கூட எழுப்பவில்லை. அதில் உள்ள விவாதங்கள் அனைத்தும், அநேகமாக, படைப்பு பிரபஞ்சத்தின் தோற்றம், மனிதன், அக்கினி, கால்நடைச் செல்வம் ஆகிய விஷயங்களைப் பற்றியதாகவே உள்ளன. பின்னர் வந்த பிராம்மணங்களில்தான், அதிகாரம், நல்லொழுக்க நெறிகள், நடத்தை ஆகியவை சம்பந்தமான பிரச்சினைகள் எழுகின்றன. முற்பட்ட வைதீக இலக்கியத்தில், படைப்புப் பிரச்னையுடன், போராட்டங்கள், யுத்தங்கள் அவற்றின் பலாபலன் ஆகியவற்றின் பிரச்னையும் விவாதிக்கப்பட்டுள்ளது. எப்பொழுதாவது, ஆண்-பெண் உறவு என்ற ஒரு ஒழுக்கப் பிரச்னை மட்டும் விவாதிக்கப்பட்டிருக்கிறது. அரசன் அரசு பற்றிய பிரச்னை, ஆள்வோர் ஆளப்படு

---

1 நான்கு வேதங்கள், பிராம்மணங்கள், ஆரண்யகங்கள், உபநிஷதங்கள், ஆகிய அனைத்தையும் ஒரு நிகரனவாகக்கொண்டு, வைதீக இலக்கியம் அல்லது வைதீக நூல்கள் எனக் கூறுவர். இவற்றில் வேதங்கள் முற்பட்ட வைதீக இலக்கியமாகும்.—மொ-ர்.

வோர் பற்றிய பிரச்னே, தனிநபர்களின் உரிமைகள்-கடமைகள் பற்றிய பிரச்னே, எவ்வகையான விவாதத்திலும் இடம்பெற வில்லே.

இந்தக் கம்யூன்கள் தகர்ந்து, வர்க்க அரசுகளும் புதியவகைப் பட்ட யுத்தங்களும் ஏற்படும்பொழுது, அரசாங்கப் படை, வரிகள், சட்டம், ஒழுக்கம் முதலிய உள் ஸ்தாபனத்தின் புதிய பிரச்னே களும் சகோதரச் சண்டைகளும் சமுதாயத்தை எதிர்நோக்கும் பொழுது, இந்தப் பிற்கால ஆரியச் சமூகத்திலிருந்து கம்யூன்க ளின் உள் ஸ்தாபனத்தை வேறுபடுத்திக்காட்டிய விசேஷ அம்சங் களே அந்த பிற்காலத்து எழுத்தாளர்கள் குறித்திருக்கிருர்கள். வைதீக இலக்கியத்தைக்காட்டிலும் அதிகமாக இவை இதிஹாசங் களில் குறிப்பாக மகாபாரதத்தில், பிரதான விஷயங்களாக உள் ளன. ஸ்மிருதிகளிலும் இவை பிரதான விஷயங்களாக உள்ளன. அவற்றில் அவர்கள் பழமைக்கும் புதுமைக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளே ஒப்பிட்டு விவாதிப்பதிலிருந்து, ஆதிக் கம்யூன்க ளின் உள்ளமைப்பு எப்படிச் செயல்பட்டதென்பதை நாம் அறிய முடியும். அந்த உள்ளமைப்பு மிகவும் எளியதாகவிருந்தது; அந் தக் காலகட்டத்தின் உற்பத்தி சக்திகளுடைய நிலேக்கு முற்றிலும் ஏற்றதாகவிருந்தது.

திரிராஷ்ட்ர மரபில் குறிப்பிடுவது மாதிரி, இந்தக் கம்யூன்களின் அமைப்பு கண ஸ்தாபனமாக விருந்தது. "தானே செயல்படக் கூடியதும் ஆயுதம் தரித்ததுமான ஸ்தாபனமாக" பொதுமக்கள் ஸ்தாபனமாக, எங்கல்ஸ் வார்த்தைகளில் கண ஸ்தாபனத்தை வர்ணிக்கலாம். அதில், அதன் விவகாரங்களே முறைப்படுத்து வதற்காக, அரசு என்ற பிரத்தியேகமான பலாத்கார அமைப்பு இருக்கவில்லே; ஏனென்ருல், தனி உடமை அடிப்படையில் முரண்பட்ட வர்க்கங்களாக அது பிரிந்திருக்கவில்லே. கம்யூனில் ஒவ்வொருவரும் கூட்டு சமூதாயப் பணியில் உள்ள பங்கைச் செய்ய வேண்டுமென்று, கம்யூனின் பொது அபிப்ராயமும் இயற் கையான அவசியமும் அவர்களேக் கட்டுப்படுத்தின. எவராவது கொஞ்சம் தவறினுல், அவர் பொதுக்கண்டனத்தின் மூலம் திருத் தப்பட்டார், கணத்தின் ஒரு உறுப்பினர் இன்னெரு உறுப்பின

ரைக் கொன்ருல், அல்லது அதுபோன்ற பாதகம் ஏதாவது நேர்ந்தால், அத்தகைய குற்றத்தைப் புரிந்தவர் கணத்திலிருந்து வெளியேற்றப்படுவார்; இந்தத் தண்டனை, அன்றைய அநாகரீக நிலையில், மரண தண்டனைக்கு சமமானதாகும். எந்தச் சட்டத்தையாவது அமுல் நடத்துவதற்காக அதிகார வர்க்கமும் ராணுவமும் ஏற்படவில்லை; எனவே வரி வசூலும் இருக்கவில்லை. பொதுவான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர் நேரடியாக உற்பத்தி செய்யாவிட்டாலும் கூட்டு உழைப்பு நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்டார். அவருக்கும், கிழவர்கள் குழந்தைகளுக்கு அளிப்பது மாதிரி, கூட்டுப் பலனிலிருந்து பங்கு அளிக்கப்பட்டது.

கணத்தின் அங்கத்தினர் உரிமை எதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது? வர்க்க அரசிலும் நவீன சோஷலிஸத்திலும், ஒரு ராஜ்யத்தின் பிரதேசத்தில் குடியிருந்து, அந்த அரசுக்கு விசுவாசம் செலுத்துகிறவர்கள் குடியுரிமை பெறுகிருர்கள். கண விதியில் அப்படியல்ல. கணம் என்பது ஒரு பிரதேச ஸ்தாபனத்துடனே ராஜ்யத்துடனே சம விஸ்தாரம் உடையதல்ல. கண உறுப்பினர் உரிமை, இரத்த சம்பந்த உறவு அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

எனவே, யக்ஞ உற்பத்தி முறையைப் பெற்றிருந்த ஆதி வேதக்கால சமூகம், ஒரு கண ஸ்தாபனமாக இருந்தது; அதன் அங்கத்தினர்கள் அனைவரும் இரத்தசம்பந்தமுடைய சுற்றத்தாராயிருந்தனர்; அந்தச் சமூகத்தின் துவக்க காலத்திலேயே கூட்டு உழைப்பும் கூட்டுச் சொத்தும் இருந்தன; அதில் வர்க்கப் பாகுபாடோ, சாதிப் பாகுபாடோ, அரசோ, அரசனே, சுரண்டுகிறவர்கள் சுரண்டப்படுகிறவர்களோ இருக்கவில்லை. அது ஆயுதபாணிகளாகவுள்ள மக்களின் சுயமாகச் செயல்படக்கூடிய ஸ்தாபனமாக விளங்கியது.

இவ்வாறுதான், பிற்காலத்தின் ஹிந்து நூல்கள் கணங்களை வர்ணிக்கின்றன. 'வேதகாலத் துவக்கத்திலிருந்த் தெய்வங்கள் மனிதர்கள் அனைவரும் இந்தக் கணங்களில்தான் ,வாழ்ந்தார்கள்.

அரசு, அரச பதவிகள், வர்ணப் பிரிவினைகள் உள் யுத்தங்கள் ஆகியவை தோன்றியதும், அவை கடந்தகால நிலவரத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்ததால், அவை எப்படித் தோன்றின, ஏன் தோன்றின என்று ஒவ்வொருவரும் அறிய விரும்பினார்கள். அந்தக் கேள்விகளுக்குக் கொடுக்கப்பட்ட பதில்கள், சரியான காரணங்களைக் குறிப்பிடவில்லை; எனினும் சரியான காரணங்களை அறிவதற்கு அவை வகை செய்கின்றன.

மகாபாரதத்தில் ஏதாவதொரு புதிய நடைமுறை, பரம்பரைப் பழக்கத்துக்கு ஒத்துவராத பொழுதெல்லாம், வயது முதிர்த்த குடும்பத் தலைவரான பீஷ்மரிடம் கேள்விகள் கேட்கப்படுகின்றன. பாரத யுத்தத்தில் தமக்கு உறவு முறையிலுள்ள கௌரவர்களை எதிர்த்துப் போராடி வெற்றிகண்ட பாண்டவர்களின் தலைவர், ராஜ பதவியைப்பற்றி பீஷ்மரை ஒரு கேள்வி கேட்டார். "ஒரு சாதாரண மனிதன் மற்றவர்களைப்போன்றவன், பிறரைப் போலவே கண்களும் கரங்களும் படைத்தவன், உறுதியாகச் சாக வேண்டிய மானிடன், அரசனாவது எப்படி? தனிப்பட்ட முறையில் தன்னையும்விட அதிகமான விவேகமும் சக்தியும் பெற்றவர்கள்மீது ஆட்சி புரிவது எப்படி? அவனுக்கு இந்தத்திறனைக் கொடுப்பது எது?"

இதற்கு பதில் கூறும்பொழுது, பீஷ்மர் தனக்குப் புரிந்த முறையில், அரசு தோன்றிய கதையைக் கூறுகிறார். ராஜபதவி அல்லது அரசின் தோற்றத்தைப்பற்றிக் கூறும்பொழுது, அரசே இல்லாத, அரச பதவி இல்லாத (இங்கு ராஜன் என்று அவர் குறிப்பிடுவது ராஜ்யம் என்றே பொருள்படும்) காலம் இருந்தது என்று அவர் குறிப்பிடுவது மிக முக்கியமானதாகும்.

கிருதயுகத்தில், அதாவது, முற்காலத்தில், "அரசும் அரசனும் இருக்கவில்லை; தண்டிப்பவனும் தண்டிக்கப்பட்டவனும் இருக்கவில்லை (அரசும் இல்லை, சுரண்டலும் இல்லை). மக்கள் தமது வாழ்வின் அறமுறைப்படியே ஒருவரையொருவர் பாதுகாத்துக் கொண்டனர்." "அவர்களுடைய தவறுகள் பொதுக் கண்டிப்பு மூலம் திருத்தப்பட்டன" என்று அவர் இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார். கண ஸ்தாபனங்களுக்கு நேர்ந்த ஆபத்துக்

களைக் குறிப்பிடும்பொழுது, அவற்றின் உள்போட்டி, (சொத்துச் சேகரிக்கும்) பேராசை, ஒற்றுமைக்குலைவு ஆகியவற்றை அவர் பிரதானமானவையென்று குறிப்பிடுகிறார். அவர்களுடைய பரஸ்பர உறவின் விசேஷ அம்சத்தைக் குறிப்பிடும்பொழுது, "அவர்கள் ஒரே சாதியினராக விருந்தனர்; பொது மூதாதையரைக் கொண்டிருந்தனர் அல்லது இரத்த ஒற்றுமைகொண்டிருந்தனர்." அவர்கள் தமக்குள்ளே சண்டையிட்டுக்கொண்டால், அது கணத்தின் கோட்பாடுகளுக்கு முடிவுகட்டுவதாகும். அவ்வாறு தமக்குள் சண்டைசெய்கிறபொழுது, அவர்கள் இரத்தசம்பந்த உறவு பற்றிய கோட்பாட்டையும் அதன் கடமைகளையும் மீறுகிறார்கள். அது, கணக் கோட்பாடுகளுக்கு மிகப்பெரிய பங்கம் விளைவிப்பதாகும். கிருத யுகத்தின் இயல்பாகவுள்ள கண இயல்பை வர்ணிக்கும் சகல எழுத்தாளர்களும், கண உறுப்பினர்கள் "உன்னுடையது, என்னுடையது" என்று பாகுபடுத்திப் பார்க்கவில்லையென்று கூறுகிறார்கள். இது வெறும் கட்டுக்கதையல்ல; பூர்வீகக் காலத்துக் கூட்டுவாழ்வின் தன்மையாகும். உண்மையில், ஒரு பேரரசையும் பலம்வாய்ந்த சர்வாதிகார முடியாட்சியையும் ஸ்தாபிப்பதில் மிகப்பெரியவராக விளங்கிய கௌடில்யர் (சாணக்கியர்), "வைராஜ்யம்" (இது ஐதரேய பிராம்மணத்தில் வர்ணிக்கப்படுகிறது) உள்ள கணத்தில், "என்னுடைதென்ற உணர்ச்சி ஒருவரிடமும் இல்லை" என்று கூறுகிறார். எனவே, அத்தகைய ராஜ்யத்தின் உறுப்பினர் தன் சர்க்காரையும் தேசத்தையும் விற்றுவிடுவாரென்றும், அதில் ஒருவரும் தேசத்தின் ஆட்சிக்குப் பொறுப்புள்ளவராயிருக்கமாட்டாரென்றும் கௌடில்யர் கருதுகிறார்.[1] இந்தக் கருத்தை, சோஷலிஸத்தைப்பற்றி நவீன பூர்ஷுவாக்கள் கொண்டிருக்கும் கருத்துடன் ஒப்பிடமுடியும். பூர்வீக ஜனநாயகத்தை வேரோடு பிடுங்கி எறிந்த அவர்கள் (கௌடில்யர் போன்றோர்), அதைச் சீரழிந்த பொருளாகத் தூற்றியபொழுதே, அதைக்கண்டு அச்சப்பட்டார்களென்பதும் உண்மை. தன் உள் ஒற்றுமையின்காரணமாக, அது பகைவ

1 அரசனில்லாத ராஜ்யம் அல்லது அராஜகம் என்பது, எவரும் சொத்துரிமை படைத்திராத ஏற்பாடாக வர்ணிக்கப்பட்டது.

னுக்கு எதிராக மிகுந்த பலத்துடன் விளங்கியதாக, அவர்களுக்கு இந்த அச்சம் ஏற்பட்டது. அவர்களே முரண்பட்டமுறையில் பேசினார்கள். வர்க்க அரசுக்கும், தனி உடமைக்கும் உரிய வர்க்கப் பார்வையில் தோய்ந்திருந்ததால், கணம் எப்படி வாழ முடிந்த தென்பதை அவர்களால் உணர முடியவில்லை. ஆனால் அது வாழ்ந்தது, நல்ல முறையில் வாழ்ந்தது; பீஷ்மரைப் போன்ற சிலர் அதை ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று.

கண ஸ்தாபனமும் இரத்த சம்பந்த உறவினர் முறையும் ஒன்றே என்பது (கணம் என்று தமிழ்ப் படுத்தப்படும் சமஸ்கிருதச் சொல்லான) கண என்ற சொல்லின் மூலப் பொருளில் அடங்கி யிருக்கிறது. இந்தோ-ஆரியர்கள் தமது பூர்வீகப் பிறப்பிடத்தி லிருந்து சிதறுவதற்குமுன், அந்தச் சொல் அவர்களுக்குப் பொது வாகவிருந்தது. மகாபாரதத்திலும் வேதங்களிலும் வர்ணிக்கப் படும் சமுதாயப் பொருளாதார ஸ்தாபனமான கண (பிற்காலத் தில், ஸ்மிருதி காலத்தில் அது ஒருவகைப்பட்ட அரசியல் ஸ்தாபன மாக வர்ணிக்கப்படுகிறது) ஜன் என்ற சமஸ்கிருத மூலச் சொல்லி லிருந்து வருகிறது. ஜன் என்றால் 'உண்டாக்குவது, உற்பத்தி செய்வது' என்று அர்த்தமாகும். அது பொருளாதார உற்பத்தி, தன் இன உற்பத்தி ஆகிய இரண்டையும் குறிக்கும். இதே மூலச் சொல் யஜ்ஞ என்பதிலும் இருப்பதை நாம் முன்பே பார்த்தோம். எனவே, சமுதாயப் பொருளாதார வகையிலும் ஆண்-பெண் தொடர்பு வகையிலுமாக, ஆரியர்கள் கொண்டிருந்த ஸ்தாபனத் தின் மூன்று உறவுகள் அல்லது அர்த்தங்களையும் சுட்டிக் காட்டு வதற்கு, அவர்கள் ஒரு வேர்ச் சொல்லைக் கொண்டிருந்தனர். யக்ஞ உற்பத்தி முறையானது ஒரு கண ஸ்தாபனமாகத்தான் இருந்திருக்க முடியும்; அந்தக் கண ஸ்தாபனம் கண ஸ்தாபன மாகவிருப்பதாலேயே இரத்தக் கலப்பு உறவினர்களைமட்டுமே கொண்டிருந்தது; அதாவது, அக்கினியையும் யக்ஞ வாழ்வுமுறை யையும் சுற்றி, ஜீவனையும் ஜீவனத் தேவைகளையும் பொதுவில் கூட்டு உற்பத்தி செய்த ஆண்களுக்கும் பெண்களுக்கும் பிறந்த வர்களையே உறுப்பினராகக் கொண்டிருந்தது. மார்கன் ஆராய்ச்சி சம்பந்தமாக எழுதும்பொழுது, எங்கல்ஸ் இதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார் :—

"இரத்தக் கலப்புள்ள இந்த ஸ்தாபனத்துக்கு மார்கன்[1] பொதுவாக ஜன்ஸ் என்ற லத்தீன் சொல்லை உபயோகிக்கிறார்: அதுவும் அதே பொருளைக் கொடுக்கும் கிரேக்கச் சொல்லான ஜனேஸ் என்பதும், பொதுவான ஆரிய வேர்ச் சொல்லான ஜன் என்பதிலிருந்து பெறப்பட்டுள்ளன. ஜன் என்றால் உண்டாக்குவது என்று பொருளாகும். ஜன்ஸ், ஜனேஸ், சம்ஸ்கிருத மொழியின் ஜநஸ், கோதிக் மொழியில் குனி, புராதன நார்டிக் மொழியிலும் ஆங்கிலோ—சாக்ஸன் மொழியிலும் கின், ஆங்கில மொழியில் கின், மேல் மத்திய ஜர்மனியில் கின்னி, ஆகிய அனைத்தும் வம்ச பரம்பரையைக் குறிக்கின்றன. லத்தீன் மொழியிலுள்ள ஜன்ஸ் என்ற சொல்லும், கிரேக்க மொழியிலுள்ள ஜனேஸ் என்பதும் (சம்ஸ்கிருதத்திலுள்ள கண கோத்திரம் என்பதும்—என நான் இங்கு சேர்த்துக் கொள்கிறேன்—ஆ-ர்.) (ஒரு பொதுவான மூற் பிதாவின்) வமிச பரம்பரையைக் கொண்டாடுவதாகவும், சில சமுதாய சமய ஏற்பாடுகளால் ஒன்றுபடுத்தப்பட்டதாகவும் உள்ள இரத்தக் கலப்பு ஸ்தாபனத்தை விசேஷமாகக் குறிக்கின்றன." (எங்கல்ஸ், 'குடும்பத்தின் தோற்றம்').

ஆரியர்களின் ஆதி ஸ்தாபனம், உறவினர் முறையை அடிப்படையாகக் கொண்டிருந்ததென்பதும் அதுவே பின்னால் அமைந்த சகல "தேசீய இனங்களுக்கும்" அஸ்திவாரமாகவிருந்ததென்பதும் அவர்களால் பல வழிகளில் தொடர்ச்சியாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இந்தியாவில் ஏறத்தாழ பாதிப் பிரதேசத்திலும் அதற்கு அப்பாலும் பரவியவர்களான பத்து பிரபல குலங்களும் உறவினர்களென்று கூறப்படுகிறது. யது, துர்வசன், த்ருஹ்யூ, அநு, பூரு ஆகிய ஐந்து குலங்களும் யயாதி என்பவருக்கும் தேவயானி, ஷர்மிஷ்தா என்ற அவருடைய இரு மனைவிகளுக்கும் பிறந்த குமாரர்களாகக் காட்டப்படுகின்றனர். கிழக்கு தென்கிழக்கு

---

[1] மார்கன்:—பிறப்பு 1818; இறப்பு 1881. பிரசித்தி பெற்ற அமெரிக்க விஞ்ஞானி. பூர்வீகச் சமுதாய ஆராய்ச்சியில் சிறந்தவர். "பண்டைக் கால சமூகம்" முதலிய பல நூல்களின் ஆசிரியர். அமெரிக்காவின் பூர்வீகக் குடிகள் மத்தியில் ஆராய்ச்சிகளை நடத்தி, மனிதனின் பூர்வீக வரலாற்றின் அடிச்சுவட்டைக் கண்டுபிடித்ததில் அவருடைய திறமை ஒளிர்கிறது. (மொ-ர்)

இந்தியாவில் இருந்த அங்க, வங்க, கலிங்க, புந்திர, ஸுஹ்ம குலங்கள் ஐந்தும், பாலியின் குமாரர்களாகக் கூறப்படுகின்றனர். பார்வையை இழந்த மகரிஷியான தீர்கதமஸ் என்பவருடன் கூடியதால் பாலியின் மனைவிக்குப் பிறந்தவர்களாகக் கூறப்படுகின்றனர். சமுதாயப் பொருளாதார உறவுகளைக் கொண்டிருந்த இவர்கள், இரத்தக் கலப்பு, உறவினர்களாகவும் இருந்தார்கள் என்பதே வற்புறுத்தப்படுகிறது. எனவே, கண அமைப்பு, பொருளுற்பத்தி உறவு, இரத்தக் கலப்பு உறவாகவுமிருந்த பூர்விகக் கூட்டு வாழ்வில் உருப்பெற்ற மக்கள் ஸ்தாபனமாகும்.

முக்கியமான இரத்தக் கலப்பு உறவுகளுக்கு உள்ள பெயர்களே இதை நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. கம்யூன் நடவடிக்கைகளில், இரத்த சம்பந்த உறவும் பொருளாதாரச் செயல் உறவும் அன்னை, பெண், தந்தை, கணவர், மனைவி ஆகியவர்களின் பொதுப் பெயர்களில் அபேதமாக விருக்கின்றன.

தாய் (சமஸ்கிருதத்தில் மா-த்ரு) என்பவரின் கடமை, உணவு, இறைச்சி முதலியவற்றை அனைவருக்கும் அளவிட்டு (மா என்ற வேர்ச் சொல்லின் பொருள்: அளப்பது) வினியோகிப்பதும், குழந்தைகளைப் பெற்றெடுத்து அதிக ஜீவன்களை அளிப்பதும் ஆகும். உணவு மூலமாகவும் தாய் மூலமாகவும், பிரமன் என்ற கம்யூன் தன் இனத்தினரைப் பெருக்கி வாழ்ந்தது. தந்தை (சமஸ்கிருதத்தில் பி-பா-த்ரு) என்பவரின் கடமை, வேட்டையாடுவதும் உஷாரான பாதுகாப்பை (பா என்ற வேர்ச் சொல்லின் பொருள், பாதுகாபபது) அளிப்பதுமாகும். மகள் (துஹி-த்ரு) கால்நடைகளின் பாலைக் கறக்க வேண்டும். (துஹ் என்ற வேர்ச் சொல்லின் பொருள், பால் கறப்பது). புணர்ச்சி உறவைக் குறிக்கும் பதியும் பத்தினியும் (கணவன், மனைவி)—இவர்களே தாய் தந்தையராகிறார்கள்—ஒரு குடியிருப்பை ஒன்று சேர்த்து நிர்மாணிப்பதைத் தெரிவிக்கின்றனர்; ஆம், முதலில் பொதுவானக் குடியிருப்பாக விருந்தது; பிறகு, தனிக் குடும்பத்தின் இல்லமாயிற்று. பஸ்த்ரியு, ஸ்திரீ, பத்தினி ஆகியவையெல்லாம் கம்யூனை ஒன்று கூட்டிய ஆண்களையும் பெண்களையும் குறித்தன. அவர்கள் சமுதாயப் பொருளாதாரப் பாத்திரங்களை வகிப்பதைத் தவிர ஆண் பெண்

புணர்ச்சி உறவுகளிலும் பாத்திரங்கள் வகிப்பதை முன்னிட்டு அவர்களுக்கு தனித் தனிச் சொற்களைக் கண்டுபிடிக்கத் தீர்மானிப்பதற்கு முன்பே, இந்தச் சொற்கள் ஒரு வேளை வழக்கிலிருந்திருக்கலாம். எனவே, தனிக் குடும்பம் உதயமாவதற்கு முன், திருஷபதி என்ற சொல் ஆண், பெண் இருவரையும் குறித்தன (திருஷபதி-ஸ்திரீ என்று பாணினி கூறுகிருர்.)

பிற்காலத்தில், பொருளாதாரப் பாத்திரமும் பொருளாதார உறவும் இரத்த சம்பந்த உறவால் தீர்மானிக்கப்படவில்லை. பூர்வீகக் கம்யூன் தகர்ந்த பிறகும், தாயும் தந்தையும் தாயாகவும் தந்தையாகவுமே இருந்தனர்; அவர்கள் வீடு சுட்டாவிட்டாலும் பாதுகாப்பு அளிக்காவிட்டாலும் உணவை அளிக்காவிட்டாலும் அவர்கள் தாய் தந்தையராகவே இருந்தனர். நிலப்பிரபுவும் முதலாளித்துவ வீட்டுச் சொந்தக்காரரும் போலீஸும் அந்தக் கடமைகளை மேற்கொண்டு விட்டனர்; தாயும் மகளும் தந்தையும் மகனும் விரிந்த உலகத்தில் சிதறுண்டனர். அவர்கள் வயல்களிலும் பாக்டரிகளிலும் வேலை செய்து, முடிந்த வகையில் உணவைப் பெறுவதற்கு முயன்றனர்; ஆனால் கடினமாக உழைத்த போதிலும், பொருட்கள் ஏராளமாகவிருந்த போதிலும் அவர்களுக்கு உணவு கிடைப்பது அருமையாகவிருந்தது.

கோத்திரம் என்பது ஆரியக் கூட்டுத் தொகுதியின் ஸ்தாபன அடிப்படைக்குள்ள இன்னொரு பெயராகும். கண (கணம்) என்ற சொல் உற்பத்திக் கருமத்தையும் உற்பத்தியாளரையும் (ஜன) அடிப்படையாகக் கொண்டிருந்தது; கோத்ரா (கோத்திரம்) என்ற சொல், செல்வத்துக்கும் உணவுக்கும் முக்கியமான ஆதாரமாகவுள்ள கால்நடைகளை (சமஸ்கிருதத்தில் 'கோ') அடிப்படையாகக் கொண்டது. இதிலும், அடிப்படையான பொருளாதார உட்பொருள் இருப்பது தெளிவு; ஆனால் கோத்திர ஸ்தாபனமும் அதில் அடங்கியிருக்கும் உறவு முறையும், பிரதானமாக, இரத்த சம்பந்த உறவு அல்லது குடும்ப உறவின் அடிப்படையாக ஹிந்துக்கள் மத்தியில் நீடித்து வந்திருக்கிறது; இது ஹிந்து அறிஞர்கள் மத்தியில் ஒரு வாதப் பிரதிவாதப் பிரச்னையாகவும் இருக்கிறது. ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம்

செய்து கொள்வதை ஹிந்துத் திருமண விதி தடை செய்கிறது. ஒன்பது முக்கியமான பிரிவுகளான பிரவரங்களில் சகல கோத்திரங்களும் வகையீடு செய்யப்பட்டுள்ளன. (எனினும், ஒரே பிரவரத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையே திருமணம் நிகழ்வதற்குக் குறிப்பான தடை கிடையாது என்பது சில அறிஞர்களின் கருத்து). எனினும், வேதங்களிலோ ஆதிக்கால வரலாற்றிலோ ஒரே கோத்திரத்துக்குள் திருமணம் கூடாதென்ற இந்த தடையைக் காண முடியவில்லையென்று வேதங்களைப் பயின்ற அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்தத் தடை, பிற்காலத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. இதன் காரணம் என்ன என்பதை அந்த அறிஞர்களால் சொல்ல முடியவில்லை. இந்தப் பிரச்னை புரியாதென்று அவர்கள் அதைக் கைவிட்டு விடுகிறார்கள். அவர்களுக்கு, கோத்திரா-பிரவரேக் குழப்பம் தீர்வு காண முடியாத பிரச்னையாக உள்ளது.

எனினும், ஆரியர்களின் கண-ஜன ஸ்தாபனமும் கோத்திர அமைப்பும் ஒன்றுதான்; அவை அவர்களுடைய பொருளாதார—திருமண உறவு முறையின் அடிப்படையாகவிருந்தன. கணத்தின் பொருளாதாரம் இரத்த சம்பந்தமுள்ள உறுப்பினருடையதாக விருந்தது; இரத்த சம்பந்த உறவினர்கள் பொதுவான பொருளாதாரத்தைப் படைத்திருந்தனர். கம்யூன் அல்லது கணத்துக்கு அப்பாற்பட்டது அனைத்தும் பகையாக விருந்தது. இரத்தக் கலப்பு உறவினராக இல்லாதவர் விரோதியாக விருந்தார்; எனவே அவர் கம்யூனில் இருக்கமுடியாது; யக்ஞ முறையில் சேரமுடியாது. யக்ஞத்தில் இல்லாதவர் அன்னியர்; அவரைக் கொன்று அவருடைய செல்வத்தைக் கைப்பற்றிச் சுவீகரித்துக் கொள்ளவேண்டும். எவருக்கும் விரோதிகள் மத்தியில் உறவினர் இருக்க முடியாது. கோத்திரமே எல்லாம். எனவே, ஜீவனையும் ஜீவன வசதியையும் உற்பத்தி செய்வதற்கு, கோத்திரமே அஸ்திவாரம்; கோத்திரமே எல்லைவரம்பு. எனவே, கோத்திரத்துக்குள்தான் திருமணம் செய்துகொள்ள வேண்டும். பூர்வீக ஆரியர்களின் யக்ஞ சமூகம், கோத்திரத்துக்கு வெளியே, தன் சொந்த அக்கினிக்கு வெளியே, திருமணம் செய்துகொள்வதை, முதலில் எண்ணிப் பார்க்கவும் முடியவில்லை. காட்டுமனித நிலையிலும் அநாகரீக நிலையிலும் நூற்றுக்கணக்கான ஆண்டு

களின் வாழ்வைப் பார்த்து அனுபவித்த பிறகே இரத்தக் கலப்பு உறவினர்களுக்குள்ளே திருமணம் செய்துகொண்டு இன உற்பத்தி செய்வது கோத்திரத்தின் வளர்ச்சிக்குக் கேடு விளைவிக்குமென்பதை ஆரியர்கள் அறிந்தனர். இரத்தக் கலப்பு உறவினர்களுக்கிடையே திருமணம் செய்வதற்குத் தடை விதிக்கும் தற்காலக் கருத்துக்கள், ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் வரலாற்று வழியேதான், உருப்பெற்றன. பூர்வீக ஆரியன் தன் கோத்திரத்துக்குள்ளேயே திருமணம் செய்துகொண்டான் ; அவன் எண்ணிக்கையில் பெருகி, வாழும் பிரதேசத்தை விஸ்தரித்து, அறிவை அதிகரித்துப் பொருளாதாரத்தை உயர்த்தி, வளர்ந்த பிற்காலத்தில், அவன் கோத்திரத்துக்குள் மணம் செய்துகொள்வதைத் தடை செய்தான்.

இரத்தக் கலப்பு ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அமைந்த உறவு முறையான கண கோத்திரம், பூர்வீகக் கம்யூனில் இருந்த ஆண்-பெண் புணர்ச்சி உறவு அல்லது திருமண உறவு எப்படிப் பட்டது என்ற பிரச்னையை எழுப்புகிறது. இங்கும் பொருளுற்பத்திச் சக்திகளின் மிகத் தாழ்ந்த நிலையே ஆதிக்கால ஆரியச் சமூக அங்கத்தினர்களின் ஆண்-பெண் புணர்ச்சி உறவுகளைத் தீர்மானித்தது. இந்தத் துறையில் யக்ஞ சமூகத்தின் நல்லொழுக்கத் தத்துவமும் நெறிகளும் பிற்கால ஹிந்து சமூகங்களுடையவற்றிலிருந்தும் நமது சகாப்தத்தின் நல்லொழுக்கத் தத்துவ, நெறிகளிலிருந்தும், நவீன சோஷலிஸ்ட் சமூகத்தின் நல்லொழுக்கத் தத்துவ நெறிகளிலிருந்தும் முற்றிலும் வேறுபட்டவையாகும்.

பூர்வீகக் கம்யூனின் திருமண முறை

இன்று பூர்ஷுவா சமுதாயத்தில் காணப்படும் திருமண ஏற்பாடு எப்படி வளர்ந்தது, எந்த நல்லொழுக்கத் தத்துவத்தையும் நெறிகளையும் புனிதமானவையென்று பூர்ஷுவாக்கள் பகலும் இரவும் ஆணையிட்டுப் பறை சாற்றிவிட்டு ஒருபொழுதும் அனுஷ்டிக்காமலிருக்கிறார்களோ, அந்த நல்லொழுக்கத் தத்துவமும் நெறிகளும் எப்படி வளர்ந்தன என்பனவற்றைப்பற்றிய விவாதம், எப்பொழுதுமே, ஒவ்வொரு நாட்டிலும், சூடான வாக்குவாதங்களைக் கிளறிவிட்டிருக்கிறது. விவாக ரத்து, பலதார மணம், ஒருதார மணம், 'சொத்துக்காகத் திருமணம்', காதற் திருமணம், ஆகிய பிரச்னைகளும் இவை போன்ற இதர பிரச்னைகளும் வேகமாக மாறிக்கொண்டிருக்கும் இந்தியச் சமூகத்தில் ஒரு சூறாவளியை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன ; சமுதாயத்தின் அலகுகள் என்ற சமுதாயப் பார்வை, புருஷன் ஸ்திரீ என்ற இயற்கைப் பார்வை ஆகிய இருவகைப் பார்வைகளிலும் ஆண் பெண் உறவுகளைப் பார்க்க வேண்டிய கட்டாயம் அறிவாளிகளுக்கு ஏற்பட்டு வருகிறது. வாலில்லாக் குரங்கு, மான் முதலிய சில பிராணி வகைகள் மத்தியில் காணப்படும் புணர்ச்சி உறவுகளுடன் மனிதர்களின் புணர்ச்சி உறவுகளை ஒப்பிடுவதன் மூலம், ஒருதார மணம், பலதார மணம், பல புருஷர் விவாகம் ஆகிய முறைகள் உருப்பெற்ற நிலைமைகளை விளக்குவதற்கு, திருமண ஏற்பாட்டின் சரித்திரக்காரர்கள் முயன்று வருகின்றனர். அத்தகைய முயற்சிகள் முற்றிலும் பரிகசிக்கத் தக்கவையாகும் ; ஏனெனில், எந்தப் பிராணியும் எந்தக் காலத்திலும் ஒரு சமுதாய ஸ்தாபனத்தை உருவாக்கிக் கொண்டதில்லை (ஒரு மந்தை சமுதாயமாக ஆகாது). மேலும், மனிதன் ஒரு பிராணியாக விருக்கவில்லை ; எப்படியென்றால், பொருளுற்பத்திக் கருவிகளை விருத்தி செய்து இயற்கையின் சக்திகள்மீது படிப்படியாக ஆதிக்கம் பெறுவதன் மூலமாக, அவன் தன்னைத் தானே பிராணி உலகத்திலிருந்து உயர்த்திக் கொண்டு,

மனித சமூகத்தை நிர்மாணித்துக் கொள்கிறன். எனவே, மனிதர்களின் ஆண்பால்-பெண்பால் உறவுகள், ஆரம்பத்திலிருந்தே, சமுதாயத்தால் தீர்மானிக்கப்படுகின்றன; அதாவது, அவை, ஏககாலத்தில், இயற்கையான புணர்ச்சி உறவுகளாகவும், சமுதாய உறவுகளாகவும் இருக்கின்றன;

இயற்கையும் மனிதனும் மாறிக்கொண்டும் விருத்தியடைந்து கொண்டும் இருப்பதால், அவற்றுக்கு ஒரு சரித்திரம் உண்டு. அவை எப்பொழுதுமே ஒரே நிலையிலுள்ள அசையாப் பொருட்களல்ல. எனவே அவற்றைச் சரித்திர ரீதியாகப் பார்க்க வேண்டும்; இதன் பொருள் என்னவெனில், ஆண்-பெண் உறவுகள் சம்பந்தமான ஒழுக்கத் தத்துவமும் நெறிகளும் ஆண்டவனல் தீர்மானிக்கப்படவில்லை; இயற்கையால் மட்டும் தீர்மானிக்கப்படவில்லை; அவை எல்லா சகாப்தங்களுக்கும் ஒன்ருகவே இருக்கவில்லை; அவை தாழ்ந்த மட்டத்திலிருந்து உயர்ந்த மட்டத்துக்கு மாறிக் கொண்டும் விருத்தியடைந்து கொண்டும் இருக்கின்றன.

இந்த ஆண்-பெண் உறவுகள் எல்லா சமூகங்களிலும் ஒரே தன்மை கொண்டிருக்கவில்லையென்பதையும். அவை ஒரே சமுதாயத்தில்கூட எல்லாக் காலங்களிலும் ஒன்ருயில்லையென்பதையும் கூட பூர்ஷுவா அறிவாளிகள் ஒப்புக்கொள்கின்றனர். ஆனல் மாறுதலைத் தீர்மானிக்கும் விதியைக் காணவும், தாழ்ந்த மட்டம் எது உயர்ந்த மட்டம் எது என்பதை நிச்சயிக்கவும் முற்படும் பொழுது, அவர்கள் அபிப்ராயபேதங் கொண்டு, காரசாரமாக வாதிக்கிருர்கள். இதர ஆளும் வர்க்கங்களைப் போலவே, இந்தியாவின் ஆளும் வர்க்கமும் அதன் அறிவாளிகளும், இன்றைய உறவுகளே எக்காலத்துக்கும் மிக உயர்தவையென்றும் தலை சிறந்தவையென்றும் கருதுகின்றனர்.

எனவே சரித்திரத்தை ஆராயும் நாம், ஆரியர்களின் சமூக வாழ்விலும் சரித்திரத்திலுமுள்ள இந்தக் கட்டத்துக்கு வரும் பொழுது, சொத்துரிமைப் பிரச்னை கட்டவிழ்த்து விடுவதை விடவும் பெரியதான சூராவளியைக் கிளப்பிவிடும் துறையில் பிரவேசிக்கிரேம். முதன் முதலில், பத்தொன்பதாம் நூற்ருண்டின் மத்தியக்

காலத்தில், இந்தப் பொருளை ஐரோப்பாவில் ஆராய்ந்தார்கள்; பல்வேறு சூல் சமூகங்களில் பல்வகை திருமண முறைகள் இருந்ததைச் சரித்திரக்காரர்கள் கண்டார்கள்; நிகழ்கால வழக்கங்கள் சிலவற்றில் அந்த முறைகளின் மீதமிச்சங்களைக் கண்டார்கள். ஆனால் அப்பொழுது அவை பிற்பட்ட மக்களுக்கு உரிய விசித்திரமான கருத்துக்களாகவோ தற்செயலான நடைமுறைகளாகவோ கருதப்பட்டு உதாசீனம் செய்யப்பட்டன. புராதன சமூகத்தின் 'கோஷ்டித் திருமணத்திலிருந்து' தாய்வழிச் சமுதாயம் தோன்றியதென்றும், தாய்வழிச் சமூகமாகவே ஒவ்வொரு சமுதாயத் தொகுதியும் உதயமாயிற்றென்றும் பேஸ் கோபன் நிரூபித்த பொழுது, ஜனங்கள் அதை எதிர்த்துக் கண்டனம் செய்தனர். மனிதனின் சமூகப் பொருளாதார உறவுகளின் அனிச்சைச் செயலாகக் குடும்பம் தோன்றுகிறதென்ற தத்துவத்தை, மனிதனுடைய பொருளுற்பத்தி முறையின் ஒவ்வொரு சகாப்தமும் அந்த சகாப்தத்தின் குடும்ப முறையைத் திர்மானிக்கிறதென்ற தத்துவத்தை, மார்கனும் மார்க்ஸும் எங்கல்ஸும் சரித்திர இயல் பொருள் முதல் வாதத்தின் அடிப்படையில் உருவாக்கியபொழுது, பெண்களை "தேசீய மயமாக்க" வேண்டுமென்று மார்க்ஸீயம் கூறுவதாக ஐரோப்பிய பூர்ஷுவாக்கள் அவதூறு செய்தனர். இந்திய பூர்ஷுவா அறிவாளிகளில் சில பகுதியினர், இந்தியாவிலும் அவ்வாறு அவதூறு செய்வதற்கு முயற்சித்து வருகின்றனர். ஆனால் பெண்களையும் ஒரு உடமையாகக் கருதும் பூர்ஷுவாக்களுக்கு அது முற்றிலும் இயல்பானதொரு முடிவுதான் என்றே நாம் சொல்ல வேண்டியதாகிறது. தொழிலாளி வர்க்கம் அத்தகைய முடிவுகளைக் கண்டு நகைக்கிறது.

பூர்ஷுவா ஹிந்து அறிவாளியும் அவருடைய சமுதாய வைதீகமும் மார்க்ஸீயத்தின்மீது கல் எறிவதற்கு முன்னால், மற்றவரைவிட அதிகமாக யோசிக்க வேண்டும்; ஏனென்றால், எந்தத் தெய்வங்களை அவர் தினசரி பூஜிக்க வேண்டுமென்று கூறப்படுகிறதோ அந்தத் தெய்வங்கள், இன்று நல்லொழுக்கமாகக் கருதப்படும் நெறியில் புணர்ச்சி உறவுகளைக் கொள்ளவேயில்லை. நவீன இந்தியனுடைய சமுதாய ஒழுக்கத்தின் வெறுப்புக்குப் பாத்திரமான சகல வகைப்பட்ட திருமண உறவுகள

அல்லது புணர்ச்சி உறவுகளும் ஹிந்து தெய்வங்களிடையிலும் ஹிந்து மாவீரர்களிடையிலும் நிலவியதாக 'புனிதமான' ஹிந்து வரலாறு எடுத்துரைக்கிறது. சுருங்கச் சொன்னல் இந்த விஷயத்தைச் சரித்திர ரீதியாக ஆராய்ந்தறிய வேண்டும்; அதுவே, அநாகரீகக் காலத்து பூர்வீகக் கம்யூனைப்போலவோ பூர்ஷுவா நாகரீகத்தின் வர்க்க அடிமைத் தனத்தைப்போலவோ இல்லாத ஒரு உயர்ந்த சமுதாய ஸ்தாபன முறையை அடைவதற்கு உதவியாகவிருக்கும்.

புராதன ஹிந்து எழுத்தாளர்கள் அந்த மெய்ப் பொருளுக்குரிய சகாப்தத்துக்கு அடுத்த காலத்திலேயே வசித்தார்கள்; மேலும் தமது சகாப்தத்தின் சமூக-வர்க்க உறவுகளுக்கோ கடந்த கால நினைவுகளுக்கோ முலாம் பூசுவதில் அவர்களுக்கு அவ்வளவு அக்கரை இல்லை; எனவே, உடமை உறவுகள் சம்பந்தமாகவோ, புணர்ச்சி உறவுகள் சம்பந்தமாகவோ, சங்கடமான உண்மைகள் இருப்பதை மறைப்பதற்கு அவர்கள் முயற்சிக்கவில்லை. தமது சமூகத்தின் ஆண்பால்-பெண்பால் உறவுகள், அதற்கு முற்பட்ட சமூகத்தின் ஆண்-பெண் உறவுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருப்பதை அவர்கள் ஒப்புக்கொள்கிருர்கள். நான்கு யுகங்களும் "செல்வ உற்பத்திக்காக" வெவ்வேருன சமூகப் பொருளாதார உறவுகளைப் பெற்றிருந்ததைப் போலவே "வமிச விருத்திக்காக" வெவ்வேறு வகைப்பட்ட புணர்ச்சி உறவுகளைக் கொண்டிருந்தனவென்று தமது சொந்தப் பாணியில் அவர்கள் குறிப்பிடுகிருர்கள். மகத்தான குடும்பத் தலைவரான பீஷ்மர் நான்கு யுகங்களின் ஆண்-பெண் உறவுகளை சங்கல்பம், சம்ஸ்பரிசம், மைதுனம், துவந்தம் என்று வேறுபடுத்திப் பெயர் சூட்டுகிருர்; அவை முறையே கிருத, திரேதா, துவாபர, கலியுகங்களுக்கு உரியதென்று அவர் கூறுகிருர். இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கும் புராதனக் குல சமூகங்களிடையே திருமணமுறை வளர்ச்சியடைந்ததைக் குறித்து நாம் பெற்றிருக்கும் அறிவின் உதவியைக் கொண்டு, இந்த நான்கு கட்டங்களையும் புரிந்துகொள்ள முடியும். சங்கல்ப உறவுகள் பரிபூர்ணக் கலப்பு உறவுகளாகும்; எத்தகைய சமூகத் தடையோ தனிநபர் தடையோ இராத வகையில், இஷ்டப்பட்டவர்கள் கூடிப் புணரும் உறவுகளாகும். மிகவும் நெருங்கிய உற

வினர்களுக்கிடையே புணர்ச்சி உறவுகள் கூடாதென்று தடை செய்யப்பட்ட பொழுது, ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்வதற்குத் தடை ஏற்பட்ட பொழுது, கோத்திரங்களின் தொகுதி வழியில், வெவ்வேறு கோத்திரத்தினர் திருமணம் புரிந்துகொண்ட பொழுது, ஸம்ஸ்பரிச உறவுகள் நிலவின. மைதுனம் என்பது இயற்கைத் திருமணத்தின் கடைசிக் கட்டமாகும்; அது கோஷ்டித் திருமணத்தின் கடைசிக் கட்டத்தைக் குறிக்கிறது; ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும், விருப்பம் உள்ளவரை, மற்றவர்களை விலக்கிவிட்டு, தமக்குள்ளே புணர்ச்சி உறவுகளைக் கொண்டு ஜதையாக வாழ்ந்தனர். இவ்வாறு இஷ்டம் உள்ளவரையில் ஜோடியாக வாழ்ந்த முறையை மைதுனம் குறிக்கிறது. துவந்தம் என்பது கலியுகத்தில் ஒருதார விவாகத்தால் ஏற்படும் ஜோடியாகும்; இதில், பெண் ஆணுக்கு அடிமை; ஆணுக்குச் சொத்துரிமையின் பலம் இருக்கிறது; அவனுக்கே சொத்துரிமை ஏகபோகமாக விருக்கிறது; அந்தப் பலத்தின் அடிப்படையில் அவன் அவளுக்கு மாறுபட்டவனாக இருக்கிறான்.

இன்றையத் திருமணமுறை புராதனமானது அல்ல; அது பரிணாமத்தில் ஏற்பட்ட ஒரு கட்டம்; சமீபகால வளர்ச்சி; ஹிந்துக்களின் பரம்பரை இலக்கியம் முழுமையும் இந்த உண்மையை ஒப்புக்கொள்கிறது. நோயாளியாக விருந்த பாண்டு மன்னன், குழந்தைகளைப் பெறுவதற்காக மற்றவர்களுடன் கூடும்படித் தன் மனைவிகளான குந்தியையும் மாதுரியையும் கேட்டுக்கொள்கிறான்; குந்திக்கு அது பிடிக்கவில்லை; எனவே, தனித் தனியான ஒரு தாரத் திருமண ஜோடிகள் இருந்திராத பண்டைக்கால நடைமுறையைப் பற்றி பாண்டு குந்திக்கு நீண்டதொரு உபன்னியாசம் செய்கிறான். குந்தி இளமங்கையாக விருக்கும்பொழுது, சூரியன் அவளிடம் வருகிறான்; அவள் பழைய சுயேச்சையான, இயற்கையான காதல் வேகத்தைக் காட்டும் பொழுதே, மாறிக் கொண்டும் புதிய கணிப்புகளை ரீங்காரம் செய்துகொண்டும் உள்ள உலகத்தில் ஏற்படக்கூடிய பலாபலன்களை எண்ணி சற்றுத் தயங்குகிறாள். அப்பொழுதும் சூரியன் பண்டைக்கால நடைமுறையை மேற்கோள் காட்டியே அவளுடைய சந்தேகங்களைப் போக்குகிறான். பீஷ்மனுடைய சகோதரன் மகப்பேறு இல்லாமல் இறந்தபின்,

அவனுடைய மனைவி வேற்று மனிதர்களுடன் கட்டாயமாகக் கூடி, சொத்தையும் ராஜ்யத்தையும் உரிமையாகப் பெறக்கூடிய குழந்தைகளை ஈன்றெடுக்க வேண்டுமென்று அவனுடைய தாயார் விரும்புகிருள்; அப்பொழுது பீஷ்மரும் அதை ஆதரித்து, பண்டைக்கால நடைமுறையை மேற்கோள் காட்டுகிருர். கலியுகத்தில் பெண், ஏக ஸ்திரீ விவாகத்துக்குக் கட்டுப்பட்டிருக்கிருள்; அந்த முறையில் அவள் ஒரு கணவனுடன்தான் வாழ வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்ட போதிலும், அவன் ஒருத்தியுடன்தான் வாழவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது; குழந்தைகள், பண்டைக்காலத்திலிருந்ததைப் போல, தாயார் மூலம் அறியப்படுவதில்லை; தந்தை மூலமே அறியப்படுகின்றன; இந்த வகைத் திருமணமே குடும்பத்துக்கு அடிப்படையாக விருக்கிறது. கலியுகத்துக்குரிய இந்தத் திருமணமும் குடும்பமும் முற்றிலும் புதியவையாகும்; குறிப்பிட்ட தேவைகளுக்கு உகந்ததாக சமுதாயம் கண்டுபிடித்த யுக்தியாகும்; இது இயற்கையானதல்ல; பாரதக் கதையும் புராணங்களும் வேதங்களும் முன்பின் முரணில்லாத வகையில், திரும்ப வலியுறுத்துகிற கருத்து இதுவே.[1]

அப்படியானல், பண்டைக்காலத்து சமுதாய—இயற்கை உறவும் குடும்பமும் எத்தகையது?

இரத்த சம்பந்தமுள்ள உறவினர்கள் பேதா பேதமில்லாமல் கூடிப் புணர்ந்து வமிசவிருத்தி செய்வதின் விளைவுகளை பார்த்துப் புரிய காட்டு மனிதர்களுக்கு நீண்டகாலம் பிடித்தது. ஆரியர்கள் அதற்கு விதிவிலக்கு அல்ல. சிறு சமூகத் தொகுதியில் வாழ்ந்த ஆண்களும் பெண்களும், புரியாத சுபாவத்தைப் படைத்த இயற்கைக்கு எதிராக ஒன்றுபட்டு நின்றனர்; அவர்கள் கூட்டாக வேலை செய்தனர், கூட்டாக வாழ்ந்தனர்; தமக்குள்ளே கூடிப் புணர்ந்து வமிசத்தை விருத்தி செய்தனர். பொருளாதாரத்தில் இருந்த மாதிரியே, புணர்ச்சி விஷயத்திலும் அவர்கள் காட்டு மனிதர்களாக விருந்தனர்; அதாவது, பாதி மனிதர்களாகவும் பாதிப் பிராணிகளாகவும் இருந்தனர்; இயற்கையை எதிர்த்துக் கொண்டே இயற்கையிலிருந்து வளர்ந்து கொண்டிருந்தனர்;

1 இதுபற்றி பாரதக் கதையில் பல குறிப்புக்கள் வருகின்றன.

இயற்கையைப் புரிந்துகொண்டு அதன்மீது ஆதிக்கம் பெற முயன்று கொண்டிருந்தனர். மகனும் அன்னையுமாகவோ, தந்தையும் மகளுமாகவோ, சகோதரனும் சகோதரியுமாகவோ உள்ள ஆண் பெண்களுக்கிடையே புணர்ச்சி உறவுகள் இருப்பது விரும்பத்தக்கதல்ல என்பதை அவர்கள் அறியவில்லை எனவே முறை கெட்ட புணர்ச்சி குற்றமாகக் கருதப்படும் இந்தப் புணர்ச்சி உறவுகள் தடை செய்யப்படவில்லை. இவற்றின் மீதமிச்சங்களை இன்றைய சமுதாயப் பழக்க வழக்கங்களில் எங்குமே காணமுடியாது. ஆனால் அத்தகைய கட்டம் இருந்ததென்பதை ஆரியர் புராணம் எடுத்துக்காட்டுகிறது. ஆரியர்களுடைய தெய்வங்கள் பலவற்றின் பிறப்பு, வளர்ச்சியைப் பற்றியும் அவர்களுடைய பிரஜாபதிகளைப் பற்றியும் படைப்பைக் குறித்தும் ஆரியர் புராணங்கள் கூறுவதிலிருந்து இதை நன்கறியலாம். ஆனால் இந்த உதாரணங்களைப் பயங்கரமானவையாகக் கருதாமல், அவை தெய்வங்களைப் பற்றிய விஷயங்களாயிருப்பதால் அனுமதிக்கக் கூடியவை என்று வியாக்கியானம் செய்யப்படுகிறது.

ஐதரேய பிராம்மணம், படைப்பைப் பற்றி விளக்கம் தரும்பொழுது கூறுவதென்னவெனில், ஆதி படைப்புக் கர்த்தாவான பிரஜாபதி, படைப்புக் கருமத்தை முன்னிட்டு தன் மகளை மணம் செய்துகொண்டார் என்பதாகும். இதே முறையில், படைப்புக் கர்த்தாவான பிரமனைப் பற்றி, வாயு புராணமும் மத்ஸ்ய புராணமும் குறிப்பிடுகின்றன. பிற்பாடு, இத்தகைய உறவுகள் தடை செய்யப்பட்டபொழுதும், பிரஜாபதி பிடிவாதமாக விருந்தாரென்று தோன்றுகிறது; ஆனால் அவர் உஷராகச் செயலாற்ற வேண்டியிருந்தது. எனவே அவர் மான் உருக் கொண்டு ரோஹித் என்ற தன் மகளிடம் சென்றார். அவளும் ஒரு ரோஷிதா மான் (சிவந்த மான்) உருக் கொண்டாள். ஆனால் தெய்வங்கள் கண்காணிப்பாக இருந்தனரென்று தோன்றுகிறது; பிரஜாபதி தன் மகளுடன் கூடுவதற்கு முன், அவர் ஒரு அம்புக்குப் பலியானார். இந்தச் செயலைக் குறித்து ரிக் வேதம் கோபாவேசம் கொள்ளவில்லை; பிரஜாபதி, அவருடைய மகள் ஆகிய இரண்டு பாபிகளும் சுவர்க்கத்தில் இடம் பெற்றார்களென்றும், "வேடர்கள்" (Hunters) எனப்படும் தொகுதியைச் சேர்ந்த நட்சத்திரங்களாக அவர்கள்

ஒளிர்வதாகவும் நமக்கு உறுதி கூறுகிறது (ஐதரேய பிராம்மணம், 3-33; 5-32). வான சாத்திர நிகழ்ச்சிகளை வர்ணிக்கும் உள்ளர்த்தத்தைக் கொண்ட அணி அலங்காரமாக இதை வியாக்கியானம் செய்யலாம். ஆனால், இது வாழ்வின் யதார்த்த உண்மைகளுடைய பிரதிபலிப்பாக மனிதர்களின் மனதில் மெய்யாகவே இல்லாவிட்டால், இந்தக் கற்பனை வர்ணனை அல்லது சித்தாந்தத்தைப் பயன்படுத்துவதற்குக் காரணமேயில்லை.

இந்த ரகத்தைச் சேர்ந்த பிரபலமான உதாரணங்களை ஹரி வமிசம் குறிப்பிடுகிறது. விஷிஸ்த பிரஜாபதியின் பெண் ஷடரூபா வயது வந்தவுடன் தந்தையின் மனைவியாகி விடுகிறாள் (இரண்டாவது அத்தியாயம்). மனு தன் மகளான இளாவைத் திருமணம் செய்து கொண்டார் (பத்தாவது அத்தியாயம்). ஜன்னு தன் மகளான ஜான்னவி கங்காவைத் திருமணம் செய்துகொண்டார். மேலும் சிக்கலான உதாரணங்களை ஹரி வமிசம் கொடுத்துக் கொண்டே போகிறது. பிரசேதர்களான பத்து சகோதரர்கள் இருந்தனர்; அவர்களுடைய மகன் ஸோமன். ஸோமனுடைய மகள் மரிஷா. பத்து சகோதரர்களும் சோமனும் மரிஷாவுடன் கூடி, தக்ஷபிரஜாபதி என்ற மகனைப் பெற்றனர். பிற்பாடு, இந்த தக்ஷன் இருபத்தியேழு பெண்களுக்குத் தகப்பனானான். அவன் வம்ச விருத்திக்காக தன் பெண்களை தன் தந்தையான சோமனிடம் ஒப்படைத்தான். தக்ஷனே பிரமனின் மகனாகவும் குறிப்பிடப்படுகிறது. தக்ஷன் தன் மகளை அவளுடைய தாத்தாவுக்குக் கொடுத்தான். அதன் விளைவே பிரசித்திபெற்ற நாரதர்.

வியாசர், வைஷம்பாயனர் போன்ற புராதன எழுத்தாளர்கள் ஜனமேஜயராஜனிடம் இத்தகைய வரலாற்றை சமுதாய நினைவிலிருந்து சொல்லிக் கொண்டு வந்தபொழுது, அந்த அரசன் ஆச்சரியமடைந்தான். இவை எப்படி சாத்தியமாயிருந்திருக்குமென்று கேட்டான். அவையெல்லாம் உண்மையான சரித்திரம் ('புராதன இதிஹாஸம்') என்றும் ஆதிக்காலத்து சமூக ஸ்தாபன முறையான தர்மம் அப்படிப்பட்டதென்றும் எனவே, அந்தக் காலத்தில் அவை அனுமதிக்கத் தக்கவையாயிருந்தனவென்றும் அதிர்ச்சியடைந்த ஜனமேஜயனுக்கு நிதானமாக தெரிவிக்கப் பட்டது.

அத்தகைய சமூகத்தில், உறவினர்களுக்கிடையே எத்தகைய வேற்றுமையும் கிடையாது; எனவே, திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட புணர்ச்சி உறவுகளைத் தடை செய்யக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. ஆனால் இந்தக் கலப்புப் புணர்ச்சி வமிச விருத்திக்குக் கேடு விளைவிப்பதை அவர்கள் அறிந்துகொண்டனர். அதன் பிறகு, முதன் முதலாக, பெற்றோர்களுக்கும் அவர்களுக்குப் பிறந்தவர்களுக்குமிடையே புணர்ச்சி உறவுகள் இருக்கக்கூடாதென்று எண்ணி, அந்தத் தடையை அமுலாக்கினார்கள்; இவ்வாறாக, முதன் முதலாகக் குடும்பம் ஏற்பட்டது; அதற்கு இரத்தக் கலப்புக் குடும்பம்[1] என்று பெயர். இங்கு, தலைமுறைகளின் வழியில் திருமணங்கள் ஏற்பாடாகின்றன. தாத்தாக்களும், பாட்டிகளும் ஒருவருக்கொருவர் புருஷன்-பெண்சாதியாக விருக்கின்றனர்; அதைப் போலவே அவர்களுடைய மக்களான தாய் தந்தையர்கள் அனைவரும் ஒருவரோடொருவர் பத்தினி-பதி உறவைக் கொள்கின்றனர்; இதில் சகோதரனும் சகோதரியும் பெரியன்னை சிற்றன்னைகளின் புத்திர, புத்திரிகளும் பரஸ்பரம் கணவர்களாகவும் மனைவிகளாகவும் உள்ளனர்.

சகோதரன்-சகோதரியின் புணர்ச்சிக்குத் தடை செய்யப்பட்டதே இரண்டாவது கட்டமாகும். இந்த முன்னேற்றம் ஏற்படுவதில் கஷ்டம் அதிகமாயிருந்தது; தந்தைக்கும் மகளுக்கும் தாய்க்கும் மகனுக்கும் இடையே உள்ள வயது வித்தியாசத்தைவிட சகோதரன்-சகோதரி வயது வித்தியாசம் குறைவாக விருப்பதே காரணம். இந்தத் தடை படிப்படியாக அமுலுக்கு வந்தது; ஆரம்பத்தில் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதர-சகோதரிகளின் சம்பந்தம் தடுக்கப்பட்டது. இது எவ்வளவு சிரமமாயிருந்ததென்பதை, ரிக் வேதத்தின் பிற்காலத்துக்கு உரிய யமன்-யமி உரையாடலிலிருந்து அறியலாம். யமி தன் சகோதரனை யமனின் அன்பை வேண்டுகிறாள்; தன்னுடன்கூடி மகப்பேறு அளிக்க

[1] பின்னால் இரத்த சம்பந்த உறவினர்களாயில்லாதவர்கள் திருமணம் செய்துகொண்டு குடும்பத்தை அமைத்துக்கொள்வதற்கு மாறாக, இரத்தக் கலப்பு உறவினர்கள் திருமணம் செய்துகொண்டு அமைத்த குடும்பமே இரத்தக் கலப்பு குடும்பம் எனப்படுகிறது. (மொ-ர்).

வேண்டுமென்று அவனைக் கேட்கிறாள். தெய்வங்களின் மாபெரும் காவலனான வருணன் பார்த்துக் கோபங் கொள்வானென்று காரணம் கூறி, யமன் அவள் கோரிக்கைக்கு இணங்க மறுக்கிறான், அவன் சொல்வதற்கு மாறாக, தெய்வங்கள் அந்தச் செயலை ஆதரிப்பார்களென்று யமி வாதிக்கிறாள். ரிக் வேதத்திலுள்ள இந்த உரையாடலின் கடைசிப் பகுதி கிடைக்கவில்லை. ஆனால் யமன் இறுதியிலும் மறுத்து விட்டானென்ற முடிவையே ஊகித்தால்கூட, பழைய வழக்கத்தை எதிர்த்துப் போராடுவதிலிருந்த கஷ்டத்தை இதிலிருந்து அறியலாம். தைத்திரீயப் பிராம்மணம் கூறுவதாவது:—பிரஜாபதியின் மகளான ஸீதா-ஸாவித்திரி தன் சகோதரனான ஸோமனின் அன்பை விரும்பினாள். ஆனால் ஸோமன் அவளை விரும்பவில்லை; இன்னொரு சகோதரியான சிரத்தாவையே நேசித்தான். எனவே ஸீதா-ஸாவித்திரி தன் தந்தையிடம் யோசனை கேட்டாள்; அவர் அவளுக்கு ஒரு தாயித்து கொடுத்தார்; அவள் ஸோமனுடைய அன்பைப் பெறுவதில் வெற்றியடைந்தாள்.[1] மகாபாரதத்தின் ஆதி பருவமும் ஹரி வம்சமும், பிரமனிலிருந்து குடும்பம் தோன்றியதைப் பற்றி விவரிக்கும்பொழுது கூறுவதாவது:—பிரமாவின் வலது கட்டைவிரலிலிருந்து தோன்றிய தக்ஷன், பிரமாவின் இடது கட்டைவிரலிலிருந்து தோன்றிய தக்ஷாவைத் திருமணம் செய்துகொண்டான்; அதாவது அவனுடைய சகோதரியைத் திருமணம் செய்துகொண்டான். அவர்களுக்கு அறுபது பெண்கள் பிறந்தன. தக்ஷனுக்கு மாரீசி, தர்மன் என்ற இரண்டு சகோதரர்கள் உண்டு. தர்மன், தக்ஷனுடைய பெண்களில் பத்து பேரை மணம் புரிந்துகொண்டான்; மாரீசியின் மகனான காசியபன், தன் பெரியப்பாவான தக்ஷனின் பெண்களில் பதின்மூன்று பேரை மணம் செய்துகொண்டான். இரத்தக் கலப்பு உறவினர்களுக்குள் மணமாகி வமிச விருத்தி செய்யக்கூடாதென்பதற்காகவே, இந்த உறவுகளும் தடுக்கப்பட்டன. இந்தத் தடைகளும் ஏற்பட்டதின் விளைவாக, கண-கோத்திரம் என்ற ஸ்தாபனம் ஏற்பட்டது; இதன் உறுப்பினர்கள் ஒருவரையொருவர் மணம் செய்துகொள்ள முடியாது; அவர்கள் தமது கணவர்களையும் மனைவிகளையும் கோத்

1 தைத்திரீயப் பிராம்மணம், 3-10, 9-4.

திரத்துக்கு வெளியே தேடவேண்டும். முன்னால் இரத்தக் கலப்பு[1] உறவினர்கள் திருமணம் செய்துகொள்வதே விதியாக விருந்தது; அதுவே இப்பொழுது தடை செய்யப்பட்டது. இவ்வாறாக ஸகோத்திரத் திருமணம் (ஒரே கோத்திரத்தில் திருமணம்) விலக்கப்பட்டது. கோத்திரம் என்பது பூர்வீகக் கம்யூனின் ஆண்-பெண் புணர்ச்சி ஸ்தாபனமாக விருந்தது; அதில், சகல கணவர்களும் மனைவிகளும் ஒருவருக்கொருவர் பொதுவாகவிருந்தனர்; அதாவது அதில் கோஷ்டித் திருமணம் இருந்தது. ஆனால் இனிமேல், கணவர்கள் மனைவிகளுடைய இரத்த சம்பந்த உறவினர்களாக விருக்கமுடியாது. எனவே, கணவர்களும் மனைவிகளும், உறவு முறையில்லாத வெவ்வேறு தொகுதிகளைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும்; அதாவது வெவ்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாயிருக்க வேண்டும். பண்டைக்கால ஹிந்து சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில், கோத்திரத்துக்கும் மணவினைக்கும் கண்டிப்பான பிணைப்பு இருந்திருக்கிறது; இரத்தக் கலப்பு உறவினர்கள் மணந்துகொள்ளாத வகையில் இருந்த கோஷ்டித் திருமணத்தை அந்தப் பிணைப்பு அஸ்திவாரமாகக் கொண்டிருக்க வேண்டும்.

அஸகோத்திர மணவினையில் (சொந்த கோத்திரத்தைச் சேராதவர்களுடன் மணவினையில்) பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டது. கோஷ்டித் திருமணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, ஒருதார விவாக முறை அமுலுக்கு வந்தபின், கோத்திரம் சம்பந்தமான வழிமுறை அர்த்தமற்றதாகிறது; எனவே, ஒரு சடங்காகவும் வழக்கமாகவும் அந்த வழிமுறையை வைதீகம் விடாப் பிடியாக பற்றிக் கொண்டபோதிலும், அது ஹிந்துத் திருமணத்தில் வகித்துவந்த ஸ்தானத்தை இழந்து விட்டது.

---

1 இரத்தக் கலப்பு உறவினர்களின் கோஷ்டித் திருமணத்தையும் ஜதைக் குடும்பத்தையும் உத்தலகாவின் மகன் சுவேதகேது தடை செய்ததாக மகாபாரதத்தில் குறிப்பிடப்படுகிறது. தன் சம்மதத்துடன் உத்தலகாவின் மனைவியை ஜோடி சேர்த்துக் கொள்கிறவன், தன் உரிமை மீது பாத்தியதை கொண்டாடுகிறவனாகிறானென்றும், எப்படியென்றால் அவன் அவனுடைய கோத்திரத்தைச் சேர்ந்தவனென்றும் சுவேதகேது கூறுகிறான்.

இரத்தக் கலப்பு உறவினராயில்லாதவர்களுக்கிடையேதான், அதாவது, வெவ்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களுக்கிடையேதான், மணவினை முடிக்கலாமென்றாலும், அந்த உறவு ஒரே இனத்தினருக்குள், ஒரே சமூகத்துக்குள் இருக்கவேண்டும், பூர்வீகக் கம்யூனின் சிறு சமூகத் தொகுதி, ஆரம்பத்தில், இரத்த சம்பந்தமுடைய உறவினர்களின் தொகுதியாகவே, அதுவும் நெருங்கிய இரத்தக் கலப்பு உறவினர்களுடையதாகவே இருந்ததால் இந்தப் பிரச்னை எப்படி தீர்க்கப்பட்டது ?

காட்டு மனிதர்களாக விருந்த ஆரியர்கள் சின்னஞ் சிறு சமூகங்களில் வாழ்ந்தனர் ; தமக்குள்ளே வமிச விருத்தி செய்து வந்தனர். இந்தக் கஷ்டமான நிலைமையில், பொருளுற்பத்தி சக்திகளின் வளர்ச்சி அவர்களுக்கு உதவியது. நெருப்பு, கால் நடைகள் ஆகியவற்றின் சகாயத்துடன், ஜனத்தொகை பெருகத் தொடங்கியது ; கம்யூன்கள் அளவில் பெரிதாகின ; எனினும், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, குறுகிய வரம்புக்குட்பட்டிருந்தபடியால், அவற்றின் உதவியுடன், கம்யூனிஸ்ட் குடிகளின் பெரிய இருப்பிடங்களை நிர்மாணிக்க முடியவில்லை. எனவே, குறிப்பிட்ட அளவுக்குமேல் பெருகிய கூட்டுக் கம்யூன் குடும்பம் பிரியவேண்டியதாயிற்று. அத்தகைய சந்தர்ப்பங்களில், பழைய குடியிருப்புச் சமூகங்கள் பிரிந்து புதிய குடியிருப்புச் சமூகங்கள் அல்லது கோத்திரங்கள் தோன்றுவதுடன் கூடவே, புதிய புணர்ச்சித் தடைகளும் உறவுகளும் அமுலுக்கு வந்தன. ஒருத்தியோ ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரிகளோ ஒரு தொகுதியின் மையமானார்கள். அவர்களை மணந்துகொள்ள முடியாத அவர்களுடைய உடன்பிறந்த சகோதரர்கள் இன்னொரு தொகுதிக்கு மையமானார்கள். அவர்களுடைய சகோதரிகள் தமக்குப் பொதுவான கணவர்களுக்குப் பொதுவான மனைவியராக விருந்தனர் ; ஆனால் இப்பொழுது இந்தக் கணவர்கள் அவர்களுடைய உடன்பிறந்த சகோதரர்கள் அல்ல. இத்தகைய கோஷ்டித் திருமணத்தில், பெற்றோர்களில் தாயைமட்டுமே திட்டவட்டமாக அறியமுடியும் ; யக்ஞப் பொருளாதாரத்தில் வகித்த ஸ்தானத்தின் மூலமாக, அவள் குடியிருப்பில் ஆதிக்கம் வகித்தாள் ; எனவே, வம்சாவளி, தாய் வழியில் ஏற்பட்டது. எனவே சகோதரிகளின் குழந்தைகள்

கண-கோத்திரத்தை வம்ச உரிமையாகப் பெற்றனர்; சகோதரர்கள் அந்தக் கணத்தைவிட்டுப் பிரிந்து, தமது மனைவியர்கள் உள்ள கணத்துக்குச் செல்லவேண்டியதாயிற்று. கூட்டுக் குடியிருப்பு அல்லது கம்யூனிஸ்ட் குடியிருப்பும் கோஷ்டித் திருமணமும் தாய் வழிக் குலத்துக்கு அஸ்திவாரமாயிற்று. சகல சமுதாயங்களும் இவ்வாறே தோன்றின; ஆரியர் சமூகமும் இவ்வாறே தோன்றியது.

தக்ஷனுக்கு அறுபது புத்திரிகள்; அந்த அறுபது சகோதரிகளும் 10, 13, 27, 4, 2, 2, 2 பேர்களடங்கிய ஏழு கோஷ்டிகளாகப் பிரிந்தனர்; ஒவ்வொரு கோஷ்டியும் ஒரு பிரஜாபதியைக் கணவனுகப் பெற்று, உலகத்தின் படைப்பைத் தொடங்கினுர்கள். இந்தக் கதையில், சகோதரிகளே கண-கோத்திரங்களை ஸ்தாபித்தார்களென்பதைப் பார்க்கிருேம். பிற்காலச் சந்ததியாருக்கு, பல ரிஷிகளின் வம்சாவளிகள், ஆண் பெயர்களாலேயே அறிமுகமாயிருக்கின்றன; எனினும், ரிஷிகளின் வம்சாவளிகளைக் குறிக்கும் கோத்திரக் குடும்பப் பெயர்கள், அவற்றை ஸ்தாபித்த பெண்களால் வழங்கப்படுவது அருமையான நிகழ்ச்சியென்று சொல்ல முடியாது.

இந்தத் திருமண—வம்சாவளி முறை, குடும்ப ஸ்தாபனம், திருமணம் ஆகியவற்றைப் பற்றிய தற்காலக் கருத்துக்களுக்கு நேர் எதிரானவை. எனவே, அந்த முறை இருந்ததையே, இந்தியாவிலும் ஐரோப்பாவிலுமுள்ள பூர்ஷுவா அறிஞர்கள் பிடிவாதமாக மறுத்து வந்திருக்கின்றனர். ஆனுல், பழக்கவழக்கமாகப் பிற்காலத்தில்கூட எஞ்சி நின்ற சரித்திர உண்மைகள், துரதிர்ஷ்டவசமாக, இந்த அறிஞர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டன. அத்தகைய குடும்பத்தில் பிறந்தவர்களை, பெற்ற தாயின் மக்களாகக் கருதுவதுடன், கம்யூனின் மக்களாகவும் கருதுவது, அந்தச் சமூகத்துக்கு முற்றிலும் இயல்பாகவிருந்தது. எனவே, குழந்தைகள் முதலில் கோத்திரப் பெயர்களையும் அதற்கடுத்து சொந்தப் பெயர்களையும் பெற்றிருந்தன; அவர்கள் கோத்திர-அபத்யாக்கள், (அதாவது) கணத்தின் குழந்தைகள் எனப்படுவர். தாய் வழிச் சமூகம் வீழ்ச்சியடைந்து, ஏகஸ்திரீ விவாகக் குடும்பத்தின் தந்தை

வழி வம்சாவளி ஸ்தாபிக்கப்பட்ட பொழுது பெற்ரேரின் சொந்தக் குழந்தை அனந்தா-அபத்யா என்று அழைக்கப்பட்டது. இயல் பாகவே, மேற் சொன்ன தாய் வழிச் சமூகத்தில், ஒழுக்கங் கெட்டு உண்டான குழந்தையென்பதே கிடையாது ; வெறுப்புக்கு உரித் தாகி, ஆதரிப்பார் யாருமில்லாமல், தெருவில் திரிந்து துன்புறும் அத்தகைய குழந்தையே கிடையாது.

தாய்வழி ஏற்பாடு குறிப்பிடத்தக்க பிடிவாதத்துடன் இந்தியா வில் நீடித்து வந்திருக்கிறது. திரௌபதி பல புருஷ விவாக முறைப்படிப் பாண்டவர்களை மணந்துகொண்டது வெறுங் கட்டுக் கதையல்ல ; இன்று இந்தியாவின் சில ஜாதிகளில் அதன் மீதமிச் சங்கள் இருப்பது கண்கூடான உண்மை. அவை, பூர்வீக ஆரியர் சமூகத்தில் கோஷ்டித் திருமணம் இருந்ததை மிகுந்த சக்தியுடன் மெய்ப்பிப்பதால், அந்த நிகழ்ச்சிகளை மறைக்கவோ வேறுவிதமாக வியாக்கியானம் செய்யவோ முடியாமல் சரித்திரக்காரர்கள் கஷ்டப் படுகிருர்கள். அவர்கள் கோஷ்டித் திருமண முறை இருந்ததை ஒப்புக்கொள்வதற்கு வெட்கப்படுகிருர்கள் ; ஏனென்ருல், அவர் களுடைய புனிதமான தெய்வங்களும் முன்னேர்களும் வாழ்ந்த பூர்வீகச் சமூகத்தை, தமது தந்தைவழிச் சமுதாய அடிமைத்தனத் தின் சட்டதிட்டத்துக்கு முற்றிலும் ஒத்த முறையில், எடை போடு வதற்கும் புனரமைப்பதற்கும், அவர்கள் விரும்புகிருர்கள். இத் தகைய விவகாரங்களில், மெய்பொருட்களை இருந்தபடியே எடுத் துக் கூறும் பீஷ்மரின் ஒளிவுமறை இல்லாப் போக்கு, சரித்திரத் துக்கு அதிக உதவி செய்கிறது ; அதைப்போலவே, அந்தக் கோஷ்டித் திருமணம் முன்னல் இருந்ததற்கும் இப்பொழுது இல் லாததற்கும், மாதரின் சுதந்திரத்தையும் நன்மதிப்பையும் புதிய உயர்ந்த தரத்தில் மீண்டும் நிலைநாட்ட விருக்கும் எதிர்காலக் கம்யூனிஸத்திலும் அது இருக்கப் போவதில்லை என்பதற்குமான காரணங்களை விளக்கும் காரல் மார்க்ஸின் சரித்திர இயல் பொருள் முதல்வாதமும், சரித்திரத்துக்கு அதிக உதவி செய்கிறது.

ஆதிக்காலச் சமூகம் தாய்வழிக் குலமாகத் தோன்றிய உண் மையை மறைத்துப் புதைப்பதற்கு, நவீன அறிஞர்கள் மட்டுமல்ல, தந்தைவழி ஏற்பாட்டுக்கு உரிய பண்டைக்கால எழுத்தாளர்களும்

முயன்றுர்கள். பூர்வீகக் கம்யூனின் தாய்—உரிமையும் கூட்டுச் சொத்துரிமையும் வெகு தொலேவுக்கு முன்னுலிருந்த வரலாற்றுக் காலத்துக்கு உரியவை; எனவே பழக்கவழக்கம், கர்ணபரம்பரை வழக்கு ஆகியவற்றின் மீதமிச்சங்களாகக் கிடைப்பதைத்தவிர அவற்றிற்குவேறு சரித்திர ஆதாரம் கிடைப்பதில்லே. தாய் வழி வம்சாவளி முறை வீழ்த்தப்பட்டு, தந்தைவழி ஏற்பாடு பூத்த சகாப்தத்தில் எழுதிய வியாசர் என்ற சரித்திரக்காரர் முற்பிதாக் களாகவிருந்த பிரஜாபதிகளுடன் உலக சரித்திரம் தொடங்கிய தாக எழுத முற்பட்டார், ஆனுல் அவருடைய முயற்சி பலிக்க வில்லே. பிரஜாபதி ஸ்தாபகர்களே அவர்களுடைய வம்சாவளிக ளுடன்குறிப்பிடும் பொழுது, அவர்களுடைய தாய்மார்களின் பெயர் களாலேயே குறிப்பிட வேண்டிய நிலேமை அவருக்கு ஏற்பட்டது. சரித்திராசிரியர் ஆணுக இருந்தபோதிலும், அவருடைய சமூகம் பெண்களே அடிமைப்படுத்தியதாக இருந்தபோதிலும், பெண்ணி னம் தடைகளேத் தகர்த்துக்கொண்டு முன்வந்து, ஆதியில் தான் வகித்த பெருமைக்குரிய ஸ்தானத்தைப் பறைசாற்றியது. (வேண் டும் பொழுது பார்த்துத் தெரிந்துகொள்வதற்காக, அனுபந்தத் தில், பதினெட்டு பொதுத் தாயார்களின் பெயர்களேயும் அவர் களிடமிருந்து உதித்த பதினெட்டு தாய்வழிக் கணங்களின் பெயர் களேயும் கொடுக்கிறேம். இவர்களுடைய போராட்டங்கள், சச்சரவு கள், விஸ்தரிப்புக்கள் ஆகியவற்றைப் பற்றியே மகாபாரதத்தின் ஆதிபருவத்திலும் வேதங்களிலும் உள்ள ஆதிக்கால வரலாறு முழுமையும் விவரிக்கிறது.)

ஒரு கண கோத்திரம் பிரிந்து, புதிய கண-கோத்திரம் தொடங்குவதைப் பற்றி ஸோம யாகச் சடங்கு விவரிக்கிறது. பிரி வதென்ற முடிவை முதலில் தெரிவிக்கும் முதல் சடங்கில் (பிரயா ணேஷ்டி, அதாவது பிரயாணம் பற்றிய இஷ்டி அல்லது யாகம்) அதிதி என்ற ஆதி மாதாவான பெண் தேவதை நடுமத்தியில் இருக்கிருர். பிரிவதென்ற முடிவுக்கு ஐந்து தேவதைகள் சகாயம் புரிகின்றன; அவை, பாத்திய-ஸ்வஸ்தி, அக்கினி, ஸோமன், ஸபிதா, அதிதி ஆகியவையாகும். பாத்ய-ஸ்வஸ்தி,பிரயாணத்தின் செளகரியத்தை அருளும் தேவதை; அக்கினி. புதிய குடியிருப்பை ஸ்தாபிப்பதற் காகப் பழைய குடியிருப்பிலிருந்து எடுத்துச் செல்லப்படும் நெருட்

பாகும்; ஸோமன், உணவுக்கும் இதர பதார்த்தங்களுக்கும் உரிய தேவதை; ஸவிதா என்பது, சூரிய ஒளியும் காற்றும் ஆகும். இந்த நான்கு தெய்வங்களும், நடந்து செல்லும் கணத்தினரின் நான்கு மூலையில் நிற்க, அதிதி என்ற ஸ்தாபகரும் தலைவியுமான ஆதி மாதா நடுமத்தியில் நிற்கிறார். (இந்த யாகச் சடங்கில்) அதிதிக்கு மட்டுமே அரிசியும் நெய்யும் கலந்த பிரத்தியேக ஹவனங்கள் கிடைக்கின்றன; இதர தேவதைகள் பொறித்த தான்யத்துடன் திருப்தியடைய வேண்டும். தந்தைவழி ஏற்பாடே ஆதியிலிருந்ததென்று நிலைநாட்டுவதில் உதவி செய்வதற்காக மக்லென்னனையும் அவருடைய சீடர்களையும் போன்ற அரை வேக்காட்டுப் படிப்பையுடைய பூர்ஷுவா வக்கீல்களின் உதவியுடன், குடும்ப வரலாற்றை எம்முறையில் வேண்டுமானாலும் புரட்டிப் பாருங்கள்; ஆதிக்கால சமூகத்தின் ஸ்தாபகராகவும் சிற்பியாகவும் இருந்தது தாய்வழிச் சமூகமே என்ற முடிவிலிருந்து நீங்கள் தப்பமுடியாது.

கோஷ்டித் திருமணம் அல்லது கோத்திரத் திருமணம் நடந்த காலத்திலேயே, குறுகிய காலத்துக்கோ அல்லது கூடிய காலத்துக்கோ, ஓரளவுக்கு நிலையான ஜோடியாக, ஒரு ஆணும் ஒரு பெண்ணும் கூடிவாழும் முறையும் இருந்தது. ஒருவன் பல பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தபோதிலும் ஒருத்தியைப் பிரதான மனைவியாகக் கொண்டிருந்தான்; அவள் பல புருஷர்களுடன் சம்பந்தம் வைத்திருந்தபோதிலும், அவனையே பிரதான புருஷனாகக் கொண்டிருந்தாள். இந்த வழக்கம் நாளடைவில் அதிகரித்தது; கண-கோத்திரம் விருத்தியடைந்து கொண்டேயிருந்தது; எந்தெந்த உறவுமுறையுள்ளவர்களை மணந்துகொள்ளக்கூடாதென்ற தடைகள் பெருகிக்கொண்டே வந்ததால் கோஷ்டித் திருமணம் மென்மேலும் கஷ்டமாயிற்று; எனவே வாடிக்கையாக ஜதை சேரும் வழக்கம் பரவியது. கோஷ்டித் திருமணத்துக்குப் பதில், ஜோடிக் குடும்பம் ஏற்பட்டது. இந்தக் கட்டத்தில் ஒருவன் ஒருத்தியுடன் வசிக்கிறான்; ஆனால் பல ஸ்திரீ விவாகம் செய்துகொள்வதும், இடையிடையே பிறர் மனைவிகளுடன் தொடர்பு கொள்வதும் ஆடவர்களின் விசேஷ பாத்தியதைகளாகவிருந்தன. கணவனோ மனைவியோ திருமண முடிச்சை சுலபமாக

அவிழ்த்துவிடலாம்; முன்போலவே, குழந்தைகள் தாய்க்கே உரியவை.

ஆரிய வாழ்வில் ஜோடிக் குடும்பம் இருந்ததென்பதற்கான உதாரணங்கள் பிரபலமானவை. பிற்காலத்தின் ஹிந்து ஸ்மிருதி விதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காந்தர்வ விவாகமுறை, அதற்கு ஒரு ருசுவாகும். விசுவாமித்திரரும் மேனகையும் கூடிய "புனித முறை"யும் துஷ்யந்தனும் சகுந்தலையும் கூடிய "புனித முறை"யும் பிரசித்தமானவை; அவற்றைப் பற்றி விரிவாக எழுதத் தேவையில்லை ஜரத்காரு ரிஷி, வாஸுகி கோத்திரத்தைச் சேர்ந்த நாகிஜரத்காருவுடன் ஜோடிக் குடும்பம் நடத்தினர்; அப்பொழுதே காசியபர் பிறந்தார். அந்தக் காசியபர்தான் ஜனமேஜயன் முதலியோருக்கு எதிராக நாகர்கள் நடத்திய யுத்தத்தில் நாகர்களைக் காப்பாற்றினர். மணம் முடித்துக் குடும்பம் நடத்தும் வகைகளின் அத்தனையையும் கடைப்பிடிப்பதில் பாண்டவர்களுக்கு ஒப்பாரும் இல்லை, மிக்காரும் இல்லை. ஐந்து சகோதரர்களும் சேர்ந்து ஒரே ஒரு பொதுவான பிரதானமான மனைவியாகத் திரௌபதியைக் கொண்டார்கள்; இந்தப் பலபுருஷ விவாகம் கோஷ்டித் திருமணத்தின் மீதமிச்சமாகும். அந்தத் திரௌபதியே அதைப் போன்ற புணர்ச்சி வினையில் பிறந்தவளே; அவளுடைய தந்தை யாகம் செய்ததின் பலனுக, அவளும் அவளுடைய சகோதரனும், யாக மேடையில் அக்கினியிலிருந்து பிறந்ததாக மகாபாரதம்கூறுகிறது. பாண்டவர்கள் ஒரு ஸ்திரீயை பொது மனைவியாகக் கொண்டது, விதிவிலக்கானதல்ல; அந்த முறை இன்று இந்தியாவின் சில பாகங்களில் நிலவுகிறதென்பதிலிருந்தே இதை அறியலாம்.[1]

---

1 பல புருஷ விவாகத்தைப் பற்றி விவாதிக்கும்பொழுது, எங்கல்ஸ் இந்தியாவையும் திபெத்தையும் குறிப்பிடுகிருர்; பலபுருஷ விவாகம் "கோஷ்டித் திருமணத்திலிருந்து பிறந்ததைக் குறித்து நுண்ணிய ஆராய்ச்சி நடத்துவது அவசியமென்றும் அது நிச்சயமாக ருசிகரமாயிருக்குமென்றும்" அவர் கூறுகிருர்.

"முகம்மதியர்களின் பொருமை மிகுந்த அந்தப்புரங்களைக் காட்டிலும் இது நடைமுறையில் சௌஜன்யமானதாகத் தோன்றுகிறது. எப்படியிருந்தாலும், இந்தியாவில் நாயர்கள் மத்தியில், மூவர் அல்லது நால்வர் ஒரு பொது மனைவியைக் கொண்டிருக்கிருர்கள்; அவர்களில் ஒவ்வொருவரும் வேறு மூவர் அல்லது அதிகமான ஆண்களுடன் இரண்டாவது பொது

கடோத்கஜன் பிறக்கும் வரை, இடும்பை, பீமனுடன் ஜோடிக் குடும்பம் நடத்தினாள். ஒரு மகன் பிறக்கும் வரை, சித்திராங்கதை அர்ஜுனனுடன் வசித்தாள். இவற்றிலெல்லாம், குழந்தைகள் தாயார்களிடமே இருந்தனர் என்பதைக் கவனிக்க வேண்டும். குறிப்பிட்டகாலத்துக்குப்பின், அந்த மனைவிகள், அவர்களுடைய கணவர்களிடமிருந்து விடுதலை பெற்றனர் என்பதையும் கவனிக்க வேண்டும்.[2]

ஆதியில், குலத்தின் ஆண் பெண்கள் அனைவருமே ஒருவரோடொருவர் புணர்ந்தனர்; அந்த நிலையிலிருந்து புணர்ச்சி உறவு வட்டமானது தொடர்ச்சியாகச் சுருங்கி வந்தது; இதன் விளைவாகக் குடும்ப வளர்ச்சி தொடங்கியது. முதலில் நெருங்கிய உறவினர்களும் பிறகு தொலைதூர உறவினர்களும் இறுதியாக விதிமுறைப்படி எத்தகைய உறவைக் கொண்டவர்களும், மணக்க முடியாதென்று தடைகள் ஏற்பட்டதால், கோஷ்டித் திருமணமே அசாத்தியமானதாயிற்று. இறுதியாக, தற்காலிகமாகவும் உறுதிப்பாட்டில்லாததாகவும் ஐக்கியப்பட்டுள்ள ஆண்-பெண் ஜதையே

மனைவியைக் கொண்டிருக்கின்றனர்; அதேபோல மூன்றாவது, நான்காவது பொது மனைவிகளையும் அதற்கு மேற்பட்ட பொது மனைவிகளையும் கொண்டிருக்கின்றனர். இந்த மணவினைக் குழுக்கள் பலவற்றில் ஒருவர் அங்கத்தினராயிருக்கலாம்! இதை மக்லென்மான் விவரித்திருக்கிறார்; ஆனால் இது ஒரு புதிய வகைப்பட்ட குழுத் திருமணமாக இருப்பதை அவர் கண்டறிய முடியாதது அதிசயமே. ஆனால் இந்த திருமணக் குழு ஏற்பாடு, மெய்யான பலபுருஷ விவாகமாக இல்லவே இல்லை. அதற்கு மாறாக, கிராத் டியூலன் முன்பே சுட்டிக் காட்டியிருப்பதைப்போல, இது கோஷ்டித் திருமணத்தின் ஒரு விசேஷ வகை; ஆண்கள் பல ஸ்திரீ விவாக முறையிலும், பெண்கள் பலபுருஷ விவாக முறையிலும் வாழ்கிறார்கள்" (எங்கல்ஸ், குடும்பத்தின் தோற்றம்.)

2 இவ்வாறு தன் கணவர்கள் பல புருஷ விவாகத்தின் விசுவாசத்தை திரௌபதி சகித்துக்கொள்ள வேண்டியிருந்தது; ஏனெனில், பூர்விகக் கூட்டு வாழ்வுடன்கூட, கோஷ்டித் திருமணமே துரிதமாக மறைந்து கொண்டிருந்தது; எனவே, மனிதனின் தனிச் சொத்தாக இருக்க முடியாத பொருட்களைப் படைத்த சமுதாயக் கூட்டு உழைப்பில் தான் வகித்த பாத்திரத்தின் மூலம் பெற்றிருந்த சுதந்திரத்தை, பெண்ணினம் இழந்து விட்டது. எனவே, பாண்டவர்களால் திரௌபதியை பணயமாக வைத்துச் சூதாடி கௌரவர்களிடம் விற்கவும் முடிந்தது.

எஞ்சிநின்றது, ஆண்களும் பெண்களும் இயல்பாக ஒருவரை யொருவர் பொறுக்கிக் கொள்வதன் மூலம் ஏற்பட்ட இந்த நிகழ்ச் சியை, வளர்ந்துகொண்டிருந்த பொருளுற்பத்திச் சக்திகள் அனு பவ சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் ஆக்கின ; பொரு ளுற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால், வேலைப் பிரிவினை ஏற்பட் டது ; உழைப்பில் பலவகைகள் உருப்பெற்றன ; செல்வம் பெரு கியது ; எனவே ஆண்-பெண் ஜதை அடிப்படையில் தனிக் குடித் தனம் அமைவதானது, பொருளாதார ரீதியிலும் சமுதாய ரீதியி லும் சாத்தியமாயிற்று ; தவிர்க்க முடியாததாயிற்று.

தனிப்பட்டவரின் காதல் என்பதை நவீன காலத்தில்' எவ் விதத்தில் அர்த்தப்படுத்துகிறோமோ, அந்தப் பொருளில் (அதை அந்த சகாப்தம் அறிந்திருக்கவேயில்லை.) அது ஏகஸ்திரீ விவாகத் தின் தோற்றத்தில் கொஞ்சமும் பங்குவகிக்கவில்லை என்பதை நாம் இதிலிருந்து சுலபமாகப் புரிந்துகொள்ள முடியும். அந்தக் கட் டத்தில் சகல நாடுகளும் அனுஷ்டித்த நடைமுறை இதை நிரூபிக் கிறது. கோஷ்டிக் குடும்பம் இருந்த காலத்தில், ஆண்களுக்குப் பெண்கள் பஞ்சமாகயிருக்கவேயில்லை ; தேவையையும்விட அதிக மான பெண்கள் அவர்களுக்குக் கிடைத்தனர். இப்பொழுது, பெண்களுக்குக் கிராக்கி ஏற்பட்டது ; அவர்களைப் பெற முயற்சி எடுக்க வேண்டியதாயிற்று. எனவே, ஜதைக் குடும்பம் ஏற்பட்ட பின், பெண்களைக் கடத்திச் செல்வதும் 'விலைக்கு வாங்குவதும் தொடங்கியது (எங்கல்ஸ், 'குடும்பத்தின் தோற்றம்' என்ற நூல் பார்க்க). வைதீக இலக்கியத்தின் ஆதிக்கால மரபுகள் இத்தகைய நடைமுறைகளைக் குறிப்பிடுமென்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் இதிஹாசக் காலத்தில் இத்தகைய நடைமுறைகள் பல வற்றைப் பார்க்கிறோம். கிருஷ்ணன் ருக்மணியையும், அர்ஜுனன் சுபத் திரையையும், அனுருத்தன் உஷையையும், பிரத்தியுமனன்,(நிரும்பனின் சகோ தரனை வஜ்ரநாபாவின் மகளான) பிரபாவதியையும், நிரும்பன், பானு மதியையும் கடத்திச் சென்ற காரியங்கள் அவற்றில் பிரபலமானவை. இதே கால கட்டத்தில்தான் பைசாச விவாகமுறை உருவாயிற்று ; இதே காலத்தில்தான் சுயம்வர முறையும் உண்டாயிற்று ; தீரச் செய லையும் மணமகளையும் நாடும் பல துணிவுள்ள வாலிபர்களை சுயம்

வரம் ஆகர்ஷித்தது; அதில், தேசத்திலுள்ளவர்களில் தலைசிறந்த வரை மணாளனாக வரிக்கும் உரிமை மணமகளுக்கும் கிடைத்தது!

இந்த ஜதை விவாகம் அல்லது ஜதைக் குடும்பம், நாம் அறிந்த வகையிலுள்ள ஏக ஸ்திரீ விவாகமாக வளரவேண்டும்; அதாவது, ஒரு கணவனுடனேயே வாழவேண்டுமென்று பெண்ணுக்குமட்டும் கட்டுப்பாடு விதிக்கும் முறை, பெண்மீது ஆண் ஆதிக்கம் வகிக்கும் முறை ஏற்படவேண்டும்; அதற்கு, தனிச் சொத்துரிமை என்ற நவநவீன அம்சம், சமுதாயத்தில் தோன்றுவது அவசியமா யிருந்தது. ஜதைக் குடும்பத்தில், கோஷ்டியானது அதன் மிகச் சிறிய அலகாகச் சுருங்கிவிட்டது; ஒரு ஆண், ஒரு பெண் ஆகிய இரண்டு அணுக்களை மட்டுமே உடைய மூலக் கூறாக ஆகிவிட்டது. ஆண் பெண் புணர்ச்சி அனுமதிக்கப்படும் வட்டத்தைத் தொடர்ச்சியாகச் சுருக்கிக்கொண்டே வருவதன் மூலமாக, இயற்கைத் தேர்வும், இயற்கையான பொருளாதாரக் கம்யூனிஸத்தை அடிப்படையாகக் கொண்ட உறவும் தமது பணியை சாதித்துவிட்டன. இந்தத் திசை வழியில் மேற்கொண்டு செய்வதற்கு ஒன்றுமில்லை. புதிய சமூக சக்திகள், தனி உடமை, தந்தை உரிமை, வர்க்க அரசு ஆகியவற்றுக்குரிய புதிய சமூக சக்திகள் சமுதாயத்தில் பிரவேசித்தாலொழிய, ஜதைக் குடும்பத்திலிருந்து புதியக் குடும்ப வகை உருப் பெருவதற்குக் காரணமே யில்லை. ஆனால் ஜதைக் குடும்பம் என்ற நிலைக்கு சரித்திர ரீதியான வளர்ச்சி ஏற்பட்ட பிறகே, அநாகரீக சகாப்தத்தின் கம்யூனும் கூட்டு வாழ்வும் அழிந்துள்ள அடிப்படையில், தனிஉடமையுடன் ஏக ஸ்திரீ விவாகம் உதயமாக முடியும்.

நமது சௌகர்யத்துக்காக, நாம் இங்கேயே, ஆரியர் இனத்தின் பிற்கால வளர்ச்சியை முன்கூட்டியே பார்க்கலாம்; "ஆதிக் காலத்து இயற்கையான கூட்டு வாழ்வின்மீது தனி உடைமை வெற்றி கொண்டதைக் குறிக்கும் பொருளாதார நிலைமைகளை" (எங்கல்ஸ்) மட்டும் அடிப்படையாகக் கொண்ட முதலாவது குடும்ப முறை ஏக ஸ்திரீ விவாகக் குடும்பமே. "இந்தக் குடும்பத்தில் ஆண் ஆதிக்கம் ஏற்பட்டது; அவனுடைய செல்வத்துக்கு வாரிஸாக ஆவதற்காக, அவனுடைய உறவால் மட்டுமே குழந்தைகள்

உண்டாக வேண்டும்" (எங்கல்ஸ்). வர்க்க சமுதாயத்துக்கு உரிய ஏக ஸ்திரீ விவாகத்தின் நோக்கங்கள் இவையே (எதிர் காலத்தில் அமையவிருக்கும் வர்க்கபேத மில்லாச் சமுதாயத்துக்கு உரிய ஏக ஸ்திரீ விவாகத்தின் நோக்கங்கள் முற்றிலும் வேறுபட்டவை), ஏக ஸ்திரீ விவாகத்துக்கு உள்ள இந்த வெளிப்படையான, கரு ரான பொருளை ஆரியச் சட்ட கர்த்தாக்களும் எழுத்தாளர்களும் மூடி மறைக்கவில்லை ; ஒருவனுடைய சொத்தை பிதுரார்ச்சிதமாக அடைவதற்கு மகன் வேண்டுமென்பதில்தான் அவர்களுடைய அக்கரை யெல்லாம் ; அவனால் ஒரு மகனை அளிக்க முடியாதென் றால், வேறு ஒருவர் மூலமாக, அவள் ஒரு மகனைப் பெற்றுத்தர வேண்டும் ; அவளுடைய உணர்ச்சிகளைப் பற்றியோ கற்பைக் குறித்தோ அவர்களுக்கு அக்கரை கிடையாது. எனவே, தன்னால் மகப்பேறு அளிக்க முடியாத கணவன், அன்னியருடன், அதற்காக அமர்த்தப்பட்ட அந்தணர்களுடன், கானகத்தில் வாழும் ரிஷிகளு டன், இதர காட்டு வாசிகளுடன், வேறு யாருடனுமாவது, தன் மனைவி புணரும்படி செய்தான். வியாசர் விசித்திர வீரியனின் (பீஷ்மனின் சகோதரன்) மனைவிகளுடன் கூடினார் ; அதன் மூலமே, "மகத்தான லட்சிய புருஷர்களான" பாண்டவர்கள் அந்த வமிசத்தில் தோன்ற முடிந்தது ; தீர்கதமஸ் என்பவர் பாலி யின் மனைவிகளுடன் கூடினார் ; ஒரு வழிப்போக்கு பிராம்மணர் சாரதண்டாயனுவின் மனைவியைப் புணர்ந்தார். பிற்காலக் கதை யில், பூலோக ரிஷிகளுக்குப் பதிலாக சுவர்க்கத்திலுள்ள அப்பா வித் தெய்வங்களே பாண்டுவின் மனைவிகளைப் புணர்ந்ததாகக் கூறப்படுகிறது ; ஆனால், ரிஷிகளே பாண்டுவின் மனைவிகளுடன் கூடினார்கள். தனி உடைமைச் சகாப்தமான கலியுகத்தின் ஆரியச் சட்டக் கர்த்தாக்களுக்கு, கணசமூகத்தின் ஜதைக் குடும்பம் சமீப காலத்து நிகழ்ச்சியாக விருந்தது ; எனவே, அவர்கள் புதிய வர்க்க சமூகத்துக்கு உரிய ஏக ஸ்திரீ விவாகத்தின் குறிக்கோளை வெளிப் படையாக விளக்கினார்கள். கூட்டு வாழ்வின் தர்மத்துக்கும், துவா பர யுகத்தின் மைதுன ஜதைக் குடும்பத்துக்கும் பதிலாக, கலியுகத் தின், வர்க்க சமூகத்தின், சட்டத்தை வகுத்த மனு கூறுவது குறிப் பிடத் தக்கது. ருசுப்பிக்கக் கூடிய (எனவே பரிசுத்தமான) புத் திர சந்தானத்தைப் பெறுவதற்காக, ஆடவர் பெண்டிரைப் பாது.

காக்க முயலவேண்டுமென்று அவர் கூறுகிறார். குழந்தைகளை உண்டாக்கும் சாதனம் என்ற முறையிலேயே பெண்களை மதிக்க வேண்டுமென்ற கருத்து, அடிமைத் தனம், தனி உடைமை, வர்க்க ஆட்சி ஆகியவற்றின் சகாப்தத்துக்கு உரியதாகும். குழந்தைகளை ஈன்றெடுப்பவளாகப் பூர்வீகக் கம்யூனும் பெண்ணை அறிந்திருந்தது என்பதில் ஐயமில்லை; ஆனால், அந்தக் கம்யூனில் வாழ்ந்தவர்களுக்கு அவள் மகத்தான அன்னையாகவும் சிறந்து விளங்கினாள்; சமுதாயச் செல்வம் முழுமையிலும் ஆடவனைப் போலவே அவளும் உரிமை கொண்டிருந்தாள்; கம்யூனின் ஸ்தாபகரும் தலைவியும் அவளே. (க்ஷீணித்துள்ள நவீன பூர்ஷுவா வர்க்கத்தில் பணத்துக்காக நிகழும் சேர்க்கைத் திருமணங்களில் இருப்பதைப் போல) அவள் போகத்துக்குரிய பெண்ணாகமட்டும் இல்லை; கால்நடைகளுடன்கூட, வம்ச விருத்திக்காக உள்ள உடைமைப் பொருளாகவும் இல்லை. யாக்ஞ வல்கியர் கூறுவது மாதிரி, புதிதாகத் தோன்றிய ஏக ஸ்திரீ விவாகத்தில், மனைவிக்கு ஒழுக்க வழு ஏற்பட்டால், மாதாந்திர ஸ்நானத்துக்குப் பிறகோ, குழந்தையின் பிரசவத்துக்குப் பிறகோ, கற்பை மீண்டும் சுலபமாக நிலைநாட்டி விட முடியும்.[1] உறுதியாக சொத்தை அடைவதற்கு வழி செய்வதே அப்பொழுதிலிருந்து, திருமணத்தின் தெய்வீக நோக்கமாயிற்று; மனைவி கால்நடைக்கு ஒப்பானாள்; அர்ஷ விவாக முறையில் ஒரு பசுவும் ஒரு காளையும் (கோமிதுனம்) அவளுக்கு விலையாகக் கொடுக்கப்பட்டது. சமஸ்கிருத இலக்கணம், சமாஹாரத்வந்தாவின் ஸமாஸா உதாரணமாக, தாராகாவம் என்ற சொல்லைக் கொடுத்தபொழுது, மனைவியையும் கால்நடையையும் ஒரு சீராகக் கருதியதென்பது வெளிப்படை; இதன்மூலம், அது மனைவிக்கு ஏற்பட்ட புதிய மதிப்பை உறுதிப்படுத்தியது. சமூகச் சொத்தில் பெண்களும் உரி

1 எங்கல்ஸ் கூறுகிறார் :—"அது (ஏக ஸ்திரீ விவாகக் குடும்பம்) கணவனின் ஆதிக்கத்தைப் பெற்றிருந்தது; தகராறுக்கு இடமில்லாதவகையில் தந்தையை உறுதிப்படுத்தி குழந்தைகளை உற்பத்தி செய்வதே அதன் வெளிப்படையான நோக்கமாயிருந்தது. இவ்வாறு தந்தையை உறுதிப்படுத்துவது ஏன் அவசியமாயிற்றென்றால், இந்தக் குழந்தைகளே, பிற்காலத்தில் அந்தத் தந்தையின் வார்ஸுகளாக அவருடைய சொத்தைப் பெறவேண்டியிருந்ததே காரணம்" (குடும்பத்தின் தோற்றம்).

மைபெற்றவர்களாக உள்ள கூட்டுப் பொருளுற்பத்திமுறை, சமுதாயத்தில் ஆதிக்கம் வகித்தவரையில் இது சாத்தியமாகவில்லை.

"கம்யூனிஸ்ட் குடியிருப்பில் இருந்த பெண்களில் அநேகர் அல்லது அவர்கள் அனைவரும் ஒரே கணத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கின்றனர்; அவர்களுடைய கணவர்களோ வேறு கணங்களிலிருந்து (கோத்திரங்களிலிருந்து) வருகின்றனர்; ஆதிக்காலத்தில் பொதுப்படையாகவும் விரிந்த அளவிலும் பெண்கள் ஆதிக்கம் ஏற்பட்டதற்கு அந்த நிலைமையே காரணமாகவும் அடிப்படையாகவும் இருக்கிறது" என்று எங்கல்ஸ் கூறுகிறார். உற்பத்திக் கருவிகளும் உண்டான பொருட்களும் கூட்டு உடமையாகவுள்ள குடியிருப்பில்தான் இது சாத்தியம்; அதன் சமுதாய உழைப்பில், ஆண்களுடைய உழைப்புக்கு இருந்த முக்கியத்துவம் பெண்களுக்கும் இருந்தது. ஆடவர்கள் யுத்தம் செய்தனர், வேட்டையாடினர், மீன்பிடித்தனர், உணவுக்குத் தேவையான மூலப் பொருட்களைக் கொண்டுவந்தனர், மேற்சொன்ன வேலைகளுக்குத் தேவையான கருவிகளைச் செய்தனர். பெண்கள் இருப்பிடத்தைக் கட்டிப் பராமரித்தார்கள், கம்யூனுக்காக உணவும் உடையும் தயாரித்தார்கள். ஆண்கள் செய்து உபயோகித்த கருவிகளை ஆண்களும் பெண்கள் செய்து உபயோகித்த கருவிகளை பெண்களும் கூட்டு உடமையாகக் கொண்டனர். வேட்டைக் கருவிகளும் யுத்தக் கருவிகளும் (பிற்காலத்தில் கால்நடைகளும்) ஆண்களின் உடமைகளாயிருந்தன; குடியிருப்புச் சாமான்கள் பெண்களின் சொத்தாயிருந்தது. ஆண்களும் பெண்களும் சேர்ந்திருப்பதைக் குறிப்பதே பிரமன் என்ற கம்யூன்; இதன் அர்த்தாலங்காரமான நினைவாக நிலைத்திருப்பதே <u>அர்த்த-நாரீ-நாதீசுவரர்.</u> கணகோத்திரத்தின் உற்பத்திக்கும் அமைப்புக்கும் புறம்பானதாக, பெண்ணுக்கு இடமில்லாததாக, ஒன்றும் இருக்கவில்லை. கணகோத்திரம் அவளிடமிருந்தே பிறந்தது; அதிலிருந்தவர்களுடைய இரத்த சம்பந்த உறவுமுறைகள் அவள்மூலமே ஏற்பட்டது. கம்யூன் வளர்ந்து, புதிய புதிய கணகோத்திரங்கள் உருப்பெற்றபொழுதும், மற்றோரிடத்தில் காளி அன்னையாக மீண்டும் தோன்றுகிற ஆதி மாதாவான அிதியின் மகத்தான பிரதிநிதியாக அவளே

அவர்களுக்குத் தலைமைதாங்குகிருள். உணவு சம்பந்தமான கூட்டமாலுைம் சரி யுத்தம் சம்பந்தமான கூட்டமாலுைம் சரி — உணவுக்காகவே யுத்தங்கள் நடத்தப்பட்டன — அவள் இல்லாமல் நடைபெருது. அவள் தெய்வீக அம்சங்களைப் பெற்றவளென்று பண்டைக்கால மனிதன் கருதியதில் அதிசயமில்லை. ஹிந்து புராணங்களில் இன்றும் குறிப்பிடப் படும் பெண் தெய்வங்கள், அந்தச் சகாப்தத்தில் பெண்கள் வகித்த ஸ்தானத்துக்குச் சாட்சியாக உள்ளன. யக்ஞ உற்பத்தி முறையும் பிரமனும் வீழ்ச்சி அடைந்தபொழுது இறந்துவிட்ட அந்த சகாப்தத்தின் கதைகளை அந்தத் தெய்வங்கள் இப்பொழு தும் நமக்குக் கூறுகின்றன. தெய்வங்கள் அசுரர்கள், மனித ளுகிய மனு ஆகியோர் அறிந்திருந்த மகத்தான யாகமுறையை ஒரு பெண்ணே தோற்றுவித்தாளென்று கூறுவதற்கு, தைத்தி ரீயப் பிராம்மணம் (1·1·4) தயங்கவில்லை. மனுவின் மகளும் மனைவியுமான இளா, தெய்வங்களும் அசுரர்களும் எப்படி யாகம் செய்கிருர்களென்பதைப் போய்ப் பார்த்தாள். அவர்களுடைய முறையும் மனுவின் முறையும் குறைபாடுள்ளதாயிருப்பதை அவள் அறிந்தாள். அவள் மனுவினிடம் சென்ருள்; தான் சொல்லக்கூடிய புதிய முறையைப் பின்பற்றும்படி அவரிடம் கூறி ளுள்; அதன்மூலம் அதிகப் பலன் கிடைக்குமென்ருள். அவ ளுடைய விருப்பப்படி, யாகத் தீயை வைக்கும்படி, மனு இளா விடம் கூறிஞர். இதன் விளைவாக, மனிதனுகிய மனு, ஏராள மான பிரஜைகளையும் கால்நடைகளையும் பெற்ருர்.

இவ்வாருக, பூர்வீகக் கம்யூன் தன் உற்பத்தியையும் தன் னுடைய கணகோத்திரக் குடும்பத்தையும் திருமணத்தையும் நடத்தியது. ஒப்புநோக்கும்பொழுது, அது வறுமையில் வாழ்ந் தது என்பது புலனுகும்; ஆனல் உள் சச்சரவுகளோ உள் யுத்தங் களோ இல்லாமல் அது வாழ்ந்தது. பிரமன் பெருகியது; ஒரு இடத்திலிருந்து இன்னென்றுக்குச் செல்லும் முறையில், உலகம் முழுவதும் பரவியது; தனக்குக் குறுக்கே வந்தவர்களையும் தன் னைத் தாக்கியவர்களையும் எதிர்த்து அது போராடியது.

ஒரே கணத்துக்குள் யுத்தம் நிகழ்வில்லை; ஆனல் குலங்

களுக்கு இடையே யுத்தங்கள் நிகழ்ந்தன. எனவே, வளர்ந்து கொண்டிருந்த கணம், தன் யுத்தத்தை எப்படி நடத்தியது என்பதையும் யுத்தத்தில் பெற்ற செல்வத்தை என்ன செய்தது என்பதையும் நாம் பார்ப்போம். மேலும், உழைப்பின் உற்பத்தித் திறன் அடைந்த வளர்ச்சியுடன், பண்டமாற்று அதிகமானதுடன், அந்தக் கணத்தின் வர்க்கபேதமற்ற நிலை தகர்ந்து, வர்க்க அரசுச் தனி உடைமையும் புதிய உற்பத்திமுறையும் எப்படி ஏற்பட்டதென்பதை, காட்டு மனித-அநாகரீக நிலைகளிலிருந்து நாகரீக நிலையை அது எப்படி அடைந்ததென்பதை, கிருத-திரேதாயுகங்களிலிருந்து அது எப்படி துவாபர-கலியுகங்களை அடைந்ததென்பதை நாம் பார்ப்போம்.

அசுவமேதம், புருஷமேதம், தானம்

பொருளாதார ரீதியிலும் இரத்தக்கலப்பு உறவுமுறையிலும் அமைந்த ஸ்தாபனமான கணம் என்ற கம்யூனை இதுவரைப் பரிசீலனை செய்தோம். பொருளாதார, பந்துமுறை விதிகளின் அவசியமான பயனாக, கணம் பிரிந்து புதிய கம்யூன்களை ஸ்தாபிக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டபொழுது, கண-கோத்திரம் பிற இடங்களுக்கு எப்படிச் சென்றதென்பதை இப்பொழுது அறிவோம். கணங்கள் தம்மைச் சுற்றியுள்ள சத்துருக் குலங்களை எதிர்த்து யுத்தங்கள் நடத்தவேண்டியிருந்தது; இது அவற்றின் வாழ்விலிருந்த இன்னொரு மிக முக்கியமான அம்சமாகும். யுத்தத்தை நடத்துவதும், அதில் கைப்பற்றிய செல்வத்தை முறையாகப் பயன்படுத்துவதும் வளர்ந்துகொண்டிருந்த ஆரியர் கணங்களின் வாழ்வில் மிக முக்கியமான அம்சமாகவிருந்தது. யக்ஞம் என்ற ஆதாரத்திலிருந்தே, இது எப்படிச் சாதிக்கப்பட்டதென்பதை நாம் பார்ப்போம்.

ஜனத்தொகை பெருகியது; அப்பொழுது, ஆதிக்காலத் தொழில் இயல் பலவீனமாக இருந்த காரணத்தால், இன்று சாத்தியமாவதைப்போல, பெருந்தொகையான மக்கள் ஒன்று சேர்ந்து வாழ முடியவில்லை. எனவே, கண-கோத்திரங்கள் பிரிந்தன; காலியாகவிருந்த பிரதேசங்களை வசப்படுத்திக்கொண்டும், காலியாயில்லாத பிரதேசங்களுக்காகப் போராடிக்கொண்டும், அவை ஆசியாக்கண்டம் முழுமையும் பரவின. பொருளாதார அவசியத்தின் காரணமாகவும் இரத்தக்கலப்பு உறவினரின் மணவினை தடை செய்யப்பட்டதாலும், கோத்திரத்தின் மக்கள் பிற இடங்களுக்குச் சென்றதை நாம் முந்தின அத்தியாயத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். அவ்வாறு பிற இடங்களுக்குச் சென்ற விஷயம், ஆரியர்களின் யாகச்சடங்கில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது; அதன் வழிமுறையும் அதில் விளக்கப்பட்டிருக்கிறது.

அங்கிரி கோத்திரத்தில் ஐந்தாயிரம் குழந்தைகள் இருந்த

தாக ஹரிவமிசம் கூறுகிறது; அதாவது, அவர்கள் கம்யூனுக்குப் பொதுவான குழந்தைகள். இவர்களுக்கும் குழந்தைகள் பிறக்க விருந்ததால், பொருளாதார நெருக்கடி ஏற்படுமென்ற அச்சம் கம்யூனுக்கு ஏற்பட்டது. சண்டைகளில் சமரசம் செய்தோ சண்டைகளை வளர்த்தோ, நெருக்கடிகளையும் சச்சரவுகளையும் சரிப்படுத்துவதற்காக, ஹிந்து புராணங்களில், வாடிக்கையாக அனுப்பப்படும் நாரதர், இந்தக் கோத்திரத்தினர் முன் தோன்றுகிறார்; அவர்கள் பிற இடங்களுக்குச் சென்று புதிய கம்யூன்களை ஸ்தாபிக்காவிட்டால், வறுமையும் நெருக்கடியும் ஏற்படுமென்று எச்சரிக்கிறார். ஏனெனில், அத்தகைய ஜனப்பெருக்கத்தைச் சமாளிப்பதற்குப் போதுமான உணவும், உற்பத்திக்கான செல்வாதாரங்களும் அந்தக் கணத்தில் இல்லையென்று கூறுகிறார். எனவே, கணம் பிரிந்தது; ஒரு பகுதி நிரந்தர விடை பெற்றுக் கொண்டு வேறு இடத்துக்குச் சென்றது. தக்ஷபிரஜாபதி அஸிக்னியுடன் கூடி மேலும் ஆயிரம் குழந்தைகளை உற்பத்தி செய்தார்; அவர்களும் அதே முறையில் வேறு இடத்துக்குச் செல்லவேண்டியதாயிற்று.

இவ்வாறு புதிய இருப்பிடங்களைத் தேடிச்செல்வதும் புதிய கணங்களை ஸ்தாபிப்பதும், சகஜமான அமைதியான காரியமாக இருக்க முடியாது. அப்பொழுது பூமியின் இயற்கைத் தோற்றத்தில், மனிதனின் வளர்ச்சிக்கு இடையூறாக எண்ணற்ற கஷ்டங்கள் இருந்தன; அவற்றை அகற்றவேண்டும்; ஆனால், மனிதனின் சக்திகள் வளர்ந்துகொண்டிருந்தபோதிலும் அந்தக் கடமையைச் சாதிக்கக்கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கவில்லை. தகுதியான தாயகங்களைத் தேடிக்கொண்டு, ஆரியர்கள் ஒவ்வொரு நாடாக அலையவேண்டியதாயிருந்தது. அந்தக் கஷ்டங்களில் ஒன்றை, சரித்திரத்துக்கு எட்டாத காலத்தின் நினைவுகளில் காணலாம்; அதுவே, அதிவேகமாகப் பாய்ந்தோடும் ஆற்று வெள்ளம் முதலியவற்றைப் பற்றியது. சகல மக்கட் தொகைகளின் புராணங்களிலும் உள்ளப் பொதுவான விஷயம் இது. மனுவின் நாகரீகத்தை வெள்ளம் அழித்துவிட்டது; மனுவை ஒரு மீன் காப்பாற்றியது; அவர் ஹிமாலய மலைத்தொடரில் ஒரு இடத்தில் தங்கி, அங்கிருந்து மீண்டும் படைப்பைத் தொடங்கிய

தாகக் கூறப்படுகிறது. வெள்ளங்களைப்பற்றி (கிறிஸ்து வேத மான) பைபிளில் உள்ள குறிப்புகள், நோவாவின்தோணி முதலியன வெல்லாம் இப்படிப்பட்டவைதான். வேண்டிடாட் பார்காடு II (கி. மு. மூவாயிரம்), பதினாறு நாடுகளில் அந்தக் குலங்கள் குடி யேறினவென்றும், பெருகிய ஜனத்தொகையைப் பிற இடங் களுக்கு அனுப்புவதற்காகவும், வேறு பல காரணங்களுக்காகவும் அவர்கள் அந்த நாடுகளிலிருந்து பிற இடங்களைத் தேடிச்செல்ல தேர்ந்ததென்றும் கூறுகிறது. பாரசீக மக்களின் வேதமான வேண்டிடாட் கூறுவதாவது:

"அங்க்ரமைன்யூ வெள்ளங்களை அனுப்பினார்; அயிர்யானு வேஜோ வின் யிம அதிபரைக் கூப்பிட்டு அஹுராமஸ்தா எச்சரித்தார். வசிப் பவர்களுக்குப் போதுமான இடம் இல்லாமலிருந்ததால், தேசத் தின் எல்லைகளை மும்மடங்கு விஸ்தரித்து, யிம, மக்களை மகிழ்ச்சி அடையச் செய்தார். அஹுராமஸ்தா பதினாறு நாடுகளை உண்டாக்கி னார். அங்க்ரமைன்யூ அவற்றை ஒவ்வொன்றாகத் தொல்லைக் குள்ளாக்கினார்."[1]

பல இடங்களைத் தேடிச் சென்ற இந்த நிகழ்ச்சிகளை நாம் விவர மாக ஆராயத் தேவையில்லை. வளர்ந்துகொண்டிருந்த பௌதீ கச் செல்வாதாரங்கள் எப்படி புதிய பிரச்னைகளை உண்டாக்கின, அவற்றைச் சமுதாயம் எப்படிப் பைசல் செய்தது என்பதிலேயே நாம் அக்கறை கொண்டிருக்கிறோம்.

கண-கோத்திரங்கள் வளர்ந்து, பிரிந்து, புதிய இடங்களைத் தேடிச் செல்லும்பொழுது அனுஷ்டித்த வழிமுறையை அறிவது நலம். நாம் முன்னால் பார்த்த அக்கினிஷ்டோமத்திலிருந்தும் ஷடராத்ர க்ரதுவிலிருந்தும் இதையும் அறியலாம். அக்கினிஷ்டோம ஸோம யாகம் என்பது மிக நீண்டதொரு யக்ஞம். அது ஆரியர்களின் குடியேற்ற வழிமுறையாக விருப்பதாக குண்டே தன் "ஏற்றத் தாழ்வுகள்" என்ற நூலில் உரை தந்து விளக்கியிருக்கிறார். ஆனால் அந்த யாகம் குடியேற்ற வழிமுறையை மட்டும் கொண் டிருக்கவில்லையென்றும், ஆரியர் கம்யூனின் தினசரி வாழ்வுக்

---

1 "வேதங்களும் வட - துருவப் பிரதேசப் பிறப்பும்" என்பதி லிருந்து.

கருமங்களும் அதில் அடங்கியிருக்கிறதென்றும் நாம் எண்ணுகிறோம்.

வசந்த காலம், கால் நடைகளை உண்டாக்குவதற்கு உரிய காலம்; காய்கள் கனிந்து பழங்களாகும் காலம்; மலர்களுக்கு உரியகாலம்; அந்த வசந்த காலத்திலேயே குடியேற்றப் பிரயாணம் தொடங்குகிறது. பௌர்ணமி தினத்தன்றோ அமாவாசை தினத்தன்றோ பிரயாணம் தொடங்குகிறது. கம்யூனின் தலைவர்களான ரித்விக்குகள் பொது அக்கினியைச் சுற்றிக் கூடுகிறார்கள்; அங்கு, யார் யார் எந்தெந்த கோஷ்டிகளில் போவதென்று முடிவு செய்யப்படுகிறது. போவதற்கு முன் வருகிறவர்களும் பொறுக்கியெடுக்கப்படுகிறவர்களும் தீக்ஷை கொடுக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் புதிய உடைகள் கொடுக்கப்படுகின்றன. அவர்கள், புதிய கணத்தின் குழந்தைகளாகப் புதிதாகப் பிறப்பது மாதிரி கற்பித்து சடங்கு செய்யப்படுகிறது. புதிய இருப்பிடத்துக்குத் தேவையான சகல சாமான்களையும்—பானைகள், தட்டுகள், கால் நடைகள், வெள்ளாடுகள், ஸோமபானம், தானியம், முகாமுக்குத் தேவையான சாமான்களை ஏற்றிச்செல்லும் வண்டிகள் முதலிய அனைத்தையும் அவர்கள் பெறுகிறார்கள். புதிய இருப்பிடத்தை ஸ்தாபிப்பதற்காக, பழைய இருப்பிடத்திலிருந்து ஒரு வண்டியில் அக்கினி கொண்டு செல்லப்படுகிறது. அந்தக் குடியேற்றப் புறப்பாடு ஒரு மகத்தான விருந்துக்குரிய சந்தர்ப்பமாகும். பிரிந்து செல்கிறவர்கள் ஒத்துழைப்போமென்றும் பாபம் செய்ய மாட்டோமென்றும் சபதம் எடுக்கிறார்கள்; ராட்சஸ விரோதிகளிடத்திலிருந்தும் காட்டு மிருகங்களிடத்திலிருந்தும் தற்காத்துக் கொள்வதற்காக, ஏராளமான ஆயுதங்களைத் தரித்துக்கொண்டு, யாத்திரீகர் கூட்டம் கிளம்புகிறது.

அவர்கள் எவ்வளவு காலம் பிரயாணம் செய்வார்கள்? எப்பொழுது பிரயாணத்தை நிறுத்துவார்கள்? ஷடராத்ரக்ரது அல்லது ஸாரஸ்வதஸத்ரத்தின் உதவியை நாம் பெற்றால், இதைப்பற்றி ஓரளவுக்குப் புரிந்துகொள்ளலாம். இந்தப் பூமியைத் தனி நபர்கள் சுவீகரித்துக்கொண்டு, அரசுகள் மூலம் அடைத்துக்கொண்டு விடாதகாலம் அது. எனவே, அவர்கள் எந்தக் குறிப்பிட்ட நிலத்

துக்கும் திட்டமிட்டுப் போகவில்லை. எனவே, புதிய கணம் எந்த பிரதேசத்துக்கு எந்தத் திசையில் எவ்வளவு தூரம் செல்ல வேண்டுமென்ற விஷயம், வேறு அம்சங்களால் தீர்மானிக்கப் பட்டது. பிரயாணம் தொடங்கியவுடன், அக்னியு என்ற தலைவர், (நெருப்புள்ள) சமித்தை எடுத்துக்கொண்டு முன் செல்கிறரென் றும், பகல் பிரயாணத்துக்குப் பிறகு முகாமிட வேண்டிய இடத்தை அவர் நிச்சயிக்கிறரென்றும் ஸரஸ்வதி ஸத்ரத்திலிருந்து அறிய லாம். சகஜமான யக்ஞ முறைப்படி அங்கு ஓய்வு எடுத்துக் கொண்டபின், பிரயாணம் தொடர்ந்து நடைபெறுகிறது. பழைய கணம், இவர்களுக்கு வாழ்வைத் தொடங்குவதற்கு வசதியாகப் பத்து பசுக்களையும் ஒரு காளையையும் கொடுத்துள்ளது. இவர் கள் தொடர்ந்து பிரயாணம் செய்து, மேய்ச்சல் நிலத்தைக் கண்ட வுடன், நூறு பசுக்களின் மேய்ச்சலுக்குத் தேவையான நிலத்தில் குடியேறுகிறுர்கள். நூறு பசுக்கள், சில காளைகள், சில நூறு வெள்ளாடு, செம்மறியாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொள்ளும் ஜனத்தொகைக்குப் போதுமான இடத்தையும் வசதி களையும் கணம் கண்டுபிடிக்கவேண்டும். (பிற்பாடு, உழைப்பின் உற்பத்தித் திறன் வளர்ந்தபொழுது, ஆயிரம் பசுக்கள் வரை எல்லை வகுக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. அநேகமாக, அது கணம் க்ஷீணித்துக் கொண்டிருப்பதையும் சிற்றூர்கள் வளர்ந்து கொண்டிருப்பதையும் குறிக்கலாம்.) நூறு பசுக்களை உடைய ஆதிக்கால கம்யூனில் எத்தனை ஜனங்கள் இருந்திருக்கமுடியும்? இதைத் தெரிவதற்கான அறிகுறி ஒன்றுமில்லை. ஆனுல் நாம் அதை ஊகிக்க முயற்சிக்கலாம். பிற்காலச் சட்ட திட்டத்தின் அர்த்தசாஸ்திரம், ஒரு மனைவியை, ஒரு பசுவுக்கும் ஒரு காளைக்கும் சமமானதெனக் கருதுவதை நாம் முன்னர் பார்த்தோம். ஏகஸ்திரீ விவாகத்தில், ஒரு ஸ்திரீ அல்லது ஒரு மனைவி ஒரு குடும்பமானல் ஒரு கணத்தில் அதிகப்பட்சமாக நூறு குடும்பங்கள் இருக்கலா மென்று மேற்சொன்ன தேவஸத்ரம் (ஸரஸ்வதிஸத்ரம்) எதிர் பார்த்ததென்று நாம் கூறலாம். கலியுகத்தில் நீதிமன்றங்களின் சாட்சியம் கூறுவதைப்பற்றிய அத்தியாயத்தில், அவருடைய காலத்துக்குரிய ஒரு விநோதமான கருத்தை மனு எடுத்துரைக்கிறுர்; அதாவது; ஒரு பசு சம்பந்தமாக பொய்சாட்சி கூறுகிறவர், பத்து

உறவினர்களைக் கொன்ற பாபத்தைச் சம்பாதித்துக் கொள்வதாக குறிப்பிடுகிருர். அடிமை முறை நிலவாத கம்யூன் காலத்திலிருந்ததைவிட, மனுவின் காலத்திய மனிதனின் பரிவர்த்தனை மதிப்பு (அடிமை என்ற முறையில்) பெரிய அளவுக்குக் குறைந்துவிட்டது. ஆக, கணம் என்பதில் அதிகப்பட்சமாக ஐநூறு ஜனங்கள் இருந்தார்களென்று தோன்றுகிறது. எனினும், நாம் வற்புறுத்தும் பிரதான விஷயத்துடன் இது நேரடியானத் தொடர்பு கொண்டிருக்கவில்லை; மொத்த ஜனத்தொகையின் அளவுக்கு உற்பத்தித்திறன் எப்படி எல்லைகட்டியதென்பதையே நாம் இங்கு இதன்மூலம் அறிகிருேம்.

இடத்தையும், செல்வத்தையும் தேடியலைந்த கணம், சில சமயங்களில், நோய்வாய்ப்பட்டு அழிந்தது; அல்லது சத்துருக்களால் அழிக்கப்பட்டது. தன் உறுப்பினரை இழந்த காரணத்தால் பலவீனமடைந்த கணம், மற்ருெரு கண-கோத்திரத்தினரை சுவீகரித்துக் கொள்வதன்மூலம் புது வலுப்பெற்றது; அல்லது இன்னொரு கணத்தோடு பரிபூர்ணமாக ஐக்கியமடைந்தது. அந்தநாட்களில், போக்குவரத்துச் சாதனங்கள் கஷ்டமானவையாகவிருந்தன; விரிந்த பிரதேசங்களால் பிரிக்கப்பட்டு வாழ்ந்த மக்கள், தமது அன்ருட வாழ்வில் தொடர்புகொள்ள முடியவில்லை. எனவே, வெவ்வேறு கிளைகளாகப் பிரிந்த கண-கோத்திரங்களும் குலங்களும் தத்தம் மொழிகளை வெகு வேகமாக உருவாக்கிக் கொண்டன; எனவே நாளாவட்டத்தில் ஆனுல் சீக்கிரத்திலேயே அவை கிட்டத்தட்ட முழு அன்னியர்களாகவே தாய்க் கணத்துக்குத் தோன்றுவார்கள். ஏராளமான வேற்று கணத்தினரை சுவீகரித்துக்கொள்வதாலும், பிற கணங்களில் ஐக்கியப்பட்டு விடுவதாலும், புதிய குலங்களிலும் கணங்களிலும் கலப்புமொழி உருப்பெறும். இத்தகைய அலாதியான தன்மைகள் சம்ஸ்கிருதமொழியில் நிறைந்திருக்கின்றன; சமுதாய வரலாற்றின் ஞானத்தைப் பின்னணியாகப் பெருத இலக்கண ஆசியர்கள், அந்த அலாதியான தன்மைகளின் தோற்றத்தை வியாக்கியானம் செய்வதற்காக, வீணில் மூளையைக் குழப்பிக்கொண்டு வருகின்றனர். உதாரணமாக, தன்மை ஒருமைப் பெயரான நான் (சம்ஸ்கிருதத்தில் அஸ்மத்), முன்னிலை ஒருமைப் பெயரான நீ (சம்ஸ்கிருதத்தில்

யுஷ்மத்) ஆகியவற்றின் ஏழு வேற்றுமை உருபுகளை ஏற்பதால் ஏற்படும் இருபத்தியொன்று சொற்களைப் பெறுவதற்காக, மகத்தான இலக்கண கர்த்தாவான பாணினியார் இருபத்திமூன்று விதிகளை எழுதவேண்டியிருந்தது; அவற்றுக்கு விதிகளே இல்லையென்பதே இதன் அர்த்தம். குலங்களும் கணங்களும் ஐக்கியப்பட்ட நிலைமையின் அடிப்படையிலேயே இவற்றை விளக்கமுடியும். காலப்போக்கில் ஏற்பட்ட மாறுதலின் விளையாக விளக்க முடியாது; ஏனெனில், நான், நீ, அவன்போன்ற உயர்திணைப் பொருட் பெயர்களின் பிரதிப் பெயர்கள் மாறுதல் அடைவது மிக மிகக்கடினம்.[1]

தனிப்பட்ட அன்னியரையோ, கோஷ்டியாகவுள்ள அன்னியர்களையோ, ஒரு கணம் சுவீகரித்துக்கொள்ளும் வழிமுறை, யாகச் சடங்கில் விராத்தியஸ்தோமம் எனப்படுகிறது. இந்த சுவீகாரமும் பிற்காலத்தின் ஏக ஸ்திரீ விவாகக் குடும்பத்தில் சொத்துக்கு வார்ஸு சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டதும் ஒன்றல்ல என்பது தெளிவு; எப்படியெனில், சுவீகரிக்கப்பட்டவர் எந்தத் தனிக் குடும்பத்தையும் சேரவில்லை; ஏனெனில் கணக் குடும்பத்தில் தனிக் குடும்பங்களே கிடையாது. யாகச் சடங்கு, உறவினராயில்லாத அன்னியரை கணத்தின் உறவு முறைக்குள் அனுமதித்தது; அதன்மூலம், அவரை, கம்யூனின் பொருளாதார, சமூக வாழ்வுக்குள் அனுமதித்தது. அன்னியர்கள் அனைவருமே, வேறு குலத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பதால், விரோதிகளாகக் கருதப்பட்டு, கைப்பற்றப்பட்டவுடன் கொல்லப்பட்டனர். அத்தகைய அழிவிலிருந்து சுவீகரித்துக் கொள்ளப்பட்டவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

---

1 எங்கல்ஸ் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது: "குலமும் மொழியும் சாராம்சத்தில் சம விஸ்தார முள்ளவையாக இருக்கின்றன. குலங்கள் பிரிவதால், புதிய குலங்களும் மொழிகளும் சமீபகாலம்வரை அமெரிக்காவில் உருப்பெற்றுக் காண்டிருந்தன; இப்பொழுதும் அவை அநேகமாக உருப்பெற்றுக்கொண்டிருக்கலாம். பலவீனமடைந்த இரண்டு குலங்கள் ஒன்றாக ஐக்கியப்படும்பொழுது, விதிவிலக்கான நிகழ்ச்சி ஏற்படுகிறது; அதாவது நெருங்கிய உறவுள்ள இருமொழிகள் ஒரே குலத்துக்குள் பேசப்படுகின்றன. அமெரிக்கக் குலங்களின் சராசரித் தொகை 2000 ஆகும் . . ." (குடும்பத்தின் தோற்றம்).

மேய்ச்சல் நிலங்களேயும் கால்நடை வளர்ப்புக்குத் தகுதியான பிரதேசங்களேயும் தேடிச்சென்ற கணம், சத்துருக்குலங்களுடன் யுத்தங்களை நடத்தவேண்டியிருந்தது. தேவகணங்கள் நடத்திய அத்தகைய யுத்தங்களேப்பற்றி ரிக்வேதம் ஏராளமாகக் குறிப்பிடுகிறது. அதிதி, வஸு, ருத்திரன், தியாஸ், திதி முதலிய கணங்களுக்கிடையே இடைவிடாமல் நடந்த போராட்டங்களேப்பற்றி மகாபாரதத்தின் ஆதிபருவத்திலும், சகல புராணங்களிலும் வம்சாவளியைப் பற்றியுள்ள பரம்பரைக் கதைகளிலும் ஏராளமாகக் காணலாம். போர்புரிந்த இந்த ஆதிக்காலக் கணங்களில் பல அவற்றின் அன்னேகளுடைய பெயர்களாலேயே அறியப்படுகின்றன. ஆனல் ரிக்வேதக் காலத்து யுத்தங்கள், தந்தைவழிச் சமூகத் தலேவர்களால் நடத்தப்பட்ட கணங்களுக்கிடையே நடைபெற்றவையாகும்; குறிப்பாக, ஸுதாஸன், திவோதாஸன் ஆகியோருடன் தொடர்புகொண்டதாக அறியப்படும் பத்து அரசர்களின்யுத்தம்[1] இந்த வகையைச் சேர்ந்ததே. தாய்வழி ஏற்பாடு தகர்ந்து,தந்தைவழி ஏற்பாடு உருவாகி, அது, தனி உடமை அடிமைமுறை, வர்க்க யுத்தம் ஆகியவற்றை நோக்கி முன்னேறும் காலத்தில் இந்த யுத்தங்கள் நடைபெற்றன. ஆனல் அவை ஏற்படும் வரையில், தந்தைவழி சமூகத் தலேவர்களின் கீழ் நடந்த யுத்தங்களும், கணங்களுக்கிடையே அல்லது கணங்களின் கூட்டணிகளுக்கிடையே நடத்தவைதான். இரண்டாவதாக, கால்நடைகள், தண்ணீர் வசதி, மேய்ச்சல்நிலம் ஆகியவற்றைப் பெறுவதே நோக்கமென்று வெளிப்படையாகப் பறைசாற்றிக்கொண்டே அந்தப் போர்கள் நடத்தப்பட்டன. மூன்ருவதாக, அசுரர்கள், தைத்தியர்கள், ராட்சஸர்கள், அஹிக்கள், தாசர்கள் முதலிய ஆரியர் விரோதிகளும் யாக முறைக்கு உரிய கண ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களே. அவர்களும் தமது அக்கினியுடன் யாகம் செய்வதாகவும் ஆனல்

---

[1] பத்து அரசர்களின் யுத்தம்: சுதாஸன் என்ற அரசனேக்கொண்ட பரதர்களுக்கு எதிராக பத்து குலங்கள் கூட்டாக நடத்திய யுத்தமாகும். இந்த யுத்தத்தில் சுதாசன் வெற்றியடைந்தான். அவனே எதிர்த்த பதின்மரும் தோற்கடிக்கப்பட்டனர். (மொ-ர்)

திவோதஸனுக்காக, இந்திரன், சம்பரன் என்பவனுடைய கோட்டைகளே அழித்ததாகக் குறிப்பிடப்படுகிறது. (மொ-ர்)

தேவர்களின் கணிப்புப்படி அவர்கள் தவருன மந்திரங்களுடன் 'தவருன முறையில்' செய்வதால் அவர்களுக்கு தவருன பலனே கிடைத்ததாகவும் கூறப்படுவதிலிருந்து இது தெளிவாகப் புலனுகும். நான்காவதாக, யுத்தத்தை நடத்தும் முறையும், போரில் கிடைத்த செல்வத்தை பயன்படுத்தும் முறையும், கண ஸ்தாபன முறையாகவே உள்ளது; அதாவது வர்க்க அரசில் உள்ள மாதிரி, போரில் கிடைத்த செல்வத்தை ஒரு வர்க்கம் சொந்தமாக்கிக் கொள்ளவில்லை; கூலிக்கு அமர்த்தப்பட்ட நிரந்தர ராணுவம் யுத்தத்துக்குத் தலைமை தாங்கி நடத்தவும் இல்லை.

திதி, அதிதி, தனு, வஸு, கத்ரு, விநாதா, பானு முதலிய பொது அன்னைகளின் வம்சங்களைச் சேர்ந்தவர்களென்று கூறிக்கொண்டு பூர்வீகக் கம்யூனிஸ்ட் முறையில் வாழ்ந்த இந்தக் கணங்களும் குலங்களும், எங்கே, எவ்வளவுகாலம், ஆரியர் வரலாற்றிலும் ஆரியர் போராட்டங்களிலும் பங்குகொண்டிருந்தன என்பது நமக்குத் தெரியாது. அவை, கூட்டு உற்பத்தி முறையை அடிப்படையாகக்கொண்ட கண கம்யூன்களாக விளங்கினவென்றுதான் நாம் கூறமுடியும். இந்தக் காலத்தில், ஜனரஞ்சிதமான புராணங்களில், இந்தத் தெய்வங்கள் அழிவை அறியாதவர்களென்றும் சர்வக்ஞர்களென்றும் உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் சக்தி படைத்தவர்களென்றும் கூறப்பட்டபோதிலும், அவர்கள் மனிதப் பிறவிகளேயென்பது மறைபொருளாகிவிடவில்லை; மறக்கப்படவுமில்லை. தேவர்கள் மனிதப் பிறவிகளேயென்று அதர்வவேதம் தெட்டத் தெளிவாகக் கூறுகிறது. அதைப்போலவே, சதபத்பிராம்மணம், மனிதர்களில் ஒருவகையினராக தேவர்களை வர்ணிக்கிறது. இந்திரன், அக்கினி, பிரஜாபதி ஆகியோரும் இதே வகையினரென்று ஐதரேயப்பிராம்மணம் கூறுகிறது.

அவர்கள் மனிதப் பிறவிகளாயிருப்பதுடன், அவர்களுடைய சமூக ஸ்தாபனம் கண முறையாக விருந்ததென்பது திட்டவட்டமாகக் குறிப்பிடப்படுகிறது. வஸுக்களின் குலத்தில் எட்டு கணங்கள் இருந்தன; ருத்திரர்களின் குலத்தில் 11 கணங்கள் இருந்தன; மருத்துக்களின் குலத்தில் 21 கணங்கள் இருந்தன; ஆதித்யர் குலத்தில் 12 கணங்கள் இருந்தன; ரிபுக்களில் 3 கணங்கள் இருந்தன;

இவ்வாறே இதர தேவகுலங்களிலும் பல கணங்கள் இருந்தன; தேவகணங்கள் துண்டுபட்டு, பலகணங்களுக்குள் பரவின. குறிப்பிட்ட காலத்துக்குப்பின், அவைகளுக்கிடையே எத்தகைய உறவுப் பிணைப்போ மொழிப்பிணைப்போ இல்லாமல்போய்விட்டது; எனவே, அவைகள் ஒருவருக்கொருவர் அன்னியராகிவிட்டன. கால்நடைகளுக்காகவும் செல்வத்துக்காகவும் அவைகளுக்குள்ளேயே போராடின.

புரதேவர், முரதேவர், சிஷ்ணதேவர், சுரதேவர் முதலியோர் இப்படிப் போராடியவர்களாகும். பானி குலத்தவர்களுக்கும் தேவ கணங்களுக்கும் இடையே நடந்த ஒரு பெரிய சண்டையைப் பற்றி ரிக்வேதம் குறிப்பிடுகிறது. பானி குலத்தினர் தேவகணங்களின் கால்நடை மந்தைகளைத் திருடிவிட்டனர். ஷாரமா என்ற ஸ்திரீ தேவ கணங்களுக்குத் தலைவி; அவள் நதிகள் காடுகள் வழியாக தேவர்களை இட்டுச் சென்றாள்; இறுதியில், பானி குலத்தினர் இருந்த இடத்தைக் கண்டு பிடித்தனர்; யுத்தம் நடைபெற்றது. தேவாசுர யுத்தங்களில் குறிப்பிடப்படும் அசுரர்களும் ஆதியில் தேவகணங்களைச் சேர்ந்தவர்களேயென்று புராணங்கள் கூறுகின்றன.

கம்யூனின் சமாதானக் கால பொருளாதாரத்தில், ஹோதர், அத்வரியு முதலிய தேர்ந்தெடுக்கப் பட்ட பொறுப்பாளர்கள் இருந்தனர் என்பதை நாம் முன்பே பார்த்தோம். கணத்தின் பொறுப்பாளர்களான அவர்கள், நவீன அரசின் நிர்வாகத்தினரைப் போலவோ, சுரண்டுகிறவர்களின் லாபத்துக்காக சுரண்டப்படும் வர்க்கங்களை ஏவிவிட்டு உற்பத்தியை நடத்தும் நிர்வாகத்தினரைப் போலவோ, சலுகையும் சம்பளமும் பெற்ற, அகற்றமுடியாத, நிரந்தரமான நிர்வாகமாகவோ இருக்கவில்லை. கூட்டு உழைப்புக்கு வழிகாட்டும் வேலையைச் செய்த உற்பத்தியாளர்களாகவே அவர்கள் இருந்தனர்; சொத்துரிமை வேறுபாடு வருவதற்குமுன், சமுதாயச் சேமிப்பிலிருந்து மற்றவர்களுக்குக் கிடைத்த பங்கே அவர்களுக்கும் கிடைத்தது.

சமாதானத்தில் இருந்த மாதிரியே, சண்டையிலும். உணவு உற்பத்தியும் யுத்தமும் பல சந்தர்ப்பங்களில் ஒரே வினையாகத் தான் இருந்தன. எனவே, யுத்தம் என்ற அர்த்தத்தை உடைய

சம்ஸ்கிருத சொற்களில் ஒன்றுக 'காவிஷ்டி' என்பது உள்ளது. இதே சொல்லுக்கு 'பசுக்களைப் பெறுவதற்கான சிறு யாகம்' என்ற பொருளும் உண்டு. கம்யூன் முழுமையுமே ஆயுதம் தரித்த ஸ்தாபனமாக விருந்தது; வேலை வேறுபாடோ வேலைப் பிரிவினையோ ஏற்படவில்லை; எனவே, ஆடவர்கள் மட்டுமே சண்டை செய்தார்களென்றாலும், யுத்தம் கம்யூன் முழுமையின் கருமமாகவிருந்தது. ஆரம்பக் கட்டங்களில், யாகத்தில் செயலாற்றிய அத்வரியுத் தலைவனே யுத்தத்திலும் தலைமை வகித்தார்; அதே காரணத்தினால் தான், ஆர்ய வரலாற்றின் துவக்கக் காலத்தில், க்ஷத்திரிய அரசன் என்ற போர்த் தலைவர் ஒருவரையும் பிராம்மணப் புரோகிதர் என்ற சமாதானகாலப் பொருளாதாரத் தலைவர் ஒருவரையும் வேறு வேருகக் காண முடியவில்லை. அதே காரணத்தினால்தான், கூட்டு வாழ்வுக் கம்யூனை பிரமனின் தலைவர்களான பிராமணர்கள், பிரபலமான போர்வீரர்களாக விருந்ததைப் பார்க்கிறோம். பிற்காலங்களில்தான், யாகம் செய்வதுமட்டும் அவர்களுடைய பிரத்தியேகக் கடமையாயிற்று.

அநாகரீக ஜனங்கள் அனைவருமே, ஒவ்வொரு கூட்டுச் செயலையும் கூட்டுப் பொருளையும் சுற்றுச்சார்பையும் தெய்வீகத் தன்மை பெற்றதாகச் செய்து சமயச் சடங்கின் பொருளாக ஆக்கினர். அதைப் போலவே, ஆரியர்களும் செய்தனர். பிரமன் என்ற கண கம்யூன், தன் போர்த் தலைவனைத் தேர்ந்தெடுத்தவுடன், அவர் பிரமணஸ்பதி அல்லது பிருஹஸ்பதி அல்லது கணபதி ஆனுர். தேவாசுர யுத்தங்களில், பிருஹஸ்பதி, தேவர்களின் புலமை மிகுந்த ஆலோசகராகவிருந்தார். ஒவ்வொரு கருமத்தின் துவக்கத்திலும் துதிபாடி அழைக்கப்படவேண்டிய தெய்வமாக, கணபதி ஹிந்துக்கள் மத்தியில் நீடித்திருக்கிறுர். சண்டையிலும் சமாதானத்திலும் கம்யூன் உறுப்பினர்களுக்குத் தலைமைதாங்க வேண்டிய கம்யூன் தலைவனையே இந்த மூன்று பெயர்களும் குறிக்கின்றன. அவர் அவர்களுடைய பிரதிநிதியாகவும் தலைவனுகவும் இருந்தபடியால், அவருடைய பராமரிப்புக்காக, கூட்டு உற்பத்தியிலிருந்து கம்யூன் அவருக்கு ஒரு பங்கு (ஹவிஸ்) அளித்தது; சத்துருக்களை அழித்து,செல்வத்தை அடைவதற்கு வழிகாட்டும்படி

அவரைக் கம்யூன் கேட்டுக்கொண்டது. இந்த கணத் தலைவன், சிவப்பு சாயந்தோய்த்த ஆடைகளை அணிந்திருந்தானென்றும் சத்துருக்களை எதிர்த்துப் போராடுவதற்கேற்ற கருவிகளாக எறி கயிரையும் மூன்று கூர்களை உடைய ஈட்டியையும் பெரிய யானைப் பல்லையும் எடுத்துச் சென்றானென்றும் கணபதி அதர்வசிர்ஷா விவரிக் கிறது. கணம், விரோதிகளை எதிர்த்துப் போராடி வெற்றிகண்ட வுடன், விரோதிகளின் கால் நடைகளையும் இதர செல்வங்களையும் கைப்பற்றிக்கொண்டது; பெண்களையும் குழந்தைகளையும் வசப் படுத்திக்கொண்டது; ஆடவர்களாயுள்ள யுத்தக் கைதிகளைக் கட்டிப்போட்டது; அவர்களுடன் தன் இருப்பிடத்துக்குத் திரும் பியது.

இப்பொழுது, கணபதி செய்யவேண்டிய இன்னொரு வேலை இருந்தது. யுத்தக்கொள்ளை தனி உடமையல்ல; அது கணத் துக்குச் சொந்தம். ஒவ்வொருவரும் உபயோகிக்கக்கூடிய செல் வத்தை வினியோகம் செய்யவேண்டும். வினியோகமாகவேண்டிய செல்வத்துடன் கணபதி அவனுக்கு உரித்தான நடு ஆசனத்தில் (ஆஸந்தி) ஏறி உட்கார்ந்துகொள்ள வேண்டுமென்று கணத்தி னர் அழைக்கிறார்கள். விருந்துண்டு இன்புறுவதற்கு அது ஒரு மகத்தான சந்தர்ப்பமாகும். வெற்றி கண்ட வீரத்தலைவனும் கம்யூனும் புகழப்படுகின்றனர். அவனே கணபதி, அவனே பிரியபதி, அவனே நிதிபதி. எனவே, போரில் கிடைத்த செல்வத்தின் வினி யோகத்திலும் கணத்தின் விருந்திலும் அவனே தலைமை தாங்கு கிறான்.

அக்கினி, கம்யூன் ஆகியவற்றின் விருந்தில், புனிதமான உணவாக முதலிடம் பெறுவது, பகைவன் பிரதேசத்தில் முதலில் பிரவேசித்த குதிரையாகும். இதுவே அசுவமேத யாகத்தின் தலை சிறந்த குதிரை. அதைக் குளிப்பாட்டி, ஜனங்கள் அனைவருக்கும் காட்டிய பிறகு, அது யாகத்தூணில் கட்டப்படுகிறது.

ஆனால், அந்தக் குதிரையைக் கொல்வதற்கு முன்னால், கண உறுப்பினர்கள் வாடிக்கையான இறைச்சியையும், மதுவையும் உண்டு களிக்கின்றனர். அதைத் தொடர்ந்து ஆண்களும் பெண் களும் ஒரு புணர்ச்சி நடனத்தில் ஈடுபடுகின்றனர்; இதில்

தலைமை தாங்கும்படி கணபதி கேட்டுக்கொள்ளப்படுகிறார். கணம் வாழ்ந்த காலத்துப் பழக்கப்படி, இந்தக் கோஷ்டிப் புணர்ச்சி விருந்தை அனுபவிக்கிறார்கள்.

எனினும், இந்தப் புணர்ச்சி நடனக் காலத்தில், ஓரளவுக்குப் பிணக்கு ஏற்படுகிறது. கைப்பற்றப்பட்ட பெண் கைதிகளின் பிரவேசமே இதற்குக் காரணம். யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட இதர பொருட்களைப்போலவே, இந்தப் பெண் கைதிகளும் கம்யூனுக்குக் கிடைத்த தானமாகும். முன்னால் கணத்திலிருந்த மனைவிகளைப்போல, இவர்களும் கணத்தின் கோஷ்டித் திருமண உரிமைகள் மூலமாக கணத்தில் ஐக்கியமாகின்றனர். இந்தக் களியாட்டத்திலும் புதிய சுந்தரிகளுக்கான போட்டியிலும், கணத்தின் பழைய மனைவிகளான கணிகைகளில் சிலர் புறக்கணிக்கப்படுகிறார்கள்; அவர்களுக்குத் துணைவர்கள் கிடைக்கவில்லை. ஆடவர்கள் தம்மைக் கவனிக்காததைக் குறித்து அவர்கள் புலம்பும் முறையை இங்கு விவரிக்கமுடியாது. சுக்ல யஜுர்வேதம், இதை 'விலாப' என்று வர்ணிக்கிறது; யாகச் சடங்கின் பகுதியாகவுள்ள க்ஹட்ட பலகலிசம்வாதம் என்பதில் அது விவரிக்கப்படுகிறது; இன்று அந்த பாஷை, கொஞ்சமும் அடக்கமில்லாத துராசாரமாகக் கருதப்படும்; அன்று அது அனுமதிக்கத்தக்கதாகவும் புனிதமானதாகவும் இருந்தது.

இந்த விருந்தும் பெண்களின் சுவீகாரமும் முடிந்தபிறகு, கம்யூன் மேற்கொண்டு இரு கடமைகளை நிறைவேற்றவேண்டியிருக்கிறது. அவையே புருஷமேதம், பிரமமேதம் என்பனவற்றின் விஷயங்களாக உள்ளன. ஆடவர்களாயுள்ள யுத்தக் கைதிகளின் பிரச்னைக்குத் தீர்வு காண்பது புருஷமேதம்; போராட்டத்தில் இறந்தவர்கள் பிரச்னைக்கு பைசல் காண்பது பிரமமேதம்.

ஆதிக்காலத்தில், திருத்தமடையாத கருவிகளைப் பெற்றிருந்த கம்யூனின் உற்பத்தித்திறன் மிகக் குறைவாகவிருந்தது. தான் பாடுபடுவதால் இழக்கும் உழைப்புச்சக்தியை மீண்டும் பெறுவதற்கான அளவுக்குமேல் அதிகமாக உற்பத்தி செய்ய உற்பத்தியாளனால் முடியவில்லை. எனவே, அத்தகைய காலத்தில், அடிமைகளைச் சமூக ஸ்தாபனத்துக்குள் கொண்டுவந்து உடமைக்

காரர்களின் நன்மைக்காகப் பயன்படுத்துவதற்கு இடமேயில்லை. யுத்தக் கைதிகள் கைப்பற்றப்பட்டபொழுது, அவர்களில், பலம், அழகு, வைத்திய ஞானம் முதலிய விசேஷத் தன்மைகளைப் பெற்ற சிலர் கம்யூனில் சுவீகரிக்கப்பட்டனர்; அவ்வாறு சுவீகரிக்கப் பட்டபின், அவர்கள் பரிபூர்ணமாக இரத்தக் கலப்புள்ள உறவினர் களானார்கள்; அதாவது, கம்யூனின் உறுப்பினர்களானார்கள். மற்றவர்களை என்ன செய்வது? கம்யூனின் வசதியில்லாத பொருளாதாரத்தில் அவர்களுக்கு இடமில்லை; அதில் அவர்கள் உழைக்கும் கரங்களாகப் பயன்பட முடியாது; உணவை உட் கொள்ளும் "வாய்களாகவே" இருப்பார்கள். எனவே, அவர் களைக் கொல்வதைத் தவிர வேறு வழியில்லை. அவர்கள் கம்யூ னின் சத்துருக்கள்; எனவே, அவர்கள் புருஷமேதத்தில் மகத் தான தீக்கடவுளான அக்கினிக்கு அளிக்கப்பட்டனர். இந்தப் புருஷமேதம் என்பது, நர மாமிசத்தைத் தின்னும் பழக்கத்தின் மீத மிச்சமல்ல; அநாகரீகக் குலங்கள் தலை வெட்டி வேடர்களாக விருந்தனரென்று சில அறிஞர்கள் கூறுகிறார்களே, அந்த தலை வெட்டி வேட்டையின் மிச்சசொச்சமுமல்ல. உணவுப் பற்றுக் குறை அதிதீவிரமாகவிருந்ததால், பொருளுற்பத்திச் சக்திகள் மகாத் தரித்திரமாக விருந்ததால், ஆரியர்கள் இங்கும் அங்கும் நரமாமிசத்தைப் புசிக்கும் கட்டத்தைக் கடந்திருக்கலாம். ஆனால் புருஷமேதம் அந்தக் காலத்தின் மிச்சசொச்சத்தைச் சடங்கு ரூபத்தில் பிரதிபலிப்பதாயிருந்தால், கொல்லப்படுவதை உண்ப தாகப் பாவிக்கும் ஒரு சமிக்ஞையாவது சடங்கில் இடம் பெற் றிருக்கவேண்டும். நமக்குக் கிடைத்திருக்கும் சடங்கு விவரங் களில் இதற்கான அறிகுறி எதுவும் தென்படவில்லை. அந்தச் சடங்கு விவரங்களாவன: யாகத்துக்கு உரிய பிராணிகளைக் கட்டுவதற்கு, யாகத்தில் பதினொறு கம்பங்கள் உள்ளன; யாகத் தின் மூன்றாவது நாளில், கம்பங்களில் கட்டப்பட்டுள்ள பிராணி கள் வழக்கப்படிக் கொல்லப்படுகின்றன. பிறகு, கொல்லப்பட வேண்டியவர்களும் பதினொறு கம்பங்களுக்கு இடையிடையே யுள்ள இடங்களில் நின்றுகொண்டிருப்பவர்களுமான மனிதர்கள் (இவர்கள் நர பசுக்கள், மனிதப் பிராணிகள் எனப்படுகின்றனர்.) பல்வேறு தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றனர். யாகத்

துக்குத் தலைமை வகிக்கும் பொறுப்பாளரான பிரமன் புருஷஸூக்தத்திலிருந்து ரிக்குகளைப் பாடுகிறார்; எரிந்துகொண்டிருக்கும் ஒரு விறகை எடுத்து, அவர்களைச் சுற்றி மூன்று தடவைகள் ஆட்டி அசைக்கிறார். அதன் பின்னர், அவர்கள் விடுதலை செய்யப்படுகிறார்கள், கொல்லப்படுவதில்லை. மாமூலாக, அவர்களுடைய உடல்களின் சில பகுதிகளை அக்கினி தெய்வம் ஆஹுதியாகப் பெற்றிருப்பார்; இப்பொழுது அந்த இரை அவருக்குக் கிடைக்காமல் செய்துவிட்டதால், அதற்குப் பதிலாக, அக்கினி வாயில் நெய் ஊற்றப்படுகிறது.

அவர்களைச் சுற்றி நெருப்பை அசைப்பதும் அவர்கள் அர்ப்பணிக்கப்படுவதும், ஒருகாலத்தில் அவர்கள் கொலை செய்யப்பட்டு எரிக்கப்பட்டதைக் காட்டுகின்றன என்பது நிச்சயம். ஆனால், எஞ்சிமிஞ்சியுள்ள சடங்கில் அவர்கள் கொல்லப்படாமல் விடுதலையாகிறார்கள். ஏன்? ஆரியர்கள் இரக்கப்படுகிறவர்களாக ஆகிவிட்டதால் அல்ல. மிகச் சிறிய குற்றங்களைச் செய்தவர்களாயிருந்தாலும், ஆண்களையும் பெண்களையும் சவுக்கால் அடிப்பதற்கும் அங்கஹீனம் செய்வதற்கும் கொல்வதற்கும் பிற்காலத்தில் சட்டம் இயற்றிய ஆரியர்கள், அனாரியர்களுடன் (ஆரியர் அல்லாதவர்களுடன்) நடந்த யுத்தங்களில் ஆயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்த ஆரியர்கள், திடீரென்று மனிதாபிமானிகளாகி, இந்தப் மனிதப் பிராணிகளைக் கொல்லவோ உண்ணவோ மறுத்திருக்க முடியாது. காரணம் என்னவெனில், கைதிகளைக் கொல்லும் முறையைக் கைவிட்டுவிட்டு, அவர்களை அடிமைகளாக்கிய காலகட்டத்துக்கு இந்தச் சடங்கு உரியது. சமுதாயத் தொழிலியல் முன்னேறிவிட்டது; மனிதனின் உழைப்பு, உபரியை உற்பத்தி செய்யும் திறனைப் பெற்றது; அது எஜமானர்களுக்கு மதிப்புள்ளதாக ஆகிவிட்டது; எனவே, கைதியைக் கொன்று அக்கினிக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதற்குப் பதிலாக, அவனை உயிரோடு உடமையாக்குவதே சிறந்ததாயிற்று. யுத்தக் கைதிகளைக் கொல்வது வீண்விரயமாயிற்று; அதனால் ஆரியர்களுக்குத் தீமையே விளைந்தது; எனவே, ஆரியர்கள் கைதிகளை அடிமைகளாக்கினார்கள். ஆரியர் சமூகத்துக்குள், சுதந்திரமும் சமத்துவ

மும் சிறப்பித்த கம்யூனின் சவத்தின்மீது பிற்காலத்தில் பிரவே சித்த பிரயோஜனகரமான ஸ்தாபனம் இது.

இந்த மாறுதல் பிற்பாடு நிகழ்ந்து, புருஷமேதத்தின் பழைய தன்மையை, கணத்தில் யுத்தக் கைதிகள் கொலை செய்யப்பட்ட தின் சடங்காக மாற்றியதென்பதை, இந்த விதி அல்லது சடங்கில் மனிதர்கள் புருஷஸூக்தத்தின் செய்யுட்கள் வாயிலாக அர்ப்ப ணிக்கப்படுவதிலிருந்து திட்டவட்டமாக அனுமானிக்க முடிகிறது; எப்படி யென்றால், ஆரிய கணத்தில் பிற்பாடு ஏற்பட்ட அடிமை முறையின் ஸூக்தமே புருஷஸூக்தம். அப்பொழுது, வர்ணங்கள், அடிமைகள், தனி உடமை, அரசு ஆகியவை அந்தக் கணத்தில் ஏற்பட்டுவிட்டன. இதை நாம் பிறகு ஆராய்வோம்.

யுத்தத்தில் கொலையுண்ட உறவினர்களின் கடைசிக் க்ருமம் இன்னும் எஞ்சியிருக்கிறது. இறந்தவர்களை வாடிக்கையாக அடக் கம்செய்யும் முறையே இந்த சந்தர்ப்பத்திலும் பின்பற்றப்பட்டது. சண்டையில் செத்தவர்களோ, வேறு வகையில் செத்தவர்களோ அவர்களை எரிப்பது தனிப்பட்டவர் விவகாரமல்ல; தனிப்பட்டவர் விவகாரமாக விருந்ததென்று சில எழுத்தாளர்கள் கருதுவது முற்றிலும் தவறாகும். அதுவும் ஒரு யாகச் சடங்கே. அந்த யாகச் சடங்கு பிரமமேதம் என்ற அர்த்த புஷ்டியுள்ள பெயரைப் பெற் றிருக்கிறது. அக்னி ஹோத்திரத்தை ஏற்றுக்கொண்ட நபர் இறக் கும்பொழுதே, ஸ்ரௌத விதி (அதாவது, பழைய வேதக்கிரியைகள்)க் குத் தகுந்தபடி எரிக்கப்படுகின்றனரென்றும் தற்காலச் சடங்கு முறை கூறுகிறது. அதற்கு பிரமமேதம் என்று பெயரென்றும் அது கூறுகிறது. மற்றவர்களின் உடல்கள் பிற்கால ஸ்மிருதிச் சடங்கு கள் வழியிலே அடக்கம் செய்யப்படுகின்றன. இவ்வாறு செய் வதற்கு பித்ரு மேதம் என்று பெயர். ஸ்மிருதிக் கிரியைகள் சமீப காலத்தில் தோன்றினவென்பது வெளிப்படை. ஆதிக்கால யாகச் சமூகத்தில், கம்யூன் முழுவதுமே அக்னிஹோத்ரியாக விருந்தது; எனவே ஒவ்வொரு சாவும் கம்யூன் முழுமையின் பிரமமேதமாகக் கருதப்பட்டது. இறந்தவர் உறவினராகவிருந்ததால் அவர் பிர மன் என்ற கம்யூனின் உறுப்பாகவிருந்தார். அவருடைய சாவு, கணத்தின் ஒரு பகுதி செத்ததற்கு ஒப்பாகும். அந்த மேதத்தில்

பங்குகொள்வது, பிரமன் முழுமையின் பொதுவான கருமமும் கடமையும் ஆகும்.

ஆரியர்கள், இதர அநாகரீக மக்களைப்போலவே ஒரு கண ஸ்தாபனத்தைப் பெற்றிருந்தனர் என்ற அனுமானத்தை ஆட்சே பிக்கும் விமர்சகர்கள்[1] ஒரு வாதத்தைக் கூறுகின்றனர்; அதாவது, கணம் என்பதற்கு மார்கன் கொடுத்துள்ள இலக்கணப்படி கண அங்கத்தினர்களுக்குப் பொதுவான ஒரு சுடுகாடு (அல்லது அக்கினியில் எரிக்கும் பழக்கமா ?) இருந்திருக்கவேண்டுமென்றும் ஆரியர்களுக்கு அம்மாதிரி இருக்கவில்லையென்றும் அவர்கள் கூறுகிறார்கள். இந்த விமர்சகர்களுக்கு பிரமமேதச் சடங்கு பதில் அளிக்கிறதென்பதை மேலே எடுத்துரைப்பதிலிருந்து அறியலாம்.

கொள்ளையடிக்கப்பட்ட மற்ற பொருட்களின் வினியோகத்துடன் சித்திரம் பூர்த்தியாகிவிடும். கைப்பற்றப்பட்ட செல்வம், கால்நடைகள், பானைகள், ஆபரணங்கள், ஆடைகள் முதலானவற்றின் வினியோகப் பிரச்னையைத் தீர்க்காமல், விருந்துண்பதும் நடனமாடுவதும் ஆண் பெண் கைதிகளின் பிரச்னைக்குத் தீர்வு காண்பதும் முடிவுபெற முடியாது. இந்த வினியோகமே தானம் எனப்படுவதின் விஷயமாகும். தானம் என்பதை இனம் அல்லது பிச்சையிடல் என்று தவறாக மொழிபெயர்ப்பது வேதங்களைப் பயின்ற அறிஞர்களுக்கு வழக்கமாக விருக்கிறது.

சமாதானகாலப் பொருளாதாரத்தில், கூட்டு உழைப்பின் அன்றாட பலன்கள் தனிப்பட்டவர்களிடையே வினியோகமாகி அவர்களால் சுவீகரித்து உபயோகிக்கப்படுவதை ஹவனம், ஹவிஸ், ஹுதசேஷம் அல்லது யக்ஞசிஷ்டம் என்று குறிப்பிட்டனர்; இதை நாம் முன்பே சுட்டிக்காட்டியிருக்கிறோம். கம்யூன் உறுப்பினரிடையே யுத்தத்தில் கிடைக்கும் பண்டங்களை வினியோகம்செய்வதும், ஆயுதங்கள், ஆடைகள், மண்பாண்டங்கள் முதலிய நிலையான சாமான்களை கம்யூன் கணக்கில் வைத்திருந்து இடையிடையே, மகிழ்ச்சிக்குரிய விசேஷ சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு வினியோகம்செய்வதும் தானம் எனப்பட்டது. தனக்குரித்தான ஆசனத்தில்

1 உதாரணமாக, "ஹிந்துக்களின் அன்னிய கணத் திருமணம்" என்ற நூலை எழுதிய காரன்திகார்.

சன்மானங்களுடன் அமர்ந்தவுடன் பிரமனஸ்பதி செய்யவேண்டிய கடமை இதுவே. "செல்வத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும்படி" ("விபாஜ வஸுனி") அவன் அதர்வ வேதத்தில் அழைக்கப்படுகிறான். கணபதி "ஸ்ரீ வஸு" என்றும் செல்வம் "வஸுனி" என்றும் அழைக்கப்படுவதும், வஸு என்ற பொதுத்தாயின் வம்சாவளிக்கு உரிமை கொண்டாடும் கணசங்கமாக வஸுக்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கவை.

தானம் அல்லது வினியோகம், குலத்தலைவனின் சொந்த விருப்பு வெறுப்புக்கு உட்பட்ட கடமையல்ல; இஷ்டப்பட்டால் வினியோகிக்கவும் இஷ்டமில்லாவிடில் பேசாமலிருக்கவும் அவனுக்கு உரிமை கிடையாது; ஏனெனில், கைப்பற்றப்பட்ட செல்வம் கம்யூனுக்குச் சொந்தமானது. ஹவனம்மாதிரி தானம் என்பதும் ஒரு சமுதாயக் கருமம்; கம்யூன் விரும்பும் பொழுதும் ஒரு யுத்தம் அல்லது படையெடுப்பு முடிந்தவுடனும் குறிப்பிட்ட காலங்களில் நடைபெறும் கருமம் அது. எனவே, கம்யூன் சித்தாந்தத்தில், அது பொதுப்படையாக போர்த்தலைவர்களுடன், கணபதி அல்லது பிரமனஸ்பதியுடன் சேர்த்து எண்ணப்படுகிறது; ரிக் வேதத்தில் தானம் என்பது பொதுப்படையாக, 'வினியோகம்' என்ற பொருளேயே கொண்டிருக்கிறது. எனவே, பிச்சையிடல் அல்லது அபிமானம் காட்டுதல் என்ற பொருள் அதற்கு அப்பொழுது கிடையாது.

கூட்டுஉடமையும் கம்யூனும் தகர்ந்தபின்னர் யுத்தம் என்பது அரசனுக்கும் அவனுடைய க்ஷத்திரிய வர்க்கத்துக்குமுள்ள கடமையானபிறகு, செல்வம் இந்த க்ஷத்திரியர்களின் சொந்த வீடுகளில் குவிந்தபிறகு, யுத்தத்தின் பலன்களை முன்போல சமூகச் சொத்தாகக் கருதாமல், அரசனுக்கும் ஆளும் வர்க்கத்துக்கும் உரியதாகக் கருதத் தொடங்கியபிறகு, நிலைமை மாறியது. பொதுவில் கைப்பற்றப்பட்ட செல்வத்தை வினியோகிப்பதான தானம், கணபதி என்ற போர்த்தலைவன் கட்டாயமாக நிறைவேற்ற வேண்டிய சமுதாயப் பொறுப்பாகவும் கடமையாகவும் இல்லாமல், அரசனும் ஆளும் வர்க்கமும் தாமாகச் செய்யவேண்டிய சொந்

தக் கடமையாயிற்று. அந்தக் கடமையை அவர்கள்செய்தால், அது நல்லொழுக்கமாகும். தானம் போர்த் தலைவனுடைய காரியமென்ற கருத்து மக்களின் மனதில் வேரோடியிருந்ததால்; பிற்காலங்களில் தானம் செய்யாத அரசன் துன்மார்க்கனுகக் கருதப்பட்டான். ஆனுல் பிற்கால அரசன் தானம் செய்யத்தவறினுல், செய்யும்படி கட்டாயப்படுத்துவதற்கு சமுதாய உரிமையும் சக்தியும் இருக்கவில்லை; ஏனெனில், சமுதாயம் நிராயுதபாணியாக்கப்பட்டுவிட்டது; அடக்கப்பட்டுவிட்டது; இப்பொழுது வர்க்க ஆட்சி ஏற்பட்டுவிட்டது. இப்பொழுது தானம் என்பது அரசர்களும் க்ஷத்திரியர்களும் இஷ்டப்பட்டுச் செய்கிற நல்வினையாகவும் உபகாரமாகவும் ஆகிவிட்டது. எல்லோருக்கும் சமமாக வினியோகமாகும் தன்மையையும் அது இழந்துவிட்டது. தானம் செய்கிறவர், இஷ்டப்பட்ட நபருக்கு தானம் செய்யலாம். ஆளும் வர்க்கம் மக்களின் நலனைப் பலிகொடுத்துவிட்டு, தன் அபிமானத்துக்குரியவரைப் பொறுக்கி, அவர்களை தானத்தின் மூலம் செல்வந்தராக்கியது. எனவே, தானத்தின் காலம், தேசம், குறிக்கோள் பற்றிய ஒழுக்கநெறி விவாதங்களைத் தொடர்ந்து' (உதாரணமாக கீதையில் இந்த விவாதத்தைப் பார்க்கலாம்.) நல்ல தானம், கெட்ட தானம் என்ற வேற்றுமைகள் ஏற்பட்டன. (தானம் நல்ல ரகத்தைச் சேர்ந்ததா தீய ரகத்தைச் சேர்ந்ததா, அது கொடையாளருக்கு நல்வினையாக முடியுமா, தீவினையாக முடியுமா என்பதை தானத்தின் இடமும், நேரமும் குறிக்கோளும் தீர்மானிக்கின்றன.) கம்யூன் இருந்த காலத்தில், இத்தகைய விவாதமோ பிரச்னையோ இடம்பெறவேவில்லை. சமூகச் சொத்தின்மீது முதல் பாத்தியதை கொண்டவர்களான நோயாளிகள், வயது முதிர்ந்தவர்கள், அங்கஹீனர்கள், பலவீனமானவர்கள் ஆகியோரின் உரிமையாகவும் அவர்களைப் பசியிலிருந்து பாதுகாப்பதாகவும், கம்யூன் முறையின் தானம் விளங்கியது. ஆனுல் தனி உடமையும் வர்க்க ஆட்சியும் தோன்றியபொழுது, தானம் கம்யூன் ஏற்பாட்டின் தானத்துக்கு நேர் எதிரானதாகவாயிற்று. சமூகப் பாதுகாப்புக் கருவியாக இருந்த தானம், ஆளும் வர்க்கமான க்ஷத்திரியர்களும் பிராமணர்களும் செல்வத்தைச் சேமிக்கும் முதல் வழியாக ஆயிற்று.

கண கம்யூனல் சிருஷ்டிக்கப்பட்ட சமூகச் சொத்தையும் கைப் பற்றப்பட்ட சமூகச் சொத்தையும் வினியோகம் செய்வது, யாக முறையின் முக்கியமான பகுதியாகவிருந்தது; எனவே தானமும் யாகமும் ஒன்றிலிருந்தொன்றைப் பிரிக்க முடியாததாகவிருந்தது. உண்மையில், யாகமுறை என்ற கூட்டு உற்பத்தி முறையில், தானமும் ஹவன மும் கூட்டு வினியோக முறையாக விளங்கிற்று. ஆனால் பிற்பாடு, தனி உடமையும் வர்க்க ஆட்சியும் அமைந்தபொழுது, தானமும் ஹவனமும், சமுதாயப் பொருளை தனிப்பட்டவர் சுவீகரித்துக் கொள்ளும் முறையாக ஆயிற்று.

சரக்குகளாகவும் பெண்களாகவும் கைப்பற்றி கம்யூனுக்குச் சேர்த்து போர்த்தலைவனால் வினியோகிக்கப்பட்டவையின் அள வின் அடிப்படையிலேயே, தைரியமும் சாமர்த்தியமும் மிக்க கணபதி நடத்திய வெற்றிகரமான யுத்தங்கள், கம்யூன் நினைவில் நிலைத்தன. அவை நினைவுக்குரியவையாக தான ஸூக்தங்களில் கொண்டாடப்பட்டன; சமுதாய தஸ்தவேஜுகளின் பகுதியாக உருப்பெற்றன. இவ்வாறு, தான ஸூக்தங்கள் தோன்றின.

தானம் கம்யூன் யாகத்தின் பகுதியாக விருந்த நிலைமாறி, அரசனுக்கும் அவனுடைய வர்க்கத்துக்கும் உரிய சொந்த விவகார மான பிறகும், இதே வகையில் பதிவு செய்யும் நிகழ்ச்சி நீடித்தது. இப்பொழுது, கவி, அரசன் தர்பாரில் தனிப்பட்ட முறையில் சன் மானம் பெறும் புரோகிதனாகத் தோன்றினர். ஆனால் வைதீக இலக்கியங்களைப் பயின்ற அறிஞர்கள் (ஓல்டன்பர்க், வின்டர்நீட்ஸ், கேட்கார் முதலியோர்) அனைவரும், யாகத்தின் இதர விஷயங்க ளுடைய உட்பொருளையும் பாத்திரத்தையும் தப்பர்த்தம் செய்த தைப்போலவே, தானத்தின் பாத்திரத்தையும் உட்பொருளையும் பூர்ணமாகத் தப்பர்த்தம் செய்துவிட்டனர். எனவே அவர்கள் தான ஸூக்தங்களையும் அவற்றை இயற்றியவர்களையும் தவருகப் புரிந்துவிட்டனர். அந்தக் கவிஞர்களை, சன்மானம் கொடுக்கும் அரசர்களின் கூலிக் கவிஞர்களாக வர்ணிக்கின்றனர்; இது உண்மைக்கு மாருனது.

பழைய வடிவத்திலுள்ள வேதஸூக்தம்-பிற்கால வடிவத்தி லிருப்பது அல்ல-சமூக உற்பத்தி வினியோக முறையின் ஒரு

முக்கியமான பகுதியாகவிருந்தது; கம்யூன் சார்பில் நிறைவேற்றப்பட்ட சமுதாயக் கடமையாகவிருந்தது; கம்யூன் முழுமையுமே வினியோகத்திலும் பாராட்டிலும் பங்குகொண்டது; எனவே கம்யூன், தன் தலைவனை கணபதியின் வெற்றி, விவேகம், வீரம் ஆகியவற்றின் விவரங்களையும் அவற்றின் பலனாக ஏற்பட்டிருக்கும் சமுதாய மகிழ்ச்சியான தானத்தைப்பற்றியும் பாடும்படி தன் கவிகளை, புரோகித ரிஷிகளை, உற்சாகப்படுத்தியது. தனி உடைமையும் அடிமை முறையும் தோன்றியபொழுது, அந்த மரபு நீடித்து, புதிய அரசன்-ராஜ்யத்திலும் நிலவியது. யக்ஞ முறையின் முக்கிய அம்சங்கள் தகர்ந்தவுடன், சுரண்டல்காரர்களின் அரசு அமைந்தவுடன், ஒரு ஏற்பாடு என்ற முறையில் தான ஸூக்தமும் மறைந்துவிட்டது.

ஹூதசேஷம் அல்லது ஹவனத்தின் கண வினியோகமுறையும் அதே மாறுதலை அடைந்தது. கம்யூனில் இருந்த உணவு முழுவதையும் கம்யூனிலுள்ள அனைவரும் பேதா பேதமில்லாமல் உண்ணமுடியும். ஸத்ர உழைப்பு அவ்வாறு விதித்திருந்தது. ஒரு தனிப்பட்ட குடித்தனக்காரர், அவருக்காக மட்டும், அவருடைய சொந்த அக்கினியில் அவருடைய சொந்த உணவை சமையல் செய்து கொள்வதென்ற பிரச்னை தோன்றவே யில்லை; ஏனெனில் "அவர்," "அவருடைய" என்பவை அப்பொழுது இல்லை. தனி உடைமையும் தனிக் குடித்தனங்களும் ஏற்பட்ட பொழுது, யாக விதி தனக்கு ஒரு பங்கு கோருவதில் விடாப்பிடியாக விருந்தது; ஆனால் இப்பொழுது சொத்தில்லாதவர்களும் வீடில்லாதவர்களும்தான் இவ்வாறு பங்கு கேட்டு, தனிக் குடித்தனக்காரர்களை வேட்டையாடி நச்சரித்தனர். சுற்றிலும் உணவுத் தேவையை உடையவர்கள் இருப்பதைப்பற்றி எண்ணாமல் தங்களுக்காக மட்டும் சமைத்துக் கொள்கிறவர்களை "பாபத்தைப் புசிப்பவர்கள்" என்று கண்டிக்கும் ஒழுக்க நெறி, இவ்வாறுதான் எழுந்தது. ஆனால் தனி உடைமையும் அதன் வர்க்கமும் இத்தகைய கண்டனங்களை, கம்யூன் ஒழுக்கத்தின் ஆவிகளுடைய இந்த நிந்தனைகளை ஏளனமே செய்தன.

போர்த் தலைவன் அல்லது கணபதியின் தானம் கொடுக்கும்

பணியும் பாத்திரமும் புதிய வர்க்க சமூகத்தின் அரசனுக்கும் க்ஷத்திரிய வர்க்கத்துக்கும் ஏற்பட்டதைப்போல, தானத்தை வினியோகிக்கும்படி கட்டாயப்படுத்தவும், அதைப் பெறவும், அதைப் போலவே ஹவனத்தையும் ஹுதசேஷத்தையும் பெறவும் பிரமன் என்ற கம்யூனுக்கு இருந்த உரிமை, புதிய வர்க்க சமூகத்தில் ஆளும் வர்க்கத்தின் இன்னொரு பகுதியான பிராமணர்களுக்கு ஏற்பட்டது. யாகச் சடங்குகளை நடத்தியவர்கள் என்ற முறையில், வேதங்களை ஓதியவர்கள் என்ற முறையில் அதன் பலனை அறிவாற்றலைப் பெற்றவர்கள் என்ற முறையில், அவர்கள் யாகப் பலன்களின் உடமையாளர்களானார்கள். தாங்கள் மட்டுமே பிரமன் என்ற கம்யூனின் உண்மையான வழித் தோன்றல்கள் என்று கூறி அந்த ஸ்தானத்தில் பிராமணர்கள் தங்களை அமைத்துக்கொண்டார்கள்; அந்த முறையில் தானம், ஹவனம் அனைத்தையும் பெறுவதற்கு உரிமையுள்ளவர்களாக அவர்கள் தங்களை நிறுவிக்கொண்டனர்.

இவ்வாறாக, கம்யூன் உற்பத்தி உறவுகள் தமக்குரித்தான சித்தாந்தத்தையும் வடிவங்களையும் உருவாக்கின; ஆனால் அந்தக் கம்யூனும் அதன் இயற்கையான சொத்துரிமை வடிவங்களும் தகர்ந்த பின், பழைய சித்தாந்தம், ஒழுக்க மதிப்புகள் ஆகியவற்றின் மீதமிச்சங்கள் நீடித்திருப்பதற்காகத் தொடர்ந்து போராடின; புதிய வர்க்கங்கள் அவற்றை வசப்படுத்திக்கொண்டு, தமக்குரித்தான வழியில், தமது சொந்தவர்க்க நலன்களுக்காக அவற்றைப் பயன்படுத்தின. கம்யூனின் சகல உறுப்பினர்களுக்கும் நியாயமாக வினியோகம் செய்வதற்கும், பசிக்கு எதிரான பாதுகாப்பைத் தேடுவதற்கும் உத்திரவாதமாக விளங்கிய ஒரு ஒழுக்க விதி, கூட்டு வாழ்வின் பொதுநலவுரிமை, வர்க்க சமூகத்தில் நேர் எதிரான தன்மை கொண்டதாக எப்படி மாறுகிறது என்பதையும், அது புதிய நாகரீக சகாப்தமான கலியுகத்தில் சிறிய சுரண்டல் வர்க்கத்தின் ஒடுக்குமுறைக்கும் சொத்துச் சேகரிப்புக்கும் ஏகபோகத்துக்கும் ஆதாரமாகவும், பெரும்பான்மையான பாட்டாளிகள், பலவீனமானவர்கள், அங்கஹீனர்கள், நோயாளிகள், சொத்தில்லாத கிழவர்கள், பரந்து விரிந்து கிடக்கும் ஏழைக்

குடித்தனக்கார ஜனங்கள், அடிமைகள், பண்ணை அடிமைகள் ஆகியோர் பட்டினி கிடப்பதற்குக் காரணமாகவும் எப்படி ஆயிற்று என்பதையும், தனி உடமையும் வர்க்க சமுதாயமும் தோன்றிக் கொஞ்சக் காலமாவதற்குள் ஆரியர் சமூகம் பார்த்து அறிந்தது.

தனி உடைமையும் வர்ணங்களும்

ஆரியர் சமூகம் நெருப்பைக் கண்டுபிடித்தது, கால் நடைகளைப் பழக்கும் கலையைக் கற்றது; இந்த மகத்தான சாதனைகளால், அந்தச் சமூகத்தின் பொருளுற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைந்தன; நிலையான வாழ்வுக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் அந்த வளர்ச்சியை பயன்படுத்துவதன்மூலம், ஆரியர் சமூகம் எப்படித் தன் கூட்டுத் தொகுதியில் செயலாற்றி வாழ்ந்து வளர்ந்தது என்பதை வேத நூல்கள், இதிஹாசங்கள் ஆகியவற்றின் உதவியுடன் நாம் ஆராய்ந்தறிந்தோம்.

ஆனால் பொருளுற்பத்திச் சக்திகள் ஒரு பொழுதும் அசையா நிலையில் இருப்பதில்லை. வளர்ச்சிப் பாதை ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு முன்னேறி, சமுதாய ஸ்தாபனத்தையும், மனிதரின் வாழ்வையும் சித்தாந்தத்தையும் பாதித்தது.

செமிட்டிக் ஜனங்கள், துரானியர்கள் முதலியோரைப் போலவே மனித குடும்பத்தின் வேறு சிலரைவிட ஆரியர்கள் அதிர்ஷ்டசாலிகளாக விருந்தனர்; எப்படியெனில், பழக்கப்படுத்தி ஜீவனத்துக்குப் பயன்படுத்தக்கூடிய மதிப்பிடற்கறிய கால்நடைகள் இஷ்டப்படி திரிந்துகொண்டிருந்த நிலையில் அவர்களுக்குக் கிடைத்தன. ஆரியர்களின் ஆசியப் பிரதேசங்களில் இவை ஏராளமாகவிருந்தன; ஆனால் இந்த நிலைமை அமெரிக்கா கண்டம்போன்ற இடங்களில் இல்லை. கால் நடைவளர்ப்பிலும் அதன் விளைவாக ஏற்பட்ட நாகரீக வளர்ச்சியிலும் ஆசியா தனிச்சிறப் பெய்தியது. எங்கல்ஸ் கூறுகிறார்:—

"பழக்குவதற்குத் தகுந்த பிராணிகளை, பழக்கியபின் வளர்ப்பதற்குத் தகுந்த பிராணிகளை, அவர்கள் ஆசியாவில் கண்டனர். பழகாதப் பெண்ணெருமையை வேட்டையாட வேண்டியிருந்தது; பழக்கப்பட்டப் பெண்ணெருமை ஆண்டுக்கொரு கன்றை ஈன்றதுடன் பாலும் கொடுத்தது. அந்தக் காலத்தில் ஆரியர்கள். செமிட்

டிக் ஜனங்கள் முதலிய அதிக வளர்ச்சியடைந்த குலத்தினர்—[1]துரானியர்களும் அப்பொழுதே இத்தகையோரா யிருந்திருக்க லாம்—முதலில் கால்நடைகளைப் பழக்குவதையும், பிற்பாடு அவற் றைவளர்த்துப் பராமரிப்பதையும் தமது பிரதான வேலையாகக் கொண்டனர். இந்தக் கால்நடை வளர்ப்புக் குலங்கள் இதர அநாகரீக மக்களிடமிருந்து தம்மை வேறுபடுத்திக்கொண்டன. இதுவே முதன் முதலில் ஏற்பட்ட பெரிய சமூக வேலைப் பிரிவினையாகும். இந்தக் கால் நடைவளர்ப்புக் குலங்கள் இதர அநாகரீக மக்களைக் காட்டி லும் அதிகமான வாழ்க்கைத் தேவைகளை உற்பத்தி செய்தன; இதர அநாகரீக மக்களின் உற்பத்திப் பொருட்களிலிருந்து வேறு பட்ட பண்டங்களை உற்பத்தி செய்தன. மற்றவர்களுக்கு இல்லாத அனுகூலமாகக் கால்நடை வளர்ப்புக் குலங்களுக்கு இருந்தது என்னவெனில், அவர்கள், பால், பாலிலிருந்து செய்யப்படும் பொருட்கள், ஏராளமான இறைச்சி ஆகியவற்றுடன், கால்நடை, தோல்கள், கம்பளம், ஆட்டு ரோமம் ஆகியவற்றையும் பெற்றிருந் தனர்; மேலும், மூலப்பொருட் வசதி பெருகப்பெருக சகஜமான தாகிக்கொண்டிருந்த நூற்று நெய்த ஆடைகளையும் பெற்றிருந்த னர். இவ்வாறாக, முதன் முதலாக, முறையான பரிவர்த்தனை (பண்டமாற்று) சாத்தியமாயிற்று.

ஆரம்பக் காலங்களில், தற்செயலான பரிவர்த்தனைகளே ஏற் பட்டிருக்கமுடியும்; ஆயுதங்கள், கருவிகள் ஆகியவற்றைச் செய்வ தற்குத் தேவைப்படும் விசேஷத் திறமையின் காரணமாக, ஒரு தற்காலிகமான வேலைப் பிரிவினை ஏற்படலாம். இவ்வாறாக, பிந்திய கற் காலத்தில் கற்கருவிகளைச் செய்த தொழிற்சாலைகளின் மீத மிச்சங் களென்று சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஸ்தாபிக்கப்பட்டுள் ளவை பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன; இங்கு இந்தியாவின் கணசமூகங்களில் ஒவ்வொரு பிரத்தியேகமான கைத்தொழில் கலைஞனும் இப்பொழுதும் செய்வதுமாதிரி, தமது திறமையை செம்மைப் படுத்திய கைத்தொழில் வல்லுனர்கள், சமூ கம் முழுமைக்குமாக வேலை செய்திருக்கவேண்டும். எப்படி யிருந்

1 துரானியர்: யயாதியின் ஐந்து குமாரர்களில் ஒருவரான துர்வசனைப் பற்றி முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம்.

தாலும், இந்தக் கட்டத்தில், குலத்துக்குள்ளேயே, விதிவிலக்கான சம்பவமாக நடைபெறும் பரிவர்த்தனை நீங்கலாக, வேறு பரிவர்த்தனை எதுவும் ஏற்பட்டிருக்கமுடியாது". ('குடும்பத்தின் தோற்றம்.')

முந்தின அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வேதமரபுகளிலிருந்து எங்கல்ஸ் எழுதியுள்ள இந்த வாசகம் முன்பே ஊர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தற்காலிகமான வேலைப் பிரிவினைகளும் தற்செயலான பரிவர்த்தனையும் ஏற்பட்டதைத்தான், ஆதிக்கால வேதச் செய்யுட்கள் 'க்ரய-விக்ரயும்' (வாங்கல்-விற்பனை) என்ற சொற்களால் குறிப்பிடுகின்றன. முறையான வர்த்தகம் என்பது பிராம்மணங்களுக்கும் ஸ்மிருதிகளுக்கும் உரிய பிற்காலத்திலேயே ஏற்பட்டது; ஆனால் அப்பொழுது அதன் விதைகள் கொண்டிருந்தன. இந்திரனின் வஜ்ராயுதத்தைச் செய்தவர்கள், முளைவிட்டுக் அடிக்கடிக் குறிப்பிடப்பட்டுப் புகழப்படும் தச்சன், ரதகரன்[1] ஆகியோரைப் போன்றவர்கள்—கருவிகளைச் செய்யக்கூடியவர்கள், திறமை சாலிகள்-கம்யூனில் இருந்தனர், கம்யூனுக்காக வேலை செய்தனர். ஆனால் ஆரம்பக்காலத்து ஆரியக் கம்யூனுக்குள், ஒவ்வொரு வர்ணமும் திட்டமானதொரு வேலையைச் செய்வதாக, உறுப்பினர்களைப் பல வர்ணங்களாகப் பிரிக்கும் வேலைப் பிரிவினை எதுவும் ஏற்படவில்லை. வர்ணங்கள் ஏற்படுவதற்குமுன் புதிய கால்நடைச் செல்வத்தின் அடிப்படையில் அவர்கள் எண்ணிக்கையில் பெருக வேண்டியிருந்தது; பலவகைப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யவேண்டியிருந்தது; அவற்றை அவர்களுக்குள் பரிவர்த்தனை செய்வதற்கு தொடங்க வேண்டியிருந்தது. வளர்ந்துகொண்டிருக்கும் உற்பத்திச் சக்திகள் அந்தக் கட்டத்துக்கு வந்தவுடன், வர்ணங்கள் ஏற்படுகின்றன.

மார்க்ஸ் கூறுவதைப்போல (மூலதனம், முதல் பாகம்) ஜனத்தொகையின் எண்ணிக்கையும் அடர்த்தியும் சமுதாயத்தின் வேலைப்பிரிவினைக்கு அவசியமான முன்தேவையாகும். ஆசியாவில் குதிரையும் இதர கால்நடைகளும் பழக்கப்படுத்தப்பட்டதன் மூலம், ஆரிய கம்யூனில் சமுதாய உழைப்பின் வர்ணப் பிரிவினைக்கு வேண்டிய முன்தேவைகள் சிருஷ்டிக்கப்பட்டன.

---

[1] ரதகரன்: ரதங்களை நிர்மாணிப்பவன்.

ஆரியச் சமூகத்தின் வர்ணப் பிரிவினை ஒரு சரித்திர ரீதியான வளர்ச்சி என்பதையும் சரித்திர வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில்தான் அது ஏற்படுகிறது என்பதையும் சகல சரித்திரக் காரர்களும் ஒப்புக்கொள்கிறார்கள்; வர்ணப் பிரிவினை தெய்வீக மான முறையில் தோன்றியதென்று வாதிப்பதாகக் கூறப்படும் ஹிந்து ரிஷிகள்கூட ஒப்புக்கொள்கிறார்கள். வர்ணப் பிரிவினை விவகாரம் ஹிந்து மூலநூல்களில் விவாதிக்கப் பட்டுள்ள இடங் களில் கிட்டத்தட்ட அனைத்திலுமே, கீழ்க்கண்ட விஷயங்கள் கூறப்படுகின்றன:—முதலில் ஆரியர் சமூகத்தில் வர்ணங்கள் இருக்கவில்லை; பிறகு மூன்று வர்ணங்கள் தோன்றின; உழைப் புக்கும் அதன் பயனான பொருட்களுக்கு முள்ள தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே அவை தோன்றின.[1]

அவசியத்தின் காரணமாக, பொருளுற்பத்திச் சக்திகளுடைய வளர்ச்சியின் காரணமாக, சமுதாயத்தில் வேலைப் பிரிவினை ஏற் படுகிறது. வர்ணப் பிரிவினைத் திட்டத்தைப் பற்றி ஆதிக்கால சமய எழுத்தாளர்கள் எத்தகைய பாத்தியதை கொண்டாடிய போதிலும், சமுதாய வேலைப் பிரிவினை ஏதாவதொரு வேதரிஷி அல்லது தெய்வத்தின் மேதையில் உதித்த அலாதியான யுக்தி யல்ல என்பது தெளிவு.

மார்க்ஸ், வேலைப் பிரிவினை நிகழ்ச்சியைப் பின்வருமாறு வர் ணிக்கிறார்:—

"தொழிற்சாலையின் வேலைப் பிரிவினையைப் போல, ஒரு சமு தாயத்தின் வேலைப் பிரிவினையும் அதற்கேற்றபடி தனி நபர்கள் குறிப்பிட்ட தொழில் வகைகளுடன் பிணைக்கப்படும் நிகழ்ச்சியும்,

---

1 ஒரு வர்ணத்தை இன்னொன்றிலிருந்து வேறுபடுத்துவது என்ன வென்று பாரத்வாஜர், ப்ருகுவைக் கேட்டார். ஏனெனில், அவற்றை நிறத் தைக்கொண்டு பாகுபடுத்த முடியவில்லை. நிறம்தான் உரைகல்லென்றால், சகல வர்ணங்களும் கலந்துவிட்டன. உணர்ச்சிகளோ அவர்களுடைய பௌதிகத் திறமைகளும் பலவீனங்களுமோ ஒரு வர்ணத்தினரை மற்ற வர் ணத்தினரிடமிருந்து பிரித்துக் காட்டவில்லை. இதற்கு பதில் அளித்த ப்ருகு முனிவர் எல்லோரும் முன்னால் பிரமணாக விருந்ததாகவும், தமது செயல் அல்லது வேலைகள்மூலம் முதலில் வெளிவந்தவர்கள் பிராமணர்கள் என்றும் அவர்கள் ஒரு வர்ணமானதாகவும் குறிப்பிடுகிறார்.

நேருக்குநேர் எதிரான துவக்க நிலைகளிலிருந்து உருப் பெறுகின்றன. குலத்துக்குள்ளே, ஆண்பெண் பேத அடிப்படையிலும் வயது வித்தியாச அடிப்படையிலும், ஒரு வேலைப் பிரிவினை இயல்பாகவே ஏற்படுகிறது; எனவே அது உடல் இயல்பைமட்டுமே அஸ்திவாரமாகக் கொண்டிருக்கிறது. சமுதாய விஸ்தரிப்பின் மூலமாகவும் ஜனத் தொகைப் பெருக்கத்தின் மூலமாகவும், மேலும் குறிப்பாக, பல்வேறு குலங்களிடையே மோதல்கள் ஏற்படுவதாலும் ஒருகுலத்தை இன்னொன்று அடிமைப் படுத்துவதாலும், வேலைப் பிரிவினையின் பொருட்கள் அதிகமாகின்றன. மறுபுறத்தில், குலசமூகங்களாகவுள்ள பல்வேறு குடும்பங்கள் ஒன்றையொன்று சந்திக்கும் இடங்களில் பண்டங்களின் பரிவர்த்தனை தொடங்குகிறது; ஏனெனில், நாகரீகம் தொடங்கியபொழுது, தனிநபர்களல்ல, குலங்களே சுயேச்சையான அடிப்படையில் சந்தித்தன. பல்வேறு சமூகங்கள் தத்தம் இயற்கைச் சூழ்நிலையில் வெவ்வேறான உற்பத்திச் சாதனங்களையும் வெவ்வேறான வாழ்க்கைத் தேவைகளையும் பெறுகின்றன. எனவே, அவற்றின் உற்பத்தி முறைகளும் வாழ்க்கை முறைகளும் உற்பத்திப் பண்டங்களும் வெவ்வேறாக உள்ளன. இயல்பாக வளர்ந்த இந்த வேறுபாட்டின் விளைவாகத்தான், பல்வேறு சமூகங்கள் தொடர்பு கொண்ட பொழுது, பொருட்களின் பரஸ்பர பரிவர்த்தனை ஏற்படுகிறது; அதன்மூலம் படிப்படியாக, உற்பத்திப் பண்டங்கள் பரிவர்த்தனைப் பண்டங்களாக மாறுகின்றன. பரிவர்த்தனை என்பது உற்பத்தித் துறைகளுக்கிடையே வேறுபாடுகளை உண்டாக்கவில்லை; முன்னாலேயே அவை வேறுபட்டிருக்கின்றன; பரிவர்த்தனை அவற்றுக் கிடையே ஒரு உறவை நிறுவுகிறது; அதன் மூலம், அவற்றை, ஒரு விரிவடைந்த சமுதாயத்துடைய கூட்டு உற்பத்தியின் கிளைகளாக, ஏறத்தாழ ஒன்றையொன்று சார்ந்து நிற்கும் கிளைகளாக மாற்றுகிறது. இந்த இரண்டாவது வகைப்பட்ட சமூக வேலைப்பிரிவினை, ஆரம்பத்தில் அலாதியாகவும் தனித்தனியாகவு மிருந்த உற்பத்தித் துறைகளுக் கிடையே ஏற்படும் பரிவர்த்தனையிலிருந்து தோன்றுகிறது. உடல் இயலை அடிப்படையாகக் கொண்ட வேலைப் பிரிவினையாகத் தொடங்கும் முதல் வகையிலோ, உறுதியான முழுமையாக விருந்த சமூகத்தின் பிரத்

தியேக உறுப்புக்கள், பிரதானமாக, அன்னியச் சமூகங்களுடன் பரிவர்த்தனைப் பண்டங்களை மாற்றிக் கொள்வதால், வளர்ச்சி யடைந்து தனித்தனியே பிரிகின்றன. அவை ஒவ்வொன்றும் தம்மைத் தாமே எந்த அளவுக்குத் தனிமைப் படுத்திக் கொள்கின்றனவெனில், பண்டங்களின் பண்டமாற்று மட்டுமே, வேலையின் பலவகைகளுக் கிடையே உள்ள பிணைப்பாக எஞ்சியிருக்கும் அளவுக்குத் தனிமைப்படுத்திக் கொள்கின்றன. ஒன்றில், வேலைப் பிரிவினை, சுயேச்சையாக விருந்தவற்றை ஒன்றையொன்று சார்ந்திருப்பவையாகச் செய்கிறது; இன்னொன்றில், அது, முன்னுல் பரஸ்பரம் சார்ந்திருந்தவற்றை சுயேச்சையானவையாகச் செய்கிறது." (மூலதனம், முதல்பாகம்).

மார்க்ஸ் எழுதியதிலிருந்து நாம் கொடுத்திருக்கும் இந்த நீண்ட மேற்கோள், ஆரியர் குலங்களின் ஆதிக்கால வளர்ச்சியில் நேர்ந்ததை நமக்கு விவரிக்கிறது, உற்பத்தி பண்டங்கள், கடமைகள், வேலைகள் ஆகியவை பல்வகைப் பட்டவையாக வளர்ந்த காரணத்தால், ஆரியக் கம்யூனுக்குள் வேலைப்பிரிவினை தொடங்கியது. முழுக்கம்யூனின் உறுப்பினர்கள் வேறுபட்டு, வெவ்வேறு வேலைகளுடன் பிணைக்கப்பட்டு, வர்ணங்களாக உருப்பெறுகின்றனர். ஆனுல், பிரதான உற்பத்திச்சாதனங்கள்மீது தனி உடைமை ஏற்படாமல், கூட்டு உடமையே இருந்த காரணத்தால், வர்ணங்கள் உருப்பெற்ற ஆதிக்காலத்தில், வர்ணங்கள் விரோதி வர்க்கங்களாக ஆகவில்லை; பிற்பாடுதான் அவை பகை வர்க்கங்கள் ஆயின.

யாக முறையில் ஒரு ரித்விக் இருந்த இடத்தில் பதினேழு வகைப்பட்ட ரித்விக்குகள் ஏற்பட்டு, யாக உழைப்பின் பல்வேறு உற்பத்திக் கிளைகளுக்குத், தலைமை தாங்கியபொழுது, ஆரியர் கம்யூனில் முதன் முதலாக வேலைப்பிரிவினை ஏற்பட்டது. ஆனுல் இந்தப் பிரிவினைகள் தற்செயலாகவே நேர்ந்தன; அவை பண்டமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை; எனவே முதலில் அவை வர்ணங்களாக உருப்பெறவில்லை,

ஆனுல், குலசமூகம் முன்னேறி, பல்வேறு ஆரியர் குலங்கள் (அவற்றின் தாய்க்குலங்கள் துண்டு துண்டாகப் பிரிந்து பரவிய

தால் ஏற்பட்டவையும் இதர குலங்களும்) மோதியபொழுது அல்லது நேசத்தொடர்பு கொண்டபொழுது, அவை கணங்களில் உபரியாகவிருந்த பண்டங்களை மாற்றிக்கொள்ளத் தொடங்கின. வெவ்வேறு கணங்களின் வெவ்வேறு பண்டங்கள் பரிவர்த்தனை யாகின்றன; இந்தப் பரிவர்த்தனை திரும்பத் திரும்ப நிகழ்வதால், அந்தப் பண்டங்கள் திரும்பத் திரும்பத் தேவைப்படுவதால், பல்வேறு கம்யூன்கள் பரிவர்த்தனை செய்துகொள்ளும் இடத்தில் தேவைப்படும் பண்டங்களை, ஒவ்வொரு கணத்துக்குள்ளும் உற்பத்திசெய்யும் கிளைகள் பாதிக்கப்பட்டன. இவ்வாருக, கணத்துக்குள் பலவகைப் பொருட்கள் உற்பத்தியானதாலும், அந்தப் பண்டங்கள் கணத்துக்கு வெளியில் பரிவர்த்தனை செய்யப்பட்டதாலும், சமுதாயத்தில் வேலைப்பிரிவினை ஏற்பட்டு உறுதியடைந்தது; ஆரியர் கம்யூனின் வர்ணங்கள் உண்டாயின.

"ஆனல். வேலைப்பிரிவினை உற்பத்தி நிகழ்ச்சியைப் பையப் பைய பாதிக்கிறது. உற்பத்தியிலும் உற்பத்தியாவதை சுவீகரித்துக்கொள்வதிலுமுள்ள கூட்டுத் தன்மைக்கு அது குழி பறிக்கிறது; தனி நபர்கள் சுவீகரித்துக்கொள்வதைப் பொது விதியாக உயர்த்துகிறது. இதன்மூலம் தனி நபர்களுக்கிடையே பரிவர்த்தனை ஏற்படுகிறது" (எங்கல்ஸ்). அந்தக் கட்டத்தை அடைந்தவுடன், தனி உடமையும் வர்க்கங்களும் ஜனிக்கின்றன. வர்ணங்கள், முரண்பட்ட வர்க்கங்களாக மாறுகின்றன; உள்நாட்டு யுத்தப் பாதையை, வர்க்க யுத்தப் பாதையை மேற்கொள்கின்றன; பூர்வீகக் கம்யூன் மீளமுடியாத வகையில் மரிக்கிறது.

சரித்திர இயல் பொருள்முதல் வாதத்தின் ரீதியில், நாம் இங்கு வரைந்து காட்டியுள்ள இந்தச் சரித்திர வளர்ச்சிச் சித்திரத்துக்கு ஹிந்துக்களின் இலக்கியத்திலுள்ள வேத, இதிஹாச மரபுகள் எத்தகைய ஆதரவையாவது அளிக்கின்றனவா? அவை மேற்சொன்ன முறையில் வர்ணங்களின் தோற்றங்களை எடுத்துரைக்குமென்று எதிர்பார்க்க முடியாது; ஆனல், அவை தமது அநாகரீகமுறையில் கூறுவதிலிருந்து மேற்சொன்ன முடிவுக்கு கொஞ்சம் அடிப்படையாவது கிடைக்கிறதா? கிடைக்கிறது.

எப்பொழுதும்போல, இந்தச் செய்திக்கு ஆதாரம், வேத

நூலாசிரியர்கள் கொடுத்துள்ள படைப்பு சம்பந்தமான கதைகளா கும். அந்தச் சமுதாயத்தை எதிர்நோக்கிய ஒவ்வொரு புதிய பிரச்னையும், பிரமன் அல்லது பிரஜாபதி மேற்கொண்ட படைப் புப் பிரச்னையாக விவாதிக்கப்பட்டது. வர்ணங்களோ அத்தகைய வேலைப்பிரிவினையோ இல்லாத சமூகத்தில் வர்ணங்கள் தோன் றிய பிரச்னை, படைப்பு விஞ்ஞானத்தின் பகுதியாக எடுத்துரைக்கப் படுகிறது.

ஆரியர் சமூகத்தில், முதலில் மூன்று வர்ணங்கள் இருந்தன; பிறகு அவை நான்காயின. எனவே, படைப்பு சம்பந்தமான கதைகள், சில இடங்களில் மூன்று வர்ணங்களைப் பற்றியும், சில இடங்களில் நான்கு வர்ணங்களைப்பற்றியும் விவாதிக்கின்றன. ஆனால், முதன் முதலில் ஒரு வர்ணமும் இருந்ததில்லை அல்லது ஒரே ஒரு வர்ணமே இருந்தது என்றும், பிறகு மூன்று வர்ணங் கள் தோன்றினவென்றும், பிற்பாடு நான்காவது வர்ணம் தோன் றியதென்றும், இந்த நான்காவது வர்ணம் அந்தச் சமுதாயத்திலிருந்தே ஆரம்பத்தில் தோன்றிய உண்மையான வர்ணம் அல்லவென்றும் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள்.

மக்களைப் படைத்த பிரஜாபதி பிறப்பித்தவை என்ன என்ன வென்பதை சதபதப்பிராம்மணம் (II, 1-4-11) நமக்கு எடுத்துரைக் கிறது. முன்னால் ஒன்றுமே இல்லாதிருந்த இடத்தில் அவர் மும் மூன்றாக வெவ்வேறு தொகுதிகளைப் படைத்தார். முதலாவதாக பூலோகத்தையும் புவர் லோகத்தையும் ஸுவர் லோகத்தையும் படைத்தார். இரண்டாவதாக, பூமியையும் வானத்தையும் அவற்றுக்கிடையே வாயுமண்டலத்தையும் படைத்தார். மூன்றாவதாக, மூன்று வர்ணங் களான பிரமன், க்ஷத்ரா, விஷா (பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் மொ-ர்) ஆகியோரைப் படைத்தார். நான்காவதாக, ஆத்மாவா கிய தன்னையும் பிரஜைகளையும், கால்நடைகளையும் படைத்தார். இந்தக் கதையில், மூன்று வேதங்கள் இடம்பெறவில்லை. எனவே தைத்ரிய பிராம்மணம் (III, 12-9-2) வேறு ஒரு திட்டத்தைப் பின் பற்றுகிறது; முதலில் அனைத்தும் பிரமனாகவிருந்ததென்றும் அதிலிருந்து இத்தப் படைப்பு தோன்றியதென்றும் கூறுகிறது. பிறகு ஒவ்வொரு வேதமும் ஒரு வர்ணத்தைக் கொடுத்ததாக

அது கூறுகிறது. மிகப் புராதனமான ரிக்வேதம் வைசியர்வர்ணத்தைக் கொடுத்தது என்றும் சாமவேதம் பிராமணர் வர்ணத்தையும் எஜுர்வேதம் க்ஷத்திரியர் வர்ணத்தையும் பிறப்பித்தனவென்றும் அது கூறுகிறது. இந்த இரண்டு ஆசிரியர்களுமே சூத்திர வர்ணத்தை நான்காவது வர்ணமாகக் குறிப்பிடவில்லை. யஜுர் வேதத்திலுள்ள தைத்ரிய ஸம்ஹிதை மேலும் விரிவான பாகுபாட்டைத் தருகிறது. உற்பத்தி செய்ய வேண்டுமென்ற ஆசை பிரஜாபதிக்கு ஏற்பட்டது; அப்பொழுது அவருடைய வாயிலிருந்தும் அவருடைய மார்பு, கைகள், ஆகியவற்றிலிருந்தும் அவருடைய இடுப்பிலிருந்தும், அவருடைய பாதங்களிலிருந்தும் நான்கு வர்ணங்கள் பிறந்தன. இந்தக் கதையின் விசேஷ அம்சம் என்னவெனில், ஒவ்வொரு வர்ணமும் தனக்கே உரித்தான ஒரு தெயவத்துடனும் ஒரு சந்தம் அல்லது ஒத்திசையுடனும் ஒரு பிராணியுடனும் பிறந்ததாக அது குறிப்பிடுவதேயாகும்; ஒவ்வொன்றுக்கும் கிடைத்தவற்றின் விவரங்களை நாம் எடுத்துரைக்கத் தேவையில்லை; ஆனால் முதல் மூன்று வர்ணங்களில் ஒவ்வொன்றும் ஒரு தெய்வத்தைப் பெற்றுள்ளபொழுது நான்காவது வர்ணத்தினரான சூத்திர அடிமைகளுக்குமட்டும் ஒரு தெய்வம் கிடையாதென்று குறிப்பிடப்படுவதை நாம் கவனிக்கவேண்டும். ஆனால் வேடிக்கை யென்னவெனில், மற்றவர்களைப் போலவே, சூத்திர அடிமைக்கு சந்தம், பிராணி, ஸ்தோமம் முதலிய இதர பொருட்கள் அனைத்தும் உண்டு. பிராமணருக்கு வெள்ளாடும் (அஜம்), க்ஷத்திரியருக்குச் செம்மறியாடும் (அவிஸ்) வைசியருக்குப் பசுவும், சூத்திரருக்குக் குதிரையும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தக் கதைகள் அனைத்திலும் மேலோங்கியிருக்கும் அம்சம் என்ன? மனிதன், பிராணி, உலகம் ஆகியவற்றைப் பாகுபடுத்த முடியாத அளவுக்கு ஆரியச் சரித்திரக்காரர் குழப்பம் அடைந்திருக்கிறார்; எனினும், அதற்கு இடையில் அவர் தான் அறிந்திருப்பதாக நமக்குத் தெரிவிப்பது இதுவே;—

முதலில் எல்லாம் ஒரே பிரமனாக விருந்தது. அதன் பிறகு மூன்று அல்லது நான்கு வர்ணங்கள் தோன்றி வளர்ந்தன; முதல் மூன்று வர்ணங்களும் ஒரே ஓரினச் சமுதாயமான கண-

கோத்திரங்களிலிருந்து பிறந்தன ; எனவே அவற்றுக்குத் தெய்வங்கள் உண்டு; அவர் வசப்பட்டு அடிமையான அன்னியராக நான்காவது வர்ணத்தினர் இருந்ததால், அவர்களுக்கு ஒரு தெய்வம் கிடையாது. மனிதர்களும் அவர்களுடைய வர்ணங்களும் வளர்ச்சியடைந்ததுடன் கூடவே கால்நடைகளும் செல்வமும் பெருகின ; வேதங்கள் வேறுபட்டபொழுது, யாக உற்பத்திமுறை அதன் பல்வேறு கட்டங்கள் வழியாகப் பரிணமித்தபொழுது, வர்ணங்கள் வளர்ந்து உறுதியடைந்தன. மனிதனுடைய வளர்ச்சி முழுமைக்கும் ஏதாவது தர்க்கரீதியான அடைப்படையிருக்கவேண்டுமென்று எண்ணி அதைக் கண்டுபிடிப்பதற்காக அந்தக்காலத்தின் சமுதாய எழுத்தாளர்கள் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகள், நிலைமையின் உண்மையான விஞ்ஞான ரீதியான சரித்திரத் தொடர்பை எடுத்துக் காட்டாவிட்டாலும் அந்த நிலைமையின் முக்கியமான உண்மைகளை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. அது அவர்களுக்கு சாத்தியமாயிருந்தது ; எப்படியெனில் அவர்கள் கண்கூடாகப் பார்த்தவற்றைக் குறித்துக்கொண்டார்கள்.

சதபதப் பிராம்மணம், ஒரு விஷயத்தை மேலும் தெளிவுபடுத்துகிறது. இந்தப் பிரமன் ஆரம்பத்தில் ஒன்ருகவும் பிரிவினையடையாததாகவுமே இருந்ததாக அது கூறுகிறது. இந்தப் பிரமன் வேறு. பிற்காலத்து உபநிஷதங்களின் தத்துவஞானம் குறிப்பிடும் பிரமன் வேறு என்பதை நினைவில் கொள்ளவேண்டும். ஆனுல் இந்தப் பிரிவினையடையாத நிலை, வளர்ச்சி, முன்னேற்றம், விருத்தி ஆகியவற்றுக்கு வழி செய்யாது. எனவே அது பிரியத் தொடங்கியது. இந்திரன், வருணன் முதலியோருடன் கூடிய க்ஷத்திரியரைப்போன்ற புதிய வடிவங்களை உண்டாக்கியது. அப்பொழுதும் அது முன்னேறவில்லை ; எனவே, வைசியர்களை அவர்களுடைய கண தெய்வங்களுடன் உண்டாக்கியது. இந்த வகையில் சதபதப் பிராம்மணம் விவரிக்கிறது.

இவ்வாருக, ஆரியர் கம்யூன்களின் வளர்ச்சி வகைகளைப் பார்த்துக் குறித்துள்ள வேத அறிவு நமக்கு எடுத்துக் கூறுவது இதுதான் : பொருளுற்பத்திக் கருவிகள் வளர்ச்சி அடைந்தபொழுது, கால்நடைகளும் செல்வமும் பெருகின; இந்தக் கம்யூன்

களில் பலதரப்பட்ட பொருட்கள் உற்பத்தியானதாலும் அந்தக் கம்யூன்கள் மற்ற கம்யூன்களுடன் கொண்டிருந்த உறவுகளின் காரணமாகவும் சரித்திர வளர்ச்சி விதிகளுக்கு இணங்க, வேலைப் பிரிவினை ஏற்பட்டது; அதாவது வெவ்வேறு கடமைகளையுடைய வர்ணங்களின் பிரிவினை ஏற்பட்டது. மார்க்ஸ் கூறியது மாதிரி, முன்னால் ஒரே கம்யூனாக இருந்தது; அதன் உறுப்பினர்கள் அனைவரும் ஒருவரோடொருவர் இணைந்து நின்றனர்; ஒருவரையொருவர் சார்ந்திருந்தனர்; அந்தக் கம்யூன் வேற்றுமையடைந்து, சுயேச்சையான வர்ண உறுப்புகளைக் கொண்டதாயிற்று. மேலும் வளர்ந்துகொண்டிருந்த உலகத்தில், பல்வேறு சுயேச்சையான கணங்களில் சிதறுண்டிருந்தவர்கள் ஒரே தொகுதிக்குள் உட்படுத்தப்பட்டனர். அல்லது கொண்டுவரப்பட்டனர்; அவர்கள் ஒருவரையொருவர் சார்ந்து நிற்பவராயினர். இவை அனைத்திலும் ஆதிக்கம் வகித்த அம்சம் என்னவெனில் வாழ்க்கையின் அவசிய பொருட்களுடைய உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை ஆகியவையே; அவையே முன்பு பிரமன் என்ற கம்யூனை நிர்மாணித்தன; இப்பொழுது வளர்ந்துகொண்டிருந்த வர்ண சமூகத்தை படைத்தன.

சமுதாய வேலைப் பிரிவினையும் பரிவர்த்தனையும் ஒன்றையொன்று பாதித்தன; இரண்டும் சேர்ந்து உற்பத்தியை வளர்த்தன, இந்தக் கட்டத்தில் பொருளுற்பத்திக் கருவிகளின் துறையில் இரண்டு புதிய சாதனைகள் கைகூடின. விவசாய முறை கண்டுபிடிக்கப்பட்டது ஒன்று; தாது மண்களைக் காய்ச்சி உருக்கும் கலையும் தறியும் கண்டுபிடிக்கப்பட்டது இரண்டாவது சாதனை [1] கருங்கடல் புல்வெளிகளின் சீதோஷ்ண நிலையிலும், துரானிய பீடபூமியின் சீதோஷ்ண நிலையிலும் "கடுமையானதும் நீண்டதாயிருந்ததுமான குளிர்காலத்துக்கு வைக்கோல் வசதியில்லாமலும் கால்நடை வளர்ப்பு சாத்தியமில்லை; எனவே இங்கு, புல்லும் தானியமும் சாகுபடி செய்வது அவசியமாயிற்று. ஆனால் கால்நடைகளுக்காகத் தானியம் சாகுபடி செய்த பின் சீக்கிரத்தில் அது ஜனங்களின் உணவாக ஆயிற்று." (ஏங்கல்ஸ், குடும்பத்தின்

1 இந்தக் கட்டத்தில் கொல்லரும் தறிகாரரும் தோன்றுகின்றனர்; ரிக் வேதத்தில் இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

தோற்றம்) விவசாய நிலம் என்ற புதிய உற்பத்திக் கருவி கம்யூனுக்குக் கிடைத்தது.

முதலில் தாமிரம், வெள்ளீயம், அவற்றின் கலவையான வெண்கலம் ஆகியவை மட்டுமே உருக்கியெடுக்கப்பட்டன; அவற்றிலிருந்து பிரயோஜனகரமான கருவிகளும் ஆயுதங்களும் செய்யப்பட்டன; ஆனால் அவை கற்கருவிகளின் ஸ்தானத்தைப் பெற முடியவில்லை; இரும்பு மட்டுமே அதைப் பெற முடியும். தங்கமும் வெள்ளியும் அலங்காரத்துக்கு பயன்படத் தொடங்கின; ஆனால் அவை அப்பொழுது பணமாக ஆகவில்லை. விவசாயத்துடன் கைத்தொழில்கள் தோன்றின. ஆனால் இந்தப் பலவிதமான நடவடிக்கைகள் அனைத்திலும் ஒரே நபர் ஈடுபட முடியாது; எனவே இரண்டாவது பெரிய சமுதாய வேலைப் பிரிவினை ஏற்பட்டது; அதாவது கைத்தொழில்கள் விவசாயத்திலிருந்து பிரிந்தன; விவசாயம் கைத்தொழில்கள் என்ற இரண்டு முக்கியமான கிளைகளாக பொருளுற்பத்தி பிரிவதுடன் நேரடியான பரிவர்த்தனைக்காக உற்பத்தி செய்யும் நிகழ்ச்சி அதாவது பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி தொடங்குகிறது. பரிவர்த்தனையுடன்கூட வியாபாரம் தோன்றியது; வியாபாரத்தின் வளர்ச்சியுடன் அபூர்வ உலோகங்கள் (வெள்ளியும் தங்கமும்), பணம் என்ற பரிவர்த்தனைப் பண்டமாக ஆதிக்கம் பெற்றன; பொதுவாகப் பயன்பட்டன. முன்னால், சர்வ வியாபியாகப் பயன்பட்ட பரிவர்த்தனைப் பண்டமான கால்நடைகள் பணமாக பயன்பட்டது; இப்பொழுது அபூர்வ உலோகங்கள் அவற்றின் ஸ்தானத்தை வகித்தன.

இதெல்லாம் கண உறுப்பினர்களின் பரஸ்பர உறவுகளை, அவர்களுடைய உடமை உறவுகளை, உற்பத்தி உறவுகளை எப்படி பாதிக்கின்றன?

புதிய பொருளுற்பத்தி சக்திகள் கம்யூனிலும் அதன் சமுதாய உறவுகள் அல்லது உடமை உறவுகளிலும் ஒரு புரட்சியை உண்டாக்கின.

முன்னால் குறிப்பிட்டதைப் போல, சமுதாய வேலைப் பிரிவினையான வர்ணங்களின் பிரிவினை உற்பத்தியின் கூட்டுத்தன்மையை அழித்தது. பொதுவான அக்கினியை மையமாகக் கொண்டதும்,

பொதுவான உபயோகத்துடன் கூடியதுமான பொதுவான யக்ஞ முறைக்குப் பதிலாக தனி அக்கினிகளுடன் கூடிய தனிக் குடித் தனங்கள் ஏற்பட்டன. மகத்தான கம்யூன் அக்கினியான த்ரேதாக் னியுடன் இப்பொழுது தனிக் குடும்பத்தினரின் க்ருஹ்ய அக்னி தோன்றுகிறது.[1] கூட்டு உற்பத்திமுறைக்கு முடிவு ஏற்பட்டவுடன் உற்பத்திப் பண்டத்தைக் கூட்டாக உபயோகித்துக் கொள்வது அல்லது சுவீகரித்துக் கொள்வது என்பதற்கும் முடிவு ஏற்படு கிறது. தனிப்பட்டவர் உழைப்பு, தனிப்பட்டவர் பயனை சுவீகரித் துக் கொள்ளுதல், தனிப்பட்டவர்கள் பரிவர்த்தனை செய்துகொள் ளுதல் ஆகியவை ஆதிக்கம் பெறுகின்றன; அதாவது, கம்யூனின் கருப்பைக்குள் தனிஉடமை தோன்றி யிருக்கிறது.

தனிப்பட்டவரின் உற்பத்தியும் தனிப்பட்டவர் பயனை அனுப விப்பதும், உடமையின் ஏற்றத் தாழ்வை உண்டாக்குகின்றன. அதாவது, உடையவர் இல்லாதவர் சுரண்டுகிறவர்கள் சுரண்டப் படுகிறவர்கள் என்ற இரண்டு வர்க்கங்களை கம்யூன் பிறப்பிக் கிறது; அவை சீக்கிரமே அடிமைகளை உடையவர்கள், அடிமை கள் என்ற இரு வர்க்கங்களாக ஆகின்றன.

ஆரம்பத்தில், இந்தச் செல்வங்கள் எங்கு குவிந்து ஆதிக்கம் வகிக்கின்றன?

வளர்ந்து கொண்டிருக்கும் கம்யூன் தன் வேலைப் பிரிவினை யில் யுத்தங்களை நடத்திப் பாதுகாப்பு அளிக்கும் வேலையை சில தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களிடமும் தனி நபர்களிடமும் ஒப் படைக்கிறது; அவர்களே க்ஷத்திரியர்களாகிறார்கள். அதைப் போலவே, சமுதாயப் பொருளாதார வேலைகளின் நிமித்தம், பரு வங்கள், வெள்ளங்கள், ஆறுகள் முதலியவற்றை கவனித்து வரும்

1 இந்த நிலையில்தான், அதர்வ வேதத்தின் க்ருஹ்ய ஸூத்ரங்களும் க்ருஹ்ய கர்மங்களும் உருப்பெறத் தொடங்கின. இந்த நிகழ்ச்சி பூர்விக மானதும் கடவுள் அருளியதுமான மூன்று வேதங்களின் பொதுச்சொத்துரி மையும் த்ரேதாக்கினியும் வீழ்ச்சியடைந்து, தனி உடமை பிரிந்து போவ தால் தோன்றுவதால் அதர்வ வேதம் (அத்துடன் க்ருஹ்யவிதிகளும்) இதர மூன்று வேதங்களின் புனிதமான உயர்ந்த ஸ்தானத்தைப் பெறவில்லை. த்ரிவேதங்களான மூன்று வேதங்கள் விசேஷ கௌரவம் பெற்றன.

பொறுப்பு சிலரிடம் ஒப்படைக்கப்பட்டது; அவர்கள் பிராமணர்களாயினர். மற்றவர்கள் விஷாக்கள், உண்மையான பொது மக்கள், பெரும்பான்மையான எண்ணிக்கையிலுள்ளவர், கால்நடை வளர்ப்பு, விவசாயம், கைத்தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பவர்கள் எனினும் இதுவரை அவர்கள் அனைவரும் ஒரே கம்யூனின் உறுப்பினர்களாயிருந்து வருகின்றனர். இது உழைப்பின் உள்பிரிவினை. தனி உடமை இல்லாதபொழுது, இந்தப் பிரிவினை சுரண்டுகிறவர் சுரண்டப்படுகிறவர் என்ற முரண்பட்ட பகை வர்க்கங்களை உண்டாக்கவில்லை. முதன்முதலில், குல யுத்தங்களும் பண்டமாற்றும் கம்யூனின் கணபதிகள், பிருஹஸ்பதிகள் அல்லது பிரஜாபதிகள் மூலம் நிகழ்கின்றன; அவர்கள் பிராமண வர்ணத்தினரர்கவோ க்ஷத்திரிய வர்ணத்தினராகவோ உள்ளனர். முதலில், கைப்பற்றப்பட்ட நிதிகளும் கால்நடைகளும் செல்வமும் அவர்களிடம் வருகின்றன; அவர்கள் மூலமே கம்யூனுக்குக் கிடைக்கின்றன. இயல்பாகவே, வியாபாரம் அவர்கள் மூலமே வளர்கிறது; பணமும் அப்படியே.

எனவே, கூட்டுத்தன்மை சிதறத் தொடங்கும்பொழுது, படிப்படியாக, உடமையும் பணமும், பண்டமாற்று நிகழும் இடங்களில், க்ஷத்திரிய, பிராமண வர்ணத்தினரிடம், பிரஜாபதிகள் கணபதிகள் ஆகியோரிடம் குவிகிறது. சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிவதற்குத் தயாராகிறது; ஒரு புறத்தில் உடமையுள்ள க்ஷத்திரிய-பிராம்மணர்களும் மறுபுறத்தில் உழைக்கும் விஷாக்களுமாக, ஒரு புறத்தில் பணக்காரர்களும் மறு பக்கத்தில் ஏழைகளுமாகப் பிரிவதற்கு தயாராக விருக்கிறது. வியாபாரத்தின்மூலம், அபூர்வ உலோகங்கள் (ஹிரண்யம் - தங்கம்) பணமாகத் தோன்றுகின்றன; அதனுல் உடமை அல்லது ஐசுவரியத்தின் சேமிப்பை முன்னைவிட சுலபமாக்குகிறது. கால்நடைகள், தானியம், பணம் ஆகியவற்றின் சொந்தக்காரர்களாகவும், பிற்பாடு அடிமைகளின் சொந்தக்காரர்களாகவும் க்ஷத்திரியர்களும் பிராம்மணர்களும் பெருமையடித்துக் கொண்டு முன்வருகிருர்கள்.

எனினும், எல்லா பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் சுரண்டுகிற பணக்காரர்களாக விருக்கவில்லை என்பதையும் விஷா-சூத்திர

மக்கள் அனைவரும் சுரண்டப்படும் ஏழைகளாக விருக்கவில்லை என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும். ஆநேக பிராம்மணர்களும் அநேக க்ஷத்திரியர்களும் சுரண்டும் வர்க்கத்தினராக விருந்தனர்; ஆனால் ஏழை விதுரரின் தரத்திலுள்ள ஏழைப் பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் கூட இருந்தனர்.

மூன்று வர்ணங்களின் தோற்றமும் சூத்திர வர்ணத்தின் தோற்றமான அடிமை முறையின் உதயமும் ஏககாலத்தில் நிகழ்ந்தன. ஏன்? ஏனென்றால், வர்ணங்களைத் தோற்றுவித்த திணிவு வேகத்திலிருந்தே அடிமை முறையும் தோன்றுகிறது; அது என்ன? உழைப்பு பலவகையாகி யிருப்பதும் அதன் உற்பத்தித் திறன் கூடிக் கொண்டிருப்பதும் பரிவர்த்தனையுமே யாகும். "மனிதர்கள் பண்டமாற்று செய்யத் தொடங்கியவுடனே, அவர்களே பரிவர்த்தனை செய்யப்பட்டனர்" என்று கூறுகிறார் எங்கல்ஸ்.

எங்கல்ஸ் கூறுகிறார்:

"கால்நடை வளர்ப்பு, விவசாயம், குடும்பக் கைத்தொழில்கள் என்ற சகல கிளைகளிலும் உற்பத்திப் பெருகியது. அதனால், தன் பராமரிப்புக்கு அவசியமாயுள்ளதைவிட அதிகமாகப் பண்ட உற்பத்தி செய்யும் திறனை மனித உழைப்புச் சக்தி பெற்றது. அதே சமயத்தில், கணத்தின் குடியிருப்பு சமூகத்தின் அல்லது தனிக் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் செய்யவேண்டிய தினசரி வேலையின் அளவை அந்த உற்பத்திப் பெருக்கம் அதிகரித்தது. இப்பொழுது, புதிய உழைப்புச் சக்திகளைக்கொண்டு வருவது விரும்பத்தக்கதாயிற்று. யுத்தத்தின் மூலம் அவை கிடைத்தன; யுத்தக் கைதிகள் அடிமைகளாக்கப்பட்டனர். உழைப்பின் உற்பத்தித் திறன் பெருகியதாலும், அதனால் செல்வம் பெருகியதாலும் உற்பத்தித்துறை விரிவடைந்ததாலும், முதலாவது பெரிய சமூக வேலைப்பிரிவினையானது, அப்பொழுது நிலவிய பொதுவான சரித்திர நிலைமைகளில், அடிமை முறையைத் தன்னுடன் கொண்டுவராமலிருக்க முடியவில்லை. முதலாவது மகத்தான சமூக வேலைப் பிரிவினையிலிருந்து, சமுதாயத்தின் முதலாவது பெரிய பிளவு ஏற்பட்டது; அது எஜமானர்கள், அடிமைகள்

என்ற இரு வர்க்கங்களாக, சுரண்டுகிறவர்கள் சுரண்டப்படு கிறவர்கள் என்ற இரு வர்க்கங்களாகப் பிரிந்தது."

கண-கம்யூனில், யாக உற்பத்தி முறையைப் பெற்றிருந்த பூர் வீகக் கம்யூனில் அடிமை முறை அல்லது சூத்திரருக்கு இடமில்லை என்பதை நாம் முன்பே பார்த்துவிட்டோம். எனவே, குலங்களுக் கிடையே யுத்தங்கள் நிகழ்ந்தபொழுது, கைப்பற்றப் பட்ட கைதி கள் அனேகமாக கொல்லப்பட்டனர், புருஷமேதம் என்பதற்கு உகந்த வகையில் கொல்லப்பட்டனர். ஆனால் புதிய பொருளுற் பத்திக் கருவிகளுடனும் பொருளுற்பத்திச் சக்திகளுடனும் வேலை செய்யும் மனிதனின் உழைப்புச் சக்தி, தான் உபயோகிப்பதற்கும் தன்னை மீண்டும் படைத்துக்கொள்வதற்கும் தேவையாயிருப்பதை விட அதிகமாக உற்பத்தி செய்யும்பொழுது, போர்க் கைதிகளைக் கொலை செய்யாமல் பயன்படுத்துவது சாத்தியமாகும். அவர்களை உழைக்கச் செய்வது சாத்தியம்; அந்த உழைப்பின் உபரியைக் கொண்டு, எஜமானர்கள் தங்களைப் பராமரித்துக் கொள்ளமுடியும். அடிமை ஏற்பாடு தோன்றியது. ஜனமேஜயனின் சர்ப்பஸத்ரத் தைப்போல, போர்க் கைதிகளைக் கொல்லக்கூடிய ஸத்ர, யாக முறை சரித்திர அரங்கிலிருந்து மறைந்தது. தோற்கடிக்கப்பட்ட வர்கள், இப்பொழுது, நான்காவது வர்ணமாக, சூத்திர வர்ணமாக, ஆரியர் சமூக ஸ்தாபனத்தில் ஒரு இடம் பெற்றனர். ஆரியர் சமூகத்துக்குத் தொண்டு புரியும் கடமை அவர்களுக்கு ஒதுக்கப்பட் டது. ஆரியர் சமூகம் முழுமையும், சுதந்திரர்களின் பாத்திரத்தை, யுத்தத்திலோ இதர வகைகளிலோ பிடிபட்ட ஆரியரல்லாதவர்க ளுக்கு எஜமானர்களாக விருக்கும் பாத்திரத்தை, தன்னுடையதாக வைத்துக்கொண்டது. சூத்திரனை விற்க முடியும்; கூலிக்கு அமர்த்த முடியும் அல்லது கொலை செய்யவும் முடியும். அவனுக்குச் சொத்துரிமைகள் கிடையாது, குடும்பம் கிடையாது, தெய்வம் கிடையாது. படைப்புத் திட்டத்தில் மற்றவர்களைப் போலவே, சூத்திரனுக்கும் ஒரு பிராணி ஒதுக்கப்பட்டதென்பது மெய் தான்; போரின் பிரதானமான பிராணியான குதிரை அவ்வாறு ஒதுக்கப் பட்டது என்பதும் உண்மையே. ஆனால் இதன் முக்கியமான பொருள் என்ன? போர்த் தலைவனுக்கு, கம்யூன் தலைவனுக்கு, க்ஷத்திரிய வர்ணத்தினருக்கு அவன் குதிரை மாதிரி பயன்பட்

டான் என்பதே. பிற்பாடு, சூத்திரர்களை கண அங்கத்தினர்களுக்கு வினியோகித்து விடலாம் அல்லது விற்று விடலாம். அவர்கள் இந்த ஆட்களை உழைக்கும்படி செய்வார்கள்.

அடிமை முறை, அதன் துவக்கக் காலத்தில், தந்தை வழிக் குடும்ப முறையின் கீழ் செயல்பட்டது; குடியிருப்புச் சமூகத்துடன் இணைந்திருந்தது. அதில் கிருஹபதியின் உஷாரான கண் காணிப்பில், தந்தை வழிக் குடும்பத்திலுள்ள ஆண் பெண்களுடனும் குமாரர் குமாரிகளுடனும் சேர்ந்து, அடிமைகள் வேலை செய்தனர். ஆனால் பண்டமாற்று விருத்தியடைந்து, பரிவர்த்தனைக்கான உற்பத்தியும் வியாபாரமும் வளரும்பொழுது, மேலும் கடினமான வேலை செய்யும்படி அடிமைகள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்; கைத்தொழில்கள், வயல்கள், சுரங்கங்கள் முதலியவற்றில் வேலை செய்யும்படி அவர்களை கோஷ்டி கோஷ்டியாகச் சேர்த்து விரட்டியடிக்கிறார்கள். அடிமை முறை அதன் தந்தை வழிக் குடும்பத்தின் தன்மையை இழந்து விடுகிறது. அது, அடிமைக்குச் சித்திரவதை செய்யும் கொடுங்கோன்மையாகவும் அடிமைகளை உடையவருக்கு, செல்வத்தைச் சேகரிக்க வேண்டுமென்ற பேராசையாகவும் ஆகிறது. ரிக் வேத காலத்தில், அடிமை முறை இந்த வர்த்தக ரூபத்தை அடைந்திருக்கவில்லை; ஆனால் சீக்கிரத்தில் அந்த ரூபத்தை அது அடைகிறது. ரிக் வேத எழுத்தாளர்கள், இந்த மகத்தான யுக்தியைக் கண்டு மகிழ்ந்தார்கள். அடிமை எஜமானனுக்கு அளித்த இன்பத்தையும் பெரு மகிழ்ச்சியையும் பற்றி ஒளிவு மறைவில்லாமல், மதாப்புடன் பாடப்பட்டது. கடவுள் அருளியதென்றும் மிகப் புனிதமானதென்றும் ஹிந்துக்கள் கருதும் வேத இலக்கியத்தில், இந்தச் செய்யுட்கள் உள்ளன. இந்தப் புதிய அமைப்பில், ஒரே ஒரு வகையில் தெய்வீக 'அருளை'ப் பெறும் பாத்தியதையை அடிமைகள் பெற்றனர்; அதாவது, முன்னால் போர்க் கைதி புருஷ மேதத்தின் அக்கினியில் சாகடிக்கப்பட்டார்; இப்பொழுது அவருடைய உயிருக்கு ஆபத்து கிடையாது; இரட்டைப் பிறப்பினரான ஆரியர்களுடைய சரண்டல் என்ற கொஞ்சம் கொஞ்சமாகச் சுட்டு எரிக்கும் அக்கினியில் அவர்கள் இனிமேல் தம்மை எரித்துக் கொள்ளலாம்; அதன் மூலம், புருஷஸூக்தத்தின் கீதத்தைப் பாடுவதற்கு உற்சாகம் அளிக்க

லாம். தோல்வியடைந்து சுதந்திரத்தை இழந்த பின், சூத்திர அடிமை முறைக்கு உட்படுவதானது, பரிபூர்ணமாக அழிக்கப்படாமல், சுரண்டப்படும் நிலைமைக்கு உட்படுவதானது, சமுதாயப் பரிணமத்தின், அன்றைய கட்டத்தில், ஒரு அடி முன்னேற்றத்தைக் குறிக்கவில்லையா? அடிமைக்கு உயிர் கிடைத்தது; ஆரியனுக்கு செல்வம் கிடைத்தது. அந்த அடிப்படையில், அப்பொழுது அடிமை முறை மூலமே வளரக்கூடிய உற்பத்தி சக்திகளை வளர்ப்பதன் மூலம், இருவருமே ஒரு மேம்பட்ட வாழ்வை நோக்கி முன்னேற முடியும். ஆனல் வெற்றியடைந்த ஆரியன் அம்மாதிரி வாதிக்கவில்லே. மகத்தான பிரமன், அடிமை வேலேக்காகவே, மற்ற மூன்று வர்ணங்களிலுள்ள சுதந்திர ஆரியர்களின் தாஸனுக ஊழியம் புரிவதற்காகவே சூத்திரனேப் படைத்திருக்கிறதென்று வெற்றி கண்ட ஆரியன் வாதித்தான்; அதைச் செய்த பின், பிரமன் சுபிட்சம் அடைந்து வளர்ந்ததென்று அவன் கூறினன். ஆனல் பழைய இன்பகரமான பிரமன் இல்லாதொழிந்து விட்டது.

அடிமை முறையை பிறப்பித்த காரியம், திரிவர்ணங்களேயும் சூத்திரனேயும் பிறப்பித்த காரியம், துவாபர யுகத்தின் வர்க்கப் பிளவையும் அந்தப் பிளவால் ஏற்படும் வர்க்க மோதல்களேயும் பிறப்பித்த காரியம், மகத்தான பூர்வீக பிரமனின், பூர்வீக யாக புருஷனின் கடைசிச் செயலாக விருந்தது. நெருப்பு கண்டு பிடிக்கப்பட்டதாலும் கால் நடைகளேப் பழக்கக் கற்றதாலும், இறந்து கொண்டிருந்த பிரமன்—பிரஜாபதி புத்துயிர் பெற்று வளர்ந்தான்; இப்பொழுது, விவசாயம், கைத்தொழில்கள், பரிவர்த்தனே, தனி உடமை, வர்ணங்கள் ஆகியவற்றின் பிறப்பால் தொடர்ச்சியான பல சம்பவங்கள் நிகழ்ந்தன; மாபெரும் வர்க்கப்போரும் வர்க்க அரசும் அந்தப் பிரமனே இனி மீள முடியாத வகையில் கொன்று விட்டன. "பிரமன் நநாச்ஹ"—பிரமன் அழிந்து விட்டான்—என்று மகாபாரதம் நேரடியாகப் புலம்புகிறது. பிரமன் எப்படி அழிந்தான் என்பதைப் பார்ப்போம்.

கம்யூனின் வீழ்ச்சி

பொருட்கள், பொருளுற்பத்தி வேலைகள் ஆகியவற்றின் வகைகள் அதிகரித்துக் கொண்டிருந்த காரணத்தால், சமுதாய வேலைப் பிரிவினையான வர்ணங்களின் பாகுபாடு அவசியமாயிற்று. தனி உடைமையும், பரிவர்த்தனைக்காகவும் லாபத்துக்காகவும் பரிவர்த்தனைப் பண்டங்களை மலிவாக்குவதற்காகவும் வெறியுடன் நடைபெறும் உற்பத்திப் போட்டியும் சமுதாயத்தை வசப்படுத்திக் கொள்வதற்கு முன்னால், சமுதாயப் பிரிவினையானது, பண்டத்தின் தன்மையையும் உபயோக—மதிப்பையும் உயர்த்துவதன் மூலமாக உற்பத்திக்கு உதவியே செய்கிறது. "பொருளுற்பத்தியின் சமூகக் கிளைகள் வேறுபடுவதால், பரிவர்த்தனைப் பண்டங்கள் மேலும் நல்ல முறையில் செய்யப்படுகின்றன ; மனிதர்களின் பல்வேறு மனோபாவங்களும் திறமைகளும் தகுதியான துறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன ; ஓரளவுக்கு கட்டுப்பாடு இல்லாமல், எங்குமே எத்தகைய முக்கியமான பலன்களும் கிடைக்காது. எனவே, வேலைப் பிரிவினையால், பண்டமும் செம்மையடைகிறது, பண்ட உற்பத்தியாளரும் திருத்தமடைகிறார்."[1] அதுவே, ஆதிக்கால வேதங்களுக்கு உரிய சமுதாயத்தின் வர்ண முறை நிலையாயிருப்பதற்கு அஸ்திவாரமாயிருந்தது ; சாதியும் தொழிலும் ஒத்திருந்த அளவுக்குப் பிற்கால சாதி முறை நிலையாயிருப்பதற்கும் அஸ்திவாரமாயிருந்தது.

ஆனால் பிற்பட்ட பொருளுற்பத்திக் கருவிகளை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் தான், மத்தியகால, பண்டைக்கால, இந்தியாவில் இருந்த முறையில் விவசாயத்தையும் கைத்தொழில்களையும் அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் தான், இத்தகைய சமூக வேலைப் பிரிவினை சாத்தியம். ஆனால் அந்தக் கருவிகள் புரட்சிகரமான மாறுதலை அடைந்து, நவீனக் கருவிகளாக ஆனவுடன் அந்த சமுதாய ஸ்தாபன முறை செல்லாததாகி விடுகிறது; அதன் அவசியத்தை இழந்து விடுகிறது; சீர்குலைந்து விடுகிறது.

---

1 மார்க்ஸ் "மூலதனம்" முதல் பாகம்.

ஆனால் அடிமை முறையும் தனி உடமையும் பூர்வீகக் கம்யூன் பொருளாதாரத்துக்குள் பிரவேசித்திருக்காவிட்டால், ஒன்றுக் கொன்று பகையான நலவுரிமைகளைக் கொண்ட வர்க்கங்களைப் பிறப்பித்திருக்காவிட்டால், வர்ணங்களின் பாகுபாட்டால் மட்டும், மோதலும் வர்க்கப் போர் அல்லது வர்ணப் போரும் விளைந்திருக்க வேண்டியதில்லை.

இது முற்றிலும் புதியதொரு நிகழ்ச்சி; ஏழைகளையே மிகப் பெரும்பான்மையோராக உடைய கம்யூன் இதைக் கண்டு திகைத்துத் தடுமாறியது. வர்ணங்கள் தத்தம் செயல் துறைகளை விருத்தி செய்வதற்கும் அந்தச் செயல்களுக்கு வெகுமதி பெறுவதற்கும், குலத்தின் அல்லது கணத்தின் ஜனநாயகம் இடம் அளித்திருந்தது; எல்லோரும் நன்மையடைந்து இன்புறுவதற்குத் தக்க வகையில், ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும், என்ன பெற வேண்டும், ஒவ்வொருவரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பனவற்றை வர்ண-தர்மங்கள் வகுத்திருந்தன. பழைய கிருத-திரேதாயுகங்களில், யாக நடவடிக்கையில் வர்ணங்களின் பாகுபாடு அவசியமாகவில்லை; யாக நடவடிக்கை முழுவதின் பலன்களும் எல்லோருக்கும் உரியதாயிருந்தன; ஹவனம் மூலம் எல்லோரும் உற்பத்தியின் வறுமையைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். பொது நடவக்டிகை பலவகைப்பட்டதாகி விட்டதால், அது இப்பொழுது வர்ணங்களிடையே பிரித்துக் கொடுக்கப்பட்டது; அதைப் போலவே அதன் பலன்களும் வர்ணங்களிடையே பிரித்துக் கொடுக்கப்பட்டன. ஆனால் ஏழ்மையையும் செல்வத்தையும் எல்லோரும் சமமாகப் பங்கிட்டுக் கொள்வதற்குப் பதிலாக, சிலரே சகல ஐசுவரியங்களையும் பெற்றனர்; மற்றவர்கள் ஏழ்மை முழுவதையும் பெற்றனர்.

யக்ஞ உற்பத்தியை நடத்துவதற்காகப் பொறுக்கப்பட்டவர்களான பிராமணர்கள், இப்பொழுது சமுதாயப் பொருளாதாரத்தின் தலைவர்களாகி விட்டார்கள்; வழி காட்டும் கலையையும் தொழில் முறையையும் அவர்கள் அறிந்திருந்தார்கள்; அதனால் அவர்கள் அதிகாரம் செலுத்த முடிந்தது. உற்பத்திப் பொருட்களை, முன்னர் அனைவரும் பங்கிட்டுக் கொண்டனர்; இப்பொழுது

அவை பிராமணர்களுக்கே உரிய சொத்தாயிற்று. மகத்தான போர்களில் பங்கெடுத்துத் தலைமை தாங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட க்ஷத்திரியத் தலைவர்களும் அவ்வாறு செய்தனர். விஷா ஜனநாயகத்தின் உறுப்பினர்கள் மட்டுமே வறுமையையும் கடின உழைப்பையும் சூத்திரர்களுடன் பகிர்ந்து கொண்டனர். தனி உடமையையும் தனிப்பட்டவர் பொருள்களை சுவீகரித்துக் கொள்வதையும் தனிப்பட்டவர்கள் செல்வந்தர்களாவதையும் எதிர்த்து, கூட்டுக் சொத்துரிமை தன் அதிருப்தியைத் தெரிவித்தது. சிலர் உண்டு களிக்கும் பொழுதே, மற்றவர்கள் பட்டினி கிடக்கும் நிலைமையை யக்ஞ கம்யூன் ஒரு பொழுதும் அறிந்ததில்லை. பணமாகவுள்ள தங்கம் (ஹிரண்யம்) எனப்படும் இந்தப் புதிய பொருளை, வெறுக்கத் தக்க பொருளைத் தேடியலையும் முறை, பண்டைக்கால தெய்வீகக் கம்யூனில் ஒரு பொழுதும் இருந்ததில்லை. புராதனக் காலத்து இந்திரன், கற்களையும் எலும்புகளையும் எடுத்தாண்டு போராடினார்; பசுக்களை கைப்பற்றினார். மேய்ச்சலுக்கான வயல்களை வசப்படுத்தினார்; நீர் நிலையங்களை வென்றார். அவர் குடித்தார். இடி முழக்கம் செய்தார். ஆனால் அந்த நாட்களில் வாழ்ந்தவர்கள், தாம் மட்டும் அனுபவிப்பதற்கென்று, தமக்கே உரியதென்று தமது செல்வத்தைச் சேமிக்கவில்லை. கடந்தொழிந்து விட்ட அந்தக் காலத்தில், அவர்கள் சிறு கணத்தில் வசித்தனர்; ஆஷ்வ்ராஜா எனப்பட்ட சிறு குடியிருப்பில் வசித்தனர்; பொதுவான அக்கினியைச் சுற்றி அனைவரும் அமர்ந்து, கம்யூன்-அன்னை அளித்த உணவை உண்டனர்; சேர்ந்து பாடினர்; ஏழைகளாயிருந்த போதிலும், இன்புற்று வாழ்ந்தனர்.

இப்பொழுதோ? ரிக் வேதக் கவி புலம்பினார்:—

"பசி என்பது தெய்வம் மனிதனுக்கு அளிக்கக் கூடிய ஒரே தண்டனையாக இருக்கிறதா? ஏழைகள் பட்டினியால் சாக வேண்டுமென்பது தெய்வத்தின் விருப்பமானல், பணக்காரர்கள் ஏன் அமரர்களாக விருக்கவில்லை? ஒரு (சொத்துள்ள) முட்டாள் கையில் உணவு சேகரமாவதால், மற்றவர்களுக்குப் பயனில்லை. அவன் மட்டுமே உண்கிறன்; அவனுடைய நண்பர்களுக்கு

அன்னமிடுவதில்லை; எனவே கண்டிக்கப்படுகிருன்." (ரிக் வேதம், X, 117).

பரிவர்த்தனை, சந்தை, தனிப்பட்டவர் உழைப்பு, தனி நபர் பொருட்களை சுவீகரித்துக் கொள்ளுவது ஆகியவை தோன்றிய காரணத்தால், ஒரு புதிய நிகழ்ச்சி இப்பொழுது உண்டாயிற்று; மனிதர்கள் பணத்தையும், வேலையையும் தேடியலைந்தனர்; தமது சரக்குகளையும் தமது உழைப்பையும் வாங்கக் கூடியவரை தேடியலைந்தனர்.

வேத கவி மீண்டும் புகார் கூறுகிருர் :—"நமக்கு பல கடமைகள், பல ஆசைகள், பல மனதுகள் இருக்கின்றன. தச்சன் ரம்பத்தின் சப்தத்தை நாடுகிருன்; வைத்தியன் நோயாளியின் புலம்பலை நாடுகிருன்; பிராமணன் பக்தனை நாடுகிருன். மரம், விசிறி, கம்மாலை, அடுப்பு ஆகியவற்றுடன் கம்மாளன் பணக்காரனுக்காகக் காத்திருக்கிருன். நான் ஒரு பாடகன், என் தந்தை ஒரு வைத்தியர்; என் தாய் தானியத்தைக் குத்துகிருள். இடையனின் பசுக்களைத் தொடர்ந்து ஓடுவதைப் போல, நாம் பணத்தைத் தொடர்ந்து ஓடுகிருேம்." (ரிக் வேதம் IX, 111—1—3).

பிந்திய ரிக் வேத மண்டலங்கள், கடன் பட்டு நிற்கும் சூதாடியைப் பற்றியும் அடிமைகளைப் பற்றியும், மனிதர்களுக்கிடையேயுள்ள பொருமை, வெறுப்பு ஆகியவற்றைப் பற்றியும் குறிப்பிடுகின்றன.

பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தி, கம்யூன் அல்லது கண சமூகத்தில் ஊடுருவி, அதன் கூட்டுத் தன்மையை அழித்த பொழுது ஏற்பட்ட நிலைமை இது. முன்னல், உற்பத்தியாளன், உபயோகத்துக்காக உற்பத்தி செய்த பொழுது, அவன் பண்டத்தின் மீது ஆதிக்கம் வகித்தான். கூட்டுத் தொகுதி தன் உற்பத்தி முறையின் மீதும் தன் உற்பத்திப் பொருட்கள் மீதும் ஆதிக்கம் வகித்தது. கம்யூன்-உறுப்பினர்கள், தமது பொருட்களுக்கு நேரிட்டதை அறிந்திருந்தார்கள். அவர்கள் அவற்றை உபயோகித்தார்கள். அந்தப் பொருட்கள், அவர்களுக்கு எதிராக சூது செய்வதற்காக அவர்களை விட்டுப் பிரியவில்லை.

ஆனால் பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியும் பரிவர்த்தனையும் ஏற்பட்ட பின், பண்டங்கள் கை மாறுகின்றன. உற்பத்தியாளன் பண்டத்தை பரிவர்த்தனையில் கொடுக்கிறான்; அது என்ன கதி அடைகிறதென்பது அவனுக்குத் தெரியாது. இந்த நிகழ்ச்சியில், பணம் என்ற ஒரு புதிய அம்சமும் வர்த்தகர்கள் என்ற புதிய வர்க்கமும் புரிந்து கொள்ளப்படாத சந்தை என்ற புதிய சக்தியும் தோன்றுகின்றன. உற்பத்தியாளனும் அவனுடைய பண்டமும், சந்தைக்கு, பணத்துக்கு, தேவைக்கு, தற்செயலான சந்தர்ப்பத்துக்கு உட்படுகின்றன. உழைப்பாளி பாடுபட்டதின் பலனை அவன் நேரடியாகப் பயன்படுத்தி அனுபவிப்பதில்லை; அந்தப் பலன் "விதி"யைப் பொறுத்தாகிறது. புதிய சக்திகள், அன்னிய சக்திகள், கண்ணுக்குப் புலப்படாத சக்திகள், கருத்துக்குப் புரிபடாத சக்திகள், கட்டுப்படுத்தப்படாத சக்திகள், அவனுடைய வாழ்க்கையை, அவனுடைய உழைக்கும் திறன்களை வசப்படுத்திக் கொள்கின்றன. அவனுடைய உழைப்புத் திறன்கள் வலுவாக விருந்த போதிலும், ஜீவனுடையவாகவிருந்த போதிலும், அவனுக்கு அன்னமிட்டாலும் அன்னமிடலாம்; அன்னமிடாமலிருந்தாலும் இருக்கலாம். இவ்வாறு பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே, சுரண்டுகிறவர்கள் சுரண்டப்படுகிறவர்கள் என்ற புதிய வர்க்கங்களுக்கிடையே, மோதல் வளர்கிறது.[1]

கண-கம்யூன் எந்தச் சமயத்திலும் கனவு கண்டிராத மோதல்கள் கண-சமூகத்தின் கருப்பைக்குள் பக்குவமடைந்து வேகத்துடன் வெடிக்கின்றன. பொருளாதாரத்தில் ஆதிக்கம் வகிக்கும் வர்க்கத்தின் இரண்டு வலுவுள்ள பகுதிகளும், சுரண்டப்பட்ட செல்வத்துக்காக மூர்க்கத்தனமாக மோதுகின்றன.

விரிந்து பரந்த விஷா விவசாயிகளும் சூத்திரர்களும் உற்பத்தி செய்த செல்வத்தை சுவீகரித்துக் கொள்வதற்காக, பிராமண, க்ஷத்திரிய வர்ணங்கள் மோதுகின்றன. சுரண்டல் அதிகா

1 அப்பொழுதுதான் முதன் முதலாக, கர்மத்தின் தத்துவம் சம்பந்தமான பிரச்னைகளும், கர்மத்திலிருந்து விடுதலை பெறுவதான மோட்சம் என்ற பிரச்னையும் ஒலிந்து சமூகத்தில் தோன்றுகின்றன. வேதத்துக்கு உரிய கம்யூனில் அந்தகைய பிரச்னை தோன்றியதே கிடையாது.

ரத்தின் ஏகபோகத்துக்காக அவை தமக்குள்ளே போராடும் பொழுதே, விஷா மக்களை எதிர்த்துப் போராடுவதில் ஒன்றுபடுகின்றன. அந்த விஷா 'மக்களோ வாழையடி வாழையாக இருந்து வந்த கம்யூனுக்காக, அதன் தர்மத்துக்காக, அதன் ஒழுக்க நெறிகளுக்காக, அதன் பொருளாதாரத்துக்காக, அதன் ஸ்தாபனத்துக்காக தொடர்ந்து போராடுகின்றனர். கூட்டுத் தன்மை, போராட்டமில்லாமல் தனி உடைமைக்குச் சரண் அடைய மறுக்கிறது; இதுவரைப் பிளவுபடாமலிருந்த பிரமன், ஆதிக்கம் வகிக்கும் வர்ண-வர்க்கத்தின் தன்னந் தனியான சொந்த நலன்களுக்கு முன் தோல்வியடைய மறுக்கிறது. ஒரு ரத்தக் கிளறியை உண்டாக்கும் போராட்டம் நடைபெறுகிறது; அது பல வருஷங்கள் நீடித்ததென்பதற்கு வேத, இதிஹாச மரபுகள் சான்று கூறுகின்றன.

தனி உடைமை அதன் ஆரம்பக் காலத்தில் நடைபெற்ற போராட்டங்களில் தோல்வி அடைந்ததாகத் தோன்றுகிறது. கிருஷ்ணயஜுர் வேதத்தின் தைத்திரீய ஆரண்யகத்திலுள்ள யாகக் கதை, விஷ்ணுக்கும் தேவர்களுக்கும் இடையே நடந்த யுத்தத்தைப் பற்றிய கதை, அந்தத் தோல்வியைப் பற்றிய நினைவைப் பாதுகாத்து வைத்திருப்பதாகத் தோன்றுகிறது. அதில் மறை பொருளாகவும் கட்டுக் கதையாகவும் உள்ள விஷயங்களை, அநாகரீக மக்களுக்கு இயல்பாகவுள்ள அந்த விஷயங்களை ஒதுக்கி விட்டுப் பார்த்தால், கூட்டுத் தன்மைக்கு எதிராகத் தனி உடைமை நடத்திய போராட்டத்தை பின் வருமாறு எடுத்துக் கூறுகிறது :—

பூர்வ காலத்தில், தேவர்கள் ஒரு ஸத்ரத்தைத் தொடங்கினார்கள். ஸத்ரம் என்பது யாக முறையின் கூட்டு உற்பத்தி என்பதை நாம் முன்பே பார்த்து விட்டோம். ஸத்ரத்தில் கிடைக்கும் பொருட்கள் அனைத்தும் எல்லோருக்கும் உரியதென்றும், ஒவ்வொருவரும் அவற்றைச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் துவக்கத்திலேயே சம்மதிக்கிறார்கள், (ஸத்ரத்தை பொறுத்தவரை, இந்த உடன்பாடு அதில் உள்ளடங்கியிருக்கிறது. ஆனால் பிற்காலத்து ஆசிரியர் அதை வெளிப்படை

யாக எடுத்துக் கூறி யிருக்கிறார். அதுவும் சரித்திரம் எழுதுவதற்கு நன்மை செய்வது தானே!) அந்த யாகத்தில் ஏராளமான தேவர்கள் சேர்ந்ததாலும், யாக-அக்கினி பெரியதாகயிருந்ததாலும், அது ஒரு பெரிய பிரதேசத்தில் நடைபெற்றது. குருக்ஷேத்திரம் யாக மேடையாக விருந்தது. மேடைக்குத் தெற்கே காண்டவர் தேசம் இருந்தது. மேடையின் மேல் எல்லையைத் தொட்டது பரிநாத். (பண்பட்ட பூமி அல்லது நல்ல மேய்ச்சல் பூமி என்று பொருள்.) மேடைக்கு வடக்கே (துர்வசர் கணத்தின் பூமியான) துக்ரா பிர தேசம் இருந்தது. தண்ணீர் இல்லாத மாரு (மார்வார்), ஸத்ரத்தின் கழிவு கூளங்களைக் கொட்டிக் குவிக்கும் இடமாகப் பயன்பட்டது. ஸத்ரத்தில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் ஒரு ரிக்விக்காகவும் கிருஹபதி-எஜமானராகவும் இருப்பதை நாம் அறிவோம். எனவே, உழைப்பதிலும் அநுபவிப்பதிலும் அனைவருக்கும் சம உரிமைகள் உண்டு. ஆனால் பங்கெடுப்பவர்கள் அனைவரும், தமக்குள்ளிருந்து ஒரு கிருஹபதியை, வழிகாட்டி நடத்தும் அதிகாரியாகத் தேர்ந்தெடுத்தனர். தேவர்களின் ஸத்ரத்தில் விஷ்ணு கிருஹபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் ; ஸத்ரம் நடந்து கொண்டிருந்தது. அது கூட்டு முயற்சியாக விருந்தபோதிலும், 'விஷ்ணு ஸத்ர யாகம் செய்வதாகப்' புகழ் பரவியது. ஸத்ரத்திலிருந்து கிடைக்கும் நன்மையை (பலன்களை) தானே சுவீகரித்துக் கொண்டு விடலாமென்று விஷ்ணு இப்பொழுது எண்ணினார். அவருக்குக் கர்வம் ஏற்பட்டது; சீக்கிரத்தில் தேவர்களின் விரோதியாக பகிரங்கமாக முன் வந்தார். எனவே, பலன்களில் தமக்குள்ள பங்கைப் பெறுவதற்காக, தேவர்கள் விஷ்ணுவைத் தாக்கினார்கள். ஆனால் விஷ்ணு புனிதப்படுத்தப்பட்ட தலைவராக விருந்ததால், அவரிடமே வில் அம்பு என்ற ஆயுதங்கள் இருந்தன ; தேவர்கள் நிராயுதபாணியாயிருந்தனர் ; யாகத்தின் விதி அத்தகையது. ஆயுதமேந்திய விஷ்ணுவைக் கண்டு, நிராயுதபாணிகளான தேவர்கள் ஓடினார்கள். விஷ்ணு வெற்றியடைந்த காரணத்தால் அஜாக்கிரதையாக விருந்தார் ; தற்காப்புக்காக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. அவருடைய ஆயுதமேந்திய கண்காணிப்பு குறைந்தது ; அதன் மூலம், அவர் முன்னால் பெற்றிருந்த யக்ஞ தேஜஸையும், போராடி வெற்றி யடையும்

சக்தியையும் இழந்தார். அந்த யக்ஞ தேஜஸ் விஷ்ணுவை விட்டுப் பிரிந்தவுடன், தேவர்கள் அதைக் கைப்பற்றி சியாமந் மூலி கைகளில் எரித்து விட்டனர். தேவர்கள் சிதறுண்டு விட்டதைக் கண்ட விஷ்ணு, தன் வில்லைத் தரையில் வைத்தார்; வில்லின் நுனி மீது தன் முகவாய்க் கட்டையை வைத்துக் கொண்டு ஓய்வெடுத்தார். இதைக் கண்ட தேவர்கள் கறையான்களின் உதவியை நாடினார்கள். விஷ்ணுவின் வில்லிலுள்ள நாண் கயிறில் துளை போடும்படி அவற்றிடம் கூறினார்கள். நாண் கயிறு அறுந்தவுடன், வில் முறிந்து, விஷ்ணுவின் தலை அறுந்து தூர விழுந்தது. பிறகு, யாக புருஷனை விஷ்ணுவின் உடலை, அக்னி, இந்திரன், விசுவதேவன் ஆகிய மூன்று தேவர்களும் பங்கிட்டுக் கொண்டனர். ஆனால் அந்த உடல், தலையில்லா முண்டமாக விருந்தது; எனவே அவர்கள் யாகத்தின் பலன்களை அடைய முடியவில்லை. எனவே, தேவர்கள், தேவ வைத்தியர்களான அசுவினிகளைக் கூப்பிட்டார்கள். அவருக்குப் பங்கு தருவதாக வாக்களித்த பிறகு, அவர் தலையை உடலோடு சேர்த்தார்; யாகப் பலன் கிடைத்தது.

இந்த உள் போராட்டக் கதை, ஒரு வேளை ஆரியர் சமூகத்தில் ஆதிக் காலத்தில் நடந்த வர்க்கப் போராட்டத்தைப் பற்றியதாக விருக்கலாம்; இது மிகவும் வெளிப்படையாக விருப்பதால், விளக்கம் அவசியமில்லை. பொருட்களைக் கூட்டாக உற்பத்தி செய்து சுவீகரித்துக் கொள்ளும் முறை, ஒரு பலாத்காரமான வர்க்கப் போராட்டமில்லாமல், வர்க்க சமூகத்துக்கும் வர்க்க அரசுக்கும் சரண் அடையவில்லை. உடமையாளர்களுக்கும் உடமை யிழந்தவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்னைக்கு, மற்றவர்களின் உழைப்பைச் சுவீகரித்துக் கொண்டவர்களுக்கும் உழைப்பவர்களுக்கும் இடையே எழுந்த பிரச்னைக்கு, இறுதியில் பலாத்காரமே தீர்வு கண்டது. கூட்டு உற்பத்தி-விநியோகத்தின் சமத்துவம் ஆதிக்க ஸ்தானத்திலிருந்து அகற்றப்பட்டு அழிக்கப்பட்டது; ஏற்றத் தாழ்வு, ஏழை பணக்காரன் போராட்டம், கதையில் யக்ஞ புருஷனென்று குறிப்பிடப்படும் கம்யூன், அக்கினி (பிராம்மணனைக் குறிப்பது), இந்திரன் (க்ஷத்திரியனைக் குறிப்பது), விசுவதேவன் (விஷாவைக் குறிப்பது) ஆகிய மூன்று தேவர்களால் குறிக்கப்படும் மூன்று வர்ணங்களாகப் பிரிதல், அரசு என்ற புனிதப்பட்ட

ஆயுதமேந்திய தலைவன் புதிய விதியை நிறைவேற்றுதல் ஆகியவை, தோன்றுவதற்காகப் போராடின; உற்பத்தி செய்கிறவர்கள் என்றும் உற்பத்தியாளர்களின் உபரியை சுவீகரித்துக் கொள்கிறவர்களென்றும், அதாவது சுரண்டப்படுகிறவர்களென்றும் சுரண்டுகிறவர்களென்றும் சமுதாயம் பிரிந்தது; சுரண்டப்பட்ட ஏழைகள், தமது பழைய ஸத்ர உரிமைகளை, தமது கூட்டு வாழ்வு உரிமைகளைக் கைவிட்டுவிட்டு, சுரண்டல்காரர்களின் ஆட்சிக்கு உட்படவேண்டும் அல்லது போராட வேண்டும் ஐதரேய பிராம்மணத்தின் ஆசிரியர் நமக்கு வெளிப்படையாக எடுத்துக் கூறும் கதை இதுவே. இந்த முதலாவது சகோதரப் போரில், கம்யூனின் கூட்டுச் சித்தத்தால் தலைமைப் பீடத்தில் அமர்த்தப்பட்ட விஷ்ணு தோல்வி யடைந்தார்; சமூக உழைப்பின் பலன்களை தானோ தன் வர்க்கமோ சுவீகரித்துக் கொள்ள வேண்டுமென்ற லட்சியத்தில் தோல்வியடைந்தார்; ஸத்ரவிதி வெற்றி யடைந்தது. ஆனால் புதிய வர்க்க அதிகாரமும் அதன் ஆயுதமேந்திய அரசும், அடக்குமுறைக் கருவியாக, சுரண்டப்படும் உழைப்பாளிகளுக்கு எதிராக ஆளும் வர்க்கம் பயன்படுத்தும் பலாத்காரக் கருவியாக உருப்பெற்று வருவதை அது நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அதெல்லாம் தெய்வீகச் செயலென்றும் தெய்வீக அவசியமென்றும் நாம் நம்ப வேண்டுமென்பதே அநாகரீகக் காலத்து ஆசிரியரின் விருப்பம். எனினும், அந்தப் போராட்ட சகாப்தத்துக்கு நெருங்கிய காலத்தில் அவர் வாழ்ந்ததால், ஸத்ர உழைப்பிலும் ஸத்ர கம்யூனிலும் வெடித்துள்ள பொருளாதார வர்க்கப் போராட்டத்தின் பேருண்மைகளை அவரால் மறைக்க முடியவில்லை. கம்யூன் உடமை சரண் அடையவில்லையென்றும் அது பலாத்காரமாக அடக்கப்பட்டதென்றும், இந்தக் கதை எடுத்துரைக்கிறது; பூர்ஷுவா அறிஞர்கள் கூறுவதைப் போல அது "மனித இயல்பின்" காரணமாகத் தோற்கவில்லையென்றும், புதிய யுகத்தின் புதிய வர்க்க தர்மத்தின் ஆயுத பலத்தாலேயே அது அழிக்கப்பட்டதென்றும் நமக்கு இந்தக் கதை எடுத்துரைக்கிறது.

ஒரே கணத்தினருக்குள், இரத்த சம்பந்த உறவினருக்குள் சண்டை, அண்ணன் தம்பிச் சண்டை என்பவையெல்லாம் பூர்வீகக் கம்யூன் கண்டிராத விஷயம். ஒரு குலம் இன்னொன்றுடன்

போராடியது. அதிதியின் குமாரர்கள் திதியின் குமாரர்களுடன் போராடினார்கள்; வினதையின் குமாரர்கள் கத்ருவின் குமாரர்களுடன் போராடினார்கள்; இவ்வாறு ஒரு குலத்தினர் இன்னொரு குலத்தினருடன் சண்டை போட்டார்கள். ஆனால் அதிதியின் குமாரர்கள் தமக்குள்ளேயே சண்டை போட்டுக் கொண்டார்களென்றும், தமது இரத்தக் கலப்பு உறவினர்களையே அழித்தார்கள் அல்லது அடிமைப் படுத்தினார்களென்று எவராவது கேள்விப் பட்டிருக்கிறார்களா? வஸு கணங்கள், தமது இரத்தக் கலப்பு உறவினராக உள்ள வஸுக்களுடன், தமது யக்ஞ கம்யூனை கண கோத்திரத்தைச் சேர்ந்த வஸுக்களுடன் போராடினார்களா? ஒரு பொழுதும் போராடவில்லை. அத்தகைய சகோதரச் சண்டை, வர்க்கப் போர், வர்ணப் போர், 'பண்டைக் காலத்து யாகக் கம்யூனில் இடம் பெறவில்லை; ஏனெனில் அந்தக் கணங்களில் தனி உடைமையும் சுரண்டலும் தோன்றி யிருக்கவில்லை. அவை தோன்றிய பின், அதற்கு முன் குலங்களுக்கிடையே நடக்கும் யுத்தங்களுடன், ஒவ்வொரு குலத்துக்குள்ளும் நடக்கும் உள் யுத்தங்களும் சேர்ந்து கொண்டன. அடிமைகளையும் கால் நடைகளையும் இதர செல்வங்களையும் பெறுவதற்காக, குலங்கள் குலங்களுடன் போராடின; பிறகு, இந்தச் செல்வத்தை தமது சொந்த ஆஸ்தியாக ஆக்கிக் கொள்வதற்காகவும் தமது உழைப்பாளி உறவினர்களை அடிமைப்படுத்துவதற்காகவும், அவர்கள் தமது வர்ண (வர்க்க)ப் போர்களை, உள் போராட்டங்களை, நடத்தினார்கள். விஷ்ணு புராணம் கூறுவதாவது:—(சாத்துவீகம், தாமஸம், ராஜஸம், என்ற) வெவ்வேறு நற்குணங்களையும் தீயகுணங்களையும் உடைய வெவ்வேறு வர்ணங்களை ஆண்டவன் படைத்தார். முதலில், அவை அமைதியாகவிருந்தன; எனவே சகல வர்ணங்களும் சந்தோஷமாயிருந்தன. ஆனால், காலப் போக்கில், அவர்களை "இச்சை" பிடித்துக் கொண்டது. அவர்கள் நகரங்களையும் கோட்டைகளையும் கட்டிக் கொண்டார்கள்; யுத்தம் செய்தார்கள்; துயர மடைந்தார்கள். அரசன்-ராஜ்யமும் சகோதரச் சண்டையும் எப்படித் தோன்றினவென்று, மகாபாரதத்தில், பீஷ்மரிடம் கேட்கப்பட்டது. அவரும், முதலில் சகோதரச் சண்டையோ அரசனோ அரசோ இருந்ததில்லையென்று குறிப்பிடுகிறார். கம்யூன்

அங்கத்தினர்களிடையே புதிய "ஆசைகளும்" இச்சைகளும் தோன்றியதால் அந்த ஆரம்பக்காலக் கம்யூன் வீழ்ச்சியடைந்த தாகவே அவரும் கூறுகிருர். அவர்களுக்கு பொருட்கள் மீது மோஹம் அல்லது பிரேமை ஏற்பட்டது; பகுத்தறியும் சக்தியை இழந்தனர்; பிறகு அவர்களை பேராசை பிடித்துக் கொண்டது. பேராசை ஏற்பட்டவுடன், அவர்கள் தம்மிடம் இல்லாதவற்றைப் பெறுவதைக் குறித்து எண்ணத் தொடங்கினுர்கள். புதிய 'ஆசை'க்கு அவர்கள் பலியானதால், அவர்களுக்கு ஆத்திரமும் ஆவேசமும் வெறுப்பும் ஏற்பட்டன; அவர்கள் தமது இரத்தக் கலப்பு உறவினர்களை மறந்தனர்; அவர்கள் பால் செலுத்த வேண்டிய கடமையை மறந்தனர். அவர்கள் செய்யக் கூடாத தைச் செய்தார்கள்; தமது தர்மத்தை இழந்தார்கள்; தமக் குள்ளே சண்டை போட்டார்கள். இவ்வாருக பிரமன் அழிக்கப் பட்டது. சகோதரச் சண்டையும் புதிய அரசும் தோன்றுவதற் கும், பழைய இன்பம் நிறைந்த சமாதான பூர்வமான தர்மம், கிருதயுக திரேதாயுக தர்மம் அழிந்ததற்கும், ஒன்றன் பின் ஒன்ருக தீய குணங்கள் படையெடுத்ததே காரணம் என்ற கருத்து அநேக மாக ஒவ்வொரு ஹிந்து நூலிலும் காணப்படுகிறது.

திதி குமாரர்களும் அதிதி மைந்தர்களும், ஆத்திரமும் சண் டைக் குணமும் படைத்தவனை இடி முழக்கம் செய்கிற இந்திர னும் மற்றவர்களும் தமது எதிரிகளை எதிர்த்துப் போராடி கால் நடைகளையும், செல்வத்தையும் வென்றபொழுது, அவர்களுக்கு புதிய பொருட்களிடத்தில் மோகமும், ஆசையும், பேராசையும் ஏன் ஏற்படவில்லை? அந்த பொருட்களுக்காக அவர்கள் ஏன் தம்முடைய இரத்தக் கலப்பு உறவினர்களுடன் சண்டை போட வில்லை? இந்தக் கேள்விகளுக்கு அநாகரீகக் கால எழுத்தாளர் கள் பதில் அளிக்கவில்லை; அவர்களால் பதிலளிக்க முடியவில்லை. அந்தக் காலத்தினர் நல்லவர்களாயிருந்தார்களென்றும், இந்தக் காலத்தவர் அப்படி யில்லையென்றும் தான் அவர்களால் சொல்ல முடிந்தது. அதுவும், ஜனங்களாகக் கெட்டுவிடவில்லை யென்றும், துர்க்குணங்கள் உயிர் பெற்று சிறகு வளர்த்து பறந்து வந்து ஜனங்களை வசப்படுத்திக் கொண்டு விட்டனவென்றும் பொருள் படும் முறையில், அந்த எழுத்தாளர்கள் வர்ணித்தார்கள். பரிதா

பத்திற்குரிய மனிதர்கள், ஒரு காலத்தில் மிகவும் பிற்பட்டவர்களாகவும், ஏழைகளாகவும், இருந்தபோதிலும் சந்தோஷமாயிருந்தார்களென்றும், இப்பொழுது ஒருவரையொருவர் கொல்வதற்கும், சொந்தக்காரர்களையும், அயலார்களையும், அடிமைப்படுத்துவதற்கும், செல்வத்தைக் குவிப்பதற்கும் தொடங்கி விட்டார்களென்றும் அவர்கள் எழுதினுர்கள். பண்டைக்கால கூட்டுத் தொகுதிகளின் பொருளுற்பத்தி சக்திகளில் ஏற்பட்ட புரட்சியே மெய்யான காரணமென்பதை நாம் முன்பே பார்த்து விட்டோம். புதிய உற்பத்தி சக்திகளுடன் புதிய உற்பத்தி உறவு ஏற்படுகிறது. மஹாபாரதம், புராணங்கள் முதலியவை தொகுத்துத் தரும் தீய குணங்களுக்குப் பின்னுல் புதிய உற்பத்தித் திறனின் சக்தியை நாம் பார்க்கிருேம்; தான் உபயோகிக்காத பொருளை விற்பதற்கும், தன்னிடமில்லாத அல்லது தான் உற்பத்தி செய்ய முடியாத பண்டங்களைப் பெறுவதற்கும் நடைபெறுகிற பண்டமாற்றின் சக்தியை நாம் பார்க்கிருேம்; தனி உடமையும் சொத்துச் சேகரிப்பும் பேராசை, சுயநலம் முதலிய ஆசைகளை உண்டாக்குவதையும் சமுதாய உழைப்பின் பலன்களை சுவீகரித்துக் கொள்வதற்காகவும் சொந்தத்திற்குச் செல்வத்தைச் சேகரிக்கும் வெறியை மேலும் தீவிரப்படுத்துவதற்காகவும் பலாத்காரத்தை உபயோகிப்பதையும், நாம் பார்க்கிருேம். நாடோடிகளைக் கொண்டிருந்த கம்யூன் ஒன்றுபட்டிருந்தது; இப்பொழுது அது சிதறுண்டு, விவசாயம், கைத்தொழில்கள், நகரங்கள் ஆகியவற்றைக் கொண்டதாகிறது. புதிய உணர்ச்சிகளை, புதிய நல்லொழுக்க தீயொழுக்கங்களைக் கொண்ட ஒரு புதிய சகாப்தம் தொடங்குகிறது. ஆள்வோரும், ஆளப்படுவோரும், சுரண்டுவோரும், சுரண்டப்படுவோரும், வசிக்கும் ஒரு புதிய உலகம் அது. தனி உடமை மீண்டும் ஒழிக்கப்படுகிற வரையில் மனிதன் இந்தத் தீயொழுக்கங்களிலிருந்து விடுதலை பெற முடியாது. உள்நாட்டு யுத்தத்திலிருந்து மட்டுமல்ல; எவ்வகைப்பட்ட யுத்தத்திலிருந்தும் விடுதலை பெற முடியாது. தனியுடமை மீண்டும் அகற்றப்படும் பொழுது, அது பழைய, பண்டைக்கால வறுமையை அடிப்படையாகக் கொண்டிருக்காது. அபரிமிதமான உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டிருக்கும். அதுவே எதிர்காலத்துக்கு உரிய கம்யூனிஸத்தின் நவீன உலகம்.

இந்த வர்க்கப் போராட்ட வளர்ச்சியைப் பரிசீலிப்பதற்கு முன்னால், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியுடன், தனியுடைமையும் அடிமை முறையும் தோன்றியவுடன், கம்யூனில் ஏற்பட்ட இதர முக்கியமான மாறுதல்களை நாம் பார்க்க வேண்டும். புதிய உடைமை உறவுகள், ஒவ்வொரு சாத்தியமான வழியிலும் கம்யூனின் ஸ்தாபனத்தை பாதித்தன. தனி உடைமை, பழைய இரத்தக் கலப்பு ஸ்தாபனத்தை அழித்தது. தாய் வழிச் சமூகமான கம்யூனை அது அழித்தது. கம்யூன் குடும்பம் ஜதைக் குடும்பமாக வளர்ந்ததை நாம் முன்பு பார்த்தோம். அந்த ஜதைக் குடும்பமும், தனி உடமையால் அழிக்கப்பட்டது. இரத்தக் கலப்பில்லாதவர்கள் கம்யூன் உறுப்பினர்களாயிருக்க முடியாது என்று இருந்த தடையை தனியுடமை ஒழித்தது; தனிப்பட்ட தந்தை வழிக் குடும்பம், தந்தை-யதிகாரம், பிதுரார்ச்சிதமாக சொத்தை யடையும் முறை, வாரிசு முறை, வமிச பரம்பரைப் பண்பு முதலிய விளைவுகள் தனியுடமையால் ஏற்பட்டன. புதிய தனிக் குடும்பங்களுக்கிடையேயும், புதிய வர்க்கங்களுக்கு இடையேயும் ஏற்பட்ட மோதல்கள் கண-கோத்திரத்தின் ஒற்றுமையைக் கரைத்தொழித்தன. அடிமைப்படுத்தப்பட்ட அயலார்களுடன் மாதர்களும் தமது சுதந்திரத்தை யிழந்தார்கள். சுதந்திரமாயிருந்தவனும், பெருமையாக வாழ்ந்தவனுமான ஆரிய வைசியனும் சீக்கிரத்தில் அடிமையானன், சந்தையின் விற்பனைப் பொருளானன்.

பெண் குலத்துக்கு அடிமைத்தளை

கால்நடைக் கூட்டங்களும், இதர புதிய ஐசுவரியங்களும் கிடைத்தவுடன், குடும்பத்தில் ஒரு புரட்சி ஏற்படுகிறது. வாழ்க்கையின் தேவைகளைப் பெறுவது எப்பொழுதுமே ஆடவனின் வேலையாக இருந்து வந்தது. அதற்கான சாதனங்களையும் (வேட்டையாடும் கருவிகள் முதலியன) அவனே உற்பத்தி செய்து தன்னுடையதாக வைத்திருந்தான். இந்த வாழ்க்கைத் தேவைகளைப் பெறுவதற்கான புதிய சாதனங்களாக கால் நடைகள் அமைந்தன. முதலில் இந்தப் பிராணிகளைப் பழக்குவதும், பிற்பாடு அவற்றை வளர்ப்பதும் ஆடவனின் வேலையாகயிருந்தது. எனவே கால்நடைகள் அவனுக்கு உரியதாயின. பண்டமாற்றில் கால்நடைகளுக்குப் பதிலாகப் பெறும் பண்டங்களும், அடிமைகளும் அவனுக்கே சொந்தமாயின. இப்பொழுது, வாழ்க்கைத் தேவைகளைச் சம்பாதிப்பதில் கிடைக்கும் உபரி முழுவதும் ஆடவனுடையதாயிற்று. அவற்றை அனுபவிப்பதில் பெண்ணுக்குப் பங்கிருந்தது. ஆனால் அவற்றின் உடைமையில் பெண்ணுக்குப் பங்கில்லை.

காட்டு மனிதராயிருந்த வீரனும், வேடனும் வீட்டில் பெண்ணுக்கடுத்த இரண்டாவது ஸ்தானத்தை வகிப்பதில் திருப்தியடைந்தனர். சாதுவான இடையனே செல்வச் செருக்கினால் உந்தப்பட்டு, முதல் ஸ்தானத்திற்குத் தாவினான். பெண் இரண்டாவது ஸ்தானத்திற்குத் தாழ்த்தப்பட்டாள். அவளால் புகார் செய்ய முடியவில்லை. குடும்பத்திற்குள் ஏற்பட்டிருந்த வேலைப் பிரிவினை முறை ஆண் பெண் சொத்துப் பிரிவினையை முறைப்படுத்தியது. அதே நெறி இப்பொழுதும் நீடித்தது. ஆனால் அது இப்பொழுது பழைய குடும்ப உறவுகளை தலை கீழாக மாற்றியது. குடும்பத்திற்கு வெளியேயிருந்த வேலைப் பிரிவினையின் மாறுதலே இதற்குக் காரணம். குடும்ப உழைப்பிலேயே பெண் ஈடுபட்டிருந்ததால் வீட்டில் அவள் ஆதிக்கம் செலுத்தமுடிந்தது.[1]

---

[1] ஸந்ர உழைப்பில், கம்யூன் இல்லத்தில் ஆதி மாதாவான அதிதி ஆதிக்கம் வகித்தாள்.

அதே காரணத்தினுல் இப்பொழுது, ஆடவன் ஆதிக்கம் வகித்தான்.

வாழ்க்கைத் தேவையைப் பெறும் ஆடவனுக்கு முன்னுல் பெண்ணின் வீட்டு உழைப்பு இப்பொழுது தன் முக்கியத்துவத்தை இழந்துவிட்டது, அவனுடைய உழைப்பு, அனைத்திற்கும் ஆதாரமாகயிருந்தது. அவளுடையதோ, முக்கியத்துவமில்லாத உபரியாகவேயிருந்தது.

" இப்பொழுது ஆடவன் வீட்டில் மெய்யான ஆதிக்கத்தை நிறுவி விட்டபடியால் அவனுடைய தனி ஆதிக்கத்திற்கு இருந்த கடைசித் தடை தகர்ந்து விட்டது. தாய்-உரிமையை ஒழிப்பதன் மூலமாகவும், தந்தை-உரிமையை அரங்கேற்றுவதன் மூலமாகவும், ஜதைத் திருமணம், ஏக ஸ்திரீ விவாகமாக படிப்படியாக மாறுவதன் மூலமாகவும், இந்த (ஆடவனின்) எதேச்சாதிகாரம் ஊர்ஜிதமாகி நீடித்தது. ஆனுல் இது கணத்தின் அமைப்பில் ஒரு உடைப்பை ஏற்படுத்தியது; தனிக் குடும்பம் ஒரு சக்தியாயிற்று; அதன் தோற்றம் கணத்திற்கு ஒரு ஆபத்தாயிற்று." (எங்கல்ஸ், 'குடும்பத்தின் தோற்றம்')

நான் அறிந்த வரையில், தாய்-உரிமையின் வீழ்ச்சியும், தந்தை அதிகாரத்தின் எழுச்சியும் வேத நூல்களில் வெளிப்படையாக விவரிக்கப்படவில்லை. ஆனுல் இந்த மாறுதலைக் குடும்பத்தின் வளர்ச்சியில் சுலபமாகப் பார்க்க முடியும். முதலாவதாக வர்ணங்கள், பண்டமாற்று, தனியுடமை ஆகியவற்றின் வளர்ச்சியுடன் ஆடவர்களாயுள்ள பிரஜாபதிகளும், கிருகபதிகளும் தமது சகோதரப் போர்களுடனும், குல யுத்தங்களுடனும் சரித்திரத்தின் முன்னணிக்கு வருவதை நாம் பார்க்கிருேம். அதிதி, திதி முதலியோரின் குமாரர்கள் நடத்திய கணப் போர்கள் சரித்திரத்தில் மறைந்து விடுகின்றன. இரண்டாவதாக கோத்திரத்தின் குமாரர்களுக்குப் பதிலாக தந்தைகளின் குமாரர்கள் ஏற்படுகிருர்கள். தாய்மார்களின் வழியே குமாரர்கள் அறியப்படும் முறை நீண்ட காலத்திற்கு சரித்திரத்தில் எஞ்சிமிஞ்சி யிருந்தபோதிலும், சமீப காலம் வரையில் கூட தென்னிந்தியாவில் நீடித்திருந்தபொழுதிலும் கூட, அப்பொழுதே அந்த முறை அருமையாகி விடுகிறது.

கணங்களின் வளர்ச்சியுடன் கூட அவை ஏராளமான எண்ணிக்கையில், பரந்த பிரதேசங்களில் சிதறி வசிப்பதுடன் கூட, தனியுடமையும் தந்தை வழி ஏற்பாடும் வளர்கின்றன. எனவே பொதுவான மூல மாதாவைப் பற்றிய பொதுவான பிணைப்பு சீக்கிரத்தில் சமுதாய வாழ்வில் செல்லுபடியாகாமல் போகிறது. அதற்கு பதிலாக தந்தை வழி பிரவரங்கள் ஏற்படுகின்றன. கூட்டு வாழ்வுக்கும் கோஷ்டி-கோத்திர மணவினைக்கும், முடிவு கட்டப்படும் பொழுது ஏக ஸ்திரீ விவாகத்தின் அடிப்படையில் உருவாகும் தனிக் குடும்பம் தன் சொந்த சொத்துக்கும் குழந்தைகளுக்கும் பிதுரார்ச்சிதத்திற்கும் பாத்யதை கொண்டாடுகிறது. இரத்தக் கலப்பு உறவு தகர்ந்து விட்டது, மறக்கப்பட்டு விட்டது. கண-கோத்திரத்தில் இரத்தக் கலப்பு உறவினர்களுடன் கூட புதிய அடிமைகள், புதிய வியாபாரிகள் முதலிய அயலார்கள் வருகிறார்கள். யுத்தம் தீவிரப்படும்பொழுது, கடந்த கால நினைவுக்கு, பண்டைக் காலத்தில் தமது பொதுவான முன்னோர்கள் இரத்தக் கலப்பு உறவு கொண்டிருந்த நினைவுக்கு, விசுவாசம் செலுத்தும் அடிப்படையில் கணங்கள் ஒன்று சேர்ந்து குலங்களாக அமைகின்றன. இவ்வாறு தனித்தனியாக இருந்த ஆரிய கண கோத்திரங்கள், இரத்தக் கலப்பு உறவினரின் அமைப்புக்களாக பிரவரங்களாக உருப் பெறுகின்றன. முன்னிலிருந்த கண கோத்திரங்கள் ஒரு பொதுவான மாதாவின் வழியில் வந்தவையாகக் கருதப்பட்டன; பிரவரங்களோ ஒரு பொதுவான பிதாவின் வழியில் வந்தவையாகக் கருதப்பட்டன. பிரவரங்களின் ஏற்பாட்டுக்கு ஒன்பது ஆண் பிரஜாபதிகள் தலைமை தாங்குகின்றனர். கோத்திரங்கள் பரவலாக அமைந்து நீண்ட காலமான பிறகே, பிரவரங்களின் ஏற்பாடு தோன்றுகிறதென்பது தெளிவு. தாய் வழித் தோற்றத்தை அடிப்டையாகக் கொள்ளாமல், இரத்தக் கலப்பு உறவினர்களாகவுள்ள குலங்களை ஐக்கியப்படுத்துவதற்கான செயற்கை ஏற்பாடாகவே இந்தப் பொதுவான தந்தை வழி உறவு அமைந்திருக்கிறது. எனவே தான், ஒரே கோத்திரத்திற்குள் திருமணம் செய்வதற்கு தடை யிருந்த பொழுதிலும் ஒரே பிரவரத்திற்குள் மணம் புரிவதற்கு கண்டிப்பான தடை யிருக்கவில்லை. கோத்திரத்தில் தடை யிருந்த மாதிரி பிரவரத்திலும் செய்ய தந்தை வழிப்

பிரவரங்கள் எண்ணின என்பதில் ஐயமில்லை. ஆனால் உண்மையான கோஷ்டித் திருமணத்தின் வாயிலாக ஏற்பட்ட உண்மையான தாய் வழி இரத்த சம்பந்த உறவை, சகோத்திரத் திருமணத் தடை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் பிரவரத்திற்குள் மணவினை கூடாதென்பதானது ஆதாரமில்லாததாகயிருந்தது; கடந்த கால மெய்ப் பொருளின் நினைவிற்கு தலைவணங்குவதாக மட்டுமே யிருந்தது. அந்தக் கடந்த காலத்தின் உடைகளை மட்டும் உடுத்திக் கொண்டு புதிய சமுதாயத்தில் கௌரவம் பெற முயற்சிப்பதாகவே யிருந்தது. ஆக பிரவரங்களின் ஏற்பாடு போதுமான முன்னோரை படைத்திருந்ததற்கு பாத்யதை கொண்டாடும் முறையாக யிருந்தது; ஏக ஸ்திரீ விவாகம் தந்தை வழி ஏற்பாடு, தனியுடைமை ஆகியவற்றின் சூழ்நிலையில் செத்துச் சாம்பலாகி விட்ட கம்யூனின் சித்தாந்தத்தை உயர்த்திப் பிடிக்கும் முயற்சியாகவே யிருந்தது.

அன்னியர்கள் ஆரியர் சமூகத்துடன் தொடர்பு கொண்டு, ஆரிய சமூகத்தில் பிரவேசிக்கும் பொழுது, கோத்திர பிரவர ஸ்தாபனம் இரத்த சம்பந்த உறவை முறைப்படுத்தியது; இரத்த சம்பந்த குலங்களை மற்றவர்களிடமிருந்து பாகுபடுத்தியது; ஆரியர்களை ஆரியர்களல்லாதவர்களிடமிருந்து பாகுபடுத்தியது; வர்ணங்கள், வர்க்கங்கள், அரசு ஆகியவற்றைக் கொண்ட புதிய ஸ்தாபனத்தில், புதிய சமுதாயத்தில் உறுப்பினர்கள் அனைவரும் இரத்தக் கலப்பு உறவினர்களாகயில்லை; ஆரிய எழுத்தாளர் குறிப்பிட்டதைப் போல யஜன உரிமையும் யாஜன உரிமையும் எல்லோரும் பெற்றிருக்கவில்லை; அந்த நிலையில் கண அடிப்படையில் சமூக-சமய விவகாரங்களை நிர்வகிப்பதற்கான புதிய ஸ்தாபனமாகவும் கோத்திர-பிரவர ஏற்பாடு விளங்கியது. உருப்பெற்றுக் கொண்டிருந்த புதிய சமுதாயத்தின் உள்ளமைப்பு, இராஜ்யம் என்றும் ராஷ்டிரம் என்றும் அழைக்கப்பட்ட புதிய அமைப்பின் எல்லைகளுக்குள் குடிகளாக வாழ்ந்தவர்களைக் கொண்டதாக யிருந்தது; பழைய கணத்தின் இரத்தசம்பந்த உறவை அடிப்படையாகக் கொண்டதாயில்லை. இப்பொழுது பொருளாதார உறவுகளும், இரத்த சம்பந்த உறவுகளும் வெவ்வேருகப் பிரிந்தன. சூத்திரர்களுக்கும் அன்னியர்களுக்கும் கோத்திர-பிரவரத்தில் இடமில்லை; ஆனால் ராஜ்யத்தில் இடமிருந்தது.

ஹிந்து ஆரியர்களின் பிரவர ஏற்பாடு இந்திய அறிஞர்களுக்கு ஒரு தலைவலியாக யிருந்து வந்திருக்கிறது. இத்தகைய ஏற்பாடு கிரேக்கர்கள் மத்தியில் இருந்ததைக் கண்டபொழுது அது ஐரோப்பிய அறிஞர்களுக்கும் ஒரு தலைவலியாகத் தான் இருந்தது. கோத்திர-பிரவர முறை இன்றும் நீடிக்கிறது; பொதுவான மூதாதையர்களின் வழியில் வந்திருப்பதாகப் பறைசாற்றுகிறது. ஆனால் கோத்திர கோஷ்டித் திருமணம், கண கம்யூன் ஆகியவற்றின் தொடர் விளைவாக ஏற்பட்டிருக்கும் பொதுவான பூர்வீகத்தை நமது அறிஞர்கள் மறுக்கிறார்கள். எனவே கோத்திர பிரவர முறை ஒரு அர்த்தமற்ற கற்பனை என்ற முடிவிற்கே அவர்களால் வர முடிகிறது.

இவ்வாறு முடிவு செய்கிறவர்களுக்குப் பதிலளிப்பதற்காக மார்கன் தன்னுடைய விமர்சகர்களுக்கு அளித்த பதிலை மார்க்ஸ் திரட்டிக் கொடுப்பதிலிருந்து மேற்கோள் தருவதே சிறந்தது.

"ஆரம்பக் காலக் கணத்துடன் இசைந்திருந்த இரத்தக் கலப்பு உறவு முறை, தன் சகல உறுப்பினர்களுக்கும் இடையே இருந்த பரஸ்பர உறவுகள் சம்பந்தமான அறிவைப் பாதுகாத்து வந்தது. ஒரு காலத்தில் இதர ஜனங்களைப் போலவே, கிரேக்கர்களும் அத்தகைய கணங்களில் வாழ்ந்தனர்.[1] அந்தப் பரஸ்பர உறவுகள் சம்பந்தமான அறிவு அவர்களுக்குத் தீர்மானமான முக்கியத்துவம் வாய்ந்ததாக விருந்தது; அதை அவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்தே நடைமுறை வாயிலாகக் கற்றார்கள்.[2] ஏக ஸ்திரீ விவாகக் குடும்பம் ஏற்பட்டவுடன், இந்த அறிவை மறந்தனர். கணத்தின் பெயர்,[3] ஒரு வம்ச பரம்பரையைப் படைத்தது; அதற்கு முன் தனிக் குடும்பத்தின் வம்ச பரம்பரை முக்கியமற்றதாயிற்று. இப்பொழுது, அந்தப் பெயரை உடையவர்கள்

---

1 ஹிந்து ஆரியர்களின் கோத்திரம் அத்தகையதே.

2 தினசரி செய்யும் சந்தியா வந்தனத்தின் மூலம் ஹிந்துக்கள் இதைக் கற்றனர்.

3 கோத்திரம் அல்லது பிரவரத்தின் பெயர்; யக்ஞோப வீதம்] என்ற அர்த்தபுஷ்டியுள்ள சொல்லால் குறிக்கப்படும் பூணூல் சடங்கில் இந்தப் பெயர் ஹிந்து சிறுவனுக்குக் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

பொதுவான வம்சாவளியைச் சேர்ந்தவர்களென்பதைப் பாது காப்பதே அந்தப் பெயரின் கடமையாயிற்று; ஆனால் கணத்தின் வம்சாவளி நீண்ட காலத்துக்கு முன்பே தொடங்கியதாக விருப் பதால், அதன் உறுப்பினர்களால் தமக்கிடையே உள்ள யதார்த்த உறவுகளை மெய்ப்பிக்க முடியவில்லை; சமீப கால மூதாதையர் களின் வழித்தோன்றல்களைப் பொறுத்தவரையில் மட்டுமே, அந் தக் குறிப்பிட்ட வரம்புக்குள்தான், அவர்கள் தமக்கிடையேயுள்ள உண்மையான உறவுகளை நிரூபிக்கமுடிந்தது. கணத்தின் பெயரே பொதுவான வம்சாவளிக்குச் சான்ருக விருந்தது.........எப்படி யென்ருல், குறிப்பாக ஏகஸ்திரீ விவாகமுறை ஏற்பட்டபின், இரத்தக் கலப்பு உறவுகள் பழைய காலத்திலிருந்து தொடர்ந்து வந்திருப்பதாகக் கருதப்பட்டதால், கடந்த காலத்தின் உண்மை, புராணக் கற்பனைகளில் பிரதிபலித்த முறையில் தோன்றுவதால், கற்பிதமான வம்சாவளியே கணங்களை உண்டாக்கியதாக நமது அரைவேக்காட்டு அறிஞர்கள் முடிவுசெய்தார்கள், முடிவுசெய் கிருர்கள்."'[1] (ஏங்கல்ஸ், குடும்பத்தின் தோற்றம்.)

தந்தை - உரிமை, தனிஉடமை, பிதுரார்ச்சித உடமையின் அனுபோகம் ஆகியவை, ஒருத்தி ஒருவனையே மணக்கவேண்டு மென்று வற்புறுத்துகின்றன; அப்பொழுதே, மகனின் தந்தை யாரென்பதை உறுதிபடுத்தமுடியும். நாம் முன்பே பார்த்தமாதிரி, ஏக ஸ்திரீ விவாகமும் அத்துடன் பெண்ணின் பதி விசுவாசமும் கற்பும், தந்தை சொத்தை மகன் அடைவதற்கு வசதிசெய்வதற் காக ஏற்பட்டது; ஆனுல் அது ஆடவனின் கட்டளையால் அல்ல, பெண்ணின் உத்திரவாலேயே ஏற்பட்டது. ஆண்கள் கோஷ்டித்

1 "ஹிந்துக்களின் வேற்றின மணவினை" என்ற தலைப்பில் சுதந்திகர் எழுதிய நூலிலும் மகாராஷ்டிர ஞானகோஷத்தின் நூலான லேதவித்யாவில் கேட்கார் பிரவரத்தைப்பற்றி விமர்சனத்திருப்பதிலும், நமது அரைவேக் காட்டு அறிஞர்கள் எப்படி வாதிக்கிருர்களென்பதை அறியலாம். ராஜ் வாதேமட்டுமே மார்கனுக்குக் கிட்டும் தூரத்துக்கு வருகிருர்.

மணவினை, கோத்திர-பிரவரம், பிதுரார்ச்சித சொத்துமீது உரிமை ஆகி யவை சம்பந்தமாக, ஹிந்து சட்டத்தை முறைப்படுத்தும் கமிட்டிக்கு செல் வம் படைத்த ஹிந்து சகோதரிகள் அனுப்பியுள்ள யாதாஸ்துகள் படிப்ப தற்கு ருசிகரமானது. இந்தப் பிரச்னை இன்றும் சூடுபிடித்து இருப்பதை அவை காட்டுகின்றன.

திருமணத்தின் பாத்தியதைகளேயும் பழக்கங்களேயும் அப்பொழுது கைவிடத் தயாராயில்லே; இப்பொழுதும் கைவிடத் தயாராயில்லே. அந்த பாத்தியதைகளும் பழக்கங்களும் இன்றுகூட, பல ஸ்திரீ விவாகத்தில் பிரதிபலிக்கின்றன; தேவதாஸி, வைப்பாட்டி முறைகளில் பிரதிபலிக்கிறது; இறுதியாக விபச்சாரத்திலும், பிறர் மனேவிகளேக் கலப்பதிலும் பிரதிபலிக்கிறது. சமுதாயம் வளர்ச்சியடைந்தபொழுது, முன்னுல் சிறியவையாக விருந்த இரத்தக் கலப்புக் கோத்திரங்கள் தொலேதூரப் பிரதேசங்களில் சிதறியபொழுது, தனிக் குடும்பத்தை அலகாகக்கொண்ட புதிய பொருளாதாரம் வளர்ந்தபொழுது, ஒரு கோத்திரத்தின் சகல ஆடவர்களும் அவர்களுக்கு முறைப்படி மணமாகவேண்டிய கோத்திரத்தின் பெண்கள்மீது பழைய கண உரிமைகளேக் கொண்டாடும் முறை, அந்தப் பெண்கள் எங்கிருந்தாலும் அவர்கள்மீது பாத்தியதை கொண்டாடும்முறை, பெண்களுக்கு அருவருப்பான சுமையாக விருந்தது. சிறிய கோத்திரக் குடும்பத்தில், சிறிய ஆச்ரம விராஜாவில், ஒவ்வொருவரும் மற்றவர்களே அறிந்திருந்தனர், தேன் அடையில் உணர்வில்லாத தேனீக்கள் கூடுவதுமாதிரி கூடிக்கலந்தபோதிலும், அவர்கள் கூட்டுஉழைப்பின்மூலம் ஒருவரோடு ஒருவர் ஆசாபாசம் கொண்டிருந்தனர். ஆனுல் இப்பொழுது, முன்பின் அறியாத, உறவுகொண்டிராத கண உறுப்பினர், தொலேதூரப் பிரதேசத்திலிருந்துவந்து ஒரு பெண்ணின் மீது உரிமை கொண்டாடுவதென்ருல், அது அவளுக்கு ஒரு தண்டனேயாக விருந்தது. ஆதிக்காலத்தில் விருந்திடுவோன் தன் மனேவியை விருந்தாளிக்குக் கொடுக்கும் வழக்கம் இந்த கோஷ்டி திருமணத்திலிருந்தே தோன்றியது காலாவதியாகிவிட்ட கூட்டுத் தொகுதியைச் சேர்ந்தவரென்ற முறையில் ஒரு புதிய மனிதர் இந்த உரிமை கொண்டாடுவதிலிருந்து விடுதலே பெறுவதற்காக அவள் ஏகஸ்திரீ விவாகத்தை வற்புறுத்திஞள்; புதிய உடமை உறவுகளின் தேவைகளுக்கும் அது உகந்ததாயிருந்தது. ஆக, ஒருத்தி ஒருவனேயே மணந்து வாழவேண்டுமென்ற ஒருதலேப் பட்சமான் ஏகஸ்திரீ விவாகமுறை, தந்தைவழி ஏற்பாட்டின் ஆடவனுடைய தனிஉடமையின் அடிப்படையில் அமைந்து பெண்களே அடிமைப் படுத்தியபொழுதே, இணைப்பு முறிந்து, இறந்துகொண்

டிருந்த கணகோத்திரங்களைச் சேர்ந்த அன்னியர்களின் பாத்திய தைகளிலிருந்து பெண்களுக்கு விடுதலை அளிக்கவும் செய்தது.

ஆனால், பணக்காரர்களின் தனி உடமை, கோடிக்கணக்கான ஆண், பெண் மக்களின் வாழ்வின்மீது ஆதிக்கம் செலுத்தி, அந்த வாழ்வை அழித்துக்கொண்டிருக்கும் நிலையில், வர்க்க சமூகத்தில் ஏக ஸ்திரீ விவாகம், பெண்களுக்கு ஒரு கேலிக்கூத்தாகவே முடிந்தது. கம்யூன் வீழ்ச்சியடைந்து, அடிமைமுறையும் வர்க்க ஆட்சியும் தோன்றியதிலிருந்து, விபசாரமும் கற்பழித்தலும் சமுதாயத்தை அரித்துக்கொண்டிருக்கின்றன. பொருளாதாரத்துறையில் பெண்ணினம் தோல்வியடைந்ததுடன், பெண்களின் உடலையும் ஒழுக்கத்தையும் ஆடவர்களும் தனிஉடமையும் அடிமைப் படுத்தினார்கள்.

"தாய் உரிமையின் வீழ்ச்சி, பெண்ணினத்துக்கு ஏற்பட்ட உலக-சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்த தோல்வியாகும். ஆடவன் வீட்டுக்கும் எஜமானனான்; பெண் சிறுமைப்பட்டு, அடிமையாகத் தாழ்த்தப்பட்டாள். அவள் அவனுடைய சிற்றின்ப இச்சைக்கு அடிமையானாள்; குழந்தைகளை உற்பத்திசெய்யும் வெறுங் கருவியாக ஆனாள்." (எங்கல்ஸ்)

ஏகஸ்திரீ விவாகத்தின் விசுவாசம், உணர்ச்சிகள், கற்பு, தனக்கே உரித்தான "சுய பண்பை"ப் படைத்தவளாகத் தன்னைக் கருதி நடத்தவேண்டுமென்ற பெண்ணின் கோரிக்கை ஆகியவற்றைவிட உயர்ந்ததாக, தந்தையின் சொத்தை அடைவதற்கான மகன்அவசியமென்ற கொள்கையை தனிஉடமையின் "புனிதமான நீதி வள்ளல்கள்" வற்புறுத்தினார்கள்; இதன் உணர்ச்சியற்ற தன்மையை, அயலான்மூலம் ஒருத்தி பெறும் குழந்தைக்கு 'உரிமைக்காரர்' யார் என்பதைப்பற்றிய விவாதத்தில் காணலாம்.

மகாபாரத்தின் அநுசாஸன பருவத்தில் யுதிஷ்டிரர் (தருமபுத்திரர்) மிகுந்த அக்கரையுடன் கேட்கிறார்:—

"ஒரு மகன் எந்த நிலத்தில் பிறந்தானோ, அந்த நிலத்தைக் கொண்டவருக்கு உரியவனென்று சிலர் கூறுகிறார்கள். மறுபுறத்தில், ஒரு மகன் எவருடைய விதையிலிருந்து பிறந்தானோ, அவ

ருக்கு உரியவனென்று சிலர் சொல்கிறார்கள். இந்த இருவகைக் குமாரர்களும் சமஅந்தஸ்து உடையவர்களா? மகன் யாருக்கு உரியவன்?"

அடிமைகளை உடைய விவசாயி, தன் மனைவியை நிலமாகவும் மகனை அதன் பலனாகவும் குறிப்பிடுவதை இதில் தெளிவாகக் காணலாம். பயிர் எவருக்குச் சொந்தம்? வாடகைக்கு எடுத்து, விதையைக் கொடுத்து சாகுபடி செய்கிறவருக்குச் சொந்தமா? அல்லது சாகுபடிக்காரர் யாராயிருந்தாலும், நிலச்சுவான்தாருக்குத்தான் சொந்தமா? பிற்காலத்து நிலப் பிரபுத்துவ அடிமை-உடமையாளர்களைவிட அதிகமாக, யாகக் கம்யூனில் இருந்தவர்கள், மகப்பேற்றினை நாடினார்களென்றாலும், பெண்ணைப்பற்றிய இத்தகைய கருத்தும் சித்தாந்தமும் யாகக் கம்யூனில் ஒருபொழுதும் ஏற்பட்டிருக்கமுடியாது. வேத நூலாசிரியர், கம்யூனின் பெண்மணியை 'ஜனி' என்று ஒளிவுமறைவில்லாமல் குறிப்பிட்டார். 'ஜனி' என்றால் 'குழந்தைகளைப் பெற்றெடுப்பவர், என்று பொருள்; ஆனால் பிறந்த குழந்தைகள் அனைவரும் அவளுடையவைதான்; அவர்கள் 'ஜன' எனப்பட்டனர். அவன் யாருடைய மகன்? 'நிலத்துடைய' மகனா, 'விதை' யுடைய மகனா? என்று கேட்கவேண்டுமென்று அவருக்குத் தோன்றவேயில்லை; ஏனெனில் மற்றவருக்கு பாத்தியதை இல்லாதவகையில், தன்னுடையதென்று பிதுரார்ச்சிதமாக விட்டு வைக்கக்கூடிய சொத்து அவனிடம் இல்லை. தந்தைவழி ஆட்சி அப்பொழுது ஜனிக்கவில்லை. பெண்ணை குழந்தைகளைப் பெறுவதற்கான சாதனமாகமட்டும் கருதி, உயிரற்ற பண்டங்களின் நிலைக்குத் தாழ்த்தும் சித்தாந்தம், அடிமைமுறையின் காலகட்டத்துக்கு உரியது; அப்பொழுது, எஜமானனுக்குச் செல்வத்தை உற்பத்திசெய்வதற்காக, ஆடவன் விற்பனை-வாங்கலுக்கு உட்படுத்தப்பட்டான்; அந்தச் செல்வத்தை அடைவதற்கான மகனை உற்பத்திசெய்வதற்காகப் பெண்ணும் விற்கப்பட்டாள், வாங்கப்பட்டாள்.

"எவருடைய விதையிலிருந்து தோன்றினானோ, அவருக்கே அந்த மகன் உரியவன்" என்ற பதில், யுதிஷ்டிரரின் கேள்விக்குக்

கிடைத்தது. தந்தைவழி உரிமைமட்டுமே செல்லுபடியாகக்கூடிய தென்று பறைசாற்றப்படுகிறது; மேலும், பீஷ்மர் கூறுகிருர் :—

"ஆனல், விதைக்கு உரியவர், அதிலிருந்து பிறந்த மகனை நிராகரித்தால், அந்த மகன், எவருடைய மனைவிக்குப் பிறந்தானே, அவருக்கு உரியவனுகிருன். அத்யுநன் எனப்படும் மகனுக்கும் இந்த விதியே பொருந்தும். அவன், எவருடைய விதையிலிருந்து பிறந்தானே அவருக்கு உரியவன். ஆனல், விதைக்கு உரியவர் அவனைக் கைவிட்டுவிட்டால், அவன் அவனுடைய அன்னையின் கணவனுக்கு மகனுகிருன்; தர்மம் பறைசாற்றுவது இதுவே என்பதைத் தெரிந்துகொள்."

ஹிந்து சனதனம் எந்த மனுவின்மீது ஆணையிட்டுப் பேசுகிறதோ, அந்த மனுவும் இதையே குறிப்பிடுகிருர்.

கூட்டுவாழ்வும் ஜதைக்குடும்பமும் இருந்தகாலத்தில், குழந்தைகள் கணத்தாய்க்கு உரியவையாக விருந்தன; தந்தை தாயைவிட்டுப் பிரியும்பொழுது, குழந்தை தாயுடன் இருந்தது; அர்ஜுனன், பீமன், முதலியோரின் பிரபலமான வாழ்க்கைகளில் இவ்வாறு நடந்ததை நாம் பார்த்தோம். ஆனல் அடிமை முறையின் சகாப்தத்தில், பெண்ணுக்கு உடையவனுகிவிட்ட கணவன், பெண்ணை கால்நடைமாதிரி வாங்கினன், விற்ருன், வாடகைக்குக் கொடுத்தான், கடன் கொடுத்தான்; எதற்காக? சொத்தை அடைவதற்காக 'பரிசுத்தமான' குமாரர்களைப் பெறுவதற்காகவும், வேலைசெய்து சொத்தை உற்பத்திசெய்வதற்கான அடிமைக் குமாரர்களை அடிமைப்பெண்கள்மூலம் பெறுவதற்காகவும் அவன் இவ்வாறு செய்தான்.

மனைவிமட்டும் இவ்வாறு நடத்தப்படவில்லை; குமாரிகளும் மற்றவர்களும்கூட இவ்வாறுதான் நடத்தப்பட்டனர். மகாபாரதத்தின் உத்தியோக பருவத்தில் ரிஷி காலவர் என்பவரைப்பற்றிய நீண்ட கதையில், ஒரு பெண்ணைத் தொடர்ச்சியாக வாடகைக்கும் விடும் நிகழ்ச்சி விவரிக்கப்படுகிறது. காலவர், தான், தன் குருவிடம் பெற்ற பயிற்சிக்காக, குருதட்சிணை கொடுக்க விரும்புகிருர்; அவர் ஏழை. எனவே யயாதியின் உதவியை நாடுகிருர்; யயாதி தன் மக

ளான மாதவியை அவரிடம் கடன் கொடுக்கிறார். காலவர் அந்தப் பெண்ணை, ஒருவர்பின் ஒருவராக மூன்று அரசர்களுக்குக் கொடுத்து, இருநூறு குதிரைகளை விலையாகப் பெறுகிறார். அந்த அரசர்கள் அவளுடன் கூடி இன்புறுகின்றனர்; ஒவ்வொருவரும் அவளுக்கு ஒரு மகனை அளித்துவிட்டு, அவளை திருப்பிக்கொடுத்து விடுகின்றனர். அவளையும் அவள்மூலம் கிடைத்த குதிரைகளை யும் செல்வத்தையும் காலவர் தன் குருவுக்கு குருதட்சிணையாகக் கொடுத்துவிடுகிறார். குருவான விசுவாமித்திரரும் அவளுக்கு ஒரு மகனை அளித்துவிட்டு, அவளை காலவரிடம் திருப்பிக் கொடுக் கிறார். அவர் அவளை யயாதியிடம் அனுப்பிவிடுகிறார். இத் துடன் அந்த அப்பாவிப் பெண்ணின் விஷப்பரீட்சை முடிய வில்லை. இந்த அடிமைத்தனங்களிலிருந்து திரும்பியவுடன், அவள் அரசர்களும் செல்வந்தர்களும், வாலிபர்களும் மற்றவர் களும் கூடிய சுயம்வரத்தில் தன் கணவனை தன் இஷ்டப்படி பொறுக்கிக்கொள்ளவேண்டுமென்று யயாதி கூறுகிறார். ஆனால் இதற்குள், மாதவிக்கு, வாழ்க்கையில், மனிதனுக்கு அடிமையாக விருப்பதில் வெறுப்பு வளர்ந்துவிடுகிறது. எனவே, அவள் எல்லோருக்கும் தலைவணங்கிவிட்டு, காட்டுக்குப் போய்விடுகிறாள்; உபவாசமிருந்து, பிரார்த்தனைசெய்து காலம்தள்ளுவதற்காக, வர்க்க சமூகத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்காக, அவள் காட்டுக்குப் போகிறாள்.

தந்தைவழிச் சமூகத்தின் குடும்பத் தலைவனை, அடிமைகளை உடைய கணவனின் உரிமைகள், மனைவி, மகள், மகன், மற்றவர் கள் ஆகியோரை வாடகைக்கு விடுவதில் அடங்கிவிடவில்லை. அவர்களுடைய உயிர்களே அவன் கைப்பிடிக்குள் இருந்தன; அவன் இஷ்டப்பட்டால் அவர்களைச் சாகடிக்கமுடியும். இவ்வாறு பெண்ணை நடத்தும்முறை, கம்யூனின் கோத்திரத் திருமண நாட்களின் சுதந்திரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகவிருந் தது. அப்பொழுது பெண் நன்மதிப்புக்குப் பாத்திரமாயிருந்தாள். உயிர் அளிப்பவளான அன்னை புனிதமானவளாகக் கருதப்பட் டாள்; அன்னையைக் கொல்வது மிகப்பெரிய பாபமாக விருந்தது. அந்தக் காலத்தின் சித்தாந்தம் அடிமைமுறை யின் காலத்திலும் தொடர்ந்திருந்து, புதிய அடிமை-உடமை

வர்க்கத்தின் கோரிக்கைகளுடன் மோதியது; அடிமைகளுடன் மனைவி, மகன் முதலியோரையும் தன் 'சொத்தாக'க் கருதி, அவர்கள்மீது முழு பாத்தியதை கொண்டாடும் கோரிக்கையுடன் மோதியது.

பெண் தன் உரிமைக்காகப் போராடினாள்; இங்கும் அங்கும் கம்யூனின் வழக்கங்கள் தொடர்ந்திருப்பதற்காகப் பாடுபட்டன. ஆனால் அவையெல்லாம் அடிமைகளை உடமையாகக் கொண்ட மனிதனால் மிகக்கொடிய பலாத்காரத்தால் நசுக்கப்பட்டன. சுதர்சனன்-ஒகாவதி, கௌதமன்-கௌதமி, ஜமதக்னி-ரேணுகா ஆகியோரின் மூன்று கிளைக் கதைகள் இதை விளக்கமாக விவரிக்கின்றன. கோத்திர-கம்யூன் காலத்து பழக்கங்களும் சித்தாந்தமும் அடிமை முறைக் காலத்தில் எப்படி மாறுதல் அடைந்தன என்பதையும் அவை நமக்கு எடுத்துரைக்கின்றன. தன்மனைவியான ஒகாவதியை ஆசிரமத்தில் விட்டுவிட்டு, சுதர்சன ரிஷி வெளியே சென்றிருந்தபொழுது, ஒரு பிராமண விருந்தாளி வந்தார். அவருக்கு விருந்தளிக்கப்பட்டது; அத்துடன், கண-கோத்திரப் பழக்கப்படி விருந்தாளி இச்சைப்பட்டபொழுது, ஓகாவதி, அவருடன் கூடினாள். சுதர்சன் திரும்பி வந்தவுடன் இதைப்பற்றி அறிந்து, விருந்தாளிக்கு ஆற்றவேண்டிய கடமைகளைத் தன் மனைவி செவ்வனே செய்திருப்பதாக அகமகிழ்ந்தார். கணங்கள் வெகு தூரத்திற்குப் பரவிய காலத்தில், கம்யூன் தகர்ந்துகொண்டிருந்த காலத்தில், அதன் விளைவாக, பழைய கோஷ்டித் திருமண உரிமையிடம் பெண்ணுக்கு வெறுப்பு ஏற்பட்டிருந்த காலத்தில், தனிக் குடித்தனம் அமைத்துக்கொண்டு, தன் கணவனுடன் பெண் ஜதைக் குடும்பமாக வாழும் காலத்தில், இந்தச் சம்பவம் நிகழ்ந்திருக்கவேண்டும். அதனால்தான், விருந்தாளிக்குச் செய்யவேண்டிய சகல கடமைகளையும் தன் மனைவி செய்திருப்பாளோ இல்லையோ என்று சுதர்சன் அச்சப்பட்டார். தன் 'அச்சத்துக்கு' ஆதாரமில்லை யென்பதையும் ஓகாவதி 'கலகம்' செய்யவில்லை என்பதையும் கண்டு அவர் உவகை கொண்டார்.

அடுத்த கதையில், காலம் மாறிவிட்டது. கௌதமர் இல்லாதபொழுது, இந்திரன் அவருடைய இல்லத்துக்கு வருகிறார்;

கௌதமருடைய மனைவியுடன் கலவி புரிகிறார். இதை அறிந்த கௌதமர் கோபங்கொள்கிறார்; அவளை சிரச்சேதம் செய்யும்படி, தன் மகன், சிரகாரிக்கு உத்திரவிட்டுவிட்டுப் போய்விடுகிறார். மகனுக்கு குழப்பமாயிருக்கிறது. பழைய வழக்கத்தையும், ஒழுக்க நீதியையும் அவன் அறிவான்; அவற்றின்படி, அவனுடைய தாயார் குற்றவாளியல்ல; அவளுடைய மகனான அவன் அவளைக் கொல்ல முடியாது; அவ்வாறு கொல்வது மிகக்கொடிய பாப மாகும். ஆனால் புதிய காலகட்டம், புதிய வர்க்க உறவுகள், புதிய குடும்ப, வர்க்க தர்மம் ஆகியவற்றின்படி, அவன் தந்தை யின் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும்.[1] அவன் தாமதிக்கிறான், சிந்திக்கிறான். கௌதமர் ஆத்திரம் தணிந்து திரும்புகிறார்;

1 இதில் வாதப் பிரதிவாத விஷயங்கள் மிகவும் ருசிகரமாகவுள்ளன.

தந்தைக்குக் கீழ்ப்படிவது பரதர்மம் (அன்னிய தர்மம்; திணிக்கப்பட்ட தர்மம்); தாயைப் பாதுகாப்பது இயல்பான சுயதர்மம். ஆனால் அடிமை முறைக் காலத்தில், மகன் சுதந்திரத்தை இழந்துவிட்டான். எனவே இயல் பான கண தர்மத்தைப் பின்பற்றி, தந்தையை மீறி, தாய்பக்கம் நிற்கும் உரிமை அவனுக்கு இப்பொழுது கிடையாது. தாயைக் கொல்வது, அவ னுடைய பழைய இயற்கையான உணர்ச்சிகளை மீறுவதாகும்; எனவே அவனுக்குத் துயரம் ஏற்படும். ஆனால் தந்தையை மீறியபின், அவன் சமூகத்தில் தன் பெருமையை எப்படிப் பாதுகாக்க முடியும்? தாய் கடந்த காலத்துக்கு, இறந்துகொண்டிருந்த காலத்துக்கு உரியவள்; தந்தை எதிர் காலத்துக்கு உரியவர்; வளர்ச்சியடைந்து கொண்டிருப்பவர்; ஆட்சி புரிகிறவர்.

புதிய அமைப்பில் எதன்மூலம் அதிக நாசம் ஏற்படும்? தாயைக் கொலை செய்வதின் மதிப்பு, தந்தையின் வார்த்தையை மீறுவதுடன் மாத் திரம் எடைபோடப்படுகிறது. அடிமைகளை உடமையாகக் கொண்டவனின் பலாத்காரமான சர்வாதிகாரத்தை இதில் அம்மணமாகக் காணலாம்.

பழைய நாட்கள் நினைவிலிருக்கின்றனவா? திர்க்கதமஸுக்கு அகந்தை ஏற்பட்டு, அவரால் தொல்லை விளைந்தபொழுது, அவருடைய பிள்ளைகள் அன்னையின் உத்திரவுப்படி அவரை கம்யூனிலிருந்து வெளியேற்றினர். சுவேதகேது, தன் அன்னை அவளுடைய கோத்திர நண்பனுடன் செல் வதைக் கண்டித்தபொழுது, அவனுடைய துடுக்குத்தனமும் அடக்கப் பட்டது. கம்யூன் இறந்தவுடன், சுதந்தரமான மகிழ்ச்சி நிரம்பிய தாய்மை யும் இறந்துவிட்டது. கணவன் அவளை அடிமைப்படுத்தினான்; அவன் சொற்படி அவனுடைய குமாரர்கள் தாயைக் கொன்றனர். தெய்வீக தர்ம மும் முறையும் பல நூற்றாண்டுகளுக்கு ஆணுக்கு ஆதரவாகவிருந்தன; பெண்ணை நிராயுதபாணியாக்கின.

உள்ள நிலைமையைப் பார்த்து சமாதான மடைகிறார். இங்கு தாயும் மகனும் வெற்றி பெறுகிறார்கள்; அவர்களுக்கு உரிமை இருப்பதால் அல்ல; புதிய தர்மம் இன்னும் சர்வசக்தனாக ஆகாம லிருப்பதால் வெற்றிபெறுகிறார்கள்.

மூன்றாவது கதையில், ஜமதக்கினி, தன் மனைவியான ரேணுகா, சித்திரரதா கந்தர்வன்மீது ஒரு ஆசைப் பார்வை செலுத்தியதைக் கண்டார். அவளைக் கொல்லும்படி தன் மகனை பரசுராமனிடம் கூறுகிறார். பரசுராமன், அங்கேயே அப்பொழுதே தாயைக் கொல்கிறார். இங்கு, மனைவியின் உயிர்மீது தந்தை அதிகாரச் சமூகத்தின் கணவனுக்கு உள்ள உரிமை பூர்ணமாக ஸ்தாபிக்கப்படுகிறது. அவளுக்கு தனித்தன்மைக் கிடையாது, உரிமை கிடையாது, தனக்கே உரித்தான மனது கிடையாது. கொடுமையும் மூர்க்கமும் நிறைந்த பலாத்காரமான சர்வாதி காரம், அடிமை-உடமைக்காரனின் சர்வாதிகாரம், அவளுடைய தனிப் பண்பையும் சுதந்திரத்தையும் சிரச்சேதம் செய்து விட்டது.

தனி உடமையும் குடும்பமும், ஆடவனின் ஆட்சியும் பெண் ணடிமைத்தனமும் தோன்றியதால் ஏற்பட்ட விளைவுகளை இந்த மூன்று கதைகளும் திரட்டித் தருகின்றன. உரிமையோ அந் தஸ்தோ தனிப்பண்போ சுதந்திரமோ இல்லாதவளாக நசுக்கப் பட்டுள்ள இன்றைய ஹிந்து பெண்மணியை உண்டாக்கியிருப் பது பண்பாடு அல்ல, அன்பு அல்ல. நல்லொழுக்கத்தின் தத்துவ மல்ல, கருத்துமுதல்வாத தத்துவமுமல்ல; இந்தியனுக்கே அலா தியானதாக இருப்பதாகச் சொல்லப்படும் "உயர்ந்த ஆத்மீகப் பண்பு" அல்ல. அடிமை-உடமை வர்க்கத்தின் மூர்க்கத்தனமான சர்வாதிகாரமே பெண்ணை இந்த நிலைக்குக் கொண்டுவந்தது.

இந்த வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணமாகவுள்ள சக்தி என்ன? ஆடவனின் பலாத்காரம், புதிதாகத் தோன்றிய அர சால் நிர்வகிக்கப்படுவதும் அவனுக்கு பின்பலமாக உள்ளது மான சட்டம், ஒழுங்கு அகியவை, புதிய பொருளுற்பத்தி சக்தி களிடமிருந்து, புதிய உடைமை உறவிலிருந்து புதிய சமுதாய

உறவுகளிலிருந்து, பலம் பெறுகின்றன. கம்யூனின் வீழ்ச்சியும், தனி உடமை வர்ணங்கள் வர்க்கங்கள் ஆகியவற்றின் தோற்றமும் இந்தப் புதிய குடும்பம் தோன்றச் செய்கின்றன; இந்தப் புதிய குடும்பத்தில், பெண்ணின் வீட்டு உழைப்புக்கு சமுதாய மதிப்பு கிடையாது; வயல்களிலும் ஒர்க்ஷாப்புகளிலும் அடிமைகள் செய்த சமுதாய உழைப்பு ஆதிக்கம் வகிக்கிறது; இதை ஆடவன் மட்டும், தன் தனி உடமையாகச் சுவீகரித்துக் கொள்கிறான்.

தனிஉடமை தோன்றியவுடன், சூத்திர அடிமையுடன் பெண்ணும் சுதந்திரத்தை இழந்தாள். பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு அடிமை உடமை முறையைத் தொடர்ந்து, நிலப்பிரபுத்துவ ஏற்பாடு என்ற தனிஉடமை முறையே ஏற்பட்டது; அது வீழ்ந்ததைத் தொடர்ந்து, முதலாளித்துவ உடமை ஏற்பட்டது. எனவே, பெண்ணடிமை நிலையும் அதே மாதிரியான மாறுதல்களை அடைந்தது. அடிமையாயிருந்தவள் பண்ணையாளானாள்; பண்ணையாளாயிருந்தவள், நவீன தொழிலாளியானாள். ஆனால் அவள் அடக்கி வைக்கப்பட்டுள்ள நிலை ஒருபொழுதும் ஒழியவில்லை.

எனவே, அவளுடைய விமோசனப்பிரச்னை ஒழுக்கம் சம்பந்தமான பிரச்னையல்ல; ஆத்மீகப் பிரச்னையல்ல; வர்க்க ஆட்சிப் பிரச்னையாகும்.

சமுதாயத்தின் பொருளுற்பத்தி உழைப்பிலிருந்து விலக்கப்பட்டு, சொந்தக் குடும்ப உழைப்பில் மட்டும் பெண் ஈடுபட்டிருக்கிறவரையில், பெண் விமோசனமடைவதும் ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாவதும் சாத்தியமேயில்லையென்பது நாம் இது வரையில் செய்த பரிசீலனையிலிருந்து தெளிவாகும்; பெண் பெரிய, சமுதாய அளவில் பொருளுற்பத்தியில் பங்கெடுக்கும் பொழுதுதான் அவளுடைய நேரத்தில் மிகக்குறைந்த பகுதியே வீட்டு வேலையில் செலவாகும்பொழுதுதான், பெண்ணின் விமோசனம் சாத்தியம். இப்பொழுதுதான், நவீனப் பெரும் தொழில் மூலம் இது சாத்தியமாகியிருக்கிறது. இது விரிந்த அளவுக்கு பெண்களை வேலையில் எடுப்பதை சாத்தியமாக்குவதுடன், பெண்களை அவ்வாறு வேலைக்கு எடுப்பதை வற்புறுத்துகிறது. தவிர,

வீட்டு வேலையின் கஷ்டம் நிறைந்த கடமைகளை பொதுத் தொழிலாக மாற்றுவதின் மூலம், தனிப்பட்ட வீட்டு வேலைக்கு முடிவு கட்டக் கூடியதாகவும் நவீனப் பெருந்தொழில் உள்ளது. பெருந்தொழில் சோஷலிஸ்ட் சொத்தாகி, வர்க்கங்கள் ஒழிக்கப்படும் பொழுதே இதைப் பூர்ணமாகச் சாதிக்க முடியும்.

இந்திய பூர்ஷுவாத் தலைமை வீட்டு உழைப்பைப் புகழ்ந்து பேசுவதற்கும், இந்திய தொழிலதிபர்கள் மலிவான பெண்தொழிலாளிகளை பாக்டரிகளுக்குள் அனுப்புவதற்கும் உள்ள காரணங்களையும் இந்தப் பரிசீலனை தெளிவுபடுத்துகிறது. இரு பகுதியினரும் சேர்ந்து, பெண்குலத்தையும், சமுதாயத்தையும் குழம்பத்திலாழ்த்துகின்றனர்; உண்மையான விமோசனப் பாதையைக் காணமுடியாமல் செய்கின்றனர்; வீட்டு உழைப்பிலோ, "படித்துச் சம்பாதிக்கும் மத்தியதர வர்க்கப் பெண்"ணாக ஆவதால் மட்டுமோ, உண்மையான சுதந்திரம் அடைய முடியாதென்பதை உணரமுடியாமல் செய்கின்றனர். உற்பத்தி சாதனங்கள்மீதுள்ள தனி உடமையையும் வர்க்க ஆட்சியையும் அவற்றுடன் ஆடவர் ஆதிக்கத்தையும் ஒழிக்கும் சமுதாயப் புரட்சியே பெண்ணுக்கு விமோசனத்தை சாதிக்கும். ஆனல் அது இந்த இடத்தில் விவாதிக்கவேண்டிய பிரச்னை அல்ல.

ஒவ்வாத முரண்பாடுகள்

பழைய ஆரியர் கம்யூன் வேகமாக சின்னபின்னமாகிக் கொண்டிருந்தது. அது ஒத்துப்போக முடியாத முரண்பாடுகளால் சிதறுண்டது. அந்த முரண்பாடுகளை யாக உற்பத்திமுறையின் பழைய தர்மத்தின் கட்டுக்கோப்பிற்குள் பைசல் செய்ய முடியவில்லை. ஏனெனில் யாக உற்பத்தி முறையே தகர்ந்துவிட்டது. பொருளுற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியுடன் புதிய பொருளுற்பத்திக் கருவிகள் தோன்றின. அவை, ஆதிக்கம் பெறுவதற்காக, பண்டைக்கால யக்ஞ-கண-கோத்ர உறவுகளுடன் போராடின. அடிமை முறையை அடிப்படையாகக் கொண்ட தனியுடமை, சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக்கொண்ட கூட்டு உடமையை வீழ்த்திக்கொண்டிருந்தது. மூர்க்கம் நிறைந்த சகோதரப் போரால் ஆரியகணங்கள் பிளவுபட்டன. இந்த முரண்பாடுகளின் வளர்ச்சியை நாம் முந்திய அத்தியாயங்களில் பார்த்தோம். இப்பொழுது அவற்றைத் திரட்டித் தொகுப்போம். அதன் பிறகு அந்த சகோதரச் சண்டையையும் அதன் பலனாக கண அமைப்பு அழிந்து அரசு தோன்றியதையும் நாம் பரிசீலனை செய்வோம்.

கூட்டு யாக உழைப்பில் ஈடுபட்டிருந்த சிறு கம்யூன்கள் விரிவடைந்தன. துண்டு துண்டாகப் பிரிந்து பெருகின. "தெய்வீகமான பிரஜாபதி விரும்பிய மாதிரியே" நெருப்பின் உதவிகொண்டும், கால்நடைகளின் துணைகொண்டும் ஒரு கம்யூன் பல கம்யூன்களாயிற்று ; சிறிய கம்யூன் பெரிதாயிற்று.

பல கணங்களுக்கிடையே ஏற்படவேண்டிய உறவுமுறை பல பிரச்சினைகளை உண்டாக்கியது. கிருதயுகத்தில் நாடோடிகளாகத் திரிந்துகொண்டிருந்த காட்டு மனிதர் கணம் திரேதாயுகத்தில் விரிந்த பிரதேசத்தில் பரவிய இரத்தக் கலப்பு கண-கோத்ரமாக வளர்ச்சியடைந்தது. யக்ஞத்திற்கும் கண-கோத்ர கம்யூன்களுக்

கும் இயல்பாகவுள்ள விதிகளைப் பின்பற்றி பொது அக்கினியைச் சுற்றி ஒன்றுகூடி உற்பத்திசெய்து இனத்தைப் பெருக்கி, கூட்டாகப் பாடுபட்டு கூட்டாக உண்டு களித்து, வாழும் எளிய தர்மமே வளர்ந்துகொண்டிருந்த கணங்களில் அனுஷ்டிக்கப் பட்டது. அநாகரீக காலத்தின் ஆரம்பகட்டப் பிரச்னைக்கு இந்த தர்மம் தீர்வுகண்டது.

வேலை அதிகரித்தது; செல்வம் பெருகியது. இந்த வளர்ச்சியால் வேலைப் பிரிவினை அவசியமாயிற்று. கைத்தொழில்கள், உலோகங்கள், விவசாயம் ஆகியவை தோன்றின; அவை மீண்டும் புதிய பிரச்னைகளை உண்டாக்கின. இப்பொழுது கண-கம்யூன்களுக்குள் வர்ணங்களின் பிரிவினை ஏற்பட்டது. அந்த வர்ணங்கள் புதிய பொருளாதாரப் பாத்திரங்களை வகித்தபோதிலும் கம்யூனின் கட்டுக்கோப்புக்குள்ளேயே இருந்தன. பழைய பிரிவினையடையாத கணப் பொருளாதாரத்தின் கருப்பைக்குள் நானுவிதமானதாகவும் பாகுபாடுள்ளதாகவும் வர்ணப் பொருளாதாரம் தோன்றியது. கண உரிமைகள் வர்ண உரிமைகளுடன் மோதத் தொடங்கின.

ஒரு பிரதேசத்தில் வாழும் குலங்களும் கணங்களும் தம்மிடம் பெருகி வரும் நானுவிதச் செல்வங்களுடன் தம்முடைய பிரத்யேகமான இயற்கைப் பொருட்களுடன் மற்ற குலங்களையும் கணங்களையும் சந்தித்தன. தொடர்பு கொண்டன. அவற்றுடன் பண்ட மாற்று செய்தன. இவ்வாறு பண்டங்களின் பரிவர்த்தனை தோன்றியது. பண்டமாற்றுக்கான உற்பத்தி, உபயோகத்திற்கான உற்பத்திக்குக் குழிபறித்தது. ஹவனத்துக்கான உற்பத்தி ஹிரண்யத்திற்கான உற்பத்தியால் பின் தள்ளப்பட்டது.

பரிவர்த்தனை முறை கூட்டு உற்பத்தியைத் தகர்த்தது. அத்துடன் கூட்டு அனுபோக முறையையும் தகர்த்தது. தனி நபர் உற்பத்தியும் தனிநபர் அனுபோகமும் தனியுடைமையின் தோற்றத்தை எடுத்துகாட்டின. ஒரே கணத்தின் இரத்தக் கலப்பு உறவினர்களுக்கு இடையே இதற்குமுன் கண்டிராத புதிய பிரிவினைகளும் புதிய பகைகளும் தோன்றின; அதாவது ஏழை பணக்கா

ரன் பகை தோன்றியது; கணம் எரிச்சலடைந்தது. சினம் கொண்டது. இந்தப் பிரச்னைக்குப் பைசல் காணமுடியாத நிலையிலிருந்த கணம், நல்லொழுக்கப் பிரசாரத்தின் மூலம் இந்தப் பொருளாதாரப் பிரச்னையை தீர்க்க முயற்சித்தது. ஹவனம் தானம் ஆகியவற்றின் பொருளாதார விதிகளை, பொருட்களை உண்டு உபயோகிப்பதற்காக வினியோகம் செய்யும் அந்த பரம்பரை ஏற்பாட்டை "கண்டிப்பாக அனுஷ்டிக்க வேண்டுமென்று" கணம் கூறியது. ஆனால் அது வெற்றி காணவில்லை. அதன் கோரிக்கையை நிறைவேற்றுவது யார்? பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் அந்தக் கட்டளையை மீறினார்கள்; தானமும் ஹவனமும் முழுக்க முழுக்க தங்களுக்கே உரியது என்று பாத்தியதை கொண்டாடினார்கள். ஏறக்குறைய வர்ணப் பிரிவினைகளின் அடிப்படையில் சொத்து சேகரமாயிற்று. ஒவ்வொரு வர்ணத்திலும் ஏழைகளும் பணக்காரர்களும் இருந்தபோதிலும் பொதுப்படையாகப் பார்த்தால் பிராமணர்களும் க்ஷத்திரியர்களும் அடிமைகளுக்கும் கால்நடைகளுக்கும் சொந்தக்காரர்களானார்கள்; பாடுபடக்கூடிய வைசியர்களையும் சூத்திரர்களையும் சுரண்டுகிற உடமை வர்க்கங்களானார்கள். இவ்வாறாக கொஞ்ச காலத்திற்குள் வர்ணப் பிரிவினைகள் வர்க்கப் பிரிவினைகளாகவும் வர்க்கப் பகைகளாகவும் வளர்ந்தன. "ஒரே கணத்திற்குள் ஏற்பட்ட உடமை வித்தியாசங்கள் அதன் நலன்களின் ஒற்றுமையை அதன் உறுப்பினர்களிடையேயுள்ள பகையாக மாற்றின" (மார்க்ஸ்). பிராமண க்ஷத்திரியர்களின் உடமை, மாபெரும் விஷா ஜனநாயகத்தின் பாத்யதைகளுடன் மோதத் தொடங்கியது.

பரிவர்த்தனை, பணத்தை உண்டாக்கியது; பணம் சேமிப்புக்கு வசதியாகயிருந்தது, வர்ண உரிமைகளையும் பரம்பரையையும் ஆதாரமாகக் கொண்டு அதிகாரத்தையும் ஆயுதங்களையும் பெற்றிருந்தவர்களே, யுத்தம் செய்வதற்கும், பொருளாதாரத்தை நடத்திச் செல்வதற்கும் தேவையான தொழிலறிவையும் ஞானத்தையும் பெற்றிருந்தவர்களே, செல்வத்தைச் சேமித்தார்கள். உடையவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையே சுரண்டல்காரர்களுக்கும் சுரண்டப்படுகிறவர்களுக்குமிடையே மோதல்கள் வளர்ந்தன. கண உடமை வர்ண உடமையுடன் போராடியது. செல்வம் யாகத்

துக்கா அல்லது ஒருவருடைய சொந்த சேமிப்பிற்கும் போகத்துக்கும் மட்டுமா என்ற கேள்வி எழுந்தது.[1]

செல்வம் அதிகரித்தது; உற்பத்தித் திறன் கூடியது; இவற்றின் விளைவாக, கொல்லப்பட்டு வந்த யுத்தக் கைதிகள், அடிமை முறையின்கீழ் உழைப்பாளிகளானார்கள். சூத்திரர்களை அடிமைப்படுத்தும் முறை ஆரியர் கம்யூனில் பிரவேசித்தது. அடிமைகளையும் செல்வத்தையும் உடையவர்கள் என்றும், அந்த உடமைக்காரர்களுக்குத் தொண்டூழியம் செய்பவர்கள் என்றும் நேருக்கு நேர் எதிரான இரண்டு முகாம்களாக சமுதாயம் பிரிந்தது.

இரத்தக் கலப்பு உறவினர்களைக் கொண்ட கணத்துக்குள் வேறு இரத்த முடையவர்கள் பிரவேசித்தார்கள்; புதிய சூத்திர உழைப்பாளிகள் மற்ற கணங்களிலிருந்து வந்த வியாபாரிகள் அன்னிய விருந்தாளிகள் முதலியோர் பிரவேசித்தார்கள். அன்னியருக்கு இடமளிக்காத பண்டைக்கால கம்யூனிலும் அதன் பிரதேசத்திலும் புத்தம் புதிய பொருளாதார சக்திகளும் வர்க்கங்களும் இவ்வாறு நுழையும்பொழுது அவற்றை முறைப்படுத்துவதற்கு கணத்தின் விதிகளில் எத்தகைய ஏற்பாடும் இல்லை. பொருளாதாரம் மணவினை முதலியவற்றில் ஏற்பட்ட இந்த புதியஉறவுகளை முறைப்படுத்துவதற்கு ஒரு புதிய விதி தோன்ற வேண்டியிருந்தது. கணத்தின் விதி உள்ளபொழுதே அத்துடன் கூடவே, தோன்றிய இந்த விதி கணத்தின் விதியை எதிர்க்கவேண்டியிருந்தது. ஏனெனில் புதிய விதி பரிவர்த்தனையையும் தனி உடமையையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. கணத்தின் விதியோ கூட்டு வாழ்வை அடிப்படையாகக்கொண்டிருந்தது.[2] ஒருமோதல்

---

1 "தியாகம் செய்வதன் மூலம் இன்பம் அடையுங்கள்; எவருடைய செல்வத்துக்கும் ஆசைப்படாதீர்கள்" என்று உபநிஷதம் உபதேசிக்கத் தொடங்கியது.

2 இங்குதான் ஐக்கியப்பட்டிருந்த கண—கோத்திர ஸ்தாபனத்தில் இடம் பெற்றிராத புதிய தர்மங்களும் புதிய ஆட்சியும் தோன்றுகின்றன. எனவே சுருதிகளுக்கும் இதர நூல்களுக்கும் இடையே முரண்பாடு இருந்தால் சுருதியின் வாசகங்களுக்கே முதலிடம் கொடுக்கவேண்டுமென்று விதிப்பது அவசியமாயிற்று. ஆனால் மெய்யாகப் பார்த்தால் இதர நூல்களே புதிய நிலைமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தின. எனவே அவை தமது நோக்கத்திற்கு சுருதியை திருத்திப் புரட்டுவதன் மூலம் வெற்றி கண்டன.

தோன்றியது. கண கோத்திரத்திற்குப் பக்கத்தில் கண ராஷ்டிரம் தோன்றியது. கோத்திரம் இரத்த சம்பந்த உறவுகளையே ஏற்றுக் கொண்டது. ராஷ்டிரமோ ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தையும் அதன் பொதுப் பொருளாதாரத்தையும் தழுவி நிற்கும் அனைவரையும், ரத்தக்கலப்பு உறவினர்கள் அல்லாதவர்கள் அனைவரையும் ஏற்றுக்கொண்டது.

தனி உடமை கம்யூன் குடும்பத்தையும் கம்யூன் இல்லத்தையும் அழித்துவிட்டது. அந்தக் கம்யூன் குடும்பத்துக்குள்ளேயே அதற்கு எதிராகவே உடைமை, பிதுரார்ஜித உரிமை முதலியவற்றை உடைய தனிக் குடும்பம் வளர்ந்தது. கணமும் குடும்பமும் மோதின; பிரஜாபதியும் கிருஹபதியும் மோதினார்கள். கம்யூனின் திரேதாக்கினி தனிக்குடும்பத்தின் கிருஹ்ய அக்கினிக்கு முன்னால்மறைந்தது. பொதுவான ஹவனத்திற்குப் பதிலாக தனிச் சமையல் ஏற்பட்டது. தேவர்களையும் கணத்தையும் சமாதானப்படுத்தி ஏமாற்றுவதற்காக இந்த தனிச் சமையல் பாக-யாகம் என்ற பெயரைப் பெற்றது. செல்வம் படைத்த கிருஹபதியான தனிக்குடித் தனக்காரரின் சுயநல இச்சைகளை பூர்த்தி செய்வதற்காக பெரிய யாகங்களுக்குப் பதிலாக தனிப்பட்டவர்கள் செய்யும் அற்பசொற்பமான இஷ்டிகள் நடைபெற்றன. இவை காமிய இஷ்டிகளாயின (சுய நலனை உத்தேசித்து செய்யப்பட்ட யாகங்கள்.)[1] பொது இல்

1 பண்டைக் காலத்து பெரிய கூட்டு யக்ஞ—யாகங்கள், தனிக்குடும்பத்தின் சின்னஞ்சிறிய இஷ்டியாக மாறியதில், கம்யூனின் கூட்டுப்பொருளாதாரம் தனிப்பட்டவர்களின் பொருளாதாரமாக மாறுதலடைந்ததன் பிரதிபலிப்பைக் காணலாம். ஏழைக் குடித்தனக்காரனை வைசியர் இஷ்டியை பழைய யாகத்தின் கேலிச் சித்திரமாகச் செய்துவிட்டான். முன்னிலிருந்த பெரிய கம்யூன் தன்னுடைய பொதுவுடமையிலிருந்து கால்நடைகளை யாகத்தில் பலிகொடுக்க முடிந்தது. ஏழையாயிருந்த விஷாவுக்கோ தன்னுடைய சிறு யாகத்தில் கால்நடைகளைக் கொல்ல முடியவில்லை. புதிய இஷ்டியின் சடங்கு விதிகள் தான்யத்தையும் மாவு உருண்டைகளையும் உண்மையான கால்நடைகளாகப் பாவித்து வெட்டி ஹவன அக்கினியில் போடுவதற்கு இடம் தந்தன. உயிருள்ள கால்நடைகளை பணக்காரர்கள் பறிமுதல் செய்துவிட்டார்கள். மாவைக்கொண்டு பாவனை செய்வதன் மூலம் ஏழை தன்னை திருப்தி செய்துகொண்டான், தெய்வங்களைத் திருப்தி செய்தான். (தர்ஷபூர்ணமாஸ் என்பதின் புரோடாஸ், அக்னி ஹோத்திரத்

லத்தில் கண அங்கத்தினர்கள் அனைவரும் அக்கினியைச் சுற்றி அமர்ந்து உணவைப் பகிர்ந்து உண்ட மகிமை தனிப்பட்டவரின் பேராசையால் நசுக்கப்பட்டது. பாலி என்ற முறையில் தெய்வங்களுக்கு ஒரு பங்கும் விருந்தாளிக்கும் இறந்துகொண்டிருந்த கணத்தின் ஒரே பிரதிநிதியாக இருந்த பிச்சைக்காரனுக்கு ஒரு பங்கும் அடையாளபூர்வமாகக் கொடுக்கும் முறை இப்பொழுது ஏற்பட்டது. சுயநல வெறிபிடித்த குடித்தனக்காரர் "உதார குணத்தின் பெருமை"யையும் பெறுவதற்காகத் தன் உணவில் ஒரு பங்கை விருந்தாளிக்கும் பிச்சைக்காரனுக்கும் கொடுப்பதற்கு இணங்கினர்.

தனிக்குடும்பம். தனி வீடு, தனி உடமை ஆகியவற்றின் வளர்ச்சியுடன் தந்தையின் ஆதிக்கமும் தந்தை சொத்தை மகன் அடையும் முறையும் ஏற்பட்டன. தந்தை வழி ஏற்பாடு, தாய் வழி ஏற்பாட்டை நசுக்கியது. ஆடவர்கள் பெண் குலத்தினர் மீது தனி ஆதிக்கம் செலுத்தினர். மனைவிகள் கணவர்களுடன் மோதினர்கள்; குமாரர்கள் தாயார்களுடன் மோதினர்கள்.

கூட்டு உடமை உரிமைகளுக்கும் கூட்டு வாழ்வுக்கும் எதிராக தனிவுடைமை உரிமைகளும் வாழ்வும் ஏற்பட்டதால் வேத ஸூக்தங்களுக்கு எதிராக கிருஹ்ய சூத்திரங்கள் உண்டாக்கப்பட்டன. இந்தப் பெயரே, அவை தனிவுடைமையிலிருந்து ஜனித்ததைக் குறிக்கின்றது. வேதங்கள் மறையத் தொடங்கின. அவற்றை தொகுக்கவேண்டியிருந்தது; ஏனெனில் அவை இப்பொழுது ஒரு சடங்காகிவிட்டன, வளரவில்லை, விருத்தியடையவில்லை; அதற்கு மாறாக மறக்கப்பட்டுவந்தன.[1] சூத்திரங்கள் அதிகாரம் செலுத்

தின் அனுஸ்தரணி, மதுபர்க்கம் ஆகியவை இதற்கு உதாரணங்கள்.)

இப்பொழுது பசுவதை நின்றுவிட்டது; பசு புனிதமாகிவிட்டதால் அல்ல; அது அருமையாகிவிட்டதால், பணக்காரர்களின் ஏகபோகமாகிவிட்டதால் அதை விஷா விவசாயி கொன்று புசிக்கமுடியவில்லை.

1 வேலைப்பிரிவினையான வர்ணப் பிரிவினையும் அதன் விளைவுகளும் ஏற்பட்ட காலத்தில்தான் வேதங்கள் தொகுக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. (இந்தத் தொகுப்புகளையே ஸம்ஹிதைகள் என்கிறோம்.) வேதங்கள் தொகுக்கப்பட்டன என்றால் யாகம் சமுதாய வாழ்வின் முறை என்ற வகையில் மறைந்துகொண்டிருந்தது என்று அர்த்தமாகும்.

தின. அவை வேதங்களுடன் மோதின. கூட்டு வாழ்வு பரிபூரணமாக மறைந்து போகாவிட்டாலும் வேகமாக அழிந்து கொண்டிருந்தது; தனி உடமை யதார்த்தமாகிக் கொண்டிருந்தது; ஆதிக்கம் பெற்றுக்கொண்டிருந்தது. அதைப்போலவே வேதமும் உண்மையற்றதாக (வெறும் நினைவாக-ஸ்மிருதியாக) ஆயிற்று. கிருஹ்ய சூத்திரங்களோ உண்மையானவையாயிற்று. எனவே தமது புதிய சூத்திரங்களும் ஸ்மிருதிகளுமே சட்டமென்றும் சட்ட கர்த்தாக்கள் எழுதினார்கள். ஆனால் புதிய தர்மத்திற்கும் புராதன சுருதிக்கும் இடையே மோதலோ முரண்பாடோ காணப்பட்டால் சுருதியே அதிகம் செல்லுபடியாகக் கூடியதென்று அவர்கள் எழுதினார்கள். எனினும் இது வெறும் தத்துவமாகவே இருந்தது. நடைமுறையில் புதிய சக்திகள் ஆதிக்கம் செலுத்தின. அவற்றின் சட்டம் செல்லுபடியாயிற்று.

பழய கண ஸ்தாபனத்தில் தேர்தலுக்கு உரியனவாக இருந்த பொறுப்புக்கள் இப்பொழுது பரம்பரை உரிமைகளாகிக் கொண்டிருந்தன. சீக்கிரத்தில் கம்யூனுக்கு எதிராக வேரோடிய தனி நலன்களாக ஆயின. அடிமைகளின் பிள்ளைகள் அடிமைகளானார்கள். உடமை உடமையை உரிமையாக அடைந்தது. வறுமை வறுமையை உரிமையாக அடைந்தது. மோதல் வளர்ந்தது. தீவிர மடைந்தது. பொருளாதாரத் துறையில் வலுப்பெற்ற வர்க்கங்கள், சமுதாயம் முழுவதையும் முறைப்படுத்துகிறவையாக முன்வந்தன; வளர்ந்துகொண்டிருந்த முரண்பாடுகள் நீடித்திருக்கக் கூடிய முறையில்-பாடுபடும் பெரும்பான்மையோரான வைசிய-சூத்திர மக்களை, அவர்களுடைய உழைப்பின் பலனை அபகரித்துக்கொள்ளும் உடமைக்காரர்களும் சிறுபான்மையோருமான பிராமண க்ஷத்திரிய வகுப்பினருக்கு அடிபணியச் செய்யக்கூடிய முறையில்—சமுதாயம் முறைப்படுத்தப் பட்டது.

கால்நடைகள் கைத்தொழில்கள் ஆகியவற்றுடன் நிலமும் மிகப் பெரிய உற்பத்தி சாதனங்களில் ஒன்றாயிற்று. இது உற்பத்தி சக்திகளுடைய வளர்ச்சியின் சாதனை. பழைய கணத்தின் காலத்தில், ஜனங்கள் கால்நடைகளுக்காகப் போராடினார்கள், இனப் பெருக்கத்திற்காகப் பிரார்த்தித்தார்கள். விவசாயம் இரண்

டாம் பட்சமாக இருந்தது. ஆனால் ஜனத்தொகை பெருகிய பொழுது, கால்நடைகள் மட்டும் ஜீவனத்திற்குப் போதவில்லை. எனவே விவசாயத்தின் தேவை அதிகரித்தது. சாகுபடி நிலத்திற்காக காடுகளை அழிப்பது அவசியமாயிற்று. வெண்கலக் கருவிகளால் இதைச் சாதிக்க முடியாது. இரும்பைக் காய்ச்சி உருக்கும் யுக்தி கண்டு பிடிக்கப்பட்டது. சூத்திர அடிமைகள், வைசிய உழவர்கள் ஆகியோரின் உதவியைக்கொண்டு விஸ்தாரமான காடுகள் அழிக்கப்பட்டன[1]. நிலம் சாகுபடி செய்யப்பட்டது.

கணத்தின் வாழ்வில் இதுவரை முதலிடம் பெற்றிருந்த கால்நடைகள் இரண்டாவது ஸ்தானத்திற்குத் தள்ளப்பட்டன. புதிய சகாப்தத்தின் உற்பத்தி சாதனமாக பூமி (நிலம்) முதலிடம் பெற்றது. கைத் தொழில்கள் விவசாயத்திலிருந்து பிரிந்தன. நகரம் நாட்டுப்புறத்திலிருந்து வேறுபட்டது. சூத்திர அடிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்துடன் நிலத்திற்கான போராட்டமும் க்ஷத்திரியத் தலைமையின் முதன்மையான வேட்கையாயிற்று. இந்த யுத்தங்களால் கணத்தின் அமைப்பு தீர்க்கமாக பாதிக்கப்பட்டது. ஒரு காலத்தில் சமாதானம் நிறைந்த கூட்டு ஜனநாயகமாக விளங்கிய அமைப்பு, ராணுவ ஜனநாயகமாக மாறுகிறது. இதில் ராணுவ நடவடிக்கை சம்பந்தமான உறுப்புக்கள் பையப் பைய உயர்ந்து ஓங்கி, இறுதியாக கம்யூனைப் பணிய வைக்கின்றன.

"ஜன நெருக்கம் அதிகமான காரணத்தால் உள் நடவடிக்கைக்காகவும் புற நடவடிக்கைக்காகவும் நெருங்கிய பிணைப்பு ஏற்பட வேண்டியது அவசியமாகிறது. எல்லா இடங்களிலும், உறவு கொண்ட குலங்கள் சமஷ்டியில் ஒன்றுபடுவது அவசியமாகிறது. கொஞ்ச காலத்துக்குள் அவை இரண்டறக் கலப்பதும் அவசியமாகிறது. இதன்மூலம் வெவ்வேறு குலங்கள் வாழ்ந்த பிரதேசங்கள் ஒரு தேசீய இனத்தின் ஒரே தாயகமாக ஐக்கியப்படுகின்றன. மக்களின் ராணுவத் தலைவனை அரசன் ஒரு இன்றியமையாத

1 வன மஹோத்சவமல்ல, வனத்தை அழிப்பது நன்னெறியாகிறது. எனவே காண்டவ வனத்தை எரித்தது ஒரு பெரும் சேவையாக பாரதக் கதையில் கூறப்படுகிறது.

நிரந்தர அதிகாரியாக ஆகிறார். மக்களின் சபை ஏற்கனவே இல்லாத இடங்களிலும் உருப் பெருகிறது. ராணுவத் தலைவன் (வட மொழியில் ராஜன் ஆ-ர்), சபை, (வட மொழியில் சபா, ஆ-ர்) மக்கள் மன்றம், (வட மொழியில் விதாதா. ஆ-ர்) ஆகியவை, ராணுவ ஜனநாயகமாக (கண-சங்கம் ஆ-ர்) வளர்ந்த கண சமூகத்தின் உறுப்புகளாகும். யுத்தமும் யுத்தத்திற்கான ஏற்பாடும் இப்போது தேசீய வாழ்வின் முறையான கடமைகளாகி விட்டதால் அது ராணுவ ஜனநாயகமாக இருக்கிறது. அக்கம் பக்கத்தில் வாழ்கிறவர்களின் செல்வம் ஜன சமூகங்களின் பேராசையைக் கிளறி விடுகிறது. ஏனெனில் செல்வத்தைப் பெறுவது, வாழ்வின் பிரதான நோக்கங்களில் ஒன்று என்று அவர்கள் பார்க்கிறார்கள். அவர்கள் அநாகரீக மக்கள். எனவே, வேலை செய்து செல்வத்தைப் பெறுவதைவிட கொள்ளையடித்துச் சம்பாதிப்பதே சுலபமானதென்றும் உண்மையில் கௌரவமிக்கதென்றும் அவர்கள் நினைக்கிறார்கள். முன்காலத்தில் பழி வாங்குவதற்காகவும், சேதம் விளைவிப்பதற்காகவும், பிரதேசம் போதுமானதாக இல்லாத காரணத்தினால் அதை விஸ்தரிப்பதற்காகவும்தான், யுத்தம் நடத்தப்பட்டது. இப்போது கொள்ளை யடிப்பதற்காகவே யுத்தம் நடத்தப்படுகிறது. அது ஒரு முறையான தொழிலாக ஆகியிருக்கிறது." (எங்கல்ஸ்)

ஏழை வைசியர்களையும் சூத்திர அடிமைகளையும் சுரண்டிக் கொழுத்த பணக்காரப் பிராமண, க்ஷத்திரிய குடும்பங்கள், தம்மைச் சுற்றி நகரங்களையும் கோட்டைகளையும் கட்டிக்கொள்கின்றன; அன்னிய படை யெடுப்பாளனிடமிருந்து தற்காத்துக் கொள்வதற்காக மட்டுமல்ல, உள்நாட்டில் கலகம் செய்யும் நிலையிலுள்ள உழைப்பாளிகளிடமுள்ள அச்சத்தின் காரணமாகவும், அவற்றைக் கட்டிக் கொள்கின்றன. நக்ர-கிராமப் பகை கூர்மையடைகிறது.

தனி உடமையின் அடிப்படையில் வளர்ந்த உற்பத்தித் திறனும் செல்வமும், வைசிய உழைப்பாளிக்கும் உடையவர்களான பிராமண-க்ஷத்திரிய வர்க்கங்களுக்கும் நடுவே யிருந்த இடைவெளியை மேலும் விரிவுபடுத்தியது. வைசியர்கள் மென்மேலும் வறுமை வாய்ப்பட்டதால், தோற்கடிக்கப்பட்ட சூத்திரர்களின்

நிலைக்குத் தாழ்ந்தனர். முன்னால், வெற்றியடைந்த திரிவர்ண (மூன்று வர்ணங்களுக்கு உரிய) ஆரியர்களில் ஒரு பகுதி என்ற முறையில், வைசியர்கள், சூத்திர அடிமைகளை உடமையாகக் கொள்வதில் மகிழ்ச்சி யடைந்தார்கள், பெருமை அடைந்தார்கள். ஆனால் தனிஉடமை, அடிமை முறை ஆகியவற்றின் தர்க்க ரீதி யான வளர்ச்சி, அவர்களையும் அதன் வலையில் சிக்க வைத்து, அவர்களையும் அடிமை முறைக்குள் தள்ளியது. ஒரு காலத்தில் விஷாக்கள் (கம்யூன் குடிகள்) பெருமைக்குரியவராக இருந்தனர். அவர்களே பிரமன் என்ற சர்வ வியாபகக் கம்யூனாக விளங்கினர். விஷாக்களின் மத்தியிலிருந்துதான் பிராம்மண, க்ஷத்திரிய வர்க் கங்கள் தோன்றிப் பிரிந்தன. அதே விஷாக்கள் இப்பொழுது தரித்திரர்களானார்கள். சூத்திரர்கள் மாதிரி அடிமைகளாக விற்கப் பட்டார்கள். அவர்கள் ஒரு காலத்தில் வெற்றியடைந்த ஆரிய குலத்தினராய் இருந்ததால் அவர்களுக்குக் கிடைத்த உரிமை என்ன ? வைதீக விதிகளின் பிரகாரம் பிறப்பதற்கும், திருமணம் புரிந்து கொள்வதற்கும், அடக்கம் செய்யப் படுவதற்கும் உள்ள உரிமையே அவர்களுக்குக் கிடைத்தது. அன்னிய சூத்திர அடிமை தன்னை அந்த நிலைக்கு உயர்த்திக்கொள்ள ஒருபொழுதும் அனு மதிக்கப் பட்டதில்லை. இவ்வாருக, தத்துவ ரீதியில், விஷாக்கள் ஆட்சி புரியும் பெருமக்களின் பகுதியாகக் கருதப்பட்ட போதிலும், அன்ருட வாழ்வின் நடைமுறையில், அவர்கள் சூத்திர அடிமை களின் அணிகளுக்குள் தள்ளப்பட்டனர். ஒரு காலத்தில் இதரர் களை அடிமைப்படுத்தி சுகமாக வாழ்ந்த ஆரியனை இப்பொழுது வாங்க முடியும், விற்கமுடியும், அடிமைப்படுத்த முடியும். பூலோ கத்தில் சூத்திரர்களின் வர்க்கத்திற்கு தாழ்த்தப்பட்ட விஷா, சுவர்க்கத்தைத் தனக்கே உரியதாகச் செய்துகொள்வதற்கு மட் டும் முயற்சித்தான். ஆனால் அதற்கும் சீக்கிரத்தில் முடிவு ஏற் பட்டது. பிராமணன் தலைமையிலிருந்த ஆளும் வர்க்கங்கள் அந்த சுவர்க்கத்தையும் தமது ஏகபோகமாக்கிக் கொண்டனர். முதலில் பூமியிலும் அடுத்தபடி சுவர்க்கத்திலும் விஷா ஜனநாயகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

"கொள்ளையடிப்பதற்காக நடைபெறும் யுத்தங்கள், ராணுவத் தின் பிரதம சேனாதிபதி, அவருக்குட்பட்ட தளபதிகள் ஆகியோ

ரின் அதிகாரத்தைப் பெருக்கியது. அதே குடும்பங்களிலிருந்து அவர்களுடைய வாரிசுகளை வாடிக்கையாகத் தேர்ந்தெடுக்கும் முறையானது, வம்ச பரம்பரை வாரிசு உரிமையாக படிப்படியாக மாறுகிறது. விசேஷமாக, தந்தை உரிமை அரங்கேறியபின் இந்த மாறுதல் குறிப்பிடத் தக்கதாக இருக்கிறது. வம்ச பரம்பரை வாரிசு உரிமை முதலில் சகித்துக்கொள்ளப் பட்டது. பிறகு உரிமையாகக் கோரப்பட்டது. இறுதியில் ஆக்ரமிக்கப்பட்டது. இவ்வாருக வம்ச பரம்பரையின் அஸ்திவாரம் நிறுவப்படுகிறது. ஆக 'கண' அமைப்பின் உறுப்புக்கள் (பிராம்மண, க்ஷத்திரியர்கள்) மக்களிடையே உள்ள தமது வேர்களிலிருந்து-கணத்திலும், ஒரே தாய்க் கணத்தின் வழிவந்த கணங்களின் தொகுப்பிலும், குலத்திலும் உள்ள தமது வேர்களிலிருந்து—படிப்படியாக தம்மை முறித்துக் கொள்கின்றன. கண அமைப்பு முழுமையும் அதன் தன்மைக்கு நேர்மாருன தன்மையுடையதாக ஆகிறது. தமது சொந்த விவகாரங்களை சுயேச்சையாக ஒழுங்கு படுத்திக் கொள்வதற்காக குலங்களில் ஏற்பட்ட இந்த ஸ்தாபனம் தமக்கு அக்கம்பக்கத்திலுள்ளவர்களை கொள்ளை யடித்து ஒடுக்கும் ஸ்தாபனமாக ஆகிறது; அதற்கேற்ற முறையில் மக்களின் சித்தத்தை நிறைவேற்றும் கருவிகளாக இருந்த அதன் உறுப்புக்கள் மக்களை அடக்கி ஒடுக்கும் சுயேச்சையான உறுப்புகளாக மாறுகின்றன." (எங்கல்ஸ்.)

பிராம்மணர்களும், க்ஷத்திரியர்களும் ஜனங்களை ஒடுக்கத் தொடங்குகிருர்கள். சுரண்டப்படுகிறவர்களை ஒடுக்கும்பொழுதே, கொள்ளைப் பொருளின் பங்கு விஷயமாகவும் சுரண்டும் அதிகாரம் சம்பந்தமாகவும் அவர்கள் தமக்குள்ளே போர் புரிகிருர்கள். முன்னுல் சமுதாயம் இரத்தக் கலப்பைக் கண்டு அதாவது இரத்த சம்பந்த உறவினர்களின் அபேதக் கலவியைக் கண்டு அஞ்சியது. இப்பொழுது ஒரு புதிய பயம் ஆளும் வர்க்கமாகிய "சமுதாயத்தை" அச்சுறுத்துகிறது. வர்ணங்கள் கலந்து விடுமோ, அதாவது வர்க்கங்கள் கலந்துவிடுமோ என்ற பயம் அதை அச்சுறுத்தியது; உழைக்கும் சூத்திர அடிமையும், வறுமைப்பட்ட வைசியரும் சேர்ந்து சமுதாய அமைப்பைக் கவிழ்த்து பழைய கண சமத்வத்தையும் கூட்டு வாழ்வையும் மீண்டும் நிலைநாட்டி, தனி

உடைமையை அழித்து, அரசர்களும் தந்தைவழி சமூகத் தலைவர்களும் நடத்தும் ஆட்சியை அழித்துச் செயலாற்றுவார்கள் என்பதே அந்த பயம். அப்படியானல் உலகத்துக்கே முடிவு ஏற்பட்டுவிடும்! பிரளயம் ஏற்பட்டுவிடும்! ஆளும் வர்க்கங்கள் நடுங்கின. சுரண்டுபவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கு மிடையே யுத்தங்கள் மூண்டன. பழக்கங்கள், பரம்பரை, வழக்கு, சமயச் சடங்குகள், ஆகியவற்றின் மூலமாக மட்டுமே எஞ்சி மிஞ்சி வாழ்ந்துவந்த பழய கண சமூகத்தை, கூட்டு வாழ்வையும் சமத்வத்தையும் கொண்ட அந்த சமூகத்தை, ஒரு வழியாக நிராயுதபாணியாக்கி அழிப்பதற்கு சுரண்டல்காரர்கள் முயற்சித்தனர். தனிவுடைமை ஐசுவர்யங்கள், அரசனின் ஆயுதபலம் ஆகியவை, பெரும்பான்மையான உழைப்பாளி மக்களை அடக்குவதைத் தடுப்பதற்காக, சுரண்டப்படும் மக்கள் முயற்சித்தார்கள்.

கண-சங்கங்கள்

இதுவரை நாம் பார்த்துவந்த இந்த வளர்ச்சி எங்கே, எப்பொழுது ஆரிய கணங்களில் ஏற்பட்டது? நாம் குறிப்பிட்டமாதிரி கணங்கள் உண்மையிலேயே இருந்தனவென்றும், அவை பிற்பாடு படையெடுப்புகளுக்கோ சகோதரச் சண்டைகளுக்கோ பலியாகி இந்திய சரித்திரத்தின் பிற்கால சாம்ராஜ்யங்கள் தோன்றின என்றும் எடுத்துக்காட்டுவதற்கு ஏதாவது குறிக்கப்பட்ட சரித்திரம் இருக்கிறதா? கணங்களின் வர்க்கப்போராட்டங்களின் வளர்ச்சியை மேற்கொண்டு பரிசீலனை செய்வதற்கு முன்னால் நாம் இந்தப் பிரச்னைகளை எடுத்துக்கொள்ளலாம்.

கணங்களின் ஆதிக்கால வளர்ச்சி சம்பந்தமான கால வரையறை, மிகவும் நிச்சயமற்றதாக இருக்கிறது. நெருப்பும் கால் நடைகளும் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து, அதாவது ஆரியர்களின் காட்டுமனித நிலையிலிருந்து, யாகக் கம்யூன்கள் வளர்ந்து அவை உருக்கிக் காய்ச்சும் கலையையும், நெசவுத்தொழிலையும் பரிவர்த்தனையையும் கண்டுபிடித்து, வர்ணங்களின் வேலைப் பிரிவினையை ஏற்படுத்தி, தனிவுடைமையும் சூத்திர அடிமைத்தனமும் தோன்றுவதற்குள் பல நூற்றாண்டுகள் கடந்திருப்பதாகத் தோன்றுகிறது. வேத ரிஷிகள் குறித்துள்ள வான சாஸ்திரக் குறிப்புகளிலிருந்தும் அந்தக் குறிப்புக்களின் பொருளைக் குறித்து திலகர், தீக்ஷித், கேட்கர் முதலிய நவீன அறிஞர்கள் விவாதித்திருப்பதிலிருந்தும் இதை ஊகிக்கலாம். இந்தியாவை அடைந்து நீண்டகாலம் ஆனபிறகு, வர்ணங்கள் தனிவுடைமை, சூத்திர அடிமைத்தனம் ஆகியவற்றை, அவற்றின் பூர்த்தியான நிலையான வடிவத்தில் ஆரியகணங்கள் உருவாக்கின என்று ஓரளவுக்கு நிச்சயமாகச் சொல்லலாம். கால அட்டவணைப்படிப் பார்த்தால் அது மகாபாரத யுத்தத்துக்குமுன் நிகழ்ந்திருக்கிறது. அந்த யுத்தத்தின் முடிவில் கலியுகம் தொடங்கியது என்பது பரம்பரை வழக்கு. சமுதாய ஸ்தாபனத்தின் அகச்சான்றும் அந்த வாசகத்தை ஊர்ஜிதம்செய்கிறது.

மத்திய ஆசியாவில் வளர்ந்துகொண்டிருந்த துவக்க காலக் கம்யூனிலிருந்து முறித்துக்கொண்டு கீழ்த்திசையில் ஒரு கிளை வந்தபொழுது அது விவசாயத்தையோ வேலைப்பிரிவினையையோ, ராணுவத் தலைமையையோ உருவாக்கிக்கொள்ளவில்லை. அசுரர்களே இவற்றை முதலில் சாதித்தனர். அசுரர்கள் தேவர்களின் சகோதரக் கம்யூன்களாவார்கள். அசுரர்கள் தானியப் பயிர் சாகுபடி செய்தபோது தேவர்கள் அதைக் கண்டித்ததாக பரம்பரை வழக்கு கூறுகிறது. ஆனால் அந்தப் பயிரில் உண்மையாகவே தான்யம் உண்டாவதை தேவர்கள் கண்டவுடன், அவர்கள் பயந்து ஓடினார்கள். தேவர்கள் எப்பொழுதுமே தொழில்திறனில் அசுரர்களைவிட பிற்பட்டவர்களாக இருந்தார்கள் என்றும் ஒரு நிலையான திறமைமிக்க ராணுவத் தலைமையை உருவாக்குவது எப்படி என்பதை அவர்கள் அசுரர்களிடமிருந்தே கற்றுக்கொண்டார்களென்றும், அதன்பிறகே அவர்களால் அசுரர்களைத் தோற்கடிக்க முடிந்ததென்றும், தேவாசுர யுத்தங்கள் நமக்குக் கூறுகின்றன. எனவே அவர்கள், ஆதிமூல இல்லத்திலிருந்து பிரிந்தபொழுதும், யாக உற்பத்திமுறையில் வாழக்கூடிய தாய்வழி கண கம்யூன்களாக இருந்தனரென்று தோன்றுகிறது.

ஆப்கானிஸ்தானத்தின் பிரதேசத்திலும் குறிப்பாக சிந்து நதிப் பள்ளத்தாக்கிலும் பாஞ்சாலத்தின் தென் ஹிமாசலப் பிரதேசங்களிலும், வர்ணங்கள், உடைமை, வர்க்கங்கள், அடிமைத்தனம் ஆகியவற்றை, ஆரிய கணங்கள் உருவாக்கின. வேதங்களில் குறிப்பிடப்படும் ஆதிக்கால நடவடிக்கைகள் இந்த பிரதேசத்தை பிரஸ்தாபிக்கின்றன.

கீழ்த்திசையில் நிகழ்ந்த ஆரிய கணங்களின் படையெடுப்புகள் ஒரே அலையில் நிகழவில்லை. அந்த படையெடுப்புகள் பல நூற்றுண்டுகளில் நடைபெற்றது. எனவே சில சமயங்களில் பின்னல் வந்தவர்கள் முன்னல்வந்து குடியேறினவர்களை எதிர்த்துப் போராடவேண்டியதிருந்தது. அதனல்தான், சகல ஆரியர்களுக்கும் தலைவன் என்று ரிக் வேதத்தில் பொதுவாகக் குறிப்பிடப்படும் இந்திரன், ஒரு ஆரிய கணத்திற்கு எதிராக இன்னெரு கணத்திற்கு உதவவேண்டும் என்று அதே ரிக் வேதத்தில் கேட்

டுக்கொள்ளப்படுகிறன். இந்த மந்திரத்தை எழுதியவர் ஆரியர்களையும் தர்ஸர்களையும் தன்னுடைய விரோதிகளாகக் குறிப்பிட்டு இந்திரனின் உதவியைக் கேட்கிறுர்.

சிந்தி நதிப் பள்ளத்தாக்கை வசப்படுத்திக்கொண்டதும், பூர்வீகமாக வாழ்ந்துவந்த மக்களை வென்றதும், வர்ணங்களையும் அடிமை ஏற்பாட்டையும் உருவாக்கியதும் கி. மு. 3000 லிருந்து கி. மு. 2000 வரை நடைபெற்றதாகத் தோன்றுகிறது. இந்தப் பிந்திய காலகட்டத்தில்தான் பல்வேறு கணங்கள் ராணுவ ஜன நாயகங்களாகவோ, மற்றவருக்கு இடம் தராத மேன்மக்களின் ஆட்சி முறைகளாகவோ வளர்ந்தன; அவை தமது வர்க்கபேதமற்ற அமைப்புகளை தகர்த்தன; உடைமை, அடிமைமுறை ஆகியவற்றின் வளர்ச்சிக்கேற்றவாறு புதிய ஸ்தாபன வடிவங்களை உருவாக்கின: அதாவது அரசையும் வர்க்க ஆட்சியையும் தோன்றச் செய்தன.

கால்நடைகள், விவசாயம், கைத்தொழில்கள் ஆகியவற்றின் செல்வத்தின் அடிப்படையிலும், வைசிய உழைப்பாளிகள், அடிமை உழைப்பாளிகள் ஆகியோரால் கிடைக்கும் ஆதாயத்தின் அடிப்படையிலும் கணங்களின் செல்வமும் அதிகாரமும் வளர்ந்தன. அவை மேலும் கீழ்த்திசையில் சென்று கங்கைநதியின் பள்ளத்தாக்கில் பரவின. இந்த கட்டத்தில்தான் கணங்களுக்குள் சகோதரச் சண்டைகள், பரசுராமர், ஹைஹயர் முதலியோரின் வர்ணச் சண்டைகள், கணங்களில் வெடிக்கின்றன.

கங்கைநதிப் பள்ளத்தாக்கை அடைந்த பிற்பாடுதான், திருத்தமான ஹிந்து அடிமை ராஜ்யம் ஜனிப்பதற்குப் பக்குவமாகிறது. அப்போதுதான் பாரத யுத்தம் நிகழ்கிறது. இது கி. மு. 2000 லிருந்து கி. மு. 1500வரை நடந்திருக்கிறது. பாரத யுத்தத்தின் காலவரையறை சம்பந்தமாகக் கணிக்கப்பட்டிருக்கும் தேதிகளில் இதுவே மிகவும் பிந்தியது. கி. மு. 3000த்தில் பாரத யுத்தம் நடந்தது என்று சிலர் கூறுகிறுர்கள். ஆனல் அது பொதுவாக ஒப்புக்கொள்ளப்படவில்லை.

பாரத யுத்தம் பரஸ்பர அழிவை உண்டாக்குகிறது. எனவே அதன்பிறகு கொஞ்ச காலத்திற்கு எத்தகைய வலுவான ராஜ்ய

மும் எங்கும் ஏற்படவில்லை. அடிமை அரசுகளின் வளர்ச்சி தடுக்கப்படுகிறது. வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை கண சங்கங்கள் மீண்டும் பெறுகின்றன. ஆனல் அது குறுகிய காலத்திற்குத் தான். பாதி-அடிமை, பாதி-பிரபுத்வ அரசுகள், அதிகாரத்தை ஒரு மையப்படுத்திய அரசுகள், கங்கைநதிப் பள்ளத்தாக்கில் வளருகின்றன; கண சங்கங்களை விழுங்குகின்றன. ஹிமாசலம், விந்தியமலை, சிந்துநதிப் பள்ளத்தாக்கு ஆகியவற்றில் சில கண சங்கங்கள் மிஞ்சி வாழ்கின்றன; பாடலிபுத்திரம், ஹஸ்தினுபுரம் ஆகியவற்றின் கரத்துக்குக் கிட்டமுடியாத தூரத்திலிருப்பதால் அவை மிஞ்சி வாழ்கின்றன. அவற்றில் சில, அலெக்ஸாண்டர் தலைமையில் கிரேக்கர்கள் வரும்வரை அழியாமல் இருக்கின்றன. நம்மால் குறிப்பிடப்பட்ட கண சங்கங்கள் நாம் விவரித்துள்ள வகையில் வாழ்ந்தன என்ற உண்மைக்கு அலெக்ஸாண்டரின் சரித்திரக்காரர்கள் சான்று அளித்திருக்கின்றனர்.

கிரேக்கர்களின் சான்றைத்தவிர, பண்டைக்கால இந்திய எழுத்தாளர்களின் குறிப்புகளும் உள்ளன. இவற்றைத் தொகுத்துப்பார்த்தால், நாம் சில பூர்வீகக் கணங்களைப் புரிந்துகொள்ள முடியும், நிர்ணயிக்கமுடியும். மகாபாரத யுத்தத்துக்கு முன்னுல், அதாவது அடிமை அரசின் இறுதி வெற்றிக்குமுன்னுல், அந்தக் கணங்களில் நிலவிய நிலைமைகளைப் புரிந்துகொள்வதற்கும் அந்தக் குறிப்புகளில் சில வழித்துணையாகப் பயன்படும்.

இயல்பாகவே, புராதன காலத்தின் பிற்பகுதியில், பூர்வீகக் கம்யூனில் வாழும் கணத்தைக் காணலாமென்று எவரும் எதிர்பார்க்கமுடியாது. ஆனுல் புராதன காலத்தின் பிற்பகுதியில் அத்தகைய கணங்கள் மெய்யாகவே வாழ்ந்தன, இன்ப வாழ்வை நடத்தின என்று குறிப்பிடப்படுவதை நாம் பார்க்கிறோம். இந்தக் கணங்கள் அராஜக நிலைமைகளில் வாழ்ந்ததாகக் குறிப்பிடப்படுகிறது. அராஜகம் என்பதைக் கொச்சைப்படுத்தி, குழப்பம் என்று பொருள்படுத்துகிறுர்கள். அடிமை ஏற்பாட்டுக்குரிய காலத்தில் வாழ்ந்த எழுத்தாளர்களும் முடியாட்சியின் வாதிகளும் அந்த அராஜகக் கணங்களை மிகக் கேவலமானமுறையில் விவரித்தனர். ஆனுல் அந்தத் தூஷணையிலிருந்தே, இந்தக் கணங்களின்

யதார்த்த பண்புகளை அறிந்துகொள்ளமுடியும். "என்னுடையது", "உன்னுடையது" என்று பகுத்துப்பார்க்காத சமுதாயங்களாக வைராஜ்ய கணங்கள், கௌடில்யாவின் அர்த்த சாஸ்திரத்தில் வர்ணிக்கப்படுவதை முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். அராஜகம் மேலும் மோசமாக விருப்பதாகச் சொல்லப்படுகிறது. முன் காலத்தில் சகல மக்களும் அராஜகத்தில் வாழ்ந்தபொழுது, அவர்கள் ஒருவரையொருவர் கொன்று அழித்ததாக மகாபாரதம் நமக்கு உறுதியாகக் கூறுகிறது. அதன்பின் அவர்கள், எல்லோருக்கும் தாத்தாவாக விருந்த கடவுளிடம் சென்றனர்; அப்பொழுது அவர் அவர்களிடம், ஆட்சிபுரிவதற்கு ஒரு அரசனை வைத்துக்கொள்ளும்படி, யோசனை கூறினர். ஆனால் இந்த உபதேசம் தங்களுக்குத் தேவையில்லையென்றும் அவருடைய முடியாட்சி அடிமைகளுக்குப் பயன்படுவது போதுமென்றும் சில கணங்கள் பதிலளித்ததாகத் தோன்றுகிறது. அவை அராஜகத்தில் தொடர்ந்து வாழ்ந்தன. கீழ்க்கண்ட வகைகளைச் சேர்ந்த கணங்கள் இருந்ததாக ஆசாரங்க சமன ஸூத்திரங்கள் குறிப்பிடுகின்றனர் :—அராயணி, கணாராயணி, ஜுவராயணி, தோ-ராஜஜனி, வி-ராஜ்ஜனி, விருத்த-ராஜ்ஜனி ஆகியவை. இந்த அறுவகைக் கணங்களில், அராயணி என்பதை நாம் முதலில் பார்ப்போம். அராயணி என்றால் அராஜகம் என்று பொருள்படும். இந்த அராயணிக் கணங்களின் பிரத்தியேகத் தன்மை என்னவெனில் அவற்றில் தனிஉடமை கிடையாது, வர்க்கங்கள் கிடையாது, அடிமைகளும் சுரண்டலும் கிடையாது. எனவே, அவற்றை கௌடில்யர் வெறுத்தார்; மகாபாரதம் வெறுத்தது. அந்தக் கணங்கள் பழையமுறையில் கூட்டுவேலை செய்தும் கூட்டாக உண்டும் வாழ்ந்தன. அதர்வ வேதம் அந்தச் சமுதாய ஏற்பாட்டை விவரிக்கிறது; அதில், சகல கண அங்கத்தினர்களுக்கும் பின்வருமாறு கூறப்படுகிறது :—

"......ஒருவரோடொருவர் ஒத்துழைத்துக்கொண்டு ஒரே வண்டிக்கம்பத்தின் வழியே முன்னேறுகிற நீங்கள், ஒருவரோடொருவர் சௌஜன்யமாகப் பேசிக்கொள்ளும் நீங்கள் இங்கு வருக!......நீங்கள் ஒரே பானத்தைக் குடிக்கவேண்டும்; உங்களுடைய உணவு பொதுவானதாக விருக்கவேண்டும். நான் உங்களைச் சேர்த்து ஒரே வகையான இழுவைவார்களில் பூட்டு

கிறேன்." (அதர்வ வேதம், புளூம் பீல்டு என்பவரின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து.)

இத்தகைய சமூகத்தை, தென்னிந்தியாவில், சமண யாத்திரீகர் கண்கூடாகக் கண்டார். அலெக்ஸாண்டருடன் வந்த கிரேக்கச் சரித்திரக்காரரும் நேரில் கண்டார்; அந்த மக்கள் சுகமாக வாழ்ந்ததாக அவர் குறிப்பிடுகிருர். அதர்வ வேதத்தில் விவரிக்கப்படும் முறையில் பிரஜைகள் பொதுவாக தமது உணவைப் புசித்தார்கள்.[1] "யுத்தம்போன்ற எந்தக் கலையையும் மிதமிஞ்சிய வேகத்துடன் பின்பற்றுவது குற்றம் என்று அவர்கள் கருதுகிருர்கள்." (ஸ்ட்ராபோ, XV, 34. ஜயஸ்வால் இந்த வாசகத்தை மேற்கோள் காட்டியிருக்கிருர்.) முஸிக்கர்னி என்று கிரேக்கர்கள் இந்த மக்களுக்குப் பெயரிட்டிருக்கிருர்கள்; அவ்வாறு பெயரிடப்பட்டவர்கள் முச்சிகர்னிகா என்பவர்களே என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

அராஜகக் கணங்களில் சில கணங்களே சரித்திரக்காலத்தில் மிஞ்சியிருந்தன என்பது இயல்பே; ஏனெனில், இந்தியாவில் அடிமை அரசுகளும் தனிஉடமையும் பயங்கரமான அழிவுச்சக்தியுடன், பூர்வீகக் கம்யூன்களை அழித்துக்கொண்டிருந்தன.

அடுத்தபடி முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பவை வைராஜ்ய அமைப்பைக் கொண்ட கணங்களாகும். அரசும் முடியாட்சியும் இந்தக் கணங்களிலும் உருப்பெறவில்லை. ஆனல் வர்ணமுறை வேலைப்பிரிவினையும், சொத்து வித்தியாசங்களும் அவற்றில் உருப்பெற்றிருந்தன; தந்தைவழி ஏற்பாட்டின் அடிமைத்தனம்கூட அவற்றில் உண்டாகியிருந்தது. வைராஜ்ய சமூக அமைப்பில் மக்கள் வாழ்ந்தனரென்பதை ஐதரேயப் பிராம்மணமும் அஜுர் வேதமும் குறிப்பிடுகின்றன.

வடக்கே உத்தர குருக்களும் உத்தர மத்ரர்களும் இருந்தனர்;

---

1 கணம் முழுவதும் சேர்ந்து உண்பது என்பது. சமுதாயத்தின் வனபோஜனக் கேளிக்கைகள் அல்ல; தனிஉடமையும் அடிமைமுறையும் உதயமாகாத பூர்விகக் கம்யூன் வாழ்வின் இன்றியமையாத பகுதியாக அது இருந்தது.

தெற்கே வேறு சில கணங்கள் இருந்தன. இந்தக் குரு சமூகத்தினரும் மத்திரர்களும் ஹிமாலயப் பிரதேசங்களில் வாழ்ந்தனர்.

இந்தக் குரு சமூகத்தினருக்கும் மத்திரர்களுக்கும் உரியதாக இருந்த விசேஷத் தன்மை என்ன? அவற்றில் "ஜனபதம் முழுமையும் ஆட்சியாளராக முடி சூட்டப்பட்டது." அதாவது, அவை ஜனநாயகங்களாக விளங்கின. ஆனால் யாருடைய ஜன நாயகம்? இயற்கையாக அமைந்த பழைய கண ஜனநாயகமா? இல்லை. குருக்கள், மத்திரர்கள் ஆகியோரின் இந்த ஜனநாயகம் வைராஜ்யம் எனப்பட்டது; ஏனென்றால், அவற்றில் ஜனபதம் முடிசூட்டப்பட்டதுமட்டும் காரணமல்ல; ஒரு புத்தம்புதிய, பிரத்தியேகமான சமுதாய அமைப்பு வைராஜ்ய ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்டதாக, புருஷ ஸூக்தத்தின் ஆசிரியர் எழுதுகிறார். இந்த புத்தம்புதிய விசேஷம் என்ன? அதுவரை, அவர்களிடையே மூன்று வர்ணங்களே இருந்தன; இப்பொழுது, சூத்திரவர்ணம் என்ற நான்காவது வர்ணம் அவர்களுக்குக் கிடைக்கிறது. அதன் பிறகு, உத்தரகுருக்கள் பெருகுகிறார்கள்; சுபீட்சமடைகிறார்கள்; பூமிமுழுவதையும் வசப்படுத்திக்கொள்ளத் தொடங்குகிறார்கள். அவர்கள் விசுவரூபம் எடுக்கிறார்கள். அரசை நோக்கி, சூத்திர அடிமைகளை அடக்கிஆளும் திரிவர்ணப் பணக்காரர்களின் அரசை நோக்கி, அவர்கள் முதல் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். புருஷன் (அதாவது கணத்தின் மக்கள்) புதிய வடிவத்தை மேற்கொள்வதாக புருஷ-சூக்தத்தில் குறிப்பிடப்படுவது இதுவே. இந்தப் புதியமுறையில் சுபீட்சமும் வளர்ச்சியும், கணக்கிடமுடியாத அளவுக்குப் பெருகியதைக் குறித்து வைதீக நூலாசிரியர் பூரித்துப்போகிறார். சூத்திரர்களுடன் சேர்ந்து தானும் தன் குடும்பமுமாக உழைத்துக்கொண்டிருந்த தந்தைவழிச் சமூகத் தலைவனுகவே ஆரிய அடிமைச் சொந்தக்காரன் இருந்தபொழுதிலும், அவன் அப்பொழுதே கண்டுபிடிக்கப்பட்ட அடிமைமுறையின் துணையுடன் சுபீட்சம் எய்தினன்; அத்தகைய ஆரிய அடிமைச் சொந்தக்காரனின் பாடலாகவே புருஷசூக்தம் விளங்குகிறது. ஆக வைராஜ்ய கண ஜனநாயகமும், மற்றவருக்கு இடம் தராத ஒரு மேன்மக்கள் ஆட்சியாகவே விளங்கியது. அதில் ஜனசபை அரசுபுரிந்தது. ஆனல் ஜனபதம் எனப்பட்ட அந்த ஜன சமூகத்

தில் சூத்திரர்களுக்கு இடமில்லை. எனவே சூத்திரர்களை விலக்கி வைத்த மேன்மக்களாட்சியாகவே அது இருந்தது. பிற்பாடு ஏழை ஆரிய வைசியன்கூட, இந்த சலுகைபெற்ற மேன்மக்கள் தொகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டான்.

வைராஜ்யத்துக்கு அடுத்த கட்டமாக அல்லது வைராஜ்யத்தின் சமகால அமைப்பாக சுயராஜ்ய ஸ்தாபனம் இருந்தது. ஐதரேய பிராம்மணம் இதை விவரிக்கிறது. இந்த முறை மேற்கு இந்தியாவில் நிலவியது. சுயராஜ்ய கண அமைப்பில் கணம் மிகப் பெரிதாகிவிட்டது. எனவே எல்லோரும் ராஜ்ய விவகாரங்களில் பங்கெடுக்கமுடியவில்லை. எனவே மூத்தோர்களின் குழு தேர்ந்தெடுக்கப்படுகிறது. இந்த சபை கூட்டுவேலையைச் செய்ய வேண்டும். ஒரு கணத்தின் அமைப்பிலோ அல்லது பல கணங்களின் சமஷ்டி யமைப்பிலோ ஏற்பட்ட இந்த மூத்தோர் சபைகள். நிரந்தரமான வம்ச பரம்பரையான பெருமக்கள் தொகுதியாக காலப்போக்கில் மாறுகின்றது. எனவேதான் பிற்பாடு, கணமென்பது குடும்பங்களின் கூட்டுறவாக வர்ணிக்கப்படுகிறது. சுயராஜ்யத்தின் உள்ளடக்கம் என்ன? சுயஆட்சி என்பது அந்தச் சொல்லின், நேரடியான பொருள். ஆனல் அந்த அமைப்பு அந்தப் பொருளைக் குறிக்கவில்லை. கணத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, புனிதப்படுத்தப்பட்ட தலைமை, சுயமாக செயலாற்றும் உரிமையைக் கொண்டது என்றுதான், சுயராஜ்யம் என்ற சொல் பொருள்படுகிறது. அந்தத் தலைமை "மூத்தோர்களைக் கொண்டதாக" ஆகிறது. முன்னல் கண அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் அங்கத்தினர்களுடன் சம அந்தஸ்து கொண்டவர்களாகவே யிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் அங்கத்தினர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக அல்லது மூத்தவர்களாக ஆகிருர்கள். இதை தைத்திரீயப் பிராம்மணம் விவரிக்கிறது.

புராதனக் கம்யூன் தன் பூர்வீகத்தன்மையை இழந்து தனி உடமையை, வர்க்கங்களை, ஏழை பணக்காரர்களை, அடிமைகள்—சுதந்திரர்களை, கொண்டதாக உருப்பெறத் தொடங்கும்போது, அது இயற்கையாக அமைந்த பழைய ஜனநாயகமாக யில்லாமற்

போய்விடுகிறது என்பதை—இந்திரன் தேவர்கள் ஆகியோரின் காலத்துக் கம்யூனுக அது இல்லாமல்போய்விடுகிறது என்பதை— மேற்சொன்ன விஷயங்களிலிருந்து அறியமுடியும். இந்தக் கம்யூனைது தன் விவகாரங்களை நிர்வகிப்பதற்காக புதிய உறுப்புகளை உண்டாக்குகிறது ; வர்க்க முரண்பாடுகள் தீவிரமடைந்து, பலாத்காரப் போராட்டங்களில் வெடித்து இறுதியாக ராஜ்யமென்ற வர்க்க ஆட்சிக் கருவியை ஸ்தாபிக்கும் கட்டத்தை, இந்தக் கம்யூன் படிப்படியாக அணுகுகிறது. இப்பொழுதே, இந்தக் கணங்கள், கண-கோத்திரங்களைப்பற்றிப் பேசுவதை நிறுத்திக்கொண்டிருக்கின்றன. கண உறுப்பினர்களுடன் அன்னியர்களையும் தழுவிய பிரதேச அரசியல் அமைப்பான ராஜ்யத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றன. கண-கம்யூன்களின் ஆரம்பகாலத்தில் கணம் சிறியதாயிருந்தது ; எல்லோரும் சேர்ந்துகூடி அதன் விவகாரங்களை நிர்வகித்தார்கள். அவர்கள் போருக்காக ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்கவேண்டியிருந்தபொழுது எல்லோரும் சேர்ந்து அவனைத் தேர்ந்தெடுத்தனர். பிறகு யுத்தம் ஒரு தொழிலாகவே ஆயிற்று. தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை ஏறக்குறைய நிரந்தரமாயிற்று. சமிதி அல்லது நரிஷ்டம் எனப்பட்ட கம்யூன் கூட்டத்துக்கு பதிலாக சபை(குழு) அமைந்தது. எனினும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை வம்ச பரம்பரை முடியாட்சியாக ஆகவில்லை ; பிரத்யேக சலுகைபெற்ற மேன்மக்கள் தொகுதியாக ஆயிற்று. ஆனால் அது தன் அதிகாரத்தைத் தேர்தலிலிருந்தே பெற்றது. அப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவன் கணத்தினுல்தான் புனிதப்படுத்தப்பட்டான். கணத்தில் தனிஉடமையும் வர்ணங்களும், அடிமைமுறையும் உருப்பெறும்பொழுது அது ராஜ்யம் ஆகிறது. "ஆள்வதற்காக" தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமைக் குழுவினர் அரசர்களாகின்றனர்.

மேன்மக்களின் குடும்பங்கள் ராஜ குடும்பங்களாகின்றன. சரித்திரப்போக்கில் நடைபெற்ற வர்க்கப் போராட்டங்களில் அடிமைகளின் உடமைக்காரர்கள் வெற்றியடைந்தபொழுது, இந்த ராஜ குடும்பங்களில் ஒன்று, அதாவது மற்றவர்களைவிட அதிகமாக சூத்திரர்களையும் நிலத்தையும் உடமையாகக் கொண்ட குடும்பம், பரம்பரை முடியரசாகிறது. பிறகு தேர்தல் சடங்கில்

சில மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஒரு சில மாறுதல்களுடன் கூடிய இந்தச் சடங்கு மன்னனின் பட்டாபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. சமிதியில், கணத்தின் பரிபூர்ண ஜன நாயகம் செயலாற்றியது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாயிருந்தாலும் சொத்துள்ள குடும்பங்களின் தலைவர்களான சிலரே சபையில் செயலாற்றுகிறார்கள். நகரமும் நாட்டுப்புறமும் பிரியும் பொழுது ஒரு பக்கத்தில் கைத்தொழிலும் வியாபாரமும், மறு பக்கத்தில் விவசாயமும் பிரியத் தொடங்குகின்றன; உற்பத்தி, பரிவர்த்தனை, உடமை ஆகியவற்றின் வெவ்வேறான கவர்ச்சி மையங்களை உருவாக்குகின்றன; ஜனபதமும் பௌரமும் தோன்றுகின்றன. ஜனபதமென்பது உடமையின் விவசாய மையமாகவும், பௌரமென்பது செல்வம் படைத்த கைத்தொழில் சங்கங்களும் வியாபாரிகளும் கூடக்கூடிய ஸ்தாபனமாகவும் விளங்குகின்றன. பணம்படைத்த கைத்தொழில் சங்கங்களும் வியாபாரிகளும் நகரத்தையும் அரச தர்பாரையும் கவர்ச்சி மையமாகக் கொண்டிருந்தனர். சமிதி-சபைக்கு பதிலாக ஜனபதமும் பௌரமும் ஏற்படும்பொழுது கணத்துக்கு முடிவு ஏற்பட்டுவிடுகிறது. சுரண்டுகிறவர்களின் நலன்களுக்காக சுரண்டப்படுகிறவர்களின் மீது அரசுபுரிகிற ராஜ்யம் ஏற்பட்டுவிடுகிறது. பொதுவாக நமது சரித்திரக்காரர்கள், ஜனபதம், பௌரம் ஆகியவற்றின் இந்த வர்க்கத் தன்மையைப் பார்ப்பதில்லை.

பாரதப் போருக்குப் பின்னர் வாழ்ந்த மகத்தான இலக்கண கர்த்தாவான பாணினியாரின் நூல்களிலும் மகாபாரதத்தின் பிற அத்தியாயங்களைக் காட்டிலும் காலந்தாழ்ந்து எழுதப்பட்ட அத்தியாயங்களிலும், மக்கள் கணமுறையில் வாழ்வதைப்பற்றி நாம் அறிகிறோம். ஆனால் அந்தக் கணங்களில் சொத்துள்ள குடும்பங்கள் ஆதிக்கம்பெறுவதற்காக தமக்கிடையே மூர்க்கம் நிறைந்த போராட்டத்தை நடத்துவதையும், கண ஜனநாயகம் முழுவதையும் எதிர்த்து அந்த உடமைக்காரக் குடும்பங்கள் மூர்க்கம் நிறைந்த போராட்டம் நடத்துவதையும் நாம் பார்க்கிறோம்.

பாணினி, கணங்களின் சமஷ்டிகள் பலவற்றைக் குறிப்பிடுகிறார். அவற்றை கண-சங்கங்கள் என்று அழைக்கிறார். அவற்றை

இரண்டு பெயர்களால் வகைப்படுத்துகிறார். சில கண சங்கங்களை ஆயுதஜீவின் சங்கங்கள் என்று அழைக்கிறார். பிற்பாடு, கௌடில்யர் இவற்றை சஸ்த்ரோபஜீவின் என்று குறிப்பிடுகிறார். இரண்டு சொற்களுக்கும் பொருள் ஒன்றே. ஆயுதஜீவின், வார்த்தா-சஸ்த்ரோபஜீவின் என்றும் குறிப்பிடப்படுகிறது. (வார்த்தா என்றால் விவசாயம் என்று பொருள்.) இந்தவகைக் கணங்களை, ராஜசப்தோபஜீவின் என்று அழைக்கப்படும் வகையினரோடு ஒப்பிட்டு, வேற்றுமை புலப்படுத்தப்படுகிறது. இந்தப் பண்புச் சொற்கள் குறிக்கும் சமூக ஸ்தாபனத்தை எந்த விமர்சகரும் முறையாக விளக்கவில்லை; இந்திய வரலாற்றை எழுதும்பொழுது, அதில் இந்தக் கணங்கள் வகிக்கவேண்டிய ஸ்தானத்தை நிலைநாட்டிய பெருநூலை எழுதிய ஜயஸ்வால்கூட, இந்தப் பண்புச் சொற்கள் குறிக்கும் சமுதாய ஸ்தாபனத்தை முறையாக விளக்கவில்லை. இந்தப் பண்புச் சொற்கள் கணங்களின் ஒருவகையான சமூகப் பொருளாதார அமைப்பை அல்லது சமூக-அரசியல் ஸ்தாபனத்தைக் குறிக்கின்றனவென்பதில் ஐயம் இல்லை. ஆனால் இந்த இருவகைக் கணங்களுக்கிடையேயும், இவற்றுக்கும் புராதனக் கணங்களுக்கும் இடையேயும் உள்ள திட்டமான வேறுபாடு பிடிபடவில்லையென்று தோன்றுகிறது.

ஆயுதஜீவின் சங்கங்கள் அல்லது சஸ்த்ரோபஜீவின் சங்கங்கள் என்றால், கணத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் ஆயுதம் தரித்திருக்கும் பழைய இயல்பைக் கொண்டிருந்த கணங்கள் என்று பொருள் படும். ஆனால் சமூக ஸ்தாபனத்தின் விசேஷ அம்சமாக இதைக் குறிப்பிடுவதின் காரணம் என்ன? கண உறுப்பினர்கள் வர்க்க ஆட்சியையும் நிரந்தரமான வர்க்கப் பிரிவினைகளையும் இன்னும் உருவாக்கிக்கொள்ளவில்லையென்பது இதன் அர்த்தமாகும். அவை உருவாகிவிட்டால், ஆளும்வர்க்கம் மட்டுமே ஆயுத பலத்தை அல்லது நிரந்தர ராணுவத்தைப் பெற்றிருக்கும்; உழைப்பாளிமக்கள் நிராயுதபாணியாக இருப்பார்கள்; அவர்கள் ஆளும் வர்க்கத்தின் ஆட்சிக்குட்பட்டவர்களாக இருப்பார்கள். ஆயுதம் தரிக்கும் உரிமையைப் பிரத்தியேகமாகப் பெற்று அனுபவிக்கும் வம்ச பரம்பரைப் பெருமக்களாக, தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை மாறவில்லையென்பதை ஆயுதஜீவின் சங்

கம் அல்லது சஸ்த்ரோபஜீவின் சங்கம் குறிக்கிறது. முடியாட்சியைப் பெற்ற வர்க்க ராஜ்யத்தின் எழுத்தாளர்கள், கணத்தின் இந்த விசேஷப் பண்பைக் கண்டு ஆச்சரியமடைந்திருக்க வேண்டும். அந்த வகைக் கணம் ராணுவ ஜனநாயகமாக விருந்தது எனினும், அது மிகப் புராதனமான கம்யூன்கள் இருந்தமாதிரி, கொஞ்சம்கூட வர்க்கபேதமில்லாமல் இருக்கவில்லை. உடமை வேறுபாடுகள் அதில் ஊடுருவிவிட்டன. விவசாயம் (வடமொழியில் 'வார்த்தா'), வர்த்தகம், பணம், செல்வம்; தந்தை வழிச்சமூக அடிமைமுறை ஆகியவை அந்த கணத்திற்குள் வந்துவிட்டன. ஆனல் ஏழைகளாகவும் உழைப்பாளிகளாகவும் உள்ள ஆரிய வைசியர்களை நிராயுதபாணிகளாக்கி அடக்கி வைக்கும் அளவுக்கு விட்டுக்கொடுக்காமல் போராடும் வகையில் வர்க்க முரண்பாடுகள் தீவிரமடையவில்லை. கணத்தில் அனைவரும் உழைத்தார்கள்; சூத்திர அடிமைகள் தவிர, மீதி எல்லோரும் ஆயுதம் தாங்கினர்கள். ஆயுதமேந்தியவர்களாகவும் உழைப்பாளிகளாகவும் உள்ளவர்களைக்கொண்ட கணத்தின் தலைமைக்கு பணக்காரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இதுவே கி. மு. 300 வரையில் இந்திய சரித்திரத்தில் இடம் பெற்றிருந்த வார்த்தா சஸ்த்ரோப ஜீவின் சங்கம் அல்லது ஆயுத ஜீவின் சங்கமாகும். இத்தகைய சங்கங்கள் சிலவற்றின் பெயர்கள் பின்வருமாறு இருந்தனவென்று குறிப்படப்படுகிறது.

(1) வ்ரிகா **(2)** தாமனி (முதலியவை), **(3)** கௌண்டோபரத **(4)** தாண்டகி **(5)** கௌஷ்டகி **(6)** ஜாலமானி **(7)** பிராமகுப்தா **(8)** ஜானகி **(3** முதல் 8 முடியவுள்ள இந்த ஆறு திரிகர்த்தர்களும் ஒன்றுபட்டு ஒரு சமஷ்டியை அமைத்திருந்தன.) **(9)** யௌதேயாவும் மற்றவைகளும் **(10)** பார்ஸவாவும் மற்றவையும் **(11)** ஷாட்ரகா **(12)** மாலவா **(13)** காதா **(14)** ஸௌபூதி **(15)** சிபி **(16)** பாதாலா **(17)** பாகாலா **(18)** காம்போஜம் **(19)** சுராஷ்ரா **(20)** க்ஷத்ரியர் **(21)** சிரேனி **(22)** பிரமனாங் **(23)** அம்பஷ்தா.

கங்கை பள்ளத்தாக்கிலிருந்த பலம்வாய்ந்த அடிமை ராஜ்யங்களின் நிர்ப்பந்தம் காரணமாகவும் இந்த கணங்களுக்குள்ளேயே வளர்ந்துகொண்டிருந்த விவசாய-வியாபாரப் பொருளாதாரத்தின்

காரணமாகவும் அந்தக் கணங்கள், தற்காப்புக்காகவும், யுத்தம் செய்வதற்காகவும், வளர்ச்சிக்கு வழி செய்வதற்காகவும், பல சமஷ்டிகளை அமைத்துக்கொண்டன என்பது இங்கு குறிப்பிடத் தக்கது. ஆனால் துர்ப்பாக்கியவசமாக, கங்கைநதிப் பள்ளத் தாக்கின் ஆரிய "சனுதனிகளுடைய" அடிமை முறை அரசுகள் இந்த சமஷ்டிகளை அழிக்கும் நிலைமையை சரித்திரம் விதித்து விட்டது.

இந்த கணங்களின் மிகப் பெரும்பாலானவை எங்கே வாழ்ந் தன? அவை வஹிகா தேசத்தில், அதாவது பாஞ்சாலத்தி லிருந்து, தெற்கே சிந்து மாகாணம் முடிய, சிந்துநதிப் பள்ளத் தாக்கில் வாழ்ந்தனவென்று பாணினி கூறுகிறார். ஷுட்ரகர் களும் மாலவர்களும் சிந்துப் பிரதேசத்திற்கு அருகேயிருந்தார் கள். ஆறு திரிகர்த்தர்களும் ஹிமாலயப் பிரதேசத்தில் ஜம்மு வுக்கு அருகில் இருந்தனர். இந்தியாவின் மேல் பகுதி தென் மேற்குப் பகுதி முழுமையும் தெற்கே விந்தியமலைத் தொடர்வரை யில், மேற்சொன்ன கண சங்கங்களின் ராணுவ ஜனநாயகங் களுடைய ஆதீனத்தில் இருந்தன. ஒரு வர்க்கத்தின் பலாத் காரத்தை அடிப்படையாகக் கொண்ட ராஜ்யம், அடிமை உட மைக்காரர்களும் தனி உடமையும் நடத்தும் சர்வாதிகாரம், முடியாட்சி ரூபத்தில் இருந்தாலும் சரி குடியரசு ரூபத்தில் இருந் தாலும் சரி, இந்தியா முழுவதையும் விழுங்குவதற்கு முன்னால் பல நூற்றாண்டுகள் போராடவேண்டியிருந்தது என்பதை இந்தக் கண சங்கங்கள் தமது சாதனை மூலம் சரித்திரத்தில் பிரகடனம் செய்கின்றன. இந்த கண சங்கங்களின் ஒற்றுமையும் திடமான உள்ளமைப்பும், உடமை வித்தியாசங்களாலும் அடிமை முறையா லும் பழுதுபட்டிருந்தபோதிலும் அவை பலம் வாய்ந்தவையாக யிருந்தன; எனவே அலெக்ஸாண்டர் தலைமையில்வந்த வெற்றி வீரர்களான கிரேக்கர்கள் சிந்து நதிக்கரையில் இந்த கண சங்கங் களால் தோற்கடிக்கப்படும் நிலையை அடைந்தனர். இந்த கண சங்கங்கள் எங்காவது அலக்ஸாண்டருக்கு முன் சரணடைந் தார்களென்றால் அதற்குக் காரணம், அவற்றில் ஏற்கனவே வலுப்பெற்றிருந்த உடமை வர்க்கங்களாகும்; அந்த உடமை வர்க் கங்கள் சண்டையையும், அவசியமானால் சண்டையில் பூரணமாக

அழிவதையும்விட, ஆக்கிரமிப்பாளர்களுடன் சமாதானம் செய்து கொள்வதை அதிகமாக விரும்பின.

சௌபூதி, காதா கணங்களைப் பற்றி எழுதும் பொழுது, அந்தக் கணங்களின் பெண்கள் தமது இஷ்டப்படி மணம்புரிந்து கொண்டதாகக் கிரேக்கர்கள் கூறுகிறார்கள். (ஒரு வேளை இது காந்தர்வத் திருமணத்தையும் சுயம்வரத்தையும் குறிப்பிடலாம்.) அந்தக் கணங்கள் தமது அங்கத்தினர்களின் பலத்தையும் அழகையும் மதித்துப் போற்றினார்கள். குழந்தைகளின் வளர்ப்பைப்பற்றி கிரேக்க எழுத்தாளர் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

"இங்கு தாய் தந்தை கருத்துப்படி குழந்தைகளை ஒப்புக் கொண்டு வளர்ப்பதில்லை; பெற்றோர்களின் வைத்திய பரிசோதனைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளின் கட்டளைப்படியே குழந்தைகளை ஒப்புக்கொள்வார்கள், வளர்ப்பார்கள். குழந்தைகளின் கைகால்களில் ஏதாவது பங்கம் ஏற்பட்டிருந்தால் அல்லது குறைபாடு இருந்தால் அந்தக் குழந்தைகளைக் கொன்றுவிட வேண்டுமென்று அந்த அதிகாரிகள் கட்டளையிடுகிறார்கள்."

இது ஒரு கணத்தில்தான் சாத்தியமாயிருந்திருக்கமுடியும். ஏனென்றால் கணத்தில், மிகவும் மோசமான வறுமையிருந்ததில்லை. மறுபுறத்தில் செல்வங்களும் குவிந்திருந்ததில்லை. எனவே வாடிக்கையாக, கண உறுப்பினர்கள் நல்ல ஆரோக்யமுள்ள குழந்தைகளையே பெற்றெடுத்தனர். கோளாறுள்ள குழந்தை பிறப்பது விதிவிலக்காகவே யிருந்தது. மேலும் தனி உடைமை, குடும்பம், பிதுரார்ச்சிதம் ஆகியவற்றின் உரிமைகள், கணத்தின் நலன்களை விட உயர்ந்தவையாகவும் தலை சிறந்த முக்யத்வம் வாய்ந்தவையாகவும் இல்லாத காரணத்தாலும், கோளாறான குழந்தைகளைக் கொல்வது சாத்யமாயிருந்தது. தவிர இந்த கணங்கள் யுத்தம் நடத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில் இருந்ததாலும் அவை வாழ்ந்த அநாகரீக காலத்தில் பொருளுற்பத்திக்குத் தேவையான செல்வாதாரங்களும் தொழில் ஞானமும் மிகக் குறைவாக யிருந்தாலும் போர்வீரர்களைத் தயாரிப்பதற்கு இத்தகைய முன் எச்சரிக்கைகளை எடுக்க வேண்டியதாயிற்று.

பாணினி, கௌடில்யர், கிரேக்கர்கள் ஆகியோரின் நூல்களில் நாம் இந்த கண சங்கங்களைச் சந்திக்கும்பொழுதே, அவற்றில் உடமை வேறுபாடுகளும் அவற்றின் விளைவாக வர்க்க வேறுபாடுகளும் உண்டாகிவிட்டன என்பது வெளிப்படை. இந்த வேறுபாடுகள் மொழி அமைப்பில்கூட நிலை கொண்டன. மல்லாவின் சுதந்திரப் பிரஜை மாலவா என்று அழைக்கப்பட்டார். சூத்திர அடிமையும் கைத்தொழிலாளியும் மாலவ்யா என்று வேறு விதமாக அழைக்கப்பட்டனர். யௌதேயர்கள் கண சங்கத்து நிர்வாகத்தை ஐந்தாயிரம் பிரதிநிதிகளைக் கொண்ட சபையிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் ஒரு பிரதிநிதியாக இருக்கக்கூடியவர் யார்? தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் கணத்துக்கு ஒரு யானையைக் கொடுப்பவரே பிரதிநிதியாக ஆக முடியும். இவ்வாருக யானையை உடையவர்கள், அல்லாதவர்கள் என்ற பிரிவினையிருந்ததை நாம் பார்க்கமுடிகிறது. கண சங்கத்தில் ஏழை பணக்காரன் வேறுபாடு இருந்ததை இது எடுத்துக்காட்டுகிறது. இதன் பலனை அம்பஷ்தர்களிடையே பார்க்கிறோம். அவர்கள் இந்தப் பணக்கார முத்தோர்களுடைய யோசனையின் பேரில் மற்றவர்களுடைய கருத்துக்கு விரோதமாக, அலக்சாண்டர் முன்னால் சரணடைந்தார்கள். சுயநலனை நாடும் தனி உடமை தன்னுடைய சொந்த வர்க்க நலனைப் பாதுகாக்க, எப்பொழுதுமே படையெடுப்பாளர்களுக்கு முன் நாட்டைச் சரணடையச் செய்கிறது.

பதிவாகியுள்ள சரித்திரத்தில் குறிப்பிடப்படும் இரண்டாவது வகைப்பட்ட கண-சங்கங்கள் ராஜசப்தோபஜீவின் என்று அழைக்கப்படுகின்றன. இந்தக் கணங்களில் சொத்து வேறுபாடும், குல யுத்தங்களின் ஏற்பாடும் வெகுதூரம் முன்னேறிவிட்டன; கம்யூன் ஜனநாயகம் பெரிய அளவுக்குப் பலவீனமடைந்துவிட்டது; எனவே கணங்களில் வாடிக்கையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை ஒரு வம்ச பரம்பரை பெருமக்கட் தொகுதியாகத் தன்னை மாற்றிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது இந்தப் பெருமக்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களையே ஆட்சி புரியும் சபைகளுக்குத் தேர்ந்தெடுக்க முடியும். இந்தக் குடும்பங்களே கண-சங்கங்களின் ராஜன்கள் (அரசர்கள்) எனப்பட்டனர். இந்த அரசர்கள் ராணுவத்தின் தலைவர்களாகவோ தளபதிகளாகவோ இருந்திருக்கவேண்டு

மென்பது அவசியமில்லை. இந்த ராஜன்-கணங்களில் பிரசித்தி பெற்றவை, லிச்சவி, மல்லர், சாக்கியர், மௌரியர், குகாரர், குரு, பாஞ்சாலர் முதலியோராவர். பாரதக் கதையில் பிரசித்தி பெற்ற கிருஷ்ணனின், அந்தக - விருஷ்ணிகள், பிற்பாடு, ராஜன்-கணங் களின் அணியில் சேர்ந்தனர். தமது வைராஜ்ய அமைப்புடன், சூத்திரர்களை அடிமைப்படுத்தும் முறைக்கு ஸ்தாபகர்களாக விளங்கியவர்களும் பிரசித்தி பெற்றவர்களுமான குருக்கள், மத்தி ரர்கள் ஆகியோரின் சிலகிளைகள், ராஜன்யகண சங்கங்களாயின; அவை முதலில் வம்ச பரம்பரை பெருமக்கட் தொகுதியை உருவாக் கிக் கொண்டன; பிற்பாடு முடியாட்சியைக் கொண்ட அடிமை ராஜ் யங்களை அமைத்தன; அந்த வளர்ச்சி பாரதப் போரில் முடிந்தது. எனினும் மத்திரர்களின் சில கிளைகள் பின் தங்கியதாகத் தோன்று கிறது. அவை தம்முடைய உறுதியில்லாத வேலைப் பிரிவினையை யும் தீர்க்கமாயில்லாத சொத்து, வர்க்க வேறுபாட்டையும் உடும் புப் பிடியாக பிடித்துக் கொண்டிருந்ததாகத் தோன்றுகிறது. எனவே ஸ்மிருதிகளையும் சாந்தி பருவத்தையும் எழுதிய அடிமை உடமைக்கார வர்க்கத்திற்குரிய ஆசிரியர்கள் அவற்றை வெறுத்த னர். மத்திர கணத்தினரும் வஹிகாக்களும் வசிக்கும் தேசத்துக் குப் போகக் கூடாதென்று சகல கண்யமான பிராமணர்களையும் அவர்கள் எச்சரிக்கின்றனர். இந்த வஹிகாக்களும் மத்திரர்களும் செய்த பிரத்யேக பாவம் என்னவெனில், அவர்கள் தமது வர் ணத்தை அடிக்கடி மாற்றிக்கொண்டே யிருக்கிறார்கள். ஒருவர் ஒருநாள் பிராமணராகவும் இன்னொருநாள் க்ஷத்திரியராகவும் மற்றொரு நாள் வைசியராகவும் வேறொரு நாள் சூத்திரராகவும் மீண்டும் பிராமணராகவும் இருக்கிறார். அங்கு பெண்களுக்கு சுதந் திரம் இருக்கிறது. எல்லோரும் குடித்து உண்டு களித்து வாழ் கிறார்கள். இது அடிமை உடமைக்காரர்களுடைய பண்பாட்டின் பார்வையில் நிச்சயமாகப் "பாவகாரியம்"தான். ஏனெனில் அடிமை உடமைக்காரர்கள் மட்டுமே, சூத்திர அடிமைகள்மீது சவாரி செய்துகொண்டு, இன்பத்தையும் சுதந்திரத்தையும் ஏக போகமாக அனுபவிக்க வேண்டும்!

ஒரு கணம் முழுவதுமே, ஏங்கல்ஸ் கூறுவதுபோன்ற, "இரக்க மற்ற மேன்மக்கட் தொகுதியாக", பிரதேசத்தின் இதர பிரஜை

களுக்கு எதிராக அவர்களுக்கு இடந்தராத வகையில் அமைவ தற்கு நாம் ஒரு உதாரணத்தைக் காண முடியும். அதுவே வைசாலி யில் வாழ்ந்த லிச்சவி கணமாகும். லிச்சவிக்கள் 7707 ராஜன்களை (அரசர்களை)க் கொண்டிருந்தனர். அவர்கள் வைசாலி நகரத்தில் வாழ்ந்திருந்தனர். அவர்களே ஆளும் வர்க்கமாக யிருந்தனர். ஆட்சி புரிவதற்கும் நிர்வாகம் நடத்துவதற்கும் அதிகாரிகளையும் நிர்வாகிகளையும் அவர்களே தேர்ந்தெடுத்தனர். ஆனால் மொத்த ஜனத் தொகை 168 ஆயிரம். இந்த ஜனத்தொகை "புறப் பிரஜை கள்" என்றும் "உள் பிரஜைகள்" என்றும் இரு வர்க்கங்களாகப் பிரிக்கப் பட்டிருந்தனர். உள் பிரஜைகளே வைசாலியர்கள்.

புராதன காலத்து கண - கம்யூன்களும், அவற்றில் பிற்காலத் தில் வர்க்கங்களும் வர்க்க முரண்பாடுகளும் அடைந்த வளர்ச்சி யும், அந்த வளர்ச்சியின் விளைவாக அவற்றின் ஸ்தாபன அமைப் பிலும் சித்தாந்தத் தன்மையிலும் ஏற்பட்ட மாறுதல்களும் கட்டுக் கதையல்ல, இந்திய சரித்திரத்தின் ஒரு மெய்ப்பொருள் என்பதை இந்த சில உதாரணங்களிலிருந்து அறிய முடியும்.

ராஜ்யத்தின் உதயம்

ஆளும் வர்க்கமாக ஆகவேண்டுமென்பதற்காக, தனிஉடமை பலாத்காரமான போராட்டம் நடத்துமென்பதற்கு, தேவர்களுக்கும் விஷ்ணுக்கும் இடையே நடந்த போர் பற்றிய தேவ ஸத்ரக் கதை முன்னறிவிப்பாக விளங்கியது. அந்தக் கதையை முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். அந்த வளர்ச்சி அதன் முடிவற்ற நிலையிலேயே இருக்க முடியாது. பொருளுற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி இயல் அதை அனுமதிக்காது. கம்யூன் வீழ்ச்சி யடைந்த இழிவான கதையை கொஞ்சமும் ஒளிக்காமல் மறைக்காமல் எடுத்துக் கூறி வரும் சரித்திரக்காரரான பீஷ்மர் சொல்கிறார்:—பரிவர்த்தனை தனிஉடமை, பேராசை, சேமிப்பு ஆகியவை பண்டைக்காலக் கம்யூனில் பெருகியபொழுது, அது ஒன்றுக்கொன்று விரோதமான சக்திகளாகப் பிரிந்தது; கடுமையான போராட்டம் தொடங்கியது. தேவர்கள் கலக்கமடைந்தனர். தேவர்கள் கலக்கமடைந்ததற்கான காரணம் விசித்திரமானது. மற்றவர்களைப் போல மனிதர்களாகவே யிருந்த இந்தத் தேவர்கள், "மனிதர்களுக்குச் சமமானவர்களாக" ஆகிவிடுவோமென்ற அச்சத்தால், அவர்கள் கலக்கமடைந்தனராம். எனவே அவர்கள் படைப்புக் கர்த்தாவான பிரமனிடம் சென்றனர். மோதல்களின் விளைவாக பிரமன் அழிந்துவிட்டதாக முன்னால் குறிப்பிட்ட பீஷ்மர், நான்கு வரிகளுக்குப் பிறகு, தேவர்கள் மீட்சிக்கான மார்க்கத்தைக் காண்பதற்காக பிரமனிடம் சென்றதாகக் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. இந்தப் பிரமன், பிரமன் என்ற கம்யூன் அல்ல; இந்தப் பிரமன், கற்பிதமான படைப்புக் கர்த்தாவாகும். இந்தச் சம்பாஷணையின் பலன் என்ன? இவ்வாறு குறிப்பிடலாமென்றால், விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் தெய்வமான பிரமனின் தீர்ப்பினால் ஏற்பட்ட பலன் என்ன? உலகத்தை முறைப்படுத்துவதற்காக, அவர் தேவர்களிடம் ஒரு புதிய அமைப்பை அளித்தார். பழைய அமைப்பில், ஜனங்கள் சுயமாகச் செயல்படும் தர்மத்தை அனுசரித்து வாழ்ந்தனர்; ஒருவரை யொருவர் பாதுகாத்துக் கொண்டு வாழ்ந்

தனர். தம் உறவுகளை முறைப்படுத்துவதற்காக, ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தின்மீது பலாத்காரத்தை உபயோகிக்கும் நிலை அங்கு இல்லை. அதில் தண்டனை கிடையாது; அரசு கிடையாது; அரசர்கள் கிடையாது. அப்பொழுது அவற்றுக்கு அவசியம் ஏற்படவில்லை. புதிய அமைப்பின் சாராம்சம் என்ன? புதிய பொருளாதார உறவுகளும் புதிய குடும்ப உறவுகளும் பலாத்காரத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டன. இந்தப் பலாத்காரம், 'தண்டனை' எனப்பட்டது. இப்பொழுது தர்மம் (அறம்), அர்த்தம் (பொருள்), காமம் ஆகிய மூன்றைக் கொண்ட ஒரு புதிய திரிவர்க்கம் ஏற்பட்டது. இந்தத் திரிவர்க்கம் தானாகச் செயல்படாது; அதை ஒழுங்குபடுத்துவதற்கு, 'தண்டனை' அவசியம். இந்தியாவில் அடிமைச் சொந்தக்காரர்களின் ராஜ்யத்துக்காக முதன் முதலில் அமைந்த திட்டத்துக்கு விசாலாக்ஷா என்று பெயரிடப்பட்டது. அந்த அமைப்பு, பஹு தண்டகர், பிருஹஸ்பதி, கவி ஆகியோரால் திருத்தப்பட்டதென்று மகாபாரதம் கூறுகிறது.

அடிமைச் சொந்தக்காரர்கள் பலாத்காரத்தின் அடிப்படையில் நிறுவிய இந்தப் புதிய வர்க்க ஆட்சி, தெய்வீகப் படைப்புக் கர்த்தாவின் ஆசிகளால் புனிதமாக்கப்பட்டிருந்த போதிலும் அது நிலையற்றதாகவே இருந்தது. ஐந்து அல்லது ஆறு அரசர்கள் ஆள்வதற்குள், புதிய மோதல் ஏற்பட்டது. இந்தச் சமயத்தில், அரசர்களில் ஒருவரே மோதலுக்குத் தலைமை தாங்கியதாகத் தெரிகிறது; பிராம்மண-க்ஷத்திரிய வர்க்கத்துக்கு எதிராக, வைசிய ஜனநாயக முகாமுடன் அவர் சேர்ந்துகொண்டதாகத் தெரிகிறது. வேணன் என்ற அரசன் புதிய அமைப்புக்கு எதிராகக் கலகம் செய்தான்; பிராமணர்களையும் க்ஷத்திரியர்களையும் எதிர்த்துப் போராடினான். இந்தத் துணிவு மிகுந்த காரியத்தில், வேணனின் மனைவி, புத்திகூர்மை உடையவளான சுனீதி, அவருக்கு ஆலோசனை கூறினாள், உதவி செய்தாள். தாய்வழி ஏற்பாடும் மாதர் ஜனநாயகமும் அழிக்கப்பட்டதைக் குறித்து, அவள் அநேகமாக ஆத்திரமடைந்திருக்கலாம். ஆனால் சுனீதியும் வேணனும் எவ்வளவு மகத்துவமுள்ளவர்களாயிருந்தாலும், பொருளுற்பத்திச் சக்திகள் பின்வாங்க முடியாது; ஒரு வழியாக இறந்தொழிந்துவிட்ட சகாப்தத்துக்கு, பூர்வீகக் கம்யூன் சகாப்தத்துக்கு, திரும்பச்

செல்லமுடியாது. பொருளுற்பத்திச் சக்திகள் இன்னொரு புரட்சிக்குப்பக்குவமடைகிறவரையில், ஆளும் வர்க்கங்களை ஆட்டிவைத்து, சுரண்டலின் கொடுமையைக் குறைப்பதொன்றே, வேணனும் அவர் போன்றோரும் அப்பொழுது செய்யமுடியும். ஆனால் பொருளுற்பத்திச் சக்திகள் இன்னொரு புரட்சிக்குப் பக்குவமடைவதற்குக் காலம் இருந்தது. அடிமை முறையின் சரித்திர பூர்வமான பாத்திரம் இன்னும் வற்றிவிடவில்லை. அடிமை முறையின் கட்டுக் கோப்புக்குள், பெரிய காடுகளை அழிக்கும் வேலையும், விவசாயமும், கைத் தொழில்களும், பரிவர்த்தனையும், வியாபாரமும் முன்னேறத் தொடங்கி யுள்ளன; அவை மேற்கொண்டு முன்னேறுவதற்கு நிறைய இடம் இருந்தது. பிராமணர்கள் வேணனைத் தோற்கடித்துக் கொலை செய்தார்கள். வேணனுக்கு உதவிய அன்னியக் கணங்களும் குலங்களும்கூட இந்தப் போராட்டத்தில் தோற்கடிக்கப்பட்டன. பிராமணர்கள் வேணனைக் கொன்ற பிறகு, அவன் உடலின் பல்வேறு பாகங்களைக் கடைந்தார்களென்றும் அவற்றிலிருந்து கறுப்புத் தலையும் சிவப்புக் கண்களும் படைத்த மூர்க்கமான நிஷாதர்களும் பிறரும் தோன்றினார்களென்றும் மகாபாரதக் கதை கூறுகிறது. வேணனின் வலது கையிலிருந்து ஒரு மனிதன் தோன்றினான்; அவன் மட்டும் பிராமணர்களுக்குப் பணிந்தான்; அவர்களுடைய கட்டளையை நிறைவேற்றுவதாகக் கூறினான். ப்ருதுவைன்யன் என்ற பெயர்கொண்ட அரசனாக அவன் முடிசூட்டப்பட்டான். யுத்தம் தற்காலிகமாக முடிவடைந்தது.

இதன் விளைவு என்ன? பிராமணர்கள் இட்ட கட்டளை என்ன? வேணனின் மகனை ப்ருது, பிராமணர் சொற்படி நடக்கச் சம்மதித்தான்; ஆளும் வர்க்கத்தை சட்டத்துக்கு அப்பாற்பட்டதாகச் செய்தான். வர்க்க வேறுபாடுகளை ஒழிப்பதற்கான எந்த முயற்சிகளையும் எக்காலத்திலும் அனுமதிக்க மாட்டேனென்று அவன் சபதம் எடுத்தான். அதிலிருந்து பலாத்காரம் உலகத்தை ஆளத் தொடங்கியதாக, ராஜ்யத்தின் தோற்றம் பற்றிய ஹிந்து தத்துவம் கூறுகிறது.

ஜனநாயகம் நசுக்கப்பட்டு, அடிமைச் சொந்தக்காரர்கள் வெற்றி கண்டதைத் தொடர்ந்து, பெரிய அளவுக்கு சுரண்டல்

நடைபெற்றது; பொருளாதார வளர்ச்சி கைகூடியது. பரந்த நிலப் பிரதேசங்கள் சாகுபடி செய்யப்பட்டன; முதன்முதலாக, பிரதேச ராஜ்யங்களின் எல்லைகள் உருப்பெற்றன; அவற்றில் ஆரியர்கள் மட்டும் வாழவில்லை; அன்னியர்கள் நிஷாதர்கள், சூத-மகதர்கள் முதலியோரும் வாழ்ந்தனர். ப்ருது வைன்யனின் ஆட்சியில், விவசாயம் மிகப் பரந்த வளர்ச்சிக் கண்டதென்றும் சாகுபடிப் பயிர்களின் பலவகைகள் பரவினவென்றும் கூறப்படுகிறது. முன்னால், கால்நடைகளும் சுதந்திர மனிதர்களும் முக்கியமான உற்பத்திச் சாதனங்களாக விருந்தனர்; இப்பொழுது அவை அகற்றப்பட்டு, நிலமும் அடிமைகளும் பிரதானமான பொருளுற்பத்திச் சாதனங்களாயின. சமாதான பூர்வமான ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட கண-யஜ்ஞனை அகற்றிவிட்டு, ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தைப் பலாத்காரமாகச் சுரண்டுவதை அடிப்படையாகக் கொண்ட அரசன்-ராஜ்யம் அமைந்தது.

இவ்வாறாக, ஒத்துப்போகமுடியாத முரண்பாடுகளின்போராட்டத்தில், ராஜ்யம் பிறந்தது. இயல்பாகவே அது, பொருளாதாரத்தின் ஆதிக்கம் வகிக்கும் வர்க்கத்துக்கு—பிராமண-க்ஷத்திரிய வர்க்கத்துக்கு—உரித்தாயிற்று; அது மகத்தான விஷா ஜனநாயகத்தை நிராயுதபாணியாக்கியது; வைசிய மக்களையும் சூத்திர அடிமைகளையும் நசுக்கியது, சுரண்டியது. இப்பொழுது தெய்வீக அமைப்பின் பெயரால், ஆளும் வர்க்கங்கள், தோற்கடிக்கப்பட்ட ஜனநாயகத்தின் மீது கட்டளை பிறப்பித்தன. அதன்பின் ராஜ்யத்தால் பிரயோகிக்கப்பட்ட பலாத்காரத்தால் ஏற்படும் பயமே சகல வாழ்வையும் நிர்ணயித்தது. அடிமைச் சொந்தக்கார வர்க்கங்களின் தனி உடமை, பேராசை, பலாத்காரம் ஆகியவற்றுக்கு முன் பரஸ்பர ஒத்துழைப்பும் அன்பும் சமாதானமும் மறைந்தொழிந்தன. முன்பெல்லாம் வெறும் வார்த்தையின் மூலமாகவே, வெறும் பொதுஜன அபிப்ராயத்தின் மூலமாகவே, மக்கள் சரியான பாதையையும் நடத்தையையும் மேற்கொள்ளும்படி செய்யப்பட்டது; பொதுஜனக் கண்டனம் மட்டுமே தண்டனையாகவிருந்தது. இப்பொழுது, ராஜ்யத்தின் பலாத்காரத்தால், போலீஸால் ராணுவத்தால், மக்களை அடக்கியே சுரண்டலுக்குப் பணியும்படியும் ஆட்சிபுரியும் தனி உடமைக்கு மதிப்பும் விசுவாசமும் காட்டும்படி

யும் கட்டாயப்படுத்த வேண்டியிருந்தது. அவர்கள் தவறினால், சட்டத்தின் அதி உச்சத் தண்டனையான மரணதண்டனை அளிக்கப்பட்டது. ராஜ்யம் உதயமானவுடன் ஹிந்து இலக்கியம், இந்தப் புதிய பலாத்காரக் கருவியைப் புகழ்ந்துபாடத்தொடங்குகிறது. இந்த பலாத்காரம் இல்லாவிட்டால், அராஜக சமூகம்—ராஜ்யமில்லாத சமூகம்—மீண்டும் தோன்றினால், உடமை மறைந்து விடும், குடும்பம் நிலைகுலைந்து விடும், மதம்அழிந்துவிடும், உலகம்முடிந்து விடும்! உடமை, குடும்பம், மதம் ஆகியவற்றின் பெயரால், பாடுபடும் வைசியர்கள், அடிமைப்பட்ட சூத்திரர்கள் ஆகியோரின்சுதந்திரத்தையும் உடமையையும் குடும்பத்தையும் ஆளும் வர்க்கங்கள் ஆக்கிரமித்தன. இப்பொழுது யாகங்களின்பெயராலும்,தானத்தின் பெயராலும் பிராமண—க்ஷத்திரிய அதிபர்கள் மக்களின் கால்நடைகளையும் செல்வத்தையும் பறித்துக்கொண்டார்கள்; வைசிய-சூத்திர உழைப்பாளிகள் சாகுபடிக்குக் கொண்டுவந்த விரிந்து பரந்த நிலங்களைக் கைப்பற்றினார்கள். பாடுபடும் மக்கள், நாட்பட்ட போராட்டங்களை நடத்தினார்கள்; அவற்றில் தோல்வியடைந்தார்கள், நிராயுதபாணியாக்கப்பட்டார்கள்; சரணடையும் நிர்ப்பந்தத்துக்கு ஆளானார்கள்; பிறகு புதிய அமைப்பை ஒப்புக்கொண்டார்கள். ஆனால் புதிய பொருளுற்பத்தி சக்திகளும் புதிய புரட்சிசக்திகளும் பாடுபடும் மக்கள் மத்தியிலிருந்தே தோன்றுகிறவரையில், அந்த மக்கள் மீண்டும்மீண்டும் கலகம்செய்தனர்; மீண்டும்மீண்டும் தோற்கடிக்கப்பட்டனர்; அடிமைப்படுத்தப்பட்டனர். உழைப்பாளிகளுக்கு எதிரான யுத்தத்துடன், இன்னொரு வகையான போராட்டமும் நிகழ்ந்தது;அதுவே ஆளும் வர்க்கங்களுக்கிடையே நிகழ்ந்த உள் மோதல்கள்; வைசியர்களையும் சூத்திரர்களையும் சுரண்டியதால் கிடைத்த ஆதாயங்களை ஒருவர் இன்னொருவரிடமிருந்து பறிப்பதற்காக பிராமணக் குடும்பங்களும் க்ஷத்திரியக் குடும்பங்களும் நடத்திய சண்டைகள். க்ஷத்திரியர்களுக்கு எதிராக பரசுராமன் நடத்திய பல போர்கள் ஹைஹயன், சகஸ்ரார்ஜுனன். வைதஹவ்யன், சிருஞ்ஜயன், நகுஷன் முதலிய பலரின் போர்கள் ஆகியவற்றை பற்றி ஹிந்துப் புராணங்களில் ஏராளமான கதைகள் உள்ளன. பிராமணர்களின் ஆசிரமங்கள் விரிந்து பரந்து கிடந்தன; அவற்றில் நூற்றுக்கணக்கான ஏகரா நிலங்களும் கால் நடைகளும்

இருந்தன; (சீடர்கள் என்ற முறையில்) பயிற்சி பெறும் தொழிலாளர்கள் இருந்தனர்; அந்தப் பிராமணர்களைப் பின்பற்றுவோர்கள் என்ற முறையில் வைசியர்களும் சூத்திரர்களும் இருந்தனர்; அவர்கள் அந்தணர்களுக்காக செல்வத்தை உற்பத்தி செய்தனர். இத்தகைய ஆசிரமங்களைப்பற்றிய செய்திகள் ஹிந்து சரித்திரத்தின் ஏடுகளில் விரிவான இடம் பெற்றிருக்கின்றன; பிராமணர்கள் பக்கிரிகளாக இருந்தார்கள், ஏழ்மையில் உழன்றார்கள், நேர்மையாக வாழ்ந்தார்கள் என்றெல்லாம் கூறப்படும் கட்டுக்கதைகளை அவை சிதறடிக்கின்றன. சமுதாயத்தை "நாசத்திலிருந்து" பாதுகாப்பதாகவும், அதாவது வெளியார் படையெடுப்பு, உள்நாட்டு வர்க்கப் புரட்சி ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதாகவும் சமுதாயத்தை ஆட்சிபுரிவதாகவும் கூறிக்கொண்டு க்ஷத்திரியக் குடும்பங்கள் மக்களைச் சுரண்டின, மக்களின் உடைமைகளைப் பறிமுதல் செய்தன; இந்தச் சாதனையை அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அரசர்கள், அரச வம்சங்கள் ஆகியவற்றின் சரித்திரத்தையும் அவர்கள் செய்த நல்ல, தீய காரியங்களையும் இங்கு ஆராய்வது நமது நோக்கமல்ல. பரந்த நிலங்களைக்கொண்ட ஆசிரமங்களை உருவாக்கியவர்கள், போராட்டங்களில் ஈடுபட்டவர்கள், பெரிய ராணுவங்களின் தளபதிகளாகவும் தலைவர்களாகவும் ஆனவர்கள், ராஜ்யங்களின் அதிபர்களாகக்கூட உயர்ந்தவர்கள் ஆகிய புகழ்பெற்ற பிராமணக் குடும்பங்களின் வரலாற்றை இங்கு ஆராய்வதும் நமது நோக்கம் அல்ல. எனவே மேற்குறிப்பிட்ட சரித்திர வளர்ச்சி விதிகளுடைய வெளிச்சத்தில், நன்கறியப்பட்டுள்ள இந்த விஷயங்களைச் சலித்து, புரியக்கூடிய சரித்திரமாகத் தொகுக்கும் காரியத்தை தற்காலிகமாக ஒதுக்கிவைப்போம். இறந்துகொண்டிருந்த பூர்வீகக் கணங்களின் உறுப்பினர்களிடையே நிகழ்ந்த கடுமையான வர்க்கப் போராட்டங்களிலிருந்து தோன்றிய ஆரியச் சமூகத்தின் புதிய ஸ்தாபனத்தை மட்டும் நாம் இப்பொழுது பரிசீலிப்போம்.

கண சமூகம் தன் கண அமைப்பைக் கைவிடும் கட்டாயத்துக்கு உள்ளானதின் காரணமென்ன? நிர்ப்பந்தப்படுத்தப்பட்ட போது, அது ஏன் ராஜ்யத்தின் புதிய அமைப்புக்குச் சரண் அடைந்தது? எந்தெந்த முக்கியாம்சங்களில் ராஜ்யம் கணத்தி

லிருந்து வேறுபட்டிருந்தது? இந்த நிலைமையை உண்டாக்கிய சரித்திர நிகழ்ச்சியை எங்கல்ஸ் பின் வருமாறு திரட்டித் தருகிருர்:

"இந்த சமுதாயக் கிளர்ச்சியில், கண அமைப்புக்கு என்ன நேரிட்டதென்று இப்பொழுது பார்ப்போம். தன்னை எதிர்நோக்கிய சக்திகளின் வளர்ச்சியில், அந்த கண அமைப்புக்கு எத்தகைய பங்கும் கிடையாது; அவற்றுக்கு முன், கண அமைப்பு திக்கற்றதாக விருந்தது. ஒரு கணத்தின் உறுப்பினர்கள் அல்லது ஒரு குலத்தின் அங்கத்தினர்களாவது, ஒரே பிரதேசத்தில் சேர்ந்தாற்போல் குடியிருப்பதும், அந்தப் பிரதேசத்தில் வேறு எவருமில்லாமல் அவர்கள் மட்டுமே குடியிருப்பதும், கணத்தின் வாழ்வுக்கு அவசியமான முன் தேவையாகும். ஆனல் அத்தகைய நிலைமைக்கு முடிவு ஏற்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. ஒவ்வொரு பிரதேசத்திலும், பலவகைப்பட்ட கணங்களையும் குலங்களையும் சேர்ந்த கலப்பு ஜனத்தொகையே இப்பொழுது இருந்தது. ஒவ்வொரு இடத்திலும், அடிமைகளும் பாதுகாக்கப்பட்ட நபர்களும் அன்னியர்களும் பிரஜைகளுடன் சேர்ந்து வாழ்ந்தனர்.[1] அநாகரீக காலத்தின் நடுக்கட்டத்தின் முடிவில்தான், நிலைபெற்ற வாழ்க்கை நிலைமைகள் உருப்பெற்றன; அவையும் வியாபாரம், தொழில் மாறுதல், நில உடமையின் மாறுதல்கள் ஆகியவற்றின் நிர்ப்பந்தத்தால், திரும்பத் திரும்ப குடியிருப்பு மாறியதால், நிலைகுலைந்தன. கண ஸ்தாபனங்களின் அங்கத்தினர்கள் தமது பொது விவகாரங்களை கவனிப்பதற்காக இனிக் கூட முடியவில்லை.[2] சமயத் திருவிழாக்கள் போன்ற முக்கியத்துவமில்லாத விஷயங்களுக்காக மட்டுமே, உற்சாகமில்லாத முறையில் கூடினர்கள். எந்தெந்த தேவைகளையும் நலன்களையும் கவனிப்பதற்காக கண ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டுத் தகுதிபெற்றிருந்தனவோ, அவற்றுடன்கூட, பொருளுற்பத்தி உறவுகளில் ஏற்பட்ட கிளர்ச்சியும் அதன் பலனுக சமுதாய ஸ்தாபனத்தில் ஏற்பட்ட மாறுதல்களும், புதிய தேவைகளையும் நலன்

1 அன்னியர்களுடன் தொடர்பு ஏற்பட்டால், புனஸ்தோம யாகம்செய்து பரிசுத்தமடைய வேண்டுமென்று ஒழிந்து ஆரியர்கள் வகுத்தார்கள்.

2 முன்பெல்லாம் அவை, தமது சமிதி அல்லது கரிஷ்டத்தில் கூடின (ஆ-ர்.)

களையும் உண்டாக்கிவிட்டன; இவை ஒவ்வொரு அம்சத்திலும் பழைய கண அமைப்புக்குப் புறம்பானவையாக விருந்ததுடன், அதற்கு நேர் எதிரானவையாகவும் இருந்தன. வேலைப் பிரிவினையுடன் தோன்றிய கைத்தொழிலாளர் கோஷ்டிகளின் நலன்களும் நாட்டுப்புறத்துக்கு விரோதமான முறையில் நகரத்துக்கு ஏற்பட்ட விசேஷத் தேவைகளும், புதிய உறுப்புக்களின் தோற்றத்தை அவசியமாக்கின;[1] ஆனால் இந்தக் கோஷ்டிகள் ஒவ்வொன்றிலும் பலதரப்பட்ட கணங்களையும் ஒற்றைத் தாய்வழிக் கணக் குடும்பங்களையும் குலங்களையும் சேர்ந்தவர்கள் இருந்தனர். அன்னியர்கள்கூட இருந்தனர்; எனவே அத்தகைய உறுப்புக்கள் கண அமைப்புக்கு வெளியே, கண அமைப்புக்குப் பக்கத்தில் அமைக்கப்பட வேண்டியதாயிற்று; ஆகவே அவை கண அமைப்புக்கு எதிரானவையாக விருந்தன; நலன்களுக்கிடையே ஏற்பட்ட இந்த மோதல் ஒவ்வொரு கண ஸ்தாபனத்துக்குள்ளும் செயல்பட்டது; அது அதன் உச்ச வடிவத்தில், ஏழை பணக்காரர் சேர்க்கையாக, லேவாதேவிக்காரர் — கடன்காரர் சேர்க்கையாக, ஒரே கணத்திலும் ஒரே குலத்திலும் தோன்றியது; மேலும், கண ஸ்தாபனங்களுக்கு வெளியே, ஒரு பெரிய மக்கட்தொகை இருந்தது; அது ரோமாபுரியில் ஏற்பட்டது மாதிரி[2] நாட்டில் ஒரு சக்தியாக ஆகமுடிந்தது. அதேசமயத்தில், அது எண்ணிக்கையில் அதிகமாயிருந்ததால், அதை இரத்தக் கலப்புக் கோஷ்டிகளிலும், குலங்களிலும் படிப்படியாகக் கிரகிக்க முடியவில்லை; இந்த ஜனத்தொகையைப் பொறுத்தமட்டில், அதற்கு எதிரானவையாகவும் அதற்கு இடம்தராத விசேஷச் சலுகை படைத்த ஸ்தாபனங்களாகவும் கண ஸ்தாபனங்கள் விளங்கின; இயற்கையாக அமைந்த பூர்வீக ஜனநாயகம், இரக்கமற்ற மேன் மக்கட் தொகுதியாக மாறிவிட்டது.[3] கடைசியாக, எத்தகைய உள் முரண்பாடுகளையும் அறிந்திராத சமூகத்திலிருந்து கணஸ்தாபனம் வளர்ந்தது; அத்தகைய சமூகத்துக்கு

---

1 ஜனபதம், பௌரம் போன்றவை. (ஆ-ர்.)

2 வைசாலி, மகதம், பாடலா முதலியவற்றில் ஏற்பட்டது மாதிரி. (ஆ-ர்.)

3 பிந்திய காலமான புத்தர் காலத்தில் கூட, மல்லர்-லிச்சவி கணங்களில் இதைப் பார்க்கலாம்.

தகுதியானதாகவே அது அமைந்திருந்தது. பொதுஜன அபிப் பிராயத்தைத் தவிர, அதில் எத்தகைய பலாத்காரச் சாதனமும் இருக்கவில்லை. ஆனால் தன்னுடைய சகல பொருளாதார வாழ்க் கை நிலைமைகளாலும் கட்டாயப்படுத்தப்பட்டு, சுதந்திரர்கள் என்றும் அடிமைகள் என்றும், சுரண்டும் பணக்காரர்கள் என்றும் சுரண்டப்படும் ஏழைகள் என்றும் தன்னைப் பிளவுபடுத்திக் கொள்ளவேண்டிய சமுதாயம் ஏற்பட்டுவிட்டது; இந்தச் சமுதா யத்துக்குத் தன் முரண்பாடுகளை ஒருபொழுதும் சமரஸப்படுத்த முடியவில்லை; மேலும், எப்பொழுதும் அந்த முரண்பாடுகள் தீவிரம் அடையச் செய்தது. இத்தகைய சமுதாயம், இந்த வர்க் கங்கள் ஒன்றோடொன்று பகிரங்கமாகவும், தொடர்ச்சியாகவும் போராடும் நிலையில் வாழவேண்டும்; அல்லது போர்புரியும் வர்க்கங்களுக்கு மேலே அவற்றுக்கு அப்பாற்பட்டு நிற்பதாகத் தோற்றமளித்துக் கொண்டு, அவற்றின் பகிரங்க மோதலை அடக்கி, அதிகபட்சமாகப் போனால் பொருளாதாரத் துறையில்மட்டும், சட்டபூர்வமான முறை எனப்படும் ரூபத்தில், வர்க்கப் போராட் டத்தை அனுமதிக்கக்கூடிய மூன்றாவது சக்தியின் ஆட்சிக்கு அந்தச் சமுதாயம் உட்படவேண்டும். கண அமைப்புக்கு முடிவு ஏற்பட்டுவிட்டது. வேலைப் பிரிவினையாலும், அதன் விளைவாக சமுதாயம் வர்க்கங்களாகப் பிளவுண்டதாலும், கண அமைப்பு சிதறுண்டுவிட்டது. அதற்குப்பதிலாக ராஜ்யம் ஏற்பட்டுவிட்டது.

எனவே, ராஜ்யம் என்பது வெளியிலிருந்து சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு சக்தியாக இருக்கவில்லை; ஹெகல் கூறுவதுமாதிரி[1] அது, 'நல்லொழுக்கக் கருத்தின் மெய்ப் பொருளாக'வோ 'பகுத்தறிவின் பிரதிபிம்பமாகவும் மெய்ப் பொருளாகவுமோ' இருக்கவில்லை. அதற்குமாறாக, வளர்ச்சி யின் குறிப்பிட்ட கட்டத்தில் ஏற்பட்ட சமுதாய விளைவாகும்; அது, இந்தச் சமூகம் பைசலாக்க முடியாத சுய-முரண்பாடுகளில் தன்னைச் சிக்கவைத்துக்கொண்டுவிட்ட தென்பதையும், சமுதாயத் தால் ஒழிக்க முடியாத விரோதங்களால், சமரசப்படுத்த முடியாத

1 பண்டைக் காலத்திலிருந்து எழுத்தாளர்களும் நவீனக்கால ஹிந்து எழுத்தாளர்களும் வாதிப்பது மாதிரி—ஆர்.

விரோதங்களால் சமுதாயம் பிளந்திருக்கிற தென்பதையும் ஒப்புக்கொள்வதாகும்."

வர்க்க சமூகத்தின் புதிய உறுப்பான இந்த ராஜ்யத்தை, பழைய கண-கோத்திர ஸ்தாபனத்திலிருந்து பிரித்துக்காட்டும் அதன் பிரத்தியேக அம்சங்கள் எவை?

பழைய கண ஸ்தாபனத்திலிருந்து மாறுபட்ட முறையில் ராஜ்யத்தின் அங்கத்தினர்கள் பிரதேச அடிப்படையில் தொகுக்கப்படுகின்றனர்; இது முதலாவது பிரத்தியேக அம்சமாகும். இரத்தக்கலப்புப் பிணைப்புளால் உருப்பெற்று நிலைத்திருந்த பழைய கண-ஸ்தாபனங்கள், குறைபாடுள்ளவை யாகிவிட்டன; இதற்கு முக்கியமான காரணம் என்னவெனில், கண உறுப்பினர்கள் ஒரே பிரதேசத்தில் வாழவேண்டுமென்றிருந்த முன்தேவை, நீண்டகாலமாக நடைமுறையில் நிலவவில்லை. பிரதேசம் அப்பொழுதும் இருந்தது; ஆனால் ஜனங்கள் நிலையற்றவர்களாக இடம் மாறிக்கொண்டிருந்தனர்; எனவே, பிரதேசப் பிரிவினை முதன்மையானதாகக் கொள்ளப்பட்டது; எந்தக் கணத்தினராயினும் சரி, எந்தக் குலத்தினராயினும் சரி, பிரஜைகள் வசிக்கும் இடத்தில் தமது பொது உரிமைகளை அனுபவிக்க வேண்டும், பொதுக்கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற முறை ஏற்பட்டது. குடியேறி வாழும் பிரதேசத்தின் அடிப்படையில், ராஜ்யத்தின் பிரஜைகளை முறைப்படுத்தும் ஏற்பாடு, சகல ராஜ்யங்களுக்கும் பொதுவானது. எனவே, இந்த ஏற்பாடு நமக்கு இயற்கையானதாகப் புலப்படுகிறது; ஆனால் இரத்தக் கலப்பு உறவை அடிப்படையாகக் கொண்ட பழைய ஸ்தாபனத்தை அகற்றுவதற்குமுன்னல், கணத்தை அகற்றி, ராஜ்யம் அமைவதற்குமுன்னல், நாட்பட்ட, கடுமையான போராட்டங்கள் நடப்பது அவசியமாயிருந்தது.

இரண்டாவது விசேஷ அம்சமாக இருப்பது, பொதுப்படையின் அமைப்பாகும். மக்கள் தங்களையே ஆயுதமேந்திய சக்தியாக ஏற்படுத்திக்கொண்டதிலிருந்து வேறுபட்டதாக, இந்தப் பொதுப்படை இருக்கிறது. மக்கள் வர்க்கங்களாகப் பிரிந்தபிறகு, ஆயுத

மேந்திய மக்களின் சுயமாக இயங்கும் ஸ்தாபனம் அசாத்தியமான தாகிவிட்டதால், இந்தப் பிரத்தியேகமான பொதுப்படை தேவைப் படுகிறது. சுரண்டல் தளைகளில், உழைப்பின் தளைகளில் சுரண் டப்படும் வர்க்கத்தைப் பிணைத்துவைத்திருப்பதையே சாராம்ச மாகக்கொண்ட சட்டத்தை நிறைவேற்றுவதற்காக, அரசர்கள் இப்பொழுது, நிரந்தர ராணுவத்தையும் போலீஸையும் வைத் திருக்கிறார்கள்; நால்வகைச் சேனையும், ராஜபுருஷர்களும், ஆயுதமேந்தவும் ராணுவத் தலைமையை அமைத்துக்கொள்ளவும் க்ஷத்திரிய, பிராமணக் குடும்பங்கள் மாத்திரம் அனுபவிக்கும் உரிமைகளும், இப்பொழுது சரித்திரக் காட்சியில் தோன்று கின்றன. இந்தப் பொதுப்படை, ஆயுதமேந்தியர்களைமட்டும் கொண்டிருக்கவில்லை; சிறைகள், நீதிமன்றங்கள், பலவகைப் பட்ட பலாத்கார ஸ்தாபனங்கள் முதலிய பௌதீகச் சேர்மானங் களையும் கொண்டிருக்கிறது; பலாத்காரமே இவை அனைத்தின் சாராம்சமாகும். வர்க்க விரோதங்களில்லாமல் வாழ்ந்த பழைய கண சமூகத்துக்கு சாஸ்திரம் தேவையில்லை; சாஸ்திரம் என்பது பலாத்கார விதிகளின் தொகுப்பாகும்; ஒரு வர்க்கம் இன்னொன் றின்மீது சர்வாதிகாரம் நடத்தும் முறையாகும். சாஸ்திரம், வர்க்கச் சமூகத்தின் விளைபயனாகும். எனவே, அடிமைமுறை யின் தோற்றத்துடன் அது உதயமாகிறது; அடிமை ராஜ்யங் களின் மன்னர்களுடன் அது இணைத்துக் குறிப்பிடப்படுகிறது. எனவே பலாத்காரக் கருவியாக, அடக்குமுறைக் கருவியாக அது வர்ணிக்கப்படுவது முற்றிலும் சரியே. "வேலை அல்லது செயல் (விருப்பமின்மையாலோ விரோதத்தாலோ அல்லாமல்) விருப்பத் தின் விளைவாக நடக்கும்பொழுது, அங்கு சாஸ்திரம்கிடையாது" என்று ஆபஸ்தம்ப ஸூத்திரங்கள் வெளிப்படையாகக்கூறுகின்றன.

இந்தப் பொது சக்தியைப் பராமரிப்பதற்காக, ராஜ்யப் பிரஜைகள் பங்குதருவது—வரிகளைக் கொடுப்பது—அவசிய மாகிறது. கணசமூகம் வரிகளைப்பற்றி கொஞ்சமும் அறிந்திருக்க வில்லை. உற்பத்தியானதனைத்தையும் சுயேச்சையாக விநியோ கம் செய்வதான தானத்தை கணங்களும் அவற்றின் தலைவர்களான கணபதிகளும் அறிந்திருந்தனர். ஆனால் ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்காக மக்களைச் சாமர்த்தியமாகக் கொள்ளையடிப்பதை,

கர்பாரா என்ற பெயரில் அர்த்தசாஸ்திரம் விளக்குகிறதே, அந்த முறையை கணங்கள் அறிந்திருக்கவில்லை. உறங்கிக்கொண்டிருப்பவன் மறுநாள் எழுந்திருக்கும்வரையில் உணரமுடியாத வகையில், அவனிடமிருந்து இரத்தத்தைக் குடிப்பதற்காக அட்டை உறிஞ்சுவதுமாதிரி, மிருதுவாகவும் வலியில்லாமலும் இந்தக் கொள்ளையை நடத்தவேண்டுமென்று மகாபாரதம் கூறுகிறது.

"பொதுப்படையையும் வரிவசூல் உரிமையையும் (உற்பத்திப் பொருளில் ஆறில் ஒரு பங்கு அரசன் ராஜ்யத்தின் உரிமைப் பங்கு ஆகும்) பெற்றுள்ள அதிகாரிகள், இப்பொழுது, சமுதாயத்தைவிட உயர்ந்த சமூக உறுப்புக்களாகத் தம்மை நிறுத்திக் கொள்கிறார்கள்....சமுதாயத்திலிருந்து அவர்களைப் பிரித்துவைக்கும் சக்திக்குப் பிரதிநிதிகளான அவர்கள் விசேஷ உத்திரவுகள் மூலம் கௌரவம் அளித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது; அந்த உத்திரவுகள் அவர்களுக்கு ஒரு அலாதியான, மீறக்கூடாத புனிதத் தன்மையை அளிக்கிறது. மேலும், சரித்திரத்தில் அமைந்த பல அரசுகளில், பிரஜைகளுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள், உடைமையின் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்டிருக்கின்றன; இதன்மூலம், உடைமையற்ற வர்க்கத்துக்கு எதிராக உடைமைவர்க்கத்தைப் பாதுகாக்கும் ஸ்தாபனமே ராஜ்யம் என்பது நேரடியாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. அடிமை ராஜ்யங்கள் போதுமான பக்குவம் பெற்றவுடன், அரசன் ராஜ்யங்களின் பௌரா-ஜனபத மன்றங்கள் அநேகமாக உடைமைக்காரர்களாவுள்ள பிரஜைகளையே உறுப்பினராகக் கொண்டிருந்தன. "எப்பொழுதுமே, உடைமைவர்க்கத்துக்குமரியாதை கொடுத்துப் போற்று" என்ற பயன்தரத்தக்க உபதேசம் ஆளும் அரசனுக்குக் கொடுக்கப்பட்டது;[1]

---

1 பிற்காலச் சரித்திரத்தில், காத்யயனரின் சிரௌத ஸூத்திரங்களில், மகாஜன்கள் அல்லது மகாஜனிக்குகள், செல்வத்தைச் சேகரித்துள்ள நிஷாதர்களையும் தழுவிநிற்கும் பொருளைப்பெற்றது. முன்காலத்தில், நிஷாதர்கள் கொல்லப்பட்டனர் அல்லது அடிமைப்படுத்தப்பட்டனர். இப்பொழுது, அவர்களில் பணம் படைத்தவர்கள் மகாஜனங்களாகக் கருதப்பட்டார்கள்.

ஆக, பொருளுற்பத்தி சக்திகளின் வளர்ச்சி, பொருளுற்பத்தி உறவுகளை மாற்றியது ; தனிஉடமையையும் சுரண்டல்காரர்கள் சுரண்டப்படுவோர்கள் ஆகியோரின் வர்க்கப் பகையையும் சிருஷ்டித்தது ; "சமுதாயத்தைப் பாதுகாப்பதின்" பெயரால், சுரண்டப்படும் வர்க்கத்தை பலாத்காரமாக அடக்கும் சுரண்டல்வர்க்கக் கருவியான ராஜ்யத்தை, மனித சமுதாயத்தின் சாபக்கேடான ராஜ்யத்தை, தோற்றுவித்தது.

பாரதப் போர்

ஆரிய சாம்ராஜ்யங்கள், அடிமைமுறையின் அடிப்படையில் வளர்ச்சிபெறுவதற்காகப் போராடிய சிலாக்கியமான புனிதபூமி, கங்கைநதிப் பள்ளத்தாக்கு ஆகும். மேற்கே குருக்ஷேத்திரத்திலிருந்து கிழக்கே நவீன பீகாரிலுள்ள பாடலீபுத்திரம் (பாட்னு)வரையில் பரவிய பூமியில், பாரதப் போருக்குமுன், ஆரியகணங்கள், முடியாட்சியைக் கொண்ட அடிமை ராஜ்யங்களாக நிலைபெற்றவையாகவும், செல்வம் மிக்கவையாகவும் வளர்ந்தன. அவை, வடக்கே ஹிமாசலத்தின் அடிவாரத்திலிருந்து தெற்கே, நவீன காலத்து மத்திய இந்தியாவிலுள்ள அவந்திவரை வியாபித்திருந்தன ; அவற்றில் சில, விந்தயமலைத் தொடரை ஊடுருவி, விதர்ப்பம்வரை வசப்படுத்திக்கொள்வதில் வெற்றிகண்டன.

அந்தக்காலத்தில், இந்தியா ஹிந்துஸ்தான் என்றே ஸிந்துஸ்தான் என்றே பெயர் பெற்றிருக்கவில்லையென்பதை இங்கு நினைவில் கொள்வது நல்லது; ஹிந்துஸ்தான் என்பதும் ஸிந்துஸ்தான் என்பதும் ஒரே சொல்லின் இரு உருவங்களே ; ஸிந்திநதியிலிருந்து நம்தேசம் பெற்ற பெயரே ஹிந்துஸ்தான். ஒத்திட்டுப்பார்க்கும் பொழுது நவீனகாலம் என்று சொல்லத்தக்க காலத்தில், மத்திய ஆசியாவிலிருந்து ஸாகர்களும் பஹ்லவர்களும் இதர குலங்களும் ஸிந்துநதி வழியாக நம் தேசத்துக்குள் நுழைந்தனர். அவர்களே நம் தேசத்துக்கு ஸிந்து நதியின் பெயரை அளித்தனர். அந்த மக்கள் 'ஸி' என்பதை 'ஹி' என்று உச்சரித்ததால், அந்தச் சொல் (ஸிந்துஸ்தான்), ஹிந்துஸ்தான் என்று திரிந்து, வழக்கில் வந்துவிட்டது. பண்டைக் கால எழுத்தாளர்களும் ஜனங்களும் தாம் வாழ்ந்த நிலத்துக்கு, அதில் வசித்த குலம் அல்லது தேசிய இனத்தின் பெயரின் அடிப்படையிலேயே நாமம் சூட்டினார்கள் ; உதாரணமாக, மத்ஸயர்கள் வாழ்ந்த பூமி, மத்ஸய தேசம் என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு ஏற்பட்ட இருநூறு பெயர்களை

மகாபாரதத்தின் பீஷ்ம பருவம் குறிப்பிடுகிறது. பிற்பாடு, பிரதேச ராஜ்யங்கள் தோன்றி, அரச வம்சங்களும் அவற்றின் தலைநகரங்களும் ஸ்தாபிக்கப்பட்டபொழுது, அந்த ராஜ்யங்களுக்குப் பெயர் இடுவதென்பது, ஆளும் குடும்பங்களின் இஷ்டத்துக்கும் அதைப் போன்ற இதர அம்சங்களுக்கும் உட்பட்டதாயிற்று. ஆனால், பொதுப்படையாகப் பார்த்தால், இந்தியாவின் பல பகுதிகள், அவற்றில் வாழ்ந்து சாகுபடி செய்து அரசு புரிந்த இனங்கள் அல்லது கண சமஷ்டிகளின் பெயர்களின் அடிப்படையிலேயே பெயரிடப்பட்டன; அங்கம், வங்கம், கலிங்கம், கிரத், திராவிடம், காம்போஜம், மத்ஸயம், குரு, மத்ரா, வஹிகா முதலியவை இதற்கு உதாரணங்கள். மேலும், ஸிந்து நதியைத் தவிர, வேறு எந்த நதியின் நவீனப் பெயரும் ஒரு தேசத்தின் பெயராக உருப்பெறவில்லை என்பது கவனத்துக்குரிய விஷயமாகும். புகழ்பெற்ற புனித கங்கைக்குக்கூட அந்தப் பேறு கிட்டவில்லை.

பூருரவர்களின் கண சங்கத்தைச் சேர்ந்த துஷ்யந்தனின் மகனான பரதன் பெயரிலிருந்து பெறப்பட்டதே பாரதவர்ஷம் என்ற பெயர். அப்பொழுதுதான், வம்ச பரம்பரை முடியாட்சியைக் கொண்ட பிரதேச ராஜ்யங்கள் தோன்றத் தொடங்கியிருந்தன; உதயமாகிக்கொண்டிருந்த அடிமை அரசுகளால் விளைந்த விநாசத்தில், பூர்வீக ஜனநாயகங்கள் வேகமாக மறைந்துகொண்டிருந்தன. பூருரவர்களைச் சேர்ந்த பரதன் பெயரிலிருந்து பெறப்பட்ட பெயரான பாரத வர்ஷமும், எப்பொழுது வழக்குக்கு உரியதாகிறது? (பரதன் வம்சத்தில் அவனுக்குப் பின் ஐந்தாவது அரசனாக வந்த ஹஸ்தின் நிறுவிய) ஹஸ்தினபுரத்தின் புருக்கள் தம்மைச் சுற்றியிருந்த ராஜ்யங்களையும் ராணுவ ஜனநாயகங்களையும் கணசங்கங்களையும் அழிக்க முயற்சித்தபொழுது, அந்தக்காலத்துக்கு மிகப்பெரியதாக விருக்கக்கூடிய அடிமை சாம்ராஜ்யத்தை நிர்மாணிக்கும் அந்த முயற்சியின்மூலம் விநாச பலன்களை விளைவித்த பாரதப்போரில் சிக்கிக்கொண்டபொழுதே, பாரத வர்ஷம் என்ற பெயர் வழக்குக்கு உரியதாகிறது. ஹிந்து பிரபுத்துவ ராஜ்யங்களின் சட்டதிட்டத்தை வகுத்த மனு முதலியோர், மத்திய தேசம் பிரமரிஷி தேசம், ஆரியவர்த்தம் ஆகிய பெயர்களைக் குறிப்பிடுகின்றனர். ஆனால் அவர்கள்கூட (வங்காளம் நீங்கலாக)

கிழக்கு-மேற்காகவுள்ள கங்கை நதிப் பள்ளத்தாக்குக்கு அப்பால் உள்ளதைக் கணிக்கவில்லை; தென்திசையில் விந்தியத்துக்குத் தெற்கிலுள்ளதைக் கணக்கில் எடுக்கவில்லை. எனவே, நவீனக் காலத்தில், இந்தியா முழுவதையும் தழுவியதாக நாம் புரிந்து கொள்ளும் ஹிந்துஸ்தான்பற்றிய கருத்து, நமது நாகரீக சகாப் தத்தின் விளைப்பயனேயாகும். குரு குலத்தினரோ பூரு குலத்தி னரோ, அயோத்தி நகரத்தின் ராமனோ அல்லது அந்தக - விருஷ்ணி கண-சங்கத்தைச் சேர்ந்த கிருஷ்ணனோ இந்தத் தேசத்துக்கு எந்தப் பெயரையும் கொடுக்கவில்லை.

பாரதப் போருடன் புராதன இந்திய வரலாற்றில் ஒரு தீர் மான முறிவு ஏற்பட்டுவிடுகிறது. எனவே, இந்தியாவின் பண்டைக் கால வரலாறு முழுவதையும், பாரதப் போருக்கு முற்காலம், பாரதப் போருக்குப் பிற்காலம் என்று பிரிக்கமுடியும். ஜனரஞ்சித மானதோ, சரித்திர ரீதியானதோ, பௌராணிக வகையைச் சேர்ந்ததோ, எதுவாயினும்சரி, எல்லாவகை பரம்பரை வழக்கு களும், பாரதப் போர், வளர்ச்சிப்போக்கு முழுவதையும் மாற்றி, புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்த சரித்திர நிகழ்ச்சியாகுமென் பதை ஒப்புக்கொள்கின்றன. இதை, பாரதப்போருக்குப் பின் கலியுகம் தொடங்கியதாகக் கூறுவதன்மூலம் கர்ணபரம்பரையான வழக்கு திரட்டிக் கூறுகிறது. கர்ணபரம்பரை வழக்கு ஏன் அவ் வாறு கூறுகிறது? இந்தியாவின் பண்டைக்காலத்தைப்பற்றிய எந்தப் பரம்பரை வரலாறும், தமது சரித்திர அளவுகோல்கள் அனைத்தையும் இந்தச் சம்பவத்தில் விடாப்பிடியாக முனையடிப்ப தின் காரணம் என்ன? காலவரையறையின் வரிசைப்படி பார்த் தால், பாரதப்போருக்கு சுமார் ஐநூறு வருஷங்கள்முன்னல், ராம-ராவணப் போர் நடைபெற்றிருக்கிறது. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக, அந்தக் காலத்தின் உண்மையான சரித்திர நிலைமைகள், பாரதப்போர் சம்பந்தமாகக் கிடைப்பதுமாதிரி, விவரமாகவும் மெய்யாகவும் கிடைக்கவில்லை. வால்மீகியின் ராமாயணம், மிகப் பிந்திய காலத்தின் தொகுப்பாகும்; அது பாரதப்போருக்குப் பிற்பட்ட பிரபுத்துவ இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் கவிதையாகும்; அது பிரபுத்துவக்காலத்தின் சித்தாந்தப் பொரு ளைக்கொண்டு, ராம-ராவண யுத்தத்தை விவரிக்கிறது. உண்மை

யில், பேரிதிகாசமான மகாபாரதத்தின் பாத்திரங்களை ஆண்டால், தன் சித்தாந்தத்துக்குச் சங்கடம் நேரிடுமென்று வால்மீகி கருதிய தாகத் தோன்றுகிறது. மக்கள் மனதில் திட்டமான நினைவுக்கு இடம்தராத ஒரு கதாநாயகனை அவர் தேடினுரென்று தோன்று கிறது. அப்பொழுதே, அந்தக் கதாநாயகனின் வாழ்வையும் காலத்தையும்பற்றி என்னவேண்டுமானுலும் சொல்லமுடியும். வால்மீகி தன்னுடைய கதாநாயகனை ஒரு லட்சியபுருஷனுகவும் கடவுளாகவும் ஆக்க முயல்கிருர்; ஆனுல் அவர் தோல்வியடை கிருர். ஒரு பிரியமுள்ள வாலிபன், ஒடுக்குமுறையின்மூலம் ஒரு ராஜ்யத்தை நிர்மாணிப்பவனுக மாறுவதாகவே, கதாநாயகர் கவிதையில் உருப்பெறுகிருர். வால்மீகியின் கதாநாயகன் வாலியை வஞ்சகமாகக் கொல்லும்பொழுது, அவர் சத்தியம் தவ ருதவர் என்ற கருத்து பொய்யாகிறது. ஒரு பண்பாடுள்ள ஆரியனுக ஆவதன்மூலம், தன் விமோசனத்தைத் தேடமுயலும் ஒரு சூத்திரனை, அவர் கொல்கிருர்; அதன்மூலம் அவருடைய மனிதாபிமானம் பொய்ப்பிக்கப்படுகிறது. அவர் ஏகஸ்திரீ விவாக லட்சியத்தைக் கொண்டிருந்தார் என்பதற்குக்கூட, கர்ணபரம் பரை வழக்கு முரணுகவுள்ளது. பூர்வீக மக்கள் சகோதரன்-சகோ தரித் திருமணத்தைத் தடைசெய்வதற்கு முன்னுல் ராமன் வாழ்ந்தானென்றும், சீதா ராமனின் சகோதரியென்றும் சமண சூத்திரங்கள் கூறுகின்றன. சீதை, வீட்டில் பிறக்கவில்லை என்ற விஷயத்தை வால்மீகிகூட மறைக்கமுடியவில்லை.

இந்தக் காரணங்களினுல்தான், ராம-ராவணப் போரை, பண்டைக்கால சரித்திரத்தின் ஒரு மைல்கல்லாகக் கொள்ளமுடி யாது. ராமனின் தந்தையான தசரதன் காலத்திலேயே, அயோத்தி யின் ரகுக்கள், ஆரம்பக்கால கண ஜனநாயகத்தின் முடிவை அணுகிவிட்டனர் என்று, கிடைத்திருக்கும் கொஞ்சநஞ்சக் குறிப்பு களிலிருந்தே கூறமுடியும். தசரதனின் ஆட்சிபீடத்திற்கு ராமன் வார்ஸாகும் விஷயம், முறைப்படி அயோத்தி ரகுக்களுடைய சபை யின் சம்மதத்துக்கு உட்பட்டதாயிருக்கிறது. ஆனுல் அப் பொழுதே, வம்ச பரம்பரை முடியாட்சியின் சின்னங்கள் அந்த முறையில் புலப்படுகின்றன. ரகுக்களின் ஆளும்வர்க்கம் சூத்தி ரர்களை அடிமைப்படுத்தி, பலாத்காரமாக அடக்கிவைத்திருந்தது;

சுற்றிலுமிருந்த சுதந்திர கணங்களின் உள்போட்டிகளைப் பயன் படுத்திக்கொண்டு, அவற்றை அடக்குவதற்காக ராமன் பெரும் பாடுபட்டார். எனவே, பாபம்செய்த பணக்காரர்களுக்கும், கஷ்டப்படும் ஏழைகளுக்கும் ராமபூஜையில் எவ்வளவு சமய மதிப்பும் சமயப்பொருளும் இருந்தபோதிலும், வரலாற்றில் ராமனின் தெய்வீகத்தன்மை வெவ்வேருன வகைகளில் எப்படி எப்படி பிரயோஜனப்பட்டிருந்தபோதிலும், பாரதப் போருக்கு முந்தைய காலத்தில் ஏற்பட்ட தசரத குமாரனின் ராஜ்யம், ராமனின் ராஜ்யம், கங்கை நதிப் பள்ளத்தாக்கில் முதன்முதலில் உருப்பெற்றுக்கொண்டிருந்த அடிமை ராஜ்யங்களில் ஒன்ருகவிருந்தது என்பதில் ஐயமில்லை.

சரித்திரத்தில் மற்றவர்களைவிட அதிகக்காலம் வாழ்ந்த ராமனின் வமிசம், ஹஸ்திணபுரத்தில் பூருக்களின் வம்சம் ஓங்கி வளர்ந்ததால் தன் பெருமையை இழந்தது. மேலும், காசி, மகதம், விதேஹம், யாதவர்களின் மதுரை ஆகிய ராஜ்யங்களும் பிரசித்தி பெற்றன. கங்கைநதிப் பள்ளத்தாக்கிலிருந்த பல்வேறு அரச குடும்பங்கள், திருமணசம்பந்தம் மூலமாகவோ யுத்தத்தின் மூலமாகவோ, பெரிய ராஜ்யங்களாக ஐக்கியப்பட்டுக்கொண்டிருந்தன; யதேச்சாதிகாரப் பேரரசு ஏற்பாடுகளாகப் பக்குவமடைந்து கொண்டிருந்தன. பல்வேறு புராணங்களில், குறிப்பாக, ஹரிவம்சத்தில் விவரிக்கப்படும் அரச வம்சங்களிலிருந்தும், மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் செழுமைமிகுந்த பாரம்பரியங்களிலிருந்தும் இவற்றைப்பற்றிய ஒரு சித்திரத்தைப் பெறமுடியும். இந்தியாவின் சமய-சமுதாய வரலாற்றுக்குக் கிருஷ்ணனை அளித்துள்ள அந்தக-விருஷ்ணிகள்—இவர்கள் ஸாத்வதர்கள் என்றும் யாதவர்கள் என்றும்கூடக் குறிப்பிடப்படுகின்றனர்—(சிசுபாலனுடன் போர்புரிய நேர்ந்தது மாதிரி) போர்புரியவேண்டியிருந்தது. யாதவர்கள் போன்ற கணசங்கங்கள் போர்புரிந்து தோல்வியுற்று இடம் பெயரவேண்டியிருந்தது. யாதவர்கள், தமது கண-சங்கம் முழுமையுடன் மேல்திசையில் சென்று குடியேறினர்கள். அரசகுடும்பங்கள் ஒன்ருேடொன்று போர்புரிந்தன; பழைய கண ஜனநாயகத்தில் இத்தகைய செய்தியைக் கேட்டிருக்கமுடியாது; இவ்வாறு சண்டை போடுவது மிகப்பெரிய பாபமாகக் கருதப்பட்டது. மதுராவின்

தம்சனும், மகதத்தின் ஜராசந்தனும், ஹஸ்திஞபுரத்தின் கௌரவர்களும் பெரிய சாம்ராஜ்யங்களை அமைக்க விரும்பினர்கள்; அதற்காக அவர்கள், குலங்களில் நிலவிய பழைய ராணுவ ஜனநாயத்தின் மீத மிச்சங்கள் அனைத்தையும் அழித்தார்கள்; யதேச்சாதிகாரமான வம்ச பரம்பரை முடியாட்சிகளை அமைத்தார்கள்; செல்வத்தையும் நிலத்தையும் அடிமைகளையும் சேகரித்தார்கள்; அக்கம் பக்கத்துக் குலங்களுடன் மூர்க்கத்தனத்துடன் சண்டை போட்டும், தனக்கு போட்டியாக வரும் சொந்த இரத்தக்கலப்பு உறவினர்களை எதிர்த்து சகோதரச் சண்டை நடத்தியுமே இந்தக் காரியங்களைச் செய்தனர். இவ்வாறு விரிவடைந்துகொண்டிருந்த அடிமை ராஜ்யங்களுக்கும், முன்னல் பிரஜைகளாகவிருந்தவர்களின் கண-சங்கங்களுக்கும் ஏற்பட்ட மோதலும், தம் கீழிருந்த வைசியர்களும் சூத்திரர்களும் உற்பத்தி செய்த பெருஞ் செல்வத்தை அடைவதற்காக, அடிமை உடமைக்காரர்களின் குடும்பங்களுக்கிடையே நடைபெற்ற போரும் இறுதியாக மகாபாரதப் போரில் முடிவுற்றது. ஹஸ்திஞபுரத்தின் கௌரவர்கள் மத்தியில், கண உறுப்பினர் ஜனநாயகம் இறந்தொழிந்து நீண்டகாலமாகிவிட்டது. தந்தைவழி ஏற்பாட்டின் அடிமை முறைக்கு ஸ்தாபகர்களாக விருந்தவர்களும் புருஷஸூக்கத்தில் குறிப்பிடப்பட்டவர்களுமான புராதன குருக்கள், இப்பொழுது ஒரு பெரிய பிரதேசத்தைக்கொண்ட அடிமை ராஜ்யமாக மலர்ந்துவிட்டனர். கண அங்கத்தினர்களின் ஜனநாயகம், மூத்தோர்களின் பணக்காரக் குடும்பங்களின் மேன் மக்கட் தொகுதியாகக் குறுகிவிட்டது. இப்பொழுது அந்த மேன்மக்கள்கூட யதேச்சாதிகார முடியாட்சியால் நசுக்கப்படும் நிலையில் இருந்தனர். அதுவே கௌரவர்களின் விநாசத்தை விளைவிக்கக்கூடியதாகவிருப்பதாக, கௌரவ மூத்தோர்களின் கூட்டத்தில் கிருஷ்ணன் புகார் செய்கிருர்; பண்டைக் கால ஜனநாயகத்தின் மீத மிச்சங்களை அழிப்பதற்தாகத் துரிதமாகச் செயலாற்றும் ராஜகுமாரர்களை அடக்குவதற்குத் தகுதியற்றவர்களாகக் கௌரவ குலப் பெரியோர்கள் இருப்பதாக கிருஷ்ணன் புகார் செய்கிருர். இந்தப் பெரியோர்களின் கையாலாகாத்தனத்துக்குக் காரணம் என்ன? கண சங்கங்களுடைய ஜனநாயகத்தின் காவலர்களாக கருதப்பட்ட அந்த மூத்தோர்களே அதன்

கொலைகாரர்களாகிவிட்டார்கள். அந்த மூத்தோர்களே செல்வத்தையும் நிலத்தையும் அடிமைகளையும் தேடி அலைந்தார்கள். அவர்கள் யுத்தத்தை ஒரு தொழிலாகக் கொண்டிருந்தனர். செல்வம் வெகுவேகமாக ஒருசேர குவிந்துகொண்டிருந்த காரணத்தால், போர்க்கருவிகளின் உற்பத்திக் கலையில் வல்லவர்களில் ஒருவராகவும், போர்க்கலையின் தலைசிறந்த ஆசிரியர்களில் ஒருவராகவும் விளங்கிய துரோணரே வறுமையின் பிடிப்பில் சிக்குண்டு தவித்தார்; அவருடைய மகனை அசுவத்தாமன் பால்வேண்டுமென்று அழுதபொழுது அவனுக்கு வெள்ளை மாவை தண்ணீரில் கரைத்துக்கொடுத்து, அவனை சமாதானப்படுத்தினர். தனக்கு தட்சிணை கொடுத்த எந்த அடிமைச் சொந்தக்காரருக்கும் தன்னை விற்பதற்கு அவர் சித்தமாயிருந்ததில் ஆச்சரியமில்லை. மேன்மக்களான அடிமைச் சொந்தக்காரர்கள், அடிமைகள் என்ன செய்வார்களோவென்ற பீதியில் வாழ்ந்தார்கள்; அடிமையாகவேண்டிய குலங்கள்-அதுவரை அடக்கப்படாமலிருந்த குலங்கள், அவர்களுக்கு அச்சத்தை உண்டாக்கின. எனவே இவர்களோ அடிமைகளோ ஆயுதமேந்த முயன்ருல் அல்லது மனித உரிமைகளைக் கோரினல் அவர்கள் மூர்க்க தண்டனைக்கு ஆளாக்கப்பட்டனர். நிஷாதச் சிறுவனை ஏகலைவன் தன் எஜமானர்களுடைய சித்தாந்தத்துக்குத் தானே செலுத்திய விசுவாசத்துக்குப் பலியாகியிருக்காவிட்டால், அவன் துரோணருக்காக தன் விரல்களை இழந்திருக்கமாட்டான்; அர்ஜுனனுக்கு சமமான ஒரு சூத்திர மா வீரனுக இருந்திருப்பான். அடிமைச் சொந்தக்காரர்கள் செல்வத்தின் பால் பேராசை கொண்டனர்; செல்வத்துக்காக, பண்டைக் கால இந்திய வரலாற்றின் மிகப்பெரிய வெகுஜனப் படுகொலையைத் தொடங்குவதற்கு அவர்கள் சித்தமாயிருந்தார்கள்.

அடிமை முறை, பணம், வர்க்க ஆட்சி, ஆகியவற்றின் தர்க்க ரீதியான பலன், அடிமைச் சொந்தக்காரர்களையே தாக்கியது. ராட்சஸர்கள், நாகர்கள், நிஷாதர்கள், திராவிடர்கள் முதலிய பூர்வ குடிகள் மீது வெற்றி காண்பதற்காக, ஆரியர்களின் கண சங்கங்கள் உருவாக்கிய கருவி நுணுக்கத் திறனும் வீரமும், கங்கை, ஸிந்து நதிகளின் பள்ளத் தாக்குகளை வசப்படுத்திக் கொண்டபின் அனேகமாகத் தேங்கிவிட்டன. முன்பெல்லாம்

வெற்றியடைவது சுலபமாயிருந்தது. எப்படியென்ருல், படையெடுத்த ஆரியர்களிடம் குதிரையும் இரும்பு நுனியை உடைய அம்பும் இருந்தன; இங்கு வசித்த மக்களிடம் அவையில்லை. பெருகிக்கொண்டிருந்த கணங்கள் பரவின; தமக்கு உரித்தான பிரதேசங்களை வரையறுத்துக்கொண்டன. ஆனுல் தனி உடமையும் அடிமை முறையும் வியாபாரமும் செல்வச் சேமிப்பும் பெருகிய பொழுது, கண ஜன நாயகம், விரோதி வர்க்கங்களாகப் பிளவுபட்டது; அவற்றுக்கிடையே சண்டை மூண்டது. நிலத்துக்காகவும் அடிமைகளுக்காகவும் விஸ்தரிப்பது மென்மேலும் கடினமாயிற்று. எனவே, மேன்மக்கள் குடும்பங்கள் ஒன்றையொன்று அழிக்க முயற்சித்தன. பழைய கண ஜன நாயகத்தின் விதிகளுக்கு ஏற்றபடி, இரத்தக்கலப்பு உறவினர்களும் கொஞ்சநஞ்சம் இரத்த சம்பந்தமுடைய தூர உறவினர்களும் பெருகிக்கொண்டிருக்கும் செல்வத்தைப் பங்கிட்டுக்கொள்ளவேண்டுமென்ற கோரிக்கைக்கு எதிரான முறையில், செல்வம் ஒருசேர குவிக்கப்பட்டது. எனவே, அடிமைகளுக்காகவும் கொள்ளைக்காகவும் அன்னிய குலங்களை எதிர்த்து நடந்த போரின் எதிர் வினையாக, உறவினர்களுக்குள்ளேயே போர் மூண்டது. கொள்ளையை பாகம் பிரிப்பதில் அடிமைச் சொந்தக்காரர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டு சண்டை மூண்டது. தோற்கடிக்கப்பட்டவர்களை அடிமைப்படுத்தும் முறை வெற்றி கண்டவர்களை பேராசைக்கு அடிமைகளாக்கியது; அந்தப் பேராசை அவர்களுடைய பழைய கண ஜனநாயகத்தைக் கொன்றது. இல்லாவிட்டால், சொக்கட்டான் ஆட்டத்தில், சகோதரர்களையும் அவர்களுடைய மனைவிகளையும் அடிமைகளாக்குவதை யாராவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கடந்தொழிந்து விட்ட யாகக் கம்யூன் காலத்தில், எந்த அன்னையாவது, குந்தி செய்தமாதிரி கன்னிப்பெண்ணுகை விருந்தபொழுது, பிறந்தானென்ற காரணத்துக்காக, கர்ணனைப்போன்ற அழகுச் செல்வம் நிறைந்த புத்திரனை நட்டாற்றில் விடுவாளா? எனினும், முறை கெட்டுப் பிறந்தவனுன கர்ணன், அங்க நாட்டு ஏழை மீன் பிடிப்போரின் மத்தியில் வளர்ந்த காரணத்தால், அவனுடைய "முறையாகப் பிறந்த" சகோதரர்களைக் காட்டிலும் உயர்ந்த தர்மசீலனுகவும் தைர்யசாலியாகவும் இருந்தான். ஓரளவுக்கு முறைதவறிப்

பிறந்தவனை பாண்டு மகன் அர்ஜுனன், அடிமைச்சொந்தக்கார அரசனின் குமாரன் என்று பெருமையடித்துக்கொள்வதன்மூலமே சாமான்ய ஆட்டப் பந்தயங்களில்கூட வெற்றிபெற முடிந்தது; அவனுடன் போட்டியிட்ட கர்ணனே, தன் தந்தையின் பெயரைச் சொல்லமுடியவில்லை. பூர்வீகக் கண கம்யூனின் மனிதத் தன்மை அடிமைச் சொந்தக்காரர்களின் செல்வச் செருக்குக்கும் கொடுமைக்கும் பலியாயிற்று. அதன் பலனே பாரதப் போர்.

பாரதப் போர், ஹஸ்தினபுர ராஜ்யத்தை ஆண்ட குடும்பத்தின் இளவரசர்களுக்கிடையே நிகழும் போராக ஆரம்பித்தது, அது இரத்தக் கலப்பு உறவினர்களுக்கு இடையே நிகழும் சகோதரச் சண்டையாகத் தொடங்கியது. இரத்தக் கலப்பு உறவினர்கள் ஒருவரை யொருவர் கொல்லக் கூடாதென்ற யக்ஞ-கண கோட்பாடுகளுக்கு முற்றிலும் விரோதமான காரியம் இது.

ஒவ்வொரு கட்சியும் கூட்டு சேர்ந்தது; இரு கட்சிகளிலும் பல கண-சங்கங்கள் சேர்ந்துகொண்டன. இந்தக் கண சங்கங்கள் தமக்குள்ளே பிளவுண்டு, கௌரவர்கள் அல்லது பாண்டவர்களின் கட்சியில் சேர்ந்து, ஒருவரோடொருவர் போர் புரிந்தனர். இதற்கு உதாரணமாக, சாத்வதர்களைக் கூறலாம். கணசங்க ஜனநாயகங்கள் அனைத்துமே தகர்ந்து சிதறின.

வேறுபல ராஜ்யங்களின் உறவுமுறை அரசர்களும் பிளவுபட்டுப் போரில் கலந்துகொண்டனர். இதற்கு உதாரணமாக, மகதர்களைக் குறிப்பிடலாம். சகோதரச் சண்டை, ஆட்சி புரியும் பெரு மக்களின் ஒவ்வொரு குடும்பத்திலும் பிரவேசித்துவிட்டது.

பூர்வ குடிகளின் குலங்களில் பல இந்தப் போரில் சேர்ந்தன. இதற்கு உதாரணமாக ராட்சஸர்களைக் கூறலாம். அந்தக் குலங்களின் தலைவர்கள், தோல்வியுற்ற பின்போ, சாதாரணமாகவே நேச உறவுகொண்டதாலோ, இந்த ஆளும் குடும்பங்களுடன் இணைப்பு கொண்டிருந்தன. எனினும், தம் மீது வெற்றி கண்டு, தம்மை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கு மிந்த பெரிய வளர்ந்து கொண்டிருக்கும் அரசுகளிட மிருந்து விடுபடுவதற்கு உரிய சந்தர்ப்பமாக, சில குலங்கள் இந்த சகோதரச் சண்டையை வரவேற்றன. இதற்கு உதாரணமாக, நாகர்கள், திராவிடர்கள் முதலி

யோரைக் குறிப்பிடலாம். இந்த ராஜ்யங்கள் அழிந்துவிடுமென்றும் அதன்பின் நலம்தந்த பழைய நாட்களுக்குத் திரும்பிவிடலாமென்றும் அவர்கள் நினைத்தார்கள்! வீண் நம்பிக்கை!

யாதவ சங்கங்களுடைய சமஷ்டியின் முக்கிய தலைவர்கள், குருக்களுடன் உறவு கொண்டிருந்தனர்; எனினும் அவர்கள் கிருஷ்ணன் தலைமையில், மத்தியஸ்தம் செய்வதற்கு முயன்றனர். ஆனால் யுத்தம் தொடங்கிய பின், அவர்களில் சிலரைத் தவிர மற்றவர்கள் பெயரளவில்தான் நடுநிலைமை வகித்தார்கள்; இதற்கு கிருஷ்ணன் சிறந்த உதாரணம். அவர் நேரடியாகப் பாண்டவர்களை ஆதரித்தார்; அவருடைய ராணுவங்கள் கௌரவர்களுடன் சேர்ந்துகொண்டன. அதாவது அந்தக-விருஷ்ணிகள் கூட பிளவுபட்டு, எதிர்எதிரான கட்சிகளில் சேர்ந்து கொண்டனர்.

ஆக, மகாபாரத யுத்தம், கிட்டத்தட்ட வடஇந்தியா முழுவதையும் ஒரு பயங்கரமான வெகுஜனப் படுகொலைக்கு உள்ளாக்கியது. கண சங்கங்கள், ராணுவ ஜனநாயகங்கள், மேன்மக்கள் குடும்ப சங்கங்கள், அடிமை ராஜ்யங்கள் முதலிய அனைத்தும், பழைய உலகம் முழுமையும், யுத்தம் என்ற ஒரே கொதிநிலைக் கொப்பரைக்குள் தள்ளப்பட்டன. பழைய உலகத்தின் கணங்கள், அவற்றின் மதிப்புகள், அவற்றின் ஒழுக்கம், அவற்றின் பொருளாதாரம், சமுதாய உறவுகள் ஆகிய அனைத்துக்கும் அது முடிவுகண்டது. ஒரு புதிய உலகம், அடிமைச் சொந்தக்காரர்களின் பேராசை, அவர்களின் செல்வம், சுரண்டப்படும் சூத்திரர்களையும் வைசியர்களையும் அடக்குவதற்காக அவர்கள் கையில் குவிந்திருக்கும் அதிகாரம் ஆகியவற்றின் உலகம், நிலைகொள்ள விரும்பியது.

சமுதாய உறவுகளிலும் அவற்றைப் பிரதிபலிக்கும் சித்தாந்த மதிப்புகளிலும் ஏற்பட்ட இந்தப் பயங்கரமான நெருக்கடி, ஒரு வகையில், பகவத்கீதையின் கிளைக் கதையில், ஜாடையாகத் தெரிவிக்கப் படுகிறது. அந்த நூல் விவாதிக்கும் பல்வேறு தத்துவ ஞானக் கருத்தோட்டங்களை தற்சமயம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தோமானால், அந்தநூல், கூட்டுக் கண உறவுகளுக்கும் அவற்றின் சித்தாந்தத்துக்கும் இறுதியான மரணஅடி கொடுத்ததென்பதையும்; கிட்டத்தட்ட தயை தாட்சணியமில்லாத முறையில், தனிஉடமை,

வர்க்க உறவுகள் ஆகியவற்றின் தர்மத்தை மேலாதிக்கம் பெற்ற தாக அரியாசனத்தில் அமர்த்திய தென்பதையும், அந்த நூலின் தோற்றமே உணர்த்துகிறது. புதிய உறவுகள் ஒரு மெய்ப் பொருளாகிவிட்டன; அவற்றுக்கு கீதை ஒரு தத்துவத்தைக் கொடுத்தது; அதன்மூலம், பழைய கண ஜனநாயகத்தின் நிலையி லிருந்து பேசக்கூடிய விமர்சகர்களை அது வாயடைக்க முயன்றது. இரத்த சம்பந்த உறவின் சகாப்தம், கூட்டுக் கண ஜனநாயகத் தின் சகாப்தம் முடிந்துவிட்ட தென்றும் வர்க்க விரோதங்களும் சுரண்டலும் உள்ள சகாப்தம் வந்துவிட்ட தென்றும், முதலில் குறிப்பிடப்பட்ட சகாப்தத்தின் ஒழுக்கமும் தர்மமும் இறந்துவிட் டன வென்றும் பின் குறிப்பிடப்பட்ட சகாப்தத்தின் ஒழுக்கமும் தர்மமும் மேலாதிக்கம் பெற்றுவிட்டன வென்றும், கடவுளின் புதிய அவதாரத்தின் பெயராலும் கலியுகத்தின் பெயராலும் கீதை பறைசாற்றியது.

கர்ண பரம்பரைக் கதை கூறுவதைப்போல, போர்க் களத்தின் நடுவில், கிருஷ்ணனும் அர்ஜுனனும் வாதித்து, கீதையின் பதி னெட்டு அத்தியாயங்களும் உருப் பெறவில்லை யென்பது உறுதி. சம்பந்தப்பட்ட மகா புருஷர்களுக்கு உரிய நன்மதிப்பை நாம் அளிப்போம்; ஆனால் யதார்த்த வாதியான கிருஷ்ணன் இத்த கைய நகைப்புக்கு இடம்தரும் நிலையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்க முடியாது. பாரதப் போரின் தத்துவாசிரியர், அமைதி நிறைந்த இடத்தில் அமர்ந்து, கீதையை எழுதி யிருக்கி றார். ஆனால் அது பின்னர் நிகழ்ந்த சிந்தனையாக மட்டுமில்லை; எழுத்தாளர் காலத்திலிருந்த சகல தத்துவ ஞானக் கருத்தோட் டங்களையும் விவரிப்பதற்கான வியாஜமாக மட்டும் போர்நிலைமை பயன்படவில்லை. தத்துவார்த்தக் கருத்தோட்டங்களின் விளக் கமே நோக்கமாக விருந்தால், அது சாந்தி பருவத்தில் இடம் பெற்றிருக்க முடியும்; அதில் பலவகைப்பட்ட கேள்விகளும் தர்க்கத்திற்குரிய பிரச்னைகளும் எழுப்பப்பட்டு பதிலளிக்கப் படு கின்றன. ஆசிரியர் கீதையில் பதிலளிக்க விரும்பும் முக்கிய மான கேள்வி, பாரதப் போரில் ஈடுபட்ட சகல சிந்திக்கக் கூடிய ஜனங்களும் எழுப்பிய பொதுவான கேள்வியாகும். அது சன்னியாசம்பற்றிய கேள்வியுமல்ல, கர்மயோகம்பற்றிய கேள்

வியுமல்ல. உள்ளதற்கும் (வாழ்வுக்கும்) உணர்வுக்கும் உள்ள உறவைப்பற்றி, தத்துவஞானத்தின் பிரதான பிரச்சினையான அதைப்பற்றி, கீதை விவாதிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. சிந்தனையும் நடத்தையும் உணவால் எப்படி பாதிக்கப்படுகிற தென்பதைப்பற்றிக்கூட அது அபிப்பிராயம் தெரிவிக்க விரும்பு கிறது. அவையெல்லாம் இருந்தபொழுதிலும், அர்ஜுனனின் நோய் உணவு சம்பந்தமான தல்லவென்பதும், அவனுடைய பிரச்னை எந்த தத்துவார்த்தக் கருத்தோட்டத்தைத் தேர்ந்தெடுப் பது என்பதல்லவென்பதும், ஒவ்வொரு சரித்திர மாணவனுக்கும் தெளிவான விஷயம். கண உறவுகளின் ஒழுக்கத்துக்கும் தர்மத் துக்கும் அன்றும் விசுவாசம் செலுத்திய அக்காலப் பொதுமக்கள் அனைவரிடத்திலும் அநேகமாக மேலோங்கியிருந்த எளிய கேள்வி யைத்தான் அர்ஜுனன் கேட்டான். ராஜ்யத்தில் பாண்டவர் களுக்கு ஒரு பங்கு வேண்டுமென்ற கோரிக்கை, குறைந்தபட்ச மாக ஐந்து கிராமங்களாவது வேண்டுமென்ற கோரிக்கை, அவனை எந்தநிலைக்குக் கொண்டுவந்திருக்கிறது? அவனுடைய குருநாதர்கள், தாத்தாக்கள், சகோதரர்கள், சிற்றப்பன் பெரியப் பன்மார்கள் ஆகியோரை எதிர்த்துப்போராடிக் கொல்லவேண்டிய நிலைக்கு அவனை கொண்டுவந்திருக்கிறது. சுருங்கச் சொன்னால் அவன் அறிந்த ஒவ்வொரு இரத்த சம்பந்த உறவினரையும் கொல்லவேண்டும்; பழைய காலத்தின் சித்தாந்தப்படி, என்ன காரணமாயிருந்தாலும், இரத்தக் கலப்பு உறவினரைக் கொல்வது பாவம்; அது நிச்சயமாக விலக்கப்பட்டிருந்தது. அத்தகைய கொலையை மிகப்பெரிய பயங்கரமாகக் கருதும்படி பழைய கண ஜனநாயகங்கள் தமது மக்களுக்குப் போதித்தன. இதெல்லாம் எப்படி பாபவினையல்லவென்றும் அனுமதிக்கத் தக்கதென்றும் கூறமுடியும்? பழைய தர்மம் செல்லக்கூடியதானால், இருகட்சி களின் தலைவர்கள் அனைவரும் பிழை புரிகிறார்கள்; அவர்கள் சகல குடும்பங்களையும் அழிவுக்கும் நரகத்துக்கும் இட்டுச் செல் கிறார்கள். "சொத்துமீதும், ராஜ்யத்தின்மீதும் உள்ள பாத்தியதை களை விட்டுவிடு! அதன் மூலம் உறவினர்-படுகொலையைத் தவிர்த்துவிடு! சன்னியாசம் கொள்!" இதுவொன்றே கண சங்க, குடும்பசங்க விதிகளின் இயல்பான முடிவு. ஆனால்

யுத்தத்தை நடத்தியாக வேண்டுமானால், அதை அனுமதித்து, உறவினர்களைக் கொல்வதைப் பாவமற்றதாக்கியுள்ள புதிய ஒழுக்கவிதி, புதிய சமுதாய மதிப்பு என்ன? அர்ஜுனன் இந்தக் கேள்வியை எழுப்பினான்; கணங்களின் சாதாரண மக்களும் அந்த வகையில்தான் எண்ணினார்கள்; அவர்களும் பதில் கோரினார்கள். கீதையின் தத்துவஞானி பதிலைக் கொடுத்தார். சமுதாயம், கைகடந்த முரண்பாடுகளில் தன்னைத்தானே உட்படுத்திக்கொண்டு விட்டதை, அந்தப் பதில் எடுத்துக் காட்டுகிறது. "அது விதி, அது உன் வர்க்கக் கடமை, நம்பு, கீழ்படிந்து நட" என்று சொல்வதற்கு மேல், அந்த முரண்பாடுகள் சம்பந்தமாக ஒரு தீர்க்கமான தெளிவைக் கொடுக்க வர்க்க சமூகத்தின் தத்துவஞானியால் முடியவில்லை. இந்தப் பகுத்தறிவுக் குறைவை நிறைவு செய்வதற்காகவும், திகிலையும் பயத்தையும் உண்டாக்கி புதியவர்க்க விதிமுறைக்கு அணைசுவர் எழுப்புவதற்காகவும் செய்தாரோவென்று தோன்றக்கூடிய வகையில், கிருஷ்ணன் விசுவரூபம் எடுத்ததாகக் கருதப்படுகிறது; அந்த விசுவரூபத்தில், விதிமுழுமையும் முன்கூட்டியே காட்சியளித்தது. அர்ஜுனன் வாயடைத்துப் போகிறான். திருப்தியடைந்துவிட்டதாகக் கூறுகிறான். சாமான்ய மக்களின் கேள்வி, சரி தவறு என்று நிர்ணயிக்க முடியாத பேச்சில் அடிப்பட்டுப் போகிறது; அவர்கள் வாயடைத்து நிற்கும்படி செய்யப்படுகிறது; அவர்கள் பயமுறுத்தப்படுகின்றனர், மயக்கத்தில் ஆழ்த்தப்படுகின்றனர். இவ்வாறாக, அந்த மக்கள், புதிய உறவுகளாலும், புதிய தத்துவஞானத்தாலும் புதிய தர்மத்தாலும் புனிதமாக்கப்பட்ட துன்மார்க்கமான வெகுஜனப் படுகொலையில் ஈடுபடுகிறார்கள். மதத்தைப் பற்றி கணக்கில் எடுக்காமல், பகுத்தறிவு பூர்வமாகவும் சரித்திர பூர்வமாகவும் முழு விஷயத்தையும் பார்க்கும்பொழுது, கீதை கிளைக்கதையின் திரட்டுரையின் சாராம்சம் இதுவே.

கண-உறவுமுறைக் கம்யூனின் ஒழுக்கத் தர்மத்துக்கு எதிராக புதிய பிரதேச ரீதியான வர்க்க ராஜ்யத்தின் தர்ம தத்துவத்தை கீதை எப்படி வகுக்கிறது?

கூட்டாக உழைத்து உண்டு வாழ்ந்த பழைய கம்யூனில், பொருட்களும் வேலையும் பலவகைப்பட்டவையாகப் பெருகிய

பொழுது, வர்ணங்களின் பாகுபாடு என்ற வேலைப் பிரிவினை தோன்றியது. ஒவ்வொரு வர்ணத்திற்கும் அதன் வேலை நிர்ணயிக்கப்பட்டது; ஆனால் உற்பத்திப் பொருள் முழுமையும் சமுதாயத்துக்குச் சொந்தமாயிருந்தது; அதை உபயோகிக்கும் உரிமையும் சமூகத்துக்குப் பொதுவாகவே இருந்தது. ஒரு கம்யூன் உறுப்பினர் ஒரு குறிப்பிட்ட வர்ணத்தில் உழைத்த காரணத்தால் அவருக்கு விசேஷமான வெகுமதிகளோ, பிரதிபலன்களோ உடமை உரிமைகளோ கிடைக்கவில்லை. வர்ணமுறையால் ஏற்பட்ட ஒரே பலன் என்னவெனில் அது உழைப்பின் பலவகைகளுடைய தேர்ச்சியை அதிகரித்தது; உற்பத்திப் பொருளைச் செம்மைப்படுத்தியது; சமுதாய ஸ்தாபனத்தின் வேலையை உயர்த்தியது. ஆனால் பரிவர்த்தனையும், வியாபாரமும் தனி உடமையும் பணமும் தோன்றியபொழுது ஒவ்வொரு தனிக்குடும்பமும் தன்னுடைய வர்ண நிலைக்குத் தக்கவாறு தனிவுடைமையையும், உரிமைகளையும் உண்டாக்கிக் கொண்டது. இயல்பாகவே யுத்தம், பரிவர்த்தனை, உற்பத்தியின் நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர்புகொண்டிருந்த வர்ணங்கள், பொருளாதாரத்துறையில் ஆதிக்கம் வகிக்கும் வர்ணங்களாயின. ஆதிக்கம் வகிக்கும் பிராமண, க்ஷத்திரிய வர்ணங்களில் ஏழைகளாயிருந்தவர்கள் உழைக்கும் வர்ணங்களோடு தள்ளப்பட்டனர். வர்ணங்கள் வர்க்கங்களாயின. வர்ண பந்தத்திற்கு பதிலாக வர்க்க பந்தமும் வர்க்க விஸ்வாஸமும், வர்க்கக் கடமையும், வர்க்க சன்மானங்களும் நிறுவப்பட்டன; இரண்டு மேல் வர்ணங்களும் சுரண்டும் வர்க்கங்களாயின. மற்ற இரண்டும் சுரண்டப்படும் வர்க்கங்களாயின. சூத்திர அடிமைகளைத் தவிர மற்றவர்கள் அவர்களுடைய உடமைக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றபடி ஒரு வர்ணத்திலிருந்து இன்னொரு வர்ணத்திக்கு மாற முடிந்தது; அதாவது ஒரு வர்க்கத்திலிருந்து இன்னொரு வர்க்கத்திற்கு மாறமுடிந்தது. வர்க்க உரிமைகளான வர்ண உரிமைகள் கண கம்யூன் உரிமைகளுக்கு மேலானவையாகி கண கம்யூன் உரிமைகளை நசுக்கின.

பகைவருடன் போராடி அவர்களை முறியடிப்பது க்ஷத்திரியர்களின் வர்ணக் கடமையாக இருந்தது. ஆனால் கண கம்யூன் இருந்த நாட்களில் எப்பொழுதுமே அன்னியனே விரோதியாகக் கருதப்

பட்டான். கம்யூனுக்குள் வர்க்கப் பகைகள் இல்லாதபொழுது, க்ஷத்திரியர் தன் கணத்தின் உறுப்பினர்களுடன் சண்டை செய்யும் பிரச்னை எழ முடியாது ; கண அங்கத்தினர்கள் அனைவருமே, ஒருவருக்கொருவர் இரத்த சம்பந்த உறவினர்களா யிருந்தார்கள், தனி உடமையும், அடிமைகளும் கம்யூனில் தோன்றியபொழுது. க்ஷத்திரியர்களும் பிராம்மணர்களும் சுரண்டல்காரர்களானுர்கள் ; அடிமைகள் மீதும், சிதறுண்ட கம்யூனிலிருந்த ஏழைகள் மீதும் பலாத்காரத்தைப் பிரயோகித்தார்கள். சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட புதிய பொருளாதாரத்தையும் வர்க்க உறவையும் பராமரித்து நீடிக்கச் செய்வதற்காக அன்னியன், உறவினன் ஆகிய இருவரையும் எதிர்த்துப் போராடுவது, இப்பொழுது அவர்களுடைய வர்ணக் கடமையாயிற்று. சம்பந்தப்பட்ட நபருக்கோ, குடும்பத்துக்கோ சொந்த சொத்தாகிவிட்ட செல்வத்தையும் கால்நடைகளையும் கிராமங்களையும் நிலத்தையும் அடிமைகளையும், அரச பீடங்களையும், பாதுகாப்பதற்காகவோ அதிகரிப்பதற்காகவோ மீட்பதற்காகவோ போராடுவதும் கொல்வதும் பிராமண-க்ஷத்திரிய குடும்பங்களுடைய புதிய கடமையாகவும் உரிமையாகவும் ஆயிற்று. எதிரி அல்லது விரோதி யாராயிருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை ; அவர் உற்றுர் உறவினரா யிருக்கலாம், குருவாக விருக்கலாம், சொந்தத் தாத்தாவா யிருக்கலாம், கண உறுப்பினரா யிருக்கலாம், அன்னியரா யிருக்கலாம், இது தான் க்ஷத்திரியன் என்ற முறையில் அர்ஜுனனுக்கு கீதை கற்பிக்கும் முதல் பாடம். பூர்வீகக் கம்யூனிஸத்தின் மக்கள் ஆயுதமேந்தி சுயமாகச் செயல்படும் ஸ்தாபனத்தைக் கொண்டிருந்த பொழுது நிலவிய தர்மம் இதற்கு அடிப்படையல்ல. மாருக வர்ண-வர்க்கப் பகைகளின் புதிய உறவுகளே இந்தப் பாடத்திற்கு அடிப்படை. சண்டை செய்து வெற்றியடைந்தால் ராஜ்யத்தையும் மகிழ்ச்சியையும் சம்பாதித்துக் கொள்வாய் ; சண்டையில் கொலை செய்யப்பட்டால் அப்பொழுதும் உனக்கு சுவர்க்கம் கிடைக்கும்—இதுவே பணம் படைத்த புதிய ஆளும் வர்க்கங்களின் வாழ்வுக்கும் நடத்தைக்கும் உள்ள ஒரே விதிமுறை. ராஜ்யமும் தனி உடமையும் இளம் பருவத்தில் இருந்த பொழுதாவது க்ஷத்திரியன் தலைக்கு, ஆபத்து காத்திருந்தது ; ஏழை வைசியர்களையும் சூத்தி

ரர்களையும் சுரண்டும்பொழுதும், அடிமை கொள்வதற்காக குலங்களுடன் போராடும் பொழுதும் அவன் உயிருக்கு ஆபத்து இருந்தது. பிற்காலத்திலோ அந்த ஆபத்து கூலிக்கமர்த்தப்பட்ட நிரந்தர ராணுவங்களின் மீது சுமத்தப்பட்டு விட்டது.

கூட்டு வாழ்வின் கடமைகளையும் தர்மத்தையும் அழித்த பிறகு, ஒரு வர்க்கத்தை இன்னொரு வர்க்கத்தின் பலாத்காரம் அடக்குவதற்கு வழிசெய்த பிறகு, ஒருமுகப்படுத்தப்பட்ட வர்க்க சமூகத்தின் அமைப்புக்கு உத்திரவாதம் கொடுக்க கீதையினால் முடியவில்லை. சுரண்டலின் கட்டுக் கோப்புக்கு உட்பட்ட போதிலும் சுரண்டுகிறவர்களும், சுரண்டப் படுகிறவர்களும் நிச்சயமாக வாழ முடியும் என்று, மீண்டும் மீண்டும் வெடிக்கும் நெருக்கடிகளுக்கு இடமில்லாமல் வாழ முடியும் என்று, கீதையினால் உத்தரவாதமளிக்க முடியவில்லை. பழய கம்யூனில் பொருளுற்பத்தி சக்திகள் மிகவும் பிற்பட்ட நிலையில் இருந்தன ; எனினும் ஒவ்வொருவருக்கும் கூட்டுப் பொருளில் உள்ள பங்கு நிச்சயமாகக் கிடைத்தது; கம்யூன் உறுப்பினன், உபயோகத்துக்காக உற்பத்தி செய்தான். கம்யூன் அதை உபயோகத்துக்காக அவனிடம் கொடுத்தது. உற்பத்திப் பொருளானது உற்பத்தியாளன் கையைவிட்டுப் போகவில்லை. இப்பொழுது நடப்பதைப்போல உற்பத்தியாளனிடமிருந்து கைமாறி, பணமாக மாறி வர்த்தகத்தின் மூலம், இந்திரஜாலமான தங்கக் கம்பளத்தில் உலகம் முழுவதும் வட்டமிடவில்லை. இப்பொழுதோ அதிசயமான முறையில் பிரித்தெடுக்கப்பட்டுள்ள தங்க நாணயம், நானாவிதமான வடிவங்களிலும் அளவுகளிலும் புழங்கின. அவை எல்லாவிடங்களிலும், எல்லா வர்க்கங்கள், வர்ணங்கள் மத்தியிலும், சகல பொருட்களுடைய பேரத்திலும் செல்லுபடியாகிக்கொண்டிருந்தன. இந்த ஹிரண்யம் (தங்கம்) இத்தகைய சர்வ வியாபியாகவும் அதே சமயத்தில் மாயமானதாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன! இந்த ஹிரண்யத்தில் மறைபொருளாகவுள்ள சக்திதான் என்ன ? சகலபொருட்களையும் இயக்குவதற்கும் ஒரே சமயத்தில் வெவ்வேறு பொருளாக ஆவதற்கும் அதற்கு வலுவைக்கொடுத்த மாய சக்திதான் என்ன? இன்பத்துக்காக ஒரு பிரயோஜனகரமான பொருளை உண்டாக்குகிறவன், ஹிரண்யம் என்ற மறைபொருளின்-பண ரதின்-தலையீடு

இல்லாமல் அதை ஏன் அனுபவிக்க முடியவில்லை? அவன் அதை பணமாக மாற்றும்பொழுதும் அதே பணம் நேற்று வாங்கிய பொருளை இன்று வாங்க முடியாததற்குக் காரணம் என்ன? அடிமை உழைக்கிறான், எஜமானன் இன்புறுகிறான். ஒருவர் வியாபாரம் செய்து நஷ்டமடைகிறார். இன்னொருவர் வியாபாரம் செய்து லாபம் அடைகிறார். நேர்மையாக உழைத்தால் நேர்மையாக வாழமுடியும் என்ற விதி மனிதன் வாழ்வுக்கு உரியதா? இல்லையா? கடவுளே! நீங்களும் இந்தத் தங்கமயமான ஹிரண்யத்தின் கருவிலிருந்து வெளிப்பட்டு ஹிரண்ய கர்ப்பராகியிருக்கிறீர்களா?[1] பூர்வீக கம்யூனில் இத்தகைய பிரச்னைகள் ஏற்படவில்லை. பகை நிறைந்த மனித உறவுகளை இணங்கச் செய்யும் தத்துவத்திற்கு அதில் தேவையே இல்லை. பண்டைக்கால கம்யூனின் வேத நூல்கள் பிரார்த்தனை செய்தன, ஆரவாரம் செய்தன, நாட்டியம் ஆடின, மாந்திரீகம் செய்தன; பசு கூடுதலான பாலைக் கொடுக்கும்படி செய்வது எப்படி என்று அறிவதற்கு சிந்திக்க முயற்சித்தன. பசும்புல் கரிய பசுவின் வயிற்றுக்குள் சென்று சூடான வெண் பாலாக எப்படி வெளியே வருகிறது என்று வேதத்தின் "தத்துவ ஞானி" அதிசயித்தான். மண்ணில் போடப்பட்ட விதை முளைவிட்டுக் கிளம்பி பன்மடங்கு அதிகமாகத் திரும்பக்கொடுப்பதைக் கண்டு அவன் பிரமித்தான், திகிலும் அடைந்தான். இந்த இயற்கை அனைத்தும் எப்படி செயல்படுகிறது, அதை இயக்குவது யார் என்பதை அறிய அவன் விரும்பினான். அவன் ஒரு மரத்தை வெட்டினான், ஒரு துண்டை வெட்டினான். ஒரு அம்பு செய்தான். சிந்தித்துத் திட்டமிட்டான். காரண விளைவுகளைத் தர்க்கித்தான். ஒரு மானைப் பின் தொடர்ந்து சென்று அதைக் கொன்று உண்டான். அவன் மகிழ்ச்சியடைந்தான். இயற்கையளித்த மரக்கிளை எப்படி அம்பாயிற்று? மான் எப்படி அவனுடைய உணவாயிற்று? எப்படி

---

1 ரிக்வேதத்தின் பிற்காலத்திய அத்யாயங்கள் படைப்புக் கர்த்தாவை விஸ்வ கர்மா என்றும், ஹிரண்ய கர்ப்பம என்றும் பெயரிட்டு அழைக்கின்றன. வேதாந்த தத்துவ ஞானத்தின் ஒருமை-வாத கருத்து முதல் வாதம் ஆத்மாவையும் பிரமனையும் ஒன்றேயொன்று இணைக்கும் அந்த தத்துவம் ஓரளவுக்கு இந்த கருத்துகளிலிருந்து பெறப்பட்டது.

என்ருல் அவன் அதற்காகத் திட்டமிட்டு உழைத்தான். ஆனுல் மரமும் மானும் அங்கு எப்படி வந்தன? ஒருநாள் மான் கிடைப்பதற்கும், மற்ருெரு நாள் கிடைக்காமல் இருப்பதற்கும் என்ன காரணம்? இயற்கையைப் புரிந்துகொண்டு அதன் அடிப் படையில் வாழ்ந்து வளர்ந்து இன்புறுவதே அவனுடைய பிர தான பிரச்னையாக இருந்தது. ஜனங்கள் இறப்பதை அவன் பார்த்தான். அவன் அவர்களைக் கனவில் கண்டான். பறந்து செல்வதாகவும் விசித்திரமான இடங்களில் திரிந்துகொண்டிருப்ப தாகவும் அவன் தன்னைப்பற்றிக் கனவுகண்டான். ஆனுல் அவன் தன்னுடைய யாக இல்லத்தில் யக்ஞ அக்னிக்கு அருகில் உள்ள இடத்தைவிட்டு நகரவில்லை, அவனுக்கு அப்பால் வசிப்பதாக ஏதாவது அவனுள் இருக்கிறதா? அதுவே அவனுக்குத் திட்ட மிடுகிறதா, சிந்திக்கிறதா? அவன் ஆவிகளையும் ஆத்மாக்களையும் கற்பனை செய்தான். தன்னைப்போலவே ஒவ்வொன்றுக்கும் உயிர் இருப்பதாக அவன் எண்ணினுன். உலகத்தின் நிகழ்ச்சிக ளுடைய ஆழத்தை அறிவதற்காக அவன் பொதுமைப்படுத்திக் கொண்டிருந்தான், கற்றுக்கொண்டிருந்தான், "தத்துவ விவா தம்" செய்துகொண்டிருந்தான். தர்க்கம், பகுத்தறிவு, சிந்தித் தல், உணர்ச்சி, உணர்வுக்கும் வாழ்விற்கு உள்ள உறவு ஆகிய வற்றை ஆராய்ந்துகொண்டிருந்தான். அந்த கட்டத்தில்தான் தத்துவ ஞானத்தைப் பொருளாகக்கொண்ட ஒரே சூக்தமான ரிக் வேதத்திற்குரிய நாசதியசூக்தம் பிறந்தது. ஆனுல் வேதங் களும் அவற்றின் யாகக் கம்யூனும் எந்த சமயத்திலும் அதற் கப்பால் போகவில்லை. இவ்வாருகத்தான் ஆரம்பக்கால உப நிஷத தத்துவத்திற்கு பாதைகள் இடப்பட்டன.

ஆனுல், அந்த கட்டத்தில் தன்னுடைய சொந்த படைப் புடன் தன்னுடைய சொந்த சமூக சக்திகளுடன் மல்லுக்கு நிற்க வேண்டிய நிலைமையில் மனிதன் சிக்கவில்லை. அப்பொழுது விளக்கப்படவேண்டிய பகை ஒன்றும் இல்லை. அவனுடைய உணவை அவன் உண்டான், அவனுடைய பசி மறைந்தது, அவன் மகிழ்ந்தான். அவனுடைய ஆடையை அவன் உடுத்திக் கொண்டான். அவனுக்கு வெதுவெதுப்பாக இருந்தது, அவன் இன்புற்ருன்.

இப்பொழுதோ பகையும் சுரண்டலும் நிறைந்த ஒரு சமுதாயம் ஏற்பட்டது. அவனுடைய உணவு அவனைவிட்டு பிரிந்தது; அதற்காக உழைக்காத இன்னொருவனுக்கு போஜனமாயிற்று. அவனுடைய ஆடை அவனைவிட்டுப் பிரிந்தது. அதை எஜமானன் அணிந்துகொண்டார், அவன் குளிரில் நடுங்கினான்; ஏதாவது கேள்வி கேட்டால் அவன் தாக்கப்பட்டான். அவன் பொருளை உண்டாக்க மறுத்தால் உண்டாக்கும்படி அவனைக் கட்டாயப்படுத்துவதற்காக, "சமுதாயம்" முழுமையின் பலாத்காரம் அவனைத் தாக்கியது. பொருளை உண்டாக்குவது அவனுடைய கடமை என்று கூறப்பட்டது. தான் வாழ்வதற்குப் போதுமான பங்கு வேண்டுமென்று கேட்டால், அவனுக்குப் பேராசைப் பிடித்திருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது. அடக்கமாக இருக்க வேண்டுமென்று அவனுக்குப் போதிக்கப்பட்டது. இவ்வாறாக கீதை, உபநிஷத தத்துவத்தின் தீர்க்கமான கோட்பாடு உருப்பெற்றது :

"வாழ்க்கையில் உனக்குள்ள நிலையால் உனக்கு இடப்பட்டிருக்கும் கட்டளைப்படி நீ செயலாற்றுவதே, செயலாற்றிக் கொண்டிருப்பதே உன் கடமை. நீ செய்வதின் பலன்கள்மீது, உனக்கு எத்தகைய உரிமையோ அதிகாரமோ கிடையாது. உன்னுடைய செய்கைகளின் பலன்களைப் பெறவேண்டுமென்ற கருத்துடன் காரியங்களைச் செய்யாதே; உழைப்பதை ஒரு பொழுதும் நிறுத்தாதே". (கீதை)

கண்டனக்குரல் எழுப்பிய அர்ஜுனனுக்கும் பொதுமக்களுக்கும், பாரதப் போருக்குப் பின் பல நூற்றுண்டுகளாக, கீதை போதித்து வரும் புகழ்பெற்ற பாடம் இது. வர்க்க சமுதாயம் முரண்பாடுகளிலும், குழப்பத்திலும், நெருக்கடிகளிலும், எதிர்பாராத சந்தர்ப்ப விசேஷங்களிலும், சிக்கியிருக்கும் பொழுது, சமுதாய வாழ்க்கையில் திட்டப்படி பலன்கள் கிடைக்கும் என்று உறுதிகூற முடியாது: அத்தகைய வர்க்க சமூகத்துடைய தத்துவ ஞானத்தின் சாராம்சமே இந்த கீதைக் கருத்து. தனி உடமையும், பொருளுற்பத்தியின் குழப்பநிலையும், பொருளுற்பத்தியாளனிடமிருந்து பொருள் பிரிக்கப்படுவதும் பூர்வீகக்

கம்யூன் கண்டிராத விஷயங்கள்; எதிர்கால சோஷலிஸம் காண முடியாத விஷயங்கள்; அவையே மேற்சொன்ன மத கோஷங் களை, வர்க்க அரசின் மதகோஷங்களை அவசியமாக்கின; உற் பத்தியாளனை அவனுடைய அடிமைத் தனத்திலும் தரித்திரத்தி லும் பிணைத்து வைப்பதற்காகவும், ஆளும் வர்க்கத்தின் அடக்கு முறையையும் சுரண்டலையும் நியாயப்படுத்துவதற்காகவும் அவை அவசியமாயின.

கடமையையும் சமுதாய நன்மையையும் பற்றிய மிகப்பரந்த வாதம்கூட, கொலை செய்வதின் அவசியத்தை, ஊசலாடும் அர்ஜுனனுக்கு உணர்த்த முடியவில்லை. அவனுள்ளே உணர்ச்சி களும் ஆவேசங்களும் ஊற்றெடுக்கின்றன: ஒரு தடவை இறந்து விட்டால், அவனுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி, அனைத்தும் முடிந்து விடுகிறதென்று அவன் வாதிக்கிறான். இத்தகைய வாதம் வரும்பொழுது, அதற்குப் பதில் அளிக்கும் முறையில், கீதை, மானிடர்கள் அனைவரையும் ஆத்மா என்ற பண் பாகச் சுருக்கிவிடுகிறது. இந்த ஆத்மா சரீரத்துக்குள் அடைந் திருந்தபோதிலும், அது உடலுக்குப் புறம்பாக விருக்கிறது; அதற்கு உணர்ச்சி கிடையாது; அது சிந்திக்காது; அது வாழவு மில்லை, மரிக்கவுமில்லை. கிளர்ச்சி, உணர்ச்சி முதலியவை யெல் லாம் சரீரத்தின் அநித்தியமான இயல்புகளாகும்; அவற்றை உண்டாக்கும் சக்தியையே வென்றுவிட முடியும்; அவ்வாறு வெல்லும்பொழுது, மனிதன் ஸ்திதி பிரக்ஞை என்ற நிலையை அடை கிறான்; அப்பொழுது அவனுடைய செயல்கள் அவனிடம் எத்த கைய பந்தத்தையும் கொண்டிருக்காது; அவற்றின் பலன்கள் அவனை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. அப்பொழுது அவன் கொலை செய்தாலும், பாபம் செய்தவனாகமாட்டான்; ஏனெ னில், கொலை செய்யப்பட்டவனிடமும் கொலை செய்தவனிடமும் உள்ள ஆத்மா நடுநிலை நழுவாததாகவும் அழியாத் தன்மை கொண்டதாகவும் இருப்பதால், உண்மையில் ஒன்றுமே நிகழ வில்லை யென்று சொல்லமுடியும். அத்தகைய மனிதன் இன்பத் தையும் உணரமாட்டான், துன்பத்தையும் உணரமாட்டான், வெப் பத்தையும் உணரமாட்டான், குளிரையும் உணரமாட்டான். அவன் உயிர்வாழும் பொழுதே அவனுடைய சரீரத்திலிருந்து விடுதலை

பெற்றுவிட்டான்; அவன் இறந்தபின், பாபபுண்ணிய முதலீடு களின் பலனை அனுபவிப்பதற்காக மீண்டும் பிறக்கமாட்டான். இவ்வாருக, பாரதப் போரின் வெகுஜனப் படுகொலை முழுமையும் கட்டுக் கதையில் அல்லது கானல்நீரில் கரைக்கப்பட்டு விட்டது!

அதன்பின் வந்த நூற்ருண்டுகளில்,மக்களின் கண்டன உணர்ச் சியையும் துயர உணர்ச்சியையும் கோபாவேசத்தையும் அழிப்ப தற்காக, ஆளும் வர்க்கம், மீண்டும் மீண்டும் இந்தக் கோட்பாட்டை உழைப்பாளி மக்களுக்கு விரோதமாகப் பயன்படுத்தியது. இந்த ஆளும் வர்க்கம் ஜனக மஹாராஜனைப் பற்றியும் அவரைப்போன்ற இதரர்களைப் பற்றியும் அற்புதக் கதைகளைப் புனைந்தது. செல்வத் திற் சிறந்த அரசன் நல்ல உணவைப் புசித்தான்; ஆனல் அவ னுடைய நாக்கில் இன்ப உணர்ச்சி யில்லை. அவன் நல்ல ஆடையை அணிந்தான்; ஆனல் அதைப்பற்றி அவனிடம் எந்த உணர்ச்சியும் ஏற்படவில்லை. அதுபோலவே பாடுபடும் அடிமை கூட பசியில் இன்பம் பெறவேண்டும்; தன்னுடைய உணர்ச்சி களை அடக்கவேண்டும்; இடப்பட்டுள்ள கடமையை நிறைவேற்று வதற்கான இயந்திரமாக, உணர்ச்சியற்ற முறையில் உழைக்கும் இயந்திரமாக அவனுடைய உடலைச் சுருக்கிக்கொள்ளவேண்டும். ஒவ்வொருவரும் அந்த நிலையை அடையும்பொழுது ஏழ்மையும் கஷ்டமுர் மறைகின்றன. எப்படியெனில் அவை மனிதனுக்கு அர்த்தமற்றவையாகின்றன. இந்த-எளிய சிந்தனைச் சிலம்பத் தின் மூலம் ஒவ்வொரு தனி நபரும் இன்பம் பெற முடிகிறபடி யால், சுரண்டல், அடிமைமுறை, உற்பத்தியில் பங்கு, இராஜ்யம், பலாத்காரம் ஆகியவை சம்பந்தமான பிரச்னையை இனிமேல் சமுதாய ரீதியில் எழுப்பத் தேவையில்லை.

பாரதப் போருக்குப் பிற்காலத்தில் ஏற்பட்ட வர்க்க சமூகத் தின் தத்துவ ஞானி இத்தகைய வாதத்தின் மூலம் நிச்சயமான வெற்றி கிடைக்கும் என்று நம்பவில்லை; அதாவது சகல மனித வாழ்வுக்கும் உணர்ச்சிக்கும் முற்றிலும் விரோதமான வகையி லுள்ள சமூக உறவுகளையும் நடத்தையையும் மனிதனின் பகுத் தறிவு ஏற்றுக்கொள்ளச்செய்வதில் அந்தத் தத்துவ ஞானிக்கு (கீதாசிரியனுக்கு—மொ - ர்.) உறுதியான நம்பிக்கையில்லை.

எனவே, அவன் உழைக்கும் மக்களுடைய பகுத்தறிவுத் தன்மையை வேரோடு கெல்லியெறிய விருப்பம்கொண்டான்; உழைப்பாளி மக்களை ஆளும் வர்க்கத்திடம் குருட்டு விசுவாசம் கொண்டவர்களாக ஆக்க விரும்பினன். இந்த விருப்பம் ஆளும் வர்க்கங்களுடைய தலைமைகள் அனைத்துமே கொண்டுள்ள விருப்பமாகும். இந்த விருப்பத்தினல் உந்தப்பட்டு அவன் கடைசியாக அளிக்கும் உபதேசம் இதுதான்—"ஒவ்வொரு தர்மத்தையும், ஆணையையும் அதனதன் விதிக்கு விட்டுவிட்டு, என்னை ஈடுபாட்டுடன் பின்பற்று". உலகத்தில் உள்ள குழப்பத்தையும் நெருக்கடியையும் அகற்றும் பிரச்னை சம்பந்தப்பட்டவரையில், (கீதையின்) நூலாசிரியர் தன்னுடைய வாசகர்களுக்கு எத்தகைய நம்பிக்கையும் அளிக்கவில்லை; கடவுள், நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக இடையிடையே தோன்றுவார் என்ற உத்தரவாதத்தைமட்டும் நூலாசிரியர் நமக்கு அளிக்கிறார். இவ்வாருக இந்த விஷயத்தைத் தவறுசெய்யக் கூடிய மனித சமுதாயத்தின் கண்ணேட்டத்திற்கு அப்பாற்பட்டதாக்கிவிடுகிறார்; ஒரு திட்டம் இல்லாத உலகத்தை சமுதாய மனிதனல் திட்டமிடமுடியாது.

கீதையிலோ, உபநிஷதங்களிலோ உள்ள தத்துவார்த்தக் கருத்தோட்டங்கள் அனைத்தையும் இங்கு விவரிப்பது நமது நோக்கமல்ல; ஆரிய சமூகத்தில் வர்க்க முரண்பாடுகளும் வர்க்கப் பகைகளும் வர்க்கப் போரும் ஏற்பட்ட காலத்தின் வினைப்பயனே வேதாந்தத்தில் நாம் காணும் கருத்துமுதல்வாத தத்துவஞானக் கொள்கைகள் என்பதைமட்டும் சுட்டிக்காட்டவே நாம் விரும்பினேம். அதேசமயத்தில் நாம் ஒரு எச்சரிக்கையைக் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த தத்துவார்த்த அமைப்புகளை நாம் பரிசீலனைசெய்யும்பொழுது, நிகழ்ச்சிகளை ஆராய்ந்தறிவதற்காக சிந்தனையாளர்கள் எடுத்துக்கொண்ட நேர்மையான முயற்சிகளையும், அந்த நிகழ்ச்சிகளைப்பற்றி அந்த சிந்தனையாளர்கள் உருவாக்கிய கருத்துக்களையும் தனியாகப் பார்க்கவேண்டும்; அந்தக் காலத்தின் சமுதாய உறவுகளுக்கு உகந்த முறையில் இருந்த கருத்துக்கள், அந்த உறவுகளின் வரையறையால் நிர்ணயிக்கப்பட்ட கருத்துக்கள், தமது வர்க்க நலன்களை நாடும் ஆளும் வர்க்கங்களால் எப்படிப் பயன்படுத்தப்பட்டன என்பதைத் தனியாகப்

பார்க்கவேண்டும். இரண்டாவதாக அந்தக் காலத்தில் எல்லா சமுதாய தர்மமும் சிந்தனையும், சமய ஏற்பாடுகளாகத் தொகுக்கப் பட்டன என்பதை நினைவில் கொள்ளவேண்டும். எனவே புரட்சி கரமான வர்க்கங்களும் சுரண்டப்பட்ட பகுதிகளும் தம்மை விடு வித்துக்கொள்வதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகள்கூட, வேறுபட்ட மார்க்கங்களையும் மதங்களையும் தத்துவ ஏற்பாடுகளை யும் நிறுவுவதில் பிரதிபலித்தன. ஒவ்வொரு மார்க்கம் அல்லது அமைப்பும் அதனதன் சகாப்தத்தில் என்ன பாத்திரங்களை வகித் தன என்பதை அந்தந்தக் காலத்து வர்க்கப் போராட்ட சூழ்நிலை யில் பகுத்தறியக் கற்றுக்கொள்ளவேண்டும். இதில்கூட பாரதப் போரையும் அதன் பின்விளைவையும்பற்றி எடுத்துக்கூறியிருக்கும் தத்துவஞானி (கீதாசிரியர்), ஒரு குறிப்பிடத்தக்க சமுதாயப் பாத்தி ரத்தை வகிக்கிறார். அவர் வர்க்க சமூகத்தின் கருத்து முதல்வாத தத்துவ அடிப்படைக்கு உகந்தமுறையில் நிற்கும்பொழுதே குறிப்பிட்ட அளவுக்கு சமரசம் செய்வதற்கு முயற்சிக்கிறார்; சுரண்டுகிறவர்கள், சுரண்டப்படுகிறவர்களின் சமுதாய உறவு களை எவ்வகையிலும் மாற்றாமல் அடிமைமுறையின் கொடுமை களைத் தணிப்பதற்கு முயற்சிக்கிறார். இதில் கீதையின் பக்தி யோகமானது, பாரதப் போர்க்காலத்து அடிமைச் சொந்தக்காரர் களின் பிற்போக்கான சடங்கு ஆசாரத்திலிருந்து ஒரு முன்னேற் றத்தைக் குறிக்கிறது. இதற்குக் காரணமென்ன? பாரதப்போரின் பின்விளைவே இதற்குக் காரணம். எனவே இந்தப் பின்விளைவை நாம் பரிசீலனை செய்வோம்.

புதிய சக்திகள், புதிய கட்டம்

பாரதப் போரின் பலனாக மிக மோசமான விளைவுகள் ஏற்படுமென்று அந்தக்கால சிந்தனையாளர்கள் கூறினார்கள்; சாமான்ய மக்களும் இயற்கையாகவே அவ்வாறு எண்ணினார்கள்; நடைமுறை அதை மெய்ப்பித்தது. இரண்டு கட்சிக்காரர்களும் எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக, யுத்தத்தின் பலனாக, வெற்றி அடைந்தவர்கள், தோல்வியடைந்தவர்கள் ஆகிய இரு பகுதியினரும் பெருஞ்சேதம் அடைந்தனர்; போராட்ட முடிவில், வெற்றிகண்ட பாண்டவர்கள் பரிபூர்ண சூன்யத்தையே அடைந்தனர்; அநேகமாக எல்லாத் தலைவர்களும் அரசர்களும் இளவரசர்களும், நல்ல வீரர்களும் தளபதிகளும் போர்க்களத்தில் இறந்தனர். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட சகல ராஜ்யங்களும், அவற்றுடன் கூட்டுசேர்ந்த கணசங்கங்களும், கொடிய படுகொலையால் முற்றிலும் தளர்ந்து சின்னாபின்னமாயின. அடிமைச் சொந்தக்காரர்களின் அரசுகளும் கணசங்கங்களின் ஆட்சித் தலைவர்களும் அசக்தர்களான காரணத்தால், நாகர்கள், நிஷாதர்கள் முதலிய குலங்கள் பயமும் கவலையும் நீங்கியவர்களாகி, தமது பழைய ஸ்தானங்களை மீண்டும் பெறுவதற்காக, ஒருகாலத்தில் வலுப்பெற்று நின்றவர்களும் தம்மை அச்சுறுத்திவந்தவர்களும் தமது வெறுப்புக்குப் பாத்திரமானவர்களுமான ஆரியக் குடும்பங்களையும் அவற்றின் ராணுவங்களையும் தாக்கத்தொடங்கினார்கள்.

நாகர் குலங்கள், மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு தொடுத்த தாக்குதல், கங்கை நதிப் பள்ளத்தாக்கின் ராஜ்யங்கள் அனைத்தின்மீதும் தொடுத்த பொதுவான தாக்குதலாகவிருந்தது; கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் அவர்கள் முன்னேறினார்கள்; அந்தக்காலத்தின் அடிமைச் சொந்தக்கார அரசுகளிலும் கண சங்கங்களிலும் ஏற்பட்டிருந்த பொதுவான நெருக்கடிக்கு இதுவே சான்று.

அசுவமேத யாகம் செய்து வெற்றியைக் கொண்டாடுவதற்குக்கூட, தர்மரிடம் பணமில்லை; புதையல் பொக்கிஷம் கிடைத்த

பின்பே அவர் அந்த யாகத்தைச் செய்யமுடிந்தது ; இதிலிருந்து அடிமைச் சொந்தக்காரர்களின் நெருக்கடியைப் புரிந்துகொள்ள முடியும். நற்செயல்களை செய்திருப்பதாகக் கூறிக்கொண்டு, தர்மர் அவற்றை முன்னிட்டுக் கொண்டாட்டம் நடத்தினர் ; ஆனால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பொதுமக்களிடம் அது எத்தகைய உற்சாகத்தையும் தூண்டிவிடவில்லை ; அவர்கள் தமக்கே உரித்தான முறையில், இந்த ஐயங்கொண்டார்களைப் பரிகாசம் செய்தனர். தன் உடலில் ஒரு பாதி பொன்னாக மாறிய நிலையில், ஒரு கீரிப்பிள்ளை, பாண்டவர்களின் கொண்டாட்டம் நிகழ்ந்த இடத்தில் ¦பிரவேசித்தது. அது விசித்திரமாக விருப்ப தைப் பார்த்துவிட்டு, ஒருவர் அதைப் பார்த்து, அதற்கு என்ன வேண்டுமென்றும், அதன் உடலில் ஒரு பாதி ஏன் பொன்மயமாகி யிருக்கிறதென்றும் கேட்டார். கீரிப்பிள்ளை சுற்றிப்பார்த்து மோப் பம் பிடித்தது ; ஆனால், தன் உடலின் மறுபாதி பொன்மயமாகாம லிருப்பதைக் கண்டு அது கூறியதாவது: "ஒரு ஏழை, மாவு பிச்சையிட்ட இடத்தில் நான் புரண்டேன் ; என் உடலின் ஒரு பாதியில் மாவு பட்டது ; அதனால் அந்தப் பாதி பொன்மயமாகி விட்டது. ஆனால், இங்கு பிராமணர்களுக்கு ஏராளமான உண வும் ஐசுவரியங்களும் கொடுக்கப்பட்டபோதிலும், அடிமைச் சொந் தக்காரர்கள் கொண்டாட்டம் நடத்தும் இந்த இடத்தால் என் உடலின் மறு பாதியைத் தங்கமயமாக்க முடியவில்லை." ஐயங் கொண்டவர்களின் நற்குணங்களைப்பற்றிய ஜனரஞ்சிதமான விமர்சனமே இந்தக் கதை! ஆளும் வர்க்க வர்ணங்களைச்சேர்ந்த பல பகுதிகள், ஏழைகளாக மாறினார்கள் ; அவர்கள் தமது உழைப்பை எவருக்கும் விற்பதற்குச் சித்தமாயிருந்தனர். பஞ்ச மும் வறட்சியும் ஏற்பட்ட இடங்களில், ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பிராம்மண கர்விகள், தாம் வெறுத்து ஒதுக்கிய சண்டா ளர்களைக் காடுகளில் சந்தித்து உணவு கேட்டார்கள். ஐயங் கொண்ட ஆரியர்களைச் சேர்ந்தப் புனிதமான விசுவாமித்திரரைப் பார்த்து, உயிரைக் காப்பாற்றுவதற்காக, செத்த நாயின் மாமிசத் தைத் தின்னுதீர்களென்று உபதேசம் செய்யும் பெருமை, தோல் வியடைந்து அடிமையான சண்டாளனுக்குக் கிடைத்தது. பெரிய ராஜ்யங்களைப்பற்றிய பயம் குறைந்துவிட்டதாலும், ஆளும் வர்க்

கங்கள் காசு பணத்துக்காகவும் அதிகாரத்துக்காகவும் பேராசைப் பிடித்தலைவது போர்க்காலத்தில் அம்பலமாகிவிட்டதாலும், நிலத்தையும் அடிமைகளையும் அபகரிப்பதற்கும், பிறர் உழைப்பினால் உற்பத்தியாகும் ஆடம்பரப்பண்டங்களை அனுபவிப்பதற்கும், நல்லொழுக்கத்தையும் நற்குணத்தையும் பற்றிய பேச்சு திரையாகப் பயன்படுவது கண்டு பிடிக்கப்பட்டுவிட்டதாலும், நேர்மையான பொருள்முதல் வாதம் அவர்களை எதிர்த்துச் சவால் விட்டது. ஆனால், பாண்டவர்கள், தமது வர்க்க இயல்புக்கு உகந்தமுறையில், பொருள்முதல் வாதிகளைச் சிரச்சேதம் செய்தார்கள்;[1] அருவறுப்படைந்த மக்களுக்கு அவர்கள் உண்மையில் தலைமை தாங்குவார்களென்ற பயத்தால் அவ்வாறு செய்தனர். ஆனால், இவையெல்லாம் முன்னேறும் குலங்களைச் சுலபமாகத் தடை செய்ய முடியவில்லை; பாரதப் போருக்குப் பிறகும் பிழைத்திருந்த கணச்சங்கங்களுக்குள் சகோதரச்சண்டை மேலும் கடுமையானதாயிற்று.

மகாபாரதத்தின் மௌஸல பருவமும், தன்னுடைய கண-சங்கத்திலேயே (யாதவர்களுடையது) தனக்குள்ள அபாயகரமான நிலைமையைப்பற்றி கிருஷ்ணன் செய்யும் புகாரும், பொதுப்படையான சீர்குலைவின், அழிவின் பிரதான அம்சங்களை எடுத்துக்காட்டுகின்றன.

யாதவர்களின் அந்தகவிருஷ்ணி சங்கம் பொதுவாக யுத்தத்திலிருந்து ஒதுங்கியிருந்தது. சிசுபாலனும் அவனுடைய கூட்டாளிகளும் தாக்கியபொழுது யாதவர்கள் சௌராஷ்டிரப் பிரதேசத்திலுள்ள துவாரவதியில் பத்திரமாகக் குடியேறியிருந்ததால் அவர்களால் பாரதப்போரிலிருந்து ஒதுங்கியிருக்க முடிந்தது. ஆனாலும், ஒரு கொடிய மேன் மக்களாட்சி முறையாகச் சிறுமைப்படுவதிலிருந்து, யாதவகண ஜனநாயகம் தப்ப முடியவில்லை. முக்கியமான பணக்காரக் குடும்பங்களுக்கிடையே ஏற்பட்டிருந்த தீவிரமான போட்டியால் அந்தச் சங்கத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருந்தது. யாதவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரான கிருஷ்ணன் மற்ற தலைவர்களுக்கெதிராகப் புகார் செய்கிறார். யாதவர்கள் தன்

1 மகாபாரதம்; சாந்தி பருவம் 37.

சொற்படி நடக்கும்படி செய்வது கடினமாயிருக்கிறது என்று அவர் கூறுகிருர். கிருஷ்ணன் தன் தலைமையைப் பாதுகாத்துக்கொள்வதற்கு என்ன செய்யவேண்டு மென்பதைப்பற்றி நாரதர் கூறும் ஆலோசனை குறிப்பிடத்தக்கது. கிருஷ்ணன் போதுமான அளவுக்கு தன்னடக்கத்துடனும் கண்யத்துடனும் நடந்துகொள்ளவில்லையென்றும் அவர் நல்ல விருந்துகளை நடத்துவதற்கும், சன்மானங்களை வினியோகம் செய்வதற்கும் போதுமான பணத்தைச் செலவழிப்பதில்லை என்றும் நாரதர் குற்றம் சாட்டுகின்ருர். ஒரு கணத்தின் தலைமையைப் பெறும் முறைகளில் நாரதர் குறிப்பிடும் முறையும் சேர்க்கப்படுவதானது, வர்க்கப் பிரிவினையின் சுமையால் கணம் வேகமாகத் தகர்ந்துகொண்டிருப்பதை எடுத்துக்காட்டுகிறது. விருந்துண்டு இன்புறும் வாடிக்கையான பழக்கப்படி யாதவர்களனைவரும் கடலோரம் சென்றனர் என்றும், அவர்கள் குடித்துவிட்டு மதுபான மயக்கத்தில் பாரதப் போரைப்பற்றியும் அதில் பங்கெடுத்த சிலரின் வஞ்சகச் செயல்பற்றியும் வாதித்தனர் என்றும், அந்த வாதம் தடித்து போராக மாறிற்று என்றும் மௌஸல பர்வம் கூறுகிறது. பணம் படைத்த மேன்மக்களுக்கிடையே வளர்ந்திருந்த போட்டா போட்டிகள் வெடித்தன. ஒரு படுகொலை நடைபெற்றது. அவர்கள் இவ்வாறு ஒருவரையொருவர் தாக்கிக்கொண்டிருந்த பொழுதே, நாகர்கள் கணசங்கத்தின் நகரத்தை கடல்வழியாகத் தாக்கினுர்கள். அந்தத் தாக்குதலில் கிருஷ்ணனே கொல்லப்பட்டுவிடுகிருர். முக்கியமான யாதவர்களும் கொல்லப்படுகின்றனர். *யாதவர்களுக்கிடையே நடந்த சகோதரச் சண்டை மிகவும் தீவிரமாக யிருந்த காரணத்தால் பிற்கால பாஷையில் யாதவி என்ற சொல்லே உள்நாட்டு யுத்தம் என்ற பொருளில் வழங்கலாயிற்று!*

யாதவர்களுக்கு உதவ பாண்டவர்கள் விரைந்தார்கள். ஆனுல் நாகர்கள் முதலியோரிடமிருந்து அந்தக விருஷ்ணிகளைக் காப்பாற்ற பாண்டவர்களால் முடியவில்லை. கங்கைநதிப் பிரதேச ராஜ்யங்களிடமிருந்த பயம், குரு வம்சத்தினர், பூரூரவர்கள் ஆகியோரின் அதிகாரம், எல்லாம் மறைந்துவிட்டன. நாகர்கள் முதலியோருக்கு எதிரான போராட்டங்களில் தன்னுடைய புகழ்

பெற்ற ஆயுதங்களை எடுக்கப்போனால் "அவை என்னிடம் வருவதில்லை" என்று அர்ச்சுனன் புகார் செய்தான். அந்த ஆயுதங்களுடைய சக்தி மறைந்துவிட்டது. யாதவ-நாகர் போரின் படுகொலையிலிருந்து சில குடும்பங்களே காப்பாற்றப்பட்டன. அவை ஹஸ்தினபுரம் சென்றன. ஆனால் ஹஸ்தினபுரம் அதிகார வளர்ச்சியின் மையமாயில்லை. பாரதப் போருக்குப்பிறகு பாண்டவர்கள் கொஞ்சகாலம் ஆட்சி செலுத்தினார்கள். அதன் பிறகு அவர்கள் ஒரு நாயுடன்கூட சொர்க்கத்திற்கு சென்றதாக நாம் நம்பவேண்டுமென்று பாரதக் கதை விரும்புகிறது. அவர்களுடைய பேரனை பரிக்ஷித்து நாகர்களால் கொலை செய்யப்பட்டார். அந்தணர் தலைவனை காசியபர், பரீக்ஷித்து தாக்கப்படவிருப்பதை முன்னதாகவே அறிந்திருந்தார். ஆனால் நாகர் தலைவரான தக்ஷகன் அவருக்குப் பொன்கொடுத்து அவரை விலைக்கு வாங்கிவிட்டான். பரீக்ஷித்தின் குமாரனை ஜனமேஜயன் நாகர்களைத் தாக்கினர்; ஒரு தற்காலிகமான சமரசத்திற்கு ஒப்புக்கொள்ளச் செய்தார். இத்துடன் மஹாபாரதக் காலம் முடிவடைகிறது. சரித்திரத்தில் ஒரு இருண்ட காலம் அதைத் தொடர்கிறது. கங்கைநதி பள்ளத்தாக்கில் புதிய அடிப்படையில் பெரிய அரசுகள் ஏற்படும் வரையில் ஒரு சூன்யமான நிலைமையே இருந்தது. புதிய ராஜ்யங்களின் கவர்ச்சிமையம் ஹஸ்தினபுரத்திலல்ல, மகத தேசத்தின் பாடலீபுத்திரத்தில் ஏற்பட்டது.

ஆனால் அதற்குள் அடிமைமுறை க்ஷீணித்தது; நாட்டுப்புறத்தின் பண்ணை அடிமையும், நகரத்தின் கைத்தொழிலாளியும் இவனைத் தொடர்ந்து வியாபாரியும் அரங்கத்துக்கு வந்து ஆதிக்கம் வகிக்கத் தொடங்குகின்றனர்; அவர்கள் அனைவருக்கும் மகுடமாக, யதேச்சாதிகார மன்னன் விளங்குகிறான். அடிமைச் சொந்தக்காரர்களின் வீடுகளிலிருந்து தப்பியோடி விமோசனம்பெற்ற அடிமைகள், பௌத்த மதத்தின் முன்னோடிகளுடைய பக்தர்களும் சீடர்களுமான நிலப்பிரபுத்துவ, வியாபாரக் குடும்பங்களின் இளைஞர்களின் உதவியுடன், தமது தத்துவதை முன்னுக்குக்கொண்டு வருகின்றனர். ஆனால் அந்த விஷயத்தை இங்கு விரித்துரைக்க நாம் விரும்பவில்லை. பாரதப் போரின் பலன்களால் அடிமை முறை தொடர்ந்திருந்தது என்பதிலும், அடிமைச் சொந்தக்காரர்

ராஜ்யங்கள் மீண்டும் தம்மைப் புனரமைத்துக்கொண்டு வளர்ந்தன என்பதிலும் சந்தேகமில்லை. ஆனால் அவை தமக்குள்ளே சண்டைபோட்டு அழிந்ததாலும், நிஷாதர்கள், நாகர்கள் முதலியோர் கிளர்ந்தெழுந்து எதிர்த்ததாலும், முன்காலத்திலிருந்த மாதிரி, சுலபமாகவும் வலிவாகவும் அடிமைமுறை வளரமுடியவில்லை. மேலும், நாகர்களுக்குப் புகலிடமும் ஜீவனமும் அளிப்பதற்கு விஸ்தாரமான பின்நிலம் இருந்த காரணத்தால், கடுமை நிறைந்த அடிமைமுறையின் வகைகள் அதிககாலம் நிலைக்க முடியவில்லை. சக்தியை இழந்துவிட்ட அடிமைக்கும் ஓடிப்போன அடிமைக்கும் பதிலாக புதிய அடிமைகள் கிடைப்பது கடினமாகி விட்டது. அடிமைச் சொந்தக்காரர்களின் பௌதீகச் சாதனங்களால் தாங்கமுடியாத அளவுக்கு, போர்கள் நடந்துகொண்டிருந்தன; மக்கள் ஏழைகளானார்கள். சுற்றிலுமிருந்த பள்ளத்தாக்குகள் விசாலமாகவும் வளம் நிறைந்தவையாகவும் இருந்ததால் தோற்கடிக்கப்பட்டவர்களும் ஓடிப்போனவர்களும் தொடர்ந்து போராடுவதற்குப் போதுமான வாய்ப்பு இருந்தது. கடைசியாக, பொருளுற்பத்தியும் பரிவர்த்தனையும் வியாபாரமும் வளர்ந்த காரணத்தால், வியாபாரிகள் என்ற புதிய வர்க்கம் அரங்கத்துக்கு வந்தது; அது பொருளாதாரத்தில் ஒரு சுயேச்சையான சக்தியாக ஆயிற்று. ஓடிப்போன அடிமை, வலிமை மிகுந்த இளவரசனின் ஆதரவில், தலைநகரத்தின் பாதுகாப்பில், கைத்தொழிலாளியாவதால் வியாபாரி நன்மையடைந்தான். நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையே, வியாபாரிக்கும், நிலத்தையும் அடிமைகளையும் உடையவனுக்கும் இடையே சாகஸமாக விளையாடுவதிலேயே அந்த இளவரசனின் பலம் அடங்கியிருந்தது.

முன்னால் நாம் குறிப்பிட்ட மாதிரி, விவசாயம் விரிந்த வீச்சில் வளர்ந்திருந்தது. நிலத்தின் தனி உடமைப் பிரச்னை முக்கியமானதாயிற்று. மேற்சொன்ன புதிய நிலைமைகளில், அடிமைமுறையின் அடிப்படையில், நிலத்தின் தனி உடமை நீடிக்கமுடியாது; கைத்தொழிலுற்பத்தியிலும் இதே நிலைமை ஏற்பட்டிருந்தது. அடிமைமுறையின் கொடுமையைக் குறைப்பதற்கும், பண்ணை ஆள் முறை ஏற்படுவதற்கும் நிலைமைகள் பக்குவமாகிக்கொண்

டிருந்தன. இந்த நிகழ்ச்சியைத் துரிதப்படுத்துவதில், பாரதப் போர் பெரும் பங்கு வகித்தது.

இந்த நிலைமைகள்தான், சுரண்டும் வர்க்கத்தின் தர்மத்தை வகுப்பவர்களும் தத்துவஞானிகளும் அடிமைமுறை பற்றி ஒரு புதிய போக்கைக் கொள்ளும்படி செய்தன. இதைத்தான், பாரதப் போருக்குப் பிந்திய காலத்தின் தத்துவாசிரியனான கீதாசிரியர், கிருஷ்ணன் கூறுவதாகச் சொல்கிறார். "பெண்ணும் வைசியனும் சூத்திர அடிமையும் அடிமை முறையில் பிறந்திருக்கிறார்களென்றாலும், அவர்கள் என்னைப் பின்பற்றினால், சுவர்க்கத்தில் விமோசனத்தைப் பெறமுடியும்" ஆக பாரதப் போர்க் காலத்தில், அடிமைச் சொந்தக்காரர்களின் ராஜ்யம், சுதந்திரமான ஆரிய வைசியனைக் கூட அடிமையாக்கிவிட்டது; ஆரம்பக்கால கணகம்யூன்களில் பெருமைக் குரிய சமூகமாகவிருந்த வைசியர்களான உழைப்பாளிகளும் பெண்களும் சூத்திர அடிமைகளின் தரத்துக்குத் தாழ்த்தப்பட்டு விட்டனர். அவர்களுக்கு பூமியில் விடுதலை கிடையாது; சுவர்க்கத்தில் விமோசனம் கிடையாது. தந்தை வழி ஏற்பாட்டின் அடிமை முறை தோன்றிய காலத்தில், அடிமைச் சொந்தக்காரராகவுள்ள பிராமணனும் க்ஷத்திரியனும்அடிமைப்பெண்ணை மணந்துகொள்ள முடியும் அல்லது வைப்பாகக் கொண்டிருக்க முடியும்; அவள் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கும் சொத்தில் சம பங்கு உண்டு. ஆனால் அடிமைக்கு மட்டும் விடுதலை கிடையாது; சொத்துச் சேகரிக்கவும் அடிமையால் முடியாது. பிறகு ஆரிய கணங்களில் சொத்து வேறுபாடு தீவிரப்பட்டு, நாசமடைந்த வைசியனும் அடிமைகளின் அணியில் தள்ளப்பட்ட பொழுது, அவன் கலகம் செய்வேனென்றும் சகோதரச் சண்டை நடக்குமென்றும் எச்சரித்தான். ஜயங்கொண்ட அடிமைச் சொந்தக்காரர்களின் சர்வாதிகாரம், நாசமடைந்த வைசியர்களும், நிஷாதர்கள் நாகர்கள் மத்தியிலுள்ள அவர்களுடைய கூட்டாளிகளும் நடத்திய எதிர்ப்பை நசுக்கியது; ஒரு பரிபூர்ணமான பயங்கர ஆட்சியை ஸ்தாபித்தது. அப்பொழுதே, ஆரிய வைசியன், சூத்திரன் தரத்துக்குத் தாழ்த்தப்பட்டான். முன்பே பெண்கள் அந்த நிலையில் இருந்தனர். அடிமைப் பெண்களுடன் இருந்த உறவு

தந்தை வழிச் சமூகத்தின் தன்மையை இழந்தது; அவர்களுடைய குழந்தைகளும் தமது பழைய அந்தஸ்தை இழந்தன. முன்னல், தந்தை வழி ஏற்பாடு நிலைபெற்றிருந்தபொழுது அடிமைப் பெண்களின் குழந்தைகள், சுதந்திரமான, தந்தை வழி ஏற்பாட்டுக்கு உரிய தந்தையைச் சேர்ந்தவர்களாயிருந்தனர்; இப்பொழுது, அவர்கள், அடிமைத்தாயின் வர்ணத்துக்குத் தாழ்த்தப்பட்டனர்; அதாவது அவர்கள் ஓரளவுக்கு விடுதலை பெறும் பாதை அடைபட்டுவிட்டது.

தோல்வியடையாத ஜனங்களும் அடக்கப்படாத ஜனங்களும் ஏராளமாக யிருந்ததால் ஆரிய அடிமைச் சொந்தக்காரர்களால் அமைதிகாண முடியவில்லை. வர்க்கப் பிரிவினை வளர்ந்தபோது ஆரிய வைசியர்களே ஆரியத் தன்மையை இழந்து அடிமைகளாகி விட்டனர். பொருளுற்பத்தி சக்திகள் வேகமாக வளர்ந்தன; புதிய உற்பத்தி உறவுகளை அவை அவசியமாக்கின. பரிவர்த்தனை, வியாபாரம், கைத்தொழில்கள், வர்த்தகர்கள், அவர்களுடைய புதிய சமூக சக்திகள் ஆகிய அனைத்தும் அடிமை முறையின் கொடுமையைத் தணிப்பதை முதன்மையான அவசியமாக்கின. இது கீதையில் கிருஷ்ணனின் பெயரால் அறிவிக்கப்பட்டது. அவருடைய பெயரே இந்தக் காரியத்திற்கு மிகவும் தகுதியானது; அவர் பாரதப் போருக்குப் பின் பிழைத்திருந்த மிகப் பெரிய கண சங்கத்தின் தலை சிறந்த ஜனப்பிரதிநிதி; "சுவர்க்கத்தில் விடுதலை" என்ற கோஷத்தை முன் வைத்து ஒரு சமரசத்தை உண்டாக்குவதற்கு அவரே தகுதியானவர். அது எத்தகைய சமரசம்? பூமியில் வாழும் அடிமைகளும் பெண்களும் சுரண்டும் வர்க்கத்தின் அமைதியைக் குலைக்காத முறையில் உழைக்கவேண்டும்; சுவர்க்கத்தில் அவர்களுக்கு அதற்கான கூலியும் விடுதலையும் கிடைக்கும்; சுவர்க்கத்தில் அவர்கள் அவர்களுடைய எஜமானர்களுக்குச் சரிநிகர் சமானமாக யிருப்பார்கள்! இந்த நாட்களில் வாழும் நமக்கு இது விநோதமாகத் தோன்றலாம். ஆனல் இது அவ்வளவு விநோதமானதல்ல! பண்ணையாள்—நிலப் பிரபுத்துவ முறையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த புதிய சக்திகளுடன், அடிமைச் சொந்தக்காரர்கள் செய்துகொண்ட சமரசமே அது.

அடிமை முறை முதன் முதலாக ஏற்பட்ட சுரண்டல் முறையாகும்; பண்டைக்கால உலகத்துக்குரிய விசேஷ முறையாகும்; அதைத் தொடர்ந்து இடைக்காலத்தில் பண்ணையாள் முறை ஏற்பட்டது; சமீபகாலத்தில் கூலி-உழைப்பு முறை ஏற்பட்டது. நாகரீகத்தின் மூன்று முக்கிய சகாப்தங்களுக்கு உரித்தான மூவகை பராதீன முறைகள் இவையேயாகும். இந்தப் பராதீன முறைகளில், பகிரங்கமாகவோ, சமீபகாலத்தில் இருப்பதைப் போலவோ மறைபொருளாகவோ, அடிமைத்தனம் நிரந்தரமான துணைவனாக இருந்து வருகிறது.

இந்த நூலில் நாம் சமுதாய வளர்ச்சியின் இரண்டாவது கட்டத்தை ஆராயப் போவதில்லை. பூர்வீகக் கம்யூன் எப்படி தோன்றியது, வளர்ந்தது, பிறகு அழிந்தது என்பதையும் தனி உடமை, அடிமை முறை ஆகியவற்றிற்கு உரியவர்களின் பலாத்கார சர்வாதிகாரமாக உள்ள ராஜ்யத்துடன் அடிமை முறை எப்படி வந்தது என்பதையும் சுட்டிக் காட்டுவதே இந்த நூலின் முக்கிய நோக்கம். நெருப்பு உற்பத்தி செய்யத் தெரியாமலிருந்த காட்டு மனிதன், இப்பொழுது பரந்த அளவுகளுக்கு வளர்ந்துவிட்டான்; கண்டங்களை வசப்படுத்திக் கொண்டுவிட்டான்; நகரங்களையும் இராஜ்யங்களையும் நிர்மாணித்து விட்டான்; தன் தேவைகளை முன்னிட்டு இயற்கையைப் பயன்படுத்துவதற்காக பிரமாதமான உற்பத்தி சக்திகளை உருவாக்கிவிட்டான்; காட்டு மனித நிலையிலிருந்த அநாகரீக நிலைக்கும், அநாகரீக நிலையிலிருந்து நாகரீக நிலைக்கும் உயர்ந்துவிட்டான். அவன் சண்டைக்கும் சமாதானத்துக்கும் தேவையான கருவிகளை வார்த்தெடுத்துவிட்டான். கலையையும் இலக்கியத்தையும் உருவாக்கிவிட்டான். இயற்கையின் விதிகளையும் இரகசியங்களையும் கண்டு பிடிப்பதற்காக அவன் இயற்கையை ஆராய்ந்தறியத் தொடங்கி விட்டான். லக்ஷக்கணக்கான ஆவிகளையும் பேய் பூதங்களையும் தெய்வங்களையும் பற்றி கற்பனை செய்துகொண்டிருந்த அவன், ஒருமைவாதப் பிரச்னையை எழுப்புவதற்குக் கற்றுகொண்டுவிட்டான்; பிரத்யேகத் தன்மைக்கும் பொதுத் தன்மைக்கும் உள்ள உறவு, தனி நபருக்கும் பிரபஞ்சத்துக்கும் உள்ள உறவு, புற உலகுக்கும் அக சிந்தனைக்கும்

உள்ள உறவு ஆகியவை சம்பந்தமான பிரச்னையை எழுப்புவதற்கு அவன் கற்றுக்கொண்டு விட்டான்.

ஆனால் இந்த முன்னேற்றங்கள் அனைத்துடனும் கூடவே, எதிர் வினைகளும் ஏற்பட்டன. அநாகரீக மக்களின் ஆரம்பக் கால கம்யூன்—வர்க்க மோதலுக்கும் அடிமை முறைக்கும் பேராசைக்கும் சொத்துரிமைக்கும் இரத்த சம்பந்த உறவினரின் பரஸ்பர பலாத்காரத்துக்கும் இடந்தராத அந்தக் கம்யூன்—அடிமை முறைக்கும் வர்க்கப் போருக்கும் பேராசைக்கும் அண்ணன் தம்பி பலாத்காரத்துக்கும் பலியாகி வீழ்ச்சியடைந்தது.

"ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தைச் சுரண்டுவதை நாகரீகம் அடிப்படையாகக் கொண்டிருப்பதால், அதன் வளர்ச்சி முழுவதும், ஒரு இடைவிடாத முரண்பாட்டின் வழியாகக் கை கூடுகிறது. பொருளுற்பத்தியில் ஒரு அடி முன்னேறும்போது அந்த முன்னேற்றமானது அதே சமயத்தில் மிகப் பெரும்பாலோராகவுள்ள ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை ஒரு அடி பின்னே தள்ளுகிறது. சிலருக்கு நன்மையளிக்கக் கூடிய எந்தக் காரியமும் மற்றவர்களுக்கு நிச்சயமாகத் தீமை செய்கிறது. ஒரு வர்க்கத்தின் ஒவ்வொரு புதிய விமோசனமும் அத்தியாவசியமாக இன்னொரு வர்க்கத்திற்கு ஒரு புதிய ஒடுக்குமுறையாக யிருக்கிறது.................. அநாகரீக மக்களுக்கிடையே உரிமைகளுக்கும் கடமைகளுக்குமிடையே வேற்றுமை யிருப்பதாக வரையறுப்பது மிகக் கடினம் என்பதை நாம் பார்த்தோம். நாகரீகமோ, உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் இடையேயுள்ள வேற்றுமையையும் விரோதத்தையும் மிக மந்தமானவர்கள் கூட உணரக்கூடிய வகையில் தெளிவுபடுத்தி விட்டது; எப்படியெனில் நடைமுறையில் உரிமைகள் அனைத்தையும் ஒரு வர்க்கத்துக்கும் கடமைகள் அனைத்தையும் இன்னொரு வர்க்கத்துக்கும் அளித்துவிட்டது.

"ஆனால் அப்படி யிருக்கக் கூடாது; அதாவது ஆளும் வர்க்கத்துக்கு நன்மை பயக்கும் காரியம் சமுதாயம் முழுமைக்குமே நன்மை பயக்கவேண்டும். முழு சமுதாயத்துக்கும் தனக்கும் எத்

தகைய வேற்றுமையும் கிடையாது என்று ஆளும் வர்க்கம் கூறுகிறது. எனவே நாகரீகம் முன்னேற முன்னேற, அது அத்தியாவசியமாக சிருஷ்டிக்கும் தீமைகளை மூடி மறைப்பதற்கு அன்பு தர்மம் என்ற மூடு திரைகளை அணிந்துகொள்ளுகிறது. அல்லது அந்தத் தீமைகளுக்கு தற்கால சாந்தியாக ஏதாவது செய்யவேண்டி யிருக்கிறது. அல்லது அந்தத் தீமைகளை மறுக்கவேண்டி யிருக்கிறது. சுருங்கச் சொன்னால், கபடத்தை வாடிக்கையாகக் கொள்ளவேண்டி யிருக்கிறது. ஆதிக்கால சமுதாய அமைப்புகள் இந்தக் கபடத்தை அறிந்திருக்கவில்லை. நாகரீகத்தின் ஆரம்ப கட்டங்களில்கூட இந்தக் கபடம் அறியப்படவில்லை. இந்தக் கபடமானது கீழ்க்காணும் பிரகடனத்தில் முடிந்திருக்கிறது:—சுரண்டப்படும் வர்க்கத்தின் நன்மைக்காகவே சுரண்டும் வர்க்கம் ஒடுக்கப்படும் வர்க்கத்தைச் சுரண்டுகிறது. சுரண்டப்படும் வர்க்கம் இதைப் பார்க்க முடியாவிட்டால், கலகம் செய்வதற்கும் முன்வந்தால், அது அதன் ரக்ஷகர்களான சுரண்டல்காரர்களிடம் நீசத்தனமான முறையில், செய்நன்றி கொன்று நடப்பதாகும்.” (எங்கல்ஸ்)

ஆனால் சமுதாயத்தின் வர்க்கப் பிரிவினையோ அரசாங்கமோ அநாதிக் காலத்திலிருந்தே இருந்துவரவில்லை.

“ராஜ்யம் இல்லாமல் தன் அலுவல்களை கவனித்துக்கொண்ட சமூகங்கள் இருந்திருக்கின்றன; அவற்றுக்கு ராஜ்யம் அல்லது அரசாங்க அதிகாரத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. பொருளாதார வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், சமுதாயத்தில் வர்க்கப்பிரிவினை தவிர்க்கமுடியாத வகையில் ஏற்பட்டபொழுது இந்த வர்க்கப் பிரிவினையால் ராஜ்யம் (அரசு) அவசியமாயிற்று. இந்த வர்க்கங்கள் இருப்பது அவசியமற்றவையாக யிருப்பதுடன் உற்பத்திக்குத் திட்டமான தடையாகவும் இருக்கக்கூடிய ஒரு கட்டத்தை, பொருளுற்பத்தி வளர்ச்சி வேகமாக அணுகிக்கொண்டிருக்கிறது. இந்த வர்க்கங்கள் தவிர்க்கமுடியாதவகையில் தோன்றியதைப்போலவே வீழ்ச்சியடைவதும் திண்ணம். அவற்றுடன் ராஜ்யமும் தவிர்க்கமுடியாதவகையில் அழிந்தேதீரும். உற்பத்தியாளர்கள் சுதந்திரமாகவும் சரிநிகர் சமானமாகவும்

ஒன்றுசேர்வதின் அடிப்படையில் புதிதாக உற்பத்தியை நடத்தும் சமுதாயம் இந்த அரசாங்க இயந்திரமுழுவதையும் அது அப்பொழுது சேரவேண்டிய இடத்தில் சேர்த்துவிடும்:—அதாவது பழம் பொருட்காட்சிசாலையில் கைராட்டினத்துடனும் வெண்கலக் கோடாலியுடனும் வைத்துவிடும்." (எங்கல்ஸ்).

ஆனல் உலகத்தின் பெரும்பாலான தேசங்கள் வர்க்கபேத மற்ற சமுதாயத்தையும் கம்யூனிஸத்தையும் நிர்மாணிக்கும் பொழுதுதான், மனித சமூகத்தின் கடந்தகாலத்துக்குரிய இந்தப் பழம் பொருட்காட்சிசாலையை இறுதியாக நிர்மாணிக்கமுடியும். உலகம் இந்த கட்டத்தில் முன்பே பிரவேசித்துவிட்டது.

பின்னுரை

இந்திய வரலாறு பற்றிய சில பிரச்னைகள்

"பண்டைக்கால இந்தியா" என்ற இந்த நூல் 1949-ல் (ஆங்கிலத்தில்) வெளிவந்த பிறகு, இதிலுள்ள கணிப்புகளைப் பற்றி பல கேள்விகள் எழுந்திருக்கின்றன. அவை அனைத்தையும் இங்கு விவாதிக்க முடியாது; ஏனெனில் விவாதம் நீண்டுவிடும். ஆனால் அவற்றில் சில கேள்விகளைக் குறிப்பிட்டு, அவற்றுக்கான பதில்களைச் சுட்டிக்காட்டுவது சாத்தியம்.

1. வேத நூல்களில் புலப்படும் மக்கள் சமூகம் ஆரியர்கள் என்ற ஒரு பழங்கால இனத்தைச் சேர்ந்தவர்களா? அந்தச் சமூகத்தினர் வேறொரு ஜன சமூகத்தை எதிர்த்துப் படையெடுத்துக்கொண்டிருந்தார்களா? அப்படியானால், எவர்மீது?

வேத நூல்களில் புலப்படும் மக்கள், அதாவது வேத நூல்களின் படைப்புக் கர்த்தாக்கள், நம் கால சரித்திர நூல்களில் ஆரியர்கள் என்று பொதுப்படையாக வர்ணிக்கப்படுகின்றனர். அவர்களை 'இந்திய - ஐரோப்பியர்கள்' என்றும், 'ஆரியர்கள்' என்றும் எங்கல்ஸ் குறிப்பிடுகிறார். பெயரைக் குறித்துப் பிடிவாதம் தேவையில்லை. வேத நூல்களிலும் இதர தஸ்தவேஜிகளிலும் புலப்படுகிற அவர்களுடைய சமுதாய அமைப்பு எத்தகையது, அவர்களுடைய சமூக வளர்ச்சியின் கட்டங்கள் எத்தகையவை என்பதே முக்கியமான பிரச்னை.

இருவகைப் போராட்டங்கள் குறிப்பிடப்படுவதை நாம் பார்க்கிறோம். சில போராட்டங்கள், ஒரே வகையினரான குலங்களுக்கும் கணங்களுக்கும் இடையே நடந்தவை; இதர போராட்டங்கள், இந்திய - ஐரோப்பிய அல்லது ஆரிய குலங்களுக்கும், வேறு வகைப்பட்டவரான நிஷாதர்கள், நாகர்கள் போன்றவர்களின் குலங்களுக்கும் இடையே நிகழ்ந்தவை. யக்ஞ ஸ்தாபனங்களைப் பொதுவாகப் பெற்றிருந்த குலங்களுக்குள்ளும் போர்கள் நடந்

தன ; போரில் ஈடுபட்ட சில குலங்கள் அத்தகைய பொது ஸ்தாபனங்களைப் பெருந்தவையாகவும் ஒன்றுக்கொன்று அன்னியரானவையாகவும் இருந்தன.

எனவே, எல்லாப் போராட்டங்களையும் 'படையெடுப்புகளாக' வர்ணிக்க முடியாது.

2. ஆரியர்கள் "இந்தியாவுக்கு வெளியிலிருந்து" வந்தார்களென்றும், முதலில் இந்தியா முழுமையிலும் வாழ்ந்துவந்த திராவிடர்களை ஆரியர்கள் தாக்கித் தோற்கடித்துத் தெற்குப் பக்கத்தில் விறட்டினார்களென்றும், பல ஐரோப்பிய சரித்திராசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

விஷயம் அவ்வளவு சிக்கலற்றதென்று நான் எண்ணவில்லை. 'அன்னிய ஆரியர்கள்' வருவதற்கு முன்னால் திராவிடர்கள் இந்தியாவை வசப்படுத்திக்கொண்டிருந்தார்களா வென்பதை நாம் தெளிவாக இன்னும் அறியவில்லை. மோஹன்ஜோதாரோ, ஹரப்பா நாகரீகங்கள் திராவிடர்களுக்கு உரியதா, அவை ஆரியர்களின் தாக்குதலுக்கு இரையாகி அழிந்தனவா என்ற விஷயங்களை நாம் இன்னும் தெளிவாக அறியவில்லை.

பல விஷயங்களில், ஆங்கிலேயர் நமக்கு தவறாகப் பாதை காட்டியிருக்கிறார்கள். இந்த விஷயத்தில் நாம் ஜாக்கிரதையாகப் பெரிய அளவுக்கு ஆராய்ச்சி நடத்தவேண்டும்.

உதாரணமாக, திராவிடர்களுக்கு முன்னால் முண்டர் - மான் - கெமர் மக்கள் இருந்தனரென்றும், அவர்களை திராவிடர்கள் கீழ்த் திசையில் துரத்தினரென்றும் கூட சொல்லப்படுகிறது.

என்னைப் பொறுத்தமட்டில், இந்த விஷயங்கள் சம்பந்தமாக இறுதியாகவும் உறுதியாகவும் அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கவில்லை. இந்த மக்கள் ஆரியர்களோ திராவிடர்களோ முண்டர் - மான் - கெமர்களோ, இவர்களுடைய சமூக அமைப்புகள் எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பதில்தான் நான், இப்பொழுது, அதிக அக்கறை கொண்டிருக்கிறேன். அந்த வளர்ச்சியில், போராட்டங்களும், படையெடுப்புகளும் ஒரு பாத்திரம் வகித்தன என்பது உண்மை.

3. திராவிடர்கள் ஆரியர்களுடன் மோதியபொழுது, அவர்களுடைய நாகரீகம் உயர்ந்ததா யிருந்ததா, தாழ்ந்ததா யிருந்ததா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. அந்தத் திராவிடர்கள் அப்பொழுது பூர்வீகக் கம்யூனிஸ கட்டத்திலிருந்து, அதைவிட வளர்ச்சியடைந்த அடிமை முறை கட்டத்துக்கு உயர்ந்திருந்தார்களா?

(பொதுவாகப் புரியக்கூடிய சொல்லை உபயோகித்தோமானால்) திராவிடர்கள் எனப்படும் மக்கள் அடிமை முறை கட்டத்துக்கு உயர்ந்திருந்தனர் என்று அனுமானிப்பதற்கு சில ஆதாரங்கள் உள்ளன. ஆனால் இந்த விஷயத்தில் திட்டமான முடிவுகளை ஸ்தாபிப்பதற்கு, இன்று உள்ள திராவிட இலக்கியத்தில் போதுமான ஆதாரம் இல்லை.

4. சமுதாய வளர்ச்சியின் கட்டங்கள், இந்திய வரலாற்றில் அவற்றின் காலகட்டங்கள் ஆகியவை பற்றிய கேள்விகள் உள்ளன.

காலகட்டங்களைப் பொறுத்தவரையில், நான் பூர்ஷ்வா சரித்திராசிரியர்களின் விமர்சனங்களை இங்கு வாதத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை; ஏனெனில், மார்க்ஸீயம் கண்டு பிடித்த சரித்திர விதிகளை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, இது சம்பந்தமாக, மார்க்ஸீய வாசகர்கள் எழுப்பியுள்ள கேள்விகளையே நான் விவாதிக்கப்போகிறேன்.

பூர்வீகக் கம்யூனிஸத்தின் காலம் முற்றுப்பெற்றதும் அடிமை முறையின் காலம் துவங்கியதும் எப்பொழுது? அதை ஆண்டுகளில் குறிப்பிட்டுக் கணிக்கமுடியாதென்றால், சமய - இலக்கிய தஸ்தவேஜிகள், சம்பவங்கள் ஆகியவற்றின் மூலம் சுட்டிக்காட்ட முடியுமா?

இப்பொழுது கிடைக்கும் வேத நூல்களில் காட்டு மனிதர் காலம், அநாகரீகக் காலம், நாகரீகக் காலம் ஆகிய மூன்று கட்டங்களையும்பற்றி குறிப்பிடப்படுகிறது. அது அடிமை முறையின் தோற்றத்தையும் (அந்த அடிமைமுறை நந்தை வழி ஏற்பாட்டுக்கு உரியதோ அல்லவோ), வர்க்கங்கள், ராஜ்யம் ஆகியவற்றின் அடிப்படைகளின் தோற்றத்தையும் பதிவு செய்கிறது.

ஆதிக்கால வேத நூல்களுடன் பூர்வீகக் கம்யூன் காலம் முடிந்துவிட்டதென்றும், பிந்தைய வேத நூல்கள், ஆதி ஸ்மிருதிகள், இதிஹாசங்கள் ஆகியவற்றுடன் அடிமை முறையின், நாகரீகத்தின் காலம் தொடங்கிவிட்டதென்றும் கூறலாம்.

5. பாரதப்போர், அதன் பின்விளைவு ஆகியவற்றைப்பற்றி நான் செய்த கணிப்பு சம்பந்தமாக ஒரு கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

என் பரிசீலனையின் இந்தப் பகுதியில் சில திருத்தங்கள் அல்லது தெளிவுகள் தேவை. அந்தப் போரின் பின் விளைவைப் பற்றி விவரிக்கும்பொழுது, அதிலிருந்து 'அடிமைமுறை பலவீனமடைந்தது' என்று நான் ஓரிடத்தில் குறிப்பிட்டேன். அதே சமயத்தில், அதே பாராவில், "அடிமை முறை தொடர்ந்திருந்ததென்பதில் ஐயமில்லை; அடிமைச் சொந்தக்காரர் அரசுகள் தம்மைப் புனரமைத்துக்கொண்டு மீண்டும் வளர்ந்தன" என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். இதைத் தெளிவுபடுத்துவது அவசியம்.

இரத்தக்கலப்பு உறவுகளின் முடிவையும் வர்க்க அரசின் சம்பூர்ணத் தோற்றத்தையும் பாரதப்போர் குறித்தது. குலஜன நாயகங்கள், ராணுவ மேன்மக்களாட்சிகள், அடிமை ஏற்பாடுகள் ஆகியவை அந்தப் போரில் ஈடுபட்டன.

போர் விஸ்தாரமானதாகவும் பேரழிவு விளைவிப்பதாகவும் இருந்தது. எனவே, பரிபூர்ண அடிமை நாகரீகத்தின் அடிப்படையில், நாகரீகம் தொடர்ந்து முன்னேறும் வேகம் கொஞ்ச காலத்துக்குக் குறைக்கப்பட்டிருந்தது. ஆனால், மீண்டும் அந்த வேகம் ஏற்பட்டது. உஜ்ஜயினி, காசி, கோசலம், மகதம் முதலிய இடங்களில் நாம் பிற்கால வரலாற்றில் பார்க்கும் பேரரசுகள் உருப்பெற்றன.

எனவே, பாரதப் போரைத் தொடர்ந்து, நிலப்பிரபுத்துவ காலம் தொடங்கியதென்ற அபிப்பிராயத்தை உண்டாக்கும் இடத்தில் ஒரு திருத்தம் அவசியமாகிறது.

6. இந்தியாவில் நிலவிய அடிமைமுறையில் பிரத்தியேக அம்சங்கள் என்னென்ன என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. அந்த

அடிமைமுறை பொருளுற்பத்தியில் எத்தகைய பாத்திரத்தை வகித்தது என்றும் கேட்கப்படுகிறது.

இந்தியாவில் அடிமைமுறை நிலவியதே இல்லை என்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் எந்தெந்த வகை அடிமைகள் இருந்தனர், அவர்கள் விடுதலை பெறுவதற்கான விதிகள் என்ன, பிதுரார்ஜித சொத்து அடைவதில் அவர்களுக்குள்ள உரிமை என்ன என்பன வற்றை விளக்கும் தெட்டத்தெளிவான தஸ்தவேஜிகள் இருக்கும் பொழுது, அடிமைமுறை இருந்ததேயில்லையென்று கூறுவது கடினம். (அனுபந்தம் 2 பார்க்க.)

முன்பே குறிப்பிட்டமாதிரி, இது, ரோமாபுரியிலும் கிரீஸிலும் இருந்ததைப்போன்ற "உழைப்பு அடிமைமுறை" யல்ல; இது "குடும்ப அடிமை ஏற்பாடாக" இருந்தது. இதன் பொருள் என்ன? அடிமைச் சொந்தக்காரர்களுக்கு உரிய பெரும் பண்ணைகளில் அடிமைகள் படைபடையாக வேலைசெய்து விவசாய உற்பத்திசெய்வது முதன்மையான உற்பத்திமுறையாக இருக்கவில்லை என்பதே இதன் பொருள். ஆனால் இதிலிருந்து மாறுபட்ட குடும்ப அடிமைமுறை எதைக் குறித்தது? அடிமை, குடும்ப எஜமானனுக்கு 'எடுபிடி சேவகம்' மட்டுமே செய்தான் என்பதை அது குறிக்கவில்லை. குடும்பத் தொழில் நிலையங்களிலும் பண்ணைகளிலும், பெரிய எஸ்டேட்டுகளிலும்கூட, "சுதந்திரமான" விவசாயிகளுடனும், கூலிக்கு அமர்த்தப்பட்ட உழைப்பாளிகளுடனும் கூட, அடிமைகள் உற்பத்தி வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதற்குப் போதுமான சான்றுகள் உள்ளன. அடிமைச் சொந்தக்காரர்கள், தமக்கு வருமானம் பெறுவதற்காக தமது அடிமைகளை வாடகைக்கு விடவும் செய்தார்கள்.

அடிமைகளும் கூலிச்சேவகர்களும் சாகுபடிசெய்த பெரிய எஸ்டேட்டுகள் பொதுவாக நகரங்களுக்கு அருகில் இருந்தன; அவை அரசர்களின் சொத்துக்களாக விருந்தன. சில தனிப்பட்ட நிலப்பிரபுக்களும் குறிப்பிடப்படுகின்றனர்; அவர்களில் சிலர் தெய்வபக்தி நிறைந்த அந்தணர்களாகவும் இருந்தனர். ஆனால் கிராமப்புறத்து விவசாயம், பிரதானமாக அடிமைகளைக் கொண்டு நடக்கவில்லை. அங்கு, குடும்பத் தலைவன் அல்லது கிருஹபதி

யின் தலைமையில், சுதந்திரமான குடியிருப்புச் சமூகம், பொது நிலத்தைச் சாகுபடி செய்தது. நகரங்களின் கைத்தொழில்களில் பெரிய அளவில் அடிமைகள் வேலைசெய்தனர்; கிராமங்களில் ஓரளவுக்கு அடிமைகள் வேலைசெய்தனர்.

இவ்வாருக குடியிருப்புச் சமூகமும் குடும்ப அடிமை ஏற்பாடும் ஒன்றேடொன்று பின்னிப்பிணைந்து நீண்டகாலம் நிலைத்திருந்தன. அடிமைமுறை இதர ஏற்பாடுகளை அழிக்கவில்லை. இது இந்தியநாட்டு அடிமைமுறையின் விசேஷ அம்சம்.

ஜனத்தொகை பெருகும்பொழுது, பொருளுற்பத்தி வளரும் பொழுது, குடியிருப்புச்சமூகம், சீக்கிரத்தில் சிதறுண்டு, கிராம சமூகமாக வளர்கிறது. அடிமைகளின் குழுக்கள், கிராம சமூகத்தின் ஈன ஜாதியினராகின்றனர். குடியிருப்பு சமூக உறுப்பினர்கள் தமது இஷ்டம் அல்லது திறன் அல்லது தேவைக்குத் தக்கபடி, வெவ்வேறு தொழில்களை மேற்கொண்டு, வெவ்வேறு சாதிகளாக உறுதிப்படுகின்றனர். இந்த நிகழ்ச்சிப்போக்கில், வர்ணங்கள் காலாவதியாகின்றன; கிராம சமூகம் என்ற புதிய ஸ்தாபன அமைப்பின் வர்ணங்களுக்குப் பதிலாக சாதிகள் ஏற்படுகின்றன.

இந்த நிகழ்ச்சியின் வளர்ச்சி ஒரு சீராக இருக்கவில்லை. அது ஸ்தலத்து நில நிலைமைகளுக்கு உட்பட்டதாகிறது. இந்தியாவின் அயனமண்டலப் பருவநிலை, அதன் உயர்ந்த நிலவளம், தாவரச் செழுமை ஆகியவற்றுடன் கூடிய சீதோஷ்ண, பூகோள நிலைமைகள், கிராம சமூகத்தின் அலாதியான தன்மையை நிர்ணயித்தன; பொதுநில உடமையும் சாதி ஏற்பாடும் நீடித்திருக்கச் செய்தன.

சாதி அமைப்புடன் கூடிய கிராம சமூகம், இந்தியாவின் நிலப்பிரபுத்துவ அமைப்புக்கு அடிப்படையாகும்.

இந்த நிகழ்ச்சியைக் கவனமாக ஆராய்வது அவசியம். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் அது எத்தகைய ஸ்தூல நிலைமைகளில் உருப்பெற்றதென்பதை ஆராய்வது அவசியமாகும். ஏனெனில், இந்தியாவின் சாதி சமூகங்களும் கிராம சமூகங்களும், சாராம்சத்தில் அவற்றின் பொருளுற்பத்தி உறவுகளில் ஒன்ருக விருந்தபோதிலும், அவற்றின் வளர்ச்சிப்போக்கில் வளைந்து

கொடுப்பதிலும் வளையாமலிருப்பதிலும், உரிமைகளிலும் கடமைகளிலும், அவை வெவ்வேறு அம்சங்களைக் கொண்டிருந்தன,

7. அடிமை ராஜ்யங்கள் எவ்வளவுகாலம் நீடித்திருந்தன என்பதைப்பற்றிக் கேள்விகள் வந்திருக்கின்றன; பௌத்த மதம் தோன்றி வளரும்வரை, அடிமை அரசுகள் ஓங்கி வளர்ந்திருந்தனவென்று நான் நினைக்கிறேன். அநேகமாக, நந்தர்களின் சாம்ராஜ்யம், (கி. மு. 413) கடைசி அடிமை அரசாக இருந்திருக்கலாம். (ஒருவேளை, அந்தக் காரணத்தால்தான், நந்தர்களுடன் உண்மையான க்ஷத்திரியகுல ஆட்சிக்கு முடிவு ஏற்பட்டதாக பௌராணிக பரம்பரை வழக்குகள் அனைத்தும் கூறுகின்றன போலும்—'நந்த அந்தம் க்ஷத்திரிய குலம்.')

நந்தர் ஆட்சி முடிவுக்கும் அசோக சாம்ராஜ்யக் காலத்துக்கும் (கி. மு. 273) இடையே, இந்திய மக்களின் சமூக-பொருளாதார அமைப்பில் பெரும் மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. அடிமைமுறையும் கிராம சமூகமும் தீவிர மாறுதல்களைக் கண்டன. இந்திய நிலப்பிரபுத்துவம் வேர்விட்டு பரவ முயன்றுகொண்டிருந்தது.

ஆனால் ஒரு அமைப்பின் மறைவும் இன்னொன்றின் தோற்றமும், ஒரு குறிப்பிட்ட ஆண்டு அல்லது ஒரு குறிப்பிட்ட அரச வம்சத்தில் நிகழ்ந்ததென்று கூறும் அளவுக்குத் திட்டவட்டமாக பாகுபடுத்தமுடியாது. இந்தக் கூற்று இந்தியாவின் அடிமை ஏற்பாட்டுக்கும் நிலப்பிரபுத்துவ ஏற்பாட்டுக்கும் குறிப்பாக பொருந்தும். கொஞ்சகாலத்துக்கு, இந்த இரு அமைப்புகளும் அக்கம்பக்கத்தில் வாழவும் செய்தன, பிரபுத்துவ பண்ணைஆள் முறையிலும் அடிமைமுறையின் சில அம்சங்கள் தொடர்ந்து இருக்கின்றன என்பதும் நன்கறியப்பட்ட விஷயம்.

ஆனால் கி. மு. ஐந்தாவது நூற்றுண்டில் தோன்றிய பௌத்தமும் சமணமும் அடிமை ஏற்பாட்டுக்கு எதிராக எழுந்த தத்துவார்த்தக் கலகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தின என்று நிச்சயமாகக் கருதலாம்.

இந்த விஷயத்தை இங்கு விரிவாக விவாதிக்கமுடியாது. ஆனல் மேற்கொண்டு வாசகர்கள் ஆராய்வதற்கு உதவியாக நாம்

சமண சிந்தனையின் பூர்வோத்திரத்தைக் குறிப்பிட விரும்புகிறேம். பௌத்த சிந்தனையின் பூர்வோத்திரமும் அத்தகையதே.

சமணமுறை வழக்குப்படி, மகாவீர் ஜைனருக்குமுன் இருபத்தி மூன்று தீர்த்தங்கரர்கள் (தேவதூதர்கள் அல்லது தீர்க்கதரிசிகள் என்று பொருள்படும்) இருந்தனர். சாதர்மாலங்கர் என்ற நூலில் அவர்களில் அறுவரைப்பற்றி குறிப்புகள் உள்ளன; அதிலிருந்து, இந்த ஆறு தீர்த்தங்கரர்களில் நால்வர், ஓடிப்போன அடிமைகள் என்றும், மிச்சமுள்ள இருவர் கிட்டத்தட்ட அடிமைகளின் தரத்துக்கு தாழ்ந்துவிட்ட விவசாயிகள் என்றும் அறிகிறேம். அவர்களில் ஒருவர் பூர்ணகாசிபர் என்ற பெயரை உடையவர். அவருக்கு அந்தப்பெயர் ஏன் ஏற்பட்டது? அவருடைய தாயாரை அடிமையாக வைத்திருந்த எஜமானர் வீட்டில் நூருவது அடிமையாகப் பிறந்தாரென்ற காரணத்தால், அவருக்கு அந்தப் பெயர்வந்தது! லோகாயித வகைகளை அல்லது ஏறத்தாழ லோகாயித வகைகளை ஸ்தாபித்த இதரர்களின் பெயர்கள்: மாகாலி கோஷால், நிகன்தி நத்புட்டா, அஜித்கேஷ்கம்பால், ககூதகாத்யாயனர்.

கி. மு. 558ல் பிறந்து கி. மு. 478ல் இறந்தவரான புத்தரே, மேன்மக்களாட்சியை கொண்ட குலத்தின் வழித்தோன்றல்; குல ஜனநாயகத்தின் பண்பாட்டைப் பெற்றவர்.

இது சம்பந்தமாக, ஜாட்விக் பயர்பாக் என்ற நூலில் எங்கல்ஸ் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத் தக்கது. அவர் கூறுகிருர்:

"இதுவரை நீடித்திருக்கும் மூன்று உலகச் சமயங்களைப் பொறுத்தமட்டில்தான்—பௌத்தம், கிறிஸ்துவமதம், இஸ்லாம் ஆகிய இம்மூன்று சமயங்களைப் பொறுத்தமட்டில்தான், மகத்தான சரித்திரத் திரும்பு முனைகளுடன் சமய மாறுதல்களும் நிகழ்ந்திருக்கின்றன..............ஏறத்தாழ செயற்கையாகத் தோன்றிய இந்த உலக மதங்களில்தான், குறிப்பாக கிறிஸ்துவ, இஸ்லாமிய சமயங்களில்தான், பொதுப்படையான சரித்திர இயக்கங்கள் ஒரு சமய முத்திரை பெறுவதை நாம் பார்க்கிறேம்."

எந்த "மகத்தான சரித்திரத் திரும்புமுனை"க்கு பௌத்தமதம் தோழனுகவிருந்து தன் முத்திரையைக் கொடுத்தது? இந்தியா

வைப் பொறுத்தமட்டில், இந்த சரித்திரத் திரும்புமுனை, அஜாத சத்துரு முதல் அசோகன் வரை ஆட்சி நடத்திய அரச வம்சங்கள் பிரதிநிதித்துவப்படுத்திய அடிமை ஏற்பாடு பலவீனமடைந்ததேயாகும். இவற்றில் அதிக சக்திபெற்ற ராஜ்யமாக விருந்தது நந்தர்களுடையதென்று தோன்றுகிறது.

நந்த அரசர்களும் அவர்களுடைய சமகாலத்தவரும் பெரிய ராணுவங்களை நிரந்தரமாக வைத்திருந்தனர். இதன் பலனாக மக்களுக்கு வரிச்சுமை அதிகரித்தது; ஆளும் வர்க்கங்களில் ஊழலும் ஊதாரித்தனமும் பெருகின. அவர்களுடைய திக்கு-விஜயம் ஆயிரக் கணக்கானவர்களை அடிமைகளாக்கியது, பரந்த பிரதேசங்களில் நீடித்திருந்த குல ஜனநாயகங்களையும் கண சமூகங்களின் மிச்ச சொச்சங்களையும் அழித்தது. கிராமங்களின் சுயேச்சை விவசாயிகளும், நாசமடைந்த குலத்தினரும், தொல்லைக்குள்ளான வர்த்தகர்களும், நகரங்களின் குடித்தனக்காரர்களும் இவர்களனைவரும் ஒரு மாறுதலை எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர்.

தத்துவார்த்தத் துறையில், பௌத்தமதம் இந்த மாறுதலின் குரலாக விளங்கியது. அரசியல்ரீதியில், அந்த மாறுதல் வேகம், மௌரியர்கள் மூலம் நந்த சாம்ராஜ்யத்தை வீழ்த்தியது. மௌரியர்கள் புதிய சாம்ராஜ்யத்தைப் படைத்தனர்; ஆனால் ஓரளவுக்கு கொடுமை குறைந்தது; மாறுதல்கள் ஏற்பட்டன. இதுதான் அந்த சரித்திரத் திரும்புமுனை; இதை நாம் கவனமாக ஆராயவேண்டும். இந்த ஆராய்ச்சியில் நமக்கு முதன்மையாக உதவக்கூடியது கௌடில்யரின் அர்த்த சாத்திரமாகும். தவிர பௌத்த இலக்கியத்தின் ஜாதகக் கதைகளும் அசோகரின் தர்ம சூத்திரங்களில் சிலவும் கல்வெட்டுகள் சிலவும் நமக்கு உதவும்.

அடிமை ஏற்பாடு பலவீனமடைந்து, அதற்குப் பதிலாக, பிரபுத்துவ ஏற்பாடு படிப்படியாக வளரும் நிகழ்ச்சி, சுமார் முந்நூறு ஆண்டுகள் நீடிக்கிறது. கிராமங்களிலுள்ள அதன் பொருளாதார அடிப்படையில் தீர்க்கமான மாறுதல்கள் ஏற்படுகின்றன.

பூர்வீகக் கம்யூன், நிலத்திலும் கால்நடைகளிலும் உற்பத்தி செய்த செல்வம் பொதுவாக இருந்தது; அந்தச் செல்வம்

பொதுவாக உபயோகிப்பதில் பங்கிடப்பட்டது. பொருளுற்பத்தி சக்திகளின் வளர்ச்சியுடன், வேலைப் பிரிவினை வந்தது; வர்க்கங்கள் தோன்றின; இவ்வாறாக அடிமை முறை உதயமாயிற்று. கணங்கள் வாழும் கிராமங்களில், கண விவசாயிகள் அடிமைகளின் உதவியுடன் பொது நிலத்தில் உற்பத்தி செய்யத் தொடங்குகிறார்கள்: ஆனால் வேலையின் மிகப்பெரும் பகுதியை சுதந்திரமான விவசாயிகளே அப்பொழுதும் செய்து வருகின்றனர். எனினும் சாராம்சத்தில், கண ஸ்தாபனமும், அடிமை முறையும் ஒத்துப்போக முடியாது; அடிமைமுறை கண ஸ்தாபனத்தை சீக்கிரத்தில் அரித்துத் தின்றுவிடுகிறது; பூர்வீகக் கணம் மறைகிறது.

நகரங்களில் ஆட்சிபுரிந்த மேன்மக்கள், செல்வத்தைச் சேமித்தனர்; அடிமைகளைக் குவித்துக்கொண்டனர்; சரக்குகளில் வாணிபம் நடத்தினர்; தமது ராஜ்யங்களையும் சாம்ராஜ்யங்களையும் உருவாக்கினர்- அரசனின் தொழில் நிலையங்களிலும் எஸ்டேட்டுகளிலும், வியாபாரியின் வீட்டிலும், ஒர்ஷாப்புகளிலும் நகரத்து அண்மையிலுள்ள தோட்டங்களிலும் கோஷ்டி கோஷ்டியாக அடிமைகள் வேலை செய்தனர்; அவற்றில் சுதந்திரமான கைத் தொழிலாளர்களும், கூலி உழைப்பாளிகளும்கூட உழைத்தனர்.

உற்பத்தி பெருகியது, ஜனத்தொகையும் பெருகியது, சாம்ராஜ்யங்கள் ஓங்கி உயர்ந்தன. ஒருபுறத்தில் சுதந்திரமான விவசாயிகளுடைய கிராமங்கள்; அவற்றில் நிலத்தைப் பொதுவாக அனுபவித்த கண சமூகங்கள் இருந்தன; அல்லது குடியிருப்பு சமூகங்கள் பொதுநில உரிமையைப் பெற்றிருந்த பொழுதே அதன் உறுப்பினர்கள் தனித்தனியாக சாகுபடி செய்தனர். மறுபுறத்தில், உச்சியில் கனம் மிகுந்த பேரரசுகள்; இந்த சுதந்திர விவசாயி கிராமங்களுக்கும் பேரரசுகளுக்கும் இடையே நிலப் பிரச்சினையில் தீவிரமான முரண்பாடுகளும் பகைகளும் ஏற்பட்டன. இந்தப் பகை இரு விஷயங்களில் பிரதிபலித்தது; (1) கிராமங்களின் பொதுநிலத்தை அரசன் சுவாதீனப்படுத்திக் கொள்ள முடியுமா? (2) மொத்த உற்பத்தியில் அரசுக்கு உரிய பங்கு என்ன? அதாவது உபரி உற்பத்தி அல்லது நிலவாடகையில் ஆளும் வர்க்கத்துக்கு உள்ள உரிமை என்ன?

தரும நூல்களின் பகுதிகளும் அவற்றின் வியாக்கியானங்களும் இந்தப் பிரச்னையை விவாதிக்கின்றன; பூர்வமீமாம்சத்திலிருந்து இதைப் பார்க்கலாம். சுரண்டல் உறவுகளில் ஒரு ஒழுங்கை ஏற்படுத்தவும் உபரி அல்லது வாடகையில் உள்ள உரிமையை நுணுக்கமான விதிகள்மூலம் கட்டுப்படுத்தவும் கௌடில்யர் முயற்சிக்கிறார். தானம் செய்வதற்கு அரசனுக்குள்ள உரிமையைப் பற்றி பூர்வமீமாம்சம் விளக்குகிறது; நிலத்தை தானம் வழங்கும் உரிமை அரசனுக்கு இல்லையென்று அது கூறுகிறது. ஏன்? ஏனென்றால், "நிலம் பொது சொத்து" தனி உடமையல்ல என்று அது கூறுகிறது. ஒரு வேளை, தனிநபர்களென்று நிலத்துக்கு எல்லை வகுத்து சுவாதீனமாகாமலேயே இருந்திருக்கலாம்.

ஆனால் ஆளும் வர்க்கங்கள் இந்த நிலைக்குக் கொஞ்சம் கொஞ்சமாகக் குழிபறித்தன; வரிகளையும் உபரியிலுள்ள தம் பங்கையும் பெருக்கின; பொது நிலங்களை சுவீகரித்துக்கொண்டன. அப்பொழுது, சுரண்டல் வர்க்கங்களுக்குச் சேவகம் புரிந்த நீதி நூல் வல்லுனர்கள் ஒரு பிரச்னையைக் கிளப்பினார்கள்; அதாவது பொதுநிலம் என்றால் என்ன? கிராமப் பொதுநிலம், அரசன் பொது நிலம் என்று இருவகைப் பொதுநிலங்கள் இல்லையா? என்ற கேள்வியைக் கிளப்பினார்கள், அதாவது அரசன் தானம் வழங்கக்கூடிய நிலம், தானம் வழங்க முடியாத நிலம் என்று இருவகைகளிருப்பதாக வாதித்தனர். வரிகளாக (வாடகையாக) உற்பத்தியில் எவ்வளவு பங்கை அரசு வசூலிக்க முடியுமென்ற கேள்வியையும் அவர்கள் எழுப்பினார்கள்.

சரித்திரத்தில் நாம் முன் செல்லச் செல்ல, அரசாங்கம் அதாவது சுரண்டும் வர்க்கங்கள், உற்பத்தியாளர்களின் பல்வேறு பகுதிகளிடமிருந்து தமது பாகத்தை படிப்படியாகப் பெருக்கிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். விவசாயத்தில், ராஜபாகம், உற்பத்தியின் பத்தில் ஒரு பங்கிலிருந்து உற்பத்தியில் பாதியாகக் கூடுகிறது. ரொக்க வாடகையும் ரொக்க வரிகளும்கூட தலைதூக்குகின்றன. பொதுநிலப் பாதுகாப்புக்காகவும் வாடகையும் வரிகளும் உயராமல் தடுப்பதற்காகவும் நடைபெறும் போராட்டம், நந்தர்கள் காலத்திலிருந்தே, சில சமயங்களில் அவர்களுக்கும்

முன்பாகக்கூட-சாம்ராஜ்யங்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் திறவு கோலாக இருக்கிறது. (குஷானர்கள், ஸித்தியர்கள் போன்ற அன்னியர்களின் படையெடுப்பால் ராஜ்யங்கள் வீழ்ந்ததும் தோன்றியதுமே அதற்கு விதிவிலக்கு.)

இந்த நிகழ்ச்சியில், பொருளுற்பத்திச் சக்திகளும் வளர்ந்தன. கைத் தொழில்கள் பெரிய அளவில் வளர்ந்தன; அவற்றின் திறன் அதிகரித்தது. விவசாயம் பல்வேறு வகைகளில் வளர்ந்தது; அதன் பொருளுற்பத்தி உறவுகளிலும் மாறுதல்களைக் கண்டது.

பழைய கணசமூகம் மறைந்தபொழுது, நிலத்தைப் பொது உடமையாகக் கொண்டிருந்த புதிய சமூகம் ஏற்பட்டது; இது சில கால கட்டங்களில் சில பிரதேசங்களில் குடியிருப்பு சமூகங்களின் அடிப்படையில் சாகுபடி செய்தது. பிற்பாடு, குடியிருப்புச் சமூகத்துக்குப் பதிலாகக் கிராம சமூகம் ஏற்பட்டது; அதில் தனிக் குடும்பங்களின் அடிப்படையில் நிலம் சாகுபடி செய்யப்பட்டது. குறிப்பிட்ட குடும்பங்கள் குறிப்பிட்ட பொருளுற்பத்தி வகைகளில் வம்ச பரம்பரையாக ஈடுபட்டன; இந்த அடிப்படையில் பொருளுற்பத்திக் கருவிகளும் வினைத்திறனும் வளரவே இந்தச் சமூகங்களில் வம்ச பரம்பரை வேலைப் பிரிவினை உண்டாயிற்று; சாதி அமைப்பு பிறந்தது; சாதி அடிப்படையில் ஒரு புதிய கிராமச் சமூகம் தோன்றியது. அது, இந்திய நிலப் பிரபுத்துவத்தின் தலைசிறந்த அமைப்பாயிற்று. அநாகரிகத்தின் பிந்தைய கட்டங்களுக்கும் அடிமை முறை, நாகரீகம் ஆகியவற்றுக்கும் உரிய காலத்தின் நியாய-ஒழுக்க வெளியீடாக நால் வர்ண ஏற்பாடு (வர்ணாசிரம தர்மம்) இருந்ததென்றும், இந்திய நிலப் பிரபுத்துவத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் வெளியிடுவதாக சாதி அமைப்பு (சாதி தர்மம்) நிலவியதென்றும் நாம் கூறலாம். இந்தச் சாதி ஏற்பாடு, பழைய குடியிருப்புச் சமூக கிராமம் அல்லது வர்ணாசிரம கிராமத்தை அகற்றிவிட்டு, அதன் இடத்தில் அமைந்தது; அது அடிமை முறைக்கு மாற்றாக மலர்ந்தது; புதிய பொருளுற்பத்திச் சக்திகளுக்கு மிகவும் உகந்ததாக விருந்தது. அது தன் வாழ்வை, அநேகமாக, மௌரியர்களுடன் துவக்கி யிருக்கலாம்; பிற்பாடு

குப்த சாம்ராஜ்ய காலத்தில் (சுமார் கி.பி. 200) பரவியிருக்கலாம். பிறகு, பல நூற்றுண்டுகளுக்கு, அது இந்திய நிலப் பிரபுத்துவத்தின் மாருத, வளைந்து கொடுக்காத அடிப்படையாக ஆயிற்று. அது இந்தியாவின் சகல பகுதிகளிலும் ஏககாலத்தில் பரவவில்லை என்பது மெய்யே.

8. இங்கு இன்னொரு கேள்வி எழுந்திருக்கிறது. மார்க்ஸ் தன் நூல்களில் பல இடங்களில், இந்தியாவின் "மிகப் புராதனமான" கிராம சமூகங்களைப் பற்றி, "மாருத" கிராம சமூகங்களைப் பற்றி குறிப்பிடுகிருர். இதன் பொருள் என்ன ?

மார்க்ஸின் இந்தக் குறிப்புகள், யாந்திரீகமாகவும் வறட்டுப் பிடிவாதத்துடனும் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றன வென்று எனக்குத் தோன்றுகிறது. இந்தப் பிரச்னையை விவாதிப்பது அவசியம்.

இந்தியாவின் நில உறவுகளையும் கிராம சமூகத்தையும் பற்றி மார்க்ஸ் இறுதியான கருத்தை வரையறுத்து வெளியிடவில்லை. அவர் அடிக்கடி, இந்திய வரலாற்றை, அதன் பல்வேறு அம்சங்களையும் கால கட்டங்களையும், ஆராய்ந்து கொண்டிருந்தார். ஒரு சமயத்தில், இந்தியாவில் நிலத்தில் தனி உடமையே இருக்கவில்லையென்று எண்ணினுர். பிறகு கிருஷ்ணு நதியின் பள்ளத்தாக்கில் நிலத்தில் தனி உடமை இருப்பதை அவருக்கு ஆராய்ச்சி புலப்படுத்தியது. அதை அவர் ஏங்கல்ஸுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டார்.

அதைப் போலவே, "குடும்பம், தனிஉடமை, அரசு ஆகியவற்றின் தோற்றம்" என்ற நூலை ஏங்கல்ஸ் எழுதும்வரை, கணம், கிராம சமூகம் ஆகியவற்றின் வளர்ச்சி சம்பந்தமான பிரச்னையில் இறுதியான அபிப்பிராயம் உருப் பெறவில்லை.

'மூலதனம்' என்ற நூலின் முதற் பாகத்தில் இந்தியாவின் கிராம சமூகத்தைப் பற்றி மார்க்ஸ் பல நூல்களிலிருந்து மேற்கோள் கொடுக்கிருர். ஆனுல் அந்த கிராம சமூகம் பூர்வீக கம்யூனிஸத்தில் வாழ்ந்த கண சமூகம் அல்ல; குடியிருப்பு சமூகமும் அல்ல. கண சமூகம், இரத்தக் கலப்பு உறவு முறையை அடிப்

படையாகக் கொண்டது. அதில் சுரண்டுவோர்-சுரண்டப்படு வோர் உறவுகள் இல்லை. ஆனால் கிராம சமூகத்தில் அத்தகைய உறவுகள் இருந்தன. கிராம சமூகம், பிரதேசத்தை அடிப்படை யாகக் கொண்டது.

"குடும்பத்தின் தோற்றம்" என்ற நூலில் எங்கல்ஸ் இந்தப் பிரச்னையை விவாதிக்கும்பொழுது, முதலில் இந்த மாறுதல்களைக் குறிப்பிடவில்லை. ஆனால் அந்த நூலின் 1891ம் ஆண்டு பதிப் பில், அவர் காவலெவ்ஸ்கியின் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பிரச்னையைத் தெளிவுபடுத்தினர். அதிலிருந்து நாம் அறிவதென்ன? நிலம் சமூகத்திற்குப் பொதுவாக யிருக் கும் பொழுது அந்தப் பொது உரிமையும் அந்தச் சமூகங்கள் நடத்தும் உற்பத்தியும் மூவகை முறைகளில் இருக்கும்.

முதலாவது, இரத்தக் கலப்பு உறவுகளை மட்டும் அடிப்படையா கக் கொண்டே பூர்வீக கண சமூகம். (இதை கண முறையென்று நாம் சொல்லலாமா?)

இரண்டாவது, தந்தைவழி உறவை அடிப்படையாகக் கொண்ட குடியிருப்பு சமூகம். (இதை கிருஹபதி முறையெனச் சொல்ல லாமா?)

மூன்றாவது, கிராம சமூகம்; தனிப்பட்ட குடும்பங்களைக் கொண் டது. ஒரு பகுதி நிலத்தை அவைகள் பொதுவில் அனுபவிக் கின்றன. இன்னொரு பகுதி நிலத்தை தனித்தனியாகப் பெற்று அனுபவிக்கின்றன. ஜாதிகளாகச் சேர்ந்திருக்கும் தனிக் குடித்த னங்களின் அடிப்படையில் சாகுபடியையும் இதர பொருளாதார அலுவல்களையும் நடத்துகின்றன. இதுவே கிராமப் பஞ்சாயத்து முறை; இதில் தனி உடைமையும் பொது உடைமையும் அடுத்தடுத்து நிலவுகின்றன. மார்க்ஸ் குறிப்பிடும் கிராம சமூகம் இந்த மூன்று வது ரகத்தைச் சேர்ந்தது. அது வர்ணமோ ஜாதியோ இருந் திராதபூர்வீக கம்யூனிஸக் காலத்தில் இருக்கவில்லை. வர்க்கங்கள், வர்ணம், அடிமைமுறை ஆகியவை தோன்றிய துவக்ககாலத்திலும் அது இருக்கவில்லை. வர்ண முறையும் அடிமை ஏற்பாடும் வீழ்ச்சி யடையும்பொழுதே அது தோன்றியது. இந்தியப் பிரபுத்துவத் தின் ஜாதி-சமுதாய கிராமமாக ஆயிற்று. ஆக அது பிரதிநிதித்

துவப்படுத்தும் பொருளுற்பத்தி உறவுகள் மற்றவற்றிலிருந்து மாறுபட்டவை.

கிராம சமூகமும் இந்தியப் பிரபுத்வமும் அடைந்த வளர்ச்சியை இந்தக் குறிப்பில் விரிவாக விவாதிக்க முடியாது. ஜாதிகள் மூலம் வம்ச பரம்பரை வேலைப்பிரிவினையை உருவாக்கிக் கொண்ட கிராம சமூகத்தின் தோற்றம், சமுதாயத்தின் பொருளுற்பத்தி சக்திகளை வளர்த்தது. ஒவ்வொரு ஜாதியும் கிளை ஜாதியும் தத்தம் தொழில் பிரிவில் விசேஷத் தேர்ச்சிபெற்றது; கைத்தொழில்களுக்கு எந்த அளவுக்கு சாத்தியமோ அந்த அளவுக்கு தத்தம் தொழில் பிரிவில் வளர்ச்சி கண்டது. உற்பத்தித் திறன் வளரும் பொழுது ஆளும் வர்க்கங்களும் அரசாங்கமும் பறித்துக்கொண்ட உபரியும் அதிகரித்தது. இந்த உபரியிலிருந்து நீர்ப்பாசன அமைப்புகள் பராமரிக்கப்பட்டன. மேலும் இன்றுவரை காப்பாற்றி வந்திருக்கிற சிற்பச் செல்வங்கள் படைக்கப்பட்டன. குப்த சாம்ராஜ்யத்தின் கலைவளம், கலை இலக்கிய மறுமலர்ச்சி, பண்டைக் காலத்தில் நிறைவேறிய பல பெரிய திட்டங்கள், ஒரு தீண்டத்தகாத இஞ்சினீயர் காஷ்மீரில் நிர்மாணித்த நீர்ப்பாசன அமைப்பு, இடைக்கால சகாப்தங்களில் ஓங்கி வளர்ந்த வர்த்தகம்—இவையனைத்தும் கிராம சமூகத்தாலும் அதன் விவசாய கைத்தொழில்களாலும் முன்னேறிய உற்பத்தி சக்திகளின் சாதனைகளாகும். இடைக்கால அரசர்களின் நகரங்களில் வளர்ந்த கைத்தொழில்களுக்கும் இந்தச் சாதனைகளில் பங்குண்டு.

அதே சமயத்தில் இந்தச் சமூகங்கள் முன்னேற்றத்துக்குத் தடையாகி தேக்கத்தை உண்டாக்கியதையும் மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார். இதைப்பற்றி மார்க்ஸ் கூறுவதை நமது சரித்திரத்தைப் பயில்வோர் அனைவரும் அறிவர். எனவே அதைத் திருப்பி கூறத் தேவையில்லை.

எனினும் இந்த கிராம சமூகங்களில் வர்க்கப் போராட்டம் அடைந்த வளர்ச்சியை அல்லது பிரபுத்வ இந்தியாவில் வர்க்கங்களுக்கிடையே ஏற்பட்ட போராட்டத்தின் போக்கை, சரித்திர மாணவர்கள் ஆராய விரும்புவார்கள்.

இந்தியாவைப் பற்றிய தன்னுடைய கட்டுரைகளில் மார்க்ஸ்

கிராம சமூகங்களை ஆராய்கிறார். ஆனால் அங்கு பிரிட்டிஷ் வெற்றியால் ஏற்பட்ட புரட்சியையும் புதிய உற்பத்தி சக்திகளையும் சுட்டிக் காட்டுவதில்தான் மார்க்ஸ் பிரதானமாக கவனம் செலுத்துகிறார்.

'மூலதனம்' என்ற நூலில் அவற்றைப் பற்றி மீண்டும் எழுதுகிறார். இங்கு முதலாளித்வ உற்பத்தி முறையால் தொழிற்சாலையில் ஏற்படும் வேலைப் பிரிவினையுடன் கிராம சமூகத்தின், வேலைப் பிரிவினையை, தன் தேவையைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் அதன் பொருளாதார அமைப்பை, அது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நீடித்திருப்பதை, அது ஆளும் அரசாங்கத்தின் ஏற்றத் தாழ்வுகளில் அக்கறை கொள்ளாமல் இருப்பதை, மாறுபடுத்திக் காட்டுவதிலேயே மார்க்ஸ் அக்கறை கொண்டிருக்கிறார்.

இந்த இரு இடங்களிலும், மார்க்ஸ், இந்திய பிரபுத்துவ அமைப்பைப் பற்றி ஒரு ஆழ்ந்த ஞானத்தை அளிக்கிறார். ஆனால் இரு இடங்களிலும் அவர் விஷயத்தின் ஒரு அம்சம் அல்லது இன்னொரு அம்சத்தையே ஆராய்கிறார். விஷயத்தை சகல அம்சங்களிலும் தீர்க்கமாக ஆராய்ந்து எழுதும் வேலையில் அவர் அப்பொழுது ஈடுபட்டிருக்கவில்லை. இந்திய சரித்திரத்தை எழுதுவதற்கு அவர் விஷயங்களை சேகரித்துக் கொண்டிருந்தார்; ஆனால் எழுதுமுன் இறந்துவிட்டார்.

எனவே, இந்தக் கிராம சமூகங்களுக்குள் நிகழ்ந்த வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிப் பிரச்னை, அவற்றுக்கும் பிரபுத்துவ ராஜ்யத்துக்கும் இடையே நடந்த போராட்டம் பற்றிய பிரச்னை, இனித்தான் ஆராய்ந்தறிய வேண்டியதாகத் தோன்றுகிறது. இதில், மௌரியர்கள் முதல் முகலாயர்கள் மராத்தியர்கள் வரை, இரண்டாயிரம் ஆண்டுகளின் காலத்தை ஆராயவேண்டும்.

இந்த இரண்டாயிரம் ஆண்டுகளில். இந்தச் சமூகங்களில் எத்தகைய உள் முரண்பாடும் பகையும் உள் போராட்டமும் நிகழவில்லையென்றும் அவற்றுக்கும் அவற்றின்மீது ஆட்சிபுரிந்த பிரபுத்துவ அரசுக்கும் இடையே எத்தகைய போராட்டமும் நிகழவில்லையென்றும் எவராவது கூறினால், அது மார்க்ஸீயத்தையே மறுப்பதாகும்.

இந்தச் சமூகங்களுக்குள்ளே நடந்த போராட்டங்கள், அவற்றுக்கும் அரசுக்கும் நடந்த போராட்டங்கள் ஆகியவற்றின் சாராம்சம் என்ன ?

கிராம சமூகத்தில் ஒவ்வொரு சாதிக்கும் சாதிக் குடும்பத்துக்கும் சாகுபடிக்கென்று நிலம் ஒதுக்கப்பட்டிருந்தது. அது, காடுகள் குளம் கண்மாய் புல் வெளி முதலியவற்றைக் கொண்ட பொது நிலத்தையும் (இது மகா பூமி என்று தரும நூல்களில் குறிப்பிடப் படுகிறது) பயன்படுத்திக்கொள்ளமுடியும். ஆனால் சில குறிப்பிட்ட சாதிகள் நிலம் வைத்திருப்பதுடன்கூட திட்டமான கைத்தொழில்களான நெய்தல், எண்ணெ தயாரித்தல், தோல் பதனிடுதல், தெரு சுத்தம் செய்தல், காவல் காத்தல் முதலிய வேலைகளுடன் இணைந்திருந்தன. இவ்வாறாக விவசாயமும் கைத்தொழில்களும் ஒன்றோடொன்று ஒன்றியிருந்தன.

ஒவ்வொரு கைத்தொழில் சாதியும் இதர கைத்தொழில்களுடன் பொருட்களை பரிவர்த்தனை செய்துகொண்டன; எண்ணெ கொடுத்து செருப்பு பெறுவது, மர சாமான்கள் கொடுத்து கோதுமை பெறுவது முதலிய வகைகளில் பரிவர்த்தனை செய்து கொண்டன. இவ்வாறாக ஒவ்வொருவருடைய உழைப்புப் பொருளும் ஒரு கிராமம் அல்லது சில கிராமங்களின் தொகுதியில் புழங்கியது.

எனினும் உழைத்து உற்பத்தி செய்யாத சாதிகளும் இருந்தன. பாடம் சொல்லிக் கொடுத்தல், தொழுகை, பருவ நிலை அறிதல் முதலிய அலுவல்களை அந்தணர்கள் கவனித்தனர். அரசாங்கத்துக்கு தொண்டு புரிந்த வீரர் குடும்பங்களாக க்ஷத்திரியர்கள் இருந்தனர். வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு பெயர்களுடன் வரி வசூல் அதிகாரிகளும் கணக்கர்களும் இருந்தனர். அவர்கள் தமது வேலைக்கு எங்கிருந்து 'சம்பளம்' பெற்றனர் ? உழைக்கும் சாதிகளின் கிராம உற்பத்தியிலிருந்து, உற்பத்திசெய்யும் சாதிகளின் உபரியின் ஒரு பகுதியிலிருந்து பெற்றனர். அதாவது, உற்பத்தியாளர்கள் தமக்குக் கொடுத்த வாடகையில் அவர்கள் வாழ்ந்தனர். இந்த அர்த்தத்தில் அவர்கள் பிரபுத்துவ வாடகை வசூலிப்பாராக இருந்தனர்.

அவர்கள் நில உடமை அடிப்படையில் வாடகை பெற்றுர் களா? இல்லே. ஆனுல் வாடகை உரிமை அவர்களுக்கு இருந் தது.

அந்த உரிமை அரசாங்க பலாத்காரத்தின் உதவியுடன் நிறை வேற்றப்பட்டதா? ஆம், நிறைவேற்றப்பட்டது.

இதர சாதிகள் உற்பத்தியில் தமக்குள்ள ஸ்தானத்துடன் பிணைக்கப் பட்டிருந்தனர்; குறிப்பிட்ட கைத்தொழில் அல்லது விவசாயவேலை யுடன் பிணைக்கப்பட்டிருந்தனர். உற்பத்தியில் அவர்கள் பிற ருக்கு கொடுக்கவேண்டிய பங்கும் வகுக்கப்பட்டு நிர்ப்பந்தமாக அமு லாக்கப்பட்டது. அவ்வாறு அமல்நடத்திய அதிகார ஸ்தாபனம் அர சாங்கமாகும். அது தர்மத்தின் அடிப்படையில் இயங்கியது. அரசாங்க மையங்களிலும் கிராம சமூகத்திலும் அந்த அதிகாரத்தை செலுத்தியவர்கள் பிராமண, க்ஷத்திரிய ஆளும் பகுதிகளாவார் கள்.

தட்டுமேல் தட்டாக அமைந்த ஏற்பாட்டில் ஒருவரை இன் ெருருவர் நேரடியாகச் சார்ந்திருப்பதை இந்த உறவுகள் அடிப் படையாகக் கொண்டிருந்ததா? அதைத் தழுவி நிற்பதன் மூலமே மற்றவர்கள் உழைத்து உயிர்வாழ முடியுமென்ற வகையில் அந்த உறவுகள் இருந்தனவா? ஆம். அவ்வாறு இருந்தன. அவர்கள் அந்த ஏற்பாட்டை மீறினுல் தண்டிக்கப்பட்டார்கள்.

கிராம சமூகத்தின் இந்த குணும்சங்களே அது திட்டவட்ட மாக வறையறுக்கப்பட்ட பிரபுத்துவ உறவு என்பதை எடுத்துக் காட்டுகின்றன. ஒருவகைப்பட்ட வம்ச பரம்பரை பண்ணே அடி மைமுறை இந்தக் கிராம சமூகங்களின் அஸ்திவாரமாயிருந்தது. தீண்டத் தகாத சாதிகள் சமூகத்தின் ஆளும் வர்க்கங்களுடைய கேவலமான பண்ணே அடிமைகளாகவிருந்தனர்.

அரசியல் ஆட்சியிலும் இதே உறவு பிரதிபலித்தது. அர சாங்கம், ஆட்சி நடத்துகிறவர்களும் உற்பத்தி செய்யாதவர்களு மான பிராமண க்ஷத்திரிய சமூகங்களுக்குச் சொந்தமாயிருந்தது. வரி வசூல் அதிகாரிகளாயிருந்த சாதிகளும் (உதாரணம் காயத்ஸ் தர்கள்) இதில் பங்கு வகித்தனர்.

சமூகங்களுக்குள் நடந்த போராட்டம், வாடகை வசூலிப்பவர்கள் மென்மேலும் அதிகமாக வாடகை வசூலிக்க முற்படுவதால் மூண்டது. பாலி, பாகம் ஆகியவற்றின் விதிகளுக்குப் பொருளாக விருந்ததும் இதுவே. அந்தணன், க்ஷத்திரியன், வரி வசூல் அதிகாரி ஆகியோர் உற்பத்தி செய்யும் சாதிகளிடமிருந்து தாம் பெறுகிற பாலி, பாகம் ஆகியவற்றை அதிகரிக்க எப்பொழுதுமே முயன்றனர். இவற்றை எப்படி கருருன அளவுகளில் நிர்ணயிப்பதென்பதை தர்ம நூல்கள் விளக்கின. பாகமாகக் கொடுக்கவேண்டிய வெற்றிலைகள், தேங்காய்கள், பாக்குகள் ஆகியவற்றின் எண்ணிக்கை கூட பல தஸ்தவேஜிகளில் விவரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை மீறினல், ஆளும் சாதி, பண்ணை அடிமை சாதியைத் தண்டிக்கும்.

கிராமம் அரசாங்கத்துடன் நடத்திய போராட்டம், உற்பத்தி செய்யும் சாதிகளை மட்டும் கொண்டதாகவோ, சில சமயங்களில் குறிப்பிட்ட பிரச்னையில் கிராமம் முழுமையும் சேர்ந்து நடத்துவதாகவோ இருந்தது. இந்தப் போராட்டமும் அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய பாலி, பாகம் பற்றியதாகவே இருந்தது. இந்தப் போராட்டத்தில்,பல தடவைகளில் பிரச்னையை சமாதானமாகப் பைசல் செய்யமுடியாதபொழுது, ஆயுதமேந்திய மோதல்கள் நிகழ்ந்தன. அல்லது கிராம சமூகம் ஒரு ராஜ்யத்திலிருந்து அவ்வளவு கண்டிப்பாகவும் அதிகமாகவும் இறை வசூலிக்காத இன்னெரு ராஜ்யத்துக்குச் சென்று குடியேறியது.

கிராம சமூகங்களில் உற்பத்தி செய்யாத சாதிகள் அக்கிரம வாடகை வசூலித்து விவசாயத்தையும் கைத்தொழில்களையும்அழிக்கும் பொழுது உயர்ந்த வரிகள் மூலம் பணத்தைக் குவித்துக் கொள்ளும்பொழுது, வியாபாரத்தை நாசம் செய்யும்பொழுது, கொள்ளைக்காரர்கள் அல்லது படையெடுப்பாளர்களிடமிருந்து கிராமத்தை பாதுகாக்கத் தவறும்பொழுது, பொருளாகவோ உழைப்பாகவோ வாடகை கொடுக்க மறுப்பதன் மூலம் மக்கள் தமது கண்டனத்தை தெரிவித்தார்கள். ஒவ்வொரு சாதியும் தர்மத்தை அனுஷ்டிக்கத் தவறுகிறதென்றுகூறி, இந்த நிலைமைக்குப் புலம்புவார்கள். இந்த 'நெருக்கடி'க்குத் தீர்வுகாண ஒவ்வொரு

வரும் அவருடைய சாதி தர்மத்துக்குரியமுறையில் நடக்கவேண்டு மெனப்படும். அதன் அடிப்படையில் 'அமைதி' நிலைநாட்டப்படும். இந்தியாவின் பல்வேறு பாகங்களில் பத்தாவது முதல் பதினாரு வது நூற்றாண்டு வரை வாழ்ந்த பக்தி இயக்கப் பெரியார்களின் இலக்கியத்தில் இந்தப் பிரச்சினையைப் பற்றிய விவாதம் நிறைய இருக்கிறது.

பாலி, பாகக் கடன்கள், உரிமைகள் ஆகியவற்றின் மாறுதல் களைப் பல அறிஞர்கள் விவாதித்திருக்கிறார்கள். இந்திய பிரபுத் துவ வாடகை உறவுகளின் தன்மை அந்த விவாதம் மூலம் தெளி வாகப் புலப்படுகிறது. அவர்கள் அவற்றுக்கு அவற்றின் வர்க்கப் பெயரை ஒளிவு மறைவின்றிக் குறிப்பிடப்படவில்லையென்பதுதான் குறை. பாகமும் பாலியும் சுரண்டல் உறவுகள். இந்திய வரலாற் றில் அவற்றுக்கு எதிராகக் கண்டனங்களும் போராட்டங்களும் நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் இந்தச் சுரண்டல் உறவுகளை அம் பலப்படுத்தக்கூடாதென்ற போக்கு இந்த அறிஞர்களின் விவாதங் களில் தென்படுகிறது.

பாலி, பாகம் இரண்டுக்குமுள்ள வேறுபாட்டைப்பற்றிய விவா தத்தைக் குறித்து ஒரு வார்த்தை. இரண்டுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை விளக்கவும் இதர வாடகை வரிகளைப்பற்றி விளக் கவும் நமது சரித்திரப் பேராசிரியர்கள் முயன்று வருகிறார்கள்.

உற்பத்தி செய்யும் பகுதி, உற்பத்தி செய்யாத பகுதிக்குத்தன் உபரியிலிருந்து கொடுக்கும் மிகப் புராதனமான முறை பாலி. உடல் உழைப்பு-மூளை உழைப்பு வேலைப் பிரிவினை தோன்றிய பொழுது, பாலி உதயமாயிற்று. இதன் மூலம் பூர்வீகக் கம்யூன் சமுதாயப் பொது நன்மைக்காக சிலரை பருவக் காலங்கள், வானிலை முதலியவற்றை ஆராய்ந்து அறிவதற்கென்று ஒதுக்கியது. அவர்களுக்கு கம்யூனின் உற்பத்தி பொருளிலிருந்து உணவு அளிக்கப்பட்டது. அதுவே பாலி. கம்யூனின் படைவீரர் பகுதிகளுக்கும் அதன் தலைவனுக்கும் கூட பாலி கொடுக்கப்பட் டது. ஆனால் அன்றைய சூழ்நிலையில் அது வாடகையாக இல்லை.

கம்யூன் சிதறுண்டது; வர்க்கங்களும் அரசும் தோன்றின.

நகர - கிராமப் பாகுபாடும், விவசாய-கைத்தொழில் வேறுபாடும் வளர்ந்து உறுதிப்பட்டன. புதிய வடிவத்தில் உபரி சுவீகரிக்கப் பட்டது. அதுவே பாகம். அரசாங்கத்துக்குக் கொடுக்கப் பட்ட வாடகை - வரி, உற்பத்தி செய்யாத ஆளும் சாதிகள் சுவீகரித்துக்கொண்ட வாடகை, ஆகியவை பாகம் எனப் பட்டது. ரொக்கப் புழக்கமில்லாமல், கைத்தொழிலும் விவசாய மும் நடத்திய பரிவர்த்தனையும் பாகம் எனப்பட்டது. அடிமை களுக்கும் அடிமைச் சொந்தக்காரர்களுக்கும் இடையே பண்ட மாற்று என்பதற்கு இடமேயில்லை. பிரபுத்துவ கிராம சமூகம் தோன்றியபொழுது, பாகம் நிலையான, சிறந்த வாடகை உறவு முறையாயிற்று. பழைய பாலியும் அதன் தோழனாயிற்று.

அரசாங்கம், ஆட்சி புரியும் பிரபுத்துவ சாதிகள் ஆகியவற் றின் கோரிக்கைகள் எப்படி வாடிக்கையாக அதிகரித்து மோதலில் முடிந்தன என்ற விஷயத்தை இங்கு மேலும் விரித்துரைக்க முடியாது. கிராமங்களின் சாதிகளுக்கிடையேயும், கிராமங்களுக் கும் அரசாங்கத்துக்குமிடையேயும், நகரக் கவுன்ஸில்களுக்கும் (பௌர சபைகள்) அரசனுக்குமிடையேயும் இருந்த பாலி, பாகம் சம்பந்தமான பிரச்னையை நாம் எடுத்துக்கொண்டால், இந்திய பிரபுத்துவத்தின் வர்க்கப்போராட்டங்களை ஆராய்வதற்கு வழி தெரியுமென்றே இங்குச் சுட்டிக்காட்ட முடியும். ஆனால், இந்த ஆராய்ச்சியில், பொதுநிலம் என்ற அடிப்படையை மறக்கக் கூடாது.

இத்தகைய நிலைமைகளில் மகத்தான மன்னர்களென்றும் மக்கள் தலைவர்களென்றும் யார் அழைக்கப்பட்டனர்? நசித்துக் கொண்டிருக்கும் தர்மத்தை நிலைநாட்டியவர்கள், பாலி, பாகம் ஆகியவற்றின் நியாயமான முறையான உறவுகளை நிலைநாட்டிய வர்கள், மிதமிஞ்சிய சுரண்டலிலிருந்தும், பாலி, பாகம் ஆகியவற் றின் அதிக்கிரமமான தண்டல்களிலிருந்தும் மக்களைப் பாதுகாத்த வர்கள். அவர்களுடைய பாதுகாப்புக்காகப் போராட்டங்களையும் நடத்தியவர்கள் மகான்களாகக் கருதப்பட்டனர். பக்தி இயக்கப் பெரியார்கள் சுரண்டப்படுவோரின் தத்துவார்த்தப் பிரசார கர்களானார்கள்; பொதுஜன செல்வாக்குள்ள வீரர்கள், அவர்

களைப் பாதுகாக்கும் ஆயுதமேந்திய வீரர்களானார்கள். அன்றைய இந்திய பிரபுத்துவ நிலைமைகளில் சுரண்டப்பட்ட மக்கள் ஒரே கோரிக்கையைத்தான் முன்வைக்க முடிந்தது; அதாவது, "தர்மத்தை நிலைநாட்டுங்கள்; ஒவ்வொரு சாதியும் அதன் கடமையைச் செய்து சமுதாயத்தில் அதற்குரித்தான ஸ்தானத்தையும் பங்கையும் வகிக்கவேண்டும்" என்பதே. அந்த சமநிலை குலைந்தால் உலகம் அழிந்துவிடும்.

இதைக் கறாராகத் தெளிவு செய்வதற்காக, சுக்கிரநீதி தன் விதிகளில், அரசாங்கம் தன் சிப்பந்திகளுக்கும் சேவகர்களுக்கும் சம்பளத்துடன் விடுமுறை அளிக்கவேண்டிய நாட்களின் எண்ணிக்கையையும் நோய்வாய்ப்பட்டால் விடுமுறை அளிக்கவேண்டிய விவரத்தையும்கூட வகுக்கிறது. (அனுபந்தம் - 2) இந்தக் காரியத்தை, நவீன முதலாளித்துவ அரசுகள்கூட தமது ஆரம்பக் காலங்களில், தொழிலாளிவர்க்கம் குமுறியெழும்வரை, செய்ய மறுத்தன!

நமது வரலாற்றின் இந்த காலகட்டத்தை ஆராயும்பொழுது, இந்திய பிரபுத்துவ வளர்ச்சியில் முக்கிய ஸ்தானம் வகித்த வியாபாரி விஷயத்திலும் கவனம் செலுத்தவேண்டும். கிராம சமூகம் உற்பத்திசெய்த பொருட்களை முடிந்த அளவுக்கு விற்பனைச் சரக்குகளாக மாற்ற அவன் முயன்றான். ஆனால் உற்பத்திசெய்யும் சாதியின் பொருட்கள் எந்த அளவுக்கு விற்பனைப் பண்டங்களாக ஆகிறதோ அந்த அளவுக்கு பொருளாக வாடகை பெறுவோரின் கோரிக்கையும் அதிகரித்தது; ஏனெனில் அவர்கள் அதை வியாபாரியிடம் விற்று பொன்னோ இதர பொருட்களோ பெற முடியும்.

ஆனால் வியாபாரிகள் ஒரு சரக்கை அதிகமாகக் கொள்முதல் செய்யும்பொழுது, அந்த அளவுக்கு அதிகமாக, கிராம சமூகத்தின் வேலைப் பிரிவினை, உற்பத்திப் பண்டம் ஆகியவற்றின் வாடிக்கையான வீதாச்சாரம் குலைகிறது. மேலும், கிராம சமூகத்தில், குறிப்பிடத் தக்கவாறு செல்வத்தின் எந்தத் தாழ்வுகள் ஏற்படுவதற்கும் அது காரணமாகிறது. இயல்பாகவுள்ள சகல முரண்பாடுகளையும் அது தீவிரப்படுத்துகிறது. எனவே, கிராமச் சமூக

பொருளாதாரம் சமாதான நிலையில் வளர்ந்து நீடிக்கவேண்டுமென்று எண்ணியவர்கள் வியாபாரிகளின் நடவடிக்கைகளை விரும்பவில்லை.

எனினும், வியாபாரி தன் பாத்திரத்தை வகித்தான், உயிர் வாழ்ந்தான், வளர்ந்தான்.

இந்திய பிரபுத்துவத்தை ஆராயும்பொழுது, நமது சரித்திராசிரியர்கள் இன்னொரு மிக முக்கியமான அம்சத்திலும் கவனம் செலுத்தவேண்டும். அதாவது, அடிமை முறை க்ஷீணித்தபிறகு நந்த சாம்ராஜ்யம் வீழ்ந்த பிறகு, இந்தியாவின் பல்வேறு தேசீய இனங்கள் உருப்பெறுவதற்கு அது வழிசெய்த விஷயமாகும்.

இந்தியாவின் இன்றைய தேசீய இனங்கள் (உ-ம். ஆந்திரர்கள், மகாராஷ்டிரர்கள்) இந்தக் காலத்திலும் அதற்குப் பிறகும் தோன்றி வளர்ந்திருக்கின்றனரென்று தோன்றுகிறது; அடிமை ஏற்பாடுகளும் பெரிய சாம்ராஜ்யங்களும் சிதறி இந்திய பிரபுத்துவம், புதிய கிராமச் சமூகம் தேசீய இனங்கள் ஆகியவற்றின் துவக்கத்தைக் குறிக்கும் இந்தக் காலத்தில், சாம்ராஜ்யங்களின் கருப்பையில் வளர்ந்துகொண்டிருந்த பிராகிருத மொழிகள் சரித்திர அரங்கில் முன்வந்து 'அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாக' தம்மை ஸ்தாபித்துக்கொண்டன. இது அகஸ்மாத்தான நிகழ்ச்சியல்ல. அவற்றின் இலக்கணமும் இலக்கியமும் சுயேச்சையாகவும் சுறுசுறுப்பாகவும் வளர்ந்தன. சம்ஸ்கிருதம் பின்னணிக்குச் சென்றது. அது "ராஜசபை" பாஷையாக ஆயிற்று; அல்லது ஆட்சி புரியும் அறிவாளிகள் தமது விதிகளையும் சமயக் கட்டளைகளையும் எழுதித் தொகுப்பதற்குப் பயன்பட்டது. தேசீய இனங்களின் வளர்ச்சியும் பிராகிருத மொழிகளின் அங்கீகாரமும், இந்திய பிரபுத்துவத்தின் தோற்றம் வளர்ச்சியுடன் கைகூடியதாகத் தோன்றுகிறது. சம்ஸ்கிருதத்துக்குப் பதிலாக, பிராகிருதத்தை அரசு மொழியாக முதன் முதலில் பிரகடனம் செய்தது சாதவாகனர் அரசவமிசமாகும். அவர்கள் விவசாயி சமூகங்களிலிருந்து தோன்றியவர்களென்று கூறப்படுகிறது. புத்திகூர்மைமிகுந்த அசோகன் தன்னுடைய சாசனங்களை பிராகிருதத்தில் பொதித்தான். அது வெறும் சேஷ்டையல்ல.

நமது சரித்திரத்தில் பிரசித்திபெற்ற இந்தக் காலத்தில் தேசீய இனப் பிரச்னையும் மொழி இயல் பிரச்னையும் எப்படியிருந்த தென்பதை ஆராயப் புகுந்தால், நிறைய விஷயங்களை ஆராயமுடியும்; பைசல் செய்வதற்கும் சில கேள்விகள் உள்ளன.

இந்த விஷயத்தில் மேற்கொண்டு தெளிவுபெறவும் விவாதம் நடத்தவும், நமது மார்க்ஸீய வாசகர்களுக்கு நேரம் கிடைக்குமென்ற நம்பிக்கையில் நான் இந்தக் குறிப்பை எழுதியிருக்கிறேன். நான் இன்றுள்ள நிலைமையில், இந்தப் பிரச்னைகளை விரித்துரைக்கவோ முன்னால் திட்டமிட்டபடி சரித்திர நூலைத் தொடர்ந்து எழுதவோ, நேரமும் சக்தியும் இல்லாதவனாயிருப்பதற்கு வருத்தப்படுகிறேன்.

1954—செப்டம்பர்.

அனுபந்தம் 1

மனித குலத்தின் தோற்றுவாயென்று பாரதக்கதை குறிப்பிடும் தாய்வழிக் கணங்கள்

	தாய் நாமம்.	தாய்வழிக் கணத்தின் நாமம்.
1.	அதிதி	ஆதித்யர்கள்
2.	திதி	தைத்தியர்கள்
3.	தனு	தானவர்கள்
4.	காலை	காலகேயர்கள்
5.	விநதை	வைநதேயர்கள்
6.	கத்ரு	காத்ரவேயர்கள்
7.	முனி	மௌனியர்கள்
8.	பிராதை	பிரதேயர்கள்
9.	கபிலை	கபிலர்கள்
10.	கிருத்திகை	கார்த்திகேயர்கள்
11.	சிம்ஹிகை	சைம்ஹிகேயர்கள்
12.	புலோமா	பௌலோமர்கள்
13.	வஸு	வாசவர்கள்
14.	விசுவை	விசுவர்கள்
15.	மாருதமதி	மாருதமந்தர்கள்
16.	பானு	பானவர்கள்
17.	முகூர்த்தா	முகூர்த்தர்கள்
18.	ஸாத்யை	ஸாத்யர்கள்

இந்தக் கணங்களின் வழியில்தான் பிரசித்தி பெற்றவர்கள் தோன்றினார்களென்றும், இந்தக் கணங்களின் வழிவந்த கணங்களுக்குள் போராட்டங்கள் நடைபெற்றனவென்றும் பாரதக்கதை கூறுகிறது.

அனுபந்தம் 2

1. அடிமைகளின் வகையீடு

பதினைந்து வகைப்பட்ட அடிமைகள் இருந்ததாக நாரதர் குறிப்பிடுகிறார். வீட்டில் பிறந்தவர், விலைக்கு வாங்கப்பட்டவர், அடையப்பட்டவர், தாயாதிகளின் பாகப் பிரிவினைமூலம் பெறப்பட்டவர், பஞ்சகாலத்தில் எடுத்துவளர்க்கப்பட்டவர்கள், எஜமானனால் கொடுக்கப்பட்டவர்கள், தண்ணீரிலிருந்து காப்பாற்றப்பட்டவர்கள், யுத்தத்தில் கிடைத்தவர்கள், பந்தயத்தில் கிடைத்தவர்கள், 'உங்களைச் சேர்ந்தவர்' என்று உரிமை கொண்டாடிவந்தவர், வேற்று இடத்திலிருந்துவந்து, அறியப்பட்டு கொள்ளப்பட்டவர் முதலிய பதினைந்து வகைகளை நாரதர் குறிப்பிடுகிறார். (நாரத சூத்திரம்). மனுஸ்மிருதி ஏழுவகை அடிமைகளைக் குறிப்பிடுகிறது.

நாரதர் குறிப்பு விவரமாகவிருப்பதால், மனு கொடுத்திருக்கும் விவரங்களை இங்கு கொடுக்கத் தேவையில்லை. (மனுஸ்மிருதி, VIII, 415.)

2. அடிமை விடுதலைபெறுவது சம்பந்தமாக

நாரதர் சூத்திரங்களைப் பார்க்கவும். அவர் கூறுகிறார்:— "அடிமையின் தோளிலிருந்து ஒரு நீர் நிறைந்த மண்பானையை எஜமானன் எடுத்து உடைக்கிறார். பிறகு, தானியமும் மலர்களும் உள்ள ஜலத்தை அடிமையின் தலைமீது தெளித்து, அவன் சுதந்திரனாகிவிட்டதாக மும்முறை பிரகடனஞ் செய்கிறார்.

3. அடிமைகளை வாடகைக்கு விடுவதும் சித்திரவதை செய்வதும்

ஜாதகக் கதைகளை (முதல் பாகம் 402) படியுங்கள். ஒரு எஜமானன் தன்னிடம் அடிமையாகவுள்ள பெண்ணை, தனக்காக வேலைசெய்து கூலி சம்பாதித்துவரச் சொல்கிறார். அந்தப் பெண் பணத்தைக் கொண்டுவரத் தவறும்பொழுது, அவளை சாட்டையால் அடிக்கிறார்.

காதஹகர் என்ற அடிமை, குடும்பத்தின் மகனுடன் எழுதப் படிக்கக் கற்றுவிட்டான். இதர விஷயங்களிலும் அவன் சாமர்த்தியசாலி. பேசும் கலையை அறிந்தவன். சாமான் கிடங்குக்குக் காவலனுகவிருந்து, தன் வேலையை முறையாகச் செய்துவருகிருன். எனினும், ஏதாவது தவறு நிகழ்ந்துவிடுமோ, அதன் விளைவாக, வேலையை இழந்து, அடிபட்டு, கூடுபோடப்பட்டு, அடைபட்டு அவதியுற நேரிடுமோவென்று அஞ்சுகிருன்.

4. மகாபூமி அல்லது ராஜாங்க நிலம்

அது "கோபாத ராஜமார்க—ஜலஸாயாத்யான் விதா" என்று வர்ணிக்கப்படுகிறது. கால்நடைப்பாதைகள், ராஜாங்கசாலைகள், குளங்கள் முதலானவற்றைக் கொண்டது என்பது இதன் பொருள்.

5. அரசாங்கத்தின்கீழ் வேலையிலிருந்த சிப்பந்திகள் பற்றி

789–90. கூலி கொடுக்கும்பொழுது சூரிய வருடத்தையும், வட்டி கூட்டும்பொழுது, சந்திர வருடத்தையும், தினசரிச் சம்பளம் கொடுப்பதில் சவன முறையையும் விதிவிலக்கில்லாமல் கடைப்பிடிக்க வேண்டும்.

791–92. வேலைநேரம் அல்லது வேலை அளவு அல்லது இவை இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு கூலி கொடுக்கலாம். முன்னுல் செய்துகொண்ட ஏற்பாட்டுப்படி, ஒப்பந்தப்படி, இந்தக் கூலியைக் கொடுக்கவேண்டும்.

793–94. "நீ இந்த பளுவை அந்த இடத்துக்குத் தூக்கிக் கொண்டு போகவேண்டும். நீ செய்யும் இந்த வேலைக்கு நான் இவ்வளவு கொடுப்பேன்" என்ற அடிப்படையில் கூலி கொடுப்பது, உழைப்பின் அளவுக்கு ஏற்றபடி கூலி கொடுக்கும் முறையாகும்.

795–96. "ஒவ்வொரு ஆண்டும் அல்லது ஒவ்வொரு மாதமும் அல்லது ஒவ்வொரு நாளும் நான் உனக்கு இவ்வளவு

கொடுப்பேன்" என்ற அடிப்படையில் கூலி கொடுப்பது நேர அடிப்படையில் கூலி கொடுக்கும் முறையாகும்.

797-98. "நீ இவ்வளவு நேரத்தில் இவ்வளவு வேலை செய்திருக்கிறாய். எனவே நான் உனக்கு இவ்வளவு கொடுப்பேன்" என்ற முறையில் கூலி நிர்ணயித்துக் கொடுப்பது, வேலை அளவையும் வேலை நேரத்தையும் அடிப்படையாகக் கொள்ளும் முறையாகும்.

799-802. எவரும் சம்பளத்தைக் கொடுக்காமல் நிறுத்தவும் கூடாது; கொடுப்பதை ஒத்தி வைப்பதும் கூடாது. அத்தியாவசியமான உணவும் உடையும் பெறுவதற்குப் போதுமான சம்பளம் மிதமானது எனப்படும். உணவும் உடையும் திருப்திகரமான அளவுக்குக் கிடைக்கச் செய்வது நல்ல சம்பளம் எனப்படும். ஒருவரை மட்டுமே பராமரிக்கக் கூடிய சம்பளம் குறைவான சம்பளம் எனப்படும்.

803-4. தொழிலாளர்களின் தகுதிகளுக்கேற்றபடி, அவர்களுக்கு அரசன் கவனமாகக் கூலி விகிதங்களை நிர்ணயிக்கவேண்டும். இது அவனுடைய நலனுக்கே உகந்த காரியம்.

805-6. தொழிலாளி கட்டாயமாகக் காப்பாற்றித் தீரவேண்டியவர்களை அவன் பராமரிப்பதற்கு முடிகிற வகையில் கூலியை நிர்ணயிக்க வேண்டும்.

807-8. குறைந்த சம்பளம் வாங்கும் சேவகர்கள் இயல்பாகவே சத்துருக்களா யிருப்பார்கள். அவர்கள் மற்றவர்களுக்குத் துணையாட்களாகவும் சந்தர்ப்பங்களை நாடுவோர்களாகவும், பொக்கிஷத்தையும் மக்களையும் கொள்ளையடிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

809. சூத்திரர்களின் கூலி, உணவுக்கும் உடைக்கும் சரியாக இருக்க வேண்டும்.

813-14. சிப்பந்திகள் மூவகைப்படுவர்:—செயலற்றவர்கள், சாமான்யமானவர்கள், வேகமாக வேலைசெய்யக் கூடியவர்கள். எனவே அவர்களுடைய கூலியும் முறையே குறைவாகவும் சாதாரணமாகவும் உயர்வாகவும் இருக்கவேண்டும்.

815-16. சிப்பந்திகள் அவர்களுடைய குடும்பக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக, அவர்களுக்கு பகலில் ஒரு யாமமும்[1] இரவில் மூன்று யாமங்களும் ஓய்வு கொடுக்கவேண்டும்; ஒரு நாளைக்கு மட்டும் வேலைக்கு நியமிக்கப்படும் சிப்பந்திக்கு அரை யாமம் ஓய்வு கொடுக்கவேண்டும்.

817-18. திருவிழாக் காலங்களைத் தவிர இதர நாட்களில் அரசன் அவர்களிடம் வேலை வாங்கவேண்டும். அத்தியாவசியமான வேலை இருந்தால் விழாக் காலங்களிலும் வேலைவாங்கலாம். ஆனால் சிரார்த்த நாட்களில் மட்டும் வேலை வாங்கக்கூடாது.

819-21. அரசன், நோய்வாய்ப்பட்ட சிப்பந்திக்கு வாடிக்கையான சம்பளத்தில் முக்கால்பங்கு கொடுக்கவேண்டும். நீண்ட காலம் நோயாளியாயிருப்பவனுக்கு, மூன்றுமாதச் சம்பளம் கொடுக்கவேண்டும்; அதற்குமேல் எவருக்கும் கொடுக்கக்கூடாது.

822-24. ஏழு நாட்கள் நோய்வாய்ப்பட்டிருக்கும் சிப்பந்தியின் முழுச் சம்பளத்தில் கொஞ்சமும் குறைக்கக்கூடாது. ஒரு வருடம் வேலைபார்த்தவருக்குக்கூட பதில் ஆள் எடுக்கவேண்டும். நோய்வாய்ப்பட்டவர் உயர்ந்த திறமையுள்ளவரானால் அவருக்கு அரைச் சம்பளம் கொடுக்கவேண்டும்.

825. அரசன் சிப்பந்திக்கு ஆண்டுக்குப் பதினைந்து நாட்கள் விடுமுறை அளிக்கவேண்டும்.

826-27. நாற்பது ஆண்டுகள் சேவகம் செய்தவருக்கு அரசன் வேலையில்லாமல் அரைச்சம்பளம் கொடுக்கவேண்டும்.

828-29. அவருடைய ஆயுள்முடியக் கொடுக்கவேண்டும். அவருடைய மகன் வயது வந்தவனாக இல்லாமலிருந்தால், வேலை செய்யமுடியாதவனாயிருந்தால் அவனுக்கும் அல்லது அவருடைய மனைவிக்கும் நன்னடத்தையுள்ள புத்திரிகளுக்கும் அரைச்சம்பளம் கொடுக்கவேண்டும்.

830-31. அரசன் தன் சிப்பந்திகள், ஒவ்வொரு வருடமும் அவருடைய சம்பளத்தில் எட்டில் ஒரு பங்கை சன்மானமாகக்

---

1 யாமம் - மூன்று மணி நேரம்.

கொடுக்கவேண்டும். அந்த சிப்பந்தி அசாதாரணமான திறமையுடன் வேலே செய்திருந்தால், அவருடைய வேலேயின் எட்டில் ஒரு பங்குக்கு சன்மானம் கொடுக்கவேண்டும்.

832–33. இறந்தவனுடைய மகன் மைனராக உள்ளவரை, அவனுடைய வேலேக்கு தகப்பனுக்குக் கொடுத்த சம்பளத்தையே கொடுக்கவேண்டும். மைனர்களா யில்லாவிடில், மக்களின் தகுதிகளுக்கு ஏற்றபடி சம்பளம் கொடுக்க வேண்டும்.

834–35. அரசன் சிப்பந்தியின் சம்பளத்தில் ஆறில் ஒரு பங்கை அல்லது நாலில் ஒரு பங்கை (இருப்பாக) தன்னிடம் வைத்துக்கொள்ளவேண்டும். அந்தத் தொகை முழுவதையுமோ அதில் பாதியையே இரண்டு அல்லது மூன்று வருஷங்களில் கொடுக்கவேண்டும்.

[இதில், 'பிராவிடண்ட் பண்டு' எனப்படும் சேமநிதியின் கருத்தோட்டத்தைக் காணலாமென்று பேராசிரியர் சர்க்கார் கூறுகிறார்.]

836–37. எஜமானன், கடுமையாகப் பேசியும் குறைவாகக் கூலிகொடுத்தும், கடுமையாக தண்டித்தும், அவமதித்தும், சேவகனிடம் விரோதியின் குணும்சங்கள் ஏற்படச்செய்கிறார்.

838–39. கூலியில் திருப்தியும், மேன்மை அடைவதன்மூலம் கௌரவமும், இன்சொற்களில் மனஅமைதியும் பெறுகிற சிப்பந்திகள், ஒருபொழுதும், தமது எஜமானனேவிட்டு ஓடமாட்டார்கள்.

840–41. மோசமான சிப்பந்திகள், செல்வத்தை இச்சிக்கிறார்கள்; நடுத்தரமானவர்கள் செல்வத்தையும் புகழையும் நாடுகிறார்கள்; சிறந்தவர்கள் புகழை நாடுகிறார்கள். புகழே சான்றோர்களின் செல்வம். [சுக்ர நீதி - பாணினி காரியாலயம்; பதிப்பு, 1914. பேராசிரியர் பெனாய்குமார் சர்க்கார் மொழிபெயர்த்தது. ஹிந்துக்களின் புனித நூல்கள் தொகுப்பு. 13-வது புத்தகம்.]

6. வரருசி

சமஸ்கிருத மொழியின் தலேசிறந்த இலக்கண கர்த்தாவாகத் திகழ்ந்த பாணினியாருக்குப் பின், பிராகிருத மொழிகளின் மகத்

தான இலக்கணக் கர்த்தாக்களில் ஒருவராக வரருசி விளங்கியதாக பண்டைக்கால இந்திய வரலாறு கூறுகிறது. "பிராகிருதப் பிரகாசிகை" என்ற நூலே அவர் எழுதினர். அது, மகாராஷ்ட்ரீ, மகதம், பைசாசம், சௌரசேனம் ஆகிய நான்கு முக்கியமான பிராகிருத மொழிகளின் இலக்கண நூலாகும்.

வரருசி அசோகர் காலத்துக்கு முன் வாழ்ந்தாரெனத் தோன்றுகிறது.

7. குணத்யர்

இந்தியாவின் சரித்திரத்திலும், பிராகிருத மொழிகளிலுள்ள கிராமிய இலக்கிய வரலாற்றிலும், உணர்ச்சியும் உத்வேகமும் அளிக்கக்கூடிய ஏடுகளில் ஒன்ருக குணதியரின் கதை உள்ளது. "பிரஹத் கதை" (பெருங்கதை எனப் பொருள்படும்.) என்ற புகழ் பெற்ற தொகுப்பு, அந்தப் பிராகிருத மொழிகளின் கிராமிய இலக்கியத்தின் சிறப்புக்கு ஒரு எடுத்துக்காட்டு.

நமது தேசிய இனங்களேப் புரிந்துகொள்வதற்கும், பிராகிருத மொழிகளும் இலக்கியமும் வளர்ந்த வகையைத் தெரிந்துகொள்ள வும், வரருசியையும் சாதவாஹன் அரசர்களில் ஒருவரான குணத் யரையும் பற்றி ஆராய்ந்து அறிவது அத்தியாவசியமாகும்.

அனுபந்தம் 3

நிரந்தர இராணுவங்களும் பொருளாதாரமும்

கி. மு. ஆரும் நூற்ருண்டிலிருந்து கி. மு. இரண்டாம் நூற் ருண்டுவரை, அதாவது புத்தரின் தோற்றத்திலிருந்து அசோகர் காலம் முடிவுவரை, இந்தியாவில் சில பெரிய சாம்ராஜ்யங்களே நிர்மாணித்திருக்கிறது. இந்த சாம்ராஜ்யங்களின் வருமான வகைகள் எவை எவை, அந்த வருமான வகைகளே அந்த சாம் ராஜ்யங்கள் எப்படி பயன்படுத்தின ஆகியவற்றை அறிந்துகொள் வது முக்கியமானது. கௌடில்யரின் அர்த்தசாத்திரமும் இதர நூல்களும், இதைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கு உதவும்.

அரசு அல்லது சக்கிரவர்த்தி, அடிமைகள் கூலிச்சிப்பந்திகள், சுதந்திரமான குடியானவர்கள் ஆகியவர்களைக்கொண்டு விவசாயத்தை நடத்தியதாக இந்த நூல்கள் மூலம் அறிகிறோம். சக்கிரவர்த்தி, தொழில் நிலையங்களையும் நிர்வகித்தார். அவற்றில், ராணுவத்துக்குத் தேவையான போர்க்கருவிகளும் இதர சாதனங்களும் உற்பத்தியானதுடன், வியாபாரத்துக்குத் தேவையான பண்டங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. தவிர, இதர வருமான வகைகளும் இருந்தன.

இந்த சாம்ராஜ்யங்களில் நடைபெற்ற பொருளாதார அலுவல்கள் எந்த அளவுக்கு பரிவர்த்தனைப் பண்ட உற்பத்தியையும் அத்துடன் இணைந்ததாக உள்ள ரொக்க மூலதனத்தையும் வியாபார மூலதனத்தையும் வளர்த்தன என்ற பிரச்னையைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த சாம்ராஜ்யங்கள் நிறுவிப் பாதுகாத்த பெரிய நிரந்தர ராணுவங்களின் பாத்திரம் என்ன, அவற்றால் பொருளாதாரத்துக்கும் மக்களுக்கும் விளைந்த பலன் என்ன ஆகியவையும் இதே துறையில் ஆராய்ந்தறியவேண்டிய ருசிகரமான பிரச்னைகளாகும்.

நான்கு பேரரசுகளுக்கு இருந்த ராணுவங்களின் பலம் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது:

	காலாட்படை வீரர்கள்	குதிரைப் படையினர்	யானைகள்
மகதம்	60,000	30,000	900
கலிங்கம்	50,000	10,000	700
தாலுக்தா	50,000	4,000	700
ஆந்திரம்	1,00,000	2,000	1,000

சந்திரகுப்தருக்கு முன்னாலிருந்த நந்தர்களின் படைபலம் பின்வருமாறு இருந்ததென்று, அலெக்ஸாண்டருக்குக் கிடைத்த தகவல்கள் குறிப்பிட்டன:

காலாட் படையினர்	குதிரைப் படையினர்	யானைகள்	ரதங்கள்
2,00,000	20,000	4,000	2,000

இந்தப் புள்ளி விவரங்களும், பல்வகைப் படையினரின் விகி

தாச்சார நிலையும், மிக முக்கியமான விஷயங்களை ஆராயத் தூண்டுகின்றன.

அந்தக் காலத்தின் உற்பத்தி சக்திகளுடைய தரத்தைக் கணித்துக்கொண்டு, இத்தகைய ராணுவத்தின் பராமரிப்புக்குத் தேவையான உற்பத்தி சக்திகளின் அளவை அறியவேண்டும். அந்தத் தேவையில் ஒரு பகுதியை, கிராமங்களிலிருந்து பொருளாக வாடகை பெறுவதன்மூலம் நிரப்ப வேண்டுமானல், மக்கள் மீது இருந்த வாடகை–வரிச்சுமை எவ்வளவாக இருந்திருக்கும்? அந்தத் தேவையில் ஒருபகுதியை சந்தையில் வாங்கவேண்டியதாயிருந்தால், வீரர்களின் சம்பளத்தில் ஒரு பகுதியையாவது ரொக்கமாகக் கொடுக்கவேண்டியிருந்தால் (ரொக்கமாக பகுதியும் பொருட்களாக பகுதியும் சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டது) எவ்வளவு பணம் புழக்கத்தில் இருந்திருக்கவேண்டும்? அந்தக் காலகட்டத்தில் நிலவிய இயற்கைப் பொருளாதார அமைப்பில், இந்த பரிவர்த்தனைப் பண்ட இயக்கத்தால் எத்தகைய பலன்கள் ஏற்பட்டிருக்கவேண்டும்?

பல்வேறு படை வகைகளின் சக்தி வீதாச்சாரம், உள்ளமைப்பு வீதாச்சாரம் ஆகியவற்றிலிருந்து, சமுதாய அமைப்பைப்பற்றி எத்தகைய சித்திரம் கிடைக்கிறது என்பது ஆராய்ச்சிக்குரிய இன்னொரு விஷயமாகும். பல சந்தர்ப்பங்களில், ராணுவம் தன் சமுதாயப் பிரிவினைகளின் படமாக இருப்பதாக மார்க்ஸ் கூறுகிருர்.

இந்தக் காலகட்டத்து சமுதாயத்தின் உள்ளமைப்பில் இருந்த வர்க்க உறவுகளையும் சக்திகளின் உறவு நிலையையும் புரிந்துகொள்வதற்கு, இந்த சாம்ராஜ்ய ராணுவங்களைப் பற்றிய ஞானம் நமக்கு உதவுமா?

இந்த இடத்தில், இந்தப் பிரச்னையைக் குறித்து மார்க்ஸ் எழுதிய ஒரு கடிதத்தை வாசகர்களின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்:

"பொருளுற்பத்தி சக்திகளுக்கும் சமுதாய உறவுகளுக்கும் இடையேயுள்ள தொடர்பைப்பற்றி நாம் கொண்டிருக்கும் கருத்து

பிசகற்றது என்பதை, ராணுவத்தின் சரித்திரம், வேறு எதைக்காட்டி லும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. பொதுவாக, ராணுவம் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானது. உதாரணமாக, ராணுவத்தில்தான், பண்டைக்கால மக்கள் முதன் முதலாக ஒரு பூர்த்தியான சம்பள ஏற்பாட்டை உருவாக்கினுர்கள். அதைப் போலவே, ரோமானியர்கள் மத்தியில், குடும்பத் தலைவராயில் லாதவர்களுக்கு ஜங்கம சொத்துமீது உள்ள உரிமையை முதன் முதலில் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது ராணுவ முகாம் சொத்து விஷயத்தில்தான். அதைப் போலவே, ராணுவத்துடன் இணைக்கப்பட்டிருந்த கைத் தொழிலாளர்கள் மத்தியில்தான் முதன் முதலில் 'கில்டுமுறை' (சங்கம் அமைக்கும் முறை) உரு வாயிற்று. பெரிய அளவில் யந்திர வகைகள் முதலில் பயன் படுத்தப்பட்டதும் இங்குதான். கற்காலம் முடிந்தவுடன், உலோ கங்களின் விசேஷ மதிப்பும், பணமாக அவை பயன்படக்கூடிய தன்மையும் முதன் முதலில் உணரப்பட்டதற்கும், அவற்றின் ராணுவ முக்கியத்துவமே காரணம் என்று தோன்றுகிறது. ஒரே கிளைக்குள் வேலைப் பிரிவினையை முதலில் ஏற்படுத்தியதும் ராணு வங்களில்தான். பூர்ஷுவா சமூக வடிவங்களின் சரித்திரம் முழு மையும் இங்கு திட்டவட்டமாகத் திரட்டித்தரப்படுகிறது........

"என் அபிப்ராயத்தில், உங்களுடைய உரையில் விட்டுப் போன விஷயங்கள் இவை மட்டுமே :—(1) கார்த்தேஜ் நாட்டினர் மத்தியில் ஒரே சமயத்தில், பெரிய அளவில் கூலிப் படைகள் தோன்றிய விஷயம்; முதன் முதலாக பூர்ணமாகத் தோன்றிய விஷயம்......(2) பதினைந்தாவது நூற்றுண்டிலும் பதினுரும் நூற் றுண்டின் துவக்கத்திலும் இத்தாலியில் ராணுவ அமைப்பு அடைந்த வளர்ச்சி......(3) முதலில் பார்சீக மக்கள் மத்தியிலும் பிறகு பல்வகை மாறுதல்களுடன் மங்கோலியர்கள், துருக்கியர்கள் முதலியோர் மத்தியில் ஆசிய ராணுவ அமைப்பு முதலில் தோன் றிய விஷயம்......" (மார்க்ஸ், ஏங்கல்ஸுக்கு எழுதிய கடிதம் 1857, செப்டம்பர் 25)

பிழை திருத்தம்

பக்கம்	வரி	என்றிருப்பதை	என்று படிக்கவும்
21	10	கடந்ததன்	கடைந்ததன்
45	22	முத்தாலி	இத்தாலி
46	6	காசியப முனிவர் என்ற	காசியப முனிவர் என்று
101	1	விளங்கியதாக	விளங்கியதால்
105	12	கோத்திரா பிரவேரக்	கோத்திர பிரவரக்
112	17	திரும்ப	திரும்பத் திரும்ப
113	6	புணர்ச்சிகுற்றமாக	புணர்ச்சிக்குற்றமாக
116	அடிக் குறிப்பில்	சைத்திரியப் பிராம் மணம்	தைத்திரியப்பிராம் மணம்
147	21	சிளெரவிதி	சிரௌதவித்தி
157	12	கொண்டிருந்தன	முளைவிட்டுக் கொண் டிருந்தன
157	13	முளைவிட்டு	[நீக்கிப்படியுங்கள்]
171	23	மதாப்புடன்	மதர்ப்புடன்
252	26	சாதாரணமாகவே	சாதாரணமாகவோ
289	10	தனிநபர்களென்று	தனிநபர்களுக்கென்று
295	15	கைத்தொழில்க ளுடன்	கைத்தொழில் சாதிக ளுடன்
300	30	எந்தத்தாழ்வுகள்	ஏற்றத்தாழ்வுகள்
303		வைறதேயர்கள்	வைநதேயர்கள்